கடிதம் மூலம்

கரணானுயோக அறிமுகம்



ஹிந்தி மூலம்

டாக்டர். **உஜ்வலா ஷா,** M.B.B.S., D.C.H., D.G.P.

தமிழாக்கம்

து. பூபாலன், B.E.,

கடிதம் மூலம்

கரணானுயோக அறிமுகம்

ஹிந்தி மூலம்

திருமதி உஜ்வலா ஷா M.B.B.S., D.C.H., D.G.P.

தமிழாக்கம்

து.பூபாலன் B.E.,

வெளியீடு

ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்றம்

5/82, 4வது தெரு, எஸ். ஆர். பி. காலனி

சென்னை 600082

2020

பொருளடக்கம்

i	மூல நூலாசிரியரின் முகவுரை	4
ii	மூலநூல் பதிப்பாளரின் முகஉரை	5
iii	அணிந்துரை - கரந்தை அ. சுகுமாரன்	6
iv	மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளரின் முகவுரை	8

1.	**கர்ம பந்தம்**	**10**
2.	**காதி-அகாதி கர்மம்**	**18**
3.	**கர்ம-ஸ்திதி, ஆபாதா காலம் மற்றும் உதய காலம்**	**26**
4.	**நோகர்மம்-பந்தம், ஸ்திதி, உதயம்**	**38**
5.	**கர்ம நோகர்ம நிஷேக அமைப்பு**	**48**
6.	**உயிர் மற்றும் கர்மத்தின் சுதந்திரம்**	**57**
7.	**கர்மம் - உபசமம், உதீரணை**	**66**
8.	**கர்மத்தின் மற்ற நிலைகள்**	**76**
9.	**குணஸ்தானம் முதலியவைகளைத் தெரிந்து கொள்வதின் பயன்**	**84**
10.	**குணஸ்தானம் - பொது விவாதம்**	**89**
11.	**குணஸ்தானத்தில் ஏறும் வழி - தேசவிரத குணஸ்தானம்**	**98**
12.	**முனிவர்களின் குணஸ்தானம்**	**105**
13.	**குணஸ்தானங்களின் பிரிவு, இயக்கம் மற்றும் காலம்**	**113**
14.	**ஜீவசமாசம் - உயிர் வகைகள்**	**130**
15.	**பர்யாப்தி பிரரூபணை**	**140**
16.	**பிராணன் பிரரூபணை**	**146**
17.	**சஞ்ஞா பிரரூபணை, கதி, இந்திரிய, காய மார்கணை**	**151**
18.	**யோக, வேத, கஷாய, ஞான, மற்றும் சய்யம மார்கணை**	**161**
19.	**தர்சன, லேஷ்யா, பவ்விய, சம்யக்த்துவ, சஞ்ஞி, ஆஹார மார்கணை மற்றும உபயோக பிரரூபணை**	**167**

சாஸ்திரதானம் அளித்தவர்கள் பட்டியல் 174

மூல நூலாசிரியரின் முகவுரை

ஸ்ரீ பூபாலன்ஜி ஜெயின் அவர்கள் நான் கரணானுயோக அறிமுகத்தை தமிழாக்கம் செய்யத் துவங்கிவிட்டேன் என்று என்னிடம் தொலைபேசியில் சொன்னபோது அவர் இந்த நூலின் மொழிபெயர்ப்பை இவ்வளவு சீக்கிரமாக செய்து முடித்து விடுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஜிநேந்திர பகவானின் வாணிக்கு இந்த மகிமை உண்டு. இது யாருக்குக் கேட்கக் கிடைக்கிறதோ, மற்றும் அவை எவரின் புரிதலில் வருகிறதோ அவர் ஆனந்தத்தை அனுபவம் செய்கிறார், அதோடு மட்டுமல்லாமல் தாம் அடைந்த ஆனந்தத்தை மற்றவர்களும் அடைய வேண்டும் என்ற பேரவாவும் அவருக்கு சகஜமாகவே எழுகிறது. சாஸ்திரங்களைப் படிப்பதால், எழுதுவதால், மொழிபெயர்ப்பு செய்வதால் தத்துவ நுணுக்கங்கள் தெளிவாகத் தெரியவருகிறது. மேலும் ஞானோபயோகம் கூர்மையடைவதோடல்லாமல், கவனமும், ஒருமுகப் படுகிறது, concentration-ஒருமுகச்செறிவு அதிகரிக்கிறது. **அறிவுச் செல்வத்தை எந்த அளவுக்கு மற்றவர்களுடன் பகிர்கிறோமோ, அந்த அளவிற்கு அது வளர்ந்து கொண்டே போகிறது** என்ற பழமொழி சமஸ்கிருதத்தில் இருக்கிறது. ஆன்மீகத்தில் ஆத்மஅறிவு கொடுக்கும் ஸ்ருதக்ஞானமும் அதாவது ஆகமஞானமும் அப்படிப்பட்ட கொடுக்கக் கொடுக்க வளரும் ஒரு செல்வமே யாகும்.

1999-இல் இந்த நூலை எழுதும்போது இதில் கூறப்படும் விஷயங்களை ஷோலாபூர் தத்துவப்பயிற்சி முகாமில் பாடமாக நடத்தினேன். அப்போது அந்த முகாமில் பங்கு பெற்ற பெண்மணிகள் கரணானுயோகத்தின் **தவளா** சாஸ்திரத்தைப் பயிற்சி செய்து கொண்டிருப்பதாகவும், அதில் அவர்களால் புரிந்து கொள்ள முடியாதவைகள் இப்போதுதான் அவர்களின் புரிதலுக்கு வருகின்றன என்றும் கூறினார்கள். அந்தக் காலத்தில் நான் ஸ்ரீதவளா, மஹாதவளா, மற்றும் ஜெயதவளா போன்ற கரணானுயோக நூல்களின் பெயர்களை மட்டும்தான் கேள்விப் பட்டிருந்தேன். நானும் என் கணவர் திரு.தினேஷ்ஜியும் நம் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பலமுறை கரணானுயோகம் பற்றிய தத்துவப்பயிற்சி வகுப்புகளை தினமும் 6-6 மணி நேரம் நடத்தி இருக்கிறோம். கரணானுயோகத்தை கற்கும் ஆர்வமும், ருசியும் மக்களிடம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்புகளை நடத்துமாறு வேண்டுகோள்களும் பெருகி வருகின்றன. நான்கு அனுயோகங்களும் ஆன்மீக பயணத்திற்கு பயனுள்ளவைகளே! எல்லா அனுயோகங்களின் சாராம்சமும் வீதராகத்துவமே!!

குந்தகுந்தாசாரியார் போதபாகுடம் 39-ஆவது காதையில் குணஸ்தானம், மார்கணாஸ்தானம், பர்யாப்தி, பிராணன் மற்றும் ஜீவஸ்தானம் ஆகிய ஐந்தாலும் அரஹந்தரை ஸ்தாபனை செய்ய வேண்டும் என்கிறார். அதாவது அந்த ஐந்தாலும் அவரை அறிந்த பிறகே அவரை வணங்குதல் உண்மையான வந்தனையாகும் என்கிறார். பிறகு அவரே மேலும் உயிர்கள் பற்றி விளக்கமளிக்கிறார். அவைகளை எல்லாம் தெரிந்து கொண்ட பிறகே, பிறவி உயிர்கள் எங்கெங்கே காணப்படுகின்றன என்பதும், அப்பிறவி உயிர்களின் வாழ்க்கை நிலைகளும் நம் கவனத்திற்கு வருகிறது. அத்துடன் பிறவிச் சுழற்சியின் துன்பங்களும், அவைகளில் சுற்றித்திரிவதில் பயமும் நமக்கு வருகிறது. இதனால் சுய(நம்) ஆத்ம கல்யாணத்திற்கு ஜினாகமத்தை பயிற்சி செய்ய வேண்டும் என்ற உறுதியை நாம் எடுத்துக் கொள்கிறோம். ஜீவகாண்டம், கர்மகாண்டம், கரணானுயோக சாஸ்திரங்களை பயில்வதால் அனைத்து உயிர்களுக்கும் தத்துவஞானம் எனும் ஞானகாண்டம் ஆரம்பமாகட்டும் என்ற மங்கள சுப பாவனையுடன்,

டாக்டர். உஜ்வலா ஷா 2-2-2020

மூலநூல் பதிப்பாளர் முகஉரை

இரண்டு வார்த்தைகள்!

எங்களால் வெளியிடப்பட்ட நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படும் என்று நாங்கள் எண்ணியதுகூட இல்லை. உண்மையில் எந்த ஒரு நல்ல செயலையும் ஆரம்பத்திலிருந்தே தர்ம சிந்தனையுடன், ஜினவாணியைப் பரப்பும் நோக்கில் நாம் செய்வோமானால் அம்முயற்சிகள் பிறகு எல்லோராலும் போற்றிப் புகழப்படும் நிலையை அடைந்து விடுகின்றன என்பது நமக்கு மகிழ்சி அளிக்கிறது. நானும் பொறியாளர் திரு.பூபாலன் அவர்களும் இன்றுவரை நேருக்குநேர் சந்தித்ததில்லை என்றாலும் அவர் என் மனைவி டாக்டர். உஜ்வலா ஷா அவர்களால் எழுதப்பட்ட **சமண தத்துவ அறிமுகம்** மற்றும் **காரண காரிய இரகசியம்** என்ற இரண்டு நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார் என்பதால் நான் அவரை நன்கு அறிவேன். இப்பொழுது அவர் **கரணானுயோக அறிமுகம்** என்ற நூலையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுகிறார். அவர் உஜ்வலாவால் எழுதப்பட்ட நூல்களை ஆழ்ந்து படித்து அதன் அருமையை உணர்ந்து, அக்கருத்துக்கள் தமிழ் சமண சொந்தங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளார். தமிழ் அறிந்த சான்றோர் பெருமக்கள் இந்த நூல்களைப் படித்து ஆன்மநலம் பெறவேண்டும் என்பதே என் விருப்பமாகும்.

பாக்கியசாலிகளே ஜினவாணியை வாசிக்கவும், அதை காதால் கேட்கவும் முடியும் என்று பூஜ்ய குருவரர் காஞ்சி சுவாமிகள் அடிக்கடி கூறுவதுண்டு. நானும், என் மனைவியும் காஞ்சி சுவாமியின் உபதேசங்களால் ஈர்க்கப்பட்டு அதன் பயனால் உஜ்வலா சில ஆகம நூல்களை எழுதியுள்ளார். உண்மையான திகம்பர சாஸ்திரங்களை எழுதியும், அச்சிட்டும், பிரசாரம் செய்வதின் மூலம் ஐந்தாம் காலத்தின் கடைசிவரை இந்த ஆகமப் பரம்பரை பாதுகாக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இதில் திரு.பூபாலன் அவர்களின் உயரிய பங்கு இருக்கும் என்பதிலும் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

கரணானுயோகம் சம்பந்தமான கருத்துக்களைப் புரிந்து கொள்வது சற்று கடினமாக இருந்தாலும், மன உறுதியுடன் சுவாத்தியாயம் செய்வதால் நாம் வெகுசீக்கிரம் நற்காட்சியைப் பெறுவோமென்றால் அது மிகையாகாது. கரணானுயோகத்தில் கூறப்படும் நுட்பமான விஷயங்கள் மிகவும் உபயோகமானதாகும், அதனால்தான் தீர்த்தங்கரரால் திவ்யத்தொனியில் வெளிப்பட்ட இந்த வீதராகத் தர்மத்தை மூன்றுவித கஷாயங்கள் இல்லாத திகம்பர முனிவர்கள் எடுத்துக் கூறுகின்றனர் அல்லவா? நான்கு அனுயோகங்களின் பிழிவும் (essence-ம்) பற்றற்ற நிலையை, வீதராகத்தை அடைவதே என்று தீர்த்தங்கரர்களும், முனிவர்களும் விளக்கி இருக்கின்றனர். திரு.பூபாலன் அவர்கள் கரணானுயோகம் சம்பந்தமான இந்த அறிமுக நூலை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடுகிறார், இதனால் தர்ம சிந்தனை உடையவர்கள் நிச்சயம் பயன் பெறுவார்கள். இதைத்தொடர்ந்து அவர் நாங்கள் எழுதி வெளியிட்டுள்ள **பஞ்சலப்தி** என்ற நூலையும் சீக்கிரமே மொழி பெயர்த்து வெளியிடுவார் என்றும் நம்புகிறோம். திரு.பூபாலன் அவர்கள் அறச் சிந்தனையுடன் செயல்பட்டு இந்நூலை வெளியிடுவதின் மூலம் பல உயிர்களின் அறச் சிந்தனைக்கு அவர் நிமித்தமாக இருப்பார் என்பதில் எந்த ஒரு ஐயமுமில்லை, அவருக்கு என் பாராட்டுக்கள்!

பண்டிட். தினேஷ்பாய் ஷா
சயான்-கிழக்கு, மும்பை.

2-2-2020

அணிந்துரை

ஜினதர்மம் மகாவீரருக்குப் பின் கௌதம கணதரராலும், தொடர்ந்து வந்த ஆசாரியர்களாலும் தளராமல் தழைத்து வந்தது. ஆனால் காலப் போக்கில் ஞானமும் நினைவாற்றலும், தர்மத்தில் ஆர்வமும் குறைந்து வரலாயிற்று. அதோடு ஆசாரியர்களும், பேரறிஞர்களும் பெருமளவிலிருந்து சிலராயினர். ஆனால் இந்த காலகட்டத்தில், அவர்கள் விட்டுச்சென்ற ஆகமங்களும், சாஸ்திர, தர்க்க, தத்துவ நூல்களும், இலக்கியங்களுமே நமக்கு வழிகாட்டிகளாய் இருக்கின்றன. ஆனால் அவற்றையும் நாம் சுயமாகப் படித்து அறிய முடியவில்லை. அதனால் அவற்றை அறிந்து மனதில் இருத்தவும், இயன்ற அளவு பின்பற்றவும் தத்துவ அறிஞர்களும், சாஸ்திரிகளும், புலவர்களும் தேவைப் படுகிறார்கள். அதிலும் இந்தியாவில் ஒவ்வொரு மொழியிலும் அத்தகைய விற்பன்னர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாகவே உள்ளனர். இக்கால இளைஞர்கள், பணிகளின் நிமித்தம் நேரமின்றி ஓடிக்கொண்டே இருக்கும் நிலையில், தர்மம், ஜினதர்மம், தத்துவம், என்னும் வார்த்தைகள் அவர்கள் காதில் நுழைவது கூட துர்லபமாய் உள்ளது.

ஆனால் இதை அப்படியே விட்டுவிடாமல், ஆங்காங்கு உள்ள மேதைகள், தங்கள் பேச்சாலும், எழுத்தாலும், முப்பொழுதும் ஜினதர்மத்தை, அதன் விஞ்ஞானப் பூர்வமான தத்துவங்களை விடாமல், தங்கள் மொழிகளில் விளக்கி வருகிறார்கள். தங்கள் பணியைப் பற்றியோ, வருமானத்தைப் பற்றியோ, வயது, வசதி, ஓய்வு ஆகிய எதைப் பற்றியும் கவலைப் படாமல் ஜினதர்மத்தை பரப்பி வருகிறார்கள். அத்தகைய அறிஞர்களில் ஒருவர் மாகாராஷ்ட்ராவைச் சேர்ந்த மும்பையில் வாழும் **டாக்டர் உஜ்வலா ஷா** ஆவார். அவர் சமணத் தத்துவங்களில் ஆழ்ந்த அறிவும், ஆகமங்களின் அளப்பரிய ஞானமும் பெற்றவராவர். தன் வருமானம் மிக்க டாக்டர் தொழிலையும் விட்டுவிட்டு ஜின தரமத்தைத் தன் சொற்பொழிவுகளாலும், தத்துவ விசார தொடர் வகுப்புகளாலும், தன் கணவருடன் சேர்ந்து ஓயாது ஒழியாது பல இடங்களுக்கும் சென்று பரப்பி வருகிறார்.

அதோடு நில்லாமல் தன் ரீனா, மோனா ஆகிய இரண்டு பெண்களுக்கும் கடிதங்கள் மூலமாக ஜினனின் அறத்தை கடிதம் மூலம் படிப்படியாக விளக்கும் புதிய பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளார். அக்கடிதங்கள் மராட்டி மொழி இதழில் வெளிவரவும், அவை அமோக வரவேற்பைப் பெற்றன. அதன் எளிமையும், படிப்படியாகத் தொடர்ந்து அதன் அருமையான விளக்கங்களும் யாவரையும் கவர்ந்தன. அதனால் அவைகள் தொகுக்கப் பெற்று, மராட்டியோடு, ஹிந்தி, குஜராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் நூல்களாக வெளியாயின. இதுவரை பத்துக்கும் மேற்பட்ட பதிப்புகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இன்று அவை உலகப் புகழ் பெற்றுள்ளன.

அவருடைய நூல்களால் ஈர்க்கப்பட்டு, அவர்களுடன் நேரடி தொடர்பும் கொண்டு, அனுமதியும் பெற்று, அந்நூல்களைத் தமிழில் கொண்டு வந்து, தமிழக ஜைனப் பெருமக்களும் பயன் பெறும் நன்நோக்கத்துடனும் நம் பொறியாளர். திரு. து. பூபாலன் அவர்கள், அம்முயற்சியில் இப்போது **கரணானுயோக அறிமுகம்** எனும் இந்த நூலை வெளியிடுகிறார். அவர் ஏற்கெனவே டாக்டர். உஜ்வலா ஷாவின் **சமண தத்துவ அறிமுகம்**, **காரண காரிய இரகசியம்** ஆகிய இரண்டு நூல்களையும் 2019-ல் வெளியிட்டுள்ளார். டாக்டர் உஜ்வலா தம்பதியர் பொருளுதவி செய்ய முன்வந்த போழுதும், அதை மறுத்து பெரும் செலவை தானே ஏற்று ஜின தர்மத்தைப் பரப்பும் தொண்டுள்ளம் படைத்தவர்.

பொறியாளர். திரு. பூபாலன் அவர்கள் பல வருடங்களுக்கு முன்பே **குணஸ்தானம்**, **உயிரின் இயல்பு** ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஆங்காங்கு

ஜினாலயங்களிலும், மற்றும் பல மேடைகளிலும் தத்துவங்களை விளக்கிப் பேசும் வித்தகர். படாடோப விழாக்களை, வெறும் சடங்குகளை மறுதளிப்பவர். அன்னாருக்கு உஜ்வலா ஷா நூல்களில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டதில் வியப்பில்லைதான்!

இப்போது **கரணானுயோக அறிமுகம்** என்ற இந்த நூலில், கர்ம பந்தம், ஸ்திதி, உதய காலம், கர்ம பரமாணுக்கள் உதயத்திற்கு வராமல் உயிருடன் பலனைத் தராமல் இருக்கும் 'ஆபாதாகாலம்' ஆயுள் பந்தம் ஆகிய விபரங்களும், நோகர்ம பந்தம், ஸ்திதி, உதயம், முதலானவைகளும் மிகத் தெளிவாக முதல் சில கடிதங்கள் மூலம் விளக்கப்படுகின்றன. பிறகு, உயிரின் ஞான, தரிசன, சாரித்திரத்தின் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, அது நிலைபெறும் பதினான்கு வகை குணஸ்தானங்களை எளிமையாக, தெளிவாக விளக்கப்படுகிறது. குணஸ்தான ஏற்ற இறக்கங்களைப் புரிந்து கொள்வது சற்று கடினம் என்பதைக் கருத்தில் கொண்டு, அதற்குத் தகுந்த வரைபடங்களின் மூலம் விளக்கி புரிய வைத்திருப்பது, மிகவும் பாரட்டத்தக்கது.

அடுத்து உயிர் எந்த கதியில் இருக்கிறது, ஒன்று முதல் எத்தனை இந்திரியங்களைப் பெற்றிருக்கிறது முதலான 14 நிலைகளை ஆராயும் 14 வகை மார்கணா ஸ்தானங்களைப் பற்றி நூல் விரிவு செய்துள்ளது. ஆசாரிய நேமிச்சந்திர சித்தாந்த சக்கரவர்த்தி இயற்றிய **கோமடசார**த்தில் ஜீவகாண்டப் பகுதியில் விளக்கப்பட்டுள்ள குணஸ்தானம், மார்கணா ஸ்தானம் மிக்க விரிவும் ஆழமும் உடையது. அவற்றை இந்நூலைப் பயிலுவதால் நன்கு அறிந்து தெளிவடையலாம்.

மனமுவந்து பல நேரங்களில் தன் பொருளை செலவிட்டு, ஜனதர்மத்தைப் பரப்பும், அதுவும் அழியாத நூல் வடிவில் ஆவணப் படுத்தும் திரு. பூபாலன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் அது மிகையாகாது. இவர் தயாள தர்ம குணத்தை, சித்தச்ஷேத்திரம் சிகர்ஜியில் நம் தமிழ்நாடு ஜெயின் பவன் கட்டிட நிதிக்கு ஐந்து லட்சம் உபயம் செய்த இவரது கொடை உள்ளத்தாலும் அறியலாம். ஜின அறத்தில் மூழ்கியவர்களுக்கே இத்தகைய செயல்பாடுகள் அமையும். இவரைப் பாராட்டுவதோடு **கரணானுயோக அறிமுகம்** என்ற இந்நூலை வாங்கிப் படித்துப்பயன் பெறுவோம். நூலைப் படித்துப் பார்த்தால், இவரது உழைப்பும், மூலநூல் கருத்துக்கள் சிறிதும் மாறாமல் மொழிபெயர்த்துள்ள திறைமையும், அழகும் நமக்குத் தெரியவரும்; அவரை மனமுவந்தும் பாராட்டலாம்! வாழ்த்துக்கள்!!

சென்னை-82
9841698993

அன்புடன்,
கரந்தை.அ.சுகுமாரன்

மொழிபெயர்ப்பு மற்றும் பதிப்பாளர் முகவுரை

ஏயக்கதோ ஸமணோ ஏயக்கம் ணிச்சிதஸ்ஸ அத்தேசு |
ணிச்சித்தீ ஆகமதோ ஆகமசேட்டா ததோ ஜேட்டா || 232||

பிரவசனசாரம் காதை 232-ல் ஆசாரிய குந்தகுந்தர் ஆகமப் பயிற்சியின் அவசியம் பற்றி மேல்காணும் காதையில் இவ்வாறு கூறுகிறார். பொதுவாகப் பொருளை உறுதிப்படுத்த, குறிப்பாக நம்மை-நம் ஆத்மாவை-நம் உயிரை உறுதிப்படுத்த மன ஒருமைப்பாடு-தியானம் அவசியமாகும். அந்த மன ஒருமைப்பாடு பொதுவாக சமணர்களுக்கு, சிறப்பாக நிர்கிரந்த பாவலிங்கி முனிவர்களுக்கு ஆகிறது. பொருளை உறுதி செய்தல் ஆகம அறிவின் மூலமே நிகழ்கிறது. முழுதுணர் அறிவனால் அருளப்பட்ட ஆகமங்களில் பயிற்சி செய்தே அந்த அறிவைப் பெறவேண்டும். பொருளை உறுதிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும், அப்படிப்பட்ட உண்மையான ஆகமப்பயிற்சி இல்லாதபோது தடுமாற்றமும், கவலையுமே மிஞ்சுகிறது. எனவே நற்காட்சி பெற்று வீடுபேறு பெற முயற்சிப்பவர் ஆகமங்களைப் பயின்று அந்த அறிவைப் பெறுவதில் வல்லவராக இருத்தல் வேண்டும். மேலும் அவரே தான் பெற்ற ஆகம அறிவின் துணைக்கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி தன் ஆன்மாவை அறிந்து, அதை உறுதி செய்து, அதில் ஆழ்ந்து, நற்காட்சி பெற்று, முக்திப் பாதையில் முன்னேற முடியும் என்று நம்மிடையே வாழ்ந்து, நமக்கு ஆகம அறிவு புகட்டிய சுல்லக் 105 ஆதிநாதன்ஜி அவர்கள், அவரால் எழுதப்பட்டு 2007-ல் வெளிவந்த பிரவசனசார தமிழ்உரை நூலில் குறிப்பிடுகிறார். இதிலிருந்து ஆகம அறிவு பெறுவதன் இன்றியமையாமையையும் அதன் அவசியத்தையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

இக்காலத்தில் நம்மிடையே அதாவது தமிழ் சமணர்களிடையே ஆகமம் பயில்வதில் ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இதற்குக் காரணம் ஆகமம் பயிலத் தேவையான அடிப்படை தத்துவ விஷயங்களை அவர்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பதே காரணம். அப்படிப்பட்ட அடிப்படை விஷயங்களைத் தெரிந்து கொள்ள சென்ற ஆண்டு மன்றம் வெளியிட்ட கடிதம் மூலம் **சமண தத்துவ அறிமுகம்,** ஜினாகமத்தில் **காரண காரிய இரகசியம்** மற்றும் இப்போது உங்கள் கையில் இருக்கும் கடிதம் மூலம் **கரணானுயோக அறிமுகம்** என்ற இந்த மொழிபெயற்பு நூல்கள் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த நூல்கள் ஜினதர்மம் எதுவும் தெரியாதவர்கள்கூட மிகச் சுலபமாக அவர்களே படித்துத் தெரிந்து கொள்ளும் எளிமையான மொழி நடையிலும், படிப்படியாக ஆகம மொழிச் சொற்களைத் தெரிந்து கொள்ளும் வகையிலும் எழுதப்பட்டுள்ளன. நீங்கள் இந்நூல்களைத் திரும்பத்திரும்ப படித்து நன்கு புரிந்து கொண்டால், பரமாகமங்களில் கூறப்பட்டுள்ள நம்மைப் பற்றிய உண்மையான அறிவு பெறவும், நீங்கள் அவைகளைப் படித்து முக்திப் பாதையில் முதலடி எடுத்து வைக்கவும், உங்கள் ஆர்வத்திற்கு உகந்தார்போல் அதில் முன்னேறவும் ஏதுவாகும்.

அதிஷ்டவசமாகவும் என் புண்ணிய உதயத்தாலும் சில வருடங்களுக்கு முன் பண்டிட். **தினேஷ்பாய் ஷா** மற்றும் டாக்டர் **உஜ்வலா ஷா** அவர்களின் பிரவசனங்களை கேட்கவும் அவர்கள் எழுதிய சில நூல்களை பயின்று அவைகளை தமிழாக்கம் செய்யும் பேறும் பெற்றிருக்கிறேன். சில தினங்களுக்கு முன்பு அவர்களைத் தொடர்பு கொண்டு கரணானுயோக அறிமுகம் தமிழாக்கம் முடிவடைந்ததைத் தெரியப்படுத்தி நூலுக்கு முகவுரை எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொண்டேன். அவர்கள் என்னைப் பாராட்டியதோடு அல்லாமல் முகவுரைகளையும் எழுதி அனுப்பிய அவர்களுக்கு என் பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல்கள் ஒவ்வொரு தமிழ்ச் சமணர்கள் கையிலும் இருக்க வேண்டும் என்ற ஆர்வக் கோளாறினால் சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட இரண்டு நூல்களும் 1000-1000 பிரதிகள் அச்சிடப்பட்டன. நூல்கள் வெளியிட சுமார் 25% பணம் சாஸ்திர தானமாக நான் கேட்காமலேயே நண்பர்களிடமிருந்து கிடைத்தது. நம் மக்களிடையே நூல் வாங்கிப் படிக்கும் பழக்கமும், ஆர்வமும் இல்லாததால் இன்னும் 50% நூல்கள் என்னிடமே தேங்கி உள்ளன. ஆகையால் இந்த நூலை 500 பிரதிகளே அச்சிட்டு வெளியிட முடிவு செய்தேன். முன்னர் நூல் வெளிவந்ததும் பலர் அடுத்த நூல் வெளியிடும்போது தெரிவியுங்கள், நாங்களும் சாஸ்திர தானத்தில் பங்குபெற விரும்புகிறோம் என்று கேட்டுக்கொண்டனர். அதனால் சுமார் 100 நண்பர்களுக்கு நூல் வெளியீடு பற்றித் தகவல் அனுப்பினேன். நண்பர்கள் பலர் இந்த நூலை பதிப்பிடும் முயற்சியில் அவர்களுடைய சாஸ்திர தானமாக ரூபாய் 100, 1000, 2000, 3000, ... என அனுப்பி நூல் பதிப்பிடும் முயற்சிக்கு பெருந்துணையாக நின்றனர். இந்நூல் முழுமையாக சாஸ்திரதான கர்த்தாகள் மூலமே வெளிவருகிறது என்பதை பெருமையுன் கூறிக் கொள்கிறேன். அந்த பவ்வியர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த சாஸ்திர தானத்தையும் நூலில் கடைசி இரண்டு பக்கங்களில் கொடுத்துள்ளேன். சாஸ்திர தானமளித்த எல்லா நண்பர்களையும் என் முழுமனதுன் பாரட்டுவதோடு மட்டுமல்லாமல் என் அன்பு கலந்த நன்றியையும் அவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தார்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலின் மொழிபெயர்ப்பின் போது எனக்குப் பேருதவியாக இருந்த முனைவர் வி.தனகுமார் ஜெயின் சாஸ்திரியார், திரு.ஜெயராஜ் சாஸ்திரியார், மற்றும் என் மனைவி மாலதி ஆகியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலில் அச்சுப்பிழை எதுவும் இல்லாதவகையில் பிழை திருத்தம் செய்தும் அணிந்துரை எழுதியும் உதவிய கரந்தை திரு.அ.சுகுமாரன் அவர்களுக்கும், தன்னுடைய பொன்னான நேரத்தை ஒதுக்கி நூலில் அச்சுப்பிழைத் திருத்தங்கள் செய்வதில் உதவிய கவிஞர் இரா.தங்கராசு அவர்களுக்கும் என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலினை அருமையாகவும், நேர்த்தியாகவும் அச்சிட்டுத் தந்த ஸ்ரீ பாலாஜி ஆப்செட் நிறுவனராகிய திரு.சுப்பையா அவர்களுக்கும் என் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலின் மொழிபெயர்ப்பு முழுக்க முழுக்க டாக்டர் உஜ்வலா ஷா அவர்களின் கருத்துக்களும், மொழி நடையும் அப்படியே இருக்குமளவுக்கு மிகுந்த கவனத்துடன் செய்திருக்கிறேன். எங்கு மேலும் கொஞ்சம் விளக்கினால் நன்றாக புரியும் என்று தோன்றிய இடத்தில் **[ ]**-இக்குறியீட்டுக்குள் என் ஷயோபசம ஞானத்திற்கு தெரிந்த அளவில் கூடுதல் விஷயங்களையும் கொடுத்திருக்கிறேன். இந்த நூலில் பவ்வியர்கள் ஏதாவது தவறு கண்டால் எனக்கு தெரியப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், திருத்தி வாசித்துக் கொள்ளவும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அருமுயற்சியின் காரணமாக வெளிவந்துள்ள இந்த நூலை தமிழ்ச் சமணர்கள் படித்து ஆன்ம நலம் பெற வேண்டும் என்ற பாவனையுடன்,

து. பூபாலன்
9840448643

20-02-2020

கடிதம்-1 ஓம் நம: சித்தேப்ய: 23-07-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

சமண தத்துவ அறிமுகம் என்ற பெயரில் கடிதத்தின் மூலம் ஸ்வாத்யாயம் செய்து அதிக காலம் கழிந்து விட்டது. இதற்கிடையில் நீங்கள் இருவரும் அம்மாவாகி விட்டீர்கள். குழந்தைகள் வளர்ப்பு, பிறபொறுப்புகள் மற்றும் செயல்பாடுகளில் நீங்கள் இருவரும் மும்முரமாக ஈடுபட்டிருந்தாலும்கூட உங்களுக்கு சுவாத்யாயம் செய்வதில் இப்போதும் ஆர்வம் நீடித்திருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது நீங்கள் சுவாத்யாயம் செய்வதோடு மட்டுமே உங்கள் வேலை முடிந்து விடவில்லை, ஆனால் குழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுப்பதும் கூட உங்களுடைய பொறுப்பே யாகும்.

சில வருடங்களுக்கு முன்பு கர்மம் மற்றும் குணஸ்தானம் பற்றி நான் உங்களுக்கு விளக்குகிறேன் என்று கூறியிருந்தேன். இப்போது அடிக்கடி எனக்கு கர்மம், குணஸ்தானம், பர்யாப்தி, பிராணன், சஞ்ஞா, மார்கணை முதலான விஷயங்கள் பற்றி உங்களுக்கு விளக்க வேண்டும் என்ற எண்ணம் வந்த வண்ணம் இருக்கிறது. உண்மையில் கரணானுயோகத்தின் இந்த விஷயம் மிகவும் ஆழமானதாகவும், புரிந்து கொள்ள கொஞ்சம் கடினமானதாகவும் இருந்தாலும்கூட அவைகளைப் படிப்பதால் அதிக ஆனந்தம் வருகிறது. திரவ்யானுயோகம் சம்பந்தமாக நாங்கள் ஆழமாக சுவாத்யாயம் செய்தவைகளைப் புரிந்து கொள்ளவும் மற்றும் பேதவிஞ்ஞாம் செய்யவும் அதாவது பொருள்களைப் பிரித்தறியவும் கரணானுயோக சுவாத்யாயம் அதிக சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இதனால் நம்மிடம் இருக்கும் அனேக தத்துவ சம்பந்தமான கேள்விகளுக்கும், குழப்பங்களுக்கும் தெளிவு கிடைக்கிறது.

இன்றிலிருந்து நான் **என் கதையை** கேட்கவிருக்கிறேன். இந்த கதை என்னுடையது, உன்னுடையது, இவருடையது, அவருடையது, தன்னை மறந்த எல்லா உயிர்களினுடையதும் தான். உயிர் என்னவோ அனாதியாகவே உயிராகவே இருந்தது, இருக்கிறது, இருக்கப் போகிறது, ஆனால் மறதியால் இந்த உயிர், உடலையே உயிர் என்று, அதாவது ஸ்வயம் **நான்** என்று நம்பிக் கொண்டிருக்கிறது, அதனால் என் கதை இப்படி யாகிவிட்டது. இன்றிலிருந்து இந்த கர்மக் கதையை, அதாவது கர்ம பந்தத்தின்-கர்மத்தைக் கட்டிக் கொள்வதின் கதையை நாம் கேட்கலாம்.

ஆசாரியர்கள் நமக்கு ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், நிமித்தம், ஆசை முதலான விகார உணர்வுகள், கர்மம், குணஸ்தானம், மார்கணாஸ்தானம் முதலான அனேக விஷயங்களின் இயல்பு-ஸ்வரூபம் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவைகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம். இந்த எல்லா நிமித்தம் மற்றும் உடனிருப்பவைகளை-சய்யோகங்களைப் பற்றி நாம் அறிவுபெற விருக்கிறோம். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும், அது என்னவென்றால் நம்முடைய கம்பம் போன்ற நிலையான இயல்பின் மேல், ஸ்வபாவத்தின்மேல் நம் பார்வையையை வைத்துக்கொண்டு, அதாவது நான் ஒரு அழிவில்லாத நிலையான பொருள் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். ஏழு தத்துவங்களின் இயல்பு-ஸ்வரூபம் பற்றி மீண்டும் ஒருமுறை விரிவாக அறிந்து, அதைப்பற்றி அடிக்கடி சிந்தனை செய்து-தர்க்கம் செய்து-

அதாவது அதில் என்ன logic இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் முயற்சியில் உங்கள் அறிவில் அதைச் சிந்தியுங்கள். அதிலேயே அடிக்கடி ஆழ்ந்து [விரலைச் சப்பும் குழந்தை எத்தனை முறை விரலை அதன் வாயிலிருந்து எடுத்து விட்டாலும், அதே வேகத்தில் அது தன் விரலை அதன் வாயில் மீண்டும் வைத்துக் கொள்வது போல] அதாவது மீண்டும் மீண்டும் உங்கள் எண்ணத்தில் கொண்டு வந்து இந்த விஷயங்களை எந்த சந்தேகமுமின்றி அறிந்து அதில் நம்பிக்கை வைப்பதால் பேதவிஞ்ஞானத்தை, அதாவது ஒன்றாகக் காணப்படும் இரண்டு பொருள்களை பிரித்தறியும் கலையைத் தெரிந்து கொள்ள நமக்குப் பேருதவியாக இருக்கும்.

இன்றிலிருந்து நான் உங்களுக்கு இந்த பந்தத்தின் கதையைச் சொல்லக் கேளுங்கள், ஆனால் நோக்கத்தை-நம்பிக்கையை உங்களுடைய அபேத-த்ருவ ஸ்வபாவத்தின் மேல் அதாவது அழிவில்லாத முக்காலத்திலும் நிலையான ஆத்ம இயல்பின் மேல் உறுதியாக வைத்துக்கொண்டு கேளுங்கள். நீங்கள் இருவரும் உங்கள் இளமைப் பருவத்தில் பயங்கரமான கதைகளைக் கேட்கும்போது என்னுடைய கையை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பீர்களே, அது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும் என்று நினைக்கிறேன். நான் ஜீவ தத்துவமாவேன் என்று உங்கள் ஸ்வருபத்தை-இயல்பை உங்கள் அறிவில் சர்ச்சை செய்வதின் மூலம் உறுதியாக நிர்ணயம் செய்த பிறகே இந்த கதையைக் கேட்க ஆரம்பிக்கலாம்.

கடிதத்தின் தொடக்கத்தில் நாம் சித்தர்களுக்கு வணக்கம் செய்தோம். சித்த பகவான் திரவ்விய கர்மம், பாவ கர்மம், மற்றும் நோகர்மம் இவைகள் இல்லாமல் இருக்கிறார். இந்த மூன்று கர்மங்களின் இயல்பையே-ஸ்வரூபத்தையே நாம் தெரிந்து கொள்ளவில்லை என்றால், கர்மங்களே இல்லாத சித்தர்களின் ஸ்வரூபம்-இயல்பு மற்றும் சித்தருக்கு சமமான நம்முடைய சுத்தாத்மாவின் ஸ்வரூபத்தையும் நாம் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?

எளிமையாகச் சொல்ல வேண்டுமென்றால் கார்மண வர்கணை பெயர் கொண்ட புத்கல ஸ்கந்தங்களாலானது திரவ்விய கர்மமாகும். உயிர் ஆசை, வெகுளி, மயக்க உணர்வு கொள்ளல் பாவ கர்மமாகும். உடல், மனம், வாணி-பேச்சு முதலியன உயிரின் நோகர்மமாகும். தற்போதைய விளக்கங்களில் எங்கெங்கு கர்மம் என்ற சொல் வருகிறதோ அங்கு திரவ்விய கர்மம் பற்றியே இங்கு சர்ச்சை செய்யப்படுகிறது என்று தெரிந்து கொள்ளுங்கள்.

உயிரும் கர்மமும் அனாதியாகவே-இந்த இரண்டின் தொடர்பு எப்போதிருந்து என்று சொல்ல முடியாதபடி ஒன்று மற்றொன்றோடு பந்த நிலையிலேயே இருக்கின்றன. அதாவது பிறவி உயிர்களிடம் கர்மத்தின் பந்தம் எப்போதும் இருக்கிறது. யாரும் வலுக்கட்டாயமாக இந்த இரண்டையும் சேர்த்தார்கள் என்று சொல்வதற்கில்லை. உயிர் முதலில் சித்தருக்குச் சமமாக சுத்தமாக இருந்தது, பிறகு கர்மம் வந்து அதில் ஒட்டிக்கொண்டது-பந்தமானது என்றும் சொல்ல முடியாது. எப்படி சுரங்கத்தில் தங்கத்தாது இருக்கிறதோ, அதாவது அங்கு யாரும் தங்கத்தையும், கல்-மண் துகள்களையும் சேர்த்து வைக்கவில்லையோ, இயற்கையாகவே, அனாதியாகவே அவை எவ்வாறு கலப்பட நிலையில் இருக்கிறதோ அதேபோல, உயிரும் கர்மமும்கூட அனாதியாகவே ஒன்றோடொன்று பந்தமான நிலையிலேயே இருக்கின்றன. ஒவ்வொரு உயிரிலும் அனந்தானந்த கர்ம பரமாணுக்கள் பந்த நிலையில் இருக்கின்றன. இவைகளில் உயிர்பொருள் என்னவோ ஒன்றேயாகும், அருவமாகும், சேத்தன குணமுடையதாகும், சுருங்கி விரியும் சக்தியுடைய அசங்க்யாதப் பிரதேசியாகும். ஆனால் உடனிருக்கும்

கர்மத்தின் பிண்டம் என்னவோ அனந்தானந்த கர்ம பரமாணுக்களின் சமூகமாகும், அசேத்தனமாகும். கர்மம் புத்கலத்தாலானது ஆகையால் அதில் அறியக்கூடிய சக்தி-ஞானம் இல்லை. இந்த கர்மப் பிண்டத்திலிருந்து ஒவ்வொரு சமயமும் கொஞ்சம் கர்ம பரமாணுக்கள் விடுபட்டு வெளியேறுகின்றன, அதுபோலவே ஒவ்வொரு சமயமும் கொஞ்சம் புதிய கர்ம பரமாணுக்கள் வந்து அதில் சேர்ந்து விடுகின்றன. புதிய பரமாணுக்கள் வந்து பழைய கர்மங்களுடன் சேர்ந்து விடுவதை **பந்தம்** என்று சொல்கின்றனர், மற்றும் பரமாணுக்கள் விடுபட்டுப் போவதை **உதயம்** என்று சொல்கின்றனர்.

கர்ம பந்தத்தை **1. பிரதேச பந்தம், 2. பிரக்ருதி பந்தம், 3. ஸ்திதி பந்தம், 4. அனுபாக பந்தம்** என்று நான்கு பிரிவாகச் சொல்கின்றனர். எப்போது கர்ம பந்தம் நிகழ்கிறதோ அப்போது குறிப்பிட்ட எண்ணிக்கையில் கர்ம பரமாணுக்கள் வந்து உயிருடன் பந்தமாகின்றன, அந்த கர்ம பரமாணுக்களின் எண்ணிக்கையை **பிரதேச பந்தம்** என்று சொல்கின்றனர். அந்த எண்ணிக்கை அனந்தமாக இருக்கிறது. நிரந்தரமாக, இடைவிடாது ஒவ்வொரு சமயத்திலும் அனந்த கர்ம பரமாணுக்கள் பந்தமடைகின்றன. ஒரு சமயத்தில் எவ்வளவு பரமாணுக்கள் பந்தமாகின்றனவோ அதை **சமயப்பிரபந்தம்** அதாவது **ஒரே சமயத்தில் பந்தமானவை** என்று சொல்கின்றனர். அவ்வளவு சமமான பரமாணுக்களே அதாவது ஒரு சமயப்பிரபந்த அளவு பரமாணுக்களே ஒவ்வொரு சமயமும் பழைய கர்ம பிண்டதிலிருந்து விடுபட்டு விலகி விடுகின்றன-அவை கர்ம நிலையிலிருந்து அழிந்து கர்மமில்லாத நிலையை அடைகின்றன.

இப்போது பிரக்ருதி பந்தத்தின் ஸ்வரூபத்தைப் பார்க்கலாம். கர்மத்தின் தன்மையை அல்லது இயல்பை **பிரக்ருதி** என்று சொல்கின்றனர். அனந்த கர்ம பரமாணுக்கள் வந்து பழைய கர்ம பிண்டத்துடன் பந்தமாகின்றன, அந்த சமயத்தில் அவை எட்டு பாகங்களாகப் பிரிந்து கர்மத்தில் எட்டு பிரிவுகள் இருக்கின்றனவே அவைகளுடன் சேர்ந்து அந்தந்த தன்மையை அடைவதையே **பிரக்ருதி பந்தம்** என்று சொல்கின்றனர். கர்மங்களின் இயல்பு அதாவது எந்த கர்மம் என்ன பலன் கொடுக்கிறது என்பதை வைத்து அவைகள் எட்டு வகைகளாகப் பிரித்துப் பேசப்படுகின்றன. இவைகளை **மூலப்பிரக்ருதி** என்று சொல்கின்றனர். இந்த மூலப்பிரக்ருதிகளின் பெயர்களாவன: **1.ஞானாவரணம், 2.தர்சனாவரணம், 3.மோஹனீயம், 4.அந்தராயம், 5.வேதனீயம், 6.ஆயுள், 7.நாமம், 8.கோத்திரம்** என்பதாகும். இந்த மூலப்பிரக்ருதிகளை மேலும் 148-டாகப் பிரித்து அவைகளை **உத்தரப் பிரக்ருதிகள்** என்று சொல்கின்றனர்.

கர்மம் எப்போது பந்தமாகிறதோ அப்போதே-அந்த சமயத்திலேயே அது எவ்வளவு காலம் உயிருடன் இருக்க வேண்டும் என்பதும் நிச்சயிக்கப்பட்டு விடுகிறது. அந்த நிச்சயிக்கப்பட்ட காலத்தை கர்மத்தின் **ஸ்திதி** என்று சொல்கின்றனர், பந்தத்தின் இந்த பிரிவை **ஸ்திதி பந்தம்** என்று சொல்கின்றனர். அந்த ஸ்திதி முடிவடைந்தவுடன் உயிருடன் அந்த கர்மத்தின் பந்தம் முடிவுக்கு வந்துவிடுகிறது அதாவது அந்த கர்மத்துக்கும் உயிருக்கும் இருந்த தொடர்பு விடுபட்டுப் போகிறது, அதனால் கர்மம் உயிரிலிருந்து விழுந்து விடுகிறது என்று சொல்லப்படுகிறது. இந்த கர்மத்தின் நிலையை-அவஸ்தையை **உதயம்** என்று சொல்கின்றனர். கர்ம உதயம் நிகழும்போது அந்த கர்மத்தின் பலன் தரும் சக்தி அதாவது **அனுபாகம்** அல்லது **ரசம்-சுவை** உயிருக்குக் கிடைக்கிறது அதாவது உயிர் அது தொடர்பான அனுபவம் பெறுகிறது அல்லது அந்த கர்மத்தின் பலனை அனுபவிக்கிறது என்றும் சொல்லலாம். இத்த அனுபாகம் கூட கர்ம பந்தத்தின் ஒரு பகுதியாகும், இந்த பலன் தரும் சக்திகூட கர்மம் கட்டும் சமயத்திலேயே நிச்சயிக்கப்பட்டு விடுகிறது, இதை **அனுபாக பந்தம்** என்று சொல்கின்றனர். இந்த கர்மத்தின் ஸ்திதி மற்றும்

அனுபாகத்தை யார் நிர்ணயிக்கிறார்கள்? கர்மம் என்னவோ அசேத்தனமாகும் அதாவது அறிவில்லாதது எனவே அதற்கு எப்படித் தெரியும் எவ்வளவு மற்றும் எந்த மாதிரியான பலன் தரவேண்டுமென்று? கர்மத்தில் எட்டு பிரக்ருதிகளில் எவ்வாறு பிரிந்து எவைகளுடன் சேர வேண்டும் மற்றும் யார் அந்த எண்ணிக்கையை அதாவது பிரதேச பந்தத்தை சரி பார்ப்பார்கள்? என்றெல்லாம் உங்களுக்கு தோன்றுகிறதல்லவா.

கேளுங்கள்! கர்மத்தின் ஸ்திதி மற்றும் அனுபாக பந்தத்திற்கு உயிரின் மோஹ, இராக, த்வேஷம் அதாவது ஆசை, வெகுளி, மயக்கம்-விருப்பு, வெறுப்பு, மூடநம்பிக்கை உணர்வுகள் நிமித்தமாகும். மோஹம் அதாவது மயக்கம் என்பது மித்யாத்துவமாகும், மூடநம்பிக்கையாகும். மேலும் இராக, த்வேஷம் அதாவது விருப்பு, வெறுப்பு என்பது துவர்ப்பு உணர்வுகளாகும். மூடநம்பிக்கை மற்றும் துவர்ப்பு உணர்வுகள் இரண்டையும் சேர்த்தே சாஸ்திரத்தில் **கஷாயம்** என்ற சொல்லால் கூறுகின்றனர். இதனால்தான் சாஸ்திரங்களில் கஷாயத்தின் காரணத்தால்-நிமித்தத்தால் கர்மத்தின் ஸ்திதி மற்றும் அனுபாக பந்தம் உண்டாகிறது என்று சொல்லப்படுகிறது. சாஸ்திரத்தில் இவ்வாறு சொல்லப்படுவதைக் கேட்டு அல்லது பார்த்து தவறாக புரிந்து கொண்டு சிலர் **பாருங்கள் கஷாயத்தால் கர்மம் பந்தமாகிறது, மூடநம்பிக்கையால் கர்மம் கொஞ்சம்கூட பந்தமாவதில்லை** என்று சொல்லும் முரட்டு தைரியம் உங்களுக்கு வராது என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

இப்போது பிரதேச பந்தம் மற்றும் பிரக்ருதி பந்தத்திற்கு எது-யார் காரணம்? என்ற கேள்வி எழுகிறது. நாம் இன்றுவரை ஒவ்வொரு சமயமும் அனந்த பரமாணுக்களை பந்தம் செய்து கொண்டு வருகிறோம், ஆனால் அதைப்பற்றி நாம் கொஞ்சம்கூட எதுவுமே தெரிந்து கொள்ளவில்லை. கர்மம் கட்டுவதையும், விழுவதையும் ஈஸ்வரனோ அல்லது வேறு எந்த பொருளோ செய்ய முடியாது என்று உறுதியாக நம்மால் சொல்ல முடியும், ஏனென்றால் ஒரு திரவியம் பிற திரவியங்களுக்கு கொஞ்சம்கூட எதுவும் செய்ய முடியாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். கர்மம் சுயமாகவே இந்த எட்டு பிரக்ருதி வடிவில் பிரிந்து கொள்கின்றன. அதற்கு வேறு எவரும்-எதுவும் கர்த்தா இல்லை. எவ்வாறென்றால் நாம் சாப்பிடும் உணவு ஜீரணமாகி இரத்தம், எலும்பு, தசைகள், நரம்பு மற்றும் கழிவுகளாக தானாகவே ஆகிறதோ, அதற்கு வேறு யாரும் காரணமில்லையோ அதுபோல, கர்மம் சுயமாகவே மூலப் பிரக்ருதி, உத்தரப் பிரக்ருதி வடிவில் தாமாகவே பிரிந்து விடுகின்றன. கர்ம பரமாணுக்களின் எண்ணிக்கை அதாவது பிரதேசம் கூட அதனுடைய சுய காரணத்தாலேயே பந்தமாகின்றன. இந்த பிரதேச பந்தம் மற்றும் பிரக்ருதி பந்தத்தில் உயிரின் **யோகம்** நிமித்த காரணமாகும்.

ஆகையால் முதலில் யோகம் என்றால் என்னவென்று தெரிந்து கொள்ளுதல் அவசியமாகும். நம்முடைய அன்றாட வாழ்க்கையில் யோகம் என்ற சொல்லை வெவ்வேறு அர்த்தத்தில் உபயோகப் படுத்துகிறோம். அதாவது இன்று பண வரவுக்கான யோகம், பாருங்கள் என்ன யோகமோ யோகம், யோகப் பயிற்சியினால் நம்முடைய ஆரோக்கியம் நன்றாக இருக்கிறது, குறிப்பிட்ட நபர் ஒரு பெரிய யோகியாவார், உயிர் பாதுகாப்பு நிறுவனம்-LIC கூடச் சொல்கிறது **யோகஷேமம் வஹாம்யஹம்**-உங்கள் யோகம், ஷேமம் இரண்டையும் நாங்கள் நிர்வாகம் செய்கிறோம் அதாவது உங்கள் குடும்பத்தின் ஷேமத்திற்கும்-கிடைத்ததைத் தக்கவைத்துக் கொள்வதற்கும், யோகத்திற்கும்-கிடைக்க அரிதானது கிடைப்பதற்கும் நாங்கள் உத்திரவாதம் அளிக்கிறோம். இவைகளில் எந்த யோகத்தை பற்றியும் இங்கு பேசப்படவில்லை. உயிரின் பிரதேசத்தில் அதாவது ஆத்மப் பிரதேசத்தில் ஏற்படும் அதிர்வு-ஆத்ம பிரதேசங்களில் நிகழும் ஒருவகையான இறுக்கம்-ஒருவகையான சலனம்-பரிஸ்பந்தம் நிகழ்தல்-சஞ்சலம் ஏற்படுதலையே யோகம் என்று

சொல்கின்றனர். ஆத்மப் பிரதேசத்தில் ஏற்படும் அதிர்வை **திரவ்விய யோகம்** என்று சொல்கின்றனர். இந்த திரவ்விய யோகத்தின் காரணத்தால் உயிரில் கார்மண ஸ்கந்தங்களை-கர்ம அணுக்களை ஈர்க்கும் சக்தி உண்டாவதை **பாவ யோகம்** என்று சொல்கின்றனர். எவ்வாறு மின்காந்தத்தில் (electro magnet-ல்) இரும்புத் தூள்களை ஈர்க்கும் காந்த சக்தி காணப்படுகிறதோ அதுபோலவே ஆத்மப் பிரதேசத்தில் உண்டாகும் இந்த அதிர்வினால், கர்ம ஸ்கந்தங்களை ஈர்க்கும் சக்தி இயற்கையாகவே அங்கு காணப்படுகிறது, அந்த சக்தியையே இங்கு **யோகம்** என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர்.

பந்தத்தின் நான்கு பிரிவுகளில் பிரதேச பந்தம், பிரக்ருதி பந்தம் நிகழ்வதில் யோகம் நிமித்தம் என்பதும், ஸ்திதி பந்தம், அனுபாக பந்தம் நிகழ்வதில் கஷாயம் (மூடநம்பிக்கை, இராகம், த்வேஷம்) நிமித்தம் என்பதும் இப்போது உங்கள் எண்ணத்தில் வந்திருக்கும். இந்த நான்கு பந்தத்திலும் பிரக்ருதி, பிரதேசம் மற்றும் ஸ்திதி பந்தங்கள் எதுவும் உயிரின் சுக-துக்கத்திற்கு காரணமில்லை. கர்மத்தின் அனுபாகத்தில் அதாவது பலனில் உயிர் இணைந்து கொள்ளும்போது அதாவது கர்ம பலன்தரும் சக்தியுடன் ஈடுபாடு கொண்டு ஆசை, வெகுளி, மயக்க உணர்வு கொள்ளுமானால் அப்போது உயிர் துக்கமடைவதோடு மட்டுமல்லாமல், புதிய கர்ம பந்தமும் நிகழ்கிறது. இங்கே பாருங்கள்! கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். உயிரின் துக்கம் அதன் சுய மோஹ, இராக, த்வேஷ உணர்வின் காரணத்தாலாகும். கர்மம் அசேதனமும், உயிர் பொருள் அல்லாத வேறு பொருளாகையால் கர்மம் உயிருக்கு சுக துக்கத்தை கொடுப்பதில்லை. மகள்களே! நம் வாழ்க்கையில் பல இன்ப துன்ப நிகழ்வுகள் வருகின்றன, அந்த சமயத்தில் நாம் ஒரு குறிப்பிட்ட நபர்தான் இதற்குக் காரணம் என்று நம்புகிறோம். இந்த நம்பிக்கையின் பலத்தினால் நம் மனதில் அந்த நபரின் மேல் ஆசையோ, கோபமோ வருகிறது அதனால் அந்த நபருடன் நம் உறவு உண்டாகிறது அல்லது ஏற்கனவே இருக்கும் உறவு துண்டித்துப் போகிறது.

இது போன்ற சந்தர்பங்களில் நாம் சாஸ்த்திர சொற்பொழிவு கேட்பதால் அல்லது படிப்பதால் அந்த நபர் நம் இன்ப துன்பங்களுக்கு உண்மையானக் காரணமில்லை என்பதும், உண்மையான நிமித்தம் எது அல்லது யார் என்பது பற்றிய அறிவும் உண்டாகிறது. நாம் முன்னர் கட்டிக்கொண்ட கர்மமே கெட்டதாக இருந்தால், பழியை யார்மேல் போடமுடியும்? இந்த விஷயம் பற்றிய அறிவு வந்தவுடன் பிறர்மேல் பழியைப் போடும் நம் அனாதிகாலப் பழக்கம் குறைந்து போகிறது.

வெறுமனே எது நிமித்தம் என்று தெரிந்து கொள்வது மட்டுமே உண்மையான அறிவாகாது. ஆனால் **நிமித்தம் காரியத்தில் எதுவும் செய்வதில்லை என்று தெரிந்து கொள்வதே உண்மையான அறிவாகும்.** பாருங்கள்! அஞ்ஞான அவஸ்தையில் இந்த உயிர் எது நிமித்தம் என்பதை என்னவோ ஏற்றுக் கொள்கிறது, ஆனால் அந்த நிமித்தமே கர்த்தா என்று நம்புகிறது. உயிர் தன்னை மகானாகக் காட்டிக் கொள்ளவே விரும்புகிறது அதனால் கர்மமே என்னை மோஹ, இரக, த்வேஷம் கொள்ளும்படிச் செய்கிறது என்று நம்புகிறது. ஆனால் கர்ம உதயம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நாம் அதன் பக்கம் பார்த்து நிகழ்காலத்தில் எந்த மாதிரியான உணர்வு கொள்ள வேண்டும் என்பது முழுக்க முழுக்க நம் ஆதிக்கத்தில்தான் இருக்கிறது. அதன் மேல் நாம் விருப்பு, வெறுப்பு கொண்டால் அது நம்முடைய மித்தியாத்துவ உணர்வாகும், கர்மம் நம்மை வலுக்கட்டாயமாக மித்யாத்துவ உணர்வு கொள்ளக் கட்டாயப்படுத்த முடியாது. வேண்டியது, வேண்டாதது என்ற எண்ணத்தில் பிற பொருள்களைப் பார்த்துக்கொண்டு நிகழ்காலத்தில் நாம் விருப்பு, வெறுப்பு கொண்டு இன்பம் அல்லது துன்பமடைதல் நம்முடைய கஷாய உணர்வாகும்.

உண்மையில் கர்மம் உயிரை கஷாய உணர்வு கொள்ள எந்த உதவியும் செய்ய முடியாததாகவே இருக்கிறது.

நம்முடைய குறைபாடுகளுக்கும், தவறுகளுக்கும் பிறவற்றின்மேல் பழி சுமத்துவோமானால் அந்த குறைபாடு மற்றும் தவற்றைத் தவிர்க்க நாம் எந்த முயற்சியும் எடுக்கப் போவதில்லை. நம் சுய குறைபாடு மற்றும் தவறுகளுக்கு நாமே பொறுப்பேற்றுக் கொள்வதே அந்த தோஷங்களிலிருந்து விடுபட நாம் எடுக்கும் முதல் முயற்சியாக அமையும். நம்மை நாமே புரிந்து கொள்ள வேண்டுமென்றால், ஹே உயிரே! நிகழ்காலத்தில் நீ அனுபவிக்கும் நல்ல அல்லது கெட்ட அனுபவம், நீ முன்னர் செய்த கஷாய உணர்வின் விளைவாகும், ஏனெனில் அந்த கஷாய உணர்வின் நிமித்தத்தால் அந்த சமயத்தில் பந்தமான கர்மத்தின் ஸ்திதி, அனுபாக பந்தம் உன் செயலாலேயே கட்டிக் கொண்டதாகும். அந்த ஸ்திதி முதிர்வடைந்த பிறகு இப்போது அது உதயத்திற்கு வந்து அதன் பலன் உனக்குக் கிடைக்கிறது. நிகழ்காலத்தில் அதனால் நீ செய்யும் புதிய விருப்பு வெறுப்பு, மயக்க உணர்வினால் நீ என்னவோ இப்போது துக்கப்படுகிறாய், ஆனால் இப்போது புதிதாக கர்ம பந்தம் செய்து கொள்ளும் காரணத்தால், எதிர்காலத் துக்கத்திற்குக்கும்கூட நீயே சுயமாகவே விதை போடுகிறாய், உனக்கு நீயே சூன்னியம் வைத்துக் கொள்கிறாய்!

யோகத்தின் காரணத்தால் உயிரின் பக்கம் கர்மம் பாசம்கொண்டு ஊற்றுபோல் வருகிறது-கர்ம ஆஸ்ரவம் உண்டாகிறது, அதன் எண்ணிக்கை கூட நிச்சயிக்கப்பட்தாக இருக்கிறது, மேலும் அவை வெவ்வேறு பிரக்ருதிகளாக பிரிகின்றன. ஆனால் யோகத்தின் காரணத்தால் ஸ்திதி அனுபாக பந்தம் ஏற்படுவதில்லை. உங்களுக்கு குணஸ்தான சம்பந்த பயிற்சி இல்லையானாலும் கூட, இந்த விஷயத்தை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்-மொத்த 14 குணஸ்தானங்களில் முதல் குணஸ்தானத்திலிருந்து 10-ஆவது குணஸ்தானம் வரை உள்ள எல்லா உயிர்களுக்கும் கஷாயம் இருக்கிறது, மேலும் 11-வது குணஸ்தானம் முதல் 14-ஆம் குணஸ்தானத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் கஷாயம் முழுமையாக இல்லாமலிருக்கிறது. முதல் குணஸ்தானத்திலிருந்து 13-ஆவது சயோக கேவலி குணஸ்தானம் வரை உள்ள உயிர்களுக்கு யோகம் இருக்கிறது, 14-ஆம் அயோக கேவலி குணஸ்தானத்தில் யோகம் இல்லை.

இதன் பொருள் முதல் குணஸ்தானத்திலிருந்து 10-ஆம் குணஸ்தானம் வரை கஷாயம், யோகம் இரண்டுமே இருக்கிறது. ஆகையால் அந்த குணஸ்தானங்களில் நான்கு வகையான கர்ம பந்தமும் நிகழ்கிறது. கர்மத்தின் இந்த ஆஸ்ரவத்தை-வருகையை **சாம்பராயிக ஆஸ்ரவம்** என்று சொல்கின்றனர் ஏனெனில் சாம்பராயம் என்ற பெயர் கஷாயத்தினுடைய தாகும். 11, 12, 13-ஆம் குணஸ்தானங்களில் யோகம் இருக்கிறது ஆனால் கஷாயம் இல்லை. இந்தக் காரணத்தால் பிரதேச பந்தம் மற்றும் பிரக்ருதி பந்தம் என்னவோ நிகழ்கிறது ஆனால் ஸ்திதி பந்தம், அனுபாக பந்தம் நிகழ்வதில்லை. ஆகையால் கர்மம் வந்த அந்த சமயமே விழுந்து விடுகிறது. சுவரின் மேல் எறியப்பட்ட உலர்ந்த மணல் சுவரில் ஒட்டாமல் அப்போதே விழுந்து விடுவதுபோல கர்ம பரமாணுக்கள், கஷாயம் இல்லாத உயிர் பிரதேசத்தில் ஒட்டுவதில்லை, அதே சமயத்தில் விழுந்து விடுகின்றன, மேலும் அனுபாக பந்தம் நிகழாததால் அதன் பலனும் உயிருக்கு கிடைப்பதில்லை. இந்தவகை கர்ம ஆஸ்ரவத்தை **ஈர்யாபத ஆஸ்ரவம்** என்று சொல்கின்றனர். 14-ஆம் குணஸ்தானத்தில் கஷாயம் என்னவோ இல்லை, இங்கு யோகத்தின் இல்லாமைகூட காணப்படுகிறது, ஆத்மப் பிரதேசத்தில் அதிர்வு முழுமையாக இல்லாமல் போகிறது-அதிர்வு இல்லாத நிலை அடையப் பெறுகிறது. இந்த காரணத்தால் கர்மத்தின் வருகைகூட இருப்பதில்லை. எங்கு ஆஸ்ரவமே இல்லையோ அங்கு பந்தம்

பற்றிய கேள்வி எங்கே எழப்போகிறது? குணஸ்தானாமில்லாத சித்த அவஸ்த்தையில், உயிர் முழுச் சுத்த நிலையில் நிலைத்திருக்கிறது. அதன் இருப்பில் எந்த கர்மமும் இல்லை. உயிர் கொஞ்சம் கூட கஷாயம் கொள்ளாமலும், யோகமில்லாமலும் உள்ள நிலையில் புதிய கர்மம் பிறகு எப்போதும் வருவதில்லை. இந்த காரணத்தால் உயிர் அனந்த காலம்வரை கர்மமற்ற நிலையில் தன் இயல்பான அனந்த சக்திகள் முழுமையாக பர்யாயங்களில் வெளிப்படும் நிலையை எடுத்துக் கொள்கிறது அதாவது அதன் அனந்த அவ்யாபாத-அழிவில்லாத முழுச் சுகத்தையும் அனுபவம் செய்த வண்ணம் இருக்கிறது.

கர்மம் உயிருடன் பந்தமாவதை **சன்ஸ்லேஷ சம்பந்தம்** அதாவது விஷேச சம்பந்தம் என்று சொல்கின்றனர். இந்த பந்த விஷேசம் சில காலம்வரை உயிருடன் தொடர்பில் இருக்கிறது, தொடர்பற்றுப் போவதில்லை. பிற திரவியங்களுடன் மற்றும் பிற புத்கலங்களுடன் உயிருக்கு அப்படிப்பட்ட விஷேச சம்பந்தம் காணப்படவில்லை, அவைகளுடன் ஏகஷேத்ராவஹாக சம்பந்தம் இருக்க முடியும், ஆனால் விஷேசமான சன்ஸ்லேஷ சம்பந்தமில்லை. கர்மத்துடன் கூட உயிருக்கு ஏகஷேத்ராவஹாக சம்பந்தம் இருக்கிறது, ஆனால் உயிர் ஒரு இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் பயணம் செய்யும்போது, அதாவது ஒரு பவத்திலிருந்து வேறு பவத்திற்குச் செல்லும்போது-மரணமடைந்து வேறு பிறவி எடுக்கச் செல்லும்போது அதனுடன் பந்த நிலையில் கர்மமும் உடன் செல்கிறது.

நாம் ஆபரணங்களை அணிந்து கொண்டு வெளியில் செல்லும்போது ஆபரணங்களும் நம்முடன் வருகின்றன. ஆனால் நாம் அவைகளை கழற்றி வைத்துவிட்டுக்கூட போகலாம் அல்லது அவைகளைக் கழற்றிவிட்டு வேறு ஆபரணங்களைப் போட்டுக்கொண்டும் செல்லலாம். ஆனால் கர்மத்தைப் பொருத்தவரை நம்மால் அவ்வாறு செய்யமுடியாது. பந்தமான கர்மங்கள் அதன் ஸ்திதி முழுமை அடையும்வரை உயிரின் தொடர்பை விடுவதில்லை, உயிரும் அதைவிட்டு வேறு எங்கும் செல்லமுடியாது. உடல்கூட உயிருடன் எப்போதும் இருக்கிறதே என்று நீங்கள் சொல்லலாம். ஆமாம்! ஆனால் ஒருபவம் முடிந்தவுடன் அடுத்த பவத்திற்கு செல்லும்போது அதாவது மரணமடைந்த பிறகு இந்த உடலை விட்டுவிட்டு உயிர் வேறு இடத்திற்குச் செல்லுகிறது. ஆனாலும் உடலும் உயிரும் தனித் தனியாக பிரிந்த பிறகுகூட உயிர் கர்மத்தை விட்டுவிட்டு வேறு பவத்திற்கு செல்ல முடியாது. உயிரின் தைஜச மற்றும் கார்மண உடல்கள் இரண்டும் உயிருடன் வேறு பவத்திற்கு உடன் செல்கிறது.

பந்தமான பிறகு கர்மம் உயிருடன் இருக்கிறது. ஆனால் அந்த கர்மத்திலிருந்து கொஞ்ச கர்மம் உதயமாகி விழுந்து கொண்டே இருக்கிறது, மேலும் புதிதாக கொஞ்ச கர்மம் வந்து பந்தமாகிக் கொண்டே இருக்கிறது. உயிர் எந்த புருஷார்த்தமும்-எந்த சிறப்பான முயற்சியும் செய்யாமல் எல்லா கர்மமும் தானாகவே விழுந்து கர்மமில்லாத நிலையை உயிர் அடைந்தது என்பது எப்போதுமில்லை. உயிருடன் கர்மத்தின் இந்த குறிப்பிட்ட காலம் தொடர்ந்து இருப்பதை கர்மத்தின் **சத்தா** என்று சொல்கின்றனர். அந்த கர்மத்தை **சத்தாவில் இருக்கும் கர்மம்** என்று சொல்கின்றனர். கர்மம் பந்தமான பிறகு சில கர்மம் கோடிக் கணக்கான, சாகர-கடற்கால வருடங்கள் உயிருடன் இருக்கிறது, அதனதன் ஸ்திதி முழுமையடைந்தவுடன் பலன் கொடுத்து விட்டு உயிரை விட்டு வெளியே போய் விடுகிறது-விழுந்து விடுகிறது, இதையே கர்ம **உதயம்** என்று சொல்கின்றனர். உயிருடன் சத்தாவில் இருக்கும் கர்மத்தால் எந்த பலனும் கிடைப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். சில மனிதர்கள் பாபம் செய்யாத நல்லவர்களாக இருந்தபோதும் அவர்களுக்கு ஆபத்து வருவதையும், மற்றும் சில மனிதர்கள் பாபத்தில் மூழ்கியிருக்கும் போதும் அவர்கள் நிம்மதியுடனும், அமைதியுடனும்

வாழ்ந்து கொண்டு இருப்பதையும் நாம் பார்க்கிறோம். அதற்கு காரணம் என்னவெனில் நிகழ்காலத்தில் எந்த பொருள் அல்லது சுகதுக்கம் ஒருவருக்கு கிடைக்கிறதோ அது முன்னர் கட்டிக்கொண்ட கர்மத்தின் உதயத்தால் உண்டான பலனாகும், மேலும் நிகழ்காலத்தில் பாபம் செய்வதால் எந்த கர்மம் பந்தமாகிறதோ அதனுடைய பலன் எதிர்காலத்தில்தான் கிடைக்குமே ஒழிய உடனே கிடைப்பதில்லை.

கர்மத்தின் சத்தா-இருப்பு எப்போதும் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள ஒரு உதாரணம் மூலம் பார்க்கலாம். ஒரு தண்ணீர் நிரம்பிய தொட்டியை கற்பனை செய்து கொள்ளுங்கள். மேலிலிருந்து ஐந்து குழாய்கள் வழியாக தண்ணீர் அந்த தொட்டிக்கு வந்து கொண்டே இருக்கிறது மேலும் அதே சமயத்தில் அந்த தொட்டியின் கீழே இருக்கும் அதே அளவு ஐந்து குழாய்கள் வழியாக தண்ணீர் தொட்டியிலிருந்து வெளியே சென்று கொண்டே இருக்கிறது. இப்போது நீங்களே சொல்லுங்கள் அந்த தொட்டியிலிருக்கும் தண்ணீர் எத்தனை தினங்களில் காலியாகும்? காலியே ஆகாதல்லவா? தொட்டி எப்போதும் தண்ணீர் நிறைந்ததாகவே இருக்குமல்லவா! அதேபோல கர்ம பந்தமும் கர்ம உதயமும் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது, அதனால் கர்மத்தின் சத்தா-இருப்பு தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. இந்த இரகசிய மயமான கர்மத்தின் கதையை வேறு விதமாக பார்க்கத் தொடங்கும் முன், நாம் இதுவரை கர்மம் பற்றி என்னவெல்லாம் தெரிந்து கொண்டோம் என்று பார்க்கலாம்.

1. உயிரின் மோஹ இராக த்வேஷ உணர்வின் அதாவது ஆசை வெகுளி மயக்க உணர்வின் நிமித்தத்தால் சுயமாகவே கர்மமாக மாறக்கூடிய கார்மண வர்கணைகளின் குறிப்பிட்ட நிலையை **கர்மம்** என்று சொல்கின்றனர்.
2. உயிரின் ஆசை வெகுளி மயக்க உணர்வின் நிமித்தத்தால் கார்மண வர்கணைகள் ஆத்மப் பிரதேசத்துடன் எந்த குறிப்பிட்ட சன்ஸ்லேஷ சம்பந்தம் நிகழ்கிறதோ, அதை **பந்தம்** என்று சொல்கின்றனர்.
3. பிரக்ருதி பந்தம், பிரதேச பந்தம், ஸ்திதி பந்தம், மற்றும் அனுபாக பந்தம் என பந்தம் நான்கு வகையாக இருக்கிறது.
4. கர்மத்தின் இயல்பு வெவ்வேறாக இருக்கிறது. இந்த வெவ்வேறு இயல்பின் காரணத்தால் கர்மத்திற்கு தனித்தனி பெயர்கள் இருக்கின்றன. கர்ம வடிவமாக மாற்றமடையக்கூடிய கார்மண வர்கணைகள் ஞானாவரணம் முதலான பிரக்ருதி வடிவம் கொள்வது **பிரக்ருதி பந்தம்** என்று சொல்கின்றனர்.
5. ஒவ்வொரு சமயமும் எவ்வளவு புத்கல பரமாணுக்கள் கர்ம வடிவமாக மாற்றமடைந்து உயிருடன் பந்தமாகிறதோ அந்த பரமாணுக்களின் எண்ணிக்கையை **பிரதேச பந்தம்** என்று சொல்கின்றனர்.
6. கர்ம வடிவில் இருக்கும் புத்கல பரமாணு எத்தனை காலம்வரை உயிருடன் ஏகஷேத்ரவஹாக சம்பந்தத்தில் இருக்கிறதோ அதை **ஸ்திதி பந்தம்** என்று சொல்கின்றனர்.
7. பந்தமான கர்மத்தின் பலன் கொடுக்கும் சக்தியை **அனுபாக பந்தம்** என்று சொல்கின்றனர்.
8. பல சமயங்களில் பந்தமான கர்மம் உயிர் பிரதேசத்துடன் இருப்பதை அதன் **சத்தா**-இருப்பு என்று சொல்கின்றனர்
9. கர்மத்தின் ஸ்திதி பூர்த்தியடைந்த பிறகு கர்மத்தின் பலன் கிடைப்பதை **உதயம்** என்று சொல்கின்றனர்.

இன்று இத்துடன் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

- உங்கள் அம்மா.

காதி-அகாதி கர்மம்

கடிதம்-2 ஓம் நம: சித்தேப்ய: 26-7-1999

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கடிதம் மூலம் ஸ்வாத்யாயத்தை நாம் மீண்டும் துவங்கியுள்ளோம். உங்களுடைய பதில் கடிதம் கிடைக்கும் முன் அதிசீக்கரமாக இந்த இரண்டாம் கடிதத்தை எழுதுகிறேன். உங்களுக்கு அவகாசம் கிடைக்கும்போது பதில் எழுதுங்கள், முக்கியமாக உங்களுக்கு ஏதாவது சந்தேகமோ, கேள்வியோ இருந்தால் அவைகளையும் அந்தக் கடிதம் மூலம் எனக்குச் சொல்லுங்கள். கர்ம சம்பந்தமாக கொடுக்கப் பட்ட விஷயம் மிகவும் அற்புதமானதாகவும் மேலும் ஆச்சரியமானதாகவும் இருக்கிறது. இந்த விஷயங்களைப் புரிந்து கொண்ட பிறகு வஸ்த்து ஸ்வரூபம் பற்றியச் சித்திரம் நாம் கண்ணை மூடிக்கொண்டுப் பார்க்குபோது நம் அறிவில் தெளிவாகத் தெரிகிறது.

முதல் கடிதத்தில் நாம் பந்தம் மற்றும் உதயம் என்ற சொல்லின் அர்த்தத்தைப் பார்த்தோம். அதைப்பற்றி மேலும் அதிகமாக இந்த கடிதத்தில் பார்க்க விருக்கிறோம். அதற்கு முன் எட்டு கர்மங்களின் ஸ்வரூபம் பற்றிப் பார்க்கலாம். அதனுடைய பெயர்களை என்னவோ நாம் முன்னரே தெரிந்து வைத்திருக்கிறோம். அவைகளில் ஞானாவரணம், தர்சனாவரணம், மோஹனீயம், அந்தராயம் இந்த நான்கும் **காதி** கர்மங்களாகும். வேதனீயம், ஆயுள், நாமம், கோத்திரம் இந்த நான்கும் **அகாதி** கர்மங்களாகும். காதி கர்மம் என்ற பெயரைக்கொண்டே அவை எதையோ பதுங்கி நின்றுத் தாக்குவது போல் தெரிகிறது. அவை எதைத் தாக்குகிறது? திரவியத்தையா? குணத்தையா? பர்யாயத்தையா? என்பதே இப்போதய கேள்வியாக இருக்கிறது.

காதி என்ற சொல்லின் பொருள் உயிர் மற்றும் அதன் குணங்களில் எந்த ஸ்வபாவ சாமர்த்தியம் இருக்கிறதோ அதை பர்யாயத்தில் வெளிப்படாமல் இருக்கச் செய்வதாகும். ஞானாவரண கர்மம் என்பதன் பொருள் ஞானத்தை மறைக்கும் கர்மம் என்பதாகும். இதை மேகத்தால் சூழப்பட்ட சூரியனின் உதாரணத்தைக் கூறி புரிய வைக்கப்படுகிறது. ஆனால் அந்த உதாரணம் ஓரளவே பொருந்தும், முழுமையாக அல்ல. மேகங்களுக்கு பின்னால் சூரியன் அதன் முழு பிரகாசத்துடன் இருக்கிறது. ஆனால் ஞானவரண கர்மம் உதயமாகும்போது உயிரின் முழுஞானமும் அதன் பர்யாயத்தில் பூரணமாக வெளிப்பட விடுவதில்லை. அதாவது முழுமையான ஞான பர்யாயம் வெளிப்பட்டிருக்கிறது அதை ஞானாவரண கர்மம் மறைக்கிறது என்பது எப்போதுமில்லை.

இந்த நான்கு காதி கர்மங்களின் சக்தி உயிரின் சில குணங்களின் அவஸ்தையில்-பர்யாயத்தில் நமித்தமாக இருக்கின்றன, ஆகையால் அவைகளை **ஜீவவிபாகி** கர்மம் என்று சொல்கின்றனர். இவைகளில் ஞானாவரணம் மற்றும் தர்சனாவரணம் உயிரின் ஞானம் மற்றும் தர்சன குணங்களின் சக்தியை அதன் பர்யாயங்களில் பரவியிருக்க விடுவதில்லை ஆகையால் இவைகளை மறைக்கும் கர்மம் என்று சொல்கின்றனர். அந்தராய கர்மம் உயிரை ஊணப்படுத்துவதாகும்-உயிருக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாகும். எந்த மனிதர் சுவாத்யாயத்தில் பங்கு கொள்வதில்லையோ அவர்கள் இந்த கர்மத்தின் பெயரைச் சொல்லி அதில் பதுங்கிக் கொள்கின்றனர். அரே! நாங்கள் சுவாத்யாயத்தில் பங்குகொள்ள விரும்புகிறோம் ஆனால் என்ன செய்வது? அந்தராய கர்மம் வந்து எங்களை வரமுடியாமல் தடைசெய்து விடுகிறது என்கின்றனர். ஐய்யஹோ! காரியத்தை

செய்யாயமலிருக்க விரும்புபவர்களுக்கு ஏதாவது ஒரு தகுந்த சாக்கு கிடைத்து விடுகிறது, அதன்மேல் பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்கிறார்கள்! சுவாத்தியாயம் செய்பவர்களுக்கு சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட வசனத்தைக் கேட்டு அந்தராய கர்மத்தின் மேல் பழியைப் போடுவது சரியாகத் தோன்றலாம். ஆனால் அவர்கள் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதை தவறான அர்த்தத்தில் உபயோகப் படுத்துகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் அவர்களுடைய அஞ்ஞானத்தையே வெளிப்படுத்துகின்றனர் என்றுதான் சொல்ல வேண்டும். **கர்மத்தின் உதயம் இருக்கிறது, அந்தராய கர்மம் குறுக்கே வந்து விட்டது, நிச்சயம் என்னவோ நிகழ்ந்து கொண்டே இருக்கிறது ஆனால் வியவஹாரம் என்னவோ செய்ய வேண்டியிருக்கிறது அல்லவா?, நாம் அனேகாந்த வாதிகள், ஆகையால் இதுவும் உண்மை, அதுவும் உண்மை** முதலான பல தவறான வாக்கியங்களைச் சிலர் தங்களின் விருப்பமின்மைக்குச் சாதகமாக தவறாக உபயோகப்படுத்தித் தங்களுக்கு தாங்களே சமாதானம் தேடிக் கொள்கின்றனர்.

உயிரின் தானம், லாபம், போகம், உபபோகம் மற்றும் வீர்யம் இவைகளில் தடங்கல் செய்யும் கர்மத்தை அந்தராய கர்மம் என்று சொல்கின்றனர். உதாரணமாக ஒரு நிறுவனத்திற்கு நன்கொடைகளை வழங்குவதற்கான பொருள் நம்மிடம் இருந்தும் வீட்டில் சிலர் அதை விரும்பாததால் அல்லது அதில் சந்தேகம் கிளப்பியதால் அந்த நன்கொடை கொடுக்கப்படுவதில்லை; அப்போது அந்த நபரின் விருப்பத்தால் அல்லது சந்தேகத்தால் நன்கொடை கொடுப்பதில் தடங்கல் வந்துவிட்டது என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அந்தராய கர்மத்தின் உதயம் அந்த தடையில் நிமித்தமாகும் என்பதே உண்மை. ஒரு வங்கியில் நாம் வைப்பு நிதியாக பணம் போட்டு வைத்திருக்கிறோம் அதன் காலம் முடிந்து இன்று நம் கைக்கு அது கிடைக்க வேண்டியது ஆனால் வங்கியில் வேலை நிறுத்தம் நடக்கும் காரணத்தால் அந்த பணம் இன்று நமக்கு கிடைக்கவில்லை என்றால் அதற்கு லாப அந்தராய கர்மத்தின் உதயம் நிமித்தமாகும்.

இதுபோல போகம், உபபோகம் முதலியவைகளில்கூட தடை உண்டாவதை போக உபபோபக அந்தராய கர்மத்தின் உதயமே நிமித்தம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். எந்த பொருள் ஒருமுறை இன்பத்திறகு காரணமோ அதை போகம் என்கிறோம்- உதாரணம் உணவு பொருள்கள், தாம்பூலம் முதலியன. எந்தப் பொருள் மீண்டும் மீண்டும் பலமுறை இன்பத்திற்கு காரணமோ அவைகளை உபபோகப் பொருள்கள் என்கிறோம்- உதாரணம் ஆடை, ஆபரணங்கள், வீடு, வாகனம் முதலியன. உண்மையில் மேலே சொல்லப்பட்ட தானம் முதலானவை உயிரின் குணங்களாகும். உயிர் தனக்குத்தானே அதன் பர்யாயத்தில் சுத்தத்தை வெளிப்படுத்தும் காரியத்தை செயல் வடிவில் தானத்தை செய்கிறது, அதனால் அதற்கு லாபம் உண்டாகிறது, அதை அது அனுபவிக்கிறது, மீண்டும் மீண்டும் அனுபவிக்கிறது. அதில் தடங்கல் உண்டுபண்ணும் நிமித்தம் தானாந்தராய கர்மமாகும்.

உயிருக்கு வீர்யம் என்ற பெயர் கொண்ட ஒரு குணம் இருக்கிறது, அந்த குணத்தின் பர்யாயத்தை **புருஷார்ததம்** என்று சொல்கின்றனர். ஸ்வபாவம் எப்படி இருக்கிறதோ அப்படியே பர்யாயத்தில் வெளிப்படச் செய்தல் அதன் காரியமாகும். உயிரில் புருஷார்த்தம் வெளிப்படவில்லை என்றால் அந்தராய கர்ம உதயம் அங்கு காணப்படுகிறது. வீர்ய அந்தராய கர்மம் உயிரை புருஷார்த்தம் செய்ய விடுவதில்லை என்று இதைத் தவறாக பொருள் கொள்ள வேண்டாம். உயிர் சுயமாகவே எப்போது புருஷார்த்தம் செய்ய வில்லையோ அப்போது அந்தராய கர்மம் புருஷார்த்தம் நிகழ விடவில்லை என்று அந்த நிமித்தத்தின் மேல் பழி வருகிறது. எங்கெங்கு நிமித்த காரணம் சொல்லப்படுகிறதோ அங்கங்கு நிமித்தம் காணப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். [நிமித்தம்

காரிய நிகழ்வில் எதுவும் செய்வதில்லை, அங்கே காரியம் நிகழ்வதை காட்டும் ஒரு சாட்சியாகவே நிமித்தம் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.]

ஞானம், தர்சனம் மற்றும் வீர்யம் ஆகிய குணங்களின் மீது முழுமையான மறைப்பு எப்போதும் இல்லை. கர்மத்தின் உதயம் எவ்வளவுதான் தீவிரமாக இருந்தாலும். இந்த குணங்களின் பர்யாயங்களில் கொஞ்சம் சக்தியாவது அதன் பர்யாயங்களில் வெளிப்படவே செய்கிறது. மிகவும் நுண்ணுயிராக இருந்தாலும், ஞானத்தின் மிகக்குறைந்த அறிவின் உதயம் இருக்கவே செய்கிறது. இதை பர்யாய ஞானம் என்றும் சொல்கின்றனர். நுண்ணுயிரிலும் ஞானம், தர்சனம், வீர்யம் முதலான குணங்களின் வெளிப்பாடு கொஞ்சம் கூட இல்லை என்பது எப்போதுமில்லை.

காதி கர்மங்களில் மோஹனீய கர்மம் கூட முழுமையான மறைப்பும் செய்வதில்லை மேலும் எந்த தடையும் உண்டு பண்ணுவதில்லை. ஆனால் சிரத்தை-நம்பிக்கை மற்றும் சாரித்ர-ஒழுக்க குணங்களும் பர்யாயங்களில் விபரீதத்தையோ அல்லது கோளாறோ செய்வதில் நிமித்தமாக இருக்கிறது. நம்பிக்கையில் விபரீதத்தை, கோளாற்றை மித்யாத்துவம் என்று சொல்கின்றனர். ஒழுக்கத்தில் நிகழும் கோளாற்றை, விபரீதத்தை இராகம், த்வேஷம் என்று சொல்கின்றனர். **நம்பிக்கையின் விபரீதத்தால் ஞானம் மற்றும் சாரித்ரத்தில் கூட விபரீதம் நிகழ்கிறது.** ஆகையால் மித்யாத்துவம் என்ற சொல் மித்யாதர்சனம், மித்யாஞானம், மித்யாசாரித்திரம் என்று மூன்றிலுமே கலந்திருப்பது குறித்துக் காட்டப்படுகிறது. அதாவது எங்கு மூடநம்பிக்கை-மித்யாத்துவம் இருக்கிறதோ அங்கு கெட்ட அறிவும், கெட்ட ஒழுக்கமும் காணப்படுகின்றன. புதிய கர்மக்கட்டின் காரணங்கள் பற்றி ஆலோசனை செய்யும்போது நாம் மீண்டும் மோஹனீய கர்மம் சம்பந்தமாக சர்ச்சை செய்யலாம்.

காதி கர்மங்களை நாம் **ஜீவ விபாகி** என்று கூறினோம் ஏனெனில் அதன் பலன் நேராக உயிரின் குணங்களில் பாதிப்பு காணப்படுகிறது. அதேபோல அகாதி கர்மங்களை **புத்கல விபாகி** கர்மம் என்று சொல்கிறோம், ஏனென்றால் அவைகளின் முதிர்வு அதாவது அதன் பலன்-ரசம் புத்கலத்தில் அதாவது வெளியில் காணப்படும் உடனிருப்பவைகளுக்கு கிடைக்கிறது. வேதனீயம், ஆயுள், நாமம், கோத்திரம் ஆகிய நான்கும் அகாதி கர்மங்களாகும். வேதனீய கர்மம் சாதா வேதனீயம் மற்றும் அசாதா வேதனீயம் என இரண்டு பிரிவாக இருக்கிறது. சாதா வேதனீய கர்ம உதயத்தின்போது உயிருக்கு அனுகூலமான-இன்பம் கொடுக்கும் பொருள்கள் கிடைக்கின்றன மற்றும் அசாதா வேதனீய கர்ம உதயத்தின் போது உயிருக்கு பிரதிகூலமான-துன்பம் கொடுக்கும் பொருள்கள் கிடைக்கின்றன.

ஆயுள், நாமம், கோத்திரம் ஆகிய மூன்று அகாதி கர்மங்கள் உடல் அமைப்பு சம்பந்த நிமித்தங்களாக இருக்கின்றன. பிறந்ததிலிருந்து இறக்கும் வரை ஒரு பிறவியில் வாழும் காலத்தை **ஆயுள்** என்கிறோம். நுணுக்கமாகப் பார்க்கும்போது மரணத்துக்கு அடுத்த சமயத்திலிருந்து விக்கிரக கதியிலேயே புதிய பிறவிக்கான ஆயுட்கர்மம் உதயமாகி விடுகிறது. தேவாயுள், மனிதாயுள், விலங்காயுள், நரகாயுள் என ஆயுள் கர்மத்தில் நான்கு உட்பிரிவுகள் (உத்தரப் பிரக்ருதிகள்) இருக்கின்றன. கட்டியுள்ள நோக்கில் ஆயுள் கர்மம் இரண்டு விதமாக இருக்கிறது. ஒன்று **புஜ்ஜமான்** ஆயுள்-அனுபவிக்கும் ஆயுள், இரண்டாவது **பத்யமான்** ஆயுள்-அடுத்த பிறவிக்காகக் கட்டிக்கொண்ட ஆயுள். நாம் இப்போது மனித பர்யாயத்தில் இருக்கிறோம், அதாவது மனித ஆயுளை நாம் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம், இது நம்முடைய புஜ்ஜமான் ஆயுளாகும். நிகழ்காலத்தில் எந்த ஆயுளின் உதயம் நிகழ்து கொண்டு இருக்கிறதோ அதை புஜ்ஜமான்

ஆயுள் என்று சொல்கின்றனர். நாம் இந்த பிறவியில் இருக்கும்போது எதிர்கால அதாவது அடுத்த பிறவி சம்பந்தமான ஆயுள் பந்தமாகிறது, அதை பத்யமான் ஆயுள் என்று சொல்கின்றனர்.

நாம கர்மம் 93 உட்பிரிவுகள் கொண்டதாக இருக்கிறது. இதற்கு சாஸ்திரத்தில் ஓவியரை உதாரணமாகக் கூறப்பட்டுள்ளது. எவ்வாறு ஓவியர் சித்திரங்களை பலவகையான விசித்திரமான உருவங்களையும் மட்டும் வர்ணங்களையும் கொடுத்து ஓவியம் தீட்டுகிறாரோ அதுபோல, நாமகர்ம உதயத்தின்போது கதி (மனித, தேவ, விலங்கு, நரக கதிகள்), ஜாதி (ஏகேந்திரியம் முதல் பஞ்சேந்திரியம் சம்பந்தமான பிறவிகள்), உடல், உடலமைப்பு, உருவ அமைப்பு, உடலின் ஸ்பர்சம் (உஷ்ணம், குளிர்ச்சி மழமழப்பு, சொரசொரப்பு முதலான உடல்நிலை), சுவை, மணம், நிறம் முதலான உடல் சம்பந்தமான பலன்கள் கிடைக்கின்றன. அதாவது உடலின் உயரம், நிற அழகு, உறுதியான எலும்புகள், கை, கால் முதலான அவயவங்களின் அமைப்பு, உடல் நடவடிக்கை, குரல், சுவாசம், வசீகரமான அல்லது வசீகரமற்ற உடல் முதலான அனேக விஷயங்களுக்கு நாமகர்ம உதயம் காரணமாகும். இதோடு மட்டுமல்லாமல் தீர்த்தங்கர நாமகர்மப் பிரக்ருதி கூட நாம கர்மத்தின் ஒரு உட்பிரிவாகும். பாலபோத பாடப்புத்தகம் முதல் பாகத்தில் **தீர்த்தங்கர பகவான்** பற்றிய பாடம் படித்தது உங்கள் நினைவில் இருக்கும் என்று எண்ணுகிறேன். தீர்த்தங்கரர்களுக்கு தீர்த்தங்கர நாமகர்ம பிரக்ருதியின் உதயம் நிகழும்போது சமவசரணம் முதலான வைபவங்கள் அமைகின்றன.

கோத்திர கர்மத்திற்கு இரண்டு உட்பிரிவுகள் உள்ளன அவைகளாவன உச்ச கோத்திரம், நீச்ச கோத்திரம் என்பன. அவைகள் உதயமாகும்போது உயர்ந்த அல்லது தாழ்ந்த கோத்திரத்தில்-குலத்தில் பிறவி அமைகிறது. இந்த எல்லா வெளித்தொடர்பான பொருள்கள் உண்மையில் உயிரின் சுக துக்கத்திற்கு காரணமில்லை, ஆனால் உயிரின் ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகளே, உயிரின் சுக துக்கங்களுக்கு காரணமாகும். மோகமற்ற முனி மஹராஜர்களுக்கு ரித்திகள் கிடைப்பதும், பரீஷகங்கள் வருவதும் சுகதுக்கத்தை உண்டு பண்ணுவதில்லை. இதற்கு விபரீதமாக மோஹமுடைய உயிர்களுக்கு எந்த காரணத்தினாலோ ஏதாவது கிடைத்தாலும் அல்லது கிடைக்காவிட்டாலும், அந்த உயிர்கள் சுய சங்கல்பங்களால்-அவர்களே செய்து கொள்ளும் தீர்மானங்களால் சுகதுக்கங்களை அடையவே செய்கின்றன.

இந்த காதி அகாதி கர்மங்களின் உதயத்தால் எப்படிப்பட்ட பலன்கள் மற்றும் நிலைகள் உயிருக்கு உண்டாகின்றன என்பது பற்றித் தெளிவான மற்றும் விரிவான விளக்கங்களை பண்டிட். தோடர்மல்ஜி, மோக்ஷமார்கப்பிரகாசம் என்ற நூலில் இரண்டாவது அத்யாயத்தில் **கர்மபந்த நிமித்தத்தால் உயிருக்கு நிகழும் நிலைகள்** என்ற தலைப்பில் விரிவாகக் கூறியிருக்கிறார். நீங்கள் அதை அவசியம் படியுங்கள்-மீண்டும் மீண்டும் படியுங்கள். கடிதம் மூலம் சுவாத்யாயம் செய்வதால் மட்டுமே எல்லா பலனும் உங்களுக்குக் கிடைத்து விடாது. இப்போது கிரந்தங்களை பயிலுதல்கூட உங்களுக்கு நீங்களே செய்ய அடிப்படை விஷயங்கள் உங்களுக்கு தெரியுமாதலால், நீங்களே கிரந்தங்களை பயில வேண்டும். எப்படியென்றால் நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு-ரோஹித், ரீயா, ரோஹன் ஆகியவர்கள் குழந்தைதைகளாக இருந்த போது உங்கள் கையால் அவர்களுக்கு உணவு ஊட்டினீர்கள் ஆனால், அவர்கள் வளர்ந்தவுடன் நீங்கள் அவர்களை அவர்கள் கையால் உணவை எடுத்து உண்ணும்படிச் செய்கிறீர்கள் அல்லவா அதுபோலவே தத்துவ சம்மந்தமான நூல்களை இந்த நிலையில் நீங்களே படித்துத் தெரிந்து கொள்ள முயல வேண்டும்.

எட்டு கர்மங்களில் ஆயுள் கர்மத்தை தவிர மற்ற ஏழு கர்மங்களின் பந்தம் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆயுள் கர்ம பந்தம் எப்போதாவது நிகழ்கிறது. ஆயுள் கர்ம பந்தம் பற்றிய சர்ச்சையை நாம் பிறகு செய்யவிருக்கிறோம். உயிருடன் சத்தாவில் இருக்கும் கர்மங்கள் அதனதன் ஆபாதா காலம் பூர்த்தியானவுடன் எட்டு கர்மங்களும் நிரந்தரமாக-இடைவெளி எதுவுமில்லாமல் ஒவ்வொரு சமயமும் உதயத்திற்கு வந்து கொண்டே இருக்கின்றன.

ஏழு அல்லது எட்டு கர்மங்களின் பந்தமும் இடைவிடாமல் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன, மேலும் எட்டு கர்மங்களின் உதயமும் இடைவிடாது நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன; இந்த நிலையில் இந்த கர்மங்களிலிருந்து விடுபட என்னதான் வழி? கர்மங்களின் இந்த பந்த-உதய சக்கரத்தின் சுழற்சி நிகழ்ந்து கொண்டேதான் இருக்குமா? பூஜை, அர்ச்சனை, விரதம், உபவாசம் செய்வதால் கர்மம் அழிவடையுமா அழிவடையாதா? பூஜையில் நாம் **ஷட் கர்ம வித்விம்சனாய கந்தம் நிர்வபாமிதி ஸ்வாஹா:** என்று சொல்வதன் பொருள்தான் என்ன? நாம் முதலில் பாபம் செய்திருந்தால் இப்போது புண்ணியம் செய்து அவைகளை ஈடு செய்துவிட்டால் எந்த கர்மமும் மிச்சம் இருக்காதல்லவா? என்றெல்லாம் உங்களுக்கு கேட்கத் தோன்றலாம்.

ஆமாம், கொஞ்சம் பொறுமையாக இருங்கள்! எல்லாவற்றிர்க்கும் முதலில் இந்த ஒன்றை கவனத்தில் கொள்ளுங்கள்; பாபம் புண்ணியம் என்பது கர்ம பிரக்ருதியின் பெயராகும்-உரிச்சொல்லாகும். பாபப் பிரக்ருதி பந்திப்பதன் காரணத்தால் அசுப உணர்வைக்கூட பாபம் என்று சொல்கின்றனர். இது காரியம் செய்வதாக குற்றச்சாட்டை காரணத்தின்மேல் உபசாரமாக சுமத்தி சொல்லப்பட்டதாகும். அதேபோல எந்த உணர்வால் புண்ணிய பிரக்ருதி பந்தமாகிறதோ அந்த சுப உணர்வுகளை-பாவங்களை உபசாரமாக புண்ணியம் என்று சொல்கின்றனர். எந்த கர்மப் பிரக்ருதி பாப வடிவமானது எந்த கர்மப் பிரக்ருதி புண்ணிய வடிவமானது என்று உங்களுக்கு தெரியுமா? சொல்லுங்கள்! நான்கு காதி கர்மங்களுமே பாபப் பிரக்ருதிகள்தான். நான்கு அகாதி கர்மங்களில் ஒவ்வொன்றுக்கும் பாபம், புண்ணியம் என்று இரண்டிரண்டு பிரிவுகள் இருக்கின்றன. சாதா வேதனீயம், தேவ ஆயுள், மனித ஆயுள், சுப நாமம், உச்ச கோத்திரம் முதலியன புண்ணியப் பிரக்ருதிகளாகும். அசாதா வேதனீயம், நரக ஆயுள், அசுப நாமம், நீச்ச கோத்திரம் முதலியன பாபப் பிரக்ருதிகளாகும்.

ஏழு அல்லது எட்டு கர்ம பிரக்ருதிகளின் பந்தம் இடைவிடாது ஒவ்வொரு சமயமும் நிகழ்கிறது என்று சற்று முன்தான் பார்த்தோம். நீங்கள் சுப உணர்வு கொண்டாலும், அசுப உணர்வு கொண்டாலும் எட்டு கர்மங்களும் பந்தம் அடையவே செய்கின்றன, அதனால் கர்ம பந்தமே நிகழ்கிறது. பந்தத்திலிருந்து விடுபட முடிவதில்லை. யாராவது ஒருவர் சுப உணர்வு கொண்டு எட்டு கர்மங்களை பந்தம் செய்யும்போது அவைகளில் ஞானாவரணம், தர்சனாவரணம், மோஹனீயம், அந்தராயம் ஆகிய நான்கு காதி கரமங்களின் பந்தமும் பாப வடிவம் கொண்டவைகளே யாகும். ஆனால் அகாதி கர்மங்களில் மட்டும் புண்ணிய அல்லது பாப பிரக்ருதிகளில் புண்ணியப் பிரக்ருதியின் பந்தம் நிகழ்கிறது. இதன் பொருள் என்னவென்றால் சுப உணர்வு அதாவது புண்ணியம் செய்யும்போது புண்ணிய கர்மம், பாப கர்மம் இரண்டுமே பந்தமாகின்றன. யாராவது ஒருவர் அசுப உணர்வு கொண்டால் அதாவது பாபம் செய்தால் அதனால் பந்தமாகும் காதி கர்மங்கள் என்னவோ பாபப் பிரக்ருதிகளேயாகும் ஆனால் நான்கு அகாதி கர்மங்களில் கூட பாபப் பிரக்ருதிகளே பந்தமாகின்றன.

இதன் பொருள் என்னவென்றால் புண்ணியம் செய்யும்போது புண்ணியம் மற்றும் பாபப் பிரக்ருதிகள் இரண்டின் பந்தமும் நிகழ்கிறது, ஆனால் பாபம் செய்யும்போது எல்லா கர்மங்களின் பந்தமும் பாபப் பிரக்ருதிகளாகவே பந்தமாகின்றன. **இதனால்தான் பாபத்தை என்னவோ உலகம் முழுவதும் பாபம் என்றே சொல்கின்றனர் ஆனால், புண்ணியம்கூட பாபம் என்று விரல்விட்டு எண்ணக்கூடய மிகச்சில புருஷர்களே அறிந்திருக்கின்றனர்** என்று சாஸ்திரங்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அடிமைத்தனத்தில் இருக்கும் ஒருவர் எவ்வாறு புனிதராக ஆக முடியும்? அது எவ்வாறு அவருக்குப் பயனளிக்கும்? இந்த விஷயங்களை கேட்டு **போகட்டும், நல்லதாக போய்விட்டது, இப்போது நாம் புண்ணியம் செய்ய எந்த அவசியமும் இல்லை, அவைகளை நாம் விட்டு விடலாம்** என்று சொல்லாதீர்கள்!

மகள்களே, இங்கே பாருங்கள்! சாஸ்திரங்களில் சொல்லப்படும் உபதேசம் மேலே செல்வதற்கு அதாவது மோக்ஷத்தை நோக்கி செல்வதற்கே சொல்லப்படுகிறது. புண்ணியம் செய்வதை விட்டு விட்டால் நீங்கள் பாபம் செய்து நரகம்-நிகோதம் செல்லவா விரும்புகிறீர்கள்? **புண்ணியம் விடத்தக்கது, ஹேயம் என்று நம்பிக்கையில் வைக்க வேண்டும், அபிப்ராயத்தில் கொள்ள வேண்டும்.** இவ்வாறு யதார்த்தமான நம்பிக்கையுடன்-அபிப்ராயத்துடன் புண்ணியம், பாபம் இரண்டையும் விட்டுவிட்டு சுத்தாத்மாவில் ஆழ்தலைச் செய்ய முயல வேண்டும், சுபோபயோகம், அசுபோபயோகம் இரண்டையும் விட்டுவிட்டு சுத்தோபயோகத்தை வெளிப்படுத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற யதார்த்தமான அர்த்தத்தை இதைப் படித்து அறிந்ததின் மூலம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கர்மங்களினின் உதயம் இடைவிடாது நிகழ்கிறது அதனுடைய பலனும் உயிருக்கு கிடைக்கிறது ஆனால், புதிய பந்தம் ஏதனால் நிகழ்கிறது? என்ற கேள்வி இப்போது எழுகிறது. எட்டு கர்மங்களின் உதயம்தான் புதிய கர்ம பந்தத்திற்குக் காரணமா? எட்டு கர்மங்களின் உதயத்தால் என்னென்ன பலன் கிடைக்கிறது என்று நாம் முன்னரே பார்த்தோம். கர்ம உதயத்தினால் கிடைக்கும் பலன்களாவன:

1. ஞானத்தின் தாழ்வு
2. தர்சனத்தின் தாழ்வு
3. சிரத்தை-நம்பிக்கை மற்றும் ஒழுக்கத்தில் விபரீதம்
4. தான, லாப, போக, உபபோக, வீர்யத்தில் தடங்கல்
5. உடனிருப்பவைகளால் அனுகூலம்-சாதகம் அல்லது பிரதிகூலம்-பாதகம்
6. ஆயுள்-ஒரு பிறவியில் குறிப்பிட்ட காலம் வாழ்தல்
7. உடலமைப்பு
8. உயர்த்த அல்லது தாழ்ந்த குலத்தில் பிறத்தல்

இந்த எட்டு விஷயங்களில் எத்தனை விஷயங்கள் புதிய கர்ம பந்தத்திற்கு காரணம் என்று கொஞ்சம் சிந்தனை செய்யலாம். ஞானம், தர்சனம், வீர்யம் என்னவோ உயிரின் இயல்பாகும்-ஸ்வபாவமாகும். அவை கொஞ்சம் வெளிப்பட்டிருக்கிறது, கொஞ்சம் வெளிப்படாமலிருக்கிறது. எது வெளிப்பட்டு இருக்கிறதோ அது உயிரின் இயல்பாகும்-ஸ்வபாவமாகும், ஸ்வபாவம் என்னவோ எப்போதும் புதிய பந்தத்திற்கு காரணமாவதில்லை. ஸ்வபாவமே புதிய கர்ம பந்த காரணமாகுமானால் பந்தமில்லாத நேரமோ, நிலையோ இருக்க முடியாது. எந்த ஞானம், தர்சனம் முதலியன வெளிப்படவில்லையோ-எது அங்கு இல்லையோ அதாவது எது அந்த இடத்திலேயே இல்லையோ அது எப்படி புதிய கர்ம பந்தத்திற்கு காரணமாக முடியும்? ஆகையால் ஞானாவரண, தர்சனாவரண, அந்தராய கர்மங்களின் உதயம் புதிய கர்ம பந்தத்திற்கு நிமித்தமாக முடியாது. அகாதி கர்மங்களின்

முதிர்ச்சியின் பலன் உயிருக்கு வெளியில் உள்ள உடனிருப்பவைகளில், உடலில், ஆயுளில், பிறக்கும் குலம் முதலியவைகளின் வடிவில் கிடைக்கிறது. இவைகள் எல்லாம் உயிருக்கு பிற பொருள்களாகையால், பிற பொருள்கள் புதிய கர்ம பந்தத்திற்கு காரணமாக முடியாது. இப்போது மீதமிருப்பது மோஹனீய கர்மம் ஒன்று மட்டுமே தான். இதற்கு தர்சன மோஹனீயம் மற்றும் சாரித்திர மோஹனீயம் என இரண்டு உட்பிரிவுகள் உள்ளன.

தர்சன மோஹனீய கர்ம உதயத்தால் மித்யாத்துவம்-மூடநம்பிக்கை உண்டாகிறது அதாவது ஸ்ரத்தையில்-நம்பிக்கையில் விபரீதம் நிகழ்கிறது, தவறு உண்டாகிறது, உண்மை இல்லாததை உண்மை என்று நம்பும் மயக்க நிலை, இயல்பில்லாத விபாவ-திரிபு நிலை உண்டாகிறது. சாரித்திர மோஹனீய கர்ம உதயத்தால் ஒழுக்கத்தில் விபரீதம்-விபாவ நிலை உண்டாகிறது-அதாவது நடத்தையில் கஷாயம்-திரிபு உணர்வு-விருப்பு வெறுப்பு-இராக த்வேஷம் உண்டாகிறது. சிரத்தையின் விபரீத்த்ததால்-தவறான நம்பிக்கையால்-மூடநம்பிக்கையால் உயிர் ஸ்வயம் பார்த்தல் அறிதல் மயமான தன்னை உயிர் என்று நம்பாமல், எட்டு கர்மங்களின் உதயத்தால் கிடைத்த உயிர் புத்கலம் இரண்டின் கூட்டான பர்யாயத்தையே இதுவே நான் என்று நம்புகிறது. நாம கர்ம உதயத்தால் கிடைத்த உடலையே **நான்** என்று அதாவது நான் மனிதன், நான் சிகப்பாக இருக்கிறேன், நான் அழகாக இருக்கிறேன், நான் பலவானாக-சக்தி நிறைந்தவனாக இருக்கிறேன் என்று நம்புகிறது. கோத்திர கர்ம நிமித்தத்தால் கிடைத்த உச்ச குலத்தில் பிறந்த காரணத்தால் தான் உயர்ந்த குலம் என்று நம்புகிறது. ஆயுள் கர்ம நிமித்தத்தால் அதிக ஆயுள் கிடைத்திருந்தால், தீர்க்கமான ஆயுள் உடையவன் என்றும், உடற்பயிற்சி, மருந்து, உணவுக் கட்டுப்பாடு ஆகியவைகளை சரியாகக் கைகொள்வதால் நான் உயிர் வாழ்கிறேன் என்று நம்புகிறது. சாதா வேதனீய கர்ம உதய நிமித்தத்தால் கிடைத்த வீடு, பணம், விரும்பிய பொருள்கள், அழகிய மனைவி, சாதுர்யமான பிள்ளைகள் முதலியவை தன்னுடையது என்றும் அவைகளை மிகுந்த சாமார்த்தியத்துடன் தன் புத்திசாலித் தனத்தால், தான் சம்பாதித்தது- சேர்த்துக் கொண்டது என்று நம்புகிறது.

தான் மிகவும் புத்திசாலியாக இருப்பதாகவும், டியூஷன் படித்து தன்னுடைய புத்தியை பெரிதாக்கிக் கொண்டதாகவும் நம்புகிறது. ஞானாவரண கர்ம உதயத்தால் வெளிப்படும் ஞானத்தின் ஏற்ற இறக்கம் எவ்வளவோ அவ்வளவே தன்னுடைய ஞானத்தின் சாமர்த்தியம் என்று நம்புகிறது. தர்சனாவரண கர்மத்தின் உதயத்தால் வரும் ஆழ்ந்த தூக்கத்தை தன்னுடைய சுகம் என்று நம்புகிறது. ஏழு தத்துவத்திலும் விபரீத நம்பிக்கையே கொண்டுள்ளது. சாரித்திர மோஹனீய கர்ம உதயத்தால் நிகழும் இராக த்வேஷத்தை-விருப்பு வெறுப்புகளை தன்னுடைய ஸ்வபாவம் என்று நம்புகிறது. தான் தயாள குணம் கொண்டவன் என்றும், பலான நபர் கோபக்காரர் என்றும் நம்புகிறது. மேலே கூறியவைகள் கர்மங்களின் உதயத்தால் உயிர் மற்றும் புத்கலங்களில் நிகழும் அவஸ்தைகள், அவைகள் எல்லாம் சேர்ந்த அந்த பர்யாயம் எப்படி இருக்கிறதோ அதுவே நான் என்று நம்புகிற உயிர் மித்யாதிருஷ்டி யாகும், அதனுடைய நம்பிக்கை விபரீதமான தாகும். கர்மம் சூக்ஷுமமானதால் அதை பார்க்க முடிவதில்லை ஆனால் அதன் உதயத்தால் கிடைக்கும் பலன் என்னவோ சுலபமாக அனுபவத்திற்கு வருகிறது. ஆனால் இவைகள் அனைத்தையும் அறிவது என்னவோ ஸ்வயம் உயிர்தான், ஆனால் அது அரூபியான காரணத்தால் அதைப் பார்க்க முடிவதில்லை, சுலபமாக அனுபவத்திற்கு வருவதில்லை. ஆகையால் கர்மங்களின் இந்த காரியத்தையே உயிர் தன் சுய வடிவம் என்று நம்புகிறது.

உயிர் தன் ஸ்வரூபத்தை விபரீதமாக நம்புவதே உயிரின் மிகப் பெரிய தவறாகும். இதனால், இந்த கற்பனையான **ஸ்வ**விற்கு எதனால் அனுகூலம்-இன்பம் வருகிறதோ அதன்மேல் அதற்கு இராகம்-ஆசை உண்டாகிறது அல்லது எதனால் பிரதிகூலம்-துன்பம் வருகிறதோ அதன்மேல் த்வேஷம்-கோபம் உண்டாகிறது. இதோடு மட்டும் இந்த உயிர் நிற்பதில்லை, ஆனால் அந்த விருப்பு வெறுப்புகள்-அதாவது எது ஷண நேர விகாரமோ அதையே தன் ஸ்வரூபம் என்று நம்புகிறது, அதுவே செய்யத் தகுதியானது என்றும் நம்புகிறது, ஒருவகையான இராகத்தை-ஆசையை விட்டு வேறு விதமான குறிப்பிட்ட இராகத்தை-ஆசையை கொள்ள விரும்புகிறது, அவ்வாறே பிறருக்கும் உபதேசம் செய்கிறது. இவ்வாறு மோஹனீய கர்ம உதயத்தால் நிகழும் மித்யாத்துவம் மற்றும் இராக த்வேஷம் கொள்ளும் காரணத்தால் புதிய கர்ம பந்தம் நிகழ்கிறது. தத்துவார்த்த சூத்திரம் என்ற நூலில் மித்யாத்துவம், அவிரதம், பிரமாதம், கஷாயம் மற்றும் யோகம் பந்தத்திற்கு ஹேது-காரணம் என்று ஒரு சூத்திரம் இருக்கிறது. எல்லாவற்றிக்கும் முதலில் மித்யாத்துவம்-மூடநம்பிக்கை இல்லாமல் போன பிறகே மற்ற கர்ம பந்த காரணங்கள் வரிசையாக அழிக்கின்றன. மூடநம்பிக்கையை எப்போதும் வைத்துக்கொண்டு எவ்வளவுதான் சுப ராகம்-புண்ணிய காரியம் செய்தாலும் கர்மம் பந்தமாகாமல் போகாது.

நான் அனந்த ஞானம் முதலானவைகளின் பிண்டமாவேன், த்ருவம்-நிலையான கம்பம் போன்றவன், தூய்மையானவன், வெளிப்படையான-ஸ்வயம்சித்த பதார்த்தமாவேன், என்று தன் சாஸ்வதமான-நிலையான இருப்பு மற்றும் த்ருவ பாவத்தை ஸ்வீகரித்து, வெளிப்படும் ஞான பர்யாயத்தில் இராக த்வேஷங்களை பார்க்காமல், தன் த்ருவ நிலையான ஸ்வபாவத்தை, இயல்பை அறிவதில் ஒருநிலை கொள்வதால், ஸ்வபாவத்தால் உண்டாகும் சகஜமான அதீந்திரிய ஆனந்தம்-புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்த அனுபவம் உண்டாகிறது. ஆனால் இராகத்தையே பார்ததுக்கொண்டிருப்பதால், அதையே தன் இயல்பு என்று நம்பிக்கொண்டிருப்பதால்-இராகம் துக்க வடிவமானதாகையால், இந்த உயிருக்கு துக்கத்தின் அனுபவமே நிகழ்கிறது. இந்த உயிர் பிற பொருள்களே தன் துக்கத்திற்கு காரணம் என்று நம்பி மேலும் அதிகமாக இராக த்வேஷம் செய்து மேலும்மேலும் அதிக துக்கத்தையே அடைகிறது.

இவ்வாறு இன்று நாம் எட்டு கர்மங்களின் பெயர் மற்றும் அவற்றில் காதி அகாதி என்ற பிரிவுகள், இந்த எட்டு கர்மங்களின் உதயத்தால் அடையும் பலன்கள் முதலியவைகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம். ஏழு அல்லது எட்டு கர்மங்களின் கட்டு-பந்தம் இடைவிடாது நிகழ்கிறது, எட்டு கர்மங்களின் உதயமும் இடைவிடாது நிகழ்கிறது என்றும் பார்த்தோம். ஆனால் மோஹனீய கர்ம உதயத்தால் உண்டாகும் மூடநம்பிக்கை மற்றும் விருப்பு வெறுப்பு இவைகளின் நிமித்தத்தாலேயே மீண்டும் புதிய கர்மங்களின் பந்தம் நிகழ்கிறது என்றும் பார்த்தோம். பாபம் செய்வதால் என்னவோ பாப கர்மம் பந்தமாகிறது, ஆனால் புண்ணியம் செய்தாலும்கூட புண்ணியம், பாபம் ஆகிய இரண்டு வகை கர்மங்களும் பந்தமாகின்றன என்றும் பார்த்தோம். உங்களை வீட்டுப்பாடம் படிக்கும்படிச் சொன்னது நினைவில் இருக்கும் என்று நினைக்கிறேன். மோக்ஷமார்க்கபிரகாசம் இரண்டாம் அத்யாயத்தை படித்தால் மிகவும் நன்றாக இருக்கும். கடிதங்கள் மூலம் தர்மம் பற்றி கொஞ்சம் விஷயமே சொல்ல முடியும். ஆகையால் தர்ம சம்பந்தமான அடிப்படை விஷயங்களைத் தெரிந்து கொண்ட நிலையில், தத்துவ சம்பந்தமான புத்தகங்களை நீங்களே படிப்பதில் ஆர்வம் கொண்டு மேலும் ஆழமாக நீங்கள் இத்த விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய உபதேசமாகும்.

- உங்கள் அம்மா.

கர்ம-ஸ்திதி, ஆபாதா காலம் மற்றும் உதய காலம்

கடிதம்-3 ஓம் நம: சித்தேப்ய: 27-7-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கர்ம பந்தம் மற்றும் உதயம் இவைகளின் கதை அதிக ருசியாகவும், வியக்கத்தக்கதாக இருந்தாலும் அதைப்பற்றி பயமும் உண்டாகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். இதில் பயப்பட எந்த காரணமுமில்லை. இருட்டான அறையில் சென்றதும் ஒரு சிறுவன் பயப்படுகிறான், ஆனால் அந்த அறையில் தீபத்தை ஏற்றி வெளிச்சமாக்கியதும் அந்த சிறுவனின் பயம் அகன்று விடுகிறது அல்லவா அதுபோல, ஜினேந்திர பகவான் அவருடைய கேவலஞானம் மூலம் எல்லா பொருள்களின் இயல்புகளையும் அறிந்து, ஆறு திரவியங்களின் இயல்பு எப்படி இருக்கிறது என்று கூறியுள்ளார். பகவான் கூறியவைகள் எல்லாம் ஆசாரியர்களால் எழுதப்பட்ட கிரந்தங்களில்-ஆகமங்களில் நமக்கு இப்போதும் கிடைக்கின்றன. இந்த கிரந்தங்களில் விளக்கியுள்ளபடி உயிர், கர்மம், நோகர்மம், அதாவது உடல், மனம், வாணி-சப்தம் முதலியவைகளின் இயல்பு, அவைகளுக்கிடையில் இருக்கும் தொடர்பு, பரஸ்பரம் அவைகளுக்கு இடையில் உள்ள நிமித்த நைமித்திக சம்பந்தம், அவைகளின் இதர அவஸ்தைகள் எல்லாம் மிகத் தெளிவாக நம் அறிவில் வந்த பிறகு, நம் ஸ்வ சைதன்ய அவஸ்தையின் இருப்பு அதாவது நம் இயல்பான அறியும் தன்மை நம்மில் விழிப்புணர்வு அடைந்தவுடன் கர்ம சம்பந்தமான பயம் நம்மை விட்டு ஓடி விடுகிறது.

கர்மத்தின் பந்தம் இடைவிடாது நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது-விழிப்புணர்வோடு இருக்கும்போது, தூங்கும்போது, சுயநினைவிழந்த நிலையில் இருக்கும்போது மற்றும் விக்கிரஹக கதியில் செல்லும்போது கூட கர்மத்தின் பந்தம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. விக்கிரஹகதி என்றால் என்ன? மனித கதி, விலங்கு கதி, தேவ கதி மற்றும் நரக கதி ஆகிய நான்கு கதிகள் மற்றும் இந்த பிறவி நிலைகளை இல்லாமல் செய்து அடையும் சித்த கதி ஆகிய கதிகள் பற்றி நமக்கு தெரியும். பின்னர் இது என்ன புதியதாக விக்கிரஹ கதி? என்ற கேள்வி உங்களுக்கு எழுவது சகஜமே.

விக்கிரஹம் என்றால் உடல், மரணத்திற்குப் பிறகு உயிர் புதிய உடலை ஏற்க அடுத்த பிறவிக்கு செல்வதை விக்கிரஹ கதி என்று சொல்கின்றனர். விக்கிரஹ என்ற சொல்லுக்கு இன்னுமொரு அர்த்தம் கிரஹனம்-ஏற்பது நின்று போதல்-தடைபடுதல் என்பதாகும். இந்த விக்கிரஹ கதியில் கர்மத்தின் கிரஹனம் பற்றும் பந்தம் என்னவோ நிகழ்கிறது ஆனால் நோகர்ம புத்கலங்களின் அதாவது உடல், மனம், வாணி சம்பந்தமான நோகர்ம வர்கணைகளின் கிரஹனம்-ஏற்றல் நிகழ்வதில்லை, அவைகளை ஏற்பது தடைபட்டுப் போகிறது, ஆகையால் இந்த உயிரின் செல்கை நிலையை விக்கிரஹ கதி என்று சொல்கின்றனர். இப்போது இது பற்றிய சர்ச்சை நிகழ்வதால் இதைப்பற்றி மேலும் தெரியப்படுத்துகிறேன். இது சம்பந்தமாக தத்துவார்த்த சூத்திரம் இரண்டாம் அத்தியாயம் 25 முதல் 30 தாவது சூத்திரங்களின் பொருள் **அர்த்த பிரகாஷிகா** என்று தெளிவுரை நூலில் கொடுத்திருப்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்கிறேன், கேளுங்கள்!

மரணத்திற்கு பிறகு புதிய உடலை ஏற்க உயிர் இடம் பெயரும்போது, அதாவது முன்னர் வாழ்ந்த இடத்தை விட்டு புதிதாக வாழவிருக்கும் இடத்திற்குச் செல்லும்போது, ஆகாசப் பிரதேசத்தில் ஸ்ரேணி வடிவில்-நேர்வழியில் செல்லுகிறது, குறுக்கு வழியில்

செல்லுவதில்லை. இந்த இடப்பெயர்ச்சி மேலே அல்லது கீழே அல்லது சம நிலையில் அதாவது கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய முக்கிய திசைகளில் தான் செல்லுகிறது. குறுக்கு வழியில் விதிசைகளில்-ஈசான்ய, அக்னி, நைநிருத்ய(குபேர), வாயு முதலிய உப திசைகளில் செல்லுவதில்லை. எப்படியெனில் சதுரங்க விளையாட்டில் யானை நேர் கட்டங்களில் முன்னே பின்னே செல்வது போலச் செல்லும் ஆனால் ஒட்டகம் செல்வது போல குறுக்கு கட்டங்களில் செல்லுவதில்லை. இன்னுமொரு உதாரணம் கூட பார்க்கலாம். நெடுக்கும் குறுக்குமாக நூலால் நெய்யப்பட்ட கைக்குட்டையை பாருங்கள். அதில் ஒரு மூலையிலுருந்து வேறு மூலைக்கு செல்ல வேண்டுமென்றால் முதலில் நேராக இருக்கும் நூலை பிடித்துக்கொண்டு சென்று பிறகு 90 டிகிரி திரும்பி குறுக்காக செல்லும் நூலிழையின்மேல் சென்று அடுத்த மூலையை அடையலாம்.

ஒரே மேல்பரப்பில் ஒரு இடம் விட்டு வேறு இடம் செல்ல வேண்டுமென்றால் அதிக பட்சம் ஒரு திருப்பம் மட்டுமே எடுத்துச் செல்ல முடியும். ஆனால் லோகாகாசம் என்னவோ கன வடிவமாகும். ஆகையால் ஒரு பரப்பிலிருந்து வேறு பரப்பில் உள்ள இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால், அதாவது வேறு உயரத்திற்கு, level-க்கு செல்லவேண்டும் என்றால் மேலே அல்லது கிழே கூட செல்ல வேண்டியது அவசியமாகும்.





மேலே கொடுக்கப்பட்ட கனவடிவத்தில் ஒரு மூலையிலிருந்து வேறு ஒரு மூலைக்கு செல்ல அதிக பட்சம் இரண்டு திருப்பங்கள் எடுக்க வேண்டும். ஆனால் லோகாகாசத்தின் கனவடிவம் உங்களுக்கு தெரிந்த ஒன்றுதான். அதன் கிழக்கு மேற்கு விஸ்தீரணம் மேலிருந்து கீழ்வரை சமமில்லாமல் இருக்கிறது. ஆகையால் கீழே ஒரு மூலையிலிருந்து முதலில் மத்தியில் ஒரு ரஜ்ஜு இடத்திற்கு வந்து, பின்னர் மேலே செல்ல வேண்டும், பின்னர் அவசியமேற்பட்டால் மேலும் இரண்டு திருப்பங்கள் எடுத்து உயிர் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் அங்கு சென்று அடையலாம்.

மரணத்திற்கு பிறகு உயிர் வேறு பிறவி எடுக்கச் செல்லுதல் இது போன்ற திருப்பங்களுடன்தான் நிகழ்கிறது, இதையே **விக்கிரஹ கதி** என்று சொல்கின்றனர். ஏனெனில் விக்கிரஹ என்ற சொல்லுக்கு திருப்பத்துடன் கூடிய என்றுகூட அர்த்தம் இருக்கிறது. இதில் அம்பு செல்வதுபோல நேராக ஒரே நேர்கோட்டில் ஒரு சமயம் செல்கிறது, இதை **ஈஷு கதி** அல்லது **ருஜு கதி** என்று சொல்கின்றனர். ஒரு திருப்பத்துடன் செல்லும் கதியை **பாணிமுக்தா கதி** என்று சொல்கின்றனர், இதற்கு இரண்டு சமய நேரம் ஆகிறது. எந்த செல்லுகையில் இரண்டு திருப்பங்கள் தேவைப்படுகிறதோ அந்த **லாங்கலிகா** கதியில் செல்ல மூன்று சமயங்கள் ஆகிறது.

லாங்கல் என்றால் கலப்பை (நிலத்தை உழவு செய்யப் பயன்படும் ஒரு கருவி). கலப்பையில் இருப்பது போல இரண்டு திருப்பங்கள் இருக்கின்றன. மூன்று திருப்பங்கள் உள்ள செல்கையை **கோமுத்ரிகா கதி** என்பர். இதற்கு நான்கு சமயங்கள் ஆகிறது. இதற்குமேல் அதிக சமய நேரம் வேறு பிறவி எடுக்க செல்ல வேண்டிய அவசியமில்லை.

விக்கிரஹ கதியின் முதல் சமயத்திலேயே புதிய கதி ஆயுளின் உதயம் தொடங்கி விடுகிறது. மரணத்திற்குப் பிறகு அடுத்த பிறவி எடுக்கும் முன் ஆத்மா இங்கும் அங்கும் அலைகிறது அல்லது மரணத்திற்கு பிறகு வீட்டிலேயே கொஞ்ச காலம் சுற்றிக்கொண்டு இருக்கிறது என்பதெல்லாம் ஒரு கற்பனையே! அதில் எந்த உண்மையும் இல்லை.

நாம் வெளிநாட்டுக்கு சுற்றுலா செல்ல வேண்டுமென்றால் எத்தனை ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது பாருங்கள்! பயணச்சீட்டு முன்பதிவு செய்ய வேண்டும், விசா எடுக்க வேண்டும், தங்குவதற்கு லாட்ஜ் முன்பதிவு செய்ய வேண்டும், சுற்றுலா செல்ல வேண்டிய இடங்களைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்ள வேண்டும், செலவுக்கு பணம் ஏற்பாடு செய்ய வேண்டும், உணவு பற்றிய கவலை, திருடர்கள் பற்றிய பயம், ஒன்று இரண்டல்ல எத்தனையோ கவலைகள் தொடர்ந்து வருகின்றன பாருங்கள்! ஆனால் உயிர் ஒரு பிறவியிலிருந்து அடுத்த பிறவி எடுக்கச் செல்லும்போது அதற்கு மேலே சொல்லப்பட்ட எந்த கவலையும் பட வேண்டியதில்லை. இந்த பவத்திலேயே-பிறவியிலேயே அதன் அடுத்த பவ-பிறவி சம்பந்தமான எல்லா முன்பதிவுகளும், மற்ற ஏற்பாடுகளும் தயாராக இருக்கின்றன. அடுத்த பவம்-பிறவி என்னவாக இருக்கும்? அங்கு எப்படிப்பட்ட உடல் இருக்கும்? எத்தனை புலன்கள்-இந்திரியங்கள் கிடைக்கும்? யார் யாரெல்லாம் மற்றும் எதுவெதுவெல்லாம் உடனிருக்கும் என்பவைகள் எல்லாம் நிச்சயிக்கப்பட்டு இருக்கின்றன-எல்லா ஏற்பாடுகளும் அந்தந்த சமயத்திற்கு கிடைக்கும்படி தயார் நிலையில் இருக்கின்றன. ஆனால் **யாருக்காவது இந்த கர்ம பந்தம் மற்றும் பவங்களில்-பிறவிகளில் சுற்றுதலில் உண்மையாகவே பயமிருந்தால்,** பவங்கள்-பிறவிகள் எடுக்காமலிருக்கும் வழிக்கான விதிமுறைகளை ஜினாகமங்களின் ஆதாரத்தில் ஸ்வாத்யாயம் செய்து கற்றுக்கொள்ள வேண்டும்!

எந்த செல்லுகையில் திருப்பம் இல்லையோ அதாவது வக்ரதா-விக்கிரஹ் இல்லையோ அதை **அவிக்கிரஹ கதி** என்றுச் சொல்கின்றனர் இதையே ருஜுகதி என்றுகூட சொல்கிறனர். இந்த கதியில் செல்ல எடுத்துக் கொள்ளும் நேரம் ஒரு சமயமாகும். உயிர் ஒரு சமயத்தில் அதிக பட்சம் 14 ரஜ்ஜு தூரம் பயணம் செய்ய முடியும். லோகாகசத்தின் அடி பாகத்திலிருந்து உச்சி பாகம் வரையுள்ள உயரம் 14 ரஜ்ஜுவாகும். ஒரு புத்கல பரமாணுகூட இந்த அதிவேகத்தில் பயணம் செய்யக்கூடியதாகவே இருக்கிறது. விக்கிரஹ கதியில் ஒரு திசையில் நேராக செல்லும்போது அது ஒரு முழ தூரமாக இருந்தாலும் சரி அல்லது 14 ரஜ்ஜுவாக இருந்தாலும் சரி, அதற்கு ஒரு சமய நேரமே ஆகிறது. புத்கலம்கூட அதி மந்த கதியில் ஒரு சமயத்தில் ஒரு பிரதேச அளவு செல்கிறது ஆனால் அதி வேக கதியில் அதே ஒரு சமயத்தில் 14 ரஜ்ஜு செல்லுகிறது.

இப்போது விக்கிரஹ கதியில் ஆஹாரக், அநாஹாரக் விதி பற்றிப் பார்க்கலாம். இந்த தகவல் எதிர்காலத்தில் செய்யவிருக்கும் **மார்கணை** பற்றி சர்ச்சையின் போதும் பயனுள்ளதாக இருக்கும். விக்கிரஹ கதியில்தான் உயிருக்கு உடல் இல்லையே, பிறகு அது ஆஹாரம் அதாவது போஜனம் எப்படி எடுத்துக் கொள்ளும்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். மகள்களே! ஆஹாரம் என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் இருக்கின்றன மற்றும் ஆஹாரமும் பல விதமாக இருக்கின்றன. ஆஹாரம் என்றால் போஜன், கிரஹண்-ஏற்றல், ஆஹாரம் பெயர் கொண்ட சஞ்ஜை, ஆஹாரம் பெயர்

கொண்ட மார்கணை, ஆஹாரம் பெயர் கொண்ட வர்கணை, ஆஹாரம் பெயர் கொண்ட பர்யாப்தி முதலிய பல அர்த்தங்களில் ஆஹாரம் என்ற சொல் வருவதைப் பார்க்க முடிகிறது.

ஆஹாரம் ஆறு விதமாக இருக்கிறது. மனிதர்கள் மற்றும் விலங்குகள் வாயால் உணவு ஏற்கின்றன, அதை கவளாஹாரம் என்று சொல்கின்றனர், இது ஒருவகை உணவாகும். **கர்ம ஆஹாரம், நோகர்ம ஆஹாரம், லேபாஹாரம், ஓஜாஹாரம், கவளாஹாரம்** மற்றும் **மானசிக ஆஹாரம்** என ஆஹாரம் ஆறு விதமாகும். சிலர் பணத்தை சாப்பிடுகிறார்கள், ஆனால் சிலர் திட்டு வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள், இவைகள் எல்லாம் எந்த ஆஹாரத்தில் சேர்ப்பது? என்று நீங்கள் கேட்கலாம். இங்கு நாம் ஹாஸ்சியம் பேசவில்லை, ஆனால் தர்ம சம்பந்தமான சர்ச்சை செய்து கொண்டிருக்கிறோம்.

உயிர் ஒவ்வொரு சமயமும் கர்மத்தை கிரஹணம் செய்து கொண்டே இருக்கிறது என்று முன்னரே நாம் பார்த்தோம். எதுவரை யோகம் இருக்கிறதோ அதாவது சயோககேவலி பெயர்கொண்ட குணஸ்தானத்தில் உள்ள அரஹந்த நிலைவரை கர்மத்தின் கிரஹணம் அதாவது கர்ம ஆஹாரம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அனாதி காலமாக இதில் ஒரு சமய நேரம்கூட தடை ஏற்படவில்லை.

ஆனால் உடல், மனம், வாணி சம்பந்தமான புத்கல பரமாணுக்களின் கிரஹணத்தை **நோகர்ம ஆஹாரம்** என்று சொல்கின்றனர். ஔதாரிக, வைக்கிரீயிக மற்றும் ஆஹாரக எனப்படும் மூன்று உடல்கள் மற்றும் ஆறு பர்யாப்திகள் அடைய தேவையான புத்கல பரமாணுக்களின் கிரஹணத்தையும் ஆஹாரம் என்றுதான் சொல்கின்றனர். இத்தகைய ஆஹாரத்தை கிரஹணம் செய்யும் உயிரை **ஆஹாரக்** என்று சொல்கின்றனர். ஆஹார பர்யாப்த்தி, சரீர பர்யாப்த்தி, இந்திரிய பர்யாப்த்தி, சுவாசோச்சுவாச பர்யாயாப்த்தி, பாஷா பர்யாப்த்தி, மற்றும் மனப் பர்யாப்த்தி ஆகிய இந்த ஆறு பர்யாப்த்திகள் பற்றி விரிவான சர்ச்சையை பிறகு செய்யவிருக்கிறோம்.

ஒரு சமயம் கொண்ட ருஜுகதி உயிர் அந்த சமயத்திலேயே ஆஹாரம் எடுக்கத் துவங்கி விடுகிறது. இதனால் விக்கிரஹ கதியில் கூட இது ஆஹாரம் ஏற்கிறது என்று சொல்லப்படுகிறது. அதாவது மரணம் அடைந்த பிறகு ஒரு சமயத்தில் அடுத்த பிறவி எடுக்குமிடம் அடைந்தவுடன் புதிய உடல் சம்பந்தமான பரமாணுக்களை அது கிரஹணம் செய்கிறது. ஆனால் எந்த உயிர் ஒரு திருப்பம் எடுத்து அடுத்த பிறவி எடுக்கச் செல்லுகிறதோ அது முதல் ஒரு சமய நேரம் அநாஹாரக்காக இருக்கிறது, இரண்டாவது சமயத்தில் ஆஹாரக்காக ஆகிறது. அநாஹாரக அவஸ்தையில்-நிலையில் நோகர்ம ஆஹாரம் இல்லையானாலும்கூட கர்ம ஆஹாரம் ஏற்பது நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. இரண்டு திருப்பங்களுடன் செல்லும் விக்கிரஹ கதி உயிர் இரண்டு சமய நேரம் அநாஹாரக்காக இருந்து மூன்றாவது சமயத்தில் ஆஹாரக்காக ஆகிறது. மூன்று திருப்பங்களுடன் செல்லும் விக்கிரஹ கதி உயிர் மூன்று சமய நேரம் அநாஹாரக்காக இருந்து நான்காவதுவது சமயத்தில் ஆஹாரக்காக ஆகிறது. நோகர்ம ஆஹாரத்தை ஏற்று, அதாவது நோகர்மத்தை கிரஹணம் செய்து உயிர் புதிய உடலை உற்பத்தி செய்து ஏற்கிறது, புதிய உடலமைப்பு நிகழ்கிறது, அதையே பிறவி எடுத்தல் என்கிறோம். மருத்துவமனையில் பிரசவம் ஆனதும் குழந்தை பிறந்தது என்று சொல்வது லௌகீகத்தில்-நடைமுறையில் சொல்லப்படுவதாகும். [உண்மையில் தாயின் கருவில் எப்போது குழந்தை உண்டானதோ அதையே பிறவி என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.]

யாராவது இறந்து விட்டார் என்று நாம் சொல்லும்போது உண்மையில் என்ன நிகழ்கிறது? என்று பாருங்கள். பழைய உடலின் எல்லா பரமாணுக்களையும் விட்டு விட்டு உயிர் வேறு இடத்திற்கு அடுத்த பிறவி எடுக்கச் செல்கிறது. அப்படிச் செல்லும்போது உடல், மனைவி-கணவன், நிலம்-சொத்து, நண்பர்கள்-குடும்பம், ஐஸ்வர்யம், அதிகாரம் ஆகிய எல்லாவற்றையும் இங்கேயே விட்டு விட்டுச் செல்கிறது. எதையுமே அதனுடன் எடுத்துச் செல்லவில்லையா? என்று நீங்கள் கேட்கலாம். ஆம், ஏன் எடுத்துச் செல்லவில்லை? மேலே சொன்ன எல்லாவற்றின் சம்பந்தமான மோஹம், ஆசை, வெறுப்பு முதலிய கஷாய உணர்வுகளை செய்து சேர்ந்துக்கொண்ட-பந்தித்துக் கொண்ட எல்லா கர்மங்களையும் உடன் எடுத்துச் செல்கிறது. தான் இதுவரை வாழ்ந்து வந்த உடலை விட்டுவிட்டு கார்மண மற்றும் தேஜச உடலுடன் உயிர் விக்கிரஹ கதியில் செல்லுகிறது. விக்கிரஹ கதியின் முதல் சமயத்திலேயே புதிய ஆயுளின் உதயம் தொடங்கி விடுகிறது. மேலும் எவ்வளவு ஆயுள் கட்டிக்கொண்டதோ அவ்வளவு காலம்வரை ஒவ்வொரு சமயமும் ஆயுள் கர்மத்தின் பரமாணுக்கள்-நிஷேகங்கள் உதயத்திற்கு வந்த வண்ணம் இருக்கின்றன.

குழந்தை பிறந்ததும் சந்தோஷமடைவதும், நமக்கு வேண்டிய நபர் யாராவது இறந்ததும் துக்கப்படுவதும் ஏன் என்று கொஞ்சம் அமைதியாகவும் மிகவும் சரியாகயும் சிந்தியுங்கள்! இறந்தவருக்காக நாம் அழுகிறோமா அல்லது நம்முடைய சொந்தம் விட்டுப்போவதால் அழுகிறோமா அல்லது நாம் இந்த சமயத்தில் அழாவிட்டால் பிறர் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்று எண்ணி அழுகிறோமா? இந்த அழுகைக்கான எந்த கஷாயங்களாலும் எந்த நற்பயனும் இல்லை என்பது உங்கள் எண்ணத்தில் வருகிறதா? ஆம்! கஷாயங்கள் கூட ஒரு வகையில் பயனுடையதாக இருக்கிறது, புதிய கர்ம பந்தம் செய்து கொள்ளவே அது பயனுடையதாக இருக்கிறது. நிகழ்காலத்தில் அழுதல் முதலான துயர-துன்ப உணர்வு கொள்ளுவதால் புதிய கர்மங்கள் பந்தமாகின்றன மேலும் அந்த கர்மங்கள் பின்னர் உதயத்திற்கு வரும்போது மீண்டும் இதுபோன்ற சூழ்நிலைக்கே நம்மை ஆளாக்க காரணமாகின்றன.

ஒவ்வொரு சமயமும் புதிய கர்ம பந்தம் நிகழ்கிறது மற்றும் அதன் ஸ்திதி முடிந்ததும் அவை எல்லாம் ஒன்றாக ஒரே சமயத்தில் உதயத்திற்கு வருகிறது என்ற எண்ணத்தில் நீங்கள் இருந்தால் அது தவறாகும். யாரவது ஒருவர் ஒரு சமயத்தில் 1,000 கர்ம பரமாணுக்களை 100 வருட ஸ்திதியில் பந்தம் செய்கிறார் என்றால், 100 வருடம் கழிந்ததும் ஒரே சமயத்தில் பந்தமான அந்த 1,000 கர்ம பரமாணுக்களும் ஒட்டுமொத்தமாக ஒரே சமயத்தில் உதயத்திற்கு வந்து பலன் தந்து விழுந்து விடுகின்றன என்ற கற்பனை தவறாகும்.

அப்படியானால் உண்மை நிலை என்னவென்று உங்களுக்குத் தெரிந்து கொள்ள ஆவல் உண்டாகிறதல்லவா? பந்தமான கர்ம பரமாணுக்களில் என்ன நிகழ்கிறது என்று சொல்கிறேன், கேளுங்கள்! கர்ம பரமாணுக்கள் பந்தமானவுடன் அவைகள் எல்லாம் உயிருடன் சத்தாவிலேயே அதாவது எந்த பலனையும் தர முடியாத நிலையிலேயே கொஞ்ச காலம் இருக்கும், அதாவது அந்த கொஞ்சம் குறிப்பிட்ட காலம் வரை அவை உதயத்திற்கு வருவதில்லை. உதயத்திற்கு வராத அந்த காலத்தை **ஆபாதா காலம்** என்று சொல்கின்றனர். ஆபாதா காலம் பூர்த்தியடைந்ததும் அந்த குறிப்பிட்ட கர்மத்தின் உதய காலம் ஆரம்பமாகிறது. ஆரம்பத்தில் குறிப்பிட்ட கர்ம பரமாணுக்களில் கொஞ்சம் பரமாணுக்கள் மட்டுமே முதல் சமயத்தில் உதயமாகி பலன் கொடுத்து விட்டு உயரிலிருந்து விழுந்து விடுகின்றன.

ஒரு சமயத்தில் உயிரிடமிருந்து விழும் பரமாணுக்களின் சமூகத்தை **நிஷேகம்** என்று சொல்கின்றனர். இரண்டாவது சமயத்தில் மற்றுமொரு நிஷேகம் விழுகிறது-உயிரிடமிருந்து விலகுகிறது-உதயத்திற்கு வருகிறது. ஆனால் இரண்டாம் நிஷேகத்தில் விழும் அந்த குறிப்பிட்ட சமயத்தில் பந்தமான பரமாணுக்களின் எண்ணிக்கை, முன் நிஷேகத்தில் விழுந்த அந்த குறிப்பிட்ட பந்தமான பரமாணுக்களின் எண்ணிக்கையைவிடக் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. மூன்றாம் நிஷேகத்தில் விழும் அந்த குறிப்பிட்ட பரமாணுக்களின் எண்ணிக்கை அதைவிட கொஞ்சம் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறது. இதுபோல அடுத்தடுத்த நிஷேகங்களில் அந்த குறிப்பிட்ட கர்மப் பரமாணுக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது. இதை நிஷேகங்களின் அமைப்பு, நிஷேக ரசனா என்று சொல்கின்றனர். அந்த குறிப்பிட்ட கர்மத்தின் ஸ்திதி எவ்வளவோ அந்த ஸ்திதி காலம் முடியும்வரை ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிஷேகமாக உதயத்திற்கு வந்து கொண்டிருக்கும். ஆயுள் கர்மம் தவிர மற்ற ஏழு கர்மங்களின் ஸ்திதி மற்றும் நிஷேக அமைப்பு படத்தில் காட்டியபடி இருக்கிறது.



ஸ்திதி=ஆபாதா காலம்+உதய காலம். ஆயுள் கர்மம் தவிர மற்ற ஏழு கர்மங்களின் ஸ்திதி காலத்தில் ஆபாதா காலம் போக மீதி காலத்தை உதய காலம் என்று சொல்கின்றனர். உதய காலத்தின் ஒவ்வொரு சமயத்திலும் அந்த குறிப்பிட்ட ஒரு சமய நேரத்தில் பந்தமான கர்மத்தின் உதயம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

என்ன ஒரு விசித்திரமான விஷயம் என்று பாருங்கள்! உயிர் ஒரு சமய நேரமே கஷாயம்-இராக, த்வேஷ, மோஹ பரிணாமம்-சுபாசுப உணர்வு கொண்டது. அந்த உணர்வின் நிமித்தத்தால் புதிய கர்மம் பந்தமானது, அப்போது அனேக புத்கல கார்மண பரமாணுக்கள் உயிருடன் பந்தமாகின்றன. அந்த பரமாணுக்களின் உதயம் என்னவோ கொஞ்ச காலம்

கழித்து அனேக வருடங்கள் அதாவது ஆயிரம் வருடங்கள்-லட்சம் வருடங்கள்-கடற்கால வருடங்கள் வரை-எவ்வளவு காலத்திற்கு பந்தமானதோ அவ்வளவு காலம்வரை இடைவிடாது உதயத்திற்கு வந்து கொண்டே இருக்கிறது. ஒரு சமய நேரத்தில் பந்தமான கர்மத்தின் நிலையே உயிரை பலகாலங்கள் விடாது இப்படி பாடுபடுத்துகிறது. இதுபோல ஒவ்வொரு சமயமும் நாம் கஷாய உணர்வு கொண்டு புதிது புதிதாக கர்மங்களை பந்தம் செய்து கொள்கிறோம், அவைகளின் ஒவ்வொன்றின் உதயம்கூட அனேக வருடங்கள் இவ்வாறே உதயத்திற்கு வந்த வண்ணம் இருக்கின்றன.

வெவ்வேறு காலங்களில் பந்தமான எந்தெந்த கர்மங்கள் முதிர்வு (maturity) அடைந்து உதயமாகிறதோ அந்த எல்லா கர்மங்களின் உதயத்தில் வெளியேறும் எல்லா பரமாணுக்களும் ஒன்று சேர்ந்து ஒட்டு மொத்தமாக ஒரே நிஷேகமாக [பல சமயங்களில் கட்டிக்கொண்ட கர்மங்களின் கூறிப்பிட்ட சில கார்மண பரமாணுக்கள் எல்லாம் சேர்ந்து அந்த ஒரு சமயத்தில் வெளியேறும்படியான பரமாணுக்களின் கூட்டமாக] உயிரிடமிருந்து விழுகின்றன, அவைகளின் ஒட்டுமொத்த பலனையே அந்த சமயத்தில் உயிர் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இங்கு நாம் ஆயுள் கர்மத்தை தவிர மற்ற கர்மங்களின் உதயத்தை பற்றிப் பார்த்தோம், ஏனெனில் ஆயுள் கர்மத்தில் மட்டும் ஸ்திதி காலம் எவ்வளவோ அவ்வளவே அதன் உதய காலமுமாகும். உதாரணத்திற்கு யாராவது ஒருவர் தன் 60-தாவது வயதில் அடுத்த பிறவிக்கான 10,000 வருட நரக ஆயுள் கொண்டார் எனில், அவருடைய நிகழ்கால ஆயுள் 90 வருடங்களாகும். நிகழ்கால ஆயுளை **புஜ்ஜமான் ஆயுள்** என்றும் அடுத்த பிறவிக்காக கட்டிக்கொள்ளும் ஆயுளை **பத்யமான் ஆயுள்** என்றும் சொல்கிறார்கள் என்பது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறதல்லவா? முன்பே இது பற்றி நான் உங்களுக்கு கூறியருக்கிறேன். இந்த மனிதருக்கு 60-தாவது வயதிலிருந்து 90-ஆவது வயதுவரை புஜ்ஜமான் ஆயுள் கர்மத்தின் உதயம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கும். இந்த ஆயுளின் கடைசி நிஷேகம் விழுந்ததும் அவர் மரணமடைவார், அடுத்த சமயத்தில் விக்கிரஹ கதியிலேயே புதிய ஆயுளின் உதயம் தொடங்கிவிடும். இந்த உயிர் 10,000 வருட நரகாயுள் பந்தித்து இருப்பதால் இடைவிடாது 10,000 ஆண்டுகள் வரை இந்த ஆயுளின் நிஷேகங்கள் ஒவ்வொன்றாக பிரதி சமயமும் விழுந்து கொண்டேயிருக்கும்.



ஆயுளின் ஸ்திதி = உதய காலம். ஆயுளுக்கு ஆபாதா காலம் இல்லையா? என்ற கேள்வி உங்களிக்கு எழலாம். ஆபாதா காலம் இருக்கிறது, ஆனால் அதன் கணக்கு வேறு விதமாக இருக்கிறது. புதிய ஆயுள் பந்தித்துக் கொண்ட சமயத்திலிருந்து நிகழ்கால ஆயுளில் எவ்வளவு காலம் மீதம் இருக்கிறதோ அந்த காலமே புதிதாக கட்டிக்கொண்ட ஆயுள் கர்மத்தின் ஆபாதாகால மாகும். நாம் மேல் கூறிய உதாரணத்தில் 90 வயது ஆயுள் கொண்ட மனிதர் அவருடைய 60-ஆவது வயதில் நரக ஆயுள் பந்தம் செய்து கொண்டார் ஆகையால் அவருடைய நரக ஆயுளின் ஆபாதா காலம் 30 வருடங்கள் ஆகும். அதாவது பத்யமான் ஆயுளுக்கு ஆபாதாகாலம் அந்த உயிர் புதியஆயுள் கட்டிக்கொண்ட சமயத்திலிருந்து மீதம் உள்ள புஜ்ஜமான் ஆயுளுக்கு சமமாகும்.

விக்கிரஹ கதியின் முதல் சமயத்திலேயே அவருடைய நரக ஆயுளின் உதயம் தொடங்கி விடுகிறது. மரணத்திற்கு முன் யாரை-எந்த உயிரை மனிதர் என்று கூறினோமோ அந்த உயிரை இப்போது மரணமடைந்த அடுத்த சமயத்திலிருந்தே நாரகி என்ற பெயரில் அடையாளம் காணப்படுகிறார். நரகாயுளின் உதயம் 10,000 ஆண்டுகள்வரை இடைவிடாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

உயிர் அடுத்த ஒரு பவத்திற்கான-அடுத்த ஒரு பிறவிக்கான ஆயுளையே பந்தம் செய்து கொள்கிறது என்ற விதிமுறை இருக்கிறது. அடுத்த பிறவியில் அதற்கு அடுத்த பிறவிக்கான ஆயுளை பந்தித்து கொள்ளும். ஏழு கர்மாங்களின் பந்தம் என்னவோ இடைவிடாது நிகழ்கிறது ஆனால் ஆயுள் கர்ம பந்தம் மட்டுமே சில நேரங்களில் மட்டும்தான் நிகழ்கிறது என்று முன்னரே சர்ச்சை செய்திருக்கிறோம். அந்த பந்தம் எந்தெந்த கதி உயிர்களுக்கு எந்தெந்த சமயத்தில் நிகழ்கிறது என்பதை உங்களுக்கு இப்போது உதாரணம் மூலம் புரியும்படி சொல்கிறேன்.

நிகழ்கால அதாவது புஜ்யமான் ஆயுளை மூன்று பாகமாகப் பிரியுங்கள். அதில் இரண்டு பாக ஆயுள் கழிந்த பிறகு அதாவது மூன்றாம் பாகம் மீதம் இருக்கும்போது, அந்த மூன்றாம் பாக ஆரம்பத்தின் முதல் அந்தர்முகூர்த்த காலத்தில் புதிய ஆயுள் கட்டிக்கொள்ள சாத்திய காலமாக இருக்கிறது. இந்த காலத்தை **அபகர்ஷ காலம்** என்று சொல்கின்றனர். அதாவது இந்த முதல் அபகர்ஷ காலத்தில் புதிய ஆயுளை கட்டிக்கொள்ளவில்லை என்றால் மீதமுள்ள ஆயுளை மீண்டும் மூன்று பாகமாக செய்து அதில் இரண்டு பாகம் கழிந்து மூன்றாபாகத்தின் முதல் அந்தர்முகூர்த்த காலம் வரும் அல்லவா, அது இரண்டாவது அபகர்ஷ காலமாகும் அதாவது புதிய ஆயுளை காட்டிக்கொள்ள சாத்திய காலமாகும். அந்த சமயத்தில் கூட புதிய ஆயுள் கட்டவில்லை என்றால் அதேபோலவே அப்போது மீதமுள்ள ஆயுளில் மூன்றில் இரண்டு பாகம் கழிந்து வரும் முதல் அந்தர்முகூர்தத்தில் மூன்றாவது அபகர்ஷ காலத்தில் கட்டிக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. இதுபோல அதிகபட்சம் எட்டு அபகர்ஷ காலம் அதாவது எட்டு வாய்ப்புகள் அடுத்த பவ ஆயுளை கட்டிக்கொள்ள உகந்த காலமாக இருக்கின்றன. இந்த எட்டு வாய்ப்புகளிலும் புதிய ஆயுள் கட்டவில்லை என்றால் மரணத்திற்கு முன் அந்தர்முகூர்த்த காலத்தில் புதிய ஆயுள் கட்டு நிகழ்ந்தே தீரும்.

ஆயுள் கட்டுதல் என்றால் அடுத்து எந்த பவத்திற்கு-எந்த பிறவி எடுக்க இந்த உயிர் செல்லத் தகுதியோ அந்த பிறவிக்கான ஆயுள் கர்ம பரமாணுக்கள் வந்து உயிருடன் பந்தமாவதாகும். ஒரு அந்தர்முகூர்த்த காலத்திலேயே அடுத்த பிறவியில் வாழவேண்டிய எல்லா ஆயுஷ்ய கர்மத்திற்கு தேவையான பரமாணுக்களும் உயிர் பிரதேசத்தில் பந்த நிலையில் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. சில உயிர்களுக்கு ஒரு அபகர்ஷ காலத்தில் ஆயுள் பந்தம் நிகழ்கிறது, சிலருக்கு இரண்டு அபகர்ஷ காலங்களில், சிலருக்கு மூன்று அபகர்ஷ

காலங்களில், அல்லது நான்கு, ஐந்து, ஆறு, ஏழு மற்றும் எட்டு அபகர்ஷ காலங்களிலும் ஆயுள் பந்தம் கட்ட முடியும். ஆனால் இது போன்ற அதிக வாய்ப்புகளில் ஆயுள் பந்திக்கும் உயிர்களின் எண்ணிக்கை வாய்ப்புகளின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக குறைந்து கொண்டே போகிறது. இப்போது நாம் 6,561 வருட ஆயுள் உடைய கர்மபூமி மனிதருக்கு ஆயுள் கட்டிக்கொள்ள தகுதியான எட்டு அபகர்ஷ காலங்கள் எப்போது வருகின்றன என்று பார்க்கலாம்.

1-வது அபகர்ஷ காலம் 6561-ல் இரண்டு பாகம் அதாவது 4374 வருடங்கள் கழிந்த பிறகு 2187 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது அந்த சமய முதல் அந்தர்முகூர்த்தத்தில் வருகிறது.
2-வது அபகர்ஷ காலம் 729 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.
3-வது அபகர்ஷ காலம் 243 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.
4-வது அபகர்ஷ காலம் 81 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.
5-வது அபகர்ஷ காலம் 27 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.
6-வது அபகர்ஷ காலம் 9 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.
7-வது அபகர்ஷ காலம் 3 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.
8-வது அபகர்ஷ காலம் 1 வருட ஆயுள் மீதம் இருக்கும்போது வருகிறது.

கர்ம பூமி மனிதர் மற்றும் விலங்குகளுக்கு முழு ஆயுளின் மூன்றாம் பாகத்தில் முதல் அந்தர்முகூர்த்தத்தில் புதிய பவ ஆயுள் கட்டுகிறது. ஆனால் போக பூமி மனிதர் மற்றும் விலங்குகளுக்கு ஆயுளின் கடைசி 9 மாதம் (சம்யக்ஞானசந்திரிகா கிரந்தப்படி) 6 மாதம் (மற்ற கிரந்தங்களின் படி) மீதம் இருக்கும்போதிலிருந்து [2/3 பாக விதிமுறைப்படி] 8 அபகர்ஷ காலத்தில் புதிய ஆயுள் கட்டுகிறது. தேவ மற்றும் நாரகி உயிர்களுக்கு ஆயுள் 6 மாதம் காலமே மீதம் இருக்கும்போதிலிருந்து இதே விதிமுறைப்படி ஆயுள் பந்தம் நிகழ்கிறது.

இந்த காரணத்தால் பலர் ஒருவருக்கொருவர் **பரிணாமத்தை-உணர்வை சரியாக வைத்துக்கொள்!** என்று உபதேசம் செய்கின்றனர். ஆயுள் பந்தம் எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்ற கவலை யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை! நல்ல ஆயுளை காட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு விஷயத்தில் கொஞ்சம் விழிப்போடு இருக்கும் பலருக்கு, மூடநம்பிக்கை மற்றும் துவர்ப்பு உணர்வுகளின்-கஷாயங்களின் பக்கம் கவனம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயுள் சுக துக்கத்திற்கு காரணமில்லை; ஆனால் ஆசை, வெகுளி, மயக்கமே-மோஹ, இராக, த்வேஷமே துக்கத்திற்கு மூல காரணமாகும். ஸ்வயம்-நான் துக்க வடிவமாக இருக்கிறேன், அந்த காரணத்தால் எட்டு கர்மங்களும் என்னில் பந்தமாகின்றன மற்றும் இந்த பந்த-உதய சக்கரம் அனாதி காலம் முதல் அனந்த காலம் வரை சுற்றிக் கொண்டுதான் இருக்கிறது!

இப்போது மற்ற கர்மத்தின் ஸ்திதி எவ்வளவு இருக்கும்போது எவ்வளவு ஆபாதாகாலம் இருக்கும் என்பது பற்றி சர்ச்சை செய்யலாம். இதற்கு ஆதாரம், அடிப்படை அல்லது விதிமுறை: ஒரு கோடாகோடி கடல் ஸ்திதி இருக்கும் கர்மத்திற்கு நூறு வருடங்கள் ஆபாதா காலமாகும். கோடாகோடி என்பதன் அர்த்தம் கோடியை கோடியால் பெருக்க வரும் எண்ணிக்கையாகும். ஒரு கோடியில் 1 என்ற எண்ணுக்கு பிறகு 7 பூஜ்ஜியங்கள் இருக்கின்றன, ஒரு கோடாகோடியில் 1 என்ற எண்ணுக்கு பிறகு 14 பூஜ்ஜியங்கள் இருக்கின்றன. இத்தனை கடற்காலம் என்பதன் அர்த்தம் ஒரு 1 கடற்கால வருடம், 2 கடற்கால வருடம், 3 கடற்கால வருடம் .... இவ்வாறு கோடாகோடி கடல் வருடம் எவ்வளவோ அவ்வளவு கர்மத்தின் ஸ்திதி என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயுள் தவிர

மற்ற எல்லா கர்மங்களில் ஆபாதா காலம் இவ்வாறே கணக்கிடப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

தீவிர மூடநம்பிக்கையின் காரணத்தால் மிக அதிக பட்ச ஸ்திதியுடைய மித்தியாத்துவ அதாவது தர்சனமோஹனீய கர்ம பந்தம் கட்டுகிறது, இதன் உத்கிருஷ்ட-அதிக பட்ச ஸ்திதி 70 கோடாகோடி கடற்காலமாகும். 7,000 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்த கர்மத்தின் உதய காலம் துவங்குகிறது. அதாவது இதன் ஆபாதா காலம் 7,000 ஆண்டுகள். இதற்குப்பிறகு 70 கோடாகோடி கடற்காலம் முடியும்வரை இந்த ஒரு சமய நேரத்தில் பந்தமான கர்மத்தின் உதயம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டேயிருக்கும். ஒரு சமய மூடநம்பிக்கை உணர்வின் காரணத்தால் இவ்வளவு கடற்காலங்கள் பலனை அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்றால் அனேக சமயங்களில் செய்யும் மூடநம்பிக்கையின் பலன் எப்படியிருக்கும்? என்பதை கொஞ்சம் நீங்கள் கற்பனை செய்து பாருங்கள்!

கடல்-சாகர் என்பது எப்படி அளக்கப்படுகிறது என்று தெரிந்து கொள்ள தயாராக இருக்கிறீர்களா? உங்களுடைய கணிணியை-கம்பயூடரை கொண்டுவந்தால் கூட இந்த கணிதத்தை புரிந்து கொள்ள முடியாது. அதற்காகப் பயப்பட வேண்டியதில்லை, அதை ஒரு சுலபமான நீங்கள் பள்ளியில் கற்ற கணக்கு மூலமே புரிய வைக்கிறேன். [முதலில் யோஜனை என்ற அளவு எவ்வளவு என்பதை தெரிந்து கொள்ளலாம், வாருங்கள்! அனந்தானந்த பரமாணுக்கள் ஒரே நேர்கோட்டில் ஒன்றின் பக்கத்தில் ஒன்று என்ற நிலையில் சேர்ந்த நீளத்தை ஒரு அவசன்னாஸன்னை என்று சொல்கின்றனர். எட்டு அவசன்னாஸன்னை கொண்டது ஒரு சன்னாஸன்னை. எட்டு சன்னாஸன்னை கொண்டது ஒரு திரடரேணு. எட்டு திரடரேணு ஒரு திரசரேணு. எட்டு திரசரேணு ஒரு ரதரேணு. எட்டு ரதரேணு ஒரு உத்தம போகபூமி மனிதரின் மயிர் நுனியின் அளவு. எட்டு உத்தம போகபூமி மனிதரின் மயிர் நுனி அளவு ஒரு மத்திய போகபூமி மனிதரின் மயிர்நுனி அளவு. எட்டு மத்திய போகபூமி மனிதரின் மயிர்நுனி அளவு ஒரு ஜகன்ய போகபூமி மனிதரின் மயிர்நுனி அளவு. எட்டு ஜகன்ய போகபூமி மனிதரின் மயிர்நுனி அளவு ஒரு கர்மபூமி மனிதரின் மயிர்நுனி அளவு. எட்டு கர்மபூமி மனிதரின் மயிர்நுனி அளவு ஒரு லீக். எட்டு லீக் ஒரு ஜு. எட்டு ஜு ஒரு யவம். எட்டு யவம் ஒரு உத்தேச அங்குலம்.

அங்குலம் உத்தேச அங்குலம், பிரமாண அங்குலம், ஆத்மாங்குலம் என மூன்றுவகை. உத்தேச அங்குலத்தால் தேவர், நரகர், மனிதர், விலங்குகளின் உடல் உயரம், தேவர்களின் வாழிடங்கள்(நிவாசம்), நகரம், இயற்கை(அக்ருத்திம) ஜினாலயங்களில் உள்ள பிம்பங்களின் உயரம் முதலியன அளக்கப்படுகின்றன. 500 உத்தேச அங்குலம் கொண்டது ஒரு பிரமாண அங்குலம். இதனால் தீவு, கடல், குலமலைகள், வேதிகை, நதி, நீர்நிலைகள், பரதம் முதலான ஷேத்திரங்கள் அளக்கப்படுகின்றன. அவசர்ப்பிணி காலத்து முதல் சக்கரவர்த்தி பரதனின் விரல் அகலம் (finger width) மற்றும் பரத ஹைராவத ஷேத்திரங்களில் அந்தந்த காலத்தில் தோன்றும் மனிதர்களின் விரல் அகலம் ஆத்மாங்குலமாகும். இந்த அங்குலத்தால் கலசம், கண்ணாடி, பேரி, படுக்கை, வண்டி, ஏர், உலக்கை, அம்பு, சிம்மாசனம், குடை, மனிதர் வாழிடம், நகரம், உபவனம் முதலியன அந்தந்த கால மக்களால் அளிக்கப்படுகின்றன.

யோஜனையை புகை என்று தமிழில் குறிப்பிடுகின்றனர். 6 உத்தேச அங்குலம் 1 பாதம். 2 பாதம் 1 ஜான். 2 ஜான் 1 முழம். 2 முழம் 1 கஜம். 2 கஜம் ஒரு வில். 2000 வில் ஒரு குரோசம்(கோஸ்) . 4 குரோசம் 1 வியவஹார-லகு யோஜனை. 500 வியவஹார யோஜனை 1 மஹா யோஜனை. உத்தேச அங்குலத்தால் வியவஹார யோஜனையும், பிரமாண

அங்குலத்தால் பிரமாண-மஹா யோஜனையும் கணக்கிடப்படுகிறது. 500 வியவஹார யோஜனை-2000 குரோசம் ஒரு பிரமாண அதாவது மஹா யோஜனை.]

ஒரு யோஜனை **about 9.09 miles** விட்டம் (diameter) ஒரு யோஜனை ஆழம் கொண்ட ஒரு வட்டமான குழி அதாவது பள்ளம் தயார் செய்யுங்கள். இதை உங்கள் கற்பனையில் செய்யுங்கள், என்ன புரிந்ததா! இந்த பள்ளத்தை-தொட்டியை மென்மையான மேலும் துண்டாக்க முடியாத மயிர்முனைகளால் (ரோமகண்டத்தால்) நிரப்ப வேண்டும். நிரப்புதல் கோபுரமாக தானியம் அளப்பது போல் அல்ல, பூமி அளவில் தட்டையாக நிரப்ப வேண்டும். மயிர்முனைத் துண்டு-ரோமகண்டம் என்பதை பற்றியும் தெரிந்து கொள்ளுங்கள். உத்தம போகபூமியில் பிறந்த 7 நாட்களுக்கும் குறைவான ஆட்டுக்குட்டியின் மேலும் துண்டு பண்ண முடியாத மயிரின் முனைகளை ரோமகண்டம் என்று சொல்கின்றனர். போக பூமி உயிரின் மயிர்முனை கர்மபூமி உயிரின் மயிர்முனையில் 4096-ல் ஒரு பாகம் எவ்வளவோ அவ்வளவேயாகும்.

அந்த பள்ளத்தில் எவ்வளவு மயிர்முனை துண்டுகளால்-ரோமகண்டங்களால் நிரப்ப முடியும் என்ற கணக்கு கூட இருக்கிறது. அது ஒரு 45 எண்கள் கொண்ட ஒரு பெரிய எண்ணிக்கையாக இருக்கிறது என்பதோடு விட்டுவிடுகிறேன். ஒவ்வொரு 100 வருடங்களுக்கு ஒருமுறை ஒரு மயிர்த்துண்டை அந்த பள்ளத்திலிருந்து வேளியே எடுங்கள். அந்த குழி முழுவதும் காலியாகும்வரை அவ்வாறே எடுக்க வேண்டும். நிரம்பிய குழி முழுமையாக காலியாக எடுத்துக்கொண்ட கால அளவை-அத்தனை சமயங்களை ஆண்டுகளாகக் கணக்கிடப்பட்டு அதை ஒரு வியவஹார பல்லியம் என்று சொல்கின்றனர். பல்லியம் என்றால் குழி அல்லது பள்ளம் என்று பொருள். இந்த உவமையை வைத்து பல்லியம் என்ற காலஅளவு கணக்கிடப்படுகிறது. ஆகையால்தான் பல்லியம், கடல் முதலானவை கால அளவைகளாக (measuring units-களாக) ஆகமங்களில் சொல்லப்படுகின்றன.

வியவஹார பல்லிய ரோமகண்டங்களின் எண்ணிக்கையை அசங்க்யாதகோடி வருடங்களின் சமயங்களால் பெருக்க வரும் எண்ணிக்கை உத்தார பல்லிய ரோமகண்டங்களின் எண்ணிக்கையாகும். மேலும் இதை அசங்க்யாத கோடி வருடங்களின் சமயங்களால் பெருக்க வரும் எண்ணிக்கை அத்தா பல்லிய ரோமகண்டங்களின் எண்ணிக்கையாகும். ஒவ்வொரு பல்லியத்தையும் 10 கோடாகோடியால் பெருக்க வரும் தொகை அந்தந்த சாகரின்-கடற்காலத்தின் அளவாகும். அதாவது அசங்க்யாத வியவஹார பல்லியம் = 1 உத்தார பல்லியம். அசங்யாத உத்தார பல்லியம் = 1 அத்தா பல்லியம். 10 கோடாகோடி வியவஹார பல்லியம் = 1 வியவஹார கடற்காலம். 10 கோடாகோடி உத்தார பல்லியம் = 1 உத்தார கடற்காலம். 10 கோடாகோடி அத்தா பல்லியம் = 1 ஒரு அத்தா கடற்காலம்.

கர்மங்களின் ஸ்திதி அத்தா கடற்காலத்தில்-அத்தா சாகரில் அளவிடப்படுகிறது. சாகர்-கடல் என்பதன் பொருள் லவண சமுத்திரத்தில் உள்ள நீர் துளிகளின் எண்ணிக்கையை வைத்து இந்த எண்ணிக்கையை ஆகமங்களில் நமக்கு புரிய வைக்கின்றனர். தேவர் நகர்களின் ஆயுள் கடற்காலங்களில் இருக்கின்றன. அதில் அதிகபட்ச ஆயுள் 33 கடற்காலமாகும். மனிதர் மற்றும் விலங்குகளின் அதிகபட்ச ஆயுள் போகபூமியில் வாழ்பவர்களுக்கு 3 பல்லியமாக இருக்கிறது. ஆனால் ஐந்தாம்கால மனிதர்களுடைய அதிகபட்ச ஆயுள் 120 வருடங்களே! இது எவ்வளவு மிகக்குறைந்ததாக-மிக அல்பமானதாக இருக்கிறது என்று பாருங்கள்!

இதன் ஒவ்வொரு சமயமும் மிகவும் மதிப்பு வாய்ந்ததாகும். அனாதி காலமாக இந்த உயிர் அனந்த பவங்கள்-பல பிறவிகள் எடுத்திருக்கிறது, ஆனால் இதுவரை தன்னை தெரிந்து கொள்ளும் காரியத்தை மட்டும் செய்யவில்லை, அதை அப்படியே விட்டு வைத்திருக்கிறது. அந்த காரியத்தை இந்த பவத்திலாவது செய்ய வேண்டும், இல்லையென்றால் மேலும் அனந்த காலம்வரை முன்போலவே பிறவி சுழற்சியில் அலைய வேண்டியிருக்கும், நான்கு கதிகளில் சுற்றவர வேண்டியிருக்கும். இந்த பிறவியில் புண்ணியம் செய்து அடுத்த பிறவியில் சொர்க்கத்தில் தேவ பிறவி எடுத்து தீர்த்தங்கரரின் சமவசரணம் சென்று தர்மோபதேசம் கேட்பேன் என்று சொல்லிக்கொண்டு இருப்பவர்களைப் பார்த்து ஆச்சர்யமும் சிரிப்பும்தான் வருகிறது. ஏனெனில் அப்படிப்பட்வர்கள் நிகழ்காலத்தில் அவர்களுக்கு கிடைத்த அர்ப்பமான நிலையற்ற பொருள்களின் மீதிருந்தே தன்னுடையது கவனத்தை விடமுடியாமல் அதிலேயே முழு நேரத்தையும் செலவு செய்து கொண்டிருப்பதிலிருந்து விலகிக் கொஞ்ச நேரமாவது சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்யும் புருஷார்தத்தை-முயற்சியை மேற்கொள்ள முடியவில்லை என்றால், அவர்கள் என்ன சொர்க்கத்தில் கிடைக்கும் ஐஸ்வர்யகளையும், போகங்களையும் அனுபவிப்பதை விட்டு விட்டு சமவசரணம் சென்று அற உபதேசம் கேட்ட வேண்டும் என்ற எண்ணம் வரும் என்றா நினைக்கிறீர்கள்? சொல்லுங்கள்! சிலர் விதேக ஷேத்திரத்தில் பிறவி எடுக்க கனவு காண்கின்றனர். யாருக்கு அடுத்த ஒரு பவத்தின்மேல் ஆசை இருக்கிறதோ அவர்களுடைய அபிப்ராயத்தில் அனந்த பவங்கள் எடுக்க வேண்டும் என்ற இச்சை மறைந்திருக்கிறது.

இந்த பஞ்சம காலத்தில் பரத ஷேத்ரத்தில் இருக்கும் உயிர் சம்யக்த்துவத்துடன் மரணமடைந்து விதேக ஷேத்திரத்தில் பிறக்க முடியாது. சம்யக்த்துவமடைந்த பிறகு ஆயுள் பந்தமானால் ஸ்வர்கத்தில் தேவராகவே பிறப்பார்கள். சம்யக்த்துவம் அடையும் முன் ஆயுள் கட்டிக் கொண்டால் போகபூமி மனிதர் அல்லது விலங்கு அல்லது முதல் நரக நாரகியாகப் பிறப்பார்கள். மூடநம்பிக்கையுடன் இறந்து மனித ஆயுள் கட்டியிருந்தால் விதேக ஷேத்திரத்தில் பிறவி எடுக்க முடியும், ஆனால் அந்த வாய்ப்பு கூட மிக துர்லபமாக (1,000 வருடங்களுக்கு ஒரு முறை ஒரு கர்ம பூமி மனிதருக்கு என்ற விதிப்படி) இருக்கிறது. இதன் பொருள் விதேகத்தில் பிறவி எடுக்க விருப்பம் கொள்ளும் உயிர் இந்த பவத்தில் மித்யாத்துவத்திலேயே இருக்க விரும்புகிறது என்பது தான்.

இந்த உயிர் அனாதி காலத்திலிருந்து இன்றுவரை அனந்த முறை தீர்த்தங்கரரின் சமவசரணம் சென்று வந்திருக்கிறது, அனந்தமுறை வெளியில் முனி வேடத்தை-திரவ்ய லிங்கி முனி வேடத்தை ஏற்று சம்யக்துவம் இல்லாததால் இன்றுவரை பிறவிகளில் சுற்றுவதை செய்து கொண்டு வந்திருக்கிறது. சம்யக்த்துவம் அடைய எல்லா சாதனமும்-மனமுடைய ஐந்து இந்திரியப் பிறவி, ஞானத்தின் வெளிப்பாடு, கஷாங்களின் மந்த நிலை, ஜினேந்திரனால் கூறப்பட்ட உண்மையான உபதேசம், இந்த உபதேசத்தின் மர்மங்களை எடுத்துக்கூறும் ஞானிகளுடன் தொடர்பு ஆகிய எல்லாம் கிடைத்த பிறகும்கூட, யார் எதிர்காலத்தில் செய்வேன் என்று சாக்குச் சொல்கிறார்களோ, அப்படிப்பட்டவர்களுக்கு அந்த எதிர்காலம் ஒருபோதும் வருவதில்லை. என்றென்றும் எப்போதும் இந்த காரியத்தை அடுத்த பவத்தில் செய்வதற்காகச் சொல்லிக்கொண்டு கிடைத்த இந்த அரிய வாய்ப்பை நழுவ விட்டு விடுகின்றனர். இவ்வளவு நேரம் கடல் என்பதின் அளவு பற்றி தெரிந்து கொள்ளுவதில் நாம் எங்கெங்கோ சென்றுவிட்டோம், இல்லையா? ஆனால் இந்த பவக்கடலில் மூழ்கிவிடாமல் அதன் கரையை இந்த பவத்திலே அடைய வேண்டும் என்ற திடமான தீர்மானம் செய்வோம். பிற விஷயங்களை அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

- உங்கள் அம்மா.

கடிதம்- 4 ஓம் நம: சித்தேப்ய: 29-7-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கடல் என்ற காலத்தின் அளவையையும் கர்மம் பற்றிய கணிதத்தையும் படித்து நீங்கள் களைப்படைந்து விடவில்லை அல்லவா? யார் தினமும் கோடிக்கணக்கில் வர்த்தகம் செய்கிறார்களோ அவர்களுக்கு எவ்வளவு உற்சாகம் இருக்கிறது என்று பாருங்கள், அதைப்பற்றி கேட்பவர்களும்கூட அதிக உற்சாகமாக ஆகிவிடுகிறார்கள்! உங்களுக்கு கோடி முதலான அதிக எண்ணிக்கைகளே இவ்வளவு வசீகரமாக இருக்குமானால், ஜினாகமப்பயிற்சியை அவசியம் செய்யுங்கள். இங்கு எல்லா பொருள்களும் அசங்க்யாதம், அனந்தம், பல்லியம், கடல் முதலான மிகமிகப் பெரிய அளவைகளாலேயே அளக்கப்படுகின்றன. இங்கே எல்லையற்ற எண்ணிக்கைகளிலேயே எல்லா வியாபாரமும் நிகழ்கிறது அதாவது தத்துவ விளக்கங்கள் சொல்லப்படுகின்றன.

இங்கே முக்கியமான விஷயம் என்னவென்றால் **எனக்குப் புரியவில்லை** என்ற எண்ணத்தை-என்ற முடிவை மட்டும் உங்கள் மனதில் கொண்டுவராதீர்கள். **எனக்குப் புரியவில்லை** என்ற விஷயம் யாருடைய புரிதலில் வந்தது? உங்களுக்கா அல்லது உங்கள் அருகில் உள்ளவர்களுக்கா? இது யாருக்கு புரியவில்லை என்று தெரிந்ததோ அது என்னவோ ஸ்வயம் உங்களுக்குத்தானே தெரிந்தது. இதேபோல ஆகமஅறிவு கூட உங்களுக்கு அவசியம் தெரிய வரும், ஏன் தெரிய வராது என்று நினைக்கிறீர்கள், ஏன் புரியாது என்று நினைக்கிறீர்கள்?

நான் என்னவோ கேவலஞான சக்தி கொண்ட முழுமையான-பரிபூரணமான அறிவின் கனபிண்டமாவேன், மேலும் அந்த சக்தியிலிருந்து சாதிஅனந்த காலம்வரை கேவலஞான பர்யாயம் இடைவிடாது வெளிவரும், ஆனாலும்கூட நான் துருவமாக எப்படி இருக்கிறோனோ அப்படியே அனாதிஅனந்த காலம் நிலையாக இருக்கிறேன், இருப்பேன். என்ற விஷயத்தை மட்டும் தெரிந்து கொண்டீர்களானால், அதோடு இப்போது வெளிப்படும் அல்ப சுருத ஞானத்தை ஒப்பிட்டு ஏன் நீங்கள் கவலை கொள்ள வேண்டும்? உங்களுடைய இயல்பையே நீங்கள் மறக்க வேண்டாம்! சுருத ஞானத்தின் இந்த பர்யாயம்கூட உங்களுடைய ஞான ஸ்வபாவ சக்தியிலிருந்தே வெளிப்படுகிறது, சாஸ்திரம் படிப்பதிலிருந்தோ அல்லது சப்தத்திலிருந்தோ (திவ்யத்தொனியிலிருந்தோ) வெளிப்படவில்லை. ஏனெனில் எந்த பர்யாயம் எந்த திரவியத்தினுடையதோ, அந்த திரவியமே அதன் கர்த்தாவாகும், வேறு யாரோ, எதுவோ அதன் கர்த்தா இல்லை.

கர்மத்தின் பரமாணுக்கள் எவ்வளவு எண்ணிக்கையில் வருகின்றன மற்றும் எந்த முறையில் எப்படி உதயத்திற்கு வருகின்றன என்பனவெல்லாம் மிகவும் சுவாரசியமான ஒரு விஷயமாகும். கர்மத்தில் அதன் நிஷேக அமைப்பு எவ்வாறு நிகழ்கிறதோ அதேபோல உடலில் அதாவது நோகர்மத்தில் கூட நிஷேக அமைப்பு நிகழ்கிறது. உயிர் மரணமடைந்து வேறுகதி எடுக்கச் செல்லும்போது அதாவது விக்கிரஹ கதியில் செல்லும் சமயத்தில், அந்த உயிர் தன் கார்மண மற்றும் தேஜச உடல்களை அதனுடனே எடுத்துச் செல்கிறது என்பது நமக்கு தெரிந்த ஒரு விஷயம்தான். விக்கிரஹ கதியின் காலம் குறைந்த பட்சம் ஒரு சமயம், அதிக பட்சம் நான்கு சமயமாகும். அதில் **ருஜு கதியில்** அதாவது திருப்பம் எதுவும் இல்லாமல் செல்லும் உயிர், அந்த முதல் சமயத்திலிருந்தே

நோகர்ம ஆஹாரத்தை கிரஹணம் செய்கிறது அதாவது ஈர்த்துக் கொள்கிறது. அதாவது அதன் புது பிறவியின் உடல் சம்பந்தமான அனந்த பரமாணுக்களை தன் ஆன்ம பிரதேசத்துடன் ஈர்த்துக்கொள்ளத் துவங்கி விடுகிறது. **பாணிமுக்தா கதியில்** அதாவது ஒரு திருப்பத்துடன் செல்லும் உயிர் முதல் சமயத்தில் அனாஹாரக்காக அதாவது நோகர்ம ஆஹாரத்தை ஈர்காமலிருந்து, இரண்டாவது சமயத்திலிருந்து நோகர்ம ஆஹாரத்தை ஏற்றுக்கொள்கிறது. **லாங்கலிகா கதியில்** அதாவது இரண்டு திருப்பத்துடன் செல்லும் உயிர் இரண்டு சமயங்கள் அனாஹாரக்காக இருந்து மூன்றாவது சமயத்திலிருந்து நோகர்ம ஆஹாரத்தை ஏற்கிறது. **கோமூத்ரிகா கதியில்** அதாவது மூன்று திருப்பங்களுடன் செல்லும் உயிர் மூன்று சமயங்கள் அனாஹாரக்காக இருந்து நான்காவது சமயத்திலிருந்து நோகர்ம ஆஹாரத்தை ஏற்கிறது.

உயிர் இந்த நோகர்ம வர்கணைகளை ஈர்த்து அவைகளை அதன் புதிய பிறவிக்கான உடல், மனம், பேச்சு, ஸ்வாசோச்சுவாசம், முதலிய வடிவங்களில் மாற்றியமைக்கிறது. வர்க்கணைகள் ஐந்து விதமாக இருக்கின்றன என்பது முன்னரே உங்களுக்கு தெரிந்த விஷயம்தான், அவைகள் எவை என்ற ஞாபகமிருக்கிறதா? அவைகள் **1.ஆஹார வர்கணை, 2.தேஜஸ வர்கணை, 3.பாஷா வர்கணை, 4.மனோ வர்கணை மற்றும் 5.கார்மண வர்கணை** என்பனவாகும். புத்கலம் மொத்தமும் 23 வர்கணை வடிவங்களாக இருக்கின்றன. ஆனால் மேலே கூறப்பட்ட ஐந்து வர்கணைகளை மட்டுமே உயிர் ஏற்றுக்கொள்ளுகிறது. அவைகளில் கார்மண வர்கணைகளிலிருந்து கர்மங்கள் தயாராகின்றன. மற்ற நான்கு வர்கணைகளிலிருந்து உடல், மனம், ஸ்வாசோச்சுவாசம், தேஜஸ உடல் முதலியன தயாராகின்றன. இவைகளை நோகர்ம வர்கணை என்று சொல்கின்றனர்.

இப்போது நாம் வர்கணைகளை பற்றி சுருக்கமாக சர்ச்சை செய்யலாம். சக்தியின் மேலும் பிரிக்க முடியாத மிகச் சிறிய பாகத்தை **அவிபாகப் பிரதிசேத் (**unit of measurement of power) என்று சொல்கின்றனர். ஒவ்வொரு பரமாணுவும் அதன் சக்தி அதாவது அனுபாகத்துடன் இருக்கிறது. இதன் பொருள் அவிபாகப் பிரதிசேத்-துடன் இருக்கிறது. ஆகையால் பரமாணுவை "வர்கம்" என்று சொல்ல முடியும் ஏனெனில் வர்கம் என்பதன் பரிபாஷை-வரையறை-சொற்பொருள் விளக்கம் **அவிபாகப் பிரதிசேத்-களின் சமூகத்தை வர்கம் என்று சொல்கின்றனர்** என்பதாகும். எந்தெந்த பரமாணுக்களில் சமமான அவிபாக பிரதிசேத் இருக்கிறதோ அந்த பரமாணுக்களை தொகுப்பை-புத்கலங்களின் கூட்டத்தை-புத்கலத்தாலான மொத்தையை-பிண்டத்தை வர்க்கணை என்று சொல்கின்றனர். இதன் பொருள் குறிப்பிட்ட வர்கணைகளின் எல்லா பரமாணுக்களிலும் சக்தியின் அம்சமும் சமமாக இருக்கிறது என்பதாம்.

எந்த வர்கணை ஔதாரிகம் (மனித மற்றும் விலங்கு உடல் அமைய காரணமான பிண்டம்), வைக்ரீயிகம் (தேவ மற்றும் நாரகி உடல் அமைய காரணமான பிண்டம்), மற்றும் ஆஹாரகம் (ஆஹாரக ரித்திதாரி ஆறாவது குணஸ்தானத்தில் இருக்கும் முனி தீர்த்த வந்தனை அல்லது சமவசரணம் செல்ல அந்தர்முஹூர்த்த நேரம்வரை மட்டுமே இருக்கும் மற்றுமொரு உடல் அமைய காரணமான பிண்டம்) ஆகிய மூன்று உடல் வடிவில் மாற்றமடையும் தகுதிகொண்ட புத்கல பிண்டங்களை **ஆஹார வர்கணை** என்று சொல்கின்றனர். புத்கல பிண்டம் உடல் வடிவ மாறுகை அடைய நிமித்தமாக இருக்கும் உயிரின் இந்த சக்தியை **பர்யாப்தி** என்று சொல்கின்றனர். பர்யாப்தி என்பது ஒரு சுதந்திரமான விஷயமாதலால் பிறகு அதைப்பற்றி விரிவாக சர்ச்சை செய்யலாம்.

எந்த வர்கணை தேஜஸ உடல் வடிவில் மாற்றமடைகிதோ அவைகளை **தேஜஸ வர்கணை** என்று சொல்கின்றனர். தேஜச உடல் ஔதாரிகம் முதலான உடல்களில்

காந்தி-பிரகாசத்தை தோற்றுவிப்பதில் நிமித்தமாக இருக்கிறது. எந்த வர்கணை சப்த வடிவில் மாற்றமடைகிறதோ, அவைகளை **பாஷா வர்கணை** என்று சொல்கின்றனர். எந்த வர்க்கணைகளால் திரவ்விய மனம் அமைகிறதோ அவைகளை **மனோ வர்கணை** என்று சொல்கின்றனர். இந்த நான்கு வர்கணைகளையும் **நோகர்ம வர்கணை** என்றும் அவைகளால் அமையும் உடல்களை **நோகர்ம உடல்** என்று சொல்கின்றனர். எவ்வாறு யோகம் மூலம் அதாவது ஆத்மாவில் நிகழும் பரிஸ்பந்தனத்தால் அதாவது ஆத்ம பிரதேசத்தில் நிகழும் அதிர்வுகளால் உயிர் கார்மண வர்கணைகளை ஈர்த்துக் கொள்கிறதோ அதேபோலவே உயிர் பிரதேசத்தில் நிகழும் யோகத்தின் மூலமே உயிர் அதன் உடல் சம்பந்தமான நோகர்ம வர்கணைகளைக்கூட ஈர்த்துக் கொள்கிறது-இதற்கு நாம கர்மத்தின் உதயம் நிமித்த வடிவில் இருக்கிறது.

இப்போது பிறந்த குழந்தை மிகச் சிறியதாக இருக்கிறது ஆனால் வருடம் முழுவதும் வேகமாக வளர்ந்து பெரியவனாகிறது. நீ உன்னுடைய குழந்தைக்கு உணவு ஊட்டிதான் அது வளர்த்து பெரியவனானது என்றுதானே நினைக்கிறாய். உணவு உண்பதன் காரணத்தால் உடல் ஆரோக்யமாக வளர்கிறது, உணவு உண்ணாமல் யாரும் உயிர்வாழ முடியாது என்ற உன்னுடைய எண்ணம் தவறாகும்.

விக்கிரஹ கதியின் கடைசி சமயத்திலிருந்து ஒவ்வொரு சமயமும் இந்த உயிர் அனந்த நோகர்ம புத்கல வர்கணைகளை கிரஹித்துக்கொண்டு இருக்கிறது. கடைசி சமயம்வரை அதாவது மரணமடையும் அந்த சமயம்வரை இந்த நோகர்ம வர்கணைகளின் கிரஹணம்-நோகர்ம உணவை ஏற்றல் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. உணவு, தண்ணீர் இவைகளை உண்ணாமல் அனேக வருடங்கள்வரை உயிர் வாழ முடியும்! என்பதை உங்களால் நம்பமுடியவில்லை அல்லவா? கொஞ்சம் யோசித்துப்பாருங்கள்! அரஹந்த பகவான் உணவு உண்பதில்லை, தண்ணீர் குடிப்பதில்லை, அதாவது அவருக்கு கவளாஹாரம் இல்லை, ஆனாலும்கூட அவர் கோடி வருடங்கள் சித்த பகவானாக ஆகும்வரை பரம ஒளதாரிக உடலுடன் உயிர் வாழ்கிறார். தேவர் மற்றும் நரகர்களின் ஆயுள் பலகடற்காலங்களாக இருக்கின்றன. தேவர்களின் ஆயுள் எத்தனை கடற்காலமோ அத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகே அவர்களுக்கு உணவு உண்ண வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. அப்போது அவர்களுடைய தொண்டையில் அமிர்தம் சுரக்கிறது, அதை விழுங்க அவர்களுக்கு உணவு உண்ட திருப்தி அடைகின்றனர், பசியும் இல்லாமல் போய்விடுகிறது. நாரகி உயிர்களுக்கு பசியும், தாகமும் கடுமையாக இருக்கிறது, ஆனாலும் நரகத்தில் அவர்கள் உண்ண உண்ணவோ, குடிக்கவோ தண்ணீரோ எதுவும் கிடைப்பதில்லை, எதையும் உண்ணாமலேயே அவர்கள் கடற்கால வருடங்கள், அதாவது அவர்களின் ஆயுள் முடியும்வரை வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதற்கு காரணம் என்னவெனில் இவர்கள் எல்லாம் ஒவ்வொரு சமயமும் நோகர்ம வர்கணைகளை ஆஹாரமாக கிரஹித்துக் கொண்டிருக்கிறார்கள். விக்கிரஹ கதியில் 1, 2 அல்லது 3 சமயம் போக, பிறந்ததிலிருந்து மரணமடையும் வரை ஒவ்வொரு சமயமும் உயிர் நோகர்ம ஆஹாரத்தை ஏற்றுக்கொண்டேதான் இருக்கிறது. குழந்தை பெரியவனாக ஆகும்வரைத்தான் நோகர்ம ஆஹாரத்தை ஏற்றுக்கொள்கிறது, பிறகு இந்த வர்கணைகளை கொஞ்சம் கொஞ்சமாக விட்டுவிடுகிறது என்று நீ நினைப்பாயானால், அது தவறாகும். கர்மங்களின் நிஷேக அமைப்பு போலவே இந்த நோகர்மங்களில் கூட ஆபாதா காலம் இருக்கும் என்ற எண்ணம் இருந்தால் அதுகூட தவறாகும். பிறகு என்னதான் நிகழ்கிறது? அதைப்பற்றி இப்போது சர்ச்சை செய்யலாம்.

முதல் சமயத்தில் கிரஹித்த நோகர்ம வர்கணைகளிலிருந்து, அந்த முதல் சமயத்திலிருந்தே நோகர்ம வர்கணைகளின் விழுதல்-உதயத்திற்கு வருதல்-உயிரை விட்டுப் பிரிதல்கூட ஆரம்பமாகி விடுகிறது. அனந்த நோகர்ம புத்கலங்களிலிருந்து அதே சமயத்தில் அனேக பரமாணுக்கள் விழுந்து விடுகின்றன, இரண்டாவது சமயத்தில் அதைவிடக் கொஞ்சம் குறைவாக, மூன்றாம் சமயத்தில் அதைவிட இன்னும் கொஞ்சம் குறைவாக, இவ்வாறு அடுத்தடுத்த சமயங்களில் குறைந்த அளவில் விழுவது நிகழ்ந்து கடைசியில் மீதமுள்ள சில பரமாணுக்கள் மரண சமயத்தில் முழுவதுமாக விழுந்து விடுகின்றன. நோகர்மத்தின் இந்த நிஷேக அமைப்பில்கூட ஆபாதாகாலம் இல்லை.

விக்கிரஹ கதியின் கடைசி சமயத்தில் உயிர் நோகர்ம ஆஹாரத்தை ஏற்கும் நேரமே, அது பிறவி எடுக்கும் சமயமாகும். அந்தச் சமயத்திலிருந்து ஆயுள் கர்மத்தின் ஸ்திதி எவ்வளவோ அவ்வளவு ஸ்திதி, முதல் சமயத்தில் கிரஹித்த நோகர்மத்தின் ஸ்திதியாக இருக்கும். அதனுடைய உதயகாலம்கூட அந்தச் சமயத்திலிருந்து மரணமடையும் சமயம்வரை இருக்கும். இரண்டாவது சமயத்தில் கிரஹித்த நோகர்மத்தின் ஸ்திதி, மீதமுள்ள ஆயுள் எவ்வளவோ அவ்வளவு, அதாவது ஆயுளில் ஒரு சமயம் குறைந்த அளவு இருக்கும். 10 வருடங்களுக்குப் பிறகு உயிர் எந்த நோகர்மத்தை கிரஹிக்கிறதோ அதன் ஸ்திதி மீதமுள்ள ஆயுள் எவ்வளவோ, அதாவது ஆயுளில் 10 வருடம் குறைந்த அளவு எவ்வளவோ அவ்வளவு இருக்கும். இதை ஒரு உதாரணம் மூலம் தெரிந்து கொள்ளலாம். 60 வருட நிகழ்கால ஆயுள் கொண்ட ஒரு உயிர், 10 வருடங்கள் கழித்து அந்த சமயத்தில் எவ்வளவு நோகர்மத்தை கிரஹிக்கிறதோ, அதன் ஸ்திதி 50 வருடங்களாக இருக்கும். அதன் உதயம் அந்த சமயத்திலிருந்தே தொடங்கி 50 வருடங்கள்வரை நீடித்திருக்கும், அதாவது மரணமடையும் சமயம்வரை நிகழ்ந்து கொண்டேயிருக்கும். நிகழ்கால ஆயுளில் மீதமுள்ள ஆயுளை **கலிதாவசேஷ்** ஆயுள் என்று கூறுவர்.

ஒவ்வொரு சமயமும் உயிர் அனந்த நோகர்ம பரமாணுக்களை கிரஹிக்கிறது, மேலும் அனந்த அளவே விட்டும் விடுகிறது. ஏனேனில் வெவ்வேறு அனேக சமயங்களில் கிரஹித்த நோகர்மங்களில் உதயகாலம் ஒன்றாக வருகிறது, அதனால் அந்தச் சமயத்தில் உதயமாகும் அவைகளையெல்லாம் ஒன்றாக சேர்ந்து கணக்கிட்டால் அதுவும் அனந்தமாகவே இருக்கும். இந்த நோகர்ம வர்கணைகளின் கிரஹணம் வெவ்வேறு சமயங்களில் நிகழ்ந்தாலும், ஒவ்வொன்றின் கடைசி சமயமும் ஒன்றாகவே இருக்கிறது, அதாவது ஆயுள் முடியும் சமயம் வரையே இருக்கிறது. எவ்வளவு ஆயுளோ அதாவது மரணத்தின் சமயம் எதுவோ அதுவே நோகர்மத்தின் கடைசி ஸ்திதியாக இருக்கிறது. அந்த சமயத்தில் எல்லா நோகர்மங்களும் உதயமாகி, உயிரும் நோகர்ம புத்கலமும்-உடலும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிந்து விடுகிறது, உயிர், உடலை ஒட்டுமொத்தமாக விட்டுவிட்டு அடுத்த பிறவி எடுக்க வேண்டிய இடத்திற்கு செல்கிறது. **[**உடலும் உயிரும் பிரியும் இந்த நிகழ்வையே மரணம் என்று சொல்கின்றனர்.**]**

என்ன, இதன் சரியான அர்த்தம் இப்போது உங்களுக்கு புரிந்ததா? ஆயுளின் ஸ்திதி நிச்சயிக்கப்பட்டதாக இருக்கிறது, அதில் ஒரு சமயம்கூட அதிகமாவது நிகழ முடியாத ஒன்றாக இருக்கிறது. அதேபோல நோகர்மம் அதாவது உடலின் ஸ்திதி கூட நிச்சயிக்கப்பட்டதாக இருக்கிறது. கடைசி சமயத்திற்குப் பிறகு ஒரு சமயம் கூட உயிருக்கும் உடலுக்கும் இதுவரை இருந்த சம்மந்தம் முற்றிலும் அற்றுப்போகிறது. உயிரே அந்த உடலை விட்டுவிட்டு வேறு இடத்திற்கு புதிய பிறவி-புதிய உடலை ஏற்கச் சென்று விடுகிறது. இந்த நிகழ்வைத் தடுக்க ஸ்பெஷலிட் டாக்டர்கள், தலைசிறந்த வையித்தியர்கள், மந்திரம், தந்திரம், எல்லா வசதிகளும் கொண்டதாகக் கருதப்படும் நவீன மருத்துவமனைகள், ரெஸ்பரேட்டர் முதலான செயற்கையாக மூச்சு விடும்

கருவிகள், இதய அறுவைசிகிச்சை, இந்திரன், ஜினேந்திரன் ஆகிய யாரும்-எதுவும் சாமர்த்தியம் அற்றவைகளாக இருக்கின்றன. அதாவது மரணம் என்பதை யாராலும் கொஞ்சம்கூட மாற்றியமைக்க முடியாத ஒன்றாக இருக்கிறது!

பலர் மரணபயத்தால் குதேவர்களிடம் மாட்டிக்கொண்டு கிரஹீத மித்தியாத்துவ கர்மத்தைக் கட்டிக் கொள்கின்றனர். வேறு சில மனிதர்கள் மரணத்தின் வாயிலிருந்து மற்றவர்களைக் காப்பாற்றுவதாக ஏமாற்று வேலைகளைச் செய்கிறார்கள். யாரும் எவரையும் கொல்லவும் முடியாது, மற்றும் யாரும் எவரையும் மரணத்திலிருந்து காப்பாற்றவும் முடியாது என்பது அவர்களுக்குத் தெரியாது போலும்! ஏனென்றால் யாரும் எவருடைய ஆயுளையோ அல்லது தன்னுடைய ஆயுளையோ அதிகப்படுத்த இயலாது. அதேபோல நோகர்மத்தின் ஸ்திதியைக்கூட யாரும் அதிகப்படுத்தவோ அல்லது குறைக்கவோ முடியாது. இந்த உயிர்களுக்கு தன்னுடைய அல்லது தன் உறவினர்களுடைய மரணம் பற்றிய பயமே மிக அதிகத் துன்பத்தை கொடுப்பதாக இருக்கிறது.

நோகர்மங்களின் இந்த கிரஹித்தல் மற்றும் விடுபடுதல் பற்றிய அறிவு வந்தவுடன், உடலின் ஒவ்வொரு பரமாணுவின் ஸ்திதியும் நிச்சயிக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரியவருகிறது. ஒவ்வொரு சமயமும் உடலின் அனந்த பரமாணுக்கள் புதிதாக வந்து சேர்கின்றன மற்றும் அனந்த பரமாணுக்கள் உடலிலிருந்து விடுபட்டு வெளியேறுகின்றன. மருத்துவ சாஸ்திரங்கள் கூட உடலில் புனரமைப்பு (regeneration) மற்றும் சிதைவு (degeneration) இடைவிடாது நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று சொல்கிறது.

உயிர் இன்றுவரை தன் வேறுவிதமான அஸ்தித்துவத்தை-நிலைத்தத் தன்மையை அறியவேயில்லை. யாருக்கு இந்த நோகர்ம புத்கலத்தாலான உடலையே இதுதான் **நான்** என்ற நம்பிக்கை இருக்கிறதோ அவர்களுடைய இந்த நம்பிக்கையின் விளைவாக உயிரின் வீழ்ச்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நமக்கு அனாதி காலமாக ஒவ்வொரு பிறவியிலும் துரதிருஷ்டவசமாக இந்த கதையே மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தச் சோகக் கதையை நீங்கள் கேட்பீர்களாக!

இந்த உயிர் எங்கேயோ மரணமடைந்து இங்கு வந்தது. அது இரண்டு உடல்களை அதாவது ஒன்று கார்மண உடல் மற்றொன்று தேஜச உடல் இரண்டையும் அதனுடன் கொண்டு வந்தது. இந்த இரண்டும்தான் உயிருடன் நெருங்கிய துணையாக இருக்கின்றன. லட்சக்கணக்கான கோடிக்கணக்கான வருடங்களாக அவை உயிருடனேயே வந்து கொண்டிருக்கின்றன. இங்கு பிறவி எடுத்ததும் உயிருக்கு மற்றுமொரு உடல் கிடைக்கிறது. அந்த உடலின் பெயர் ஔதாரிக உடல். இந்த உடல் என்னவோ உயிருடன் இந்த ஒரு பிறவிவரை மட்டுமே துணையாக இருக்கிறது. பிறந்ததிலிருந்து மரணம்வரை மட்டுமே உடன் இருக்கிறது.

கார்மண மற்றும் தேஜஸ உடல்களை என்னவோ உயிர் எப்போதும் பார்த்ததேயில்லை, அதன் பார்வையில் வந்தது என்னவோ இந்த ஔதாரிக உடல் ஒன்று மட்டும்தான். உயிர் தன்னைத்தான் எப்போதும் அறியவேயில்லை, தன்னை அடையாளமும் காண முயலவில்லை, தன் இயல்பு பற்றியும் இந்நாள்வரை கேட்கவுமில்லை. ஆனால் இந்த உயிர் தனக்கு சுலபமாகக் கிடைத்த ஔதாரிக உடலையே **இதுதான் நான்** என்று நம்பிக் கொண்டிருக்கிறது. இந்த உடலுக்கே உயிர் அனைத்தையும் கொடுக்கிறது, இதையே தான் என்று நம்பி இந்த உயிர் அந்த உடலுக்கு என்னதான் செய்யவில்லை?

ஆஹார வர்கணையால் செய்யப்பட்ட இந்த புத்கல பரமாணுக்களின் பிண்டத்தை, அதற்கு கிடைத்த தேஹத்தை, உடலை உயிர் தன் முட்டாள் தனத்தால் **ஆத்மா** அதாவது **தான்** என்று நம்புகிறது மற்றும் இந்த கற்பனையான **தான்**னுக்காக உண்மையான **தான்**னாகிய தன் இருப்பை, அஸ்தித்துவத்தை தொலைத்துவிட்டு இந்த உடலுக்கு அடிமையாகி, அதன் சேவையில் முழுமையாக ஈடுபாடு கொண்டிருக்கிறது. இந்த அடிமைத்தனத்தால் இரவும், பகலும் உடலுக்கு சேவை செய்வது, அதற்கு உண்ணவும், குடிக்கவும் கொடுப்பது, குளிக்க வைப்பது, அழகு படுத்துவது, அலங்கரிப்பது, வண்ணம் பூசுவது, அதற்கு நோய் வந்துவிட்டால் பயப்படுவது, அந்த கவலையிலேயே ஆழ்ந்திருப்பது, மற்றும் இந்த உடலை விட்டுவிட்டு வேறு பிறவி எடுக்கச் செல்லும் நேரம் வந்தது விட்டால் **ஐய்யஹோ! நான் இறந்து விட்டேன்** என்று நம்பி மஹா துக்க உணர்வு கொள்வது முதலான செயல்களே இந்த உயிரின் நிலைமையாகி விட்டது. உயிரின் இந்த மோஹ, இரக, த்வேஷ-ஆசை, வெகுளி, மயக்க உணர்வின் காரணத்தால் புதிய கர்மங்கள் உயிருடன் பந்தமடைந்த வண்ணம் இருக்கின்றன, அதனால் உயிர் கர்மங்களுடனே எப்போதும் இருந்து கொண்டிருக்கும் நிலையை விடாமலிருக்கிறது.

உயிரின் இந்த துரதிஷ்டமான நிலைக்கு உடலினின் குற்றம் என்ன இருக்கிறது? உயிரிடம் தான் இந்த முட்டாள் தனம் இருக்கிறது! கர்மமே இந்த உடலுக்கு ஒப்பந்தம் (contract) கொடுத்து கூப்பிட்டது, உடல் அதன் விருப்பத்தால் தானாகவே இங்கு வந்ததா என்ன? நோகர்மமே அதாவது நாமகர்மமே உண்மையில் உடலைச் செய்யும் சூத்ரதாரியாக இருக்கிறது. திரவ்விய கர்மங்கள் நுட்பமாக இருப்பதால் இந்த உயிருக்கு அவை எப்போதும் தென்படுவதில்லை.

உயிர் இடைவிடாது ஆசை, வெகுளி, மயக்கம் முதலான மூடநம்பிக்கை மற்றும் துவர்ப்பு உணர்வுகளைக் கொண்டிருக்கிறது. இந்தக் காரணத்தால் ஒவ்வொரு சமயமும் அனந்த கர்மத்தை உண்டு பண்ணும் கார்மண பரமாணுக்கள் உயிருடன் பந்தமாகின்றன. உயிர் பிரதேசத்தில் வந்து அங்கே அதன் கூடாரத்தை அமைத்துக்கொண்டு தங்கி விடுகின்றன. பழைய கர்மத்தின் ஸ்திதி முடிந்ததும் உயிர் பிரதேசத்திலிருந்து அது மட்டும் விலகி விடுகிறது, ஆனாலும்கூட கர்மத்தின் இருப்பு மட்டும் தொடர்ச்சியாக இருந்து கொண்டேயிருக்கிறது. அனாதி காலமாக சத்தாவில் இருக்கும் கர்மத்துடன் நிச்சயிக்கப்பட்ட புதிய கர்ம பரமாணுக்கள் வந்து சேர்கின்றன அதேயளவு பழைய கர்ம பரமாணுக்கள் உயிர் பிரதேசத்திலிருந்து விழுந்து விடுகின்றன.

இங்கு கர்மம் வெறுமனே வந்து பந்தமாவது, விலகுவது மட்டுமே நிகழ்ந்தால் பரவாயில்லை; ஆனால் கர்மம் உயிரைவிட்டு விலகிச் செல்லும்போது உயிருக்கு பரிசுகளை வழங்கி அதாவது பலன்களைக் கொடுத்துவிட்டு, தங்கியிருந்ததற்கு வாடகையைக் கொடுத்துவிட்டுச் செல்கிறது. இதையே **கர்ம உதயம்** என்று சொல்கின்றனர். எட்டு கர்மங்களும் அதனதன் ஸவபாவத்திற்கு உகந்தார்போல வெவ்வேறு பலன்களைக் கொடுக்கின்றன. இதைப்பற்றி முன்னரே நாம் சர்ச்சை செய்திருக்கிறோம்.

கர்மம் எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருந்தால் நமக்கு இத்தகைய பரிசு-பலன் கொடுத்து விட்டுச் செல்ல முடியும்? நமக்கு இந்த அழகான உடலை செய்து கொடுக்கின்றன, நாம் சுகம் அனுபவிக்க தேவையான பலவகை சாதனங்களை உருவாக்கி நமக்குக் கிடைக்கச் செய்கின்றன என்று நம்புவாயானால், **ஹே உயிரே! நான் உன்னை அப்பாவி என்று சொல்வதா, முட்டாள் என்று சொல்வதா!! ஏய்,! சற்று யோசி.** கர்மம் உனக்கு எந்த உபகாரத்தையும் செய்யவில்லை. அது அதன் சொந்த வேலையை,

அதன் பாரம்பரியத்தை பராமரித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. **நீ அது தரும் பலனோடு சேராமல், அதில் இன்பத்தையும், ஏக்கத்தையும் கொள்ளாமல், அதில் மயங்கிவிடாமல் இருந்தால், புதிய கர்மங்கள் உன்னிடம் வந்து பந்திக்காது.** இவ்வாறு நிகழ்ந்து நிகழந்து கர்மத்தின் சத்தா-இருப்பு கொஞ்சம் கொஞ்சமாக கழிந்து முழுவதும் இல்லாமல் போகும் நிலை உண்டாகும், இதனால் நீ பூரண மகிழ்ச்சியாக இருக்கலாம்.

ஹே உயிரே, உன் முட்டாள் தனத்தை கொஞ்சம் பார்! நீ உருவமில்லாத பிரதேசங்களைக் கொண்ட ஒரு புஞ்சம், குவியல் (mass). மிகப் பிரசித்தியான ஞானம் முதலான குணங்களைக் கொண்டவன், என்றும் அழியாத ஒரு சிறந்த பொருள் நீ. ஆனால் இந்த கர்ம நோகர்ம வர்கணைகளால்-உருவமுடைய பிண்டத்தாலான உடலையே நீ என ஏற்றுக் கொண்டிருக்கிறாய். நாமகர்மம் மிகத் திறமையாக உனக்காக ஐந்து புலன்களுடன் கூடிய உடல் வடிவில் ஒரு சிறையைச் செய்தது, ஆயுள் கர்மம் குறிப்பிட்ட காலம்வரை உன்னை இந்தச் சிறையில் அடைத்து விட்டது, மோஹனீய கர்மம் உனக்கு அப்படி ஒரு மந்திரத்தை போட்டு மயக்கி அந்தச் சிறையையே-உடலையே உன்னுடைய நிஜ ஸ்வரூபம் என்று நம்பும்படி செய்து அதிலேயே உன்னை உட்கார வைத்துவிட்டது.

நீ இந்த சிறைச்சாலையின் கட்டுமானத்தை அதாவது உடலின் அமைப்பை உற்சாகப் படுத்துகிறாய், ஒவ்வொரு வருடமும் இதற்கு ஆண்டுவிழா, பிறந்தநாள் கொண்டாடுகிறாய் மற்றும் இந்த சிறைச்சாலையை அழகாக வைத்துக்கொள்வதில் மற்றும் அதன் பராமரிப்புக்காக நீ எல்லா நேரமும் உழைத்துக் கொண்டிருக்கிறாய். இந்த சிறைச்சாலைக்கு ஏதாவது நேர்ந்தாலோ அதாவது இந்த உடலில் ஏதாவது செயலிழப்போ அல்லது பாதிப்போ ஏற்பட்டால் உடனே டாக்டரிடம் சென்று காண்பித்து அதற்கு மருத்துவம் செய்கிறாய். மேலும் இந்த சிறையிலிருந்து வேறு சிறைக்குச் செல்லும் சமயம் வந்ததும் அதாவது இப்போதிருக்கும் உடலை விட்டுவிட்டு வேறு புதிய உடலை எடுக்க வேண்டிய நேரம் வந்ததும், அதாவது மரணம் அருகில் வரும்போது நீ சத்தம் போட்டு அழுது அமர்க்களம் செய்கிறாய். ஹே உயிரே! நீ என்னவோ ஞான மயமானவன், கேவலஞான இயல்பை உன்னிடத்தே [சக்தி வடிவில்] கொண்டவன், இந்த சிறையிலிருந்தும் அதாவது உடலிலிருந்தும் முற்றிலும் வேறானவன், ஆனாலும்கூட சிறையின் ஜன்னல்கள் வழியாக, அதாவது உடலில் உள்ள புலன்கள், இந்திரியங்கள் வழியாக வெளியில் உள்ளவைகளைப் பற்றிய கொஞ்சம் அறிவு ஏற்பட்டால் அந்த அளவு அல்ப ஞானமே உன்னுடைய முழுஅறிவும் என்று நம்பிக் கொண்டிருக்கிறாய்.

இவைகள் எல்லாம் புத்கலத்தின் விளையாட்டாகும். புத் என்றால் சேர்தல் மற்றும் கல் என்றால் பிரிதல். அதன் பெயருக்கு பொருத்தமான செயலைச் செய்யும் புத்கலம் அறிவில்லாதது, அஞ்ஞானி. அது அசேத்னமாக இருந்தாலும் கூட அதன் சேர்தல், பிரிதல் வடிவச் செயலை எந்த நேரமும் விடாமல் செய்து கொண்டேயிருக்கிறது. ஹே உயிரே! நீயோ ஞானியாக, சேத்தன குணமுடையவனாக, அறிவுடையவனாக இருந்தும் கூட, ஒரு முட்டாள் போல இந்த புத்கலத்தின் நடனத்தை உன்னுடையது என்று நம்பிக்கொண்டு சிலசமயம் சிரிக்கிறாய், சிலசமயம் அழுகிறாய். இதிலிருந்து வேறான உன் அஸ்தித்துவத்தை அதாவது உன்னுடைய உன்மையான வடிவத்தை அறியக்கூட நீ விரும்புவதாகத் தெரியவில்லை. நீ உன்னுடைய புத்தியை எங்கேயோ அடமானம் வைத்துவிட்டாய் போல் தெரிகிறது! ஹே உயிரே! **பிறந்ததிலிருந்து நான் இந்த உடலுடன்தான் இருக்கிறேன், ஆகையால் நான் இதை என்னுடையது என்று ஏன் நம்பக்கூடாது? இதை நான் என்றுடைய சிறைச்சாலை தான் என்று ஏன் நம்பவேண்டும்?** என்றுதானே நினைக்கிறாய். இதைப் புரிந்து கொள்ள நதியின் உதாரணம் ஒன்றைப் பார்க்கலாம். நம் கிராமத்தின் பக்கத்தில் ஓடும் நதி பல வருடங்களாக அதே போல-ஒரே

மாதிரியாகவே ஓடிக்கொண்டிருக்கிறது. நதி வடிவில் என்னவோ அது அதுவாகவே இருக்கிறது ஆனால் அதில் எந்த தண்ணீரை நேற்று நாம் பார்த்தோமோ, அது இன்று நூற்றுக்கணக்கான மைல்கள் தூரம் சென்று விட்டது மற்றும் இன்று நாம் பார்க்கும் அந்த நதியில் செல்லும் தண்ணீர் வேறு இடத்திலுருந்து வந்ததாகும். பிரவாஹ வடிவில் அதாவது வெள்ள ஓட்டம் போல தண்ணீர் எப்போதும் அங்கே இருப்பதால் நமக்கு நதி நேற்று இருந்தது போலவே இன்றும் இருப்பதுபோலத் தெரிகிறது. இதுபோலவே பிறந்ததிலிருந்து இன்றுவரை நமக்கு இந்த மனித பர்யாய உடல் ஒன்று போலவே தெரிகிறது. இதில் ஒவ்வொரு சமயமும் அனந்த பரமாணுக்கள் வந்து சேர்கின்றன, அனந்த பரமாணுக்கள் இந்த உடலை விட்டு விலகிச் செல்கின்றன. ஆனாலும் கூட அதேபோன்ற உடலே என்றென்றும் இருப்பது போல நம்மால் நம்பப்படுகிறது.

ஹே உயிரே! இந்த எல்லாவற்றிலும் ஒன்று போலவே எப்போதும் தங்கியிருப்பவன் என்னவோ ஸ்வயம் நீயே தான். உயிரினுடைய அதாவது உன்னுடைய ஒரு குணம் கூட குறையவில்லை அல்லது ஒரு குணம் கூட அதிகமாகவில்லை அல்லது உயிர் புத்கலமாக மாற்றமடைந்து விடவில்ல. எந்த ஒரு புத்கலமும் எப்போதும் உயிருடன் பந்த நிலையில் இருப்பதில்லை. கர்ம மற்றும் நோகர்மத்தின் ஒவ்வொரு பரமாணுவும் அதனதன் ஸ்திதியை அதாவது உயிருடன் பந்த நிலையில் இருக்க வேண்டிய காலத்தை நிச்சயம் செய்து கொண்டே உயிர் பிரதேசத்துடன் சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்கிறது, பந்தமாகிறது. சுயமாகவே அவை அந்த காலம் முடிந்ததும் எந்த விகல்பமும் இன்றி உயிர் பிரதேசத்தின் தொடர்பை விட்டு விடுகிறது.

புத்கலம் எப்போதும் உயிரை தன்னுடையது என்று நம்புவதில்லை ஏனென்றால் அதில் ஸ்ரத்தை என்ற நம்பிக்கை குணம் இல்லை. புத்கலம் உயிரை தான் அல்லது தன்னுடையது என்று எப்போதும் அறிவதில்லை ஏனென்றால் அதில் ஞானம் என்ற அறிவு குணம் இல்லை. புத்கலம் உயிருடன் ஒன்றி விடுவதில்லை ஏனென்றால் அதில் சாரித்திரம் என்ற ஒழுக்க குணம் இல்லை. புத்கலம் சுகமோ துக்கமோ அடைவதில்லை ஏனென்றால் அதில் சுகம் என்ற குணம் இல்லை. ஆனாலும் அதற்கு அதன் அஸ்தித்துவம் அதன் சுய சக்தியின் காரணத்தாலாகும். அதன் அந்தச் சமய வெளிப்பாடு, பரிணமன் அதன் சுய சக்தியின் காரணத்தாலாகும். புத்கல பரமாணு ஒரு இடத்திலிருந்து இங்குமங்கும் செல்லுதல் அதாவது பயணம் செய்தல் அல்லது உயிர் பிரதேசத்துடன் அதேயிடத்தில் நிலை கொண்டிருத்தல் அதன் சுய க்ரியாவதி சக்தியின் காரணத்தால் நிகழ்வதாகும்.

ஆனால் இந்த உயிர் புத்கலத்தை தான் அல்லது தன்னுடையது என்று நம்புகிறது. அது ஸ்ரத்தா குணத்தின் காரணத்தால் அல்ல ஆனால் ஸ்ரத்தா குணத்தின் விபரீத அவஸ்தையினால், அந்த நேர பர்யாயத்தால் அதாவது மூடநம்பிக்கையின் காரணத்தாலாகும். உயிர் புத்கலத்தை தான் அல்லது தன்னுடையது என்று அறிகிறது. அவ்வாறு அறிவது அதன் ஞான குணத்தின் காரணமானாலும் கூட அதன் விபரீதமாக அறிதல் ஞானத்தின் மித்யா பர்யாயத்தாலாகும். [அறிவு எப்போதும் அறிதல் காரியத்தயே செய்கிறது. ஆனால் நம்பிக்கை மூடநம்பிக்கையாக இருக்கும்வரை அறிதலும் மித்யா அதாவது கெட்ட அறிவாகவே இருக்கிறது அதாவது அறிவதில் தவறு நிகழ்கிறது. நம்பிக்கை நன்நம்பிக்கை யாகுமானால் அறிவும் நல்லறிவாக ஆகிவிடுகிறது. அறிவில் குற்றம் வருதல் நம்பிக்கையில் உள்ள குற்றத்தால்தான் என அறியவும்.] உயிர் சுயமாகவே புத்கலத்துடன் ஒன்றிவிடுகிறது அது உயிரின் சாரித்திர குணத்தின் விகார பர்யாயத்தாலாகும். [சாரித்திரத்தில் விகாரம் வரக்காரணம் உயிரின் நம்பிக்கை மூடநம்பிக்கையாக இருப்பதாலாகும். நம்பிக்கை ஒன்றை மட்டும் சரிசெய்து விட்டால் மற்ற எல்லா குணங்களின் விகார பர்யாயங்களும் தாமாகவே விகாரமற்றதாக

ஆகிவிடுகின்றன. அதாவது ஸ்ரத்தா குணத்தின் விகாரமே மற்ற எல்லா குணங்களின் விகார வெளிப்பாட்டுக்கு, பர்யாயத்துக்கு காரணம் என அறியவும். ஆகையால் நம் எல்லா முயற்சியும் முதலில் ஸ்ரத்தை குணத்தை விகார நிலையிலிருந்து விடுவித்து இயல்பு நிலைக்கு அதாவது சுத்த நிலைக்கு கொண்டு வருவதில்தான் இருக்கிறது. இது நிகழ்ந்த உடனே ஞானகுணம் பொருள்களை உள்ளது உள்ளபடியே அறியும் அறிவாக அதாவது தூய தன் இயல்பை வெளிப்படுத்தத் துவங்கி விடுகிறது. அதற்குப்பிறகே சாரித்திர, சுக குணத்திலும் மற்றும் எல்லா குணங்களும் தூய்மை நிலையில் வெளிப்படும் வளர்ச்சிக்கான புருஷார்த்தம் நிகழ முடியும். நன்நம்பிக்கை அடையாமல் சாரித்திரத்தில் மற்றும் பிற குணங்களில் உயர்வான தூய மாற்றங்களைக் கொண்டுவரச் செய்யும் எல்லா முயற்சிகளும், அதாவது எல்லா புருஷார்த்தமும் கெட்ட புருஷார்த்தமே என அறியவும்.]

நம்புதல், அறிதல், மூழ்குதல் முதலிவையெல்லாம் உயிரில் நிகழும் சிறப்பான காரியங்களாகும். புத்கலத்தில் இவைகள் எதுவும் காணப்படவில்லை. விபரீதமான நம்பிக்கை கொள்ளல், விபரீதமாக அறிதல், மற்றும் விபரீத நம்பிக்கையுடன் கூடிய அறிவுடன் பிறவற்றில் ஆழ்ந்து போதல் எல்லாம் உயிரின் முட்டாள் தனத்தாலேயே நிகழ்கிறது. அந்த சமயத்தில் மோஹனீய கர்மத்தின் உதயநிலை அங்கு காணப்படுகிறது. இந்தக் காரணத்தால் மோஹனீய கர்ம உதயம்தான் உயிரை விகாரமடையச் செய்கிறது என்ற குற்றச்சாட்டு அதன்மேல் சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்வதில் தவறில்லை ஆனால் கர்ம உதயத்தால்தான் உயிருக்கு இந்த நிலை என்று நம்புவதால் உயிருக்குதான் இழப்பு உண்டாகிறது. கர்மம் சுயமாகவே அதன் சுய தகுதியால் பந்தமாகிறது மற்றும் உதயமடைந்து பலனைத் தந்து அதுவே விலகுகிறது. அந்த சமயத்தில் உயிர் அந்த கர்ம பலனின் மேல் ஆழ்ந்து போகிறது. அதில் வேண்டியது வேண்டாதது என்ற நம்பிக்கை கொண்டு அந்த கர்ம பலன்களுடன் ஒன்றி அதன்மேல் ஆசை, வெகுளி, மயக்கங்களைக் கொள்கிறது. இது உயிர் சுயமாகவே அதுவே செய்யும் தவறாகும், கர்மம் உயிரை கட்டாயப்படுத்தி நீ இப்படித்தான் செயல்பட வேண்டும் என்று சங்கடத்தில் ஆழ்த்துவ தில்லை.

உயிர் இந்தத் தவறு செய்வதுலிருந்து சுயமாகவே அதன் தகுதியாலேயே மேம்படுமானால், எந்த கர்மமும் அதில் எந்த தடையையும் உண்டு பண்ணுவதில்லை, எந்த கர்மமும் அதற்கு உதவி செய்வதுமில்லை. உயிர் புத்கலத்தையே **தான்** என்று நம்பிக்கொண்டிருந்தது, ஆனால் இப்போது அதுவே **தான்** என்று நம்புகிறது. உயிர் இதுவரை புத்கலத்தையே **தான்** என்றே அறிந்திருந்தது, ஆனால் இப்போது அதுவாகவே தன்னையே **தான்** என்று அறிகிறது, இந்த நம்பிக்கை மற்றும் அறிவுடன் **தன்னிலேயே** ஆழ வேண்டுமானால் பிறகு அதன்மேலேயே அதற்கு எப்படி விருப்போ, வெறுப்போ உண்டாகும்? உயிர் விருப்பு வெறுப்பு கொள்ளக் காரணமே இல்லையென்றால் விருப்பு வெறுப்பும் கொள்ளாது. ஆசை, வெகுளி, மயக்கத்தின் நிமித்தத்தால் புதிய கர்மங்கள் முன்னர் வந்து பந்தமானது. அந்த நிமித்த காரணம் இப்போது இல்லையாகையால் புதிய கர்ம வருகையும் தானாகவே நின்று விடுகிறது. இதையே **சம்வரை** என்று சொல்கின்றனர். ஹே உயிரே! எப்போது நீ உன்னை அறிந்து, நம்பி, உன்னில் தோய்கிறாயோ, அப்போது கர்மம்கூட அதன் சாம்ராஜ்யத்தை தனக்குத்தானே சுருக்கிக்கொள்ளத் தொடங்கி விடுகிறது. கர்மத்தின் ஸ்திதி மற்றும் பலன்தரும் சக்திகூடத் தானாகவே குறையத் தொடங்கி விடுகிறது. பழைய கர்மங்கள் அதன் ஸ்திதியை குறைத்துக்கொண்டு சீக்கிரம் உயிரிடமிருந்து விடுபடத் தயாராகி அதற்கான காரியங்களை செய்யத் தொடங்கி விடுகின்றன. இதையே **நிர்ஜரை** என்று சொல்கின்றனர்.

ஹே உயிரே! நீ ஒருமுறை உன்னை நீயே அறிவாயானால், நம்புவாயானால், அதில் ஆழ்வாயானால், மூழ்குவாயானால் முன்னர் நீ இதுவரை கண்டிராத ஒரு அபூர்வ ஆனந்த அனுபவம் உனக்கு உண்டாகும். பிறகு உனக்குத் தானாகவே, சொந்தமாகவே உன்னை நீயே காண, உன் பக்கம் நீயே திரும்பி சுய அனுபவம் பெற ருசி உண்டாகும். இப்போது உங்களுக்குப் புத்தகத்தின் விளையாட்டில், உடலின் செயலில் மற்றும் உடனிருப்பவைகளின் மாற்றங்களில் எந்த ருசியும் இல்லாமல் போகிறது. புத்தகம் உன்னிடம் வருதலும் போதலும் இப்போதுகூட நிகழ்ந்து கொண்டிருக்கும், ஆனால் அதை நீ அறிபவனாகவே இருப்பாய், அதனால் அவைகளை உன்னுடையது என்று நம்பமாட்டாய். புத்தகத்தை புத்தக வடிவிலேயே அதாவது உன்னிடமிருத்து வேறான பொருளாகவே அறிவாய், நம்புவாய். புத்தகத்தைப் பார்த்து இப்போது உனக்கு கொஞ்சம் விருப்பு வெறுப்புகூட தோன்றலாம் ஆனால் அந்த விருப்பு வெறுப்பை கொள்பவனாக நீ இருக்கமாட்டாய். அந்த விருப்பு வெறுப்பு உணர்வுகள் கர்ம புத்தகத்தின் உதயத்தால் உண்டான பலனே என்று அறிவாய், உன் அறிவால் அவைகளை அறியப்படும் ஒன்றாகவே எண்ணுவாய், உன் இயல்பில் அவைகளுக்கு எந்த இடமும் கொடுக்கமாட்டாய் அதாவது அந்த பலனில் நீ மூழ்கிவிட மாட்டாய்.

ஹே உயிரே! இன்றுவரை நீ உடலின் செயலை அல்லது சுபாசுப இராகத்தை செய்வது அல்லது விடுவதுதான் உன்னுடைய கடமை என்று நம்பினாய். வேறு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால் உபவாசம் முதலான உடலின் செயலை செய்வதில் மற்றும் புண்ணிய காரியம் செய்வதையே, சுப உணர்வு கொள்வதையே நீ தர்மத்தை கைக்கொள்வதாக நம்பினாய். இப்போது விழித்துக்கொள்! எப்போது உனக்கு உன்னுடைய ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ளும் ஆர்வம் உன்னில் விழித்துக்கொள்கிறதோ அப்போது அந்த ஸ்வரூபத்தை விளக்குபவர்கூட [நிமித்தம் கூட] உனக்கு சுலபமாகவே கிடைக்கிறார். உன்னுடைய தகுதியே உனக்கு அந்த வழியை உண்டு பண்ணுகிறது. மிகுந்த ஆர்வத்துடன் உன்னைப்பற்றி கேட்ப்பாய், உன்னுடைய ஸ்வரூபத்தை அறிந்து கொள்ள முயலுவாய், பிறகு உன்னுடைய புரிதலில் உன் ஸ்வரூபம் வராமலிருக்காது.

எவ்வளவு சுலபமாக தெரிந்து கொள்ளும் வகையில் பொருளின் இயல்பு இருக்கிறது என்று பாருங்கள்! ஞானி, ஆத்மானுபவம் கொள்ளும் உயிர் தன் இயல்பில், சுத்தோபயோகத்தில் நிற்க முடியாதபோது; அவர் பிறருக்கு வஸ்த்து ஸ்வபாவம் பற்றி புரியவைக்க வேண்டும் என்ற விபாவ(சுப) உணர்வு வருகிறது. எதிரில் இருப்பவர் (நீ) அதாவது அவருடைய உபதேசத்தை கேட்பவர் உயிரின் ஸ்வபாவத்தில் ருசி உடையவரும் தன்னில் தோயும் லட்சியத்தை கொண்டவரும் அப்போதே ஸ்வபாவத்தில் நிலைகொண்டு அவருடைய விபாவ உணர்வை அழிக்கிறார், அவருக்கு (கேட்பவருக்கு, உனக்கு) ஆத்மானுபவம் அப்போதே, அந்த உபதேசத்தை கேட்கும்போதே [உபதேசம் கேட்டு அப்போதே உன்னில் தோய முயலும்போதே நீ செல்முறையில் (practical-லில்) இறங்கும்போதே] உண்டாகிறது.

ஹே உயிரே! நீ ஸ்வயம் உன்னை அறிய மற்றும் ஸ்வசன்முக், உன்னையே உள்நோக்கிப் பார்க்கும் புருஷார்த்தத்தை செய்தால்தான் சம்வரை-நிர்ஜரை வடிவ காரியம் வெளிப்படும் மற்றும் மோக்ஷத்தின் பக்கம் நீ முன்னேறுவாய். ஹே பவ்வியனே! இது ஒன்றே நீ இந்த பிறவியில் செய்யக்கூடிய முக்கியமான ஒரே காரியம் என்று உறுதி செய்! தீரமானம் செய்!! அதுவே உன்னுடைய அழியாத நலனாகும்!!!

- உங்கள் அம்மா.

கர்ம நோகர்ம நிஷேக அமைப்பு

கடிதம்- 5 ஓம் நம: சித்தேப்ய: 29-07-1999

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நான் என் தொடர் கட்டுரையான **நம் சொந்தக் கதையை கேளுங்கள்** என்ற தலைப்பில் **சன்மதி சந்தேஷ்** என்ற பத்திரிக்கையில் முதலில் எழுதத் தொடங்கினேன் என்பது உங்களுக்குத் தெரியும். பிறகு இதை வேறு முறையில் இப்போது புத்தக வடிவில் எழுதிக்கொண்டிருக்கிறேன். மோனா, உன் தங்கை ரீனா நான்காவது கடிதத்தைப் படித்த பிறகு அவளுடைய உணர்வு எப்படி இருந்தது என்று எனக்கு இவ்வாறு கடிதம் எழுதி யிருக்கிறாள்.

“கடைசி இரண்டு பக்கங்களைப் படித்ததும் எனக்கு மிகுந்த கவலையாகிவிட்டது. நீங்கள் கூறியிருந்ததைப் படித்த சிலதினங்களுக்குப் பிறகும்கூட என்மனதில் எப்போதும் அதுவே ஓடிக் கொண்டிருக்கிறது. மனதின் அடியிலிருந்து யாரோ அழுத்தமாக **உன்னை நீ அறிந்துகொள்** என்று சொல்வது போலவே இருக்கிறது. நான் இப்போது எல்லா அனுகூலமான சூழ்நிலைகளையும் பெற்றிருக்கிறேன். இந்தப் பிறவியில் அதாவது எனக்கு கிடைத்திருக்கும் இந்த அரிய மனிதப்பிறவியில் என்னை நானே தெரிந்து கொள்கிறேனென்றால் என்னை விட பெரிய அதிர்ஷ்டசாலி வேறு யார் இருக்க முடியும்! உங்களுடைய கட்டுரைகள் மற்றும் உபதேசங்களின் காரணத்தால் என்னில் இந்த ஆர்வமும், சுபஉணர்வும் எப்போதும் இருக்கவே செய்கிறது. மேலும் சீக்கிரமாக என் கவனம் இதில் சென்று என்னை நான் அறிய வேண்டும், அறிந்து என் ஆன்மாவை இதுதான் நான் என்று நிர்ணயம் செய்ய வேண்டும் என்ற ஆவல் மேலிடுகிறது. இந்த என் விருப்பம் கூட ஒரு ஆஸ்ரவ உணர்வுதான் என்பதையும் அறிகிறேன், ஆனால் அதை செய்பவள் நான் அல்ல என்பதையும் உணர்கிறேன்.”

இதைப்படித்து நான் மிகவும் திருப்தியடைந்தேன். சாஸ்திரங்களில் கூறியுள்ள மர்மங்களை நீங்கள் இருவரும் சரியாகவே புரிந்து கொண்டு ஆன்மாவையே நான் என்று உறுதி செய்து ஆன்மாவுடன் ஒருங்கிணையும் முயற்சியை புருஷார்த்தத்தை செய்கிறீர்கள் என்பதை என்னால் காண முடிகிறது. ரீனா, ஒவ்வொரு ஞாயிறு அன்றும் நடக்கும் பிரவசனத்தை கேட்க வருகிறாள். 7-6-1998 வரை 55 ஒன்றரை மணி நேரம் **சித்தாந்த பிரவேஷிகா** பற்றிய பிரவசனங்கள் நடந்தன. மோனா, “உன் மகள் ரியா கொஞ்சம் பெரியவளான பிறகு யார் அவளுக்கு சித்தாந்த பிரவேஷிகாவை கற்றுக்கொடுப்பாரகள்? என்று கவலைப்பட்டாய். அதனால் உன்னுடைய செலவில் எல்லா பிரவசனங்களையும் டேப் செய்து வையுங்கள்” என்று கூறினாய். இந்த கேசட்டுகளை இப்போது பலரின் வேண்டுகோளின்படி 25 நகல்கள் எடுத்து கேட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன், மேலும் பலருக்கு இந்த கேசட்டுகளை வாங்கி கேட்க வேண்டும் என்ற ஆர்வமும் பெருகிக்கொண்டே யிருக்கிறது.

மோனா, நீ எங்களை 15 தினங்கள் ஔரங்காபாத்க்கு அழைத்து உன் வீட்டில் பிரவசனம் செய்ய வைத்தாய். இதனால் உன்னுடன் மேலும் 30-40 பேர்கள் கூட பயனடைந்தார்கள். இவைகளின் மூலம் உங்கள் இருவருக்கும் உண்மையில் ஸ்வாத்யாயத்தில் மிக அதிக ஆர்வம் இருப்பது தெரிய வருகிறது. இது மட்டுமல்ல, சொல்லப்படும் எல்லா விஷயங்களின் மர்மங்களையும் நீங்கள் சரியாகப் புரிந்துகொண்டு

உங்கள் ஆன்மாவுடன் ஒருங்கிணைக்கிறீர்கள் என்பதில் எனக்கு மிகவும் மன நிறைவு உண்டாகிறது. நாம் இதுவரை கர்ம-நோகர்மங்களின் பந்தம், ஸ்திதி, உதய காலம், கர்மங்கள் நிஷேக வடிவில் இருக்கும் காலம் முதலியவைகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம். உயிரின் கர்ம நோகர்மங்களை ஈர்க்கும் சக்தியை **பாவ யோகம்** என்றும் அதனால் உயிர் பிரதேசத்தில் ஏற்படும் அதிர்வுகளை **திரவ்விய யோகம்** என்றும் பார்த்தோம். இவைகளுக்கு அதனதன் சரீர நாமகர்மப் பிரக்ருதியின் உதயம் நிமித்தமாகும்.

கார்மண உடல் போல இந்த நான்கு உடல்கள் ஆன்மாவின் குணங்களை விகாரப் படுத்துவதில்லை, கதி முதலான வடிவில் வசப்படுத்துவதுமில்லை. ஆகையால் இவைகளை நோகர்மம் அல்லது அகர்மம் அல்லது ஈஷத்கர்மம் என்றும் கூடச்சொல்கின்றனர். கார்மண சரீர நாமகர்ம உதயத்தில் எந்த எட்டு கர்மங்களின் ஸ்கந்தங்கள் இருக்கின்றனவோ, அதுவே கார்மண உடலாகும். கர்மம் மற்றும் நோகர்மம் இரண்டிலும் அதிக அளவு ஸ்திதி அதாவது உத்கிருஷ்ட ஸ்திதி எவ்வளவு பந்தமாகிறது என்பதைப் பற்றி இப்போது பார்க்கலாம். ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு சமயமும் இவ்வளவு ஸ்திதி பந்தம் நிகழ வேண்டும் என்ற விதி எதுவும் இல்லை.

மேலே கூறப்பட்ட ஐந்து உடல்கள் சம்பந்தமான எவ்வளவு பரமாணுக்களை உயிர் ஒரு சமயத்தில் ஈர்க்கிறதோ அதை **சமயப்பிரபந்தம்** என்று சொல்கின்றனர். ஆனால் அவைகளில் ஒவ்வொரு உடலின் சமயப்பிரபந்தமும் தனித்தனியாகும். ஔதாரிக உடல் சம்பந்த சமயப்பிரபந்தம் எல்லாவற்றையும்விட மிகக் குறைந்ததாகும். வரிசைக் கிரமமாக மேலேமேலே கூறப்பட்ட உடல்களின் சமயப்பிரபந்தத்தின் பரமாணுக்களின் எண்ணிக்கை மேலும் மேலும் அதிகமாகும். அந்தந்த உடல்களின் பரமாணுக்களின் எண்ணிக்கை அதிகமானாலும், அந்த உடல்கள் கிரமமாக ஒன்றுக்கொன்று நுட்பமாக இருக்கின்றன. ஔதாரிக உடல் தொடுபுலன், சுவைபுலன், மூக்கு, கண் ஆகிய நான்கு புலன்களாலும் அறியப்பட முடியும், ஏனென்றால் அது ஸ்தூலமாக, பருவுடலாக இருக்கிறது. ஆனால் தேஜச உடல் தொடுபுலன் மற்றும் கண் முதலியவற்றால் அறிய முடியாமலிருக்கிறது, அதனால் அது ஔதாரிக உடலைவிட நுட்பமாக, மெல்லியதாக இருக்கிறது என்று உறுதியாகிறது. ஔதாரிக உடலின் பாரமாணுக்களின் எண்ணிக்கையைவிட தேஜச உடலில் பரமாணுக்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. இதைவிட அனந்த மடங்கு பரமாணுக்கள் கார்மண உடலில் இருக்கின்றன, ஆனாலும் எந்த புலன்களுக்கும் அது தென்படுவதில்லை. ஆகையால் கார்மண உடல் எல்லா உடல்களைக் காட்டிலும் மிக நுட்பமானதாக, மெல்லியதாக இருக்கிறது, அதிசூட்ஷம்மாக இருக்கிறது என அறியலாம்.

மனித மற்றும் விலங்கு கதிகளில் மட்டும்தான் ஔதாரிக உடல் இருக்கிறது. எனவே மிக அதிக ஆயுளையுடைய மனிதர்கள் மற்றும் விலங்குகளிலேயே ஔதாரிக உடலின் அதிக பட்ச ஸ்திதி காணப்படுகிறது. போகபூமி மனிதர் மற்றும் விலங்கு உயிர்களின் அதிகபட்ச ஆயுள் மூன்று பல்லியமாகும். எனவே ஔதாரிக உடலின் அதிகபட்ச ஸ்திதிகூட மூன்று பல்லியமாகும். வைக்ரீயிக உடல் தேவர்கள் மற்று நாரகிகளிடம்தான் காணப்படுகிறது. அவர்களின் அதிகபட்ச ஆயுளின் ஸ்திதி 33 கடற்காலமாகும். எனவே வைக்ரீயிக உடலின் அதிக பட்ச ஸ்திதிகூட 33 கடற்காலமே யாகும்.

ஆஹாரக உடலின் ஸ்திதி அந்தர்முகூர்த்தமாகும். அதன் காரணம் என்னவென்று சொல்ல முடியுமா? ஆஹாரக உடல் என்பதன் சொற்பொருள் விளக்கம் உங்கள் ஞாபகத்தில் இருக்கிறதா? எப்போது ஒரு முனிவர் ஆறாவது குணஸ்தானத்தில்

இருக்கிறாரோ அப்போதுதான் [அதுவும் ஆகமத்தில் சந்தேகம் இருந்தால் அருகில் உள்ள கேவலியை அடைந்து விளக்கம் பெறவோ அல்லது எந்த ஷேத்திரத்திற்காவது தீர்த்த வந்தனை செய்ய வேண்டும் என்ற விகல்பம் வந்தாலோ] இந்த உடலின் அமைப்பு உண்டாகிறது. ஆறாம் குணஸ்தான காலமே ஒரு அந்தர்முகூர்த்தம் தான். அந்த குணஸ்தானத்தில் இருக்கும் ஒரு முனிவர் அந்த ஒரு அந்தர்முகூர்த்த காலத்திற்குள் அவர் ஆஹாரக உடலை செய்து, ஜினாலய வந்தனை அல்லது தீரத்தங்கரர் அருகில் சென்று திரும்பி வந்ததும் அந்த உடலின் எல்லா பரமாணுக்களும் விழுந்து ஆஹாரக உடல் முழுவதுமாக அழிந்து போதல் அந்த ஒரு அந்தர்முகூர்த்த காலத்திலேயே நிகழ்ந்து முடிந்து விடுகின்றன.

தேஜச உடலின் அதிகபட்ச ஸ்திதி 66 கடற்காலமாகும். அனேக பவங்கள்வரை-பிறவிகள்வரை அந்த தேஜச உடலின் கர்மங்கள் உதயத்தில் இருக்கிறது. கார்மண உடலின் பொது நிலை: அதிக பட்ச ஸ்திதி 70 கோடாகோடி கடற்காலமாகும். சிறப்பு நோக்கில் பார்க்கும்போது ஞானாவரணம், தர்சனாவரணம், வேதனீயம் மற்றும் அந்தராயம் ஆகிய கர்மங்களின் அதிக பட்ச ஸ்திதி 30 கோடாகோடி கடற்காலமாகும். அந்த ஸ்திதி காலத்தில் ஆபாதா காலம் மட்டும் 3,000 வருடங்களாகும், மீதமுள்ள எல்லா காலமும் உதயகாலமாகும். மோஹனீய கர்மத்திற்கு 70 கோடாகோடி கடற்காலம், நாம மற்றும் கோத்திர கர்மங்களுக்கு 20 கோடாகோடி கடற்காலம் மற்றும் ஆயுள் கர்மத்திற்கு அதிக பட்ச ஸ்திதி 33 கடற்காலம். இவைகளில் ஆயுள் கர்மம் ஒன்றின் உதயகாலம் மட்டுமே ஒரு பவத்தின் தொடக்கம் முதல் முடிவுவரை நீடித்திருக்கிறது மற்ற கர்மங்களின் உதயகாலம் பல பவங்கள், பல பிறவிகள் வரை தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது.

கொஞ்சமும் விருப்பமில்லாதவை ஏதாவது வந்து சேரும்போது சிலருக்கு தற்கொலை செய்து கொள்ள எண்ணம் வருகிறது. அல்லது யாருக்காவது தீராத நோய் வந்து அதிக காலம் அவஸ்தை படவேண்டியிருந்தால் அந்த மனிதரை கருணைக்கொலை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று சிலர் வாதிடுகின்றனர். இதிலிருந்து நமக்கு புரியவருவது என்ன வென்றால், அவர்களுக்கு அந்த கஷ்டங்களை கொடுக்கின்ற கர்மத்தின் உதயம் அடுத்த பவத்தில்கூட தொடர்கிறது என்று தெரியவில்லை என்பதுதான். ஆயுள் கர்மத்தின் மீதமுள்ள எல்லா நிஷேகங்களும் ஒன்றாக உதீரணை அடைந்து, எல்லா கர்மங்களும் ஒட்டுமொத்தமாக உதயத்திற்கு வந்து அந்த உயிர் விஷம் குடித்தோ அல்லது பிற ஆயுதங்களால் தன் உடலுக்கு அழிவை ஏற்படுத்தி இறந்து விட்டால்கூட அந்த உயிரின் அசாதா வேதனீய கர்மத்தின் உதயம் அது எடுக்கப்போகும் அடுத்த பிறவியில் கூட தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கும். மூடநம்பிக்கையின் காரணத்தால் தீவிர கஷாயங்களில் ஆழ்ந்த உயிர் முழுமையாக சிந்தனை சக்தியை இழந்து தவறான உணர்வுகளால் கவலை கொண்டு தற்கொலை செய்து கொண்டு நரக கதிக்குச் சென்று விடுகிறது.

கர்ம நோகர்மங்களின் உதய காலத்தில் நிஷேக அமைப்பு எப்படி இருக்கிறதென்றால், முதல் சமயத்தில் விழும் நிஷேகத்திலிருக்கும் கர்ம பரமாணுக்களின் எண்ணிக்கையை விட, இரண்டாவது சமயத்தில் விழும் நிஷேகத்திலிருக்கும் கர்ம பரமாணுக்களின் எண்ணிக்கை கொஞ்சம் குறைவாக இருக்கிறது. கடைசி நிஷேகம்வரை இந்த எண்ணிக்கை வரிசை கிரமம் தவறாமல் குறைந்து கொண்டே போகிறது. அதன் முழு கணிதமும் மிகவும் விவரமாக ஆகமங்களில் கொடுக்கப் பட்டிருந்தாலும் அதை இந்த நிலையில் நீங்கள் புரிந்துகொள்ள கொஞ்சம் கடினமாக இருக்கும். ஆகையால் ஒரு கற்பனையான உதாரணத்தின் மூலம் நிஷேக அமைப்பின் கணிதத்தை நீங்கள் புரிந்து கொள்ளும் வகையில் இங்கு எடுத்துக் கூறுகிறேன். இதில் சில புதிய வரையரை

வார்த்தைகள் இருக்கின்றன என்பதால் கொஞ்சம் கவனமாகக் கேளுங்கள். எதிர்காலத்தில் அதாவது பிறகு உங்களுக்கு சம்யக்ஞானசந்திரிகா, ஆசார்யகல்ப பண்டிட். தோடர்மல்ஜி எழுதிய கோமடசார நூலின் தெளிவுரையை படிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்போது இந்த சப்தங்களின் அர்த்தம் உங்களுக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும்.

இதில் ஒரு வார்த்தை **குணஹானி**. இதன் பொருள் கணித ஆதாரத்தில் நிகழும் இழப்பு என்பதாகும். வரிசையாக ஒவ்வொரு நிஷேகத்திலும் பரமாணுக்களின் எண்ணிக்கை குறைந்து குறைந்து எப்போது முதல் நிஷேகத்தில் இருந்ததைவிட பாதியாக ஆகிறதோ அப்போது அதை குணஹானி அதாவது ஒரு குணஹானி என்று சொல்கின்றனர். ஒரு குணஹானி நிகழ எவ்வளவு காலம் ஆகிறதோ அதாவது எவ்வளவு சமயங்கள் பிடிக்கிறதோ அந்த காலஅளவை **குணஹானி ஆயாம்** என்று சொல்கின்றனர். ஆயாம் என்பதன் பொருள் கால நேரத்தின் நீளமாகும்.

நிஷேகங்களில் பரமாணுக்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து கொண்டே போகிறது மற்றும் ஸ்திதியின் கடைசி சமயத்தில் கடைசி நிஷேகம் விழுகிறது என்று பார்த்தோம். உதய காலத்தின் முதல் சமயத்திலிருந்து கடைசி சமயம்வரை நிஷேக அமைப்பில் எத்தனைமுறை குணஹானி நிகழ்கிறதோ அதாவது பரமாணுக்களின் எண்ணிக்கை பாதியாகி, மீண்டும் பாதியாகி, அதிலிருந்து மீண்டும் மீண்டும் பாதியாவது எத்தனை தடவை நிகழ்கிறதோ அதை **நானாகுணஹானி** என்று சொல்கின்றனர்.

உதாரணத்திற்கு ஒரு கர்மத்தின் உதயகாலம் 48 சமயங்கள் என்று வைத்துக் கொள்வோம். 8 சமயங்களில் ஒரு குணஹானி நிகழ்கிறது என்று எடுத்துக்கொண்டால் 48 சமயங்களில் நானாகுணஹானியின் எண்ணிக்கை 48/8= 6. இதில் குணஹானி ஆயாம் 8. கர்மத்தின் ஸ்திதியில் ஆபாதா காலத்தைக் கழித்த பிறகு மீதம் உள்ள காலத்தை **அவசேஷ் ஸ்திதி** அல்லது **உதய காலம்** என்பர். நாம் இப்போது மூன்று புதிய சொற்களைப் பார்த்தோம்-குணஹானி, குணஹானி ஆயாம், மற்றும் நானாகுணஹானி. நாம் இரண்டு குணஹானி என்று சொன்னால் அதன் பொருள் என்னவென்றால் குணஹானி ஆயாமை இரண்டால் பெருக்க வேண்டும் என்று பொருள். அதாவது 8 x 2 = 16.

நாம் நானாகுணஹானியின் அளவு 6 என்று பார்த்தோம். இப்போது அன்யோன்யாப்யஸ்த ராசியின் அளவு எவ்வளவு என்று தெரிந்து கொள்ள குணஹானி முறை-ஆறு முறை 2 என்ற எண்ணை எழுதி அவைகளைப் பெருக்க வேண்டும். பெருக்கி வரும் தொகை 2 X 2 X 2 X 2 X 2 X2 = 64. இந்த பெருக்கிவந்த தொகை எவ்வளவோ அவ்வளவே **அன்யோன்யாப்யஸ்த ராசியின்** அளவாகும்.

முதல் நிஷேகத்திலிருந்து கடைசி நிஷேகம்வரை எல்லா பரமாணுக்களின் எண்ணிக்கை அதாவது ஒரு சமயத்தில் பந்தமாகும் குறிப்பிட்ட கர்ம பரமாணுக்களின் எண்ணிக்கையை **சர்வதன்** அதாவது மொத்த பரமாணுக்களின் எண்ணிக்கை என்று சொல்கின்றனர். நாம் சர்வதன் 6300 என்று எடுத்துக் கொள்வோம்.

சர்வதன்-ஐ அன்யோன்யாப்யஸ்த ராசியிலிருந்து 1 குறைத்து வரும் எண்ணிக்கையால் வகுத்து வரும் ஈவுத்தொகை கடைசி குணஹானி திரவியமாகும் (பரமாணுக்களின் எண்ணிக்கை யாகும்). 6300 / (64-1) =100. கடைசி குணஹானியின் திரவியம் 100 ஆகும். இதன் பொருள் கடைசி குணஹானியில் 100 கர்ம பரமாணுக்கள் விழுகின்றன என்று பொருள்.

நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் மொத்தம் 6 குணஹானிகள் என்று பார்த்தோம். அதாவது நானா குணஹானிகள் 6. கடைசியினுடைய அதாவது 6-வது குணஹானியில் 100 பரமாணுக்கள், ஐந்தாவது குணஹானியில் அதைவிட இரண்டு மடங்கு அதாவது 200, நான்காவது குணஹானியில் 400, மூன்றாவது குணஹானியில் 800, இரண்டாவது குணஹானியில் 1,600 மற்றும் முதல் குணஹானியில் 3,200 பரமாணுக்கள் இருக்கும்.

முதல் குணஹானியில் 3,200 பரமாணுக்கள் இருக்கும் என்பது என்னவோ நம் எண்ணத்தில் வந்து விட்டது. ஆனால் அந்த குணஹானி 8 சமயங்களில் நிகழ்கிறது, அதாவது முதல் எட்டு நிஷேகங்களில் 3,200 பரமாணுக்கள் இருக்கும் என்பது நமக்குத் தெரிகிறது. மற்றும் ஒவ்வொரு சமயத்தில் அடுத்தடுத்து விழும் நிஷேகங்களில் பரமாணுக்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே போகிறது என்பதும் நமக்குத் தெரியும். ஆனால் அந்த 8 நிஷேகங்களில் ஒவ்வொன்றிலும் அதாவது முதல் நிஷேகத்திலும் எத்தனை பரமாணுக்கள் இருக்கும்? மற்றும் ஒவ்வொரு சமயத்திலும் விழும் அடுத்தடுத்த நிஷேகங்களில் எவ்வளவு பரமாணுக்கள் குறையும் என்பதை நாம் இப்போது பாரக்கலாம்.

எட்டு சமயங்களில் 3,200 பரமாணுக்கள் விழுகின்றன அதாவது சராசரியாக 400 பரமாணுக்கள் ஒரு சமயத்தில் விழுகின்றன. இதை மத்யஃகன் என்று சொல்கின்றனர். நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் 8 சமயங்களில் 8 நிஷேகங்கள் விழுகின்றன, இதை **கச்ச** என்று சொல்கின்றனர். அதாவது ஒரு குணஹானியில் விழும் நிஷேகங்களின் எண்ணிக்கையை கச்ச என்ற சொல்லால் ஆகமங்களில் குறிப்பிடுகின்றனர். ஒவ்வொரு நிஷேகத்திலும் பரமாணுக்களின் எண்ணிக்கை முறையாக குறைந்து கொண்டே போகிறது. ஒவ்வொரு நிஷேகத்திலும் எவ்வளவு பரமாணுக்கள் குறைகிறதோ அந்த குறையும் அளவை **சய** என்று சொல்கின்றனர். சய-யின் அளவு எவ்வளவு என்று கண்டுபிடிக்க கச்சவிலிருந்து 1 கழித்து, அதை 2-ஆல் வகுக்க {(8-1)/2}=7/2 எந்த எண் வருகிறதோ அதை இரண்டு குணஹானியிலிருந்து கழிக்க வேண்டும். அதாவது16-(7/2)=25/2 = 12.5. இப்போது இந்த எண்ணிக்கையிலிருந்து மத்யஃகன்-சாரசரியை வகுக்க சய-யின் அளவு கிடைக்கிறது. 400/12.5 அதாவது (400X2)/25=32.

இவ்வாறு முதல் குணஹானியில் குறைவது அதாவது சய-யின் அளவு 32 பரமாணுக்களாகும். சய-யை இரண்டு குணஹானியால் பெருக்க முதல் நிஷேகத்தின் மொத்த பரமாணுக்களின் எண்ணிக்கை கிடைக்கிறது. 32X16=512. முதல் நிஷேக பரமாணுக்களின் எண்ணிக்கை 512 ஆகும். இதை கண்டுபிடிக்க இன்னுமொரு வழியும் இருக்கிறது, அது இவ்வாறு இருக்கிறது. சர்வஃகன் ஐ கொஞ்சம் அதிக ஒன்றரை குணஹானியால் வகுக்க முதல் நிஷேகத்தின் எண்ணிக்கை வருகிறது. 6300/கொஞ்சம் அதிக 12 = 512. இதை இரண்டு குணஹானியால் வகுக்க சய-யின் அளவு வருகிறது. 512/16=32. இந்த எண்ணிக்கை தான் முதல் குணஹானியின் சய அளவாகும்

இரண்டாவது குணஹானியில் சய-யின் அளவு முதல் சய-யில் அளவில் பாதியாகிறது (16). மூன்றாவது குணஹானியில் சய-யின் அளவு அதிலும் பாதி (8). இவ்வாறு அடுத்தடுத்த குணஹானியின் சய-யின் அளவு பாதி பாதியாக ஆகிக்கொண்டே போகிறது. ஒவ்வொரு அடுத்தடுத்த குணஹானி ஆயாமிலும் விழும் மொத்த திரவியங்களின் எண்ணிக்கைகூட பாதி பாதியாக ஆகிக்கொண்டே போகிறது-முதல் குணஹானி ஆயாமில் 3200, இரண்டாம் குணஹானி ஆயாமில் 1600, மூன்றாம் குணஹானி ஆயாமில் 800 என விழும் மொத்த திரவியங்களின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே போகிறது.





நான் உங்களுக்கு புரியவைக்க மேலே படம் வரைந்து காட்டியுள்ளேன். சாஸ்திரங்களில் இதை விளக்க எப்போதும் முதல் நிஷேகம் கீழேயும் அதற்கு அடுத்தடுத்த நிஷேகங்கள் அதற்கு மேலே மேலேயும் வரைந்து காட்டப்படுகிறது. நிஷேகங்களின் இந்த அமைப்பை த்ரிகோண அமைப்பு என்று சொல்கின்னறனர்.

கோமடசாரத்தில் ஒரு முனை மேல் இருப்பதுபோல் ஒரு முக்கோணம் வரைந்து அதன் அடியிலிருந்து ஒரு சிறிய கோடு கீழே போவதுபோல் வரைந்து திரிகோண அமைப்புக்கு ஒரு சின்னத்தை செய்திருக்கிறார்கள். நாம் மேலே கூறிய உதாரணத்தை மனதில் கொண்டு இப்போது நிஷேகங்களின் திரிகோண அமைப்பு பற்றி இப்போது பார்க்கலாம். கிழே உள்ள நேரான கோடு ஆபாதா காலத்தை காட்டுகிறது. ஆபாதா காலத்தில் ஒரு பரமாணுகூட விழுவதில்லை, அதாவது உதயத்திற்கு வருவதில்லை. அதற்குப்பிறகு குறைந்து கொண்டே போகும் எண்ணிக்கையில் பரமாணுக்கள் உதயத்திக்கு வருகின்றன.

உயிர் ஒரு சமயத்தில் எந்தெந்த அனந்த கர்மபரமாணுக்கள் அல்லது நோகர்ம பரமாணுக்களை ஈர்கிறதோ அவைகள் தனித்தனி ஸ்திதி உள்ள நிஷேகங்களாகப் பிரிந்து ஒரு சமயத்தில் ஒரு நிஷேகம் விழும்படி அமைப்பை செய்து கொண்டு விடுகின்றன என்பது நம் எண்ணத்தில் வருகிறது. நாம் எந்த கர்மத்தின் ஸ்திதி பற்றி கூறினாலும் அப்போது கடைசி நிஷேகத்தின் ஸ்திதி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் முதல் நிஷேகத்தின் ஸ்திதி என்னவோ ஆபாதா காலத்திலிருந்து ஒருசமயம் அதிகமாக இருக்கும். [இடைப்பட்ட காலத்தில் ஒவ்வொரு நிஷேகமாக விழுந்து கொண்டிருக்கும்.]

ஐந்து உடல்களிலும் உள்ள ஒவ்வொரு நோகர்ம பரமாணுக்களுக்கும் அதனதன் நிச்சயிக்கப்பட்ட ஸ்திதி இருக்கிறது. இவ்வளவு சுதந்திரத்தன்மை இருப்பதை அறிந்ததும், நான் என் உடலை செய்பவன், நான் என் விருப்பப்படி என் உடலை ஒல்லியாகவோ, குண்டாகவோ ஆக்குகிறேன், நான் என் குழந்தையை நல்லமுறையில் ஊட்டி வளர்ந்து பெரியவனாக்குகிறேன் என்ற நம்முடைய தவறான பெருமைகள் எல்லாம் எவ்வளவு வீணானது என்பது நமக்குத் தெரியவருகிறது.

சில மணி நேரத்தில் மரணமடையும் நிலையில் உள்ள எத்தனையோ நோயாளிகள் பல மாதங்கள், பல வருடங்கள் உயிருடன் இருந்து கஷ்டப்படுவதை நாம் பார்க்கிறோம். அதற்கு மாறாக நல்ல ஆரோக்யத்துன் இருக்கும் ஒரு இளைஞன் எந்த காரணமுமில்லாமல் சில நொடிகளில் மரணமடைவதையும் பார்க்கிறோம். அந்த சமயத்தில் நாம் பிற வெளி நிமித்தங்களை அவருடைய மரணத்திற்கு காரணம் என்று எண்ணுகிறோம். ஆனால் ஆயுள் கர்மத்தின் ஸதிதி மற்றும் உடல் அமையக்காரணமான நோகர்ம ஸ்திதி பூர்த்தியடைந்துவிட்டதே இதற்கு உண்மையான நிமித்தமாகும், மற்றும் உயிரின் சுயதகுதி உபாதான காரணமாகும்-உண்மையான காரணமாகும்.

நிமித்தத்தால் எந்தக் காரியமும் நிகழ்வதில்லை என்பது முக்காலத்திலும் உண்மை. அறிவு மட்டுமே அந்த நிமித்தங்களை அறிகிறது. ஆனால் அஞ்ஞானிக்கு இரட்டை தவறு நிகழ்கிறது. உண்மையான நிமித்தம் எது என்பதுகூட அஞ்ஞானிக்கு தெரிவதில்லை, எனவே அவருடைய அறிவு தவறான அறிவாகவிருக்கிறது; மேலும் நிமித்தமே காரியத்தை செய்தது என்பது அவர் நம்பிக்கையில் இருப்பதால் அவருடைய நம்பிக்கையும் தவறானதாக இருக்கிறது. [அதாவது அஞ்ஞானி மூடநம்பிக்கையும், கெட்ட அறிவும் கொண்டவராக இருக்கிறார்.]

ஒவ்வொரு கர்மத்திற்கும் மற்றும் நோகர்மத்திற்கும் அதனதன் ஸ்திதி சுதந்திரமான தனித்தனி நிஷேக அமைப்பாக இருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் வெவ்வேறு சமயங்களில் பந்தமான ஒவ்வொரு கர்ம நோகர்மங்களின் உதயகாலமும் மற்றும் நிஷேக அமைப்பும் தனித்தனியாக இருக்கிறது. பல சமயங்களில் பந்தமான வெவ்வேறு கர்மங்களின் எந்தெந்த நிஷேகங்கள் உதயமாகிறதோ அவைகளின் ஒன்று சேர்ந்த ஒட்டுமொத்தப் பலனே நமக்கு அந்த குறிப்பிட்ட சமயத்தில் கிடைக்கிறது. கர்ம உதயத்தின் பலன் சில சமயம் தீவிரமாகவும் சில சமயம் மந்தமாகவும் நிகழ்த வண்ணம் இருக்கிறது. கர்ம உதயம் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை ஆகையால் அவைகளை சமமற்றது, அசமான் என்று சொல்லப்படுகிறது.

பிரதமானுயோகத்தில் அனேக கதைகளிலும் மற்றும் நமக்கு அறிமுகமான பலரின் வாழ்க்கையிலும் கர்மோதயத்தின் ஏற்றத் தாழ்வுகளை நாம் கண்கூடாகக் காண்கிறோம். புண்ணிய பாபங்களின் பலன் கர்மஉதயத்திற்கு உகந்தார்போல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் சாதகமான பொருள்கள் வந்து சேரும்போது தன்னை பெரியவனாகவும், சாதகமற்ற பொருள்கள் வந்துசேரும்போது தன்னை தாழ்ந்தவனாகவும் எண்ணுதல் தவறாகும். உயிர் என்னவோ இந்த இரண்டு வகையான பொருள்கள் வந்து சேர்வதைப் பார்க்கிறது. பார்த்தீர்களா! நான் முன்னர் புண்ணியம் செய்தேன் ஆகையால் இப்போது நான் இவ்வளவு சுகமாக இருக்கிறேன் என்று நம்பிக்கை கொள்கிறது. நான் புண்ணியம் செய்துகொண்டே இருந்தால் அதனால் எனக்கு பிற்காலத்தில் நல்ல பொருள்கள் கிடைத்துக் கொண்டேயிருக்கும் என்று நம்பி, புண்ணியம் செய்வது தேவையானதே, புண்ணிய கர்மம் கட்டிக்கொள்ள தகுதியானதே என்று நம்புபவருக்கு பந்ததத்துவ சம்பந்த விபரீத நம்பிக்கையே இருக்கிறது. யாருக்கு ஒரு தத்துவ சம்பந்தமான தவறான நம்பிக்கை இருக்கிறதோ அவருடைய அபிப்ராயத்தில் ஏழு தத்துவங்கள் சம்பந்தமான தவறான நம்பிக்கையே இருக்கும்.

உயிர் சுப உணர்வு கொண்டு பெரிய புண்ணியத்தை சேமித்ததென்றால் அந்த புண்ணியம் அப்படியே அதே வடிவிலேயே உதயத்திற்கு வரும் என்று எண்ணாதீர்கள். இதுவரை நாம் பந்தம், உதயம், சத்துவம் என்ற கர்மத்தின் மூன்று நிலைகளைப் பற்றி மட்டுமே தெரிந்துகொண்டிருக்கிறோம். உயிரின் உணர்வுகளுக்கு உகந்தார்போல்

சத்தாவில் இருக்கும் கர்மங்களில்கூட கொந்தளிப்பு-மாற்றங்கள் உண்டாகின்றன. உதாரணமாக யாராவது ஒருவர் லட்சகணக்கில் பணத்தை தானமாகக் கொடுத்து ஜினாலயத்தை செய்வித்தார் என்று வைத்துக்கொள்வோம். சில வருடங்களுக்குப் பிறகு அவர் ஏழ்மை நிலைக்கு வந்துவிட்டால் அப்போது அவர் அடேடே, நான் வீணாக அவ்வளவு பணத்தை தானமாக அப்போது கொடுத்தேனே, இன்று அந்த பணம் மட்டும் என்னிடமிருந்தால் எனக்கு இந்த ஏழ்மை நிலை வந்திருக்காதே! என்றோ அல்லது இதுபோன்ற வேறு அசுப உணர்வோ கொள்வாரானால், முன்னர் கட்டிக் கொண்டு, சத்தாவிருக்கும் புண்ணிய கர்மம் பாபவடிவில் மாற்றமடைந்து விடலாம், இந்த கர்ம மாற்றத்தையே **சங்கிரமணம்** என்று சொல்கின்றனர்.

கர்மங்களில் இது போன்ற 10 நிலைகள் பற்றிய வர்ணனை சாஸ்திரங்களில் வருகிறது. அந்த பத்து நிலைகளாவன **1.பந்தம், 2.சத்துவம், 3.உதயம் 4.உதீரணை, 5.உத்கர்ஷணம், 6.அபகர்ஷணம், 7.சங்கிரமணம், 8.உபசமம், 9.நிதத்தி, 10.நிகாசிதம்** என்பனவாகும். இந்த பத்து பெயர்களை நினைவில் கொள்வது எளிதான ஒன்றுதான். நாங்கள் நடத்தும் ஆகமப்பயிற்சி வகுப்புகளில் சிறிய சிறிய குழந்தைகள்கூட இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்கின்றனர், கேட்கும்போது எந்த குழப்பமுமின்றி சொல்கின்றனர்..

கர்மங்களின் இந்த பல்வேறு பெயர்களைக் கேட்டு நீங்கள் எந்தவித நடுக்கமும் கொள்ளத் தேவையில்லை. கர்மங்களின் நிலை உயிரினங்களின் உணர்வுகளின் பிரதிபிம்பமாகவே இருக்கிறது, அதாவது உயிரின் உணர்வுகளைக் காட்டும் ஒரு வெப்பமானி போன்றதாகவே கர்மம் இருக்கிறது. உயிர்களுடைய விசித்திரமான உணர்வுகளின் நிலைகளை இந்த கர்மங்களைப் பார்த்து நாம் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். எப்படியென்றால் ஒரு குழுவின் புகைப்பத்தில்-குரூப் போட்டோவில் ஒருவருடைய கண் மூடியிருக்கும், வேறு ஒருவருடைய வாய் திரந்திருக்கும், வேறொருவருடைய புருவம் மேலே போயிருக்கும். போட்டோ என்னவோ காகிதம் மற்றும் நிறங்களினால் ஆன ஒன்றாகும், ஆனாலும்கூட போட்டோ எடுக்கும்போது அந்தந்த நபர்கள் அவர்களுடைய முகத்தை எப்படி வைத்திருந்தார்கள் என்பதை காட்டும் ஒரு கருவியாக-அந்த நிலைகளை நமக்கு தெரிவிப்பதாக இருக்கிறதல்லவா அதுபோல கர்மங்கள் உயிரின் அந்தந்த சமய உணர்வுகளை நமக்கு தெரியப்படுத்தும் ஒரு கருவி போலவே இருக்கின்றன.

ஒரு சமயம் உயிர் விருப்பு, வெறுப்பு, மயக்க உணர்வு கொள்கிறது என்றால் அதனால் என்னென்ன காரியங்கள் நிகழ்கின்றன என்று பாருங்கள். ஒன்று அந்த சமயத்தில் உயிர் துக்கமடைகிறது, ஏனெனில் விருப்பு, வெறுப்பு, மயக்க உணர்வுகள் துக்கத்திற்கு காரணமாகும். இரண்டாவதாக அந்த உணர்வுகளின் நிமித்தத்தால் எட்டு கர்மங்களும் பந்தமாகின்றன, அவை பிற்காலத்தில் உதயத்திற்கு வரும்போது உயிருக்கு அந்த குறிப்பிட்ட உணர்வுகளையே பலனாகத் தருகின்றன. மூன்றாவதாக அந்த உணர்வுகளை நிமித்தமாகக் கொண்டு முன்னர் கட்டிக்கொண்டு இப்போது சத்தாவில் இருக்கும் பழைய கர்மங்களில் மாற்றங்கள் நிகழ்கின்றன. **[**இதையே உத்கர்ஷணம், அபகர்ஷணம், சங்கிரமணம் என்று சொல்கின்றனர்.**]**

கர்ம உதயங்களின் பக்கம் பார்த்துக் கொண்டே இருக்கும் உயிர் விருப்பு, வெறுப்பு, மயக்க உணர்வுகள் அடைந்த வண்ணம் இருக்கும், அதனால் இடைவிடாது புதிய கர்மங்கள் பந்தமாகிக் கொண்டே இருக்கும். ஆனால் உயிர் தன் ஸ்வரூபத்தை-முக்காலத்திலும் மாறாமல் இருக்கும் தன் இயலபை, ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட ஆகமங்கள்வழி அறிந்து, கர்ம உதய பலன்களில் ஒன்றுவதை விட்டுவிட்டு,

தன் இயல்பு ஸ்வபாவத்தின் மேல் கவனத்தை நிலைநிருத்தி, அதையே கருத்தில் கொண்டு, அதை பரிசீலனை செய்து, அதையே அசைபோட்டு, அதிலேயே ஆழ்ந்து யோசனை செய்து, அதையே அனுபவம் செய்யுமானால் அந்த உயிரின் மூடநம்பிக்கை-மித்தியாத்துவம் அழியும், விருப்பு வெறுப்பு கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் போகும். அதன் முக்திப்பயணம் தொடங்கிவிடும். பேதவிஞ்ஞானம்-பிரித்தறியும் அறிவில் முழு கவனத்துடன் ஆராய்ச்சி செய்து, அதனால் தானாகவே ஆத்மானுபவத்தில் திளைத்து, அந்த நிலையே நீடிக்குமானால் வீதராக-விருப்பு வெறுப்பற்ற நிலையை அடையும், பிறகு சர்வஞ்ஞனாகும். அதற்குப்பிறகு மீதமுள்ள கர்மங்கள் கூட உயிர் பிரதேசத்திலிருந்து விழுந்துவிடும்-ஷயமாகிவிடும், நோகர்மம்கூட அதன் ஸ்திதி பூரணமடைய அதுவும் இல்லாமல் போகும். அந்த நிலையில் உயிர் திரவ்வியகர்மம், பாவகர்மம், மற்றும் நோகர்மம் எதுவும் இல்லாமல் முழுமையான சுத்த ஸ்வரூபத்தை வெளிப்படுத்தும் அதாவது பர்யாயத்திலும் சுத்த நிலையே வெளிப்படும். இதுவே **சித்த** நிலையாகும்.

நான் கூட ஸ்வபாவத்தால் அப்படிப்பட்ட சுத்தாத்துமா வாவேன், மேலும் பர்யாயத்தில் கூட அல்ப காலத்திலேயே-குறுகிய காலத்திலேயே சுத்தாத்துமா நிலையை வெளிப்படுத்துவேன் என்ற திடநம்பிக்கை கொள்வோம்! அப்படி திடநம்பிக்கை கொள்வோமானால் நாம் அவசியம் போற்றத்தக்க, புகழ்பெற்ற, சிறப்புவாய்ந்த, பிரகாசமான சித்த நிலையை சீக்கிரமே அடைவோம்!

- உங்கள் அம்மா.

உயிர் மற்றும் கர்மத்தின் சுதந்திரம்

கடிதம்-6 ஓம் நம: சித்தேப்ய: 30-07-1999

பிரிய ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

மகள்களே! நான்கு அனுயோகங்களின் பிழிவும் வீதராகம் பற்றியதே யாகும். பிரதமானுயோகம், கரணானுயோகம், சரணானுயோகம் மற்றும் திரவ்யானுயோகம் ஆகிய இந்த நான்கு அனுயோகங்களும் நமக்கு எதைக் கூறுகின்றன என்பது பற்றி கடிதம் மூலம் **சமண தத்துவ அறிமுகம்** என்ற நூலின் விரிவாகப் பார்த்தோம். அப்போது நாம் முக்கியமாக திரவ்யானுயோகம் மூலம் வஸ்த்துக்களின் இயல்பு பற்றி தெரிந்து கொள்ள முயற்சி செய்தோம். இப்போது நாம் கரணானுயோகத்தில் சொல்லப்படும் விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

கர்மங்களின் மிகவும் நுட்பமான விளக்கங்கள், அதன் பத்து நிலைகள், கர்ம பந்தம் மற்றும் அதன் அழிவு, கர்மங்களிடமிருந்து விடுதலைக்கான வழிமுறை முதலிய எல்லா விஷயங்களையும் எடுத்துச்சொல்ல சர்வஞ்ஞரைத் தவிர வேறு யாருக்குத் தகுதி இருக்கிறது? இந்த எல்லா விஷயங்களையும் சர்வஞ்ஞர் தன் கேவலஞானத்தின் வழி நேரடியாகப் பார்த்தறிந்து நமக்கு கூறியிருக்கிறார். யாரும் தன் கற்பனையால் இந்த கர்ம ஏற்பாடுகளைச் செய்யவில்லை.

இந்த கர்மம் பற்றிய எல்லா சித்தாந்தங்களையும் தெரிந்து கொள்ள என்ன அவசியம் இருக்கிறது? இதில் இருக்கும் கணிதம், மற்றும் கர்மங்களின் நிலைகள் பற்றி எதுவும் அறியாத நபர்கள்கூட நற்காட்சியை அடைய முடியுமல்லவா என்று நீங்கள் கேட்கலாம். அரே! இதன் அவசியம் பற்றி மட்டுமே நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள் என்றால் நான் உங்களை ஒன்று கேட்கிறேன், வயிறு நிறம்ப 3-4 ரொட்டியுடன் பருப்பு, சாதம், காய்கறிகள் மட்டுமே சாப்பிட்டால் போதுமல்லவா! பிறகு ஏன் தினமும் பல விதமான, வகை வகையான உணவுகளைச் சமைக்கிறோம்? இரண்டு ஜோடி துணிகள் நாம் உடுத்திக்கொள்ள போதுமல்லவா, பிறகு ஏன் பல வண்ணங்களில், புதுப்புது நாகரீகமான உடைகளை அவ்வப்போது வாங்குகிறோம்? தினமும் ஏன் செய்தித்தாள்களை படிக்கிறோம்? ஏன் தினமும் டெலிவிஷன் பெட்டியில் நிகழ்ச்சிகளை பார்க்கிறோம்? சுவாத்யாயம் பற்றி மட்டும் என்ன அவசியம் என்ற கேள்வி எழுப்புவோமானால், நம்முடைய ருசி எங்கே இருக்கிறது என்பதை யூகிக்க முடிகிறதல்லவா! இந்த கேள்வியை ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களையே கேட்டுக்கொள்ள வேண்டும், அடுத்தவர் பக்கம் மட்டுமே சைகை காட்ட வேண்டிய அவசியமில்லை.

மகள்களே, நம் மனம் பங்கு சந்தையைப்போல மிகச் சிக்கலானது. அதற்கு தினமும் புதுப்புது ஊக்குவிப்புகள் தேவைப்படுகின்றன. செய்திகளைத் தெரிந்து கொள்ள நாம் தினசரி பத்திரிக்கைகளைப் படிக்கிறோம், டெலிவிஷனில் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம் ஏனென்றால் நமக்கு இருக்கும் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற இச்சையை திருப்தி படுத்த விரும்புகிறோம். திரைப்படம் அல்லது டிவி சீரியல் பார்க்கும்போது, அடுத்து என்னவாகும் என்பது பற்றி தெரிந்து கொள்ளும் ஆவலுடன் அதை கவனமாகப் பார்க்கிறோம், என்ன நடக்கும் என்று யூகிக்கிறோம், பிறகு அதைப்பற்றிச் சர்ச்சைகூட செய்கிறோம். அந்த சமயத்தில் இவைகள் எல்லாம் கற்பனைகள் என்பது நமக்கு தெரிந்தது தான். கதை எழுதுபவரின் கற்பனையில் எழுந்த

கதைகள் மற்றும் டீவி சீரியலில் நடிக்கும் நடிகர்கள், இந்த பாத்திர வேடங்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதும் நமக்கு தெரிந்ததுதான். ஆனாலும்கூட தினமும் 3-4 மணி நேரம் அல்லது அதற்கு மேலும் அந்த நாடகங்களைப் பார்த்து, அந்த பாத்திரங்களின் சுக துக்கங்களில் ஒன்றி, நாமும் கூட விருப்பு வெறுப்பு கொள்கிறோம்-அதையே சுகம் என்றும் நம்புகிறோம், ஆனால் உண்மையில் அதனால் நமக்கு துக்கமே உண்டாகிறது. சாஸ்திர மொழியில் இதை **விகதை** என்று சொல்கின்றனர். இது பிரமாதம் என்பதின் அதாவது விழிப்பின்மையின் ஒரு அங்கமேயாகும். கர்ம பந்தத்தின் காரணங்களைத் தெரிந்து கொண்ட போது பிரமாதமும் அதற்கு ஒரு காரணம் என்று பார்த்தோம். ஆனால் அதை தெரிந்து கொள்வதின் அவசியம் என்ன வென்று இன்றுவரை யாராவது நமக்கு நாமே கேட்டுக் கொள்ளவே யில்லை. தேவையற்ற விஷயங்களில் ஈடுபடுவதால் கர்ம பந்தம் என்ற தண்டனை நமக்குக் கிடைக்கிறது ஆகையால் இதை **அனர்த்த தண்டம்** என்று சொல்கின்றனர். ஆனால் அந்த தலைப்பு வேறு ஒரு விஷயமாகும்.

கரணானுயோகத்தை படித்து நாம் வீதராகத்தன்மையைப் பற்றிய அறிவைப் பெறுகிறோம். பொதுவாக அறிவதைவிட எந்த விஷயத்தையும் விரிவாகவும், ஆழமாகவும் தெரிந்து கொள்ளும்போதுதான் நமக்கு அதன் மகத்துவம் புரிய வருகிறது. **பொதுவாக விளக்கமளிக்கும் சாஸ்திரங்களைவிட நுட்பமான விஷயங்களை விளக்கும் சாஸ்திரங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை** என்று சாஸ்திரத்திலேயே சொல்லப் பட்டிருக்கிறது. கரணானுயோகத்தைப் படித்து வீதராகத் தன்மையை அடைவது கூட ஒரு நுட்பமான-சூட்ஷமமான கலைதான்.

கரணானுயோகத்தின் விஷயம் மிகவும் நுட்பமானதாக இருக்கிறது. அதை ஸ்வாத்யாயம் செய்யும் போது மனதை ஒருநிலைப் படுத்தி கற்க முயல்வது மிகவும் அவசியமாகும். இதில் சொல்லப்படும் சில கணிதங்கள் கடினமானதாகவும், கூர்மையான புத்தி உள்ளவர்களுக்குக்கூட வியர்வையை வர வைக்கக் கூடியதாகவும், குழப்பமடையச் செய்ய வல்லதாகவும் இருக்கின்றன. ஆனால் உற்சாகத்துடன் தெரிந்து கொள்ள முயல்பவர்களுக்கு உபயோகத்தில் சூட்ஷமத்தன்மை உண்டாகிறது, அதில் கூறப்படும் விஷயம் அவர்களின் பிடியில் வருகிறது. சம்யக்த்துவ காரண நோக்கில் சொல்லப்படும் பல காரணங்களின் ஒன்று **பீஜ சம்யக்த்துவம்** என்பதாகும். கரணானுயோகத்தின் பீஜ கணக்குகள் கூட சம்யக்த்துவம் பெறக் காரணம் என்று சொல்லப்படுகிறது, அதாவது கரணானுயோகத்தை ஸ்வாத்யாயம் செய்யும்போது உபயோகத்தில் ஒன்றிவிடும் அதே தன்மையை, ஸ்வசன்முக் கொள்ளும்போதும், அதாவது தன்பக்கம் திரும்பி நோக்கும் செயலின் போதும், பழக்கப்பட்ட அந்த சூட்ஷம உபயோகத்தில் ஒன்றி சம்யக்த்துவம் பெறப்படுகிறது, அடையப்படுகிறது.

குணஸ்தானம், மார்க்கணை, பர்யாப்தி, பிராணன், சஞ்சை, உபயோகத்தின் பிரிவுகள் முதலிய சம்பந்தமான யதார்த்த மற்றும் விரிவான விளக்கங்கள் சமண சித்தாந்தங்களில்தான் இருக்கின்றன, வேறு எந்த சித்தாந்தங்களிலும் இது போன்ற விளக்கங்கள் இல்லை. மற்ற தர்மங்கள்கூட **நான் ஆத்மா, ஆத்மா தூய்மையாக இருக்கிறது, அகர்தாவாக இருக்கிறது, அபோக்தாவாக இருக்கிறது** என்று சொல்கின்றன. ஆனால் அந்த தர்மங்கள் எப்போதும் அவைகளை அவ்வாறே நம்புகின்றன. அவைகளைக் கேட்டு சில நம்மவர்கள்கூட **அரே, நம் சாஸ்திரங்களில்கூட இவ்வாறுதான் படித்திருக்கிறேன்** என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், சமண சாஸ்திரங்களில் இவ்வாறு சொல்வது நிச்சய நயத்தால் சொல்லப் பட்டதாகும், மற்றும் வியவஹார நயத்தால் சொல்லும்போது உயிருக்கு உடல், புலன்கள், கர்மம், குணஸ்தானம் முதலியவைகள் இருக்கின்றன என்றும் அதைப் பற்றிய

விளக்கங்களும்கூட சொல்லப் பட்டிருக்கின்றன. பிற தர்மங்கள் இதைப்பற்றி எதுவும் தெரிந்தவர்களாக இல்லை மற்றும் **பிரம்மா சத்-இருக்கிறது, உலகம் மித்யா-மாயை** என்று சொல்லிக்கொண்டு பிற திரவியங்கள் மற்றும் அதன் பர்யாயங்களை முழுமையாகவே இல்லை என்று நம்பி அவைகளை ஒட்டு மொத்தமாக நிராகரித்து விடுகின்றன.

இப்போதெல்லாம் பலரிடம் ஒரு ஆபத்தான மாயை காணப்படுகிறது. அவர்கள் டிவியில் அல்லது பொது இடங்களில் பிற தர்மத்தினரின் பிரவசனங்களை கேட்கின்றனர். அவைகளில் நாங்கள் நல்லவைகளை மட்டுமே ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்கின்றனர். அவைகளைக் கேட்பதால் அல்லது தெரிந்து கொள்வதால் மட்டுமே நமக்கு எந்த இழப்பும் நிகழப்போவதில்லை என்று எண்ணுகின்றனர். ஆனால் யாருக்கு தத்துவத்தில் தெளிவில்லையோ அவருக்கு அந்த நபரின் மேல் மற்றும் அவர் சொற்பொழிவின் மேல் நல்ல அபிப்ராயம் வருகிறது, அதனால் அவர்கள் தவறான நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் அபாயத்தில் சிக்கிக்கொள்ள நேரிடுகிறது. ஏனென்றால் யார் மோசமான பொருள்களை விற்க வேண்டுமோ அவர் அந்த மோசமான பொருள்களை காட்டுவதேயில்லை, நல்ல பொருள்களுடன் கலந்தே விற்பனை செய்வார்கள். யாருக்கு நல்லது எது? கெட்டது எது? என்று தெரியாதோ அவருக்கு கெட்டதே கிடைக்கிறது அதாவது அவர் விபரீதமான அபிப்ராயத்தையே ஏற்றுக் கொள்கிறார்! சாஸ்திரத்தில் இதை **அனாயத்தன்** என்று சொல்கின்றனர். குதேவ், குகுரு, குசாஸ்த்திரம் மற்றும் அவைகள் ஓவ்வொன்றுக்கும் சேவை செய்பவர், பக்தர் இந்த ஆறு விஷயங்களின் மேல் மரியாதை உணர்வு கொள்ளுதல், அவைகளைப் பாராட்டுதல் எல்லாமே ஆறு அனாயத்தன் களில்தான் அடங்கும், இது தோஷமாகும், குற்றமாகும். இந்த தோஷங்கள் நிகழ்வதோடல்லாமல் அப்படிப்பட்வர்கள் சம்யக்தரிசனத்தை அடைய முடியாமல் போகிறது.

அவர்களிடம் ஸ்வரூபானுபவமும், பேதஞானத்தின் உபயோகமும் நிலைத்து இருப்பதில்லை, சரியான தேர்வு செய்ய முடியாமல் உபயோகம் அடிக்கடி மாற்றமடைந்து கொண்டேயிருக்கும். அந்த சமயத்தில் கரணானுயோகத்தை பயில்வதால் எல்லா சிறப்பான விஷயங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. ஆத்ம குணங்கள் அதிக அபிவிருத்தி அடைகின்றன, ஏனென்றால் உண்மையான விஷயங்களில் அறிவு பெறுதல் அறிவின் அபிவிருத்தியேயாகும். இதிலிருந்து உயிர் சம்பந்தமான நம் நம்பிக்கை திடமாகிறது. உயிர் மற்றும் கர்மம் பற்றி விரிவான விளக்கம் பெறுவதால் **ஸ்வ** எது? மற்றும் **பிற** எது? என்பதன் தெளிவான படம் நம் மனக்கண் முன்னால் வெளிப்படுகிறது, பேதவிஞ்ஞானம் உறுதிப்படுகிறது.

மித்யாதிருஷ்டி, சம்யக்திருஷ்டி, விரதி, முனி, அரஹந்தர், சித்தர் முதலான எல்லோருடைய இயல்புகளும் நம் அறிவில் தெளிவாகப் பிரகாசிக்கின்றன. அதன் பலன் நம்மை நாமே யார் என்று உறுதி செய்யும் சக்தியை நாம் பெறுகிறோம். பிறர் செய்வதைப் பார்த்து, அல்லது மற்ற மதங்களில் எப்படிச் செய்கிறார்கள் என்று பார்த்து [அதாவது பிறரைப் பார்த்து காப்பியடித்து] அப்படியே நம் செயலும் இருக்க வேண்டும் என்ற அணுகுமுறை நம்மிடமிருத்து மறைந்து போய்விடுகிறது. எது தகுதியானது, எது தகுதியற்றது என்ற உறுதிப்பாடு நமக்கு வந்து விடுகிறது. பிறருக்குக் காட்ட வேண்டும் என்றோ அல்லது நம் சமுதாயத்தில் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பயத்தின் காரணத்தாலோ எதாவது செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போகிறது. நம்முடைய நோக்கம் என்ன என்பது பற்றிய திடநம்பிக்கை நமக்கு உண்டாகிறது. இவ்வுலக பயம் மற்றும் பரலோக பயம் நம்மை விட்டு விலகுகிறது.

நாம் இதுவரை எதைப் படித்தோமோ அதில் நம் (ஆத்மாவின்) வாழ்க்கை மற்றும் மரணம் என்றால் என்ன என்பது பற்றி தெரிந்து கொண்டோம். உயிர் எப்போதும் வாழ்ந்து கொண்டே-அதாவது அழிவை சந்திக்காமலேயே ஒரு உடலை விட்டு விட்டு அதாவது மரணத்திற்குப் பிறகு 1 முதல் 4 சமயங்களில் புதிய புத்கல பரமாணுக்களை கிரஹித்து தனக்கு வேண்டிய புதிய உடலை உருவாக்கம் செய்து கொள்கிறது, அதற்கு குறிப்பிட்ட ஒரு கர்மம் நிமித்தமாக இருக்கிறது என்பது பற்றிய அறிவு பெற்ற பிறகு நமக்கு மரண சம்பந்தமான பயம் குறைந்து விட்டதா இல்லையா? என்று சிந்தியுங்கள்.

பிற தர்மங்களில் மனிதன் காரியம் செய்கிறான், கடவுள் அவனுக்கு அதற்கான பலனைத் தருகிறார் என்று நம்புகின்றனர். அவர்களுடைய இந்த கடவுள் சம்பந்தமான நம்பிக்கை தவறானதாகும். ஒருவேளை அவர்கள் கடவுளுக்கு கௌரவ சக்திகொன்ட வேலைக்காரன் பதவி கொடுத்திருக்கிறார்கள் போலும்! நீங்கள் புண்ணியம் பாபம் செய்வீர்கள், அதை கடவுள் கணக்கு வைத்துக்கொண்டு உங்களுக்கு பலன் கொடுக்கிறாரா என்ன?

மகள்களே, கர்மத்தின் இந்த எல்லா ஏற்பாடுகளும் தானாகவே செயல்படுவதாகும். தானியங்கியாக (automatic-காக) இயற்கையாகவே நிகழ்வதாகும். உயிரின் ஒவ்வொரு சமய ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகளின் அளவீடு-மதிப்பீடு இந்த கர்மங்களால் தான் அளக்கப்படுகிறது-கணக்கு வைத்துக் கொள்ளப்படுகிறது. ஒருவர் செய்யும் கொலை மற்றும் குற்றங்கள் அரசாங்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட நீதிமன்றத்தின் கண்களிலிருந்து வேண்டுமானால் மறைக்கப்படலாம், ஆனால் கர்மத்தின் பிடியிலிருந்து அவை எதுவும் தப்பிக்க முடியாது. ஒரு கொலை செய்தாலும், நான்கு கொலை செய்தாலும் தூக்கில் தொங்குவது ஒருமுறை தான் என்று சொல்பவர்களுக்கு, கர்ம சட்டதிட்டத்தின் விதிமுறைகள் பற்றிய அறிவு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கர்ம சட்ட நீதிமன்றத்திலிருந்து தப்பிக்க நாம் வாழும் இந்த லௌகீக உலகில் காணப்படும் தகடுதத்தங்களான ஊழல், லஞ்சம் முதலான எந்த குறுக்கு வழியும் இல்லை.

நீங்கள் இப்படி சொல்லக்கூடும் **அப்படியா? அப்போ நல்லத போச்சு, கர்மம் அவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருந்தால், நாம் இப்போது அதற்கே பூஜை செய்ய வேண்டியதுதான். அதை வணங்கி அதனிடம், அரே பாபா! இப்போது என்னை விட்டுவிடு என்று வேண்டுதல் வைக்க வேண்டியது தான்!** சிலர் **எதுவும் தெரியாமல் இருந்தபோது நாம் சுகமாக இருந்தோம். இப்போது கர்மத்தை பற்றிய அறிவு பெற்றதால் கர்ம பயம் நம்மை தொற்றிக் கொண்டது** என்றுகூட சொல்லலாம்.

நம்முடைய இயல்பான வடிவை-ஸ்வரூபத்தை தெரிந்து கொள்ளாததால்தான் இப்படிப்பட்ட தவறான எண்ணங்கள் நமக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையால் கர்மங்களின் 10 நிலைகளின்-அவஸ்தைகளின் இயல்பை-ஸ்வரூபத்தை பற்றி பார்க்கும் முன் நான் இப்போது உங்களுக்கு நம் சுய ஸ்வரூபம் அதாவது சுய இயல்பு பற்றியும், நம் சுய சாமர்த்தியம் பற்றியும் நினைவு படுத்த விரும்புகிறேன். இதை படிக்கும் ஒவ்வொருவரும் இதை சிந்தனை செய்து, தங்களுக்குத் தாங்களே இவ்வாறு சொல்லிக் கொள்ள வேண்டும்:

ஹே உயிரே! நீ சேத்தன மயமானவன், முதலும் முடிவும் இல்லாதவன்-அனாதிஅனந்தமாக இருப்பவன், ஸ்வயம்சித்தன்-யாரும் உன்னை உருவாக்கவில்லை. நீ சுயமாகவே உன் அறிவு முதலான அனந்த குணங்களுடன் பரிபூரணமாக-எல்லாம் நிறைந்தவனாக-எந்த குறையும் இல்லாதவனாக இருக்கிறவன். நீ உன் சுயசக்தியால் எல்லா குணங்களுடன் கீலால் பிணைக்கப்பட்டது போல எதனாலும் பிரிக்க முடியாத ஒரு பொருளாக நிலைத்து

இருக்கிறாய். மேலும் நீ ஸ்வயமாகவே பரிணமிக்கும்-உணர்வுகளை வெளிப்படுத்தும் சக்தியின் காரணத்தால் பரிணமிக்கவும் செய்கிறாய்-அதாவது நீ உணர்ச்சிகள் எதுவுமில்லாத ஜடமாக இல்லை. ஒவ்வொரு திரவியமும் அதன் பர்யாயங்களின் கர்த்தா-அதாவது தன்னில் ஒவ்வொரு சமயமும் மாற்றங்களை உண்டு பண்ணுவது. ஒரு திரவியம் வேறொரு திரவியத்தின் பர்யாயங்களை செய்யும் கர்த்தாவாக இருக்க முடியாது. இதனால் ஸ்வபாவ-சுத்த பர்யாயமாக இருந்தாலும் அல்லது விபாவ-அசுத்த பர்யாயமாக இருந்தாலும், அதன் கர்த்தா அந்த குறிப்பிட்ட திரவியமேயாகும், வேறு எந்த திரவியமுமில்லை என்பது உறுதியாகிறது.

ஹே உயிரே! உமது அறியும் வடிவ பர்யாயத்தின் கர்த்தா ஸ்வயம் நீயே ஆவாய். அறியப்படும்-ஞேய பொருள்களின் காரணத்தால் இந்த அறிவு வரவில்லை ஆனால் உன் சுய ஞான பர்யாயத்தின் தகுதியால்தான் உன்னுடைய அறியும் செயல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உன்னுடைய சாரித்திர-ஒழுக்க குணத்தின் விருப்பு, வெறுப்பு வடிவ பர்யாயம் நிகழ்கிறதே, அதன் கர்த்தா கூட ஸ்வயம் நீயேதான், வேறு எந்த பிற திரவியமும் உன்னை விருப்பு, வெறுப்பு கொள்ளும்படி செய்வதில்லை. பகவானைப் பார்த்ததால் சுப உணர்வு வருகிறது மற்றும் பகைவனைப் பார்த்ததால் அசுப-பகை உணர்வு வருகிறது என்பதாக பொருள்களின் இயல்பு இல்லை.

ஹே உயிரே! நீ என்னவோ இயல்பாகவே-ஸ்வத: அரூபியாக-புலன்களால் அறிப்பட முடியாத ஒரு பொருளாக இருக்கிறாய், ஆனால் நிகழ்காலத்தில் உருவமுடைய புத்தகலத்தை(உடலை) அறிந்துகொண்டு இருக்கிறாய். ஐந்து இந்திரியங்களின் நிமித்தத்தின் மூலம் அறிபவன் என்னவோ ஸ்வயம் நீயே தான், ஆனால் உன் அறிவில் வருவது என்னவோ ஸ்பர்சம் [மழமழப்பு-சொரசொரப்பு, மென்மைத்தனமை-கடினத்தன்மை, பசை-வரட்சி, சீதம்-உஷ்ணம்], சுவை, மணம்-வாசனை, நிறம்-வண்ணம் மற்றும் சப்தம் முதலியனவாகும். இவை எல்லாம் புத்கலத்தின் பர்யாயங்களாகும் ஆகையால் இவைகளின் கர்த்தா புத்கலமேயாகும். ஆனால் உடல் வடிவ புத்கலத்தையே நீயாகக் காண்கிறாய், அதாவது உடலையே **இதுதான் நான்** என்று தவறான நம்பிக்கை கொண்டு நீ அதில் **ஏகத்துவபுத்தி** கொள்கிறாய். அதாவது உன்அறிவில் பார்க்கும் புத்கலத்தையே-உடலையே நீதான் என்று நம்பிக்கை கொள்கிறாய். உடலின் பர்யாயங்களை உன்னுடைய-ஸ்வயம் ஆத்மாவினுடைய பர்யாயங்களாக நம்பி இதில் **மமத்துவபுத்தி** [உடலின் காரியம் என்னுடைய காரியம் என்ற அறிவு] கொள்கிறாய். நானே இதை-உடலின் செயல்களை செய்பவன் என்று நம்பி **கர்த்ருத்துவபுத்தி** கொள்கிறாய். புத்கலத்தின்-உடலின் பர்யாயங்களை நீ என்னவோ பார்த்து மட்டுமே அறிந்தாய் ஆனால் நான் இதை அனுபவிப்பவன் என்று நம்பி நீ **போக்த்ருத்துவபுத்தி** கொள்கிறாய்.

பிற பொருளின் (உடலின்) பர்யாயங்களில் ஏகத்துவ வடிவமாக-அதுவே நீயாக, மமத்துவ வடிவமாக-அதுவே உன்னுடையதாக, கர்த்ருத்துவ வடிவமாக-அது செய்வதை நீயே செய்வதாக மேலும் போக்த்ருத்துவ வடிவமாக-அதன் அனுபவத்தை உன்னுடைய அனுபவமாக எண்ணுதல் உன்னுடைய விபரீத நம்பிக்கையாகும்-இதுவே உன்னுடைய (ஸ்வயம் ஆத்மாவினுடைய) மித்யாத்வமாகும்-உன்னுடைய (ஸ்வயம் ஆத்மாவினுடைய) ஸ்ரத்தை குணத்தின் விபரீத பர்யாயமாகும். ஸ்ரத்தா குணத்தின் இந்த அதத்துவ வடிவ ஸ்ரத்தான [தத்துவமில்லாததில் நம்பிக்கை கொள்ளும்] பர்யாயம் கூட ஸ்வயம் உன்னாலேயே செய்யப்படுவதாகும்-அதாவது அதற்குக் காரணம் நீயே தான், கர்மம் உன்னை மித்யாத்துவம்-மூடநம்பிக்கை கொள்ளும்படிச் செய்யவில்லை. நீ சம்யக்துவம் அடைய வேண்டுமென்றால், அந்த பர்யாயம்கூட உன்னுடைய காரணத்தால்தான் உன்னில்

வெளிப்படும். வேறு பகவான், குரு, கர்மம் அல்லது நிமித்தம் போன்ற யாரவது உனக்கு சம்யக்துவத்தை வழங்குவதில்லை, வழங்கவும் முடியாது!

ஹே உயிரே! நீ எப்போது புத்கலத்தை அறிகிறாயோ அப்போது இந்த அறியும் காரியம் உன்னுடைய ஞான பர்யாயத்தின் சுய காரணத்தால் தான் நிகழ்கிறது, புத்கலத்தின் காரணத்தால் அல்ல. ஆகையால் நீ உன்னுடைய ஞான பர்யாயங்களை செய்பவனும்-அறிபவனுமாவாய் அதாவது கர்த்தா-போக்த்தா ஆவாய். பிற திரவியங்களின் கர்த்தா-போக்த்தாவாக நீ இல்லை.

பிற திரவியங்களை பார்த்துக் கொண்டே நீ விருப்பு வெறுப்புகூட கொள்கிறாய் அதனால் விருப்பு வெறுப்பகளுக்குக்கூட நீ கர்த்தா-போக்த்தா என்று சொல்லமுடியும். உண்மையில் இந்த விருப்பு வெறுப்பு கொள்ளும் காரணத்தால் நீ துக்கமடைகிறாய் ஆனால் பிற திரவியங்களை அனுபவிக்கும் காரணத்தால் தான் நான் சுக-துக்கங்களை அடைகிறேன் என்று நம்புகிறாய், அதுவே உன்னுடைய அஞ்ஞானம் மற்றும் மித்யாத்துவமாகும்.

எந்த ஒரு பிற திரவியமோ, பிற உயிரோ, கர்மமோ அல்லது நிமித்தமோ எந்த ஒரு உயிருக்கும் இன்றுவரை சுகத்தையோ, துக்கத்தையோ கொடுக்கவில்லை, விருப்பு வெறுப்பை உண்டுபண்ணவே இல்லை. ஹே உயிரே! உன்னுடைய குழப்பம் மற்றும் அஞ்ஞாத்தின் வசத்தால்தான் நீ துக்கமடைகிறாய். முன்னர் நீ பிற பொருள்களே உன் சுகதுக்கத்திற்கு காரணம் என்று நம்பினாய். சாஸ்திர சுவாத்யாயம் செய்த பிறகு, இப்போது கர்மமே உன்னுடைய விருப்பு, வெறுப்புகளுக்கு கர்த்தா மற்றும் சுக துக்கங்களை உனக்கு தானமாக கொடுப்பது என்று யூகித்து கர்மமே உன் எல்லா நிலைகளுக்கும் காரணம் என்று நம்புகிறாய்.

கர்மமே என்னை சம்சாரத்தில்-பிறவி சுழற்சியில் அலைந்து திரிய வைக்கிறது, கர்மமே என்னிடம் ஆசை, வெகுளி, மயக்கங்களை உண்டாக்குகிறது, கர்மமே என்னை அஞ்ஞானியாக ஆக்குகிறது, கர்மமே நான் சம்யக்துவம் அடைவதில் தடையாக இருக்கிறது, அதுவே எனக்கு நல்ல உறவுகளையும், செல்வத்தையும் கொடுக்கிறது என்ற மூட கற்பனைகளில் நீ மூழ்கி இருக்கிறாய். நான் நல்ல உணர்வு கொண்டு நல்ல கர்மங்களைக் கட்டிக்கொள்ள வேண்டும் ஏனென்றால் அந்த புண்ணிய கர்மமே என்னை நல்ல கதிக்கு கொண்டு செல்லும் என்ற (மூட) நம்பிக்கையைக் கொண்டிருக்கிறாய்.

அடே நண்பா! நீ என்னவோ சேத்தன மயமானவன். உன்னுடைய சுத்த, அசுத்த பர்யாயங்கள் உன்னிடம் உன் சுய காரணத்தால்தான் வெளிப்படுகிறது. உன்னுடைய பர்யாயங்கள் உன்னில் நிகழும்போது, கர்மத்தில் என்ன நிலைகள் உருவாகின்றதோ, எந்த மாற்றம் நிகழ்கிறதோ அதை தெரியப்படுத்தவே சாஸ்திரங்களில் கர்மத்தின் நிலைகள் பற்றிய வர்ணனை வருகிறது. ஓரே சமயத்தில் உன்னில் நிகழும் காரியத்திற்கும், கர்மத்தில் நிகழும் காரியத்திற்கும் நிமித்த-நைமித்திக சம்பந்தம் இருக்கிறது, கர்த்தா-கர்ம சம்பந்தம் இல்லை.

உன்னிடம் என்ன உணர்வு வருகிறாதோ அந்த சமயத்தில் கர்மத்தில் எந்த அவஸ்தை நியமமாக-விதிமுறைப்படி நிகழ்கிறதோ அதைப்பற்றி தெளிவுபடுத்தும் முகமாக இரண்டின் பெயர்களும் ஒன்று போலவே இருக்கிறது என்பது உண்மைதான். உதாரணமாக உயிர் அதன் சுய காரணத்தால் அதன் அல்ப அறிவை வெளிப்படுத்தும்போது ஞானாவரண கர்மத்தின் ஷயோபசமநிலை காணப்படுகிறது. ஆகையால் அந்த அல்பஞான பர்யாயத்தை

ஷயோபசம ஞானம் என்று சொல்கின்றனர். உயிர் எப்போது சுயமாகவே ஆசை, வெகுளி, மயக்க வடிவில் பரிணமிக்கிறதோ அப்போது மோஹனீய கர்மத்தின் உதயநிலை காணப்படுகிறது, ஆகையால் உயிரின் இராக, த்வேஷ, மோஹ உணர்வுகளை **ஔதயிக பாவம்** என்று சொல்கின்றனர். உயிர் முதன்முதலில் எப்போது சம்யக்துவத்தை அடைகிறதோ அப்போது கர்மத்தில் தர்சனமோஹனீயம் மற்றும் அனந்தானுபந்தி கர்மத்தின் உபசமநிலை காணப்படுகிறது ஆகையால் உயிரின் இந்த உணர்வை **ஔபஷமிக சம்யக்துவம்** என்று சொல்கின்றனர்.

உயிர் கேவலஞான வடிவ பர்யாயத்தை சுயமாகவே அதன் நிஜசக்தியால் வெளிப்படுத்தும்போது கர்மத்தில் கூட அதன் சுயகாரணத்தால் ஞானாவரண கர்மத்தின் அழிவு காணப்படுகிறது ஆகையால் உயிரின் அந்த ஞானபர்யாயத்திற்கு **ஷாயிக ஞானம்** என்று சொல்கின்றனர். ஷாயிக ஞானம் ஞானாவரண கர்மத்தின் அழிவால் உற்பத்தியாகவில்லை, அது என்னவோ உயிரின் சுய உணர்வாலாகும்-ஸ்வபாவமாகும். உயிரின் சுய காரணத்தால் தோன்றியதாகும்.

அதுபோல ஹே உயிரே! உன்னுடைய இப்போதைய ஷயோபசம ஞானம் இருக்கிறதே அது அதாவது தற்காலத்தில் வெளிப்படும் ஞானம்-மூடப்படாமல் திறந்திருக்கும் அறிவு, கர்மத்தின் ஷயோபசமத்தால் உற்பத்தியாகவில்லை, அது உன்னுடைய சுய சுவபாவத்திலிருந்தே அதாவது உன் இயல்பான ஞான குணத்திலிருந்தே உற்பத்தியான தாகும்.

கர்ம செயல்பாட்டின் எல்லை கர்மத்தால் கர்மத்திலேயே ஷயோபசம நிலையை அதாவது கொஞ்சம் அழிவும் கொஞ்சம் தணிவும் அடையச் செய்வதுவரை மட்டுமேயாகும், உயிரின் உணர்வில் அது எந்த மாற்றத்தையோ, செல்வாக்கையோ, உதவியையோ செய்ய இயலாததாக இருக்கிறது. உயிரின் எல்லைகூட தன்னில் என்ன உணர்வு கொள்ளவேண்டும் என்பதுவரை மட்டும்தான். கர்மத்தில் அது கொஞ்சம்கூட எந்த ஏற்ற இறக்கங்களையோ, பந்தம், உதயம், உபசமம், ஷயோபசமம் முதலிய எதையுமே செய்ய முடியாததாக இருக்கிறது. உயிர், கர்மம் இரண்டும் ஒரே சமயத்தில் அதனதனில் அதாவது ஒவ்வொன்றும் அதன்அதிலேயே மாற்றங்களை செய்து கொள்பவைகளாகவே இருக்கின்றன. உயிரின் எந்த பரிணாமத்தின்போது கர்மத்தில் எந்த மாற்றம் விதிப்படி-நியமமாக நிகழ்கிறதோ அந்த அவஸ்தையின் பெயரும், உயிரின் உணர்வின் பெயரும் ஒன்றுபோலவே ஆகமத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

ஜீவ திரவியத்தின் நிலைத்த தன்மை எந்த கர்மத்தின் நிமித்தத்தாலும் ஆவதில்லை, உயிர் என்னவோ ஸ்வயம்சித்த வஸ்த்துவாகும்-தானாகவே இருக்கின்ற ஒரு வஸ்த்து வாகும். உயிரின் அனந்த குணமய, சைத்தன்யமய ஸ்வபாவத்தில் கர்மத்தின் கைவண்ணம் எதுவும் கொஞ்சம்கூட இல்லை. அனாதி காலத்திலிருந்து அனந்த காலம்வரை உயிர் அதன் ஸ்வபாவ வடிவிலேயே **திரவ்ய நோக்கில்** எப்போதும் ஒரே வடிவமாகவே வாழ்கிறது, அதையே **பாரிணாமிக பாவம்** என்று சொல்கின்றனர். அனந்த குணமய ஸ்வபாவ வஸ்த்துவான உயிர் இயற்கையாகவே அதனாலேயே ஆனதாக இதுவரை இருந்தது, அதனாலேயே ஆனதாக இப்போதும் இருக்கிறது, அதனாலேயே ஆனதாக எதிர்காலத்திலும் இருக்கும்-முக்காலத்திலும் அப்படியே இருக்கும் ஒன்றாகும். எந்த கர்மத்தின் இருப்போ அல்லது கர்மத்தின் இல்லாமையோ உயிரின் இருப்புக்குக் காரணமில்லை.

ஸ்வபாவம் என்பது வல்லமையாகும், திறனாகும்-capacity யாகும். விபாவ பர்யாயமோ அல்லது ஸ்வபாவ பர்யாயமோ அதன் முழு வலிமையும் அனாதிஅனந்த காலம் எப்போதும் இருப்பதாகும் அதாவது தொடக்கமோ முடிவோ இல்லாமலும் எப்போதும் அந்த திரவியத்திலேயே நிலைத்திருப்பதுமாகும். அதில் கொஞ்சம்கூட ஏற்ற இறக்கங்கள் எதுவும் நிகழ்வதேயில்லை. அது முன்னரும் அப்படியே தான் இருந்தது, இப்பவும் அப்படியே இருக்கிறது, மேலும் எதிர்காலத்திலும் அப்படியேதான் இருக்கும்.

ஹே உயிரே! உன்னுடைய ஸ்வபாவம் என்னவோ அனந்த ஞானமயம் மற்றும் அனந்த சுகமயமாகும், ஆனாலும்கூட நீ ஏன் எப்போதும் துக்கமாகவே இருக்கிறாய்? இதைப்பற்றி நீ எப்போதாவது சிந்தனை செய்ததுண்டா? உன்னுடைய சுய அஞ்ஞானம் மற்றும் மோஹத்தின் காரணத்தாலும், நீ கொள்ளும் விருப்பு, வெறுப்பு முதலான திரிபு உணர்வுகளின் காரணத்தாலும் மற்றும் இந்த விருப்பு, வெறுப்பு திரிபு உணர்வு கொள்ளவேண்டியது உன்னுடைய தன்மையே என்று நம்பிக்கொண்டிருப்பதாலும் தான், அந்த தவறான நம்பிக்கையின் காரணத்தால்தான் நீ துக்கப்படுகிறாய். நீ உன்னையே ஸ்வபாவ வடிவமாகவே நம்பு, அந்த ஸ்வபாவ வடிவிலேயே விஸ்வாசம் கொள் என்றே அனேக ஞானிகள் உபதேசித்திருக்கிறார்கள். இவ்வாறு முழு விஸ்வாசத்துடன் உயிர் தன் ஸ்வரூபத்தை அறிந்து கொண்டிருந்தால், அதன் ஸ்வரூபத்தில் ஆழ்ந்திருந்தால், அதன் மூடநம்பிக்கை மற்றும் அஞ்ஞானம் அதை விட்டு விலகிச்சென்றுவிடும், அத்துடன் அதனிடம் விருப்பு, வெறுப்பு முதலான திரிபு உணர்வுகள் உற்பத்தியாவதுகூட கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே போகும். அஞ்ஞான அவஸ்தையில் இஷ்டமான பொருள்கள் கிடைப்பதில் இருந்த மகிழ்ச்சியின் அனுபவத்தைவிட, ஸ்வபாவ அனுபவத்தால் உண்டாகும் சுக அனுபவம் ஒரு அபூர்வமான வேறு எப்போதும் அனுபவிக்காத ஒரு சுவையான பரமசுக அனுபவம் என்பதை அறிந்து அதையே திரும்பத்திரும்ப நுகரும் எண்ணமே மேலிடும்.

இந்த சுகத்தை அனுபவம் செய்து கொண்டே ஸ்வபாவத்தில் மேலும் மேலும் அதிகமாக ஆழ்ந்து, அந்த ஞானி மோக்ஷமார்கத்தில் முன்னேற்றம் அடைந்து முழுமையாகத் தன் ஸ்வபாவத்தில் ஆழும்போது அவருக்கு அனந்தஞானம், அனந்தசுகம் முதலியன கைவரப் பெறுகிறார். எப்படி ஸ்வபாவமோ அப்படியே பர்யாயத்திலும் வெளிப்படுகிறது. இதை **பிராப்தம் பிராப்தியானது** அதாவது **கிடைக்க வேண்டியது கிடைத்து விட்டது** என்று சொல்லப்படுகிறது.

மகள்களே! மேலே கூறியவைகளை எல்லாம் உங்களுக்கு நீங்களே புரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். பிறருக்குப் புரியவைப்பதில் என்னவோ நாம் எல்லோரும் மிகவும் புத்திசாலிகளாகவே இருக்கிறோம், ஆனால் நமக்கு என்று வரும் போதுதான் கோட்டை விட்டு விடுகிறோம். மராட்டியில் இப்படி ஒரு பழமொழி இருக்கிறது-**பிறருக்கு பரிந்துரைப்பதோ பிரம்மஞானம் ஆனால் தான் என்னவோ ஒரு உலர்ந்த கல்.** அதுபோல நம் நிலைமை ஆகிவிடக்கூடாது என்பதில் கவனம் கொள்வது அவசியமாகும்.

உயிரின் உணர்வுகளும் கர்மங்களின் உதயம் முதலான நிலைகளும் ஒரே சமயத்தில் நிகழ்வனவாகும், ஆகையால் உயிரின் உணர்வுகளைப் பார்த்து கர்மத்தின் நிலைகள் பற்றி நாம் தெரிந்து கொள்ளலாம். அதேபோல கர்மத்தில் என்ன நிகழ்கிறது என்று பார்த்து உயிரின் உணர்வுகளை நாம் தெரிந்து கொள்ளமுடியும். உணர்விழந்து முழு மயக்கத்தில் இருக்கும் நிலையில்-coma stage-ல், தூங்கும்போது, விக்ரஹகதியில் செல்லும்போது, ஏகேந்திரிய பர்யாயத்தில் இருக்கும்போது விருப்பு வெறுப்பு உணர்வுகள் உண்டாகிறதா இல்லையா? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். அப்போது இப்படி சிந்தனை

செய்யுங்கள்-சித்த மற்றும் அரஹந்த (4 காதிவினைகள் போக மற்ற 4 அகாதி கர்மங்களின் உதயம்) பகவானைத் தவிற மற்ற எல்லா பிறவி உயிர்களின் நிலையில் எட்டு கர்மங்களின் உதயம் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது, ஒரு சமயம்கூட அதன் உதயம் நிற்பதில்லை. யதார்தத்தில் மேலே கூறிய நிலையில் உள்ள எல்லா உயிர்களிடம் கூட விருப்பு, வெறுப்பு முதலான ஔதாயிக உணர்வுகள் வந்துகொண்டுதான் இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எந்த உயிராவது எப்போது சுத்தோபயோகத்தில் இருக்கிறதோ அதாவது ஆத்ம தியானத்தில் ஆழ்ந்திருக்கிறதோ அப்போது அதனிடம் விருப்பு, வெறுப்பு உணர்வுகள் உண்டாவதில்லை அல்லவா? விபாவ உணர்வுகள் முற்றிலுமாக நின்றுபோய்விடும் தானே? என்ற சந்தேகம் உங்களுக்கு வரக்கூடும். ஆனால் அப்படி இல்லை ஏனென்றால் எதுவரை மோஹனீய கர்மத்தின் உதயம் இருக்கிறதோ அதுவரை சுத்தோபயோகத்தில் இருந்தாலும் கூட, அந்த உயிரிடம் அபுத்தி பூர்வக்-அவர்கள் அறிவுக்கு வராமலேயே விருப்பு, வெறுப்பு உணர்வுகள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். இதை நம்பவில்லை என்றால் சம்யக்தர்சனம் அடைந்தவுடனே அந்த உயிர் முழுமையான வீதராகியாக ஆகிவிடும்! ஆமாம், சாஸ்த்திரப் பயிற்சியில் தொடக்க நிலையில் உள்ளவர்களுக்காக இவ்வாறு மேலோட்டமாக சரணானுயோகம் முதலிய நூல்களில் எப்போதாவது சொல்லப்படலாம், ஆனால் அவைகள் கரணானுயோகத்துடன் ஒத்துப்போவதாக இல்லையே என்று நினைக்கக்கூடாது. கரணானுயோகம் மூலம் அதன் சூட்ஷமத்தை அறிந்துகொள்ளும்போது உண்மையில் நமக்கு ஆனந்தமே உண்டாகிறது, மோக்ஷமார்கத்தின் ஸ்வரூபம் மிகத்தெளிவாகத் தெரிய வருகிறது.

இங்கே நீங்கள் முக்கியமாக ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும், அதாவது மோஹனீய கர்மத்தின் உதயம் இருப்பதை வைத்து மட்டுமே உயிரிடம் ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகள் இருப்பதை உறுதி செய்ய முடியும். ஆனால் சாதா அல்லது அசாத வேதனீய கர்ம உதயம் இருக்கிறது ஆகையால் உயிருக்கு ஆசை, வெகுளி, மயக்க உணர்வுகள் இருக்கவே செய்யும் என்று எண்ணினால் அதில் உணமையில்லை, அவ்வாறு நம்புவது தவறாகும். ஒரு முனி மஹராஜருக்கு உபசர்கம் நிகழ்கிறது என்றால் அவருக்கு அசாதா வேதனீய கர்மம் உதயத்தில் இருக்கிறது என்று சொல்ல முடியும் ஆனால் அந்த சமயத்தில் அவர் ஆத்ம தியனத்தில் ஆழ்ந்திருக்கும் காரணத்தால் அவருக்கு மிகக் குறைந்த அபுத்தி பூர்வ கஷாய உணர்வுகள் இருக்கமுடியும் மற்றும் அதில் அவருடைய சாரித்ர மோஹனீய கர்மம் அதாவது சஞ்சுவலன கஷாய கர்மத்தின் உதயம் அதற்கு நிமித்தமாக இருக்கும்.

கர்மம் மற்றும் உயிரின் சுதந்திரத் தன்மையை தெரிந்து கொண்ட பிறகு, இப்போது நாம் கர்மத்தின் சில நிலைகளைப் பற்றி தெரிந்து கொள்ளவிருக்கிறோம். அதைப் பற்றிய அறிவு பெற்றால் பிறகு கர்ம பந்தத்திலிருத்து விடுபடும் வழிகூட நமக்கு தெளிவாகத் தெரியவரும். இவைகளை தெரிந்து கொள்வதால் கர்மம் ஒன்றும் நாம் முன்னர் நினைத்துபோல நம்மை கட்டிப்போடும் அளவிற்கு சக்தி வாய்ந்ததாக இல்லை என்பதும், மோக்ஷமார்கத்தை கைகொள்ள உயிர் சுயமாகவே சாமர்த்தியம் கொண்டதாக இருப்பதும் நமக்கு தெளிவாகப் புரியவரும். அவைகளைப் பற்றி அடுத்த கடிதத்தில் சர்ச்சை செய்யலாம்.

- உங்கள் அம்மா.

கர்மம் - உபசமம், உதீரணை

கடிதம்-7 ஓம் நம: சித்தேப்ய: 08-08-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

மகள்களே! உயிர் மற்றும் கர்மத்தின் சுதந்திரத் தன்மையை தெரிந்து கொண்ட பிறகு நீங்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டுள்ளீர்கள். முதல் கேள்வி: **உயிர் கர்மம் இரண்டிலும் முழுமையான சுதந்திரம் இருக்கிறதென்றால் கர்மத்தின் இயல்பு, மற்றும் அதன் நிலைகளைப்பற்றி நாங்கள் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? எங்களுக்கு வெறுமனே உயிர் சம்பந்தமான தகவல்களை மட்டுமே கொடுங்களேன்!** இரண்டாவது கேள்வி: **கர்மத்தின் பந்தம், உதயம், உதீரணை, உபசமம் முதலின நிலைகளைப்பற்றி நாங்கள் தெரிந்து கொண்டோம், ஆனால் இப்போது நாங்கள் கர்மத்தை உபசமம் செய்ய வேண்டுமா? அல்லது உதீரணை செய்ய வேண்டுமா? அல்லது உதயமே இருந்துவிட்டுப் போகட்டும் என்று இருக்க வேண்டுமா?**

முதல் கேள்விக்கான பதிலை முதலில் பார்க்கலாம். உயிர் அனாதி காலமாகவே தன் ஸ்வரூபத்தை-தன் உண்மையான வடிவை தெரிந்து கொள்ளவேயில்லை. உயிர் இடைவிடாது நிகழும் கர்ம உதயத்தால் கிடைத்த உடலையே தான் என்றும் அதாவது உடலும் நானும் ஒன்றே என்றும், தன் உடனிருக்கும் பொருள்கள் தன்னுடையது என்றும் தனக்கு இப்போது வெளிப்படும் குறைந்த அறிவே தன் முழுமையான அறிவு என்றும், விருப்பு வெறுப்பு முதலான திரிபு உணர்வுகளே தன் ஸ்வபாவம்-இயல்பு என்றும் இன்றுவரை நம்பிக்கொண்டு இருக்கிறது. அறிவொளி பெற்ற துறவி எப்போது இந்த உயிரைப் பார்த்து **ஹே உயிரே! நீ இவைகளிலிருந்தெல்லாம் வேறானவன், நீ ஸ்வயம் பரமாத்மா, கேவலஞானம் முதலான சாமர்த்தியங்களை உன்னகத்தே கொண்டவன் நீ** என்று உபதேசம் கொடுக்கிறாரோ அப்போது இந்த உயிர் சிரிப்பையே வெளிப்படுத்துகிறது, சொல்பவரை கேலி செய்கிறது, அவர் சொவ்வதில் நம்பிக்கை கொள்வதில்லை. மேலும் அது **நீங்கள் எங்கள் நிலைக்கு எட்டாத உயரத்திலிருக்கும் விஷயங்களைப் பற்றியெல்லாம் சொல்கிறீர்கள், எங்களுடைய அறிவுக்கு தகுந்தார்போல் எங்கள் அறிவுக்கு எட்டக்கூடிய விஷயங்களைச் சொல்லுங்கள்** என்று உபதேசம் கொடுப்பவருக்கே எப்படி உபதேசம் செய்ய வேண்டும் என்ற அறிவுரையை வழங்குகிறது!

கர்மத்தின் இயல்பு, மேலும் அது பந்தமாவதற்கு தோதாக, கர்ம உதயத்தால் நிகழும் உயிரிடம் உண்டாகும் திரிபு உணர்வுகள், கர்மத்தால் உண்டாகும் துக்கம் முதலானவை பற்றிய விளக்கங்களை விரிவாகக் கேட்டபிறகு, அது சம்பந்தமான நம்முடைய தவறான கற்பனைகள் எல்லாம் இல்லாமல் போகின்றன. அது சம்பந்தமான நம் அஞ்ஞானம் விலகி நம் மூடநம்பிக்கைகளும் அழியத் துவங்குகிறது. இந்த யாதார்தமான விஷயங்களில் நம்பிக்கை பிறக்கிறது மற்றும் அதைப் பற்றி தீவிரமாக சிந்திக்க நாம் தயாராகிறோம்.

அடிப்படை விஷயம் என்னவோ நம் ஸ்வரூபத்தில் நம்பிக்கை வைப்பதாகும். சாஸ்திரங்களில் சம்யக்த்துவம் பெறச் சொல்லப்பட்ட காரணங்களில் **ஆஞ்ஞா சம்யக்த்துவம்** பெயர் கொண்ட ஒன்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஜினேந்திர பகவானின் உபதேசமே ஏற்கக்கூடியதாகும், முக்காலத்திலும் அதுவே உண்மையாகும் என்ற திட நம்பிக்கையுள்ள சாதாரண மனிதர்கள்கூட, சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட

நுணுக்கங்களை தெரியாதவர்களாக இருந்தாலும், அந்த உபதேசத்தில் முழு நம்பிக்கை கொண்டு அவர்கள் தங்களையே அதாவது ஆத்மாவின் பக்கம் அவர்களுடைய கவனத்தைச் செலுத்துவதின் மூலம் சம்யக்தர்சனத்தை அடைய முடியும்.

மேலும் கவனமாகக் கேளுங்கள், ஆத்மா ஞானமயமாகும், ஞானத்தின் இயல்பே அறிதலாகும். எது அறிவதை இயல்பாகக் கொண்டுள்ளதோ அது எல்லாவற்றையும் அறிகிறது-தன்னையும் கூட அறிகிறது மற்றும் பிறபொருள்களையும் அறிகிறது. கர்மத்தை நாம் வேறு ரூபத்தில்-வேறு ஒரு பொருள் வடிவில் அறிந்து கொண்டிருக்கிறோம். நம் அபிப்ராயத்தில் அறிவு பிற பொருளான கர்மத்தை அறிய வேண்டிய தேவையில்லை என்று விலக்கி விடுவோமானால், அறிவின் தன்மையையே நாம் அழிக்க விரும்புகிறோம் என்று அர்த்தமாகும். ஏனென்றால் ஞானத்தின் ஸ்வபாவமே **ஸ்வபர பிரகாஷக்**-அதாவது தன்னையும் பிற பொருள்களையும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாகும். எப்படி கண்ணாடியின் இயல்பு எல்லா பொருள்களையும் பிரதிபலிப்பதோ அதாவது reflectivity-யோ அதுபோல ஞானம் எல்லா பொருளையும் அறிவதாகும். எனக்கு நீங்கள் ஒரு கண்ணாடி கொண்டு வாருங்கள் ஆனால் ஒரு நிபந்தனை, அந்த கண்ணாடி நான் விரும்புவதை மட்டும் பிரதிபலிப்பதாகவும் நான் விரும்பாதவற்றை பிரதிபலிக்காததாகவும் இருக்க வேண்டும் என்றால் அது சாத்தியமா? சொல்லுங்கள்.

இப்போது உங்கள் முதல் கேள்விக்கு தெளிவான விளக்கம் கிடைத்திருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுடைய இரண்டாவது கேள்வியான கர்மத்தின் எந்த நிலையை நாம் செய்யவேண்டும்? அதை உபசமம் செய்ய வேண்டுமா அல்லது ஷயம் செய்ய வேண்டுமா? என்பதற்கான பதிலை இப்போது பார்க்கலாம். உங்களுடைய கேள்வியை பார்த்து நான் சிரிக்க வேண்டுமா அல்லது அழ வேண்டுமா? என்ற கேள்விதான் எனக்கு உண்டாகிறது. முழு இராமயணக் கதையை கேட்ட பின்பு, யாராவது சீதாவுக்கும் இராமருக்கும் என்ன உறவு முறை என்று கேட்டால் கதை சொன்னவரின் நிலை என்னவோ அப்படிப்பட்ட நிலைக்கு என்னை உங்கள் கேள்வி தள்ளி விட்டது! உயிர் மற்றும் கர்மத்தின் சுதந்திரத் தனமையை இவ்வளவு விரிவாகக் கூறியதன் சாராம்சம் என்ன வென்றால் **உயிர் கர்மத்தின் ஒரு பரமாணுவைக்கூட அசைக்க முடியாது, அதை அகற்றவும் முடியாது, கொண்டு வரவும் முடியாது. கர்மமோ, உடலோ அல்லது செல்வம் முதலான பிற புத்கலத்தாலான பொருள்களையோ அல்லது வேறு உயிரையோ அல்லது வேறு எந்த திரவியத்தையே எதற்கும் நாம் எப்போதும் கொஞ்சம்கூட எதுவும் செய்ய முடியாது. எந்த ஒரு திரவியமும் வேறு திரவியத்தில் கொஞ்சம்கூட எதுவும் செய்ய முடியாததாகவே வஸ்த்துக்களின் ஸ்வரூபம் இருக்கிறது** என்பதுதான்

ஒருவர் நோய்வாய்ப் பட்டிருந்தால் மருந்து சாப்பிட்டு தன்னை குணப்படுத்திக் கொள்வதே அதாவது நோயிலிருந்து விடுபடுவதே அவருக்கு பிரயோஜனமானதாக இருக்கும். அவருக்கு அந்த மருந்து பற்றிய அறிவு பெற்றிருந்தால் அவர் அதில் திடமான நம்பிக்கை கொண்டு அந்த மருந்தை உட்கொள்வார். மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு மருந்துகளின் குணம் பற்றியும், மருந்து வயிற்றில் சென்ற பிறகு அதில் நிகழும் இதர இரசாயண மாற்றங்களையும், அந்த மருந்து எந்த முறையில் அந்த நோயாளியின் உடலில் செயல்படுகிறது, எவ்வளவு மணி நேரம் அந்த மருந்து வேலை செய்யும், அந்த மருந்து உடலிலிருந்து எந்த வழியாக வெளியேரும் என்பது முதலான பல விஷயங்களைப்பற்றி ஆய்வுசெய்து தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அவைகளைத் தெரிந்து கொண்ட பிறகு வைத்தியர் எந்த நோயாளிக்காவது அந்த மருந்து தேவைப்படும்போது, அவர் அந்த மருந்தைப் பற்றி நோயாளிக்கு கூறி அதை உட்கொள்ள

மட்டுமே பரிந்துரைக்கிறார். நோயாளியும் அந்த மருந்தை மருத்துவர் சொன்னபடி உட்கொள்வதை மட்டுமே செய்கிறார். அதற்குப்பிறகு அந்த மருந்தில் எந்த இரசாயண மாற்றத்தை தான் செய்யவேண்டும் என்ற கேள்வியே நோயாளிக்கு எழுவதில்லை. மருந்து சுயமாகவே அவருடைய உடலில் நோயை குணப்படுத்தும் வேலையைச் செய்கிறதல்லவா!

அதுபோல கர்மத்தின் நிலைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டியது மட்டுமே. கர்மத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பற்றி எந்த கவலையும் நாம் கொள்ள வேண்டியதில்லை. அதன் மாற்றங்களைத் தெரிந்து கொண்டு புருஷார்த்தத்தை என்னவோ நம்மில்தான் செய்ய வேண்டும். புருஷார்த்தம் செய்வது என்றால் ஏதோ ஒரு பளுவை தூக்க வேண்டும் என்பதில்லை. [கர்மத்தை உளி கொண்டு உடைத்தெரிய வேண்டும் என்பதுமில்லை] ஸ்வயம் தன் சுதந்திரத்தை, ஸ்வபாவத்தை தெரிந்து கொண்டு அதன்படி தத்துவ நிர்ணயம் செய்வதே அதாவது ஏழு தத்துவங்களையும் உறுதிப்படுத்துவதே புருஷார்த்தமாகும். அதை நம் அறிவில் நாமே செய்ய வேண்டியதாகும். கர்மத்தின் நிலைகள் பற்றிய அறிவை உயிர் பெற்று விட்டாலும், அந்த உயிர் யாதார்த்த தத்துவ நிர்ணயம் செய்யவில்லை என்றால் அதாவது தத்துவ அடிப்படைகளை தன் அறிவில் சிந்தித்து அதை உறுதி செய்யவில்லை என்றால், அந்த உயிர் ஏமாற்றமே அடையும், பதட்டத்தையும், பீதியையுமே கொள்ளும். என்ன செய்வது? தர்சன மோஹனீய கரமத்தின் உதயம் இருக்கிறது, ஆகையால் எனக்கு மூடநம்பிக்கை இருக்கிறது என்று இந்த உயிர் நம்பிக்கொண்டே இருந்தால் அது அந்த நிலையிலேயே இருக்க வேண்டியது தான்! ஆனால் எந்த உயிர் கர்மத்தின் நிலைகள் பற்றிய அறிவை பெற்றபின், தத்துவ நிர்ணயத்தின் வழியில் ஜீவ தத்துவத்தை உறுதி செய்து பிறகு அது தன்னில்-ஆத்மாவில் ஒன்றுமானால், அதற்கு தர்சனமோஹனீய கர்மத்தின் உதயம் மேலும் தொடராமல் தானாகவே தணிவு-உபசமம் அடைந்துவிடும்-கர்மத்தை தணிவு செய்ய அந்த உயிர் பிரத்யேகமாக கர்மத்தில் செய்ய வேண்டிய செயல் எதுவுமில்லை என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

பலர் நிதத்தி, மற்றும் நிகாசித கர்மங்களை ஒரு துஷ்ட தேவதையாகச் சித்தரித்து விடுகிறார்கள். அவைகளும் கர்மத்தின் நிலைகள்தான். அவைகளைப் பற்றி நாம் பிறகு சர்ச்சை செய்யவிருக்கிறோம். கர்மத்தின் நிலைகளும், உயிரின் உணர்வுகளும் ஒரே சமயத்தில் நிகழ்வதாகும். ஆகையால் ஒன்று மற்றொன்றின் பிரதிநிதி யாகும். ஒன்று மற்றொன்றின் நிலையை வெளிப்படுத்துவதாகும், ஆனால் ஒன்று மற்றொன்றின் வேலையை செய்வதில்லை. இன்னும் ஒரு விஷயம், உங்களுக்கும் எங்களுக்கும் அதாவது நமக்கு கர்மத்தை நேரடியாகப் பார்க்க முடியாதபோது அதன் ஒரு குறிப்பிட்ட நிலையை எப்படி நம்மால் மாற்றமுடியும்? எந்த உயிர் சாஸ்திராப்யாசம், தத்துவநிர்ணயம், பேதஞானம், ஆத்மாவை எதிர்கொள்ளல் மற்றும் சுத்தாத்மாவை புரிந்து கொள்ளுதல் முதலியவைகளில் ஈடுபடுகிறதோ அதற்கு தர்சன மோஹனீய கர்மம் தானாகவே மந்த மடைகிறது, மற்ற எல்லா கர்மங்களின் ஸ்திதியும்கூட தானாகவே குறைகிறது, புதிதாக பந்தமாகும் கர்மமும் குறைந்த ஸ்திதியுடனே பந்தமாகிறது. நாம் கர்மத்தின் அதிக பட்ச ஸ்திதி 70 கோடாகோடி கடற்காலம் என்று முன்னர் பார்த்தோமல்லவா, அதுவும் குறைந்து அந்த்த கோடாகோடி கடற்காலமாக, அதாவது ஒரு கோடாகோடி கற்காலத்திற்கும் கொஞ்சம் குறைந்த ஸ்திதி கொண்டதாக ஆகிவிடுகிறது. இவைகள் எல்லாம் தானாகவே கர்மங்களுக்குள்ளேயே நிகழ்பவைகளாகும். நாம் கர்மத்தில் கொஞ்சம்கூட எந்த மாற்றத்தையும், எந்த கொந்தளிப்பையும் செய்ய வேண்டிய அவசியமில்லை, செய்யவும் முடியாது.

இந்த விவாதம் நடந்து கொண்டிருக்கிற இந்த சமயத்தில் தர்சன மோஹனீய கர்மம் எப்படி உபசமமாகிறது-தணிவடைகிறது என்பதைக் கூறுகிறேன். மேலே கூறியபடி புருஷார்த்தம் செய்யும் உயிர் எப்போது ஆத்மாவில் ஒன்றிணைய கவனம் செலுத்தும் முயற்சியை செய்யும்போது அதற்கு கரணலப்தி பிராப்தியாகிறது, பெறப்படுகிறது, அது கரண பரிணாமத்தை செய்யும் செயலில் ஈடுபடுகிறது. சம்யக்துவம் அடையும்முன் வெளிப்படவேண்டிய விசுத்தி-அதித்தூய்மை உணர்வை எப்போது கொள்கிறதோ அப்போது தர்சனமோஹனீய கர்மத்தில்கூட வன்செயல் நிகழ்கிறது-சிதைவு உண்டாகிறது (It is getting rampaged). எட்டு கர்மங்களின் உதயமும் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்று முன்னரே நாம் பார்த்திருக்கிறோம். எப்போது உயிர் முதன்முதலில் சம்யக்துவம் அடைய அந்தரங்கத்தில் ஆழ்கிறதோ அப்போது எட்டு கர்மங்களில் முதன்முதலில் மந்தமடைந்த தர்சன மோஹனீய கர்மத்தின் உதயத்தில் என்ன நிகழ்கிறது என்று இப்போது பார்ப்போம்.



கரணலப்தி பரிணாமம் ஒரு அந்தர்முகூர்த்த நேரம் மட்டுமே நீடிப்பதாகும். உயிரின் அந்த சமய உணர்வுகளின் நிமித்தத்தால் அந்தர்முகூர்த்த காலத்திற்குப்பிறகு உதயத்திற்கு வரவிருக்கும் மித்யாத்துவ கர்ம நிஷேகங்களில் கொஞ்ச நிஷேகங்கள் படத்தில் காட்டியபடி அதற்கு முன்னரே உதயத்திற்கு வந்து விழுந்து விடுகின்றன. மேலும் மீதமிருக்கும் நிஷேகங்கள் பின்னர் எதிர்காலத்தில் உதயமாகவிருக்கும் நிஷேகங்களுடன் போய்ச்சேர்ந்து கொள்கின்றன. இந்த காரணத்தால் வரிசையாக உதயத்திற்கு வரவேண்டிய தர்சன மோஹனீய (மித்யாத்துவ) கர்ம நிஷேகங்களில் இடைவெளி உண்டாகிறது (gap) உண்டாகிறது. இந்த இடைவெளிகூட அந்தர்முகூர்த்த கால அளவு கொண்டதாக இருக்கிறது. மேலும் அந்த காலம்வரை மித்யாத்துவ கர்மத்தின் (இடைவெளி ஏற்பட்டதால் அங்கு உதயத்திற்கு வர நிஷேகங்களே இல்லாத காரணத்தால்) உதயம் இல்லாமல் போகிறது, உபசமம் ஆகிறது. இந்த நிலையை **அந்த்த கரண வடிவ உபசமம்** என்று சொல்கின்றனர்.

அதேசமயத்தில் சாரித்திர மோஹனீயத்தின் அனந்தானுபந்தி கர்மம்கூட உதயத்திற்கு வருவதில்லை, எதிர்காலத்தில் அதன் நிஷேகங்கள் உதயத்திற்கு வரும் நிலையை அடைகின்றன இந்த நிலையை **சத்தவஸ்த்தாரூப் உபசமம்** அல்லது **அபிரசஸ்த உபசமம்** ஆகிறது என்று சொல்கின்றனர்.

அனாதி காலமாக கர்ம பந்தமும், உதயமும் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருந்தது, அதில் இப்போது விரிசல் ஏற்பட்டு விடுகிறது. எல்லா கர்மங்களின் தலைவன் என்று சொல்லப்படும் தர்சனமோஹனீய கர்மமே எல்லாவற்றிற்கும் முதல் அதன் ஆயுதத்தை போட்டுவிட்டு ஓடிவிடுகிறது. இதற்கு உயிர் கர்மத்தில் நேரடியாக என்ன செய்ய வேண்டியிருந்தது? எதுவுமே இல்லை!

உயிர் எப்போது தன்னில் சம்யக்த்துவ பர்யாயத்தை முதன்முதலில் வெளிப்படுத்துகிறதோ அதற்குமுன் தர்சனமோஹனீயம் மற்றும் அனந்தானுபந்தி கஷாய கர்மங்களின் உபசமம் நிகழவே செய்கிறது. ஆனால் முதலில் இவைகளின் உபசமம் ஆவதால் உயிர் புருஷார்த்தம் செய்யாமலேயே சம்யக்துவம் கிடைத்தது விட்டது என்று எண்ணுதல் தவறாகும், அவ்வாறு எப்போதும் நிகழவே முடியாது. கர்மத்தின் உபசம நிலையின் நிமித்த காரணத்தால் இந்த சம்யக்துவம் பெறப்படுவதால் இதை **ஔபசமிக சம்யக்துவம்** என்று சொல்கின்றனர். கர்மத்தின் உபசம அவஸ்தை மோஹனீய கர்மத்தில் மட்டுமே நிகழ முடியும். அவைகளில் தர்சனமோஹனீய கர்மத்தின் உபசம காலத்தில் உயிரிடம் **ஔபசமிக சம்யக்துவ** அவஸ்தை நிகழ்கிறது. பதினொன்றாம் குணஸ்தானத்தில் சாரித்ரமோஹனீய கர்மத்தின் உபசம காலத்தில் **ஔபசமிக சாரித்திரம்** அவசியம் நிகழ்கிறது. தர்சன மோஹனீயத்தில் உபசமம் ஆனபிறகுகூட, அந்த சமயத்தில் பிற எல்லா கர்மங்களின் உதயமும் இடைவிடாது நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

கர்மங்களின் 10 நிலைகளின் பெயர்களை நாம் முன்னரே தெரிந்து கொண்டோம். அவைகளில் பந்தம், சத்துவம், மற்றும் உதயம் ஆகிய நிலைகள் பற்றி நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். உபசமம் பற்றிகூட இப்போது சற்றுமுன்தான் சர்ச்சை செய்தோம். நாம் இப்போது மீதமுள்ள கர்ம நிலைகளைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

உதீரணை:- பின்னர் உதயத்துக்கு வரவேண்டிய கர்மம் சீக்கிரமாக உதயத்துக்கு வருதலை **உதீரணை** என்று சொல்கின்றனர். ஆகமங்களில் அதன் வரையறை இவ்வாறு இருக்கிறது-உதயாவளிக்கு வெளியில் இருக்கும் நிஷேகங்கள் உதயாவளியில் உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து சீக்கிரமாக உதயத்துக்கு வருதலை **உதீரணை** என்று சொல்கின்றனர். இதன் பொருளை தெரிந்து கொள்ளும் முன் ஒரு உதாரணம் மூலம் இதை தெரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

நீங்கள் இரயில் வண்டியில் பயணம் செய்ய பயணச்சீட்டு-டிக்கட் முன்பதிவு செய்யும் வரிசையில் ஐம்பதாவது நபராக நிற்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது நீங்கள் உங்கள் நண்பர்கூட டிக்கட் பதிவு செய்ய முப்பதாவது நபராக நிற்பதை பார்க்கிறீர்கள். அவர் உங்களை கூப்பிட்டு அவருடன் உங்களுக்கும் டிக்கட் எடுத்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இதன் பொருள் நீங்கள் உங்கள் வரிசையை விட்டுவிட்டு முன்னர் வந்துவிட்டீர்கள் என்பது நிச்சயமாகி விட்டதல்லவா. இதேபோல எந்த கர்மத்தின் உதயம் நிகழ்ந்து கொண்டு இருக்கிறதோ அந்த கர்மத்தின் நிஷேகங்கள் அதனதன் நிஷேக அமைப்பின்படி அதன் ஸ்திதி பூர்த்தியானதும் நிச்சயிக்கப்பட்ட வரிசையில் உதயத்திற்கு வருகின்றன. அப்போது அந்த கர்மத்தின் சில காலம் கழித்து

உதயத்திற்கு வரவேண்டிய நிஷேகம், அதன் வரிசையை விட்டுவிட்டு ஸ்திதி முடியும் முன்னரே, வரிசையின்படி உதயத்திற்கு வரவிருக்கும் நிஷேகங்களுடன் சேர்ந்து சீக்கிரமாகவே உதயத்திற்கு வந்து பலன்கொடுப்பதை உதீரணை என்று சொல்கின்றனர். அந்த நிஷேகங்களின் ஸ்திதி அதிகமாக இருந்தது ஆனால் அவ்வளவு காலம் தங்காமல் அந்த நிஷேகங்கள் அதன் காலத்தகுதி வரும்முன்னரே உதயத்துக்கு வந்தது ஆகையால் அது உதீரணையானது என்று சொல்கின்றனர்.



நாம் இப்போது சில வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளலாம். அதில் ஒரு வார்த்தை உதயாவளி என்பதாகும். **ஆவளி** காலத்தின் ஒரு அளவாகும். ஒரு மணியில் 60 நிமிடங்களும், ஒரு நிமிடத்தில் 60 செகன்டுகளும் இருக்கின்றன என்பது அனைவரும் அறிந்ததே. ஒரு செகன்டில் நூற்றுக்கணக்கான ஆவளிகள் இருக்கின்றன, ஒரு ஆவளியில் அசங்க்யாத (எண்களால் சொல்ல முடியாத) சமயங்கள் இருக்கின்றன. அசங்க்யாதம் கூட அசங்க்யாத விதமாக இருக்கிறது. அதில் **ஜெகன்ய யுக்தாசங்க்யாத சமயங்கள் கொண்டது ஒரு ஆவளி** யாகும்.

கர்ம உதய காலத்தில் கர்ம நிஷேகங்களின் வரிசைஅமைப்பு காணப்படுகிறது என்று முன்னரே பார்த்திருக்கிறோம். ஒவ்வொரு சமயமும் வரிசையாக உதயத்திற்கு வரும் நிஷேகங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இருப்பதாக உங்கள் மனதில் கற்பனை செய்யுங்கள். நிகழ்காலத்தில் உதயத்திற்கு வரும் நிஷேகம் எல்லா நிஷேகங்களுக்கும் கீழே இருக்கும். நிகழ்கால சமயத்திலிருந்து ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு நிஷேகம் என்ற அளவில் ஒரு ஆவளி காலம்வரை உதயமாக விருக்கும் நிஷேகங்களின் தொகுப்பை **உதயாவளி** என்று சொல்கின்றனர்.

உதயாவளியில் உள்ள நிஷேகங்களின் உதயம் என்னவோ வரிசையாக வந்துகொண்டே இருக்கிறது ஆனால் உதயாவளிக்குப் பிறகு உதயத்திற்கு வரவிருக்கும் நிஷேகம் அதனுடைய வரிசைமுறையை விட்டுவிட்டு உதயாவளியில் உள்ள நிஷேகங்களுடன் வந்து சேர்ந்து உதயத்திற்கு வருவதை உதீரணை என்று சொல்கின்றனர்.

இதைப் புரிந்து கொள்ள நமக்கு தினமும் பழக்கமான உதாரணம் ஒன்றை கொடுக்க வேண்டுமென்றால் குழந்தைகளைச் சாப்பிடும்படி கூப்பிடும்போது அவர்கள் இப்போது பசி எடுக்கவில்லை என்று சொல்லுவார்கள். ஆனால் 4-5 நிமிடங்கள் சென்ற உடனேயே குழந்தைகள் அம்மா, அதிக பசி எடுக்கிறது, சீக்கிரமாக எங்களுக்கு சாப்பிட உணவு தாருங்கள் என்று கூப்பாடு போடுவார்கள். பசி, தாகம் இரண்டும் நமக்கு திடீரென்று வருவது ஏனென்றால் அசாதாவேதனீய கர்மத்தின் உதீரணை அல்லது தீவிர உதயம் அடைந்து பசி எடுக்க ஆரம்பித்து விடுகிறது என்பதால்தான்.

ஆயுள் கர்மம் கூட உதீரணை அடைந்து **கதலீஃகாத்** தாகிவிடுகிறது என்பதுகூட உங்களுக்குத் தெரியுமல்லவா? கர்மபூமியில் வாழும் மனிதர் மற்றும் விலங்குகதி உயிர்களின் ஆயுள் உதீரணை அடைய முடியும், அதை **சோபக்கிரம ஆயுஷ்க்** என்று சொல்கின்றனர். அப்போது புஜ்யமான் ஆயுள் கர்மத்தின் மீதமுள்ள எல்லா நிஷேகங்களும் சீக்கிரமாக உதயத்திற்கு வந்து உதயாவளியிலுள்ள நிஷேகங்களுடன் சேர்ந்து முழுமையாக விழுந்து விடுகின்றன, உயிர் மரணமடைந்து விடுகிறது, இதை **அபவர்த்த** அல்லது **கதலீஃகாத் மரணம்** என்று சொல்கின்றனர். ஒரு கோடி பூர்வ ஆயுள் கொண்ட ஒரு உயிரின் ஆயுள்கூட கதலீஃகாதம் அடைந்து ஒரு அந்தர் முகூர்த்தத்த நேரத்திலேயே மரணமடைய முடியும். விஷம் குடித்தோ, திடீரென்றோ, தண்ணீரில் மூழ்கியோ, திடீர் இரத்தப்போக்காலோ மரணம் நிகழலாம். நாம் இதை **அகாலமரணம்** என்று சொல்கிறோம்.

தேவர், நரகர், போகபூமி மனிதர்கள் மற்றும் விலங்குகள், சரமசரீரீ (தத்பவ மோக்ஷகாமி உயிர்) இவர்களின் ஆயுள் கர்மத்தில் கதலிஃகாதம் நிகழ்வதில்லை. அதை **நிரூபக்கிரம ஆயுஷ்க்** என்று சொல்கின்றனர். இதையே **அனபவர்த்த ஆயுள்** என்றும் சொல்கின்றனர்.

பந்தமான குறிப்பிட்ட ஆயுள் காலம் முடியும்முன் ஒருவருக்கு மரணம் நிகழுமென்றால், க்ரம்பத்தபர்யாயத்தை எப்படி நிரூபிக்க முடியும்? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். தங்களுக்குத் தெரிந்த தத்தவ விஷயங்களை அவ்வப்போது நினைவுகூர்ந்து நாம் கேட்பது சரியா என்று சிந்திப்பவர்களுக்கு இப்படி ஒரு கேள்வி சாதாரணமாகவே எழும். இதிலிருந்து நீங்கள் படிப்பது, கேட்பதோடு மட்டுமல்லாமல், அதைப்பற்றி சிந்திக்கவும் செய்கிறீர்கள் என்பது தெரிகிறது.

ஒவ்வொரு திரவியத்தின் முக்காலத்தின் பர்யாயங்களின் வரிசை உறுதியானதாக-நிச்சயிக்கப் பட்டதாக இருக்கிறது, அதில் யாரும் எந்த மாற்றத்தையும் செய்யமுடியாது. எப்படி ஒரு மாலையில் அதன் ஒவ்வொரு மணிகளின் இடமும் உறுதியானதாக-நிச்சயிக்கப்பட்டதாக இருக்கிறதோ அதேபோல திரவியத்தின் முக்காலத்தின் எல்லா அனந்த பர்யாயங்களின் வரிசையும் நிச்சயிக்கப்பட்டதாக-உறுதி செய்யப்பட்டதாக இருக்கிறது-வேறு யாரோ ஒருவர் அந்த வரிசையை செய்யவில்லை அல்லது அதை செய்விக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட பர்யாயத்திற்கு பிறகு எந்த குறிப்பிட்ட பர்யாயம் நிகழத் தகுதியானது என்ற தர்மம்/விதிமுறை அந்தந்த திரவியத்திலேயே பதிந்திருக்கிறது. எதில் பர்யாயம் ஒவ்வொரு சமயமும் வெளிப்படுகிறதோ அந்த திரவியத்தின் பக்கம் பார்த்தே பர்யாயங்களின் இந்த வரிசை நிச்சயிக்கப்பட்டிருப்பதை நம்மால் உறுதி செய்யமுடியும். ஒரேஒரு பர்யாயத்தை மட்டுமே பார்ப்பதால் அனேக பர்யாங்களின் வரிசையை உறுதி செய்யமுடியாது. அதேபோல பிற திரவியங்களின் பர்யாயங்களைப் பார்த்தும் வேறொரு திரவியத்தின் பர்யாய வரிசையும்கூட இப்படித்தான் இருக்கும் அல்லது இப்படி இருக்காது என்றும் சொல்லமுடியாது.

பலர் இந்த விஷயத்தில் தவறு செய்கிறார்கள், குழப்பத்தில் ஆழ்கிறார்கள். கால திரவியத்தின் பர்யாயம் வியவஹார காலமாகும். அந்த வியவஹார காலத்தின் பக்கம் பார்த்து அதாவது பிற திரவியத்தின் பர்யாயப்பக்கம் பார்த்து நம் அல்லது பிற திரவியத்தின் பர்யாயம் எப்போது நிகழ வேண்டுமோ அப்போது நிகழும், அதாவது குறிப்பிட்ட வருடத்தில், குறிப்பிட்ட தினத்தில், குறிப்பிட்ட சமயத்தில் இந்த பர்யாயம் நிகழும் என்று முடிவு செய்கிறார்கள். பர்யாயத்தின் காலம் நிச்சயிக்கப்பட்டது என்று எப்போது சொல்கிறோமோ அப்போது அது அந்த திரவியத்தின் **ஸ்வகாலத்தில்** என்று புரிந்து கொள்ள வேண்டும், அது அந்த திரவியத்தில் இருக்கிறது, வியவஹார காலத்தில் இல்லை.

இன்று 9-8-1999, காலை 11 மணி. எனக்கு எழுத வேண்டும் என்ற ஆசை என் சாரித்திர குணத்தின் திரிபு-விபாவ பர்யாயம் என்னில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த பர்யாயத்தின் காலத்தை நாள் மற்றும் நேரத்தை வைத்து கணக்கிடும்போது எவ்வளவு குழப்பம் வருகிறது என்று பாருங்கள்! இது மும்மை என்ற இடத்தின் வியவஹார காலமாகும் அதாவது கால திரவியத்தின் ஸ்வகாலமாகும். உன் ரேஷ்மி அத்தை அமெரிக்காவில் இருக்கிறார்கள். அங்கு 9-8-99 காலை 11 மணி வர இன்னும் 10 மணி 30 நிமிடம் இருக்கிறது. பூமியில் வெவ்வேறு ஷேத்திரங்களில் நேரம், இடத்தைப் பொருத்து முன் அல்லது பின் இருக்கும். ஆகையால் என்னுடைய பர்யாயத்தை வியவஹார காலத்தால் கணக்கிடுவதால் எந்தப் பயனும் இல்லை. காலை 11 மணி என்றால் ஒவ்வொரு தினத்திலும் காலை 11 மணி வருகிறது. 9 ஆகஸ்டு என்று சொல்லும்போது ஒவ்வொரு ஆண்டும் 9 ஆகஸ்டு வருகிறது. 99-ஆவது வருடம் என்று சொல்லும்போது 1899, 1999, 2099 முதலிய வருடங்கள் வருகின்றன. 1999 என்று கூறினாலும் கி.பி/கி.மு வின் வருடமா, விக்ரம வருடமா, மஹாவீர ஆண்டா என்றும் சொல்லவேண்டும். மேலும் ஆழமாக சிந்தித்தால் ஏறுகாலமா-உத்சர்பிணி காலமா, இறங்கு காலமா-அவசர்பிணி காலமா என்று சொல்லவேண்டும், இதற்கும் மேலும் சொல்லவேண்டுமென்றால் எந்த குறிப்பிட்ட கல்பகாலம் என்பதைப் பற்றியும் சொல்ல வேண்டியிருக்கும். [எவ்வளவு குழப்பமான விஷயமாக இருக்கிறது என்பதை உங்காளால் காணமுடிகிறதல்லவா!]

குறிப்பிட்ட காலத்தில் என்னுடைய பர்யாயம் நிகழும் என்று சொல்வது வேறு திரவிய நோக்கில் அறிவிப்பதாகும், அதாவது கால திரவியத்தின் பர்யாய நோக்கில் சொல்லப்பட்டதாகும். வேறு திரவியங்களை நோக்கில் கொண்டுதான் எதையும் சொல்ல வேண்டுமென்றால், அங்கு பல்வேறு திரவியங்கள் கூட அனேக எண்ணிக்கையில் இருக்கின்றன. எப்படி என்றால், இப்போது என் முன் ஒரு காகிதம் இருக்கிறது, இந்த மனித உடல்கூட இப்போது என் தொடர்பில் இருக்கிறது, இந்த உடலிலுள்ள கையின் குறிப்பிட்ட செயல்-எழுதுவது நிகழ்ந்து கொண்டிருக்கிறது, கையில் உள்ள பேனா மேலும் கீழும் சென்று கொண்டிருக்கிறது, அந்த பேனாவில் இருக்கும் மையின் பரமாணுக்களின் நிலையில்கூட மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன, மை பேனாவிலிருந்து காகிதத்தின்மேல் இறங்கி குறிப்பிட்ட எழுத்து வடிவில் மையின் வடிவம் மாற்றமடைந்து கொண்டிருக்கிறது. என் மனக்கண் முன் நீங்கள் இருவரும் வந்துகொண்டு இருக்கிறீர்கள், உங்களுக்குக்கூடத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது. ஒன்றிரண்டு அல்ல இந்த எல்லா அனந்த திரவியங்களிலும் அதனதன் குறிப்பிட்ட பர்யாயங்கள் இந்த சமயத்தில் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இந்த எல்லா பர்யாயங்களும் அந்தந்த திரவியத்தின் ஸ்வகாலமாகும். ஒரே சமயத்தில் நிகழும் பல பிற திரவியங்களின் பர்யாயங்கள் ஒரு காரியம் நிகழ அனுகூலமாக இருக்கும் பட்ஷத்தில் அந்த பர்யாயங்கள் அனைத்தையும் அந்த காரியத்திற்கு நிமித்தம் என்று சொல்கின்றனர், அவைகள் அங்கு இருப்பதைப் பற்றிய விபரத்தை நமக்கு தெரியப்படுத்தவே நிமித்தங்கள் பற்றி பேசப்படுகிது.

ஆனால் அவைகளை நிமித்தம் என்று சொல்லப்பட்ட போதிலும் என்னுடைய பர்யாயம் அதன் ஸ்வகாலத்தில் என் திரவியத்தில்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. நிமித்தங்களின் பர்யாயம் நிமித்தங்களின் ஸ்வகாலமாகும். ஒவ்வொரு வஸ்த்துவும் அதன் திரவ்ய, ஷேத்ர, கால, பாவத்தில் உறுதியாக இணைக்கப்பட்டுள்ளது. ஸவசதுஷ்டயத்துடன் பரசதுஷ்டயத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை. நாம் புரிந்து கொள்வதற்காக இந்த எல்லா பிறதிரவியங்களுடன் உறவுபடுத்திச் சொல்லப்படுகிது. சாஸ்திரத்தில் அகால மரணம் என்று சொல்லப்பட்டாலும்கூட அந்த மரண பர்யாயத்திற்கு அது ஸ்வகாலமே யாகும், அந்த நபருக்கு அது ஸ்வகால மரணம்தான். காலத்தை நோக்கத்தில் கொள்ளாமல் மற்ற நிமித்தங்களைப் பற்றி சர்ச்சை செய்யும்போது காலம் இல்லை அது அகாலம் என்ற நீதிப்படி அந்த மரணத்திற்கு அகால மரணம் என்று சொல்லப்படுகிறது.

கர்மத்தின் உதயமோ, உதீரணையோ, அது கர்மத்தின் சுய தகுதியாலாகும். கர்மத்தின் நிலை அதாவது பர்யாயம் அதன் சுய வரிசையில் குறிப்பிட்ட சமயத்திலேயே-க்ரமநியமித் சமயத்திலேயே நிகழ்கிறது. ஆறு திரவியங்களின் எல்லா பர்யாயங்களும் வரிசைப்படுத்தப் பட்டதாகவே இருக்கின்றன. ஞானம் அதை முன்னரே அதாவது அந்த பர்யாயம் நிகழும் முன்னரேயே அறியமுடியம், அது ஞானத்தின் சிறப்பாகும், அது ஞானபர்யாயத்தின் சாமர்த்தியமாகும். ஞானத்திற்கு தெரிந்திருக்கிறது ஆகையால் பர்யாயம் ஞானம் எப்படி பார்த்ததோ அப்படியேதான் நிகழ வேண்டும் என்ற சார்புநிலை பர்யாயத்தில் இல்லை. ஒவ்வொரு திரவியமும், குணமும், மற்றும் பர்யாயமும் அதன் சுய தகுதியால், சுய சாமர்த்தியத்தால் அதிலேயே பதிந்திருக்கிறது.

நாம் எப்போது நற்காட்சி பெறுவோம் என்று கேவலி பகவான் அறிந்தாரோ அப்போது அது நிகழும் என்ற சரியான முடிவு கால திரவிய பர்யாயத்தின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தால் நிகழாது, கேவலஞானத்தின் ஒரு பர்யாயத்தின் பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாலும் நிகழாது, நம்மிடமுள்ள சுருதஞான பர்யாயத்தின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாலும் நிகழாது ஆனால் சர்வஞ்ஞ ஸ்வரூபி நிஜசுத்த முக்காலத்திலும் ஒரேமாதிரியாக இருக்கும் பகவான் ஆத்மாவை பார்த்துக் கொண்டிருந்தால் அதாவது சுய ஆத்மாவில் ஆழ்ந்திருந்தால்-அந்த உயிரின் நம்பிக்கை வழியாகவே க்ரமபத்தபர்யாயத்தின் யதார்தத நிர்ணயம் உண்டாகும்.

ஒவ்வொரு திரவியத்தின் மூன்று காலத்தின் எல்லா பர்யாயங்களையும் சர்வஞ்ஞ பகவான் கேவலஞானத்தின் மூலம் நேரடியாகத் தெரிந்து கொள்கிறார். நாம் நம்முடைய ஞானம் வழியாக எப்போது பகவானுடைய சரவஞ்ஞத் தன்மையை நிர்ணயம் செய்கிறோமோ அப்போது அதிலேயே க்ரமபத்தபர்யாயம் பற்றிய நிர்ணயமும் அடங்கி விடுகிறது. அப்படி நம்பவில்லை என்றால் சர்வஞ்ஞர் என்ற சொல்லுக்கு எல்லாம் அறிந்தவர் என்ற அர்த்தமும் இல்லாமல் போய்விடும்-சர்வஞ்ஞத் தன்மையே ஏமாற்றம் அடைந்ததாக ஆகும். யார் சர்வஞ்ஞரின் ஸ்வரூபத்தை நிச்சயம் செய்கிறாரோ அவருடைய நம்பிக்கை அவருடைய [நிகழ்காலத்தில் வெளிப்படாமல் சக்தி வடிவில் இருக்கும்] சர்வஞ்ஞ ஸ்வபாவத்தின் பக்கம் போகாமல் இருக்காது. இதிலிருந்து சம்யக்திருஷ்டி உயிருக்குத்தான் க்ரமபத்தபர்யாயத்தின் உண்மையான நிர்ணயம் ஆகிறது என்பது உறுதியாகிறது.

க்ரமபத்தபர்யாயத்தின் நிர்ணயம் செய்யும் உயிரின் நம்பிக்கை சர்வஞ்ஞ ஸ்வபாவ நிஜ பரமாத்மாவின் பக்கம் போகாமல் இருக்காது, இல்லையேல் க்ரமபத்தபர்யாயத்தின் நிர்ணயம் யதார்த்தமாக இருக்காது என்று ஸ்வாமிஜீ திரும்பத் திரும்பச் சொல்கிறார்.

பர்யாயங்களின் க்ரமபத்த நிர்ணயம் பர்யாயத்தின் பக்கம் பார்ப்பதால் நிகழ்வதில்லை, ஸ்வ திரவ்வியத்தின் பக்கம் பார்ப்பதால்தான் நிகழ்கிறது. இதை அறியாத ஏமாற்றுக்காரர்கள் பிற திரவிய பர்யாயங்களின் பக்கம் பார்ப்பதில் திகைத்து நிற்கிறார்கள் மேலும் பகட்டுக்காக - வெளியில் காட்டிக்கொள்வதற்காக **க்ரமபத்த பர்யாயத்தில் இருப்பது போல நிகழும்** என்று சொல்கிறார்கள். அஞ்ஞானியினுடைய இந்த நிர்ணயம் யதார்தமானதாக இல்லை. அவருடைய நம்பிக்கையில் பர்யாயத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்படுகிறது, திரவியத்தின் பக்கம் அவர் பார்வையே செல்ல வில்லை. ஆனால் க்ரமபத்தபர்யாயத்தின் யதார்த்தத்தை அறியும் ஞானி பர்யாயங்களின் சுதந்திரத் தன்மையை அறிந்தவராக இருக்கிறார்.

மகள்களே! நீங்கள் இருவரும், மற்றும் இதை வாசிக்கும் பவ்விய ஜீவன்களும் உங்களின் நிஜ சுத்தாதமாவை உறுதிப் படுத்துவதின் மூலம் க்ரமபத்தபர்யாயத்தை யதார்த்த நிர்ணயம் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

- உங்கள் அம்மா.

கடிதம்-8 ஓம் நம: சித்தேப்ய: 10-08-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

கரணானுயோகத்தை கற்பதில் உங்களுக்குள்ள ஆர்வத்தைப் பார்த்து நான் சந்தோஷப் படுகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் தினமும் காலை 8 மணி முதல் 10 மணி வரை கோமடசார ஜீவகாண்டத்தின் வர்ணனையான சம்யக்ஞானசந்திரிகா பாகம்-1 ஐ கற்பித்துக் கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியும். நேற்றுடன் அந்த நூலை கற்பித்தல் பூர்த்தியானது. திரு.அரவிந்பாய் தோஷீ, **மாமி, நான் ஒரு பொறியியல் வல்லுனர், அதனால் இதுவரை நான் கணிதத்தில் ஒருபெரிய புத்திசாலி என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த நூலில் வரும் கணிதங்களை நானே படித்துப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. நீங்கள் இந்த நூலைக் கற்பித்த பின்னர்தான் அந்த கணிதங்கள் எனக்குப் புரியவந்தன** என்று ஒப்புக்கொண்டார். திரு.அரவிந்பாய் தோஷீயின் இடைவிடாத கோரிக்கையின் காரணத்தால்தான் நான் இந்த வகுப்புக்களை எடுக்க ஆரம்பித்தேன். ஜெய்ப்பூர் தத்துவமுகாமிலிருந்து திரும்பி வந்தபிறகு, ஆகஸ்டு 26-ஆம் தேதி முதல் நாங்கள் கேமடசாரம் கர்மகாண்டம் கற்பதை தொடங்க விருக்கிறோம்.

மகள்களே! இதிலிருந்து மிகவும் நுட்பமான விஷயங்களையும் மற்றும் கணிதங்களையும் கற்பிக்கும்போது, நீங்கள் இருவரும் மற்றும் உங்களைப்போன்ற புத்திசாலி இளைஞர்களும் முன்னால் அமர்ந்து இந்த விஷயங்களைக் கேட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணம் எனக்கு அடிக்கடி வருகிறது. உங்களுடைய கேல்குலேட்டர் மற்றும் கணினிகள்கூட போடமுடியாத கணக்குகளாக இந்தக் கணிதங்கள் இருக்கின்றன - அதிபுத்திசாலிகளுக்குக்கூட சவாலாகவும் இந்த கணிதங்கள் இருக்கின்றன. இந்தக் கணிதங்களை தீர்க்கும்போது, புரிந்துக் கொள்ளும்போது ஒரு அற்புதமான மகிழ்ச்சி நமக்கு உண்டாகிறது.

இந்தக் கடினமான மற்றும் நுட்பமான கணிதங்களைத் தெரிந்து கொள்வதால் நமக்கு என்ன பலன்? என்ற கேள்வியே பலர் மனதில் ஓடுகிறது. ஒன்று அது சம்பந்தமான நம்முடைய அறியாமை விலகுகிறது, மேலும் கர்மம் மற்றும் பல தர்ம சம்பந்தமான விஷயங்களின் ஸ்வரூபம் பற்றி நாம் தெளிவாகப் புரிந்து கொள்கிறோம். இந்த கரணானுயோகப் பயிற்சியால் நம் காஷாயங்கள் மந்தமடைகின்றன, நம் அறிவும் புரிந்து கொள்ளக் கடினமான விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்து கொள்ளுமளவுக்கு கூர்மையாகிது. இது ஒரு நல்ல உயர்ந்தவகை சுப உணர்வாகும் மற்றும் இதனால் சாதிசய புண்ணியம், மேலும் மேலும் நல்ல கதிகளையே கொடுத்து முடிவில் பஞ்சம கதியாகிய சித்தகதி அடைய நிமித்தமாக அமையும் மிக உயர்ந்த புண்ணியம் நம் விரும்பாமலேயே பந்தமாகிறது.

கர்மங்களின் அவஸ்தைகளைப் பற்றி அறிவு பெறத் தொடங்கியதும் கர்ம சம்பந்தமான அறியாமை விலகுவதோடல்லாமல், மூடத்தனமான குழப்பங்களும் மற்றும் கர்ம சம்பந்தமான பயமும் நம்மை விட்டு விலகிப் போகின்றன. சர்வஞ்ஞ பகவான் இவைகளைப்பற்றி எல்லாம் நேரடியாகவும் தெளிவாகவும் அறிந்திருக்கிறார். இதில் சில விஷயங்கள் அவதிஞானி முனிகளின் அறிவில்கூட வருகின்றன. முனிவர்கள் இந்த விஷயங்களை ஆகமங்களில் விரிவாக எழுதியுள்ளனர். இந்த நூல்கள் இன்று

நம்மைப்போன்ற தர்ம சம்பந்தமான சூட்ஷமங்களை அறிய விரும்புபவர்களுக்குப் பெரிய உபகாரமாக இருக்கின்றன. இந்த பஞ்சம காலத்தில் இதுபோன்ற நூல்களே நமக்கு குருவாக இருக்கின்றன. இல்லையென்றால் மூட நம்பிக்கைகளில் சுலபமாக நம்மை மாட்டி விடும் இந்த யுகத்தில், நன்ஞானத்தின் இந்த அரிய கருவூலம் நமக்கு எங்கிருந்து கிடைக்கப் போகிறது? யார் நமக்கு இந்த நுணுக்கமான தர்மங்களை கற்பிப்பார்கள்? இவைகளைப் படித்து சிலர் வித்வான்களாகவும், சாஸ்திரியார்களாகவும் ஆகியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு பொருத்தமான நேரத்தில் அவர்களிடமிருந்து இவைகளை நாம் எப்படி கற்றுக்கொள்ள முடியும்?!

சத்திய மஹாவிரதத்தை கைக்கொண்டுள்ள முனிவர்கள் பரம்பரையாக அவர்களுக்குக் கிடைத்த தத்துவ ஞானத்தை நூல் வடிவில்-ஆகம வடிவில் எழுதியுள்ளனர். இந்த பரம்பரையும் சர்வஞ்ஞரிடமிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. சர்வஞ்ஞர்கூட இவைகளை நேரடியாகப் பார்த்து திவ்யத்தொனி மூலம் எடுத்துக் கூறியிருக்கிறார். இவைகள் யாருடைய கற்பனையுமில்லை, உண்மையல்லாததுமில்லை. யாருக்கு தத்துவ ஞானத்தில் ஆர்வமில்லையோ, சர்வஞ்ஞரின் மேல் நம்பிக்கையில்லையோ, சர்வஞ்ஞரின் ஸ்வரூபம் யாருக்குத் தெரியாதோ அவர்களுக்கு இந்த விஷயங்கள் அனைத்தும் பொய்யாகவே தோன்றுகிறது, அவர்களுக்கு இந்த விஷயங்களின் மேல் நம்பிக்கை வருவதில்லை.

தினமும் செய்தித்தாள்களில் வரும் செய்திகளில் மேல் எவ்வளவு நம்பிக்கை கொள்கிறோமோ அந்த நம்பிக்கையின் ஒரு சிறிய அளவு நம்பிக்கையாவது ஆகம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதில் நம்பிக்கை வைக்கிறோமா? என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும். எவ்வளவு ஆர்வத்துடன் தினமும் செய்தித்தாள்களை படிக்கிறோமோ அதே ஆர்வத்துடன்தான் சாஸ்திரங்களைப் படிக்கிறோமா? மாதம் முழுவதும் செய்தித்தாள்கள், வார, மாத பத்திரிக்கைகளுக்காக எவ்வளவு பணம் செலவு செய்கிறோமோ அவ்வளவு பணம் ஜினவாணி-தர்ம சம்பந்தமான நூல்கள் வாங்க செலவு செய்கிறோமா? அதைக்கூட விட்டுவிடுங்கள், பழைய செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் விற்று வரும் பணத்தின் அளவாவது நாம் ஒவ்வொரு மாதமும் தர்ம சம்பந்தமான நூல்கள் வாங்குவதில் செலவிடுகிறோமா? என்று கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்!

அக்கம்பக்கத்திலிருந்து செய்தித்தாளை ஓசியாக வாங்கிப் படிப்பதையே குறைவாக உணர்கிறோம், அதற்கு வெட்கப்படுகிறோம். ஒவ்வொருவருக்கும் தனி பேப்பர், அதுகூட எல்லோருக்கும் முன்னால் வேண்டும் என்ற விருப்பம் கொள்கிறோம். ஜினவாணி படிப்பதில் இவ்வளவு அசௌகரியம் ஏற்படுகிறதா என்ன? குடும்பத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்த்து ஒரு நூலே போதும் என்று தோன்றுகிறது அல்லவா! ஓய்வு கிடைக்கும்போது ஒவ்வொருவராக நூலைப் படிக்கலாம் என்ற பெருந்தன்மையை இந்த இடத்தில் மட்டுமே நாம் தாராளமாக வெளிப்படுத்துவது தெரிகிறதல்லவா!

ஒரு குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆடைகள் தனித்தனி, நுழைவாயில் தனித்தனி, தங்கும்அறை தனித்தனி, வங்கிகணக்கு தனித்தனி, ஒவ்வொருவரும் தனித்தனி தொழில் செய்வதில் சுதந்திரம் ஆனால் தர்ம சம்பந்தமான நூல்கள் என்று வரும்போது மட்டும் எல்லோருக்கும் சேர்த்து ஒன்றே போதும் எனத் தோன்றுகிறது. குடும்பத்திற்கு ஒன்று இருந்தால்கூட நல்ல விஷயம் என்று சொல்லுமளவுக்குத்தான் சூழ்நிலை காணாப்படுகிறது! நம் தவறுகளை எடுத்துக்காட்டவே இவ்வளவு கேள்விகளும் எழுப்பப்பட்டன. இதிலிருந்து நாம் உலக நிகழ்வுகளின் உண்மை மற்றும் பொய் கலந்த செய்திகளில் நமக்கு எவ்வளவு ஆர்வம் இருக்கிறது? அதே சமயம் ஸ்வயம் நம்முடைய

ஸ்வரூபத்தை தெரியப்படுத்தும் நூல்களின் மேல் அவ்வளவு ஆர்வம் இருக்கிறதா? என்று நமக்கு நாமே கேள்வி கேட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும், பிறருடைய குற்றங்களைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

நாங்கள் என்னவோ அதிக முயற்சிதான் செய்கிறோம், ஆனால் இதுவரை சம்யக்தர்சனம் அடைய முடியவில்லை. எங்களுடைய புருஷார்த்தத்தில் ஏதாவது குறை இருக்குமா? என்ற இந்த கேள்விக்கு ஒரேபதில்தான், **உங்களுக்கு இப்போது சம்யக்துவம் அடைவதில் ஆர்வம் குறைவாகவே இருக்கிறது என்பதுதான்!** இத்த நிலையை **ஆர்வமில்லாத விதை போல** என்கிறது சித்தாந்தம்.

மகள்களே, எனக்கு எதுவும் புரியவில்லை என்று சொல்லிக்கொண்டு இந்த கரணானுயோகப் பயிற்சியிலிருந்து விலகிவிட வேண்டாம், இதை கற்பதில் விருப்பமின்றியும் இருக்க வேண்டாம். ஆரம்பத்தில் சில சொற்கள் புதிதாகவும், மற்றும் புரிந்து கொள்ளக் கடினமாகவும் இருக்கலாம், ஆனால் திரும்பத்திரும்ப இவைகளை கேட்பதாலும், படிப்பதாலும் நமக்கு அவைகள் பழக்கமான தாகிவிடும். 10 சொற்கள் சொல்லப்படும்போது அதில் இரண்டு, மூன்று சொல்லாவது உங்களுக்கு புரிய வருகிறதா இல்லையா? எவ்வளவு அறிவு பெருகிறோமோ அந்த அளவு ஆனந்தம் உண்டாகும், தத்துவ ஞானத்தின் குறிப்பிட்ட நோக்கு கொஞ்சம் கொஞ்சமாக உங்களுக்கு புரியவரும். உலகியல் சங்கடங்கள் மற்றும் வாழ்க்கை சம்பந்தமான பயம் உங்களை விட்டு ஓடிவிடும். வாழ்க்கையில் பல விஷயங்களின் மேல் உண்டாகும் விருப்பு, வெறுப்பு உணர்வுகள் கூட வலுவிழந்து சாந்தமாகிவிடும்.

உலகியல் கல்வியின் காரணத்தால் நம் வாழ்க்கையில் முன்னேற்றமும், பல வசதிகளும் கிடைப்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் நாம் இங்கு பயிலும் தத்துவக்கல்வி என்னவோ இவ்வுலக வாழ்க்கையையும் தாண்டிய போதனையாக அமைகிறது. இதனால் இந்த பிறவியின் வாழ்க்கையும், மரணமும் மட்டுமல்ல, அடுத்தடுத்த நம் பிறவிகள் கூட மேம்படுகின்றன, அப்பவங்கள் வசதியானதாகின்றன, கடைசியில் பிறவியே இல்லாத மோக்ஷம் எனும் நிலையான பஞ்சமகதி கிடைக்கிறது.

கர்மத்தின் பத்து நிலைகளில் சத்துவம், உதயம், உதீரணை மற்றும் உபசமம் ஆகிய நிலைகளைப் பற்றி நாம் தெரிந்து கொண்டோம். இப்போது மற்ற நிலைகள் பற்றி சுருக்கமாக சர்ச்சை செய்யலாம். கர்மம் பற்றி கொஞ்சம் அறிமுகம் கொடுத்தால் போதும் என்றே முதலில் நினைத்தேன், ஆனாலும் அவைகளைப்பற்றி கொஞ்சம் அதிகமாகவே எழுதி விட்டேன். நாம் இன்னும் குணஸ்தானம், மார்கணை முதலான உயிரின் 20 பிரரூபணைகள் பற்றிகூட சுருக்கமாகப் பார்க்க வேண்டி யிருக்கிறது.

உயிர் கர்மத்தை பந்தம் செய்து கொண்ட பிறகு அவை உதயத்திற்கு வரும்வரை அவைகளில் ஏற்ற இறக்கங்கள் நிகழ முடியும் என்று நான் உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். எந்த வடிவில் கர்மம் பந்தமானதோ அதே வடிவிலேயே அது உதயத்திற்கு வரும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. உயிரின் பல்வேறு உணர்வுகளின் நிமித்தத்தால் சத்தாவில் இருக்கும் கர்மங்களில் மாற்றங்கள், குளறுபடிகள் நிகழ்கின்றன. அவைகளில் உத்கர்ஷணம் மற்றும் அபகர்ஷணம் என்ற இரண்டு நிலைகளைப் பற்றி நாம் இப்போது பார்க்கலாம்.

உத்கர்ஷணம் என்றால் அதிகரிக்கச் செய்வது, அபகர்ஷணம் என்றால் குறையச் செய்வது என்று பொருள். பிரதேசம் மற்றும் பிரக்ருதியில் ஏற்ற இறக்கங்கள் நிகழ

முடியாது. ஸ்திதி மற்றும் அனுபாகத்தில், தங்கியிருக்கும் காலம் மற்றும் பலன் தரும் சக்தியில் இந்த ஏற்ற இறக்கங்கள் நிகழ்கின்றன. உயிரினுடைய உணர்வுகளின் நிமித்தத்தால் சத்தாவில் இருக்கும் கர்மத்தின் ஸ்திதி மற்றும் பலன் தரும் சக்தி அதிகரித்தலை **உத்கர்ஷணம்** என்று சொல்கின்றனர். உயிரினுடைய உணர்வுகளின் நிமித்தத்தால் சத்தாவில் இருக்கும் கர்மத்தின் ஸ்திதி மற்றும் பலன் தரும் சக்தி குறைதலை **அபகர்ஷணம்** என்று சொல்கின்றனர்.



சாஸ்திர ஸ்வாத்யாயம், தத்துவ சிந்தனை, தத்துவ நிர்ணயம், தத்துவம் பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஒரு உறுதியான முடிவுக்கு வருதல், பேதஞானம், சாதாரண அறிவுக்கு ஒன்றாக காணப்படும் இரண்டு பொருள்களை கூர்மையான அறிவால் தனித்தனியாகப் பிரித்து அறிதல் [உதாரணம்: உயிரை உடலிலிருந்து பிரித்தறிதல்] ஆகியவைகளின் காரணத்தால் அனேக கோடாகோடி கடற்காலமாக இருக்கும் கர்மத்தின் ஸ்திதி அந்த்த கோடாகோடி (ஒரு கோடாகோடிக்கும் கொஞ்சம் குறைந்த) கடற்கால அளவு குறைந்து விடுகிறது என்று நாம் முன்னரே பார்த்திருக்கிறோம். புதியதாக பந்தமாகும் கர்மம்கூட இந்தக் காரணங்களால் குறைந்த ஸ்திதியுடன் பந்தமாகின்றன என்றும் பார்த்தோம்.

நான் முன்னால் அதிக பாபம் செய்தேன் அதனால் அதிக பாப கர்மத்தை கட்டிக்கொண்டேன் என்று சொல்லிக்கொண்டு துக்கம் கொள்வதும், இரங்குவதும் சரியில்லை. பழைய கெட்ட கர்மங்களின் காரணத்தால் பச்சாதாபம் கொண்டு, மனந்திரும்பிய பிறகுகூட அவைகளை சிந்தனை செய்வதால், எப்படி யெல்லாம் பாபம் செய்தேன் என்று வரிசைப்படுத்திச் சிந்தித்துக் கொண்டிருப்பதால் எந்த பிரயோஜனமுமில்லை.

இது ஸ்திதி மற்றும் அனுபாகத்தில் நிகழும் ஏற்ற இறக்கங்களாகும். இப்போது பிரக்ருதியில் என்ன மாற்றம் நிகழ முடியும் என்று பார்க்கலாம். எந்த மூல பிரக்ருதியும் வேறு மூல பிரக்ருதி வடிவில் மாற்றமடைய முடியாது. இதன் பொருள் ஞானவரண கர்ம பிரக்ருதி தர்சனாவரண கர்ம பிரக்ருதியாகவோ அல்லது வேறு கர்ம பிரக்ருதியாகவோ மாற்றமடைய முடியாது. மோஹனீய கர்மத்தில்கூட தர்சன மோஹனீயம் சாரித்ர மோஹனீயமாக மாற்றமடைய முடியாது. நான்கு ஆயுள் கர்மத்தில் ஒரு ஆயுள் கர்மம் வேறு ஆயுள் கர்மமாக மாற்றமடைய முடியாது, மனித ஆயுள் மாற்றமடைந்து தேவ ஆயுளாக

முடியாது. ஆனால் சில கர்ம பிரக்ருதி அதே ஜாதியின் வேறு பிரக்ருதி வடிவமாக ஆக முடியும், இதை **சங்க்கிரமணம்** என்று சொல்கின்றனர். உயிரின் விசுத்த பரிணாமத்தின்-தூய உணர்வின் நிமித்தத்தால் முன்னர் பந்தமான அசாதா வேதனீய கர்ம பிரக்ருதியின் பரமாணு சங்க்கிரமணம் அடைந்து சாதா வேதனீய கர்ம வடிவில் மாற்றமடைய முடிகிறது.

நிதத்தி:- சங்க்கிரமணம் மற்றும் உதீரணை அடையத் தகுதியற்ற கர்ம பிரக்ருதிகளை **நிதத்தி** என்று சொல்கின்றனர்.

நிகாசிதம்:- சங்க்கிரமணம், உதீரணை, உத்கர்ஷணம் மற்றும் அபகர்ஷணம் அடையத் தகுதியற்ற கர்ம பிரக்ருதிகளை **நிகாசிதம்** என்று சொல்கின்றனர். எந்த வடிவில் இந்த பிரக்ருதிகளின் பந்தமானதோ அதே வடிவில் அவைகள் உதயத்திற்கு வருகின்றன. இதன் பொருள் அதன் பலன் அதே வடிவிலேயே கிடைக்கிறது.

சாஸ்திர விபரமறிந்தவர்களில் பலர் இந்த நிதத்தி, நிகாசித கர்மங்களை துஷ்ட தேவதைகளாக உருவகம் செய்து விடுகிறார்கள். இந்த கர்மங்களை கட்டிக்கொண்ட பின் அதன் பலன்களை அனுபவித்து கஷ்டப்பட்டே தீரவேண்டும், வேறு வழியில்லை என்று கூறி மற்றவர்களை பயமுறுத்துகிறார்கள். இங்கே பாருங்கள், இந்த கர்மங்கள் உயிர் புருஷார்த்தம் செய்வதற்கு எந்த தடையும் செய்வதில்லை. நாம் உண்மையில் இந்த கர்மங்கள் மோசமானதா என்று கொஞ்சம் யோசித்துப் பார்க்கலாம்.

சக்கரவர்த்தி பதவி பெரிய புண்ணிய உதயத்தால் கிடைக்கப் பெறுகிறது. இந்த புண்ணியம் கூட இந்த ஜாதி கர்மம்தான், இதை அனுபவித்தே தீரவேண்டும். நிதத்தி, நிகாசித வகை புண்ணியத்தைக்கூட அனுபவித்தே தீரவேண்டும், அதிலிருந்து தப்பிக்க முடியாது. **ஹய்! இவ்வளவு தானே? புண்ணியத்தை அனுபவிப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை** என்று நீங்கள் சொல்லலாம். இங்கே பாருங்கள்! பாப கர்மத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்று சொல்லும்போது மட்டும் உயிர் பதட்டமடைகிறது ஆனால் புண்ணிய கர்மத்தை அனுபவித்தே தீரவேண்டும் என்று சொல்லும்போது மகிழ்ச்சி அடைகிறது. இதிலிருந்து புண்ணிய கர்ம பந்தத்தை அவர்கள் நல்லது என்று நம்புகிறார்கள். இது அவர்களுடைய பந்த தத்துவ சம்பந்தமான தவறான நம்பிக்கையும், எண்ணமுமாகும். யாருக்கு ஒரு தத்துவ சம்பந்தமான தவறான எண்ணமும், நம்பிக்கையும் இருக்கிறதோ அவர்களுக்கு ஏழு தத்துவங்களிலும் தவறான நம்பிக்கையும், எண்ணமும் இருக்கவே செய்யும்.

நம்முடைய மனித ஆயுள் மாற்றமடைந்து, விலங்கு ஆயுளாக ஆகாது என்பது நல்லதுதா கெட்டதா? ஆயுள் கர்மத்தின் உதீரணை அதாவது கதலீஃகாதம் அடைந்து சீக்கிரம் மரணம் நிகழ்வதில்லை என்பதை நாம் நல்லது என்று நம்புகிறோமா அல்லது கெட்டது என்று நம்புகிறோமா? ஆகையால் இது போன்ற எந்த தர்ம சம்பந்தமான விஷயத்தையும் கேட்டு அதில் குருட்டுத்தனமான நம்பிக்கை கொள்ளக்கூடாது, ஆனால் அவைகளை கிரந்தங்களின் ஆதாரத்தில், சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பதின் ஆதாரத்தில், இந்த தர்ம சம்பந்தமான வெளிப்பாட்டின் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்ள வேண்டும். இப்போது நீங்கள் கிரந்தத்தின் ஆதாரத்தில் எதையும் ஆய்வு செய்யக் கற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய இந்த கடிதம் மூலம் ஸ்வாத்யாயம் செய்வது உங்களுக்கு கிரந்தங்களை படிப்பதில் ஆர்வத்தை உண்டு பண்ண ஏதுவான ஒரு யுக்தியாகும், தந்திரமாகும். கர்மத்தின் இந்த பத்து நிலைகளையும் தெரிந்து கொண்ட பிறகு உங்களுக்கு **சாஸ்திரங்களில் கர்மங்களின் ஷயம்-அழிவு மற்றும் ஷயோபசமம்**

-அழிவும் தணிவும் நிகழ்கிறது என்று வர்ணனைகள் வருகின்றனவே, ஆனால் இந்த பத்து நிலைகளில் இவைகளின் பெயர்கள் கூட வரவில்லையே, ஏன்? என்ற கேள்வி எழலாம்.

கேளுங்கள், கர்மம் ஷயமாகிறது என்பதன் பொருள் கர்ம வடிவம் அழிந்து கர்ம வடிவமாக இல்லாது போதல். கார்மண வர்க்கணைகளே கர்மமாக மாற்றமடைகின்றன. கர்ம வடிவ நிலை மாறி மீண்டும் கார்மண வர்க்கணை வடிவமாகவோ அல்லது வேறு புத்கல வர்க்கணை வடிவமாகவோ ஆகுமானால் கர்மம் நாசமடைந்தது என்று சொல்கின்றனர். அதாவது கர்மம் உதயமான பிறகு அது தன் கர்ம வடிவ நிலையிலிருந்து மாற்ற மடைந்து கார்மண வர்க்கணை வடிவமாகிறது. கர்ம வடிவிலிருந்து பிரிந்து வெளிவந்த இந்த வர்க்கணைகள் உயிர் இருக்கும் பிரதேசத்திலேயே இருக்கலாம் அல்லது வேறு பிரதேசத்திற்கு செல்லலாம். ஆனால் இப்போது அந்த வர்க்கணைகளுக்கு உயிருடன் எந்த நிமித்த நைமித்த சம்பந்தமும் இருப்பதில்லை.

உயிரில் எந்த கர்ம பிரக்ருதியின் சத்துவம் முழுமையாக அழிந்துபோய் விடுகிறதோ அந்த நிலையை கர்ம ஷயம் என்று சொல்கின்றனர். இதனால் கர்மத்தின் உதய நிலையிலேயே ஷயமும் அடங்கி விடுகிறது.

கர்மம் நிர்ஜரை ஆனது என்றுகூட நம் சுவாத்யாயத்தில் அடிக்கடி வருவதைப் பார்க்கிறோம். இதன் பொருள் என்னவென்று இப்போது தெரிந்து கொள்ளலாம். கர்மத்தின் ஸ்திதி முழுமை அடைந்ததும் உயிரிடமிருந்து கர்மம் விழுந்து விடுகிறது ஆனால் அதே சமயத்தில் அதனுடைய பலன் உயிருக்கு கிடைக்கிறது, இதையே உதயம் என்று சொல்கின்றனர். உயிர் அதனால் சுகமோ அல்லது துக்கமோ அடைகிறது அதை கர்மத்தின் பலன் தரும் சக்தி, அனுபாக உதயம் என்று சொல்கின்றனர். ஆனால் அந்த சமயத்தில் உயிர் கர்மத்தின் பலனில் தன் உபயோகத்தை செலுத்தாமல், சுத்தோபயோகத்தில் இருந்தால், அதாவது தன் தூய ஆன்மாவில் ஆழ்ந்திருந்தால் அந்த உயிர் கர்மத்தின் பலனை அனுபவிப்பதில்லை, [அதாவது அந்த உயிருக்கு கர்மத்தின் பலனால் எந்த பாதிப்பும் உண்டாவதில்லை.] அதானல் கர்மத்தின் பலன் தரும் சக்தி உதயமாகவில்லை போலும் என்ற நிலை காணப்படுகிறது. ஆனால் மற்ற ஸ்திதி உதயம், பிரக்ருதி உதயம் மற்றும் பிரதேச உதயம் என்னவோ நிகழ்ந்து விட்டது, கர்மம் கர்மமில்லாத நிலையை அடைந்து விட்டது ஆகையால் இதை **நிர்ஜரை** என்று சொல்கின்றனர்.

சிலர் கர்ம உதயத்தால் உண்டாகும் துக்க சூழ்நிலையில் அமைதியாக வருத்தத்தைத் தாங்கிக் கொள்கிறார்கள், அவர்கள் துக்கத்தில் மூழ்கி விடுவதில்லை, துக்கம் வந்துவிட்டதே என்று புலம்புவதுமில்லை. இதை **அகாம நிர்ஜரை** என்று சொல்கின்றனர். நிர்ஜரை என்வோ நிகழ்ந்தது, ஆனால் மோக்ஷ மார்கத்தில் இதனால் எந்த காரியமும் நிகழவில்லை ஆகையால் இதை அகாம நிரஜரை என்று சொல்கின்றனர். ஆனால் ஆன்மாவில் ஆழ்வதின் மூலம் அதாவது சுத்தோபயோகத்தின் மூலம் எந்த நிர்ஜரை ஆகிறதோ அது சம்வரையுடன் கூடிய நிர்ஜரையாகும், இதை **சகாம நிர்ஜரை** என்று சொல்கின்றனர். இந்தவகை சம்வரை, நிர்ஜரை இரண்டையும் மோக்ஷமார்கம் என்று சொல்கின்றனர்.

நிர்ஜரை சவிபாக நிர்ஜரை மற்றும் அவிபாக நிர்ஜரை என்று வேறு இரண்டு விதமாகக் கூட சொல்லப்படுகிறது. விபாக என்றால் கர்மத்தின் பலன் என்று பொருள். அனுபாகம் அதாவது கர்மத்தின் பலன்தரும் சக்தி உதயத்திற்கு வந்து பலன் கொடுத்துவிட்டு கர்ம

நிர்ஜரையாவது **சவிபாக நிர்ஜரை** எனப்படுகிறது. [இந்த நிலையில் உயிர் கர்மத்தின் பலனை துய்க்கிறது, அதனால் அதன் உணர்வுக்கு தகுந்தார்போல் புதிய கர்மமும் பந்தமாகிறது.] பலன் கொடுக்காமலேயே [உயிர் தன் ஆன்மாவில் அதன் உபயோகத்தை செலுத்திக் கொண்டிருப்பதால் துன்ப அனுபவ சூழ்நிலை அதன் அறிவுக்கு வாராமலிருப்பதால் புதிய கர்மமும் கட்டுவதில்லை] அந்த கர்ம உதயம் துன்ப அனுபவத்தை கொடுக்காமலேயே அதன்கால முடிவில் உதயத்திற்கு வந்து [அதில் எந்த சக்தியும் இல்லாதது போல] விழுந்து விடுவதை **அவிபாக நிர்ஜரை** என்று ஆகமங்கள் கூறுகின்றன. அவிபாக நிர்ஜரை என்பதும் சகாம நிர்ஜரை என்பதும் ஒரே அர்த்தத்தையே கொடுக்கும் சொற்களாகும்.

இப்போது **ஷயோபசமம்** என்றால் என்ன? என்ற கேள்வி எழுகிறது. இதில் கர்மத்தில் மூன்று நிலைகள்-ஷயம், உபசமம், மற்றும் உதயம் ஆகிய மூன்று நிலைகளும் ஒரே சமயத்தில் காணப்படுகின்றன. அதே வடிவில் கர்ம உதயம் நிகழாமலிருப்பதை உதயாபாவி ஷயம் என்று சொல்கின்றனர். கர்மம் தற்சமயம் உதயத்திற்கு வராமல் சத்தாவில் இருத்தலை உபசமம் என்கின்றனர். முழுமையாக தடைசெய்யும்-ஆவரணம் செய்யும் சர்வகாதி பிரக்ருதிகள் நிகழ்காலத்தில் உதயத்திற்கு வராமலிருத்தல், அதே ஜாதி கர்மம் எதிர்காலத்தில் வர இருத்தல் அதாவது சத்தாவில் இருத்தல் மற்றும் அதில் நிகழ்காலத்தில் உதயத்திற்கு வரவேண்டியவை தேசகாதி வடிவில் மாறி [திபுக் சங்க்கிரமணம் அல்லது த்யூக் சங்க்கிரமணம் அடைந்து] உதயத்திற்கு வருதலை **ஷயோபசமம்** என்று சொல்கின்றனர். ஞானம், தர்சனம், வீர்யம் முதலியன வெளிப்படாமல் பதுக்கி வைக்கும் சக்தி கொண்ட ஞானாவரணம், தர்சனாவரணம், அந்தராயம் முதலிய கர்மங்களில் தான் இந்த ஷயோயசமம் நிகழ்கிறது, இதன் பொருள் உயிரின் குணங்களை அந்த ஆவரணங்கள் முழுமையாக பதுக்க முடியாததாக இருக்கின்றன, முழுமையாக மூடப்பட முடியாமலிருக்கிறது. கொஞ்ச அளவாவது இந்த குணங்கள் வெளிப்படும் சூழ்நிலையே காணப்படுகிறது.

கர்மத்தில் உதயம், உபசமம், ஷயோபசமம் மற்றும் ஷயம் நிகழும் அதே சமயத்தில் உயிரின் எத்த உணர்வுகள் உற்பத்தியாகிறதோ அதை வரிசையாக ஔதயிக, ஔபஷமிக, ஷயோபஷமிக மற்றும் ஷாயிக உணர்வுகள் என்று சொல்கின்றனர். உயிரின் உணர்வு உயிரில் நிகழ்கிறது, கர்மத்தின் மாற்றம் கர்மத்தில் நிகழ்கிறது என்பதை நாம் முன்னர் விரிவாகவே பார்த்திருக்கிறோம்.

கர்மத்தின் எந்தத் தாக்கமும் இல்லாத உயிரின் உணர்வு நிலையை **பாரிணாமிக பாவம்** என்று சொல்கின்றனர். இந்த பாரிணாமிக பாவத்தில் அடைக்கலமடைந்த உயிர் அதாவது உயிரே **நானாவேன்** என்று நிறுவி, அதுவே தன் ஞானத்தில் அறியப்படும் பொருளாகி, தன் நம்பிக்கையில் நம்பிக்கையின் பொருளாகி, மேலும் தானே தியானத்தின் தியானப் பொருளாகி விடும்போது சம்யக்தர்சனம் அடையப்படுகிறது. அதில் நிலைப்பதின் மூலம் மோக்ஷமார்க்கத்தில் முன்னிலை வகிக்க முழுமையாக நிலைப்புத்தன்மை கொள்வதின் மூலம் எல்லா கர்மங்களையும் அழித்து, ஷயம் செய்து கர்மங்கள் இல்லாத மோக்ஷநிலை அடையப்படுகிறது. உயிரின் பர்யாயத்திலும் அதன் முழுத்தூய வடிவமே அமர்ந்திருக்கிறது, வெளிப்படுகிறது. [உயிர் முக்காலத்திலும் ஒரேமாதிரியாக இருக்கும் திரவிய இயல்பே, ஒவ்வொரு சமயமும் மாற்றமடையும் உயிரின் நிகழ்கால மற்றும் எதிர்கால பர்யாயங்களும் திரவியத்தில் இயல்பே வெளிப்படுகின்றன.]

கர்மங்கள் இல்லாமல் போனபிறகு நோகர்மம், பாவ கர்மங்கள், திரிபு உணர்வுகள், கஷாயங்கள் இருக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகிறது. ஆகையால் அனந்த

காலம்வரை இந்த உயிர் சுத்த வடிவில் அதாவது சுத்த நிலையில் அனந்த குறைவில்லாத (indeclinable) சுக அனுபவத்தை அடைந்த வண்ணம் இருக்கிறது.

மகள்களே, கர்ம சம்பந்தமான அறிவு இல்லாதவரை, கர்ம சம்பந்தமான அஞ்ஞானம் இருக்கும்வரை கர்மமே மிகுந்த பலம் வாய்ந்ததாக இருப்பது போன்ற ஒரு குழப்பம் நம்மிடம் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் கர்மங்களின் நிலைகளை பற்றிய அறிவு பெற்ற பிறகு உயிரே பலம் வாய்ந்தது என்ற புரிதல் உண்டாகிறது. அனாதி காலமாக அனந்தானந்த கார்மண வர்கணைகளை ஏற்றும் பிறகு விட்டும் இருக்கிறேன். இதனால் என்னுடைய இயல்பில், ஸ்வபாவத்தில் எந்த வித்தியாசமும், எந்த மாற்றமும் நிகழவில்லை. நான் என்னவோ ஸ்வயம் சித்தன்-தானாகவே நிலைத்திருக்கின்றவன், அக்ருத்ரிம்-எதாலும் யாராலும் செய்யப்படாதவன், பரிபூரணன்-முழுமையானவன் என்றென்றும் ஞான தர்சன மயமாகவே இருக்கும் நிலையைக் கொண்டிருக்கிறேன்.

மகள்களே! கர்மங்களின் நிலைகள் பற்றிய அறிவு பெற்று கர்ம நோகர்ம மற்ற சுய பரமபாரிணாமிக உணர்வில்-ஸ்வபாவத்திலேயே நிலைத்து தங்கும்நிலை அடைந்து நாமும்கூட திரவ்விய கர்மம், பாவ கர்மம் மற்றும் நோகர்மங்கள் அற்ற சித்த நிலையை அதிசீக்கிரமாக பெறுவோம் என்ற மங்கல உணர்வுடன் இப்போது இந்த கர்ம புராணத்தை முடிக்கிறேன்.

- உங்கள் அம்மா.

குணஸ்தானம் முதலியவைகளை தெரிந்து கொள்வதின் பயன்

கடிதம்-9 ஓம் நம: சித்தேப்ய: 28-08-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நாங்கள் இருவரும் ஜெயப்பூர் முகாமிலிருந்து ஆகஸ்டு 25 அன்றுதான் திரும்பி வந்தோம். இந்த முகாமுக்கு சென்றதின் காரணத்தால் சில தினங்களாக என்னால் கடிதம் எழுத முடியவில்லை. ஆனாலும் எப்போதும்போல என்னுடைய எண்ணத்திலும், தியானத்திலும் இதைப்பற்றிய சிந்தனையே ஓடிக்கொண்டிருக்கிறது. பிரித்தறியும் அறிவுடன் (பேதஞானத்துடன்) நான் என்னென்ன தவறுகளைச் செய்கிறேன் என்று எண்ணிப் பார்க்கவும் முயற்சி செய்கிறேன். **ஹே உயிரே** என்று சொல்லி, என்னை நானே கருத்தில் கொண்டு எனக்கு நானே பல விஷயங்களை கற்றுக்கொள்கிறேன். அவற்றில் சில சிந்தனைகளை இங்கே எழுதுகிறேன். நீங்கள்கூட அதேபோலவே சிந்திக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமுமாகும். உங்களைப் பார்க்கும்போதுகூட **என்னுடைய மகள்கள்** என்ற நோக்கில் பார்க்காமல் சக **உயிர்கள்** என்ற நோக்கில் பார்த்தே, நான் இங்கு உபதேசம் செய்கிறேன்.

ஹே உயிரே! நீயோ ஞானம் மற்றும் ஆனந்தத்தின் ஒரு திடப்பொருளாக-பிண்டமாக இருந்தும்கூட நீ ஏன் எப்போதும் துன்பத்திலேயே ஆழ்ந்து கிடக்கிறாய்? இதைப்பற்றி நீ எப்போதாவது சிந்தனை செய்திருக்கிறாயா? மற்றவர்கள் அடைந்துள்ள செல்வத்தைப் பார்த்து நீ கூட அப்படிப்பட்ட செல்வங்களை சேர்ப்பதில் உன் ஆயுள் முழுவதையும் கழித்து விடுகிறாய், ஆனாலும்கூட உனக்கு துன்பம் மட்டுமே எஞ்சுகிறது. இந்த துன்பமே உன்னை சோகத்தில் மூழ்கடிக்கிறது. இந்த துன்பமே உன்னில் எழும் விருப்பு, வெறுப்பு முதலான சுபாசுப உணர்வுகளுக்கு காரணமாக இருக்கிறது. உன்னுடைய இயல்பு என்னவோ முக்காலத்திலும் ஞான மற்றும் சுக வடிவமே யாகும். இந்த காரணத்தால் நீ பெற்றுள்ள ஞான இயல்பை நீ அறிவதில் ஆழ்திருந்தால்-அதாவது உன் நிகழ்கால அறிவால் உன் உயிரிலேயே இயல்பாக நிலைத்திருக்கும் ஞானத்தை உறிஞ்சினால் உனக்கு ஆனந்த அனுபவமே அவசியம் உண்டாகி இருக்கும். ஆனால் அந்த உன் நிகழ்கால அறிவு பிறவற்றை பார்த்து விருப்பு வெறுப்புகளையே உறிஞ்சுவதில் முடங்கிப்போனால் உனக்கு துக்க அனுபவமே உண்டாகிறது, அதாவது துக்கத்தையே அனுபவம் செய்வதில் நீ முடங்கிப் போகிறாய். என்ன செய்வது? எங்களுக்குத்தான் ஸ்வயம்-எங்களைப் பற்றிய அறிவே இல்லையே! என்று நீங்கள் கூறலாம்.

"ஹே அறிபவனே, முழு உலகத்தையே அறியும் சர்வஞ்ஞ சக்தி கொண்ட உயிரே! நான் என்னையே அறிய முடியவில்லை என்று சொல்வது உன்னையே நீ கேலி செய்து கொள்வதுபோல உனக்குத் தோன்றவில்லையா? உனக்கு உலகத்தை அறிவதுதான் பிடித்திருக்கிறது, அதில்தான் ஆர்வம்-ருசி இருக்கிறது ஆகையால் ஒரு கண நேரம் கூட நீ உன்பக்கம் திரும்பிப்பார்க்க முயற்சி செய்யவே யில்லை. உன் ஒவ்வொரு சமய ஞானத்தின் பர்யாயமும் ஸ்வயம் உன்னிடமே நிகழ்கிறது-உன்னுடைய அசங்க்யாத பிரதேசங்களிலேயே நிகழ்கிறது ஆனால் உனக்கு ஞாயக்கின் மேல் அதாவது அறிபவரின் மேல் நம்பிக்கை இல்லை. ஞேய பொருள்களின்மேல்-அறியப்படும் பொருள்களின்மேல் மட்டுமே நம்பிக்கை இருக்கிறது. அறியப்படும் பொருளாலேயே எனக்கு அறிவு வருகிறது என்று நம்பிக்கொண்டு பிற அறியப்படும் பொருள்களின் பக்கமே நீ ஆசை குழைந்த

ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறாய். உன் இந்த பையித்தியக்காரத் தனத்தை எப்போதுதான் விடப்போகிறாய்?

நீ உண்மையான தேவ குரு, சாஸ்திரங்களிடம் தஞ்சமடைந்தது ஒரு நல்ல விஷயம்தான் ஆனால் நீ அங்கேயே நின்று விட்டாய். அதிலேயே சிக்கிக் கொண்டிருக்கிறாய். தேவ குரு, சாஸ்திரங்களிடமிருந்து உனக்கு **நீ ஸ்வயம் பகவான்-நீ உன்னைப் பார்** என்ற உபதேசம் கிடைத்தது. ஆனால் கிடைத்த உபதேசத்தை நீ உதறி விட்டு தேவ, குரு, சாஸ்திரங்கள் பக்கமே பார்த்துக் கொண்டிருக்கிறாய், சாஸ்திரத்திலிருந்துதான் ஞானம் கிடைக்கிறது என்று நம்பி அதிலியேயே திருப்தி அடைந்து அங்கேயே அமர்ந்து விட்டாய்-நீ மிகவும் அப்பாவியாக மாறிவிட்டாய். நான் 25-30 வருடங்களாக சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு உன்னுடைய மகத்துவத்தை மற்றவர்களுக்கு காட்டுவதில் பெருமை கொள்கிறாய்.

சாஸ்திரங்களில் ஆத்மாவுடைய அதாவது ஸ்வயம் உன்னுடைய மகத்துவத்தைக் கேட்ட பிறகும்கூட ஸ்வயம் உன்பக்கம் திரும்புவதை விட்டுவிட்டு-உன் பக்கம் உன் அறிவை திருப்பி உன்னையே பார்த்தறிவதை விட்டு விட்டு, நீ பிறருடைய ஆத்மாவின் மகிமைகளை எடுத்துச்சொல்ல ஆரம்பித்து விட்டாய். இவ்வாறு கேட்ப்பவர்கள் மற்றும் சொல்பவர்களின் கூட்டம் தயாராகி விடுகிறது. ஜினதர்மத்தை விளம்பரப் படுத்துவதில் நீ மிகவும் உற்சாகமாக இருக்கிறாய், கிடைப்பதற்கு அரிதான மனிதப் பிறவியின் கடமை இதுவே என்று நம்பிக் கொண்டிருக்கிறாய். பொது ஜனங்கள்கூட உனக்கு நல்ல பாராட்டு பத்திரங்கள், பட்டங்கள் கொடுக்கிறார்கள். அதனால் நீ உன்னை உயர்ந்தவனாக எண்ணி தற்பெருமையால் உன்னை பெரிய தர்மாத்மாவாக, மகானாக கற்பனை செய்து மான கஷாயம், கர்வம் கொள்கிறாய்.

இதில் ஒரு சிறிய குறைபாடு இருக்கிறது என்பதை நீ அறிந்ததாகத் தெரியவில்லை. அது என்னவென்றால் எந்த ஆத்மாவின் மகிமையை நீ பாராட்டிப் பிறரை கேட்க வைக்கிறாயோ, அந்த ஆத்மா நானேதான் என்று எண்ணி உண்மையான மனஉறுதியுடன் நீ நம்பிக்கை கொண்டிருந்திருக்க வேண்டும். அப்படி நீ நம்பிக்கையுடன் உன்னுடைய உபயோகத்தை பிறருக்கு கற்பிப்பதில் செலுத்தாமல், ஸ்வயம் உன்பக்கமே உன் உபயோகத்தை செலுத்தியிருந்தால், இந்த நேரம் நீ உன்னையே பார்ப்பவன் வடிவில் அறிந்திருப்பாய்! மற்றும் அந்த க்ஷணத்திலேயே உன்னுடைய ஆனந்தத்தின் கருவூலம் திறந்திருக்கும். ஆனந்த அனுபவம் உனக்கு கிடைக்கத் துவங்கியிருக்கும். அதற்குப்பிறகு கூட உன்னுடைய ஆகம நுணுக்கங்களை கற்றுக்கொள்ளுதல், கற்பித்தல் நடந்து கொண்டுதான் இருக்கும், ஆனால் இப்போது நீ அதை உன்னுடைய கடமையாக நம்பி செய்யமாட்டாய், அதில் உன்னுடைய கர்த்ருத்வபுத்தி, இதை நான் செய்யவேண்டிதே என்ற புத்தி அழிந்து விட்டிருக்கும், உன்னுடைய துன்பமும் குறைந்துபோய் இருக்கும்.”

மகள்களே, நீங்கள் குணஸ்தானம், மார்கணாஸ்தானம், முதலியவைகளைப் பற்றிய அறிவு கொஞ்சமாவது பெற வேண்டியது அவசியம்தான். அத்யாத்ம நூல்களை வாசித்து திரவியானுயோகத்தை அறிந்து கொள்வது மிக அவசியமானதுதான், அதே சமயத்தில் அந்த நூல்களைப் படிப்பவர் கரணானுயோகத்தை தெரிந்து கொள்ள என்ன அவசியம் இருக்கிறது என்று ஒதுக்கி விடுவாரானால் அப்படிப்பட்ட திரவ்வியானுயோக சார்புடைய நபரை பண்டிதர் தோடர்மல் **ஹே சூட்ஷமாபாசபுத்தி** என்று அவருடைய உரையில் விளிக்கிறார்.

அப்படிப்பட்ட உயிர்களை உத்தேசித்து இதை சொல்ல விரும்புகிறேன், **சமயசாரத்தை என்னவோ நீங்கள் படித்து விட்டீர்கள். குணஸ்தானம்-மார்கணஸ்தானம் நான் இல்லை, நான் அறிவு உணர்வு கொண்ட ஒரு ஜீவி என்ற ஸ்லோகத்தை கூட நீங்கள் ஞாபகத்தில் வைத்துள்ளீர்கள்.** ஆனால் யாராவது உங்களிடம் குணஸ்தானம், மார்கணாஸ்தானம் இவைகளிலிருந்து நீங்கள் எவ்வாறு வேறுபட்டவர்? என்று கேள்வி எழுப்பினால், **யாருக்குத் தெரியும்? நான் திரவ்விய நோக்கு கொண்டவன். கரணானுயோகத்தால் எனக்கு எந்த பிரயோஜனமும் இல்லை** என்று நீங்கள் பதில் சொல்வீர்கள். **ஹே உயிரே! உங்களுக்கு அப்படி ஒரு நம்பிக்கை இருக்குமானால் உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்கிறீர்கள் என்றுதான் அர்த்தம். உங்களுக்கு அவைகளின் ஸ்வரூபமே தெரியவில்லை என்றால் எப்படி அவைகளிலிருந்து நீங்கள் வேறுபட்டவர் என்று உங்களால் உறுதியாகச் சொல்ல முடியும்?**

முழுமையான ஜினவாணி நான்கு அனுயோகங்களின் வடிவிலும் இருக்கிறது. ஜினவாணி நான்காகப் பிரிக்கப் பட்டிருந்தாலும், நான்கு அனுயோகங்களின் சாரமும் வீதராத்துவம்தான். எந்த ஒரு அனுயோகத்தையும் தேவையற்றது என்று விலக்குவது ஜினவாணியையே விலக்குவதற்குச் சமமாகும். ஜினவாணியை விலக்குவது ஜினேந்திர பகவானையே விலக்குவதாகும். யார் சர்வஞ்ஞரையே விலக்குகிறாரோ அவர் சர்வஞ்ஞ ஸ்வரூப நிஜ சுத்தாத்மாவையே விலக்குகிறார் என்பதாகும். ஸவ்யம் தன் இருப்பையே-அஸ்தித்துவத்தையே விலக்குபவர் தர்மத்தை எப்படி வெளிப்படுத்துவார்? ஜினவாணி ஸ்யாத்வாத முத்திரை கொண்டது. இதன் பொருள் ஜினவாணி வஸ்த்துக்களை வெவ்வேறு நோக்கில் வர்ணனை செய்து எந்த பொருளையும் எந்த குளறுபடியுமின்றி புரிந்து கொள்ளவும் அதை உறுதி செய்யவும் நமக்கு உதவுகிறது.

சாஸ்திரங்கள் கர்மம், குணஸ்தானம், மார்கணை முதலியவைகளை விளக்கி அவைகளைப் பற்றிய அறிவை நமக்கு அளிக்கின்றன. அவைகளை அறிந்ததால் உயிர் தன்னுடன் இருக்கும் பிற திரவியங்களைப் பற்றியும், நிமித்தங்களைப் பற்றியும், உயிரின் வெவ்வேறு பர்யாயங்களைப் பற்றியும் உள்ளது உள்ளபடி-யதார்த்த அறிவைப் பெறுகிறது. உயிரும் கர்மம் முதலான பிற திரவியங்களும் தனித்தனியான வெவ்வேறு பொருள்கள் என்று தெளிவாக நாம் அறிகிறோம். ஆனால் எந்த உயிர்கள் இவைகளை எடுத்துக்கூறும் சாஸ்திரங்களையே அபத்தம் என்று சொல்லி அவைகளை நம்பவில்லையோ, மேலும் தான் சுத்தன், புத்தன், ஞாதா, திருஷ்டா அதாவது பார்ப்பவன், அறிபவன் மட்டுமே என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய கருத்து, வேதாந்திகளுடைய கருத்து போன்று ஏகாந்த வாதமாகும். வேதாந்திகள்கூட ஆத்மா அனாதிஅனந்தம், அழிவில்லாதது, ஞாதா, திருஷ்டா, அகர்த்தா, அபோக்த்தா என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் ஆத்மா எப்போதும் அப்படியே இருப்பதாக நம்புகிறார்கள். ஆத்மா மட்டும் சத், உலகில் காணப்படும் மற்ற எல்லாப் பொருள்களும் அசத்-மாயை-பிரம்மை என்பதே அவர்களுடைய நம்பிக்கையாகவும், கருத்தாகவும் இருக்கிறது. அவர்கள் பர்யாயம் என்பதை நம்புவதேயில்லை. தர்மம் மற்றும் மோக்ஷம் இவைகளை வெளிப்படுத்தும் காரியம் பர்யாயத்தில்தான் நிகழ்கிறது. பர்யாயத்தையே நம்பவில்லை என்றால் பிறகு உபதேசம் கூறுவது எந்த வேலையை செய்வதற்கு? மோக்ஷ மார்கத்திற்கு வர தன் நிலைமையை அதாவது தன் நிகழ்கால அவஸ்தையை அறிந்து கொள்ளும் உயிரின் பர்யாயத்தையும் மற்றும் அதனுடன் இருப்பவைகள் பற்றியும் அறிவும் பெற வேண்டியது அவசியமாகும்.

உயிர் எது, பிற திரவியங்கள் எவை மற்றும் தன்னுடையது எது, பிற பொருள் சம்பந்தமானவைகள் எவை என்றே கொஞ்சம்கூடத் தெரியாத அஞ்ஞானி உயிருக்கு முதன்முதலில் உயிரைத் தெரிந்து கொள்ள பிற திரவியங்கள் நோக்கில் தெரியவைக்க வேண்டியிருக்கிறது. மனித உடலையுடைய உயிர், பஞ்சேந்திரிய உயிர், திரசகாய-விலங்கு உயிர் என்று சொல்வதின் மூலம் உயிர் எதனுடன் காணப்படுகிறதோ அவைகளைப் பற்றி எடுத்துச்சொல்லி உயிரின் இருப்பு மற்றும் இருக்குமிடம் உறுதி செய்யப்படுகிறது. உயிரின் உயிர்தன்மை-ஜீவத்துவம் எப்போதும் இருப்பதற்கு அதற்கு உடல், இந்திரியம், கர்மம் முதலிய எந்த பிற திரவியங்களின் அவசியம் கொஞ்சம்கூடத் தேவையில்லை. ஆனால் அதன் இருப்பைப் புரிந்து கொள்ள மற்றும் புரிய வைக்க தெரியக்கூடிய பொருள்களை அதாவது புத்கலங்களை, பிற திரவியங்களை, விருப்பு வெறுப்பு முதலானவைகளின் ஸ்வரூபங்களை எடுத்து சொல்கின்றனர், ஏனென்றால் அவைகளே நமக்கு தெரிந்தவைகள், பரிச்சயமானவைகளாகும், நம் அனுபவத்திற்கு வருபவைகளாகும். நமக்குத் தெரிந்தவைகளை வைத்து நாம் இதுவரை தெரிந்து கொள்ளாத உயிரை பற்றிய மதிப்பீடு, அனுமானம், யூகம் செய்ய நமக்கு இவ்வாறே கற்றுத்தர வேண்டியிருக்கிறது.

ஒரு அம்மா தன் மகளிடம், **போ மகளே, சமையலறையிலிருந்து உப்பு கொண்டு வா** என்று சொல்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். உப்பு எப்படி இருக்கும் என்பதும், அது எங்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதும் அந்த சிறிய பெண்ணுக்கு தெரியாது. அந்த சிறுமியிடம் உப்பு உப்பு மாதிரி இருக்கும், உப்பு உப்பில் இருக்கும் என்று சொன்னால் அவளுக்கு ஒன்றும் புரியாது அல்லவா! ஆகையால் அம்மா அவளிடம், **மகளே, சமையலறைக்கு போ, முன்னால் இருக்கும் அலமாரியை திற, அதில் கீழ் மட்டத்தில் வலது பக்கத்தில் கண்ணாடி ஜாடியில் உப்பு இருக்கிறது. அது வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆனால் கவனி, அதற்குப் பக்கத்தில் இருக்கும் ஜாடியில் உப்பு போலவே வெள்ளை நிறம் கொண்ட தூளான சர்க்கரையும் இருக்கிறது. உப்பின் சுவை கரிப்பாக இருக்கும், ஆனால் சர்க்கரையின் சுவை இனிப்பாக இருக்கும்** என்று சொல்கிறாள்.

முதலில் உப்பு எது என்று தெரியாமல் இருந்தாலும், தன் தாய் சொன்னதைக் கேட்ட மகள் சரியாக புரிந்து கொண்டு உப்பு ஜாடியை தேடிக் கண்டுபிடித்து விடுகிறாள். அதற்கு உப்பு கிடைத்ததும் உப்பு-உப்பேதான் என்று அதன் அடையாளங்களை வைத்து-லட்சணங்கள் மூலம் தெரிந்து கொள்கிறாள். அப்போது அவளுக்கு ஒன்று தெரிகிறது, உப்பு உப்பில்தான் இருக்கிறது, ஜாடி, கீழ்தட்டு, அலமாரி, சமையலறை எல்லாம் அந்தந்த இடத்தில் இருக்கின்றன ஆனால் உப்பு கிடைத்தவுடன் மற்ற அடையாளங்களால் எந்த பிரயோஜனமும் இல்லை. உப்பை தெரிந்து கொண்டு இதுதான் உப்பு என்று உறுதி செய்வதற்கு பிற தெரிந்த பொருள்களின் அடையாளங்களின் அவசியம் இருந்தது-உப்பை அடையாளம் காண அவைகள் பிரயோஜனமாக-உதவியாக இருந்தன; உப்பை கண்டு பிடித்த பிறகு அவைகளைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டிய அவசியமில்லை. பிரயோஜனம் உப்பை தெரிந்த கொள்வது தான். உப்பைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அந்த பெண்ணுக்கு பிற பொருள்களை தெரிந்து கொள்ளுதல் பிரயோஜனமாக இருந்தது. ஆனால் எல்லா பிற பொருள்களையும் தெரிந்து கொண்டு உப்பை தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் பிற பொருள்களைத் தெரிந்து கொண்டதால் எந்த பிரயோஜனமும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அதேபோல ஜினவாணி மாதா ஜினதர்மத்தை அறியாத உயிர்களுக்கு அவர்களின் சொந்த ஆத்மாவை அடையாளம் காட்டுவதற்கு முதன்முதலில் உயிரைத் தேடுவதற்காக 14 மார்க்கணைகள் மற்றும் 20 பிரரூபணைகள் பற்றி விரிவாக வர்ணனை செய்கிறாள்.

குணஸ்தானம், ஜீவசமாஜம், பர்யாப்தி, பிராணன், சஞ்ஜை, உபயோகம், மற்றும் 14 மார்க்கணைகள் முதலியன 20 பிரரூபணைகளாகும். இவைகளில் உயிரைப்பற்றி பிற திரவியங்களின் நோக்கில் சொல்லப்பட்டிருந்தாலும், உயிரின் அவஸ்தைகள்-நிலைகளைப் பற்றிய வர்ணனையும்கூட இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளின் மூலம் உயிரின் இருப்பை-சத்தாவை நிச்சயப்படுத்திக் கொண்ட பிறகு அதாவது அறிந்து உறுதி செய்த பிறகு லட்க்ஷணங்கள்-அடையாளங்கள் மூலம் சுத்த உயிரின் ஸ்வரூபத்தை-வடிவத்தை அதாவது நிஜ சுத்தாத்மாவை அறிந்து உறுதி செய்து அதை அனுபவம் செய்ய அதாவது அதிலேயே ஆழ்ந்திருக்க உபதேசம் செய்யப்படுகிறது.

உயிர் குணஸ்தானம், மார்க்கணாஸ்தானம் முதலியவைகளை அறிந்து கொண்ட பிறகு அவைகளை லட்சியம் செய்யாமல்-அவைகளைப் பற்றியே சிந்தனையில் ஆழாமல் தன்னைத்தான் அறிவதில் முனைந்தால்தான் மேலே கூறிவைகளை தெரிந்து கொண்டது பிரயோஜனமானதாகும்-அர்த்தமுள்ளதாக இருக்கும். “**இவைகளை (**குணஸ்தானம், ஜீவசமாஜம், பர்யாப்தி, பிராணன், சஞ்ஜை, உபயோகம், மற்றும் 14 மார்க்கணை முதலியவைகளை) **முதலில் தெரிந்து கொண்டு பிறகு அவைகளின்மேல் லட்சியம் கொள்ளாமல் விட்டுவிட வேண்டுமென்றால் முதலில் இவைகளைப் பற்றி ஏன் தெரிந்துகொள்ளச் சொல்கிறீர்கள்? முதலிலேயே நாம் இவைகளை தெரிந்து கொள்ளாமலேயே விட்டு விடலாமல்லவா!** என்று கேள்வி உங்கள் மனதில் எழலாம். யாருக்கு ஜின தர்மத்தின் கருத்துப்படி யதார்த்த உலகியல் அறிவு இல்லையோ அவர்களுக்கு நிச்சய உயிர் சம்பந்தமான யதார்த்த அறிவு-நிஜசுத்தாத்ம சம்பந்த யதார்த்த அறிவு உண்டாக கொஞ்சம்கூட வாய்ப்பில்லை-அதற்கு சாத்தியமில்லை. சம்யக்திருஷ்டி உயிர்களும் கரணானுயோகப் பயிற்சியால் இந்த விஷயங்கள் பற்றிய விரிவான அறிவு பெறுவதால் அவர்களுடைய சிரத்தை-நன்நம்பிக்கை மேலும் வலுவடைய உதவியாக இருக்கிறது.

பொது மக்களின் அறியாமையை சாதகமாக எடுத்துக்கொண்டு சமூகத்தில் அனேக விதமான மூடசெயல்களின் நிகழ்வுகள் நடப்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஒரு ஆடு சென்ற திசையில் செம்மறியாட்டுக் கூட்டமே செல்வதுபோல அறியாமையால் தத்துவ ஞானமில்லாத மக்களை தர்மம் என்று ஆசைகாட்டி உண்மையான தர்மமில்லாத விஷயங்களில் அவர்களை ஈர்த்து ஈடுபாடு கொள்ளும்படி ஊக்குவிக்கப் படுகின்றனர். இல்லற நிலையிலேயே வாழ்ந்து கொண்டு தங்களை ஆசாரியர் மற்றும் பகவான் (வணங்கத் தக்கவர்) என்று சொல்லிக் கொள்பவர்களையும் நம்மால் சமூகத்தில் காண முடிகிறது. குணஸ்தானம் முதலியவைகளைப் பற்றி ஸ்வாத்தியாயம் செய்வதால் மோக்ஷ மார்கத்தின் ஸ்வரூபம், பகவான், குரு ஆகியவர்களின் ஸ்வரூபம் எல்லாம் தெள்ளத் தெளிவாக நம் அறிவில் வருகிறது. நம்முடைய நிலைமை என்ன? அதாவது நாம் எந்த குணஸ்தானத்தில் இருக்கிறோம்? என்பதை நமக்கு நாமே உறுதி செய்து கொள்ளக்கூடிய அளவு நம் ஞானத்தில் தெளிவு பிறக்கிறது.

இவ்வளவு பெரிய அறிமுகவுரை எழுதுயிருக்கிறீர்களே, இதை விட அந்த விஷயங்களை ஆரம்பித்து எங்களுக்கு அறிவு புகட்டினால் சிறப்பாக இருக்குமே என்று உங்களுக்கு சொல்லத் தோன்றுகிதா? நீங்கள் சொல்ல நினைப்பதுகூடச் சரிதான். நாம் அடுத்த கடிதத்தில் குணஸ்தானம் சம்பந்தமான விஷயங்களை தெரிந்து கொள்ளலாம்.

- உங்கள் அம்மா.

குணஸ்தானம் - பொது விவாதம்
(சம்யக்த்துவம் அடைவதற்கான தகுதி, செயல்முறை மற்றும் வடிவம்)

கடிதம்-10 ஓம் நம: சித்தேப்ய: 31-08-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

குணஸ்தானம் பற்றி அறிவதில் உங்களுக்கு இருக்கும் ஆர்வத்தைப் பார்த்து என்னுடைய உற்சாகமும் இரட்டிப்பாகி விட்டது. திரு.அரவிந்பாய் கூட தினமும், **மாமி, எவ்வளவு எழுதியிருக்கிறீர்கள்? விரைவில் முழுவதையும் எழுதி முடியுங்கள். நாம் சீக்கிரமாக இந்த புத்தகத்தை அச்சிட்டு எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் வெளியிட வேண்டும்.** என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறார்.

முதன்முதலில் குணஸ்தானம் என்றால் என்னவென்று பார்க்கலாம். இராஜஸ்தான், ஹிந்துஸ்தான், பாகிஸ்தான் முதலிய சொற்கள் நமக்குத் தெரியும். குணஸ்தான் என்பது குணங்களின் சமூகத்தைத்தான் சொல்கிறார்களா? அல்லது குணங்களின் ஸ்தானம் அதாவது வேறுபாடுகளை குணஸ்தானம் என்று சொல்லப்படுகிறதா? இது போன்ற கேள்விகள் உங்கள் மனதில் எழலாம். குணஸ்தானம் என்பது என்ன?-**திரவியமா, குணமா, பர்யாயமா?**

அது திரவியமில்லை ஏனென்றால் ஆறு திரவியங்களில் இந்த பெயர் கொண்ட திரவியம் எதுவும் இல்லை. இது குணமுமில்லை ஏனென்றால் குணத்தின் வரையறை-**எது திரவியத்தின் முழு பாகத்திலும் மற்றும் அதன் எல்லா நிலைகளிலும் இருக்கிறதோ அதையே குணம்** என்று சொல்கின்றனர் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான். குணம் எப்போதும் இருக்கிறது ஆனால் குணஸ்தானம் என்னவோ மாறிக்கொண்டே இருக்கிறது. மேலும் குணஸ்தானமே இல்லாத சித்த நிலையும் காணப்படுகிறது ஆகையால் அது குணமாகவும் இருக்க முடியாது.

பெயர் குணஸ்தானம் என்று இருந்தாலும்கூட, இவை பர்யாயங்களின் ஸ்தானம் அல்லது வேறுபாடுகளாகும். உயிரின் பர்யாயங்கள் அசங்க்கியாத விதமாக-எண்ணிக்கையில் அடங்காதவைகளாக இருந்தாலும் அவைகளை எல்லாம் 14 விதத்தில் அடக்கி சொல்லப் படுகிறது. உயிரில் அனந்த குணங்கள் இருக்கின்றன மற்றும் ஒவ்வொரு குணத்திற்கும் பர்யாயங்கள் இருக்கின்றன. அவைகளில் ஸ்ரத்தை மற்றும் சாரித்திர குணத்தின் அவஸ்தைகளில்-பர்யாயங்களில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. மற்றும் யோகத்தின் நோக்கில் கூட இந்த 14 குணஸ்தானங்கள் பிரிக்கப் பட்டுள்ளது. சாஸ்திரத்தில் குணஸ்தானத்தின் பரிபாஷை-வரையறை இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது **மோஹம் மற்றும் யோகத்தின் நிமித்தத்தால் உயிரின் சிரத்தை-நம்பிக்கை மற்றும் சாரித்திர-ஒழுக்க குணத்தில் நிகழும் ஏற்றத்தாழ்வு நிலைகளை-தாரதம்மிய வடிவ அவஸ்தைகளை குணஸ்தானம்** என்று சொல்கின்றனர்.

இவை உயிரினுடைய பர்யாயங்களின் வேறுபாடுகளாகும்-விசேஷங்களாகும்-சிறப்புகளாகும். இவை வேறு எந்த திரவியத்தின் பர்யாயங்களைப் பற்றியதுமில்லை. உயிரில் இருக்கும் அனந்த குணங்களில்கூட நம்பிக்கை மற்றும் ஒழுக்க குணங்களின் பர்யாயங்களுக்கு உகந்தார்போல குணஸ்தானங்களில் வித்தியாசங்கள்-சிறப்புகள் காணப்படுகின்றன. முக்த உயிர்களான சித்த உயிர்கள் குணஸ்தானாதீத்-குணஸ்தானங்கள் அற்றவைகளாகும். ஆனால் எல்லா பிறவி உயிர்களும் ஏதாவது ஒரு குணஸ்தானத்தில் இருக்கின்றன. நாம் குணஸ்தானம் பற்றி தெரிந்து கொள்ளும் பயிற்சியில் தான் நுழைய வேண்டுமே ஒழிய குணஸ்தானத்தில் நுழைய வேண்டியதில்லை, ஏனென்றால் அதைப்பற்றி அறியும் முன்னரேயே நாம் ஏதாவது ஒரு குணஸ்தானத்தில் இருக்கவே செய்கிறோம்.

அனாதி காலமாக எல்லா உயிர்களும் முதன்முதலில் மித்யாத்துவ குணஸ்தானத்தில் தான் இருக்கின்றன. இது முதல் குணஸ்தானமாகும். இதற்கு முதலிடம் என்பதால் இது மிக உத்தமமானது என்று எண்ணிவிட வேண்டாம். இது ஒரு ராஜபதவி (royalty) குணஸ்தானமாகும். இங்கு மோஹ ராஜாவின் ஆணைப்படியே எல்லாம் நிகழ்கின்றன. இந்த குணஸ்தான உயிர்களுக்கு ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்ட பிரயோஜனமான தத்துவங்களில் விபரீதமான நம்பிக்கையே இருக்கிறது. இதை அதத்துவ சிரத்தானம் என்று சொல்கின்றனர். பிரயோஜனமான தத்துவ சம்பந்த விரிவான விளக்கத்தை நாம் முன்னரே **சமண தத்துவ அறிமுகம்** என்ற நூலில் உள்ள ஒன்பது கட்டுரைகள் மூலம் தெரிந்து கொண்டோம், அது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

மித்யாத்துவ குணஸ்தான உயிர் தனக்கு கிடைத்திருக்கும் உடலையே **இது தான் நான்** என்று நம்பிக் கொண்டிருக்கிறது. உண்மையான கடவுள், குரு, சாஸ்திரம் இவைகளின் ஸ்வரூபத்தை அது அறிந்திருக்கவில்லை. ஆனால் குலப் பரம்பரையின் வழியாக அந்த உயிர் இது நம் பகவான், இவர் நம் குரு, இது நம் சாஸ்திரம் என்று நம்புகிறது. அவைகளுக்கு பூஜை, பக்தி செய்கிறது. சுபராகத்தால் அதாவது புண்ணிய செயல் செய்வதால் மோக்ஷம் கிடைக்கும் என்று நம்புகிறது. சிலர் குதேவர், குகுரு, குசாஸ்திரம் இவைகளை நுகர்கின்றனர், அதாவது அவைகளுக்கு பக்தி, பூஜை, மறியாதை செய்கின்றனர். அவைகளின் உபதேசத்தை நம்புகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு கிரஹீத மித்யாத்துவம் இருக்கிறது.

சிலர் அரஹந்தர்களுக்கு பக்தி, பூஜை செய்கின்றனர் ஆனால் வெளிப்புறத் தோற்றத்தையும் மற்றும் கல்லால் அல்லது உலோகத்தால் வடித்த உருவத்தைப் பார்த்தே அவர்களுக்கு பூஜை செய்யும் உணர்வு வருகிறது. அரஹந்தரின் ஆத்ம குணங்களையும், அவருடைய வீதராகத் தன்மையையும் மற்றும் சர்வஞ்ஞத் தன்மையையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. அவர்கள் ஜினாலயங்களுக்கும், தீர்த்த ஷேத்திரங்களுக்கும் செல்கின்றனர்; ஆனால் அவர்களுடைய கவனம் பகவானுடைய சிற்பத்தின் அழகு, முகப்பொலிவு, சிலையின் மகத்துவம் மற்றும் வியக்கத்தக்க, அற்புதமான, அதிசயமான உருவ அமைப்பு முதலியவைகளின் மேல் தான் செல்கிறது, அவைகளிலேயே அவர்களுக்கு ருசியும், ஆர்வமும் இருக்கிறது.

சிலர் வெளியில் காணப்படும் திகம்பர முத்திரையே முனியின் ஸ்வரூபம் என்று நம்புகின்றனர். ஆனால் அவர்கள் முனியின் அந்தரங்க ஸ்வரூபத்தைப் பற்றி-முனிகளுக்கு இருக்க வேண்டிய அகஷாய உணர்வை பற்றி-வீதராகத்துவம் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆகமத்தில் கூறியபடி அல்லது முனி ஆசார சாஸ்திரங்களில் கூறியபடியான நடத்தை அதாவது 28 மூலகுணங்களை பின்பற்றுதல், மற்றும் மூன்று கஷாய நான்மைகள்(அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யான, பிரத்யாக்யான க்ரோத, மான, மாயா, லோபங்கள்) இல்லாத வீதராகத்துவம்-சமதா உணர்வு யாரிடம் இருக்கிறதோ அப்படிப்பட்ட உயிரே முனியாவார் என்பது பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. மேலே கூறியபடி யாருடைய ஸ்வரூபம் இல்லையோ அவரிடமிருந்து உண்மையான மோக்ஷ மார்க்கம் பற்றிய உபதேசம் கிடைப்பதற்கு சாத்தியமே இல்லை. அவர்களை நம்புவதால்-பூஜிப்பதால் மித்யாத்துவம் தான் புஷ்ட்டியாகிறது மற்றும் மித்யாத்துவத்திலிருந்து விடுபடும் வழியும் மூடப்பட்டு விடுகிறது.

மித்யாத்துவி உயிர்களுக்கு ஏழு தத்துவங்கள் சம்பந்தமான நம்பிக்கை உண்மைக்கு நேர்மாறாக, விபரீதமானதாக இருக்கும். அவர்களிடம் பிற திரவியங்களோடு ஏகத்துவ புத்தி-நானும் அதுவும் ஒன்றே என்ற எண்ணம், மமத்துவ புத்தி-அது என்னுடையதே என்ற எண்ணம், கர்த்ருத்வ புத்தி-நான்தான் அந்தப் பொருளின் செயலைச் செய்கிறேன் என்ற எண்ணம், மற்றும் போக்த்ருத்வ புத்தி-நான்தான் அந்த பொருள்களை அனுபவிக்கிறேன் என்ற எண்ணம் இருப்பது காணப்படுகிறது. நிமித்த-உபாதானம் சம்பந்தமான யதார்த்த அறிவு இல்லாத காரணத்தால் நிமித்தத்தால்தான் செயல்கள் நிகழ்கின்றன என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கிறது. உடல் சார்ந்த செயல்களும் மற்றும் விருப்பு,

வெறுப்பு உணர்வு கொள்வதும் தன்னுடைய காரியம் என்று நம்புவதோடல்லாமல் அதிலேயே ஒன்றிவிடுகிறது.

சிலர் சாஸ்திர ஸ்வாத்யாயம் செய்தாலும்கூட மித்யாத்துவம் அவர்களை விடுவதில்லை. சிலர் சுப காரியம் செய்வதில், தேவபூஜை செய்வதில், கருணை காட்டுவதில், தானம் செய்வதில், ஸ்வாத்தியாயம் செய்வதில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். ஆனால் அவர்கள் சுத்தாத்மாவை ஆர்வத்துடன் எதிர்நோக்கும் புருஷர்த்தத்தை செய்வதில்லை, ஏனென்றால் இப்போதுகூட அவர்களின் நம்பிக்கையில் ஏதோ தவறு நடக்கிறது. சிலர் சுத்தாத்மாவை விரும்புவதில் மட்டுமே திருப்தி அடைந்து அவர்களுடைய நிகழ்கால பர்யாயத்தையே (இராக உணர்வுடன் இருக்கும் நிகழ்கால பர்யாயத்தையே) சுத்தமானது என்று நம்புகின்றனர். இந்த இரண்டு விதமானவர்களும் தத்துவங்களில் மறைந்து கிடக்கும் மர்மங்களைப் புரிந்து கொள்ளவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நிச்சய மற்றும் வியவஹார நயங்களால் சொல்லப்படும் சமநிலையையும், மர்மத்தையும் தெரிந்து கொள்ளவில்லை.

அனாதி காலமாக ஒன்றுக்கு பிறகு மற்றொன்று என அனந்த பிறவிகள் எடுத்து விட்டோம். ஒவ்வொரு பிறவியிலும் கிடைத்த பர்யாயம் எதுவோ அவ்வளவே நான் என்று எண்ணிக் கொண்டோம். ஆகையால்தான் பிரவாஹ-ஓட்ட நோக்கில் மித்யாத்துவம் அனாதி காலமாக நம்மிடம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பண்டிட் தௌலத்ராம் சஹடாலாவில் இவ்வாறு கூறுகிறார் - **மோஹ மஹாமத பியோ அனாதி, பூல் ஆப்கோ பஃரமதவாதி** இதன் பொருள் **மோஹம் என்ற மஹா மதுவை அனாதி காலமாகக் குடித்து உன்னையே நீ மறந்துபோன மயக்கத்தில் இருக்கும் உயிரே** என்பதாகும்.

மித்தியாத்துவத்தின் வர்ணனையைக் கேட்டு பயப்பட எந்த காரணமுமில்லை. மித்யாத்துவத்தை இல்லாமல் செய்து சம்யகத்துவத்தை பெரும்வழி ஜினவாணி மூலம் நமக்கு கிடைக்கிறது. முதன்முதலில் சம்யக்த்துவம் அடையும் தகுதி எந்த உயிருக்கு இருக்கிறது என்று இப்போது பார்க்கலாம். நான்கு கதியிலும் உள்ள மனமுடைய ஐம்புல பவ்விய உயிர்கள் மித்யாத்துவத்தை இல்லாமல் செய்து சம்யக்த்துவத்தை அடைய முடியும். இதன் சாராம்சம் என்னவென்றால் ஏகேந்திரியம் முதல் மனமில்லாத ஐம்பொறி உயிர்கள்வரை உள்ள எல்லா உயிர்களும் விதிப்படி மித்யாத்துவ குணஸ்தானத்தில்தான் இருக்கின்றன. மற்றும் அவ்வுயிர்கள் சம்யக்த்துவம் அடையும் தகுதியும் இல்லாதவைகளாக இருக்கின்றன. மனமுடைய ஐம்பொறி-சஞ்சி பஞ்சேந்திரிய உயிர்களில் கூட பர்யாப்த்தி அடைந்திருத்தல் அதாவது முழு வளர்ச்சி அடைந்திருத்தல் அவசியமாகும். பர்யாப்த்தி என்றால் பூரண-முழு வளர்ச்சி என்று பொருள், அபர்யாப்த்தி என்றால் முழுவளர்ச்சி அடையாத நிலை (வளர்ச்சி துவங்கிவிட்டது ஆனால் இன்னும் அது முழுமை அடையவில்லை) என்று பொருள்.

பர்யாப்த்தி பற்றி பின்னர் விளக்குகிறேன், அப்போது உங்களுக்கு மேலும் அது பற்றி தெளிவு பிறக்கும். அபர்யாப்த்த உயிர்கள் ஒரு ஸ்வாசத்தின் 18-ல் ஒரு பாக நேரத்தில் மரணமடைகின்றன. அவை அவ்வளவு மிகச்சிறிய ஆயுளைக் கொண்டவைகளாக இருக்கின்றன. நோகர்ம வர்கணையைக் கிரஹித்தும்கூட அதிலிருந்து உடல் முதலியவைகளை செய்யும் காரியம் துவங்கி அது பூர்த்தியடையும் முன்னரே அதாவது முழுமையடையும் முன்னரே அவைகள் மரணத்தைத் தழுவுகின்றன.

மனமுடைய பர்யாப்த்த உயிர்களின் ஞானம்தான் தன் ஸ்வரூபம் பற்றிய உபதேசத்தை கிரஹித்துக் கொள்ளும் எவ்வளவுக்குத் திறந்த நிலையில் இருக்கிறது. மனதின் மூலம்

அந்த உபதேசம் பற்றி சிந்திக்கிறது, தத்துவச் சம்பந்தமாக தெளிவுடன் ஒரு முடிவுக்கு வருகிறது அதாவது தத்ததுவ நிர்ணயம் செய்கிறது. தேவ, குரு, சாஸ்திரம், மோக்ஷ மார்க்கம் பற்றிய விஷயத்தில் பரிக்ஷா பிரதானியாகி அதாவது ஆராய்ச்சி செய்து சரியான முடிவுக்கு வருகிறது. சாஸ்திரங்களில் சம்யக்த்துவம் அடையக் காரணங்கள் மற்றும் அதற்கான செயல் முறைகளில் ஐந்து லப்திகளின் ஸ்வரூபம் பற்றி வர்ணனை செய்யப்பட்டிருக்கிறது. அவைகளாவன: **1.ஷயோபசம லப்தி, 2.விசுத்தி லப்தி, 3.தேசனா லப்தி, 4.ப்ராயோக்யதா லப்தி, 5. கரண லப்தி.**

அறிவு மட்டும் திறந்திருப்பதை அதாவது வேறு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால் கூர்மையான அறிவு இருப்பதை மட்டுமே ஷயோபசம லப்தி என்று சொல்லப்படுவதில்லை அது ஞானத்தின் ஷயோபசம மாகும். ஆனால் திறந்திருக்கும் அறிவு தத்துவ ஞானம் பெறுவதில் அதாவது தத்துவங்களை ஆய்வு செய்வதில் அறிவின் உபயோகம் செல்லுமானால் அதையே **ஷயோபசம லப்தி** என்று ஆகமங்கள் கூறுகின்றன.

சம்யக்த்துவம் பெற இரண்டாவது அவசிய காரணம் கஷாயங்கள் மந்தமடைந்து இருத்தல் ஆகும். எட்டு மூல குணங்களை ஏற்றல், அநியாயம், அநீதி, சாப்பிடக்கூடாதவைகளைச் சாப்பிடுதல் முதலியவைகளைத் தியாகம் செய்தல், நல்லொழுக்கத்துடன் கூடிய வாழ்க்கையை நடத்துதல் முதலியன முக்கியமாக வெளியில் தெரியக்கூடிய தகுதிகளாகும். கஷாயங்களின் தீவிரம் இருக்குமானால் உயிர்களுக்கு ஜினவாணியின் உபதேசத்தைக் கேட்கும் ஆர்வம் கொஞ்சம்கூட இருப்பதில்லை, தப்பித்தவறி அது காதில் விழுந்தாலும் அது ஜீரணிக்கப் படுவதில்லை அதாவது அதன்படி நடக்க வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை. உண்மையான தர்மத்தைப் பற்றி தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொள்வதில்லை, உண்மையில் அந்த உயிர் அப்படிப்பட்ட உபதேசத்தின் பக்கம் திரும்பக்கூட விரும்புவதில்லை, அதாவது தர்மோபதேசம் என்று சொன்னதும் அந்த இடத்திலுருந்து எழுந்து தூரமாக ஒடிவிடவே ஆர்வம் கொள்கிறது, தொலைவிலிருந்து கொண்டு தர்மோபதேசங்களை கேட்பதிலிருந்து தவிர்க்கவே முனைப்பு காட்டுகிறது. கிரஹீத மித்யாத்துவம் அதாவது குதேவ, குகுரு, குசாஸ்திரங்களின் தியாகம் கூட உயிர்களிடம் இருப்பது லப்தி பெற அவசியமான தகுதியாகும்.

அப்படிப்பட்ட தகுதியுடைய உயிருக்கு ஞானியின் உபதேசம் சுலபமாகவே கிடைக்கிறது, இதையே **தேசனா லப்தி** என்று சொல்கின்றனர். உபதேசத்தை வெறுமனே கேட்பது மட்டும் தேசனா லப்தியாகாது. ஆத்மாவின் ஸ்வரூபம் பற்றிச் சொல்வதை ஆர்வத்துடன்-ருசியுடன் கேட்டு அதற்கு அனுசரணையாக ஆகமத்தில் சொல்லப்பட்ட உபயோகமான ஏழு தத்துவங்கள் பற்றிய அறிவு பெற்று, அதில் சிந்தனையைச் செலுத்தி தத்துவத்தை உறுதி செய்தால்தான் அவர் உபதேசத்தை கிரஹித்தார் என்று பொருள். உதாரணமாக, நீ உன் மகன் ரோஹனிடம் **ரோஹன், ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வா** என்று சொல்கிறாய் என்று வைத்துக் கொள்வோம். அவன் அதை காதில் கேட்டு அதன்படி அவன் தண்ணீர் கொண்டுவரவில்லை என்றால் உலக வழக்கில்கூட நீ சொன்னதை ரோஹன் கேட்டான் என்று சொல்வதில்லை. நீ சொன்னதைக் கேட்டு அதன்படி அவன் செய்தால்தான் நீ சொன்னதை அவன் கேட்டான் என்று அர்த்தமல்லவா!

தேசனா லப்திக்குப் பிறகு ப்ராயோக்யதா லப்தி அடையப்படுகிறது. உயிர் ஸ்வாத்யாயத்தின் மூலம் பெற்ற தத்துவ அறிவை நடைமுறைப் பயிற்சி-அப்யாசம் மூலம் அதாவது தன் அறிவில் சிந்திப்பதின் மூலம் தத்துவங்களை உறுதி செய்கிறது.

ஆகமங்களில் ஆத்மாவின் ஸ்வரூபம் எப்படி சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே தன் அறிவில் நிச்சயம் செய்கிறது-உறுதி செய்கிறது. இவ்வாறு மீண்டும் மீண்டும் ஆத்மாவை பற்றிய எண்ணங்களையே அறிவில் கொண்டு வந்து சிந்தனை மற்றும் ஆலோசனை செய்வதையே **ப்ரயோக்யதா லப்தி** என்று சொல்கின்றனர்.

முதல் நான்கு லப்திகளை அடையும் எல்லா உயிர்களும் சம்யக்துவத்தை அடைந்து விடுவார்கள் என்று சொல்ல முடியாது. பவ்வியர், அபவ்வியர் என்ற இரண்டு வகை உயிர்களும் இந்த நான்கு லப்திகளையும் அடைய முடியும். ஆனால் யார் சம்யக்த்துவத்தை பெறுகிறார்களோ அவர்களுக்கு நான்கு லப்திகளையும் அடைந்த பிறகு கரண லப்தி பெறத் தேவையான பரிணாமம்-உணர்வு உண்டாகிறது. இதன் பொருள் கரண லப்தி மூலம் சம்யக்துவம் அடையப் படுகிறது. கர்மத்தின் உபசம அவஸ்தை பற்றித் தெரிந்து கொண்டபோது நாம் அதைப்பற்றி சர்ச்சை செய்தோம். கரண லப்தியின்போது உயிர் கர்மத்தில் கொஞ்சம்கூட எதுவும் செய்ய வேண்டியதில்லை. முன்னர் தத்துவ நிர்ணயம் செய்தவர் எப்போது தன் சுத்தாத்மாவின் மேல் தீவிர ருசியுடன்-மிகுந்த ஆர்வத்துடன் விழிப்புணர்வு கொள்கிறாரோ, அப்போது அவர் தன் ஆத்மாவின் மகிமையே எல்லாவற்றையும்விடச் சிறந்தது என உணர்கிறார். முழு உலகத்திலும் தன் நிஜ சுத்தாத்மாவே எல்லாவற்றைக் காட்டிலும் மிகச்சிறந்ததாக இருக்கிறது என்று எப்போது தோன்றுகிறதோ அப்போது அவருடைய உபயோகம் ஸ்வசன்முக் அடைகிறது, அவர் தன்னையே உள்நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார், இதுவே **கரண லப்தி** யாகும். இதற்கும் கூடுதலாக அவர் தன்னை அறிபவன் வடிவில் தெரிந்து கொள்ளவும் தொடங்கி விடுகிறார், அவருக்கு அதீந்திரிய-புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆனந்த அனுபவம் உண்டாகிறது.

இந்த காரியம் விழிப்புணர்வு நிலையில் ஞானோபயோகத்தின் மூலம் நிகழ்கிறது. தூக்கத்திலோ, பேசிக்கொண்டிருக்கும்போதோ அல்லது அறிவின் உபயோகம் பிறவற்றின்மீது இருக்கும்போதோ ஆத்மாவின் அனுபவம் அதாவது சம்யக்தரிசனம் அடையப் படுவதில்லை. **நாங்கள் சம்யக்த்துவம் பெற வேண்டுமென்றால் இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று சொல்லுங்கள்** என்று நீங்கள் கேட்கலாம்.

பாருங்கள், சஞ்சி பஞ்சேந்திரிய-மனமுடைய ஐம்புல பர்யாப்த்த மனித பர்யாயத்தில் நீங்கள் ஏற்கனவே இருக்கிறீர்கள். சுத்தாத்மாவின் மேல் ருசிகூட உங்களுக்கு இருக்கிறது, ஆகையால் நீங்கள் பவ்வியர் என்பது இதனால் தெரிகிறது. பத்மநந்தி ஆசார்யர் அவருடைய பத்மநந்தி பஞ்சவிம்சதி என்ற நூலில் **எந்த உயிர் சுத்தாத்மா பற்றிய விவாதம் மற்றும் கலந்துரையாடல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற உறுதியுடன் மிகுந்த ஆர்வத்துடன் கேட்கிறதோ அது, நிச்சயமாக பவ்விய உயிராகும் மற்றும் எதிர்காலத்தில் நிர்வாணத்தை-முக்தியை அடையும் பாத்திரத் தகுதி உடையதாகும்** என்று கூறியிருக்கிறார். உங்களுக்கு இருக்கும் இந்த ஆர்வம் உங்களுடைய மந்த கஷாய நிலையைக் காட்டுகிறது. ஜினேந்திரனால் சொல்லப்பட்ட உபதேசம்கூட உங்களுக்கு கிடைத்திருக்கிறது மற்றும் இப்போதும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

மிக முக்கியமாக நீங்கள் செய்ய வேண்டிய வேலை இதுதான்:- உன்மையான தேவ, குரு, சாஸ்திரத்தை யதார்த்த நிர்ணயம் செய்தல்; குதேவ, ககுரு, குசாஸ்ரங்களை அதாவது கிரஹீத மித்யாத்துவத்தை முற்றிலும் தியாகம் செய்தல்; கள், மாமிசம், தேன் மற்றும் ஐந்து உதும்பரப் பழங்கள் ஆகியவைகளின் தியாகம் அதாவது அவைகளை உண்ண வேண்டும் என்ற விருப்பம் கொள்ளாமை (இதையே எட்டு மூல குணங்களைக் கடைபிடித்தல் என்று

சொல்கின்றனர்); நல்லொழுக்க வாழ்க்கை வாழுதல்; அத்யாத்ம சாஸ்திரங்களை-ஆத்மா பற்றி சிறப்பாக எடுத்துக்கூறும் ஆகமங்களை ஆய்வு செய்து ஆத்மாவின் ஸ்வபாவத்தை உறுதி செய்தல்; பகலில் கொஞ்ச நேரம் தனிமையில் அமர்ந்து ஆன்ம சிந்தனை மற்றும் ஆலோசனை செய்தல்; சாஸ்த்திர ஸ்வாத்யாயம் அல்லது சிந்தனை மூலம் சுத்தாத்மாவின் மகிமையை அறிவில் கொண்டு வந்து அறிவின் உபயோகத்தை ஸ்வ ஆத்மாவின் பக்கம் திருப்பி தன்னையே எதிர்கொள்ளச் செய்தல். **உண்மையை சொல்ல வேண்டுமென்றால் உபதேசத்தின் மொழியில் அதைச் செய்யுங்கள் அல்லது இதைச் செய்யுங்கள் என்று சொல்லப்படும், ஆனால் யாருக்கு ஆத்மாவில் ருசி மற்றும் அதில் ஆழ்தல் தொடங்கியுள்ளதோ அவருக்கு வெவ்வேறு சிந்தனைகள் வருவது கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல்போய், நிர்வாண நிலை அதாவது இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடான நிலை விடுபட்டு எதையும் செய்ய வேண்டியதில்லை என்ற கட்டுப்பாடற்ற நிலை இயல்பாகவே பெறப்படுகிறது, அவர் எதுவும் செய்ய வேண்டியதாக இல்லை.** நான் ஏதாவது செய்ய வேண்டும், குறிப்பிட்ட சுப உணர்வு கொள்ள வேண்டும், சிலவற்றை தேர்வு செய்து அவைகளைக் கைக்கொள்ள வேண்டும், சிலவற்றைத் தேர்வு செய்து நம்மிடமிருந்து அவைகளை விலக்க வேண்டும் என்பனவற்றை **செய்ய வேண்டும்** என்ற நோக்கம் தவறாகும். **நான் யார்?** எனபது பற்றி உண்மையான உறுதி வந்த பிறகு **இதைச் செய்யனும்- அதைச் செய்யனும்** என்ற உணர்வு அழிந்து விடுகிறது.

உயிருக்கு எப்போது முதன்முதலில் சம்யக்த்துவம் கிடைக்கிறதோ அப்போது ஔபசமிக சம்யக்த்துவம் தான் கிடைக்கிறது. இந்த உயிர் முதல் மித்தியாத்துவ குணஸ்தானத்திலிருந்து நான்காவது **அவிரத சம்யக்த்துவம்** என்ற குணஸ்தானத்திற்கு வருகிறது. அதனுடைய சிரத்தை-நம்பிக்கை குணத்தின் மூடநம்பிக்கை(மித்யாத்துவ) நிலை மாற்றமடைந்து நன்நம்பிக்கை(சம்யக்த்துவ) நிலை கிடைக்கப் பெருகிறது.

நான்காம் குணஸ்தானத்தின் பெயர் **அவிரதி** அதாவது **அவிரத சம்யக்த்துவம்** ஆகும். இந்த குணஸ்தான உயிர்களுக்கு நன்நம்பிக்கை-சம்யக்த்துவம் என்னவோ இருக்கிறது ஆனால் எந்த விரதமும் அதாவது எந்த காரியத்தையும் செய்வதிலிருந்து ஓய்வு பெறவில்லை, எந்த செயலையும் செய்வதை நிறுத்தவில்லை. ஐந்து புலன்கள் மற்றும் மனம் இவைகளின் செயல்களில் இந்த உயிர் எந்தத் தடையையும் செய்யவில்லை-பின்வாங்கவில்லை. அதுபோல ஷட்காயிக்-ஆறுவகை உடலுடைய உயிர்களை வதைப்பதிலிருந்துகூட இது பின்வாங்கவில்லை-வதை செய்யமாட்டேன் என்ற உறுதி-விரதம் எடுக்கவில்லை. சாஸ்திர மொழியில் சொல்ல வேண்டுமென்றால் இதற்கு ஆறு விதமான **இந்திரிய சய்யமம்** மற்றும் ஆறு விதமான **பிராணி சய்யமம்** இல்லை. உயிர் இவைகளிலிருந்து ஓய்வு பெறவில்லை என்றாலும் அவர் இவைகளைப் பிடிவாதத்துடன் அமலாகுவதுமில்லை, அதாவது அந்த ஹிம்சைகளை வேண்டுமென்றே செய்வதுமில்லை.

இங்கு ஒழுக்க குணத்தின் பர்யாயத்தில் அனந்தானுபந்தி கஷாயம் இருப்தில்லை ஆனால் தற்சமயம் அப்பித்யாக்யான, பிரத்யாக்யான மற்றும் சஞ்சுவலன கஷாயம் இருக்கிறது. இந்த உயிர்களுக்கு சில நேரங்களில் சுத்தோபயோகம் நிகழுகிறது, இவர்களுக்கு உண்மையான தேவன், குரு மற்றும் சாஸ்திரங்களின் மேல் பக்தி உணர்வு வருகிறது, ஜினேந்திரனால் சொல்லப்பட்ட பிரயோஞனமான தத்துவங்களை இவர்கள் உறுதி செய்கிறார்கள், தான் மற்றும் பிறவற்றை பிரித்தறிந்து தன் ஆத்மாவை உறுதி செய்வதில் வெற்றி பெறுகிறார்கள்.

இவர்களின் வெளிப்புற நடத்தையில் எத்த மாற்றமும் காணப்படுவதில்லை ஆனால் இவர்களுடைய உற்புறத்தில்-அந்தரங்கத்தில் பூமிக்கும் ஆகாயத்திற்கும் உள்ள ஒரு வித்தியாசத்தை இது ஏற்படுத்துகிறது. இவர்களிடமிருந்த விபரீத நம்பிக்கைகள் அழிக்கப் படுகின்றன, இவர்களுக்கு ஆத்ம அனுபவம் கிடைத்து விடுகிறது. இவர்களிடம் தொடர்ந்து பிரித்தறிதல் நிகழ்கிறது, இவர் தன்னையே-ஸ்வயம் ஆத்மாவையே தன் வடிவமாக ஏற்றுக் கொள்வதோடு அல்லாமல் பிறவற்றை [உடல், செல்வம் முதலான பிற பொருள்கள் மற்றும் கஷாய உணர்வுகள் முதலியவைகளை] தன்னிலிருந்தும் வேறானதாக அறிகிறார், இவர்களிடம் ஆசை முதலான அதாவது கஷாய-துவர்ப்பு உணர்வுகள் ஏற்பட்டாலும் அவைகளை அறிபவர்களாக இருக்கிறார்கள், அவைகளை செய்பவர்களாக இருப்பதில்லை அதாவது துவர்ப்பு உணர்வு கொள்வதில் இவர்களுக்கு விருப்பம் இருப்பதில்லை.

இந்த உயிர்கள் உண்மையான தேவ, குரு, சாஸ்திரங்களின்மேல் பக்தி செய்வதில் ஈடுபட்டாலும் அந்தச் சமயத்தில்கூட தன்னில் ஆழ்தலை செய்ய வேண்டியதே முக்கியம் என்ற எண்ணமும் அதை மேற்கொள்ளும் சக்தியும் அவர்களிடம் திடப்படுகிறது. பக்தி, ஸ்வாத்யாயம், ஆய்வு, போதனை முதலியவைகளின் மூலம்கூட ஆத்ம ஸ்வபாவ சக்தியின் சுவையை உறிஞ்சும் ஆர்வத்தை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள். அதாவது அந்தச் செயல்களை எல்லாம் விட்டுவிட்டு தன்னியல்பின்மேல் அதாவது தன்னில் தோயும் ஆர்வமே இவர்களிடம் முக்கியமானதாக இருக்கிறது.

நான்கு கதி உயிர்களும் சம்யக்துவத்தை அடைய முடியும் என்று நாம் பார்த்தோம். மனமுடைய ஐம்புல பர்யாப்த்தி விலங்குகள், மனிதர்கள், தேவர்கள் அல்லது நரகர்கள் முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காம் குணஸ்தானத்திற்குப் போகமுடியும். மரணத்திற்குப் பிறகு வேறு பிறவியில் கூட நான்காம் குணஸ்தானம் எப்போதும் இருக்கிறது அதாவது சம்யத்துவம் எப்போதும் இருக்கிறது.

சம்யக்திருஷ்டி உயிர் தொடர்ந்து பிரித்தறிதலை பயிற்சி செய்து கொண்டிருக்கிறது. அது உலகியல் காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும்கூட அதற்கு தான் யார் என்பதின் உணர்வு எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. **சுத்தோபயோக காலம் என்னவோ மிகச்சிறியது. அதற்குப்பிறகு உயிர் சுபோபயோகத்திற்கோ, அசுபோபயோகத்திற்கோ போகவே செய்யும். அப்போது அதற்கு சம்யக்த்துவம் எப்படி அழிந்து போகாமல் நீடித்து இருக்கும்?** என்ற சந்தேகம் உங்களுக்கு எழலாம்.

இங்கே பாருங்கள், உயிர் முதன்முதலில் சம்யக்த்துவம் எப்போது பெறுகிறதோ அப்போது அது விதிப்படி சுத்தோபயோக அவஸ்தையில்-நிலையில் தான் பெறப்படுகிறது. ஆனால் சுத்தோபயோகத்திற்கு பிறகு அதன் சம்யக்த்துவம் அழிந்து விடுவதில்லை. தன்னைத் தனியாக அனுபவப்பூர்வமாக உணர்ந்த பிறகு, தன்னை அடையாளம் கண்டு கொண்ட பிறகு, அந்த உயிர் தான் ஒரு தனிப் பொருள் என்பதை மறப்பதில்லை, அந்த எண்ணம் தொடர்த்து அதனிடம் இருக்கிறது. பிறகு அது சுப உணர்வோ அல்லது அசுப உணர்வோ அடைந்து கொண்டிருந்தாலும் அதன் தனித்தன்மையின் உறுதிப்பாடு அழிவதில்லை. இது எப்படி நிகழமுடியும்? என்பதை ஒரு உதாரணம் மூலம் புரிந்து கொள்ளலாம்.

எப்படி ஒரு நடிகர் படப்பிடிப்பின் போது பிச்சைக்காரன் போல நடிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த சமயத்தில் அவர் உண்மையான பிச்சைக்காரன் போலவே காணப்படுகிறார். ஆனாலும் அவர் அவருடைய உண்மையான பெயர், வடிவம், மற்றும்

அவருடைய தனித்தன்மையை அவர் மறந்து விடுவதில்லை. அவர் தன்னையே மறந்து விடுவாரானால் படப்பிடிப்புக்கு பிறகும்கூட அவர் பிச்சைக்காரன்போல அலைந்து திரிந்தக் கொண்டிருப்பார், பசியில் வாடுவார், பிச்சைகாரனாகவே மாறிவிட்டிருப்பார், ஆனால் அப்படி எதுவும் நடப்பதில்லை. அவர் பிச்சைக்காரனாக நடிப்பதற்கு கோடிக் கணக்கில் பணம் பெருகிறார். பிச்சைகாரன் வேஷத்தில் அவர் பிச்சை எடுப்பதுபோல காணப்பட்டாலும் அந்த நேரத்தில்கூட அவருடைய உள்ளுணர்வில் தான் ஒரு பிரபு என்ற உணர்வு அவரிடத்தில் இல்லாமல் போவதில்லை. அதற்காக அவர் தன் பெயரை மனதில் சொல்லிக்கொண்டே இருப்பதில்லை. அவர் திரும்பத்திரும்ப தன்னைப்பற்றி தான் ஒரு நடிகர் என்று எண்ணிக் கொண்டும் இருப்பதில்லை. நடிகர் வீட்டில் இருந்தாலும் அல்லது நடித்துக்கொண்டு இருந்தாலும் தன் சுய வடிவத்தை, தான் யார் என்பதை அவர் மறந்து போவதில்லை.

அதுபோல யார் ஆத்ம அனுபவத்தை பெற்றாரோ அவர் தன் ஸ்வரூபத்தை, தான் அறிபவன் என்ற உணர்வை எப்போதும் மறப்பதில்லை. அவர் தன்னை நோக்கினாலும் சரி அல்லது பிறரை நோக்கினாலும் சரி அதாவது அவர் சுத்தோபயோகத்தில் இருந்தாலும், சுபோபயோகத்தில் இருந்தாலும் அல்லது அசுபோபயோகத்தில் இருந்தாலும் அவர் தான் யார் எனபது பற்றி-தன் ஸ்வரூபம் பற்றி எப்போதும் மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. எப்போதும் **நான் ஞாயக்-அறிபவன், நான் சுத்தமானவன்** முதலான வெவ்வேறு சிந்தனைகளைச் செய்துகொண்டே இருக்க வேண்டியதில்லை. எளிமையாகவே அதாவது எதையும் செய்யாமலேயே தான் தானாகவே இருப்பது எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

சம்யக்திருஷ்டி உயிருக்கு விருப்பு வெறுப்புகள் இருந்தாலும்கூட அந்த உணர்வுகளை அவர் செய்வதாக எண்ணுவதில்லை. கஷாய உணர்வுகளின்பால் அவர் விருப்பு வெறுப்பு கொள்வதுமில்லை, அதன்மேல் அவருக்கு மகிமையும் வருவதில்லை. முன்னர் இருந்ததைவிட அதிக நல்ல வகை சுபஉணர்வுகள் அவருக்கு தானாகவே வருகிறது, இருந்தாலும்கூட இப்போது அவர் அந்த சுபஉணர்வுகளையும்கூட துக்க வடிவமாகவே அனுபவம் செய்கிறார். ஆம், மித்யாத்துவ அவஸ்த்தையை ஒப்பிடும் போது இத்தகைய உணர்வு காலத்தில் அவருக்கு கொஞ்சம் துன்பம் இல்லாதநிலை-நிராகுலத்தன்மை கூட எப்போதும் இருக்கிறது என்பது மட்டும் உண்மைதான். [அதாவது அனந்தானுபந்தி கஷாயம் இல்லாத அளவுக்கு சுகமும் மற்ற மூன்று அப்ரத்யாக்யான, பிரத்யாக்யான மற்றும் சஞ்சுவலன கஷாய உதய அளவுக்கு துக்கமும் கலந்த உணர்வுநிலை-அவஸ்தை அவரிடம் காணப்படுகிறது.]

இந்த உயிருக்கு ஸ்வயம் தன் ஸ்வபாவத்தின் மேல் கவனம் செலுத்தி அதிகமாக ஆத்மாவில் ஆழ்தலை அடைய வேண்டும், ஆத்மாவிலேயே மூழ்கிவிட வேண்டும் என்ற உணர்வு எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது. யாருக்கு ஆத்மானுபவம் வந்துவிட்டதோ அப்படிப்பட்ட உயிருக்கு சுத்தோபயோகத்தில் இருக்கவே தீவிர இச்சை இருக்கிறது. தன் ஸ்வரூபத்தில் ஆழாமல் இருக்கும்போது அவருக்கு சுத்தோபயோக சம்பந்த, ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், குணஸ்தானம், மூவுலக அமைப்பு முதலிய ஜினதர்ம சம்பந்தமான சிந்தனை, ஆலோசனை, ஆய்வு மற்றும் கற்பித்தல் முதலிய செயல்களில் சகஜமாகவே ஈடுபாடு கொண்டிருக்கிறது. தினந்தோரும் அவருக்கு லௌகீக காரியங்களில் அக்கறையின்மை அதிகமாகிக் கொண்டே போகிறது. அதே சமயம் அவருக்கு சத்சமாகமத்தின்மேல்-சத்துடன் ஒன்றியிருப்பதில்-தன் ஆத்மாவில் மூழ்கியிருப்தில்தான் ஆர்வமும் முனைப்பும் அதிகமாகிக்கொண்டே போகிறது. ஜின

தர்மத்தை படித்தல் மற்றும் படிப்பித்தல் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. தேவன், குரு, சாஸ்திரங்களின் மேல் அவருக்கு மிகுந்த மதிப்பும், பக்தியும் உண்டாகிறது.

சம்யக்தர்சனம் அடையும்போது உயிர் முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காம் குணஸ்தானத்திற்குத்தான் செல்கிறது என்று நாம் பார்த்தோம். சில உயிர்கள் மித்யாத்துவ குணஸ்தானத்திலிருந்து வேறு ஸ்தானங்களுக்குக்கூடச் செல்கின்றன-எப்படி என்றால் சில உயிர்கள் முதல் குணஸ்தானத்திலிருந்து ஐந்தாம் குணஸ்தானத்திற்கும், சில உயிர்கள் ஏழாம் குணஸ்தானத்திற்கும் செல்ல முடியும். ஐந்தாம் குணஸ்தானத்திற்கு செல்லும் உயிர்களுக்கு புத்தி பூர்வமாக அணுவிரதத்தை ஏற்றிருக்கும் தகுதி இருப்பது அவசியமாகும். அத்துடன் சம்யக்துவத்தை அடைய முன்னர் கூறிய பஞ்ச லப்தி சம்பந்தமான மற்ற தகுதிகளும் இருப்பது அவசியமாகும். முதல் குணஸ்தானத்திலிருந்து ஏழாம் குணஸ்தானத்திற்கு செல்லும் உயிர்களுக்கு மேலே கூறிய எல்லா தகுதிகளுடன் திகம்பர ஜினதீட்ஷை ஏற்றிருக்கும் தகுதியும் அதாவது ஆகமத்தில் கூறியுள்ள முனியிடம் காணப்படும் உடல் சம்பந்தமான புறச்செயல்களான 28 மூல குணங்களையும் எந்தக்குறையும் இல்லாமல் கடைபிடித்தல் மிக அவசியமானதாகும். இப்படிப் பட்டவரைத்தான் சாஸ்திரங்களில் திரவ்யலிங்கி முனி என்று சொல்கின்றனர். திரவ்யலிங்கி முனியாக ஆகாமல் பாவலிங்கி முனியான ஏழாம் குணஸ்தான நிலைக்கான வீதராகத் தன்மையை அதாவது அந்தரங்கத்தில் ஆழும் முனித்தன்மையை பெறமுடியாது என்பது ஆகம விதியாகும்.

நான்காம் குணஸ்தானத்திலிருந்து உயிர் மேல் குணஸ்தானங்களுக்கு எப்படி செல்கிறது என்பது பற்றிய சர்ச்சையை நாம் அடுத்த கடிதத்தில் செய்யலாம். முதல் குணஸ்தானத்திலிருந்து நாம் 4, 5, 7-ஆவது குணஸ்தானங்களுக்கு செல்லவது பற்றிய சர்ச்சை தொடங்கப்போகும் இந்த வேளையில் இடையில் உள்ள 2, 3, 6-ஆவது குணஸ்தானங்களை ஏன் விட்டுவிட்டீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம். கேளுங்கள், ஔபசமிக சம்யக்துவ காலத்தில் அனந்தானுபந்தி கஷாயம் உதயமாகுமானால் உயிர் சம்யக்துவத்திலிருந்து தாழ்ந்து விடுகிறது அப்போது **சாசாதன சம்யக்துவம்** என்ற 2-ஆவது குணஸ்தானத்தை அடைகிறது. அந்த குணஸ்தானத்தில் குறைந்தது ஒரு சமயம் முதல் அதிக பட்சம் ஏழு ஆவளி (1-ஆவளி=அசங்யாத சமயங்கள்) காலம் வரை இருந்து அந்த உயிர் கரணானுயோக விதிப்படி முதல் மித்யாத்துவ குணஸ்தானத்தை அடைகிறது.

சம்யத்துவம் அடைந்த பிறகு பல உயிரினங்களின் நன்நம்பிக்கை தடுமாற்றமடைகிறது, மித்யாத்வத்துடன் கலந்த இடைப்பட்ட கலப்பு உணர்வுகள் அவைகளுக்கு உண்டாகின்றன. அந்த சமயத்தில் சம்யக்மித்யாத்துவம் என்ற பெயர் கொண்ட தர்சன மோஹனீய கர்ம பிரக்ருதிகளின் உதயம் அவைகளிடம் காணப்படுகின்றன. அப்படிப்பட்ட உயிர்கள் மூன்றாவதான **மிஸ்ர** குணஸ்தானத்தை அதாவது **சம்யக்மித்யாத்துவ** குணஸ்தானத்தை அடைகின்றன. இந்த குணஸ்தானத்தின் காலம்கூட அல்ப மானதாகும் அதாவது அந்தர்முகூர்த்த காலமேயாகும். அதற்குப்பிறகு உயிர் அதன் உணர்வுக்கு ஏற்ப முதல் அல்லது நான்காம் குணஸ்தானத்திறகுச் செல்கிறது. ஆறாம் குணஸ்தான திகம்பர முனிக்கு சுபோபயோக குணஸ்தானமும், ஏழாம் குணஸ்தான திகம்பர முனிக்கு சுத்தோபயோக குணஸ்தானமுமாகும். திகம்பர முனிவர் தொடர்ச்சியாக ஆறாவது-ஏழாவது குணஸ்தானங்களில் ஊஞ்சலாடுகிறார். முதலில் ஏழாம் குணஸ்தானத்திலிருந்தே ஆறாவது குணஸ்தானத்திற்கு வருகின்றனர். அவைகளைப்பற்றி எல்லாம் பின்னர் சர்ச்சை செய்யவிருக்கிறோம். இன்று இத்துடன் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்.

- உங்கள் அம்மா.

குணஸ்தானத்தில் ஏறும் வழி - தேசவிரத குணஸ்தானம்

கடிதம்-11 ஓம் நம: சித்தேப்ய 2-9-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீரவாதம்.

ஆகமங்களின் அடிப்படையில் குணஸ்தானம் பற்றிய அறிவை நாம் பெறுகிறோம். இந்த ஆகமங்கள் ஜினேந்திர பகவானின் திவ்யத்தொனியிலிருந்து-தெய்வீக ஒலியிலிருந்து பெறப்பட்டவை. இதைப் பாரம்பரியமாக ஆச்சார்யர்கள் பெற்றனர். ஆச்சார்யர்கள் இவைகளை ஆகமங்கள் வடிவில் எழுதி வைத்துள்ளனர். ஜினேந்திர பகவான் அவருடைய கேவலஞானத்தின் வழியாக பொருள்களின் இயல்பை-வஸ்த்து ஸ்வரூபத்தை நேரடியாக அறிந்த பிறகே அதைப்பற்றி உபதேசம் செய்துள்ளார்.

ஆச்சார்யர்களும், வீட்டில் வசிப்பவர்களும்-கிரஹஸ்தர்களும் ஆகம அறிவின் அடிப்படையில் தங்களை உள்நோக்குவதின் மூலம் (ஸ்வசன்முகதா பூர்வம்) ஆத்மானவை அனுபவம் செய்திருக்கிறார்கள் மற்றும் பிற உயிர்களுக்கும் அதைப்பற்றி உபதேசம் கொடுத்திருக்கிறார்கள். நாம் எப்போது ஒருவரிடமிருந்து உபதேசத்தை கேட்கிறோமோ அப்போது அது அவருடைய சொந்தப் பிரசங்கமல்ல, அது ஆகம நூல்களில் கூறப்பட்டுள்ள உபதேசமேயாகும், ஆச்சார்யர்களின் உபதேசமேயாகும், சர்வஞ்ஞ பகவானின் உபதேசமேயாகும். உபதேசிப்பவர் ஆத்ம அறிவுடையவராக இருந்து, ஸ்வயம் தன்னைப் பற்றிய விழிப்புணர்வு கொண்டவராக இருந்து உபதேசம் செய்வாரானால், அவருடைய உபதேசத்தை கேட்பவர்களுக்கு அது சிறப்பான முறையில் தங்களைத்தாங்களே அறிவதில் அதிக உபயோகமாக இருக்கும்.

சம்யக்திருஷ்டி உயிர்கூட ஆத்மாவின் ஸ்வரூபம் பற்றி உபதேசம் செய்யும்போது அதை ஆகமத்தின் ஆதாரத்தில்தான் செய்கிறார். சுத்தோபயோகத்தில் அவருக்கு ஆத்மாவின் அனந்த குணங்களோ அல்லது ஆத்மாவின் அசக்கியாதப் பிரதேசங்களோ தெரிவதில்லை. ஆகம அடிப்படையில் யதார்த்தமாக-உள்ளது உள்ளபடி அறிவு பெற்ற பிறகு ஸ்வரூபத்தில் ஆழ்வதால்-தன்னில் ஒன்றிணைவதால் அவருக்கு துன்பமற்ற புலன்சாராத நேரடியான ஆனந்த அனுபவம் உண்டாவதை தன் அறிவில் அவர் நேரடியாக அறிகிறார். ஆத்மாவின் வடிவம் பற்றியும், மோக்ஷ மார்க்கம் பற்றியும் அவருக்கு எந்த விதமான ஐயமும் இருப்பதில்லை, அவைகளின்மேல் அவருக்கு பூரண-முழுமையான நம்பிக்கை இருக்கிறது.

மகள்களே! ஆன்மீக ஆய்வு செய்பவர் மிகவும் விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமானதாகும். குணஸ்தானங்கள் பற்றி அறிந்த பிறகு, நான்கு மற்றும் ஐந்தாம் குணஸ்தானம் இல்லறத்தில் வாழ்பவர்களுக்கு-வீட்டில் வசிப்பவர்களுக்கான குணஸ்தானங்களாகும் என்பதையும்; திகம்பர முனிவர்களுக்கு ஆறாவது, ஏழாவது மற்றும் அதற்கு மேலேயுள்ள குணஸ்தானங்களாகும் என்பதையும்; அரஹந்தருக்கு பதிமூன்று, பதினான்காம் குணஸ்தானங்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இவர்களில் கடவுள்(தேவன்), குரு(திகம்பர முனி), மற்றும் சாஸ்திரங்களே பரிசுத்தமானவை, புனிதமானவை, வணங்கவும், எட்டு திரவியங்களுடன் பூஜை செய்யவும் தகுதியானவைகளாகும். வீட்டில் வாழ்பவர் சம்யக்திருஷ்டியாக இருந்தாலும்கூட அவர் முனிவருக்கு சமமாக பூஜிக்கத் தகுதியானவரல்ல. ஆம், அவரை வித்யா குருவாக,

கற்பிக்கும் ஆசானாக மதிப்பு, மரியாதை, விருந்தோம்பல், வணக்கம் முதலியன செய்தல் சரியானதாகும். ஆனால் அத்தகைய நபரை தேவன், முனிவர்களுக்கு சமமானவர் அல்லது உயர்ந்தவர் என்று எண்ணினால் நாம் நிதானமற்றவர், விவேகமற்றவர்களாவோம். சமீப காலங்களில் இது போன்ற சில சிதைவுகளை நம் சமூகத்தில் காணமுடிகிறது, பலர் இப்படிப்பட்ட தனிநபர் வழிபாடுகளில் பூரிப்படைகின்றனர். இந்த காரணத்தால் அவர்கள் தனக்குத்தானே தன் காலை கோடாரியால் வெட்டிக் கொள்கின்றனர் என்றுதான் சொல்ல வேண்டும், அவர்கள் தங்களுக்கு சம்யக்த்துவம் வருவதை தாங்களே தடைசெய்து கொள்கின்றனர் என்பதைக்கூட அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். தேவகதி தேவர்கள் நான்காம் குணஸ்தானத்திற்கு மேலே செல்ல முடியாது. சௌதர்மேந்திரன், லௌகாந்திக தேவர்கள் சம்யக்திருஷ்ட்டிகளாவர் மேலும் அடுத்த பிறவியிலேயே மோக்ஷமடையப் போகிறவர்களாவர், ஆனாலும்கூட நாம் அவர்களுக்கு பூஜை செய்வதில்லை.

குணஸ்தானங்கள் பற்றிய ஆய்வு செய்வதின் மூலம் நிச்சயம் மற்றும் வியவஹாரம் பற்றிய ஒருங்கிணைப்பு நம் அறிவில் எப்போதும் நிகழ்கிறது, அவைகளைப் பற்றிய நல்லிணக்கம் நம் மனதில் வருகிறது. எந்த குணஸ்தான உயிரிடம் எப்படிப்பட்ட சிந்தனை இருக்கும் என்பது பற்றிய அறிவு வருகிறது. ஒருவருடைய வெளி ஒழுக்கத்தால் அதாவது விரதங்களை கடைபிடிப்பதால் அவர்களுடைய குணஸ்தானத்தில் எந்த மாற்றமும் நிகழ்வதில்லை ஆனால் அந்தரங்கத்தில் வீதராகத்தன்மை அதிகமாவதால்தான் மேல் குணஸ்தானங்கள் அடையப் படுகின்றன.

பேதவிஞ்ஞானத்தின் மூலம் ஆத்மாவை அறிந்து அதில் ஆழ்வதினால் நான்காம் குணஸ்தானம்-அவிரத சம்யக்திருஷ்டி குணஸ்தானம்-சம்யக்த்துவம் அடையப்படுகிறது. அதேபோல அதற்கும் மேலுள்ள குணஸ்தானங்கள் அதாவது 5, 6 முதல் 13-ஆம் சயோக கேவலி குணஸ்தானங்களை அடைதல்கூட மேலும்மேலும் அதிகமாக ஆத்மாவில் ஆழ்வதின் மூலமே நிகழ்கிறது. ஆகையால்தான் ஆத்மக்கியாதி என்ற நூலில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது :

பாவயேத் பேதவிஞ்ஞனம் இதம் அச்சின்னம் தாரயா |
தாவத் யாவத் பராத் ச்யுத்வா ஞானம் ஞானே ப்ரதிஷ்டதே || 130 ||

சமஸ்கிருத சொல்லின் பொருள் உங்கள் மனதில் வரவேண்டும் என்பதால் ஒவ்வொரு சொல்லும் தனித்தனியாக எழுதிப்பட்டுள்ளது. இதன் பொருள் - சம்யக்த்துவம் அடைந்த பிறகுகூட பேதஞானம் கேவலஞானம் அடையும்வரை இருந்து கொண்டே இருக்க வேண்டும், எதுவரை ஞானம் பிற உணர்வுகளிலிருந்து முழுமையாக நீங்கி ஞான இயல்பிலேயே எப்போதும் நிலைக்கவில்லையோ அதுவரை அவ்வாறேயிருக்க வேண்டும். ஆத்மாவில் நிலைப்பதின் மூலம் சம்யக்ஞானம் அடையப்படுகிறது ஆத்மாவில் நிலைப்பதின் மூலமே கேவலஞானம்கூட அடையப்படுகிறது. மோக்ஷமார்க்கத்தின் துவக்கம், மோக்ஷமார்க்கம் மற்றும் மோக்ஷம் எல்லாம் அந்தரங்கத்தில் ஆத்மாவில் நிலைத்திருப்பதின் மூலமே நிகழ்கிறது; வெளி நடத்தை மற்றும் விரதம் முதலியன ஏற்பது மோக்ஷ மார்க்கத்தை பெறுவதில் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை மூடநம்பிக்கை யாகும்.

இதற்குக் காரணம் என்னவென்று பார்ப்போம். உடல் சார்ந்த செயல்கள் பிற திரவியத்தின், அசேதனத்தின் செயல்களாகும். அவை என்னில், என் ஆத்மாவில் மோக்ஷ மார்க்கத்தை வெளிப்படுத்த எவ்வாறு நிர்வாகியாக இருக்க முடியும்? அவை என்னுடைய-

ஆத்மாவினுடைய செயல்கள் என்ற விபரீத எண்ணமே சம்யக்த்துவம் பெறுவதில் தடையாக இருக்கிறது. விரதம் முதலியன ஏற்கும் சுப உணர்வு வருவது ஒழுக்க குணத்தின் விபாவ பர்யாயமாகும். அது என்னுடைய-ஆத்மாவினுடைய இயல்பு-ஸ்வபாவம் இல்லை, இந்த உணர்வு நான் இயல்பாக இருப்பதைப்போல இல்லை. நான் என்னவோ முக்காலத்திலும், சுத்த, கம்பம்போல் நிலையான, குணங்களை தனித்தனியாக பிறித்துப்பார்க்க முடியாத ஒரு ஒட்டுமொத்த வடிவமாக-ஒருமித்த வடிவமாக-ஒரே பிண்டமாக இருக்கிறேன். சுப உணர்வுகள் சம்யக்த்துவம் பெற சாதகமானவை என்று எண்ணிக்கொண்டு அவைகளில் முழுக் கவனத்தையும் செலுத்தி அவைகளைச் செய்ய வேண்டிதே என்ற நம்பிக்கை கொண்டு அவ்வாறே செய்து கொண்டே இருக்கும் சுப உணர்வும்; பிற விஷயங்களில் நம் கவனம் செல்வது சம்யக்த்துவம் பெறுவதில் தடையாக இருக்கிறது எனபதை தெரிந்து கொண்டு அவைகளிலிருந்து விலகி ஆத்மாவில் ஆழ்வதற்கு அதிக கவனம் செலுத்த முயற்சி செய்ய வேண்டும் என்ற சுப உணர்வும் ஆகிய இரண்டிலும் விருப்பம் கொள்வதில்தான் நம் கவனம் இருக்கிறது. இந்த காரணத்தினால் ஆன்மாவின் ஸ்வபாவத்தின் மேல் நம் கவனம் செல்வது கௌணமாகிப் போகிறது, ஆன்மாவில் மூழ்க வேண்டும் என்பதே நம் கவனத்திற்கு வராமல் போகிறது.

ஆனால் ஸ்வபாவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, முக்காலத்திலும் ஒன்று போலவே இருக்கும் பகவான் ஆத்மாவை-ஸ்வயம் தன்னையே நான் என்று உறுதி செய்து, எப்போது ஆத்மாவில் ஒன்றிவிடுகிறோமோ அப்போது சம்யக்த்துவத்தை அடைகிறோம். அந்த சமயத்தில்கூட நம் உடல்பற்றியும் மற்றும் தகுதியின்படி இராக உணர்வும் நம்மிடம் இருக்கவே செய்கிறது, ஆனால் இப்போது நம் பார்வை அவைகளின்மேல் செல்வதில்லை. இதன்பொருள் அவைகளின் மேல் இவைகள் என்னுடையது என்ற உரிமை உணர்வோ அல்லது அவைகளும் நனும் ஒன்றே என்ற ஏகத்துவ பாவமோ இருப்பதில்லை.

சுப உணர்வுகளை விட்டு விட்டு நாம் தன்னிச்சையாக-தான்தோன்றித் தனமாக-நம் விருப்பம்போல செயல்பட வேண்டுமா? என்ற கேள்வியைச் சிலர் கேட்கின்றனர். அவர்களுக்கு அதிக உச்ச கட்ட கெட்ட உணர்வே இருக்கிறது. ஆனால் யாருக்கு சுத்தாத்மாவில் ஒன்றியிருத்தல் நிகழ்கிறதோ அவருடைய பர்யாயத்தில் தன்னிச்சையாக, தன் விருப்பம்போல நடக்க வேண்டும் என்ற உணர்வு இருப்பதில்லை. தன்னைத்தான் பார்க்கும்-ஸ்வசன்முக உணர்வு கொள்ளும்போது எந்த விசுத்த உணர்வு இருக்கிறதோ அது எல்லாவற்றையும்விட மிகச்சிறந்த சுப உணர்வாகும். இந்தச் சுப உணர்வு எளிதாகவே உண்டாகிறது. நான் குறிப்பிட்ட அந்தச் சுப உணர்வை விட்டு விட்டு குறிப்பிட்ட இந்தச் சுப உணர்வைச் செய்ய வேண்டும் என்பதான இராக சம்பந்தமான கர்த்ருத்வ புத்தி அவர்களுக்கு இருப்பதில்லை. சம்யக்தர்சனம் பெற்ற பிறகு நான்காம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிருக்கு ஆன்மாவில் ஆழ்தல் எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவு ஐம்புல மற்றும் மனம் தொடர்புடைய விஷயங்களை அனுபவம் செய்வதில் ஆர்வம் குறைந்து போகிறது. அவருக்கு பிற உயிர்களின்மேல் கருணை உணர்வு வருகிறது. தன்னால் பிற உயிர்கள் வதை படாமல் இருக்கவும், அவைகளின் மேல் தன்னால் வன்முறை-ஹிம்சை நிகழாமலிருக்கவும், எச்சரிக்கையுடன் செயல்படுபவராக இருக்கவும் முயற்சி செய்கிறார். ஐந்து பாபங்களிலிருந்து அவர் தப்பிக்க முயற்சிக்கிறார். ஹிம்சை-வன்முறை, பொய்மை, திருடு, கெட்ட நடத்தை இல்லாமலிருக்கவும், தன் உடமைகளில்

வரம்பு வைத்துக்கொள்ளவும் அறிவுசார் முயற்சி கொண்டவராக அவர் இருக்கிறார். இவர் அணு விரதங்களை ஏற்கிறார் அதாவது சரணானுயோகத்தில் இல்லறத்தார் ஒழுக்கம் சம்பந்தமான நூலில் கூறப்பட்ட உபதேசங்களுக்கு ஒத்து செயல்பட உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார். ஐந்து அணு விரதங்கள், மூன்று குண விரதங்கள், நான்கு சிக்ஷா-பயிற்சி விரதங்கள் பற்றி அறிந்து அவைகளை கடைபிடிக்கிறார். அப்படிப்பட்ட உயிரை திரவியலிங்கி ஸ்ராவகர் அல்லது திரவ்யலிங்கி விரதி என்று சொல்கின்றனர்.

திரவியலிங்கி விரதி உயிர் எப்போது தூய உயிரில் உறிஞ்சப்பட்டு ஆத்மாவில் ஆழ்வது அதிகரிக்கிறதோ அப்போது இரண்டு கஷாய நான்மைகள் (அனந்தானுபந்தி நான்கு மற்றும் அப்ரத்யாக்யான நான்கு கஷாயங்கள்) இல்லாத வீதராகத்தன்மை அவரிடம் அதிகரிக்கிறது. அவர் தேச விரதி என்ற பெயர் கொண்ட ஐந்தாம் குணஸ்தானத்தை அடைகிறார். திரவியலிங்கி ஸ்ராவகராகாமல் பாவலிங்கி ஸ்ராவகராவது அதாவது ஐந்தாம் குணஸ்தானத்தை பெறுவது இயலாது என்பதை நீங்கள் சரியானபடி கவனத்தில் கொள்ளுங்கள். அதே சமயம் வெளி விரதங்களை மட்டும் ஏற்பதால் ஐந்தாம் குணஸ்தானத்தை அடைய முடியாது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். யாருடைய அந்தரங்கத்தில் நற்காட்சியுடன் கூடிய இரண்டு கஷாய நான்மைகள் (அனந்தானுபந்தி நன்கு மற்றும் அப்ரத்யாக்யான நான்கு கஷாயங்கள்) இல்லாமையுடன் வெளியில் தெரியக்கூடிய விரதங்களையும் ஏற்றுள்ளாரோ அவரே ஐந்தாம் குணஸ்தானத்தில் இருப்பவராகிறார்.

ஐந்தாம் குணஸ்தான உயிரிடம் அதிகரிக்கும் வீதராகத்தன்மையின் உணர்வுகளில் அனேக வித்தியாசங்களைக் காண முடிகிறது. அந்த வித்தியாசங்களின் அடிப்படையில் ஐந்தாம் குணஸ்தானத்தில் 11 வித உட்பிரிவுகள் சொல்லப்படுகின்றன. அவை 11 பிரதிமைகள் என்ற பெயரில் பிரபலமானதாகும். இல்லறநெறி நூல்களில் அவகைளைப் பற்றி விரிவாக வர்ணனை செய்யப்பட்டுள்ளது. **வீதராக விஞ்ஞான பாடமாலா** என்ற புத்தகத்தில் **ஸ்ராவகர்களின் 11 பிரதிமைகள்** என்ற பெயரில் ஒரு பாடம் இருக்கிறது. அதை நீங்கள் அவசியம் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள். சம்யக்திருஷ்டி உயிர்களுக்கு ஐந்து அணுவிரங்களை ஏற்று ஆத்மாவில் நிலை கொள்ளுதல் அதிகரிப்பதோடல்லாமல், சம்யக்தர்சனமும் மேலும் திடப்படுகிறது. இந்த நிலையை **தர்சனப்பிரதிமா** என்று சொல்கின்றனர். ஆத்மாவில் இரண்டு கஷாய நான்மைகளுடன் கூடிய வீதராகத்தன்மை இல்லாமல், வெறுமனே தேவ தரிசனத்தை மட்டும் அதாவது தினமும் வீதராக சர்வஞ்ஞ பகவானை தரிசித்து வணங்குவேன் என்ற நியமம் ஏற்றல்-உறுதி ஏற்றல்-விரதம் ஏற்று அவ்வாறு மட்டுமே நடப்பவரை தர்சனப்பிரதிமாதாரி என்று சொல்ல முடியாது. 11 பிரதிமைகளின் பெயர்களாவன:-

1.தர்சன பிரதிமா, 2.விரதி பிரதிமா, 3.சாமாயிக பிரதிமா, 4.ப்ரோஷத பிரதிமா, 5.சச்சித்தத்தியாக பிரதிமா, 6.ராத்ரிபோஜனத்தியாக பிரதிமா(திவாமைத்துனத்தியாக பிரதிமா), 7.பிரம்மசர்ய பிரதிமா, 8.ஆரம்பத்தியாக பிரதிமா, 9.பரிக்கிரத்தியாக பிரதிமா, 10. அனுமதித்தியாக பிரதிமா, 11. உத்திட்டத்தியாக பிரதிமா.

பதினொன்றாம் பிரதிமாதாரி ஸ்ராவகர் **சுல்லக், ஐலக்** என இரண்டு விதமாக இருக்கின்றனர். சுல்லக் இரண்டு வஸ்த்திரங்களை (ஒரு கௌபீணம், மற்றும் உடம்பு

முழுவதும் மூடிக்கொள்ள முடியாத அளவுள்ள ஒரு மேல் துண்டு) உடுத்தியிருப்பார், ஐலக் ஒரு வஸ்த்திரம் (ஒரு கௌபீணம்) மட்டுமே உடுத்தியிருப்பார். இவர்கள் முனி சங்கத்துடன் சேர்ந்திருப்பர்கள். மேல்மேல் பிரதிமைகளில் இருப்பவர்கள் அஹிம்சையை மேலும்மேலும் சிறப்பான முறையில் கடைபிடிப்பார்கள். இவர்களிடம் பாப உணர்வுகள் குறைந்து கொண்டே போகும் ஆனாலும் மாஹாவிரதங்களை கடைபிடிக்கும் சாமர்த்தியம் இருப்பதில்லை. ஆகையால் ஐந்தாம் குணஸ்தானத்தை **விரதாவிரதி** அல்லது **சய்யமாசய்யமி** குணஸ்தானம் என்றும் சொல்லுவர்.

இந்த ஐந்தாம் தேச விரத குணஸ்தானத்தை கர்ம பூமியில் வாழும் மனிதர்கள் மற்றும் மனமுடைய பஞ்சேந்திரிய விலங்குகள் மட்டுமே அடைய முடியும். போக பூமி மனிதர்கள், விலங்குகள், தேவர்கள் மற்றும் நாரகிகள் நான்காம் குணஸ்தானம் அடையும் தகுதி இருந்தும்கூட ஐந்தாம் குணஸ்தானம் அவர்காளால் அடைய முடியாது. அதற்கு தேவையான அளவு அதிகமாக ஆன்மாவில் ஆழும் சூழ்நிலையும், அதற்கு அனுகூலமான பிறவித் தகுதியும் அவர்களுக்கு இல்லை.

கருணை கொள்ளல், நன்கொடை அளித்தல், விரதம் ஏற்றல், பூஜை செய்தல், தீர்த்த யாத்திரை செய்தல் முதலியவைகளில் ஈடுபாடு உடையவர்களையே லௌகீக உலகில் தர்மி-தர்மவான் என்று பொதுவாக மக்கள் அழைக்கிறார்கள். மக்களுக்கு ஒருவர் கைகொள்ளும் வெளித்தியாகங்களைப் பார்த்தே மகிமை வருகிறது. அப்படிப்பட்ட தியாகிகளை விரதி, சய்யமி என்ற பெயரில் அழைக்கின்றனர். எந்த குணஸ்தானத்தில் எப்படிப்பட்ட சுப அல்லது அசுப உணர்வுகள் வரமுடியும் என்பதை நாம் அறிந்து கொண்ட பிறகு கஷாயங்களின் மந்தத் தன்மையையோ அல்லது தீவிரத் தன்மையையோ வைத்து குணஸ்தானம் இல்லை என்பது நமக்குப் புரியவருகிறது. கஷாயங்களின் ஜாதியே வேறாகும். மித்யாத்துவ குணஸ்தானத்தில் இருக்கும் ஒருவர் மிகவும் மந்த கஷாயம் உடையவராக, ஒரு திருப்தியான அணுகுமுறை கொண்டவராக, பாபத்திற்கு பயந்தவராக, விரதங்களை கடைபிடிப்பவராக இருப்பதைப் பார்க்க முடியும். இதற்கு மாறாக ஐந்தாம் குணஸ்தானத்தில் இருக்கும் ஒருவர் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவராக, போர் செய்பவராக, மனைவி, மக்களுடன் குடும்பத்தில் வாழ்பவராக, உலக விஷயங்களில் சிக்கிக்கொண்டு இருப்பவராக இருப்பதைப் பார்க்க முடியும். வெளிப்புற நடத்தையை வைத்து ஒருவருடைய குணஸ்தானத்தை நம்மால் சரியாக மதிப்பீடு செய்யவியலாது.

ஆனால் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம், ஒரு குறிப்பிட்ட வெளிநடத்தை இல்லாவிட்டால் ஒரு குறிப்பிட்ட குணஸ்தானம் இருக்க முடியாது என்பதை உறுதி செய்ய முடியும். வெளிப்புறத்தில் காணக்கூடிய அணுவிரதம் ஒருவரிடம் இல்லையென்றால் அவர் ஐந்தாம் குணஸ்தானத்தில் இருக்க முடியாது. யாரிடம் ஆகமத்தில் கூறியுள்ளபடி திரவிய லிங்கம் இல்லையென்றால் அதாவது நக்னம்-ஆடை அணியாது இருத்தல் முதலான 28 மூலகுணங்கள் இல்லையோ அவர் ஆறாவது, ஏழாவது அல்லது அதற்கும் மேல் குணஸ்தானங்களில் இருக்க முடியாது. இதன் சாராம்சம் என்ன வென்றால் ஆடை அணிந்திருப்பவர் தன்னை முனிவர் என்று சொன்னால் அது எந்த காலத்திலும் எந்த இடத்திலும் உண்மை இல்லாத ஒன்றாகும்.

ஆடையுடன் இருப்பவர் ஆறாவது, ஏழாவது குணஸ்தானத்திலேயே இருக்க முடியாது என்றால் அரஹந்தருடைய பதிமூன்று, பதினான்காம் குணஸ்தனத்தில் இருக்கும் வாய்ப்பு அவர்களுக்கு எப்படி இருக்க முடியும்? பெண் பிறவியில் இருக்கும் உயிர் அதிகபட்சம் ஐந்தாம் குணஸ்தானம்வரை செல்லக்கூடிய புருஷார்த்தத்தை செய்ய முடியும் அதற்கு மேல் செல்லும் புருஷார்த்தத்தை செய்ய முடியாது. ஆகையால் பெண்களுக்கு முனி பதவி,

அரஹந்த பதவி, மோட்ச பதவி இந்த பர்யாயத்தில் அடைதல் நிகழ முடியாது. எதிர் காலத்தில் அந்த உயிர் புருஷ பர்யாயத்தைப் பெற்று முக்தி அடைய முடியும்.

ஆஹார சஞ்சை-உணவு உண்ண வேண்டும் என்ற உணர்வு ஆறாம் குணஸ்தானம் வரையே இருக்கிறது, ஏழிலிருந்து பசி உணர்வு இல்லாமை காணப்படுகிறது. அப்படியானால் பதிமூன்றாம் குணஸ்தானத்தில் இருக்கும் அரஹந்தர்களுக்கு கவளாஹாரம் உண்டு என நம்புவதில் எவ்வளவு பெரிய தவறும், அறியாமையும் உள்ளது என்பதைக் காணலாம். ஆடையுடன் முனியாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை, பெண் பிறவியில் முக்தி பெற முடியும் என்ற நம்பிக்கை, கேவலி உணவு ஏற்கிறார் என்ற நம்பிக்கை எல்லாம் மஹா மித்யாத்துவமாகும், பெரிய மூடநம்பிக்கையாகும், சாஸ்திரத்தில் இதை கிரஹீத மித்யாத்துவம் என்று சொல்கின்றனர். கிரஹீத மித்யாத்துவத்தை விடாமல் இருக்கும்வரை அகிரஹீத மித்யாத்துவம் ஒருவரிடமிருந்து விலகுவதில்லை. [கிரஹீத மித்யாத்துவம், அகிரஹீத மித்யாத்துவம் இரண்டையும் விடாமல் இருக்கும்வரை சம்யக்துவத்தைப் பெற முடியாது.]

மேலே நாம் கஷாயங்களின் ஜாதி பற்றி பேசினோம், அதைப்பற்றி இப்போது கொஞ்சம் சர்ச்சை செய்யலாம். அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யானம், பிரத்யாக்யானம், சஞ்சுவலனம் என்ற நான்கு ஜாதி கஷாய-துவர்ப்பு உணர்வுகளில் க்ரோதம்-கோபம், மானம்-கர்வம், மாயை-கபடம், லோபம்-பிறபொருள் மேல் பற்று ஆகிய நான்கு உட்பிரிவுகளை அந்தந்த கஷாய ஜாதியின் நான்மைகள் என்று சொல்லுவார்கள். இந்த வேற்றுமை அவைகளின் தீவிர உதயம், அல்லது மந்த உதயம் நோக்கில் சொல்லப் படுவதில்லை, ஆனால் அதன் ஜாதியே அதாவது அவைகளின் குணமே வேவ்வேறாகும். எந்த கஷாயம் சம்யக்த்துவம் பெறுவதில் தடையாக இருக்கிறதோ, சம்யக்துவத்தை பெறவிடுவதில்லயோ அவை அனந்தானுபந்தி ஜாதி கஷாயங்களாகும். அனந்தானுபந்தியும், மித்யாத்துவமும் இணை பிரியாத இரட்டையர்கள் எனலாம், ஒன்று மற்றொன்றுக்கு ஈடு கொடுப்பதாகும், ஒன்று மற்றொன்றை முழுமை படுத்துவ தாகும்.

எந்த கஷாயம் கொஞ்சம்கூடத் தியாகம் செய்ய விடுவதில்லையோ அதாவது அணு விரதங்களை ஏற்க விடுவதில்லையோ அந்த ஜாதி கஷாயத்தை அப்ரத்யாக்யான கஷாயம் என்று சொல்கின்றனர். அவை சம்யக்த்துவத்தில் எந்த குறுக்கீடும் செய்வதில்லை. நான்காம் குணஸ்தானத்தில் அப்ரத்யாக்யன கஷாயங்களின் உதயம் சம்யக்துவத்தை இருக்க விடுகிறது ஆனால் அனுவிரதத்தை ஏற்கும் உணர்வை வர விடுவதில்லை.

எந்த கஷாயம் மஹா விரதத்தை ஏற்கத் தடையாக இருக்கிறதோ அந்த ஜாதி கஷாயத்தை பிரத்யாக்யான கஷாயம் என்று சொல்கின்றனர். ஐந்தாம் குணஸ்தானத்தில் பிரத்யாக்யான கஷாய உதயம் இருப்பதால் முனி தீட்ஷை ஏற்க வேண்டும் என்ற எண்ணம் வருவதில்லை.

எந்த கஷாயம் யதாக்யாத சாரித்ரத்தை ஏற்கத் தடையாக இருக்கிறதோ அந்த ஜாதி கஷாயத்தை சஞ்சுவலன கஷாயம் என்று சொல்கின்றனர். ஆறாம் குணஸ்தானத்தில் சஞ்சுவலன கஷாயத்தின் தீவிர உதயம் இருக்கிறது அதனால் அவர் 28 மூலகுணங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்ற எண்ணம்-சுபோபயோகம் இருக்கிறது. ஏழாம் குணஸ்தானத்தில் சஞ்சுவலன கஷாயத்தின் மந்த உதயம் இருப்பதால் அப்போது அந்த உயிர் சுத்தோபயோகத்தில்-தன் ஆன்மாவில் ஆழ்வதில் கவனம் செலுத்துகிறது.

நாம் எப்போது அனந்தானுபந்தியின் உதயம் என்று சொல்கிறோமோ அப்போது பிற மூன்று ஜாதி கஷாயங்களின் நான்மைகளும்கூட அதனுடன் இருக்கின்றன. எப்போது அப்ரத்யாக்யானத்தின் உதயம் என்று சொல்கிறோமோ அப்போது பிற இரண்டு ஜாதி கஷாயங்களின் நான்மைகளும்கூட அதனுடன் இருக்கின்றன. எப்போது பிரத்யாக்யானத்தின் உதயம் என்று சொல்கிறோமோ அப்போது மீதமுள்ள ஒரு ஜாதி கஷாயத்தின் அதாவது சஞ்சுவலன கஷாயத்தின் நான்மைகளும்கூட உடன் இருக்கின்றன.

தேச விரத பெயர் கொண்ட ஐந்தாம் குணஸ்தானத்தில் நாம் எந்த 11 பிரதிமைகளைப் பார்த்தோமோ அவைகளில் முதல் பிரதிமையிலிருந்து 11-ஆம் பிரதிமை வரை வீதராகத் தன்மை வளர்ந்து கொண்டே போகிறது, மேலும் கஷாயங்கள் மந்தமடைந்து கொண்டே போகின்றன. இந்த எல்லா காரியமும் அந்தரங்கத்தில் ஆத்மாவில் ஆழ்ந்திருக்கும் தன்மை அதிகரித்துக் கொண்டே போவதின் மூலமே உண்டாகிறது. சுத்தோபயோகத்தில் இருக்கும் காலம் அதிகரிக்கிறது அதேபோல அடிக்கடி சுத்தோபயோகமும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இந்த உயிர் மேல் குணஸ்தானங்களுக்கு எப்படிச் செல்கிறது அதாவது எவ்வாறு முனியாகிறது என்பதைப்பற்றி அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

- உங்கள் அம்மா.

முனிவர்களின் குணஸ்தானம்

கடிதம்-12 ஓம் நம: சித்தேப்ய: 3-09-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஐந்தாம் குணஸ்தானத்தில் சுல்லக் மற்றும் ஐலக் பற்றி தெரிந்து கொண்ட பிறகு, அந்த நிலையில் இருக்கும் உயிர்கள் எப்படி முனிவர்களாக ஆகின்றனர் என்பதைப்பற்றி இப்போது பார்க்கலாம். அந்த 11-ஆம் பிரதிமையில் இருக்கும் உயிர்கள் அடிக்கடி சுத்தோபயோகத்திற்கு செல்கிறார்கள். மற்ற இல்லற நிலைகளில் 1-10 பிரதிமைகளில் இருப்பவர்களைவிட அவர்களால் ஆத்மாவில் கொஞ்சம் அதிக நேரம் ஆழ்ந்திருக்க முடிகிறது. அந்த நிலையை அடைந்த சுல்லக், ஐலக்குகளுக்கு திகம்பர முனி தீட்சை ஏற்க வேண்டும் என்ற எண்ணம் வருகிறது. அப்போது அந்த உயிர்கள் நக்ன திகம்பர முனிதீட்சையை அங்கீகாரம் செய்து அதை ஏற்கும் முடிவுக்கு வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நான் மஹா விரதத்தை ஏற்றுக்கொள்கிறேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்கள். 28 மூல குணங்களை வழுவில்லாமல் கைக்கொள்ள உறுதி எடுத்துக் கொள்கிறார்கள். அந்த **28 மூல குணங்களாவன-ஐந்து மஹாவிரதம், ஐந்து சமிதி, ஐந்து புலன்களின்களையும் தன் கட்டுப்பாட்டில் அடக்குதல், ஆறு அவசிய காரியங்கள், மற்றும் மீதமுள்ள ஏழு குணங்கள்.**

அஹிம்சா மஹாவிரதம், சத்ய மஹாவிரதம், திருடாமை மஹாவிரதம், பிரம்மச்சர்ய-ஆன்மாவில் ஆழும் மஹாவிரதம், சொத்துகளை-உடனிருப்பவைகளைக் கைவிடும் மஹாவிரதம் ஆகியவை ஐந்தும் ஐந்து மஹாவிரதங்களாகும். சரணானுயோகத்தில் இந்த எல்லா மஹாவிரதங்கள், மற்றும் மூலகுணங்கள் பற்றியும் விரிவான வர்ணனைகள் உள்ளன. சமிதி என்பதன் பொருள் போக்கு-மனச்சார்பு எனலாம். சோம்பலின்றி உரிய விடாமுயற்சியுடன் செயல்படுதல் முனிக்கு அவசியமாகும். முனியின் வாழ்க்கையில் முனியின் செயல் அதாவது ஆஹாரம் ஏற்றல், இடம்விட்டு இடம் பெயர்தல் முதலிய செயல்கள் அஹிம்சா மஹாவிரதத்தை நல்ல முறையில் காப்பாற்றும் வகையில் இருக்க வேண்டும். **ஈர்யாசமிதி-ஹிம்சை நேராவண்ணம் இடம்விட்டு இடம் செல்லல், பாஷாசமிதி-ஹித, மித, ப்ரிய வசனத்தைப் பேசுதல், ஏஷணாசமிதி-இம்சை அற்ற உணவை உண்ணுதல், ஆதான நிஷ்சேபணாசமிதி-ஹிம்சை நேராவண்ணம் பொருள்களை கையாளுதல், மற்றும் பிரதிஷ்டாபனாசமிதி-ஹிம்சை நேராவண்ணம் மலம், மூத்திரம் கழித்தல் முதலியன ஐந்து சமிதிகளாகும்.**

தூய்மையான மற்றும் உயிர்கள் இல்லாத பூமியில் நான்கு முழ தூரம் பார்த்துக் கவனமாக நடந்து செல்லுதல் ஈர்யாசமிதியாகும். ஹித-உயிர்களுக்கு இதமளிக்கக்கூடிய, மித-குறைவான, ப்ரிய-அன்பு கலந்த சொற்களைப் பேசுதல் பாஷாசமிதியாகும். முனிவர்களுக்கு மற்றவர்களைக் கண்டிக்கவும், தவறாகப் பேசவும், மனம் வருந்தும்படி எந்தச் சொல்லும் சொல்லவும் கொஞ்சம்கூட எண்ணம் வருவதில்லை. எந்த உயிர் ஒவ்வொரு அந்தர்முகூர்த்தத்திலும் சுத்தோபயோத்திற்குச் செல்கிறதோ அவரிடம் இருந்து வரும் எல்லா சொற்களும்கூட தூய உயிரைப்பற்றிய செய்தி மற்றும் கதையாகவே இருக்கும். உலக நடப்புகள், மற்ற லௌகீக காரியங்கள் பற்றி அவர்கள் பேச விரும்புவதில்லை.

ஏஷணாசமிதி உணவு சம்பந்தமானதாகும். முனிவர் தியானம் மற்றும் ஸ்வாத்யாயத்தில் நிலைக்க அவர் உடலுக்குத் தேவையான சக்தி பெறுவதற்காக உணவு உண்கிறாரே தவிர, நாக்கு சுவைக்காக இல்லை. எப்போது ஸ்ராவகர் சாஸ்திரத்தில் கூறப்பட்ட நவதாபக்தி விதிப்படி ஆஹாரதானம் கொடுக்கிறாரோ அப்போது 46 தோஷங்கள்-குற்றங்கள், மற்றும் 32 அந்தராயங்கள்-தடைகள் அற்ற எந்தக் குற்றமும் இல்லாத உணவையே முனிவர்கள் ஏற்கின்றனர். நாம் தேசவிரத குணஸ்தானத்தில் உத்திட்டதியாகப் பிரதிமா என்ற 11-ஆம் நிலையைப் பார்த்தோம். அந்த நிலையை அடைந்த ஸ்ராவகர்கூட அவருக்காக செய்யப்பட்ட உணவை ஏற்பதில்லை மற்றும் அவருக்காக பிரத்யேகமாக செய்யப்படும் எந்த வசதியையும் அவர் உபயோகப் படுத்துவதில்லை எனென்றால் அதில் நிகழும் ஹிம்சைக்கு அவர் அனுமோதனை அளித்த குற்றம் அவருக்கு வந்துவிடும் என்பதால்தான். இங்கு நாம் முனிகளைப் பற்றி பார்த்துக் கொண்டிருக்கிறோம், முனிவர்கள்கூட அவர்களைக்காகப் பிரத்யேகமாக செய்யப்பட்ட உணவை உண்ணாமலும் மற்றும் பிற வசதிகளைத் தியாகம் செய்பவர்களாகவுமே, இருக்கின்றனர்.

ஆதானநிட்ஷேபணா சமிதியில் முனிவர் எந்தப் பொருளையும், சாஸ்திரம், கமண்டலம், புத்தகங்கள் முதலியவைகளையும் நல்ல வகையில் தன் கண்களால் பார்த்து, சோதித்து பிச்சி மூலம் தூய்மை செய்த பிறகே எடுக்கவும், கையாளவும், வைக்கவும் செய்கின்றனர், வைக்கும் இடத்தையும் நல்ல முறையில் சோதித்து தூய்மை செய்த பிறகே அங்கு பொருள்களை வைக்கிறார்.

பிரதிஷ்டாபன சமிதி-சம்யக் வியத்ஸர்க்க சமிதி என்பதன் பொருள் புல் முதலிய பசுமையான உடல்களை உடைய நிலையான உயிர்கள் மற்றும் புழு, பூச்சி முதலிய நகரும் உயிர்கள் இல்லாத இடத்தில் உடலிலிருந்து வெளியேற்றும் மலம், மூத்திரம் இவைகளைக் கழிக்கின்றனர்.

தொடுபுலன், சுவைபுலன்-நாக்கு, நுகர்புலன், கண்புலன், மற்றும் காதுபுலன் ஆகிய ஐந்து புலன்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதை புலன்களை வெற்றி கொள்ளுதல்-இந்திரிய விஜயம் என்று சொல்கின்றனர். முனிவர்கள் ஐந்து புலன்களையும் தன்வசப்படுத்தி வைத்துள்ளனர், அவைகளை அதன் போக்கில் விடுவதில்லை. இந்திரிய சுகம் வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருப்பதில்லை. இந்திரிய சுகப் பொருள்களின்மேல் அவர்களுக்கு விருப்பமோ அல்லது வெறுப்போ தோன்றுவதுமில்லை.

முனிகளின் ஆறு அவசியங்களில் கவனக்குறைவு எதுவும் நிகழாத வண்ணம் பார்த்துக் கொள்கின்றனர். அந்த அவசியங்களின் பெயர்களாவன-1.சாமாயிகம்-அமைதியான இடத்தில் தனிமையில் அமர்ந்து ஆத்மத் தியானம் செய்தல், 2.இருபத்திநால்வர் ஸ்துதி-பாராட்டு, 3.வந்தனை, 4.பிரதிக்கிரமணம்-நடந்த தவறுகளுக்கு வருந்துதல், 5.பிரத்யாக்யானம்-இனிமேல் தவறு நிகழாவண்ணம் இருக்க எண்ணுதல், 6.காயோத்சர்க்கம்-உடல் தான் இல்லை என்ற எண்ணத்துடன் செயல்படுதல்.

மற்ற ஏழு மூல குணங்களை மீதமுள்ள ஏழு குணங்கள் என்று சொல்கின்றனர். அவைகளாவன- 1.கேசலோசனம்-தன் கைகளாலேயே தலை மற்றும் முகத்தில் உள்ள முடிகளைக் களைதல், 2.வஸ்த்திர தியாகம்-நக்னத்துவம்-உடைகள் எதுவும் அணியாமல் நிர்வாணமாக-பிறந்த மேனியாக இருத்தல், 3.குளிக்காமை, 4.பல் துலக்காமை, 5.பூமியில் படுத்தல், 6.நின்று கொண்டு தன் கைகளிலேயே உணவை ஏற்றல், 7. நாளில் ஒருமுறை மட்டுமே உணவு உண்ணுதல்.

முனிவர்களின் ஒழுக்கம்-நடத்தை சம்பந்தமாக பல விதிமுறைகள் இருக்கின்றன. முனி சங்கத்தில் அந்த விதிமுறைகளை மிகுந்த கவனத்துடன் கடைபிடிக்கின்றனர். இராணுவப் பயிற்சி எடுத்துக் கொள்பவர்கள் கடுமையான விதிமுறைகளையும், சட்டதிட்டங்களையும் கடைபிடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம், அவைகளை அவர்கள் கடின உழைப்பு மற்றும் துயரத்துடன் செய்ய வேண்டியிருக்கிது. ஆனால் முனிவரின் வாழ்க்கை அப்படிப்பட்ட துயரங்களை-கஷ்டங்களை கொடுப்பதில்லை. சம்யக்திருஷ்டி உயிர்கள் இடைவிடாது ஆத்ம சுகத்தை-திகட்டாத இன்பத்தை அனுபவிக்கின்றனர். இந்த முனிவர்களுக்கு திகட்டக்கூடிய புலனின்பங்களை நுகர்வதில் கொஞ்சம்கூட ஆர்வமோ, ஈடுபாடோ இருப்பதில்லை. உடல் மற்றும் ஆசைகளிலிருந்தும் வேறான அறிவு ஆனந்தமய சுகம் பற்றிய விழிப்புணர்வே அவர்களுக்கு எப்போதும் இருக்கிறது. ஆகையால் முனிவர்களுக்கு தகுதியான செயல்களை கடைபிடிப்பதில் அவர்களுக்கு எந்த துக்கமோ, அல்லது கஷ்டமுமோ இருப்பதில்லை. அவர்கள்மேல் அந்த விதிமுறைகளும் கட்டாயப் படுத்தப்பட்டதாகவோ, அல்லது திணிக்கப்பட்டதாகவோ அவர்களுக்குத் தோன்றுவதில்லை, அவைகளை சுலபமாக அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

இவ்வாறு 28 மூலகுணங்களையும் எல்லை மீறுதலின்றி-அதீசாரமின்றி கடைபிடிப்பவர் எப்போது தன் உபயோகத்தை ஸ்வயம் தன்னையே-ஆன்மாவையே பார்க்கிறாரோ-சுத்தோபயோகத்தில் இருக்கிறாரோ, அவருக்கு ஆத்மாவில் நிலைக்கும் தன்மை அதிகரிப்பதோடல்லாமல் மூன்று கஷாய நான்மைகளும் [அனந்தானுபந்தி, அப்ரத்யாக்யான, பிரத்யாக்யன க்ரோத, மான, மாயா, லோபம் ஆகியவை] இல்லாமல் போகின்றன. அப்போது அவர் ஏழாம் குணஸ்தானமான **அப்பிரமத்த** குணஸ்தானத்தை அடைகிறார். ஏழாம் அப்பிரமத்த குணஸ்தானத்தின் காலம் அதாவது சுத்தோபயோகத்தின் காலம் அல்பமானதாக-கொஞ்சமாக-ஒரு அந்தர்முகூர்தமாக இருக்கிறது. அதற்குப்பிறகு உயிர் விதிப்படி ஆறாவது குணஸ்தானத்திற்கு வருகிறது. இது சுபோபயோகத்தின் காலமாகும். இதில் கற்றல், கற்பித்தல், உணவு ஏற்றல், விகாரம் செய்தல் முதலிய காரியங்கள் நிகழ்கின்றன. அடுத்த அந்தர்முகூர்த்த காலத்தில் மீண்டும் ஏழாம் குணஸ்தானத்தை இவர் அடைகிறார். இவ்வாறு இடைவிடாது ஆறாவது, ஏழாவது குணஸ்தானங்களில் மாறிக்கொண்டே இருக்கிறார். ஆச்சார்யர், உபாத்யாயர், சாதுக்கள் மூவரும் இவ்வாறு எப்போதும் ஆறாம்-ஏழாம் குணஸ்தானங்களில் ஊஞ்சலில் ஆடுவதுபோல ஆறாவது, ஏழாவது குணஸ்தானங்களில் வருவதும் போவதுமாக இருக்கிறார்கள்.

துறவியாக இருந்தாலும், விரதி ஸ்ராவகராக இருந்தாலும் அவர்களுடைய அந்தரங்கத்தில் நிகழும் வீதராகத்தன்மையோ, குணஸ்தானமோ வெளியில் தெரிவதில்லை. இதையும் தவிர அவர்களுடைய உணர்வுகளில்-பரிணாமங்களில் கூட பாம்பு-ஏணி விளையாட்டில் நிகழ்வது போல மேல் குணஸ்தானங்களிலிருந்து கீழ் குணஸ்தானங்களுக்கும் பிறகு புருஷார்ததம் செய்து மேல் குணஸ்தானங்களுக்கும் வருவதும், போவதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஆகையால் முனியின் குணஸ்தானத்தையோ அல்லது சம்யக்துவத்தையோ நம்மால் பரிட்சை செய்துப் பார்க்க முடியாது, அப்படி செய்ய வேண்டிய கடமையும் நமதல்ல. ஆனால் வெளியில் சுலபமாகத் தெரியக்கூடிய முனிவிரதத்தை அதாவது 28 மூலகுணங்களை முனிவர் உண்மையாகக் கடைபிடிக்கிறாரா இல்லையா என்று ஸ்ராவகர் ஆய்வு செய்துப் பார்க்க முடியும். அதோடு மட்டுமல்ல, ஆய்வு செய்து 28 மூலகுணங்களை உண்மையாக கடைபிடிக்கும் முனிவரை கண்டறிந்து; அவருக்கு

ஆஹாரதானம் அளித்தல், பக்தி, பூஜை செய்தல் ஸ்ராவகர்களின் அவசியக் கடமைகளில் ஒன்றாகும்.

ஆனால் தேவன், குரு, சாஸ்திரங்களின் ஸ்வரூபம் பற்றி ஆய்வு செய்து நிர்ணயம் செய்யும்போது, திரவ்யலிங்கத்திலிருந்து பாவலிங்கத்தை வெளிப்படுத்துபவர் ஆறாவது-ஏழாவது குணஸ்தானங்களில் வந்தும் போயிக்கொண்டிருக்கும் உயிரே முனிவராவார், பாவலிங்கி முனிவராவார் என்று உண்மையாக நாம் நிர்ணயம் செய்ய வேண்டும். ஆறாவது-ஏழாவது மற்றும் அதற்கு மேல் உள்ள குணஸ்தானங்கள் மனித கதியில் இருப்பவர்கள் மட்டுமே-அதிலும் புருஷலிங்கத்தில் இருப்பவர்கள் மட்டுமே-அதாவது ஆண்கள் மட்டுமே அடைய முடிவதாக இருக்கிறது.

ஆறாவது-ஏழாவது குணஸ்தானங்களில் வந்தும் போயிக்கொண்டிருப்பவர் எப்போது அந்தரங்கத்தில் அதிகமாக ஆழ்கிறாரோ அப்போது அவருடைய பரிணாமம்-உணர்வு அதிக நிர்மலமாக-அழுக்கற்றதாக ஆகிறது மற்றும் அதிகரித்துக்கொண்டே போகும் வீதராகத்தன்மையுடன் அவருக்கு மேல் குணஸ்தானங்களும் அமைகின்றன. எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது, பதினொன்றாவது அல்லது எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது, பன்னிரண்டாவது குணஸ்தானங்கள் முறையாக-வரிசையாக அவர் அடைகிறார். இந்த நான்கு குணஸ்தானங்களை ஸ்ரேணியின் குணஸ்தானங்கள் என்று சொல்கின்றனர்; அல்லது முனிவர் ஸ்ரேணியில் ஏறினார் அல்லது ஸ்ரேணியில் உயர்கிறார் என்றும் சொல்கின்றனர்.

ஸ்ரேணியில் இரண்டு விதமான ஏற்றம் நிகழ்கிறது. முதலாவது உபசம ஸ்ரேணி இரண்டாவது ஷபக ஸ்ரேணி. உபசம ஸ்ரேணியில் சாரித்திர மோஹனீய கர்மத்தின் 21 பிரக்ருதிகளும் அழிகின்றன, அப்போது பன்னிரண்டாம் ஷீணமோஹ குணஸ்தானம் அடையப்படுகிறது. இவ்வாறு ஆறாவது குணஸ்தானத்திலிருந்து பன்னிரண்டாம் குணஸ்தானம்வரை எல்லா குணஸ்தானங்களும் முனிராஜர்களுக்கான குணஸ்தானங்களாகும். அரஹந்த பகவானைக்கூட மஹாமுனி என்று சொல்கின்றனர்.

உபசமஸ்ரேணி உயிர் பதினொன்றாம் குணஸ்தானத்தில் ஒரு அந்தர்முஹூர்த்த நேரம் இருக்கிறார். உபசம காலம் முழுமை அடைந்ததும் அம்முனிவர் பத்தாவது குணஸ்தானத்திற்கு இறங்குகிறார். அங்கிருந்து வரிசையாக ஒன்பதாவது, பிறகு எட்டாவது, பிறகு ஏழாவது அதற்குப்பிறகு ஆறாவது குணஸ்தானங்களில் வரிசையாகவே இறங்குகிறார். அதற்குப்பிறகு ஆறாவது ஏழாவது குணஸ்தானங்களில் மாற்றமடைந்த வண்ணம் இருக்கிறார்.

ஷபகஸ்ரேணி உயிர் பத்தாம் குணஸ்தானத்தின் கடைசி சமயத்தில் சாரித்திர மோஹனீய கர்மத்தை அழித்து முழுவதும் இல்லாமல் செய்து பன்னிரண்டாம் குணஸ்தானத்தை அடைகிறது. தர்சன மோஹனீய கர்மத்தின் அழிவு முன்னரே நிகழ்து விட்டது. ஆகையால் பன்னிரண்டாம் குணஸ்தானத்தில் மோஹனீய கர்மத்தின் சத்தாவே-இருப்பே இல்லாமல் போகிறது, ஆனால் மற்ற மூன்று காதி கர்மங்களின் சத்தா-இருப்பு மற்றும் அவைகளின் உதயம் இப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. பன்னிரண்டாம் குணஸ்தானத்தின் கடைசியில் இந்த மூன்று காதி கர்மங்களையும் பூரணமாக ஷயம்செய்து-முழுமையாக அழித்து அந்த முனிவர் பதிமூன்றாம் குணஸ்தானத்திற்குச் செல்கிறார். பன்னிரண்டாம் குணஸ்தானத்தில் முழுமையான வீதராகத் தன்மையை

அடைந்த முனிவர், பதிமூன்றாம் குணஸ்தானத்தில் ஷாயிக ஞானத்தை பெறுவதால் சர்வஞ்ஞாராக ஆகிறார், இந்த குணஸ்தானத்தை சயோககேவலி குணஸ்தானம் என்று சொல்கின்றனர். இந்த உயிர்-முனிவர் அனந்த தர்சனம், அனந்த ஞானம், அனந்த சுகம், அனந்த வீரியம் அதாவது அனந்த சதுஷ்டயங்களைப் பெற்று விடுகிறார்.

இதன் பொருள் என்னவென்றால் ஏழாம் குணஸ்தான முனி நிலையில் இருக்கும் உயிர் தன் ஸ்வரூபத்தில் ஆழ்ந்தது, அதற்குப்பிறகு ஸ்ரேணி ஏறி அந்த உயிர் விஷேசமாக-சிறப்பாக ஸ்வரூபத்தில் நிலைத்தலை அதிகப்படுத்தி விதராகத்தன்மையை விருத்தி அடையச்செய்தது. அந்த ஸ்வரூப நிலைத்தலின் மூலம் வீதராகத்தையும் அதன்மூலம் சர்வஞ்ஞத் தன்மையையும்-கேவலக் ஞானத்தையும் அடைகிறது. வீதராத்துவமும், சர்வஞ்ஞத்துவமும் அதன் ஸ்வபாவத்திலேயே இதுவரை வெளிப்படாத நிலையில் இருந்தது, அதுவே இப்போது வெளிப்பட்டது, வேறு வெளியில் எங்கிருந்தும் அது வரவில்லை. அதற்குப்பிறகு அனந்தகாலம் வரை இந்த ஸ்வபாவ பர்யாயமே தொடர்ச்சியாக நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது.

பொருளியல்பின்-வஸ்த்து ஸ்வபாவத்தின் மகிமை மிகவும் ஆழமானது, அதை எந்த அளவு விவரிக்க முடியும்? பொருள் மற்றும் பொருளின் இயல்பு **அனாதிஅனந்த**மாகும்-முதலும்முடிவும் இல்லாததாகும், **சுயம்சித்த**வாகும்-சுயமாகவே நிரூபிக்கப்பட்டதாகும், **பரிபூரண**மாகும்-எந்த குறையுமின்றி முழுமையானதாகும், **அசஹாய-**வேறு எதன் உதவியின் அவசியமும் இல்லாததாகும், **அமரியாதித்-அசீம்**-வரம்பற்றதாகும் அதாவது எல்லையற்றதாகும்.

அரஹந்தர், தன் ஸ்வபாவம்-இயல்பு எப்படியோ அப்படியே அவருடைய பர்யாயத்திலும் வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த ஸ்வபாவம் அவருடைய திரவியத்தில் அனாதி காலமாகவே இருந்த ஒன்றுதான். நீ கூட அப்படிப்பட்ட இயல்புடன் முழுமையானவனாக அனாதி காலமாக இருக்கிறாய். இப்போது, இந்தச் சமயத்தில்கூட நீ அரஹந்தருக்கு சமானமான ஞானஸ்வபாவியாக இயல்புத்தன்மையில் இருக்கிறாய். நீ அந்த உன் முழுமையான ஞானஸ்வபாவத்தின் பக்கம் பார்க்க வேண்டியது ஒன்று மட்டும்தான் இதுவரை நீ செய்யாமல் இருக்கிறாய், அதை செய்வதே இப்போது உன்னிடம் அவசியானதாக இருக்கிறது. அதாவது உன்னுடைய தற்போது வெளிப்படும் ஞானத்தை உன்னுடைய ஸ்வபாவ ஞானத்தின் பக்கம் திருப்பி அதை எதிர்கொண்டு, அறிந்து கொள்வது மட்டுமே நீ செய்ய வேண்டிய அவசிய காரியமாக இருக்கிறது. ஹே உயிரே! எந்தச் சமயத்தில் நீ ஸ்வயம் உன்னை அறிகிறாயோ, அதே சமயத்திலிருந்தே உன்னுடைய மோக்ஷ மார்க்கம் துவங்கி விடும், நீ ஆத்ம ஆனந்த அனுபவத்தை பெறத் துவங்கி விடுவாய், சம்யக்தர்சனம் உன்னிடம் வெளிப்பட்டு விடும், நீ அரஹந்தராகவும்-சித்தராகவும் ஆக வேண்டிய செயல்முறையை (practical work-ஐ) தொடங்கி விடுகிறாய்.

ஹே உயிரே! எத்த மார்க்கத்தை இன்றுவரை கஷ்டம் தருவது-துன்பமானது என்று நம்பிக்கொண்டிந்தாயோ அந்த மார்க்கம் உண்மையில் ஒரு பெரிய ஆனந்த யாத்திரை யாகும். அதில் இடைவிடாது பெருகிக்கொண்டே போகும் ஆனந்தத்துடன் நீ அனந்த சுகத்தின் பக்கம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து கொண்டே போவாய், அதில் முன்னணியில் இருப்பாய். ஒரு முறை நீ உன் சைத்தன்ய குகைக்குள் எட்டித்தான் பாரேன்! அப்படிச் செய்தாயானால் ஆனந்தத்தின்-மகிழ்ச்சியின்-பேரின்பத்தின் மழை உன்மீது பொழியும்.

அரஹந்தர் நிலையில் பதிமூன்றாம் சயோககேவலி மற்றும் பதினானகாம் அயோககேவலி ஆகிய இரண்டு குணஸ்தானங்களும் இருக்கின்றன. இவைகளின் பெயரிலிருந்தே இவை கேவலிகளின் குணஸ்தானங்கள் என்று தெரிந்து கொள்ளலாம். ஞானத்தின் முழு வளர்ச்சி அடைந்த நிலையை கேவலஞானம் அல்லது ஷாயிக ஞானம் என்று சொல்கின்றனர். அவரிடம் ஞானாவரண கர்மத்தின் முழுமையான அழிவு காணப்படுகிறது.

முதல் குணஸ்தானத்திலிருந்து பன்னிரண்டாம் குணஸ்தானம்வரை உள்ள உயிர்களை அல்ப ஞானம் உடையவர்-குறைந்த அறிவு உடையவர்-சத்மஸ்த அறிவு உடையவர் என்று சொல்கின்றனர். சத்ம என்றால் (கர்மத்தால்) மூடப்பட்ட-ஆவரணத்துடன் கூடிய என்று பொருள். யாருக்கு ஞானாவரண கர்மத்தின் இணக்கம் அதாவது ஆவரணம்-மறைப்பு இருக்கிறதோ அவரை சத்மஸ்தர் என்று சொல்கின்றனர்.

பதிமூன்றாம் மற்றும் பதினான்காம் குணஸ்தானத்தின் பெயரில் யோகம் என்ற சொல்லும் இருக்கிறது. சயோக என்றால் யோகத்துடன் என்றும் அயோக என்றால் யோகமில்லாத என்றும் பொருள். சயோக என்ற சொல் இலக்கண நோக்கில் அந்த்த தீபக் அதாவது முதல் குணஸ்தானம் முதல் பதிமூன்றாம் குணஸ்தானத்தின் கடைசிவரை எல்லா உயிர்களும் யோகத்துடன் இருக்கின்றன என்பதாகும். ஆத்மப் பிரதேசத்தில் நடுக்கம்-அதிர்வு-அழுத்தம் இருத்தலை யோகம் என்று சொல்கின்றனர். அதிர்வு-நடுக்கம்-அழுத்தம் நின்று போதலை அயோக என்று சொல்கின்றனர்.

கர்மத்தின் பந்தம்-கட்டு எவ்வாறு நிகழ்கிறது என்பது பற்றி முன்னரே நாம் சர்ச்சை செய்திருக்கிறோம். ஆத்மப் பிரதேசத்தில் அதிர்வு அதாவது யோகத்தின் காரணத்தால் கர்மமும், நோகர்மமும் உயிரின் பக்கம் ஈர்ககப்படுகின்றன. இதன்பொருள் எதுவரை யோகத்தின் அதிர்வு இருக்கிறதோ அதுவரை கர்ம நோகர்மங்களின் ஏற்பு நிகழ்கிறது. கவளாஹாரம் இல்லாதிருந்தாலும் கூட உயிர் அரஹந்த அவஸ்தையில் லட்சக்கணக்காண-கோடிக்கணக்கான வருடங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறது ஏனென்றால் அங்கு நோகர்ம வர்கணைகளை ஏற்றல் கால இடைவெளி இன்றி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

அரஹந்தர்களின் உடல் பரம ஒளதாரிக உடலாகும். உயிர் எப்போது பன்னிரண்டாம் குணஸ்தானத்தில் பிரவேசிக்கிறதோ அந்த சமயத்திலிருந்து பன்னிரண்டாம் குணஸ்தானத்தின் அந்தர்முகூர்த்த காலம்வரை அவருடைய உடலின் ஆதாரத்தில் வாழும் பாதர நிகோத உயிர்கள் வெளியேறி விடுகின்றன. பதிமூன்றாம் குணஸ்தானத்தின் முதல் சமயத்தில் ஒளதாரிக உடல் நிகோத உயிர்கள் அற்ற பரமஒளதாரிக உடலாக ஆகிவிடுகிறது.

தீர்த்தங்கரர்களின்-அரஹந்தர்களின் திவ்யத்தொனி வெளிப்பட்டு பவ்விய உயிர்களுக்கு மோகூ மார்க்கத்தின் உபதேசம் கிடைக்கிறது. அரஹந்தர்கள் இடம்விட்டு இடம்கூட செல்கின்றனர் ஆனால் அவர்கள் ஆஹாரம்-உணவு ஏற்பதில்லை என்பதைப்பற்றி நாம் முன்னரே சர்ச்சை செய்து விட்டோம். அரஹந்த நிலையில் எந்த உபசர்கமும் இருப்பதில்லை, முன்னர் முனி நிலையில் உபசர்கம் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் அதுவும் அரஹந்தரானவுடன் இல்லாமல் போய்விடுகிறது.

கேவலஞானம் அடையும்போதே பதிமூன்றாம் குணஸ்தானம் தொடங்கி விடுகிறது. அவருடைய ஆயுளின் கடைசி ஒரு அந்தர்முகூர்த்த காலம் மீதம் இருக்கும்வரை

பதிமூன்றாம் குணஸ்தானமே இருக்கிறது. ஐந்து மெல்லின உயிர் எழுத்துக்கள் - **அ, இ, உ, ரு, லு** ஆகிய ஐந்து எழுத்துக்களை உச்சரிக்க எவ்வளவு நேரம் தேவைப்படுகிறதோ அவ்வளவு குறைந்த அந்தர்முகூர்த்த காலமே பதினான்காம் குணஸ்தானத்தின் காலமாகும். இந்த குணஸ்தானத்தில் 85 அகாதி கர்ம பிரக்ருதிகளின் சத்துவம் இருக்கிறது. அவைகள் அனைத்தையும் அழித்து உயிர் பூரண வடிவில் கர்மங்கள் அற்ற சித்த பரமேஷ்டியாக ஆகிவிடுகிறது. அவர் இருந்த உடலின் பரமாணுக்கள் கற்பூரம்போல உருகி காற்றில் மறைந்து விடுகின்றன. உயிர் அதே சமயத்தில் மேல்நோக்கிச் சென்று லோகாகாசத்தின் உச்சியை சென்றடைந்து அங்கேயே நிலைகொண்டு விடுகிறது. எல்லா குணங்களின் ஸ்வபாவ பர்யாயங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன, உயிர் அதன் முழுமையான சுத்த நிலையில் இருக்கிறது. இவ்வாறு சித்த பகவான் குணஸ்தானங்கள் இல்லாதவராக இருக்கிறார்.

மகள்களே! நம் ஒவ்வொருவருடைய ஸ்வபாவமும் கூட சித்தருக்கு சமமாகவே இருக்கிறது. இந்த ஸ்வபாவம் என்னவோ நம்மிடம் உள்ளது, அதை நாம் பெற்றிருக்கிறோம். நாம் ஸ்வபாவத்தில் பெற்றிருப்பதை நிகழ்காலத்தில் நம் பர்யாயத்தில் வெளிப்படுத்த வேண்டும். சித்த பகவானின் ஸ்வரூபத்தை அறிந்து கொண்ட பிறகு அவரைப்போலவே-அதாவது அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே நம்முடைய ஸ்வபாவமும் இருக்கிறது என்ற நம்பிக்கையை நாம் கொள்ள வேண்டும். ஆனால் இன்றுவரை நாம் நம்மை சித்தரைவிட அதிக பாக்கியசாலியாக நம்பிக் கொண்டிருக்கிறோம்.

என்ன? உண்மையாக அப்படி உணரவில்லையா? **அரே, ஸ்வயம் நாம் என்னவோ சித்தரைவிட நம்மை தாழ்வாகவே கருதுகிறோம், ஆனால் நீங்கள் அவரைவிட மேலானவர் என்று எண்ணிக் கொண்டிருப்பதாகச் சொல்கிறீர்களே, இது எப்படி சாத்தியமாகும்?** என்று பலர் சொல்லக்கூடும்.

சித்த பகவானின் நிலை(பர்யாயம்) மற்றும் நம்முடைய ஸ்வபாவம்(இயல்பு-குணங்கள்) இரண்டிலும் சமநிலை இருக்கிறது. எதுவரை நாம் நம்முடைய ஸ்வபாவதை அறியவில்லையோ அதுவரை நாம் எதை நம்பிக் கொண்டிருக்கிறோம் என்று இப்போது பார்க்கலாம். சித்தர் தனிமையாக இருக்கிறார், ஆனால் நாம் மனைவி, மக்கள்களுடன் குடும்பமாக இருப்பதாக நம்புகிறோம். சித்தர் உடல் ஏதும் இல்லாமல் இருக்கிறார், ஆனால் நாம் உடலுடன் இருக்கிறோம், அந்த உடலையே நாம் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். சித்தர் ஆசைகள் எதுவுமின்றி இருக்கிறார், ஆனால் நாம் ஆசை உடையவர்களாக-கஷாயங்கள்-விருப்பு, வெறுப்பு, மயக்கம் உடையவர்களாக நம்புகிறோம். சித்தர் கர்மங்களின்றி இருக்கிறார், நாம் கர்மம் மற்றும் அதன் உதயத்துடன் ஒன்றி ஒன்றோடொன்றாக ஆகிவிட்டதாக நம்புகிறோம். [கர்ம உதயத்தால் கிடைத்த பணம், சொத்து சுகங்களில் ஒன்றி விடுகிறோம்.] சித்தர் பிற பொருள்களை செய்வதில்லை, ஆனால் நாம் பிற பொருள்களை செய்பவனாக [பணம், வீடு, வாகனங்களை சம்பாதிப்பவனாக] நம்புகிறோம். சித்தர் பிற திரவியங்களை அனுபவிப்பதில்லை ஆனால் நாம் பிற திறவியங்களை-இந்திரிய சுகங்களை [சொத்து, சுகங்களை] அனுபவிப்பவனாக நம்புகிறோம். சித்தர் கேவலஞானியாக இருக்கிறார், நாம் நம்மிடம் வெளிப்படும் அறிவு எவ்வளவோ அவ்வளவே நம் முழுமையான அறிவு என்று நம்புகிறோம். சித்தர் குணஸ்தானங்கள் அற்றவராக இருக்கிறார், நாம் நம்மை குணஸ்தான வடிவில் [மித்யாதிருஷ்டி, சம்யக்திருஷ்டி, பிரதிமாதாரி, முனி ஆகிய வடிவில்] இருக்கிறோம் என்று நம்புகிறோம்.

உயிர் பர்யாய ஞான அளவு குறைந்த ஞானம் உள்ள நிகோத பிறவிக்கு வந்தாலும், அப்போதும் அதன் ஸ்வபாவம் அதனுடனேயே உள்ளது. ஆனால் எப்போது உயிர் தன் ஸ்வபாவத்தைப் பற்றி அறிந்து, முக்காலமும் ஒரே வடிவில் நிலையாக இருக்கும் ஸ்வபாவத்தில் ஒன்றுவதற்காக எந்த குறிப்பிட்ட நோக்குடன் தன் பக்கம் பார்க்கிறதோ அப்போது, அதன் ஸ்வபாவம் ஒன்று மட்டுமே அதன் பார்வையில் தெரிய வரும், மற்ற எல்லா விஷயங்களும் அதன் பார்வையில் தெரிவதில்லை.

ஆகையால் இந்த விஷயங்கள் எல்லாவற்றையும் பற்றிய முழுமையான அறிவைப் பெற்ற பிறகு நிஜ த்ருவ சுத்தாத்மாவை பார்ப்பதற்கு சமயசார கிரந்தம் 56-வது காதையில் ஆச்சார்ய குந்தகுந்தர் இவ்வாறு சொல்லியிருக்கிறார்-இந்த வண்ணங்களிலிருந்து குணஸ்தானம்வரை எல்லா உணர்வுகளும் வியவஹார நயத்தால் பிறவி உயிர்களுக்கு சொல்லப்பட்ட போதிலும் உண்மையில் அதாவது நிச்சய நயத்தால் அந்த எதிலும் ஒரு உயிர்கூட இல்லை. வர்ணம் முதலான 29 உணர்வுகள் எவை என்பதைப்பற்றிய வர்ணனை காதை 50-லிருந்து 55-வரை சொல்லப் பட்டிருக்கிறது. நீங்கள் இவைகளை சமயசாரத்தை படித்துத் தெரிந்து கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன். ஆனாலும்கூட என்னுடைய பயிற்சிக்காக இங்கு அவைகளை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

உயிருக்கு வர்ணம் இல்லை, மணம் இல்லை, சுவை இல்லை, ஸ்பர்சம்-தொடு உணர்வு கூட இல்லை, வடிவம் இல்லை, உடல் இல்லை, உடலமைப்பு-சம்ஸ்தானம்இல்லை, கச்சிதமாக பொருத்தப்பட்ட உடலமைப்பு-சம்ஹனன் இல்லை, உயிருக்கு விருப்பு-இராக உணர்வு இல்லை, வெறுப்பு-த்வேஷ உணர்வு இல்லை, மயக்க-மோஹ உணர்வு இல்லை, பின்னொட்டு-பிரத்யயம்-ஆஸ்ரவ உணர்வு இல்லை, கர்மம் இல்லை, நோகர்மம் கூட இல்லை, உயிரில் வர்க்கம்-கர்ம பரமாணுக்கள் இல்லை, கர்மாக மாற்றமடையும் வர்க்கனைகள் இல்லை, ஸ்பர்தகங்கள்-பலன் தரும் சக்தி கொண்ட கர்ம அணுக்கள் இல்லை, அத்யாதமஸ்தானம்-ஆன்மீக இடம் இல்லை, அனுபாகஸ்தானம்-அனுபவிக்கும் இடமும் இல்லை, உயிருக்கு யோகஸ்தானம்-உயிர் பிரதேசத்தில் அதிர்வு நிகழும் இடமும் இல்லை, பந்தஸ்தானம்-கர்மப் பிணைப்பு ஆகுமிடமும் இல்லை, உதயஸ்தானம்-கர்ம உதயம் நிகழுமிடமும் இல்லை, மர்க்கணாஸ்தானம்-உயிரில் பல கதிகளுக்கு செல்லும் பாதைகளும் இல்லை, உயிருக்கு ஸ்திதி பந்தஸ்தானம்-கர்மம் நிலைகொண்டிருக்கும் இடமும் இல்லை, சங்க்லேஷ்சஸ்தானமும்-வேதனை அடையும் இடமும் இல்லை, விசுத்திஸ்தானம்-தூய்மை அடையும் இடமும் இல்லை, உயிருக்கு சய்யம லப்திஸ்தானம்-கட்டுப்பாடு அடையும் இடமும் இல்லை, ஜீவஸ்தானமும்-அதாவது குணஸ்தானமும் இல்லை.

இது இல்லை, அது இல்லை என்று சொல்கிறீர்களே, ஆத்மா என்ன சூன்யமாக-பூஜ்யமாக-எதுவுமே இல்லாத ஒரு ஸ்வரூபமா? என்று நீங்கள் கேட்கலாம். ஆச்சார்ய அமிர்தசந்திரர் சமயசார கலச 37-ஆம் காதையில் இவ்வாறு கூறுகிறார்-வர்ணம் முதலான உணர்வுகள் ஆத்மாவிலிருந்து வேறானதாகும் ஆகையால் அந்தர்திருஷ்டி-உள்முகம் கொண்டு பார்ப்பவருக்கு இவைகள் எல்லாம் கொஞ்சம்கூடத் தெரிவதில்லை. சர்வோத்கிருஷ்ட-மிகச்சிறந்த தத்துவமே காணக் கிடைக்கிறது. சைத்தன்ய பாவ ஸ்வரூபம் ஒன்று மட்டுமே, பிரிவில்லாத ஒட்டு மொத்த தூய வடிவ சுத்தாத்ம தன் உருவம்-ஸ்வரூபம் மட்டுமே- திரிகால சுத்தாத்மாவே தெரிகிறது.

நாம்கூட நம்முடைய நிஜ சுத்தாதமாவைப் பார்க்க வேண்டும் என்ற பாவனையுடன்,

- உங்கள் அம்மா.

குணஸ்தானங்களின் பிரிவு, இயக்கம் மற்றும் காலம்

கடிதம்-13 ஓம் நம: சித்தேப்ய: 6-09-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நாம் பொதுப்படையாக 14 குணஸ்தானங்களின் ஸ்வரூபம் பற்றி பார்த்தோம். இப்போது எல்லா குணஸ்தானங்களையும் ஒவ்வொன்றாக வெவ்வேறு நோக்கில் மதிப்பீடு செய்யலாம். 14 குணஸ்தானங்களின் பெயர்களும் இப்போது உங்களுக்கு நினைவில் இருக்குமென்று எண்ணுகிறேன். நினைவில் இல்லையென்றாலும் இப்போது அவைகளை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். அவைகள் பெயர்கள் இவ்வாறு இருக்கின்றன:-

1.மித்யாத்துவம், 2.சாசாதன சம்யக்த்துவம், 3.சம்யக் மித்யாத்துவம், 4.அவிரத சம்யக்த்துவம், 5.தேச விரதம், 6.பிரம்மத்த விரதம், 7.அபிரமத்த விரதம், 8.அபூர்வ கரணம், 9.அநிவ்ருத்தி கரணம், 10.சூக்ஷ்ம சாம்பராயம், 11.உபசந்த மோஹம், 12.ஷீண மோஹம், 13.சயோககேவலி மற்றும் 14.அயோககேவலி. மோஹம் மற்றும் யோகம் ஆகிய இரண்டின் நோக்கில் இந்த 14 குணஸ்தானங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதைப்பற்றி நாம் முன்னரே கீழே கொடுக்கப் பட்டுள்ள நான்கு நோக்குகளில் சர்ச்சை செய்திருக்கிறோம்.

1.தர்சன மோஹனீய கர்மத்தின் உதயம் அல்லது உதயமின்மை நோக்கில் : முதல் நான்கு குணஸ்தானங்களில் முதல் குணஸ்தானத்தில் தர்சன மோஹனீய கர்மத்தின் மித்யாத்துவப் பிரக்ருதியின் உதயம் இருக்கிறது, மூன்றாம் குணஸ்தானத்தில் சம்யக்மித்யாத்வப் பிரக்ருதியின் உதயம் இருக்கிறது மற்றும் நான்காம் குணஸ்தானத்தில் சம்யக்த்துவப் பிரக்ருதியின் உதயம் அல்லது இந்த மூன்று பிரக்ருதிகளின் உபசமமோ-தணிவோ அல்லது ஷயமோ-அழிவோ இருக்கிறது. இரண்டாவது குணஸ்தானத்தில் தர்சன மோஹனீய கர்மத்தின் உதயம், உபசமம், ஷயம் அல்லது ஷயோபசமம் இவைகளில் எந்த நிலையும் இல்லையாகையால் தர்சன மோஹனீயத்தின் நோக்கில் இந்த குணஸ்தானத்தில் பாரிணாமிக பாவம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது ஆனாலும்கூட இந்த குணஸ்தானத்தில் அனந்தானுபந்தியின் உதயம் இருக்கிறது.

2.சாரித்திர மோஹனீய கர்மத்தின் உதயம் அல்லது உதயமின்மை நோக்கில் :-இந்த நோக்கு ஐந்தாம் குணஸ்தானத்திலிருந்து பன்னிரண்டாவது குணஸ்தானங்கள்வரை காணப்படுகிறது. ஐந்தாவது குணஸ்தானத்தில் அனந்தானுபந்தி மற்றும் அப்ரத்யாக்யானவர்ண கஷாயங்களின் உதயம் இல்லாமையும், பிரத்யாக்யானாவரணம், சஞ்சுவலனம் மற்றும் நோகஷாய கர்மங்களின் உதயமும் இருக்கிறது. ஆறாவது குணஸ்தானத்தில் முதல் மூன்று கஷாயங்களின் நான்மையின் உதயமின்மை மற்றும் சஞ்சுவலன கஷாய கர்மங்களின் தீவிர உதயமும் இருக்கிறது. ஏழாவது குணஸ்தானத்தில் சஞ்சுவலன கஷாய கர்மத்தின் மந்த உதயம் இருக்கிறது. எட்டாவது குணஸ்தானத்தில் சஞ்சுவலன கஷாய கர்மத்தின் மந்ததர உதயம் இருக்கிறது. ஒன்பதாவது குணஸ்தானத்தில் சஞ்சுவலன கஷாய கர்மத்தின் மந்ததம உதயம் இருக்கிறது. பத்தாவது குணஸ்தானத்தில் சஞ்சுவலனத்தின் சூட்ஷ்ம லோப கஷாய கர்மத்தின் உதயம் மட்டுமே இருக்கிறது. பதினொன்றாவது குணஸ்தானத்தில் சாரித்திர மோஹானீய கர்மத்தின் 21 பிரக்ருதிகளின் (நான்கு அப்ரத்யாக்யானாவரணம், நான்கு பிரத்யாக்யானாவரணம், நான்கு சஞ்சுவலனம் மற்றும் ஒன்பது நோகஷாயங்கள் ஆகியவைகளின்) உபசமம் இருக்கிறது. பன்னிரண்டாம் குணஸ்தானத்தில் மேலே சொல்லப்பட்ட 21 பிரக்ருதிகளின் ஷயம்-அழிவு

காணப்படுகிறது. [இரண்டாவது குணஸ்தானத்தில் அனந்தானுபந்தி கஷாயத்தின் உதயம் இருக்கிறது.]

3.யோகம் இருப்பதின் நோக்கில்:- ஒன்று முதல் பதிமூன்றாம் குணஸ்தானம்வரை யோகம் இருக்கிறது. பதிமூன்றாம் குணஸ்தானத்தில் [கஷாயம் இல்லாத நிலையில்] யோகத்தின் இணக்கம் முக்கியமானதாக இருக்கிறது.

4.யோகம் இல்லாமையின் முக்கியத்துவ நோக்கில்:- பதினான்காம் குணஸ்தானத்தில் யோகம் இல்லாமை முக்கியமானதாக காணப்படுகிறது. இனி மற்ற நோக்குகள் பற்றிப் பார்க்கலாம்.

5. அவிரத மற்றும் விரத நோக்கில்:- முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காவது குணஸ்தானம் வரையுள்ள நான்கும் அவிரத குணஸ்தானங்களாகும். ஐந்தாவது குணஸ்தானம் விரதாவிரத குணஸ்தானமாகும். ஆறாவது குணஸ்தானத்திலிருந்து மேலுள்ள எல்லா குணஸ்தானங்களிலும் இருக்கும் உயிர்கள் விரதிகளாவர்.

6.அஞ்ஞானி ஞானி நோக்கில்:- முதல் மூன்று குணஸ்தானமும் அஞ்ஞானி உயிர்களினுடையதாகும். நான்கிலிருந்து பதினான்காம் குணஸ்தானங்கள் வரையில் உள்ள உயிர்கள் ஞானிகளுடையதாகும் அதாவது சம்யக்ஞானி களுடையதாகும்.

7.அல்பஞ்ஞர் மற்றும் சர்வஞ்ஞர்கள் நோக்கில்:- ஒன்றிலிருந்து 12-ஆவது குணஸ்தானத்தில் இருப்பவர்கள் அல்பஞ்ஞர்-அல்ப ஞானிகளாவர். 13 மற்றும் 14-ஆம் குணஸ்தானத்தில் இருப்பவர்கள் சர்வஞ்ஞராவர். இந்த இரண்டு குணஸ்தானங்களும் கேவலிகளினுடையதாகும்.

8.ஸ்ராவகர்-இல்லறத்தார் நோக்கில்:- நான்காவது, ஐந்தாவது குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் ஸ்ராவகர்களாவர்.

9.குரு அதாவது முனி நோக்கில்:- 1)பிரமத்த-அப்பிரமத்த குரு ஆறாவது, ஏழாவது குணஸ்தானங்களில் ஊஞ்சல் ஆடுவதுபோல வந்தும் போயும்கொண்டிருக்கும் பாவலிங்கி முனிவர் குரு ஆவார்.

2)ஸ்ரேணியில் சவாரி செய்யும் குரு- 8-ஆவது முதல் 12-ஆவது குணஸ்தானங்களில் உள்ள குருவர்களாவர்.

3)பரமகுரு 13-ஆம், 14-ஆம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் அதாவது அரஹந்த பரமாத்மாக்கள் பரமகுருக்கள் ஆவர்.

10.ஸ்ரேணி நோக்கில்:- 1)உபசம ஸ்ரேணி உயிர்-எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது மற்றும் பதினொன்றாவது குணஸ்தானங்களுக்கு செல்பவர் உபசமஸ்ரேணியில் சவாரி செய்யும் முனிவர் ஆவார். பதினொன்றாம் குணஸ்தானத்திற்கு பிறகு விதிப்படி அத்த முனிவர் வரிசையாக 10-9-8-7-6 என கீழ் குணஸ்தானங்களின் வழியே படிப்படியாகவே இறங்குகிறார் அதாவது பதினொறிலிருந்து ஆறாவது குணஸ்தானத்திற்கு வருகிறார்.

2)ஷபகஸ்ரேணியில் சவாரி செய்யும் முனிவர் 8-9-10-12 குணஸ்தானவர்த்தி முனிவராவார். [ஷபகஸ்ரேணியில் சவாரி செய்பவர் மீண்டும் கீழே வருவதில்லை, விதிப்படி 13-ஆம் குணஸ்தானத்திற்கே செல்கிறார்.]

11.பிரமாதம் மற்றும் பிரமாதமின்மை நோக்கில்:- ஒன்றிலிருந்து ஆறாவது குணஸ்தானம்வரை உள்ள உயிர்கள் பிரமாத உணர்வு - சோம்பல் உணர்வு உள்ளவைகளாகும். ஏழிலிருந்து 14-வரை உள்ள எல்லா குணஸ்தான உயிர்களும் சோம்பலற்ற-பிரமாதமற்ற உணர்வு உள்ளவைகளாகும்.

12.யோகம் மற்றும் யோகமின்மை நோக்கில்:- ஒன்று முதல் 13-வரை யோகத்துடன் உள்ள குணஸ்தானங்கள், 14-ஆம் குணஸ்தான உயிர்கள் மட்டும் யோகமற்றவைகளாகும்.

13.இராகி மற்றும் வீதராகி நோக்கில்:- 1)ஒன்றிலிருந்து மூன்றாவது குணஸ்தானம் வரை இராகம் உள்ள உயிர்கள் மட்டுமே இருக்கின்றன, அவை மோக்ஷமார்கத்திற்கு எதிரிகளாகும். அவைகளிடம் வீதராகத்தன்மை என்பது ஒரு மிகச்சிறிய அளவுகூட இல்லை.

2)நான்கு முதல் 10-வரை வீதராகத்துடன், இராகமும் உள்ள குணஸ்தானங்களாகும். ஆனால் இங்கு கொஞ்சம் கொஞ்சமாக வீதராகத்தன்மை அதிகரித்துக்கொண்டே போகிறது, இராகமும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே போகிறது.

3)11, 12, 13 மற்றும் 14-ஆம் குணஸ்தான உயிர்கள் பூரண வீதராகிகளாவர். 11 மற்றும் 12-ஆம் குணஸ்தானத்தில் உள்ளவர்களை வீதராகி சத்மஸ்தர் என்றும் 13 மற்றும் 14-ஆம் குணஸ்தானத்தில் உள்ளவர்களை வீதராக சர்வஞ்ஞர் என்றும் சொல்கின்றனர்.

14.சுகம் மற்றும் துக்க நோக்கில்:- மித்யாத்துவம், அஞ்ஞானம் மற்றும் விரதமின்மை மூன்றும் துக்கத்திற்கு காரணங்களாகும். ஆகையால் இந்த நோக்கில் பின்வருமாறு பிரிவுகள் அமைகின்றன.

1)ஒன்று முதல் மூன்றாம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் விதிப்படி துக்கத்தையே அனுபவம் செய்கின்றனர்.

2)நான்கு முதல் 10-ஆம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் கொஞ்சம் சுகமும் கொஞ்சம் துக்கமும் அனுபவிக்கின்றனர். எவ்வளவு வீதராகத்தன்மை இருக்கிறதோ அவ்வளவு சுகத்தையும் எவ்வளவு இராகம் இருக்கிறதோ அவ்வளவு துக்கத்தையும் அனுபவம் செய்கின்றனர்.

3)11,12-ஆம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் பூரண வீதராகிகளானதால் சுகத்தையே அனுபவிக்கின்றனர்.

4)13 மற்றும் 14-ஆம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் அனந்த சுகத்தை அனுபவம் செய்கின்றனர் ஏனென்றால் அவர்களுக்கு கேவலஞானமும்-அனந்தஞானமும் மற்றும் அனந்த வீர்யமும் வெளிப்பட்டிருக்கின்றன, சுகமும்கூட அனந்த சுக வடிவில் பரணமிக்கிறது.

15.பஹீராத்மா, அந்தராத்மா, மற்றும் பரமாத்மா நோக்கில்:- 1)ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் குணஸ்தானத்தில் இருப்பவர் பஹீராத்மாக்களாவர்.

2)நான்கிலிருந்து 12-ஆம் குணஸ்தானம்வரை உள்ள உயிர்கள் அந்தராத்மாக்களாவர்.

3)13 மற்றும் 14-ஆம் குணஸ்தானத்திலிருப்பவர் பரமாத்மாக்களாவர்.

16.அசுபோபயோகம், சுபோபயோகம் மற்றும் சுத்தோபயோகம் நோக்கில்:- 1)ஒன்று முதல் மூன்றாம் குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் முக்கியமாக அசுபோபயோகத்தில் இருப்பவர்களாவர்.

2)நான்கு முதல் ஆறாவது குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் முக்கியமாக சுபோபயோகத்தில் இருப்பவர்களாவர். நான்கு மற்றும் ஐந்தாம் குணஸ்தானத்திலிருக்கும்

உயிர்களுக்கு சில நேரங்களில் சுத்தோபயோகமும் நிகழ்கிறது ஆகையால் கௌண வடிவில் அவர்கள் சுத்தோபயோகிகளாவர்.

3)ஏழு முதல் 14-ஆம் குணஸ்தானத்தில் உள்ள உயிர்கள் சுத்தோபயோகத்தில் இருப்பவர்களாவர்.

17.தர்மி அதர்மி நோக்கில்:- 1)ஒன்று முதல் மூன்றாம் குணஸ்தானம் அதர்மிகளுடையதாகும் ஏனென்றால் தர்மம் அதாவது மோக்ஷமார்க்கம் இந்த குணஸதான நிலைகளில் வெளிப்படுவதில்லை.

2)நான்கு முதல் 14-ஆம் குணஸ்தானம் தர்மத்தில் அதாவது மோக்ஷமார்க்கக்கத்தில் உள்ள உயிர்களினுடையதாகும்.

18.மித்யாசாரித்திர மற்றும் சம்யக்சாரித்திர நோக்கில்:- 1)ஒன்று முதல் மூன்றாம் குணஸ்தானத்தில் உள்ள உயிர்கள் மித்யாசாரித்திரம் உடையவர்களாவர்.

2)நான்கு முதல் 14-ஆம் குணஸ்தானத்தில் உள்ள உயிர்கள் சம்யக்சாரித்திரத்தை உடையவர்களாவர். வெளி விரதங்கள் ஏற்ற பிறகுகூட எதுவரை ஆத்மானுபவம் அடையவில்லையோ அதுவரை அந்த உயிர்களுக்கு சம்யக்சாரித்திரம் இருக்க முடியாது என்பது இதிலிருந்து தெரியவருவது.

இதுபோல இன்னும் பல நோக்குகளில் குணஸ்தானங்களை ஆராய முடியும். இவைகளையெல்லாம் பயின்ற பிறகு குணஸ்தானம் மற்றும் மோக்ஷமார்க்கத்தின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறது என்பதை நம்மால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. இந்த எல்லா நோக்குகளும் பிரம்மச்சாரி பண்டிட் ஸ்ரீ யஷ்பால்ஜீ ஜெயின் அவர்களின் **குணஸ்தான விவேச்சன்** என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவைகளாகும். நீங்கள் அந்த புத்தகத்தில் மேலும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ள வர்ணனைகளை படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

இப்போது கமனாகமன்-எந்த குணஸ்தானத்திலிருந்து எந்தெந்த குணஸ்தானங்களுக்கு போகமுடியும் மற்றும் எந்த குணஸ்தானத்திலிருந்து எந்தெந்த குணஸ்தானங்களுக்கு வரமுடியும் அதாவது குணஸ்தானங்களில் நம் ஏற்ற இறக்க இயக்கம் எவ்வாறெல்லாம் இருக்கமுடியும் என்பதைப்பற்றி சுருக்கமாக இப்போது பார்க்கலாம். உயிரின் உணர்வுகள் தொடர்ச்சியாக ஒரேமாதிரியாக இருப்பதில்லை. சம்யக்த்துவத்தை பெற்ற உயிர் தன் உணர்வில் இழிந்து பிறகு மீண்டும் கீழ் குணஸ்தானங்களுக்கு வரமுடியும், அதேபோல மீண்டும் புருஷார்த்தத்தை செய்து மேல் குணஸ்தானங்களுக்கும் போகமுடியும். முதல் குணஸ்தானத்திலிருந்து நேராக நான்காம் குணஸ்தானத்திற்கு செல்லமுடியும். விரதமேற்ற திரவ்யலிங்கி ஸ்ராவகராக இருந்தால் கொஞ்சம் அதிக புருஷார்த்தம் செய்து ஒன்றிலிருந்து நேராக ஐந்தாம் குணஸ்தானத்தை அடையமுடியும். ஒரு திரவ்யலிங்கி முனி மேலும் அதிக புருஷார்த்தம் செய்து முதல் குணஸ்தானத்திலிருந்து நேராக ஏழாவது குணஸ்தானத்திற்குப் போகமுடியும். மூன்று கஷாய நான்மைகளை இல்லாமல் செய்த திரவ்யலிங்கி முனியே ஏழாவது குணஸ்தானத்திற்கு செல்லுவார், யார் இரண்டு கஷாய நான்மைகள் மட்டுமே இல்லாமல் செய்யும் புருஷார்த்தத்தை செய்யமுடிகிறதோ அந்த திரவ்யலிங்கி முனிவர் ஐந்தாம் குணஸ்தானத்திற்கே செல்வார், மற்றும் யார் ஒரு கஷாய நன்மையை இல்லாமல் செய்யும் குறைந்த புருஷார்த்தத்ததை செய்யமுடிகிறதோ அந்த திரவ்யலிங்கி முனிவர் நான்காம் குணஸ்தானத்திற்குச் செல்வார். சாதிமித்யாதிருஷ்டி அதாவது ஒருமுறை சம்யக்துவத்தை அடைந்த பிறகு மித்யாத்துவத்திற்கு வந்தால் அப்படிப்பட்ட உயிர் ஒன்றிலிருந்து மூன்றாம் குணஸ்தானத்திற்கு செல்ல முடியம்.

1. முதல் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காவது, ஐந்தாவது, ஏழாவது குணஸ்தாங்களுக்கும் மற்றும் முன்னரே சம்யக்த்துவத்தை பெற்று பிறகு முதல் குணஸ்தானத்திற்கு-மித்யாத்துவத்திற்கு வந்த உயிராக இருந்தால் நேராக மூன்றாவது குணஸ்தானத்திற்கும் போகமுடியும். இப்போது முதல் குணஸ்தானத்திற்கு எங்கிருந்தெல்லாம் வரமுடியும் என்று பார்க்கலாம்.

வருதல்: ஆறாவது, ஐந்தாவது, நான்காவது, மூன்றாவது மற்றும் இரண்டாவது குணஸ்தானங்களிலிருந்து முதல் குணஸ்தானத்திற்கு வரமுடியும். முதல் குணஸ்தானத்தில் அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டிக்கொள்ள முடியும். இந்த குணஸ்தானத்தில் மரணமடைந்து நான்கு கதியிலும் சென்று பிறக்க முடியும்.





2. இரண்டாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: இரண்டாம் குணஸ்தானத்திலிருந்து முதல் மித்யாத்துவ குணஸ்தானத்திற்கு மட்டுமே போகமுடியும்.

வருதல்: முதன்முறையாக சம்யக்த்துவம்-பிரதமோபம சம்யக்த்துவம் அடைந்தவர்கள் மட்டுமே பிரஷ்டராகி அனந்தானுபந்தி காஷாயத்தின் பிரக்ருதி உதயமானால் ஆறாவது (முதலில் ஏழாவது குணஸ்தானத்திலிருந்து ஆறாவது குணஸ்தானத்திற்கு இழிந்து), ஐந்தாவது, மற்றும் நான்காவது குணஸ்தானங்களிலிருந்து இரண்டாம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.





இது மேலிருந்து கீழேவிழும் குணஸ்தானமாகும் மற்றும் முதன்முறையாக சம்யக்த்துவம் அடைந்த-பிரதமோபச சம்யக்திருஷ்டியும், பிரதமோபச ஸ்ராவக்கும், பிரதமோபச முனியுமே இரண்டம் குணஸ்தானத்திற்கு வரமுடியும். சம்யக்த்துவம் அடையும்முன் அடுத்த பிறவி ஆயுள் கட்டியிருந்தால் நான்கு கதியிலும் சென்று பிறக்க முடியும்.

3. மூன்றாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போ த ல் : மூ ன்றா ம் கு ண ஸ்தா ன த்தி லி ரு ந்து மு த ல் அ ல்ல து நா ன்கா ம் குணஸ்தானங்களுக்குப் போகமுடியும்

வருதல்: ஆறாவது, ஐந்தாவது, நான்காவது மற்றும் முன்னரே சம்யக்துவமடைந்து முதல் குணத்தானத்திற்கு வந்த உயிராக இருந்தால் அங்கிருந்தும் மூன்றாம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.





மூன்றாம் குணஸ்தானத்தில் மரணம் நிகழ்வதில்லை.

4. நான்காம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: நான்காம் குணஸ்தானத்திலிருந்து திரவ்யலிங்கி முனியாக இருந்தால் மேலே ஏழாவது குணஸ்தானத்திற்கும், திரவ்யலிங்கி ஸ்ராவகராக இருந்தால் மேலே ஐந்தாவது குணஸ்தானத்திற்கும், கீழே செல்ல வேண்டுமென்றால் மூன்றாவது குணஸ்தானத்திற்கும், பிரதமோபசம சம்யக்துவமடைந்த உயிராக இருந்து பிரஷ்டராகி அனந்தானுபந்தி கஷாயம் உதயத்திற்கு வருமானால் இரண்டாவது குணஸ்தானத்திற்கும் அல்லது முதல் குணஸ்தானத்திற்கும் போக முடியும்.

வருதல்: ஆறாவது, ஐந்தாவது, மூன்றாவது மற்றும் முதல் குணஸ்தானங்களிலிருந்து நான்காம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.





உபசம ஸ்ரேணில் ஏறிய உயிர்கள் மற்றும் ஐந்து, ஆறு, ஏழாவது குணஸ்தான உயிர்கள் மரணமடைந்த அடுத்த சமயத்தில் நான்காம் குணஸ்தானத்திற்கு வந்து அடுத்த பிறவி எடுக்கச் செல்லுவார்கள். சம்யக்த்துவம் அடையும்முன் அடுத்த பிறவி ஆயுள் கட்டியிருந்தால் நான்கு கதியிலும் சென்று பிறக்க முடியும். சம்யக்த்துவம் அடைந்த பிறகு

அடுத்த பிறவி ஆயுள் கட்டியிருந்தால் சம்யக்துவத்துடன் வைமானிக தேவராகப் பிறப்பர். ஷாயிக சம்யக்திருஷ்டியாக இருந்து மரணமடைந்தால் சம்யக்துவத்தை இழக்காமல் அடுத்த பிறவிக்குச் செல்வர். அப்படிப்பட்ட உயிர் தேவ கதிக்கு சென்றால் வைமானிக தேவராகப் பிறப்பர். மனித, விலங்கு கதிக்கு சென்றால் போகபூமில் சென்று பிறப்பர். நரக கதிக்கு சென்றால் முதல் நரகத்திற்கு மட்டுமே சென்று பிறப்பார்கள்.

5. ஐந்தாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: திரவ்யலிங்கி முனியாக இருந்தால் மேலே ஏழாவது குணஸ்தானத்திற்கு போகிறார். ஐந்திலிருந்து கீழே செல்லும் உயிர் நான்கு, மூன்று, பிரதமோபசம சம்யக்துவமடைந்த ஸ்ராவக உயிராக இருந்து பிரஷ்டராகி அனந்தானுபந்தி கஷாயம் உதயத்திற்கு வருமானால் இரண்டாவது குணஸ்தானத்திற்கும் அல்லது முதல் குணஸ்தானத்திற்கும் போக முடியும்.

வருதல்: ஆறாவது, திரவ்யலிங்கி ஸ்ராவகராக இருந்தால் நான்காவது அல்லது முதல் குணஸ்தானங்களிலிருந்து வரமுடியும்.





6. ஆறாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: ஆறாம் குணஸ்தானத்திலிருந்து மேலே போகவேண்டுமென்றால் ஏழாவதிற்கும் கீழே போக வேண்டுமென்றால் எல்லா குணஸ்தானங்களுக்கும் அதாவது ஐந்து, நான்கு, மூன்று, பிரதோபசம சம்யக்துவமடைந்த முனி பிரஷ்டராகி அனந்தானுபந்தி கஷாயம் உதயத்திற்கு வருமானால் ஏழிலிருந்து ஆறாவது வழியாக இரண்டுக்கும் அல்லது முதல் குணஸ்தானங்களுக்கும் போகமுடியும்.





வருதல்: ஏழாவது குணத்தானத்திலிருந்து மட்டுமே ஆறாவது குணஸ்தானத்திற்கு வரமுடியும்.

7. ஏழாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: ஸ்ரேணியில் ஏறும் பாவலிங்கி முனியாக இருந்தால் அதாவது சாதிஷ்ய பாவலிங்கி முனியாக இருந்தால் எட்டாவது குணஸ்தானத்திற்கும், ஸ்வஸ்தான பாவலிங்கி முனியாக இருந்தால் அதாவது ஆறுக்கும், ஏழுக்கும் ஊஞ்சலில் ஆடுவதுபோல போயும்வந்துகொண்டிருக்கும் முனியாக இருந்தால் ஆறாவது குணஸ்தானத்திற்கும் போகமுடியும். மரணமடைந்தால் அடுத்த சமயம் நான்காம் குணஸ்தானத்திற்கு வந்து அடுத்த பிறவிக்கு செல்வார்.

வருதல்: திரவ்யலிங்கி முனியாக இருந்தால் முதலாவது, நான்காவது ஐந்தாவது குணஸ்தானங்களிலிருந்தும் மற்றும் பாவலிங்கி முனிநிலையில் ஆறாவது குணஸ்தானத்திலிருந்தும் ஏழாவது குணஸ்தானத்திற்கு வரமுடியும். உபசம ஸ்ரேணில் ஏறிய உயிர் இறங்கும்போதும் ஏழாவது குணஸ்தானத்திற்கு வருகிறார்.





8. எட்டாவது குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: ஸ்ரேணி ஏறும் முனியாக இருந்தால் மேலே ஒன்பதாவது குணஸ்தானத்திற்கு போகிறார். உபசம ஸ்ரேணி ஏறி இறங்கும்போது எட்டிலிருந்து ஏழுக்கு போகிறார். மரணமடைந்தால் அடுத்த சமயத்தில் நான்காம் குணஸ்தானத்திற்கு போகிறார். உபசம ஸ்ரேணி ஏறும் உயிர் ஏறும்போது எட்டாம் குணஸ்தானத்தின் முதல் பாகத்தில் மரணமடைவதில்லை.

வருதல்: சாதிசய அப்ரமத்த பவலிங்கி முனிவர் ஏழிலிருந்து எட்டுக்கு வருகிறார். உபசம ஸ்ரேணியில் இறங்கும்போது ஒன்பதிலிருந்து எட்டுக்கு வருகிறார்.





9. ஒன்பதாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: ஒன்பதாம் குணஸ்தானத்திலிருந்து மேலே பத்தாம் குணஸ்தானத்திற்கு போகிறார். உபசம ஸ்ரேணியில் ஏறி இறங்கும்போது ஒன்பதிலிருந்து எட்டாம்

குணஸ்தானத்திற்கு போகிறார். மரணமடைந்தால் அடுத்த சமயத்தில் நான்காம் குணஸ்தானத்திற்கு போகிறார்.

வருதல்: ஸ்ரேணி ஏறும் முனிவர் எட்டாவது குணத்தானத்திலிருந்து ஒன்பதாவது குணஸ்தானதிற்கு வருகிறார். உபசம ஸ்ரேணியில் ஏறி இறங்கும்போது பத்திலிருந்து ஒன்பதாம் குணஸ்தானத்திற்கு வருகிறார்.





10.பத்தாவது குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

ஷபகஸ்ரேணியில் போதல்: ஷபகஸ்ரேணியில் ஏறுபவர் பத்திலிருந்து பன்னிரண்டாம் குணஸ்தானத்திற்கு போகிறார். ஷபகஸ்ரேணியில் ஏறும் முனிவர் மரணம் அடைவதில்லை.

ஷபகஸ்ரேணியில் வருதல்: ஷபகஸ்ரேணியில் ஏறுபவர் ஒன்பதிலிருந்து பத்திற்கு வருகிறார்.

உபசம ஸ்ரேணியில் போதல்: உபசம ஸ்ரேணியில் ஏறுபவர் பத்திலிருந்து பதினொன்றாம் குணஸ்தானத்திற்கு போகிறார் அல்லது ஸ்ரேணியிலிருந்து இறங்கும் போது பத்திலிருந்து ஒன்பதுக்கு போகிறார். மரணமடைந்தால் அடுத்த சமயத்தில் நான்காம் குணஸ்தானத்திற்கு போகிறார்.

உபசம ஸ்ரேணியில் வருதல்: உபசம ஸ்ரேணியில் இருப்பவர் ஒன்பதிலிருந்தும் பதினொன்றிலிருந்தும் பத்தாவது குணஸ்தானத்திற்கு வரமுடியும்.





11. பதினொன்றாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-இது உபசம ஸ்ரேணியின் குணஸ்தானமாகும்.

போதல்: இங்கிருந்து கீழ் குணஸ்தானத்திற்கே போக முடியும் அதாவது பதினொன்றாம் குணஸ்தானத்திலிருந்து முனிவர் பத்தாம் குணஸ்தானத்துக்கு போகிறார்.

மரணமடைந்தால் அடுத்த சமயம் நான்காம் குணஸ்தானத்திற்கு வந்து அடுத்த பிறவிக்கு செல்வார்

வருதல்: பத்தாவது குணஸ்தானத்திலிருந்தே பதினொன்றாம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.



12. **பன்னிரண்டாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-** இது ஷபகஸ்ரேணியின் குணஸ்தானமாகும். இங்கு மரணம் நிகழ்வதில்லை.

போதல்: பன்னிரண்டாம் குணஸ்தானத்திலிருந்து பதிமூன்றாம் குணஸ்தனத்திற்கே போகமுடியும்.

வருதல்: பத்தாம் குணஸ்தானத்திலிருந்தே பன்னிரண்டாம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.



13. பதிமூன்றாம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: பதிமூன்றாம் குணஸ்தானத்திலிருந்து பதிநான்காம் குணஸ்தானத்திற்கே போகமுடியும்.

வருதல்: பன்னிரண்டாம் குணஸ்தானத்திலிருந்தே பதிமூன்றாம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.



14. பதிநான்காம் குணஸ்தானத்திலிருந்து போதல் வருதல்:-

போதல்: பதிநான்காம் குணஸ்தானத்திலிருந்து அரஹந்தபரமேஷ்டி உயிர் குணஸ்தானங்கள் அற்ற சித்தபரமேஷ்டியாக ஆகிறார்.

வருதல்: அரஹந்த பரமேஷ்டி உயிரே பதிமூன்றாம் குணஸ்தானத்திலிருந்தே பதிநான்காம் குணஸ்தானத்திற்கு வரமுடியும்.



குணஸ்தானங்களில் இயக்கம் அதாவது போதல் வருதல் பற்றி பார்த்த பிறகு இப்போது குணஸ்தானத்தின் காலம் பற்றிப் பார்க்கலாம். குறிப்பிட்ட குணஸ்தானத்தில் உயிர் அதிகபட்சம் எவ்வளவு காலம்வரை இருக்க முடியுமோ அந்த காலத்தை குணஸ்தானத்தின் **உத்கிரிஷ்ட காலம்-அதிகபட்ச காலம்** என்று சொல்கின்றனர், மற்றும் குறைந்தபட்சம் எவ்வளவு காலம் இருக்கமுடியுமோ அதை **ஜகன்ய காலம்-குறைந்தபட்ச காலம்** என்று சொல்கின்றனர். இப்போது சாதி, அனாதி என பல இடங்களில் வரும் சொற்களின் பொருள் என்னவென்று பார்க்கலாம்.

அனாதி=அன்+ஆதி - எதற்கு ஆதி-முதல் அதாவது தொடக்கம் இல்லையோ அதை **அனாதி** என்று சொல்கின்றனர்.

அனந்தம்=அன்+அந்தம் - எதற்கு அந்தம்-முடிவு இல்லையோ அதை **அனந்தம்** என்று சொல்கின்றனர்.

சாதி=ச+ஆதி - எதற்கு தொடக்கம் என்பது இருக்கிறதோ அதாவது எப்போதாவது ஒரு சமயத்தில் தொடக்கம் உண்டாகிறதோ அதை **சாதி** என்று சொல்கின்றனர்.

சாந்தம்=ச+அந்தம்-எதற்கு முடிவு என்பது இருக்கிறதோ அதாவது எந்த சமயத்திலாவது முடிவடைகிறதோ அதை **சாந்தம்** என்று சொல்கின்றனர்.

அனாதிஅனந்தம், அனாதிசாந்தம், சாதிஅனந்தம், சாதிசாந்தம் என இவை நான்கு விதமாக இருக்க முடியும்.

1. முதல் மித்யாத்துவ குணஸ்தானத்தின் காலம்:- அபவ்விய உயிர் நோக்கில் இந்த குணஸ்தானத்தின் காலம் அனாதிஅனந்த மாகும். தூரானுதூர பவ்வியனுக்கு சம்யக்துவம் அடையும் தகுதி இருந்தாலும் நித்யநிகோதத்தை விட்டு அந்த உயிர் வெளியே வருவதில்லையாகையால் அந்த உயிர் அனந்த காலத்திற்குப் பிறகும் மோக்ஷமடைவதில்லை; ஆகையால் அவருடைய மித்யாத்துவ காலமும் அனாதிஅனந்தமாகும். எந்த உயிர் சம்யக்த்துவத்தை அடைகிறதோ அதன் மித்யாத்துவ காலம் அனாதிசாந்தமாகும். சாதி மித்யாதிருஷ்டி அதாவது யார் ஒருமுறை

சம்யக்த்துவத்தைப் பெற்று பிறகு திரும்ப மித்யாத்துவத்திற்கு வந்துள்ளாரோ அவருடைய மித்யாத்துவ காலம் சாதிசாந்தமாகும். அவருடைய உத்கிருஷ்ட-அதிகபட்ச காலம் கொஞ்சம் குறைந்த அர்த்த புத்கல பராவர்த்தன காலமாகும். ஜகன்ய-குறைந்தகாலம் ஒரு அந்தர்முகூர்த்தமாகும்.

2.இரண்டாவது சாசாதன குணஸ்தானத்தின் காலம்:- இரண்டாவது சாசாதன குணஸ்தானத்தின் அதிகபட்ச காலம் 6 ஆவளி மற்றும் குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும்.

3.சம்யக்மித்யாத்வ குணஸ்தானத்தின் காலம்:- சம்யக்மித்யாத்துவ குணஸ்தானத்தின் காலம் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்த காலமாகும். இதில் ஜகன்யம், மத்யமம், உத்கிருஷ்டம் என்ற வேறுபாடு இல்லை. **[**இந்த குணஸ்தானத்தில் உயிர் மரணமடைவதில்லை.**]**

4.அவிரத சம்யக்த்துவ குணஸ்தானத்தின் காலம்:- அவிரத சம்யக்த்துவ குணஸ்தானத்தின் அதிகபட்ச காலம் முப்பத்திமூன்று கடற்கால வருடங்களுக்கும் கொஞ்சம் அதிகமாகும். **[**ஷாயிக சம்யக்திருஷ்டியாக இருந்தால் அதிகபட்ச காலம் அறுபத்தியாறு கடற்கால வருடங்களாகும்.**]** குறைந்தபட்ச காலம் ஒரு அந்தர்முகூர்த்தமாகும்.

5.ஐந்தாவது தேசவிரத குணஸ்தானத்தின் காலம்:- அதிகபட்ச காலம் மனித கதியில் ஒரு கோடி பூர்வ வருடங்களிலிருந்து கர்ப காலத்துடன் எட்டு வருடம் மற்றும் ஒரு அந்தர்முகூர்த்தம் கழிக்க மீதம் வரும் காலம் அதிகபட்ச காலமாகும். விலங்கு கதியில் சம்மூர்ச்சன விலங்குகளின் நோக்கில் ஒரு கோடி பூர்வம் வருடங்களிலிருந்து ஒரு அந்தர்முகூர்த்தம் கழிக்க மீதம் வரும் காலம் அதிகபட்ச காலமாகும். இங்கே கொஞ்சம் கவனமாகப் பாருங்கள், மனிதர் பிறந்து எட்டு வருடங்களுக்கு பிறகே ஐந்தாம் குணஸ்தானத்தை அடையும் தகுதி பெறுகிறார், ஆனால் சம்மூர்ச்சன விலங்கு கதி உயிர்கள் பிறந்து ஒரு அந்தர்முகூர்த்தம் கழிந்ததுமே ஐந்தாம் குணஸ்தானத்தை அடையும் தகுதியைப் பெற்றிருக்கின்றன.

6.ஆறாவது பிரமத்த குணஸ்தானத்தின் காலம்:- ஆறாவது பிரமத்த குணஸ்தானத்தின் காலம் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும் அதற்குப்பிறகு விதிப்படி சுத்தோபயோகத்திற்கு ஏழாவது குணஸ்தானத்தை முனிவர் அடைகிறார். அப்படி செல்லவில்லை என்றால் முனி பதவிவை விட்டுவிட்டு கீழ் குணஸ்தானங்களுக்கு போகிறார். இந்த குணஸ்தானத்தின் குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும். அவ்வளவு குறைந்த காலம் எப்படி சாத்தியம்? என்று பார்க்கலாம். ஒரு முனிராஜ் ஏழாவது அப்பிரமத்த குணஸ்தானத்திலிருந்து ஆறாவது குணஸ்தானத்திற்கு வந்து ஒரு சமயம் சென்றதும் மரணமடைந்தால் அவருடைய ஆறாவது குணஸ்தானத்தின் காலம் ஒரு சமயமாகவே இருக்கும். குறைந்த பட்ச காலத்திலிருந்து அதிகபட்ச காலம்வரை எல்லா வேறுபட்ட காலங்களும் மத்யம காலமாகும், அதுவும் அவர் மரணமடையும் நோக்கில் அமைவதாகும்.

7.ஏழாவது அப்பிரமத்த குணஸ்தானத்தின் காலம்:- ஏழாவது அப்பிரமத்த குணஸ்தானத்தின் காலமும் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும். குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும். ஆறாவது குணஸ்தானத்திலிருந்து ஏழாவது குணஸ்தானத்திற்கு செல்லுபவரோ அல்லது உபசமஸ்ரேணியில் எட்டாவது

குணஸ்தானத்திலிருந்து ஏழாவது குணஸ்தானத்திற்கு இறங்கும் முனிவரோ ஒருசமயம் கடந்ததும் மரணமடைந்தால் இந்த குணஸ்தானத்தின் குறைந்தபட்ச காலமும் ஒரு சமயமாகும். முதன் முதலில் சம்யக்த்துவம் அடைந்து நேராக முதல் குணஸ்தானத்திலிருந்து ஏழாம் குணஸ்தானத்தை அடையும் பிரதமோபசம சம்யக்த்துவ உயிர்-அதாவது திரவ்யலிங்கியாக இருந்து நேராக சம்யக்துவத்தை முதன்முதலில் பெறுபவர் அந்த காலத்தில் மரணமடைவதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச காலத்திற்கு இடைப்பட்ட எல்லா காலமும் மத்யம காலமாகும், அவைகளெல்லாம் முனிவரின் மரண நோக்கில் சொல்லப்பட்டதாகும்.

8.எட்டாவது அபூர்வகரண குணஸ்தானத்தின் காலம்:- எட்டாவது அபூர்வகரண குணஸ்தானத்தின் காலமும் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும். ஆனால் குறைந்தபட்ச காலம்கூட ஒரு சமயமாகும். உபசமஸ்ரேணி ஏறும்போது எட்டாவது குணஸ்தானத்தின் முதல் பாகத்தில் [இந்த குணஸ்தானம் ஏழு பாகங்களாக இருக்கிறது.] முனிவரின் மரணம் நிகழ்வதில்லை ஆனால் உபசமஸ்ரேணியில் இறங்கும்போது ஒன்பதிலிருந்து எட்டுக்கு வந்ததும் ஒரு சமயத்தில் மரணம் சம்பவிக்குமானால் எட்டாவது குணஸ்தானத்தின் குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும். இங்குகூட மரணமடையும் நோக்கில் குறைந்தபட்ச காலத்திலிருந்து அதிகபட்ச காலத்தின் இடைப்பட்ட எல்லா காலமும் அனேக இடைப்பட்ட-மத்யம கால வேறுபாடுகள் என அறியவும். ஷபகஸ்ரேணியில் மரணம் இல்லை ஆகையால் ஷபகஸ்ரேணியின் எட்டாம் குணஸ்தானத்தில் குறைந்தபட்ச, இடைப்பட்ட, மற்றும் அதிகபட்ச கால வேறுபாடுகள் இல்லை என்பதை கவனத்தில் கொள்ளவும்.

9.ஒன்பதாவது அனிவிருத்திகரண குணஸ்தானத்தின் காலம்:- ஒன்பதாவது அனிவிருத்திகரண குணஸ்தானத்தின் காலமும் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும். குறைந்தபட்ச காலமும் ஒரு சமயமாகும். உபசமஸ்ரேணியில் ஏறும்போது அல்லது இறங்கும்போது ஒன்பதாவது குணஸ்தானத்திற்கு வந்து ஒருசமயம் ஆனதுமே மரணமடைந்தால் குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும். இந்த குணஸ்தானத்தின் மத்யம காலத்தில் எல்லா வேறுபாடுகளும்கூட மரணமடையும் நோக்கில் தான் அமைகின்றன. ஷபகஸ்ரேணியில் மரணமில்லையாகையால் ஷபகஸ்ரேணியின் ஒன்பதாம் குணஸ்தானத்தில் காலபேதம் இல்லை.

10.பத்தாவது சூட்சமசாம்பராயன் குணஸ்தானத்தின் காலம்:- பத்தாவது சூட்சமசாம்பராய குணஸ்தானத்தின் காலமும் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும். ஆனால் குறைந்தபட்ச காலம்கூட ஒரு சமயமாகும். உபசமஸ்ரேணி ஏறும்போதோ அல்லது இறங்கும்போதோ பத்தாவது குணஸ்தானத்திற்கு வந்து ஒரு சமயத்தில் மரணமடைந்தால் குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும். குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச காலங்களின் இடைப்பட்ட காலம் மரண நோக்கில் அனேக வேறுபாடுகளுடன் இருக்கிறது. ஷபகஸ்ரேணியின் பத்தாவது குணஸ்தானத்தில் மரணமில்லையாகையால் அதில் எந்த காலவேறுபாடுகளும் இல்லை.

11.பதினொன்றாம் உபசாந்தமோஹ குணஸ்தானத்தின் காலம்:- இது உபசமஸ்ரேணியின் குணஸ்தானமாகும். பதினொன்றாம் உபசாந்தமோஹ குணஸ்தானத்தின் காலமும் யதாயோக்ய-பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும். மரண நோக்கில் குறைந்தபட்ச காலம் ஒரு சமயமாகும். இந்த குணஸ்தானத்தின் மத்தியம காலத்தின் எல்லா வேறுபாடுகளும்கூட மரண நோக்கில் அமைந்தவைகளேயாகும்.

12.பன்னிரண்டாவது ஷீணமோக குணஸ்தானத்தின் காலம்:- பன்னிரண்டாவது ஷீணமோக குணஸ்தானத்தின் காலமும் யதாயோக்ய - பொருத்தமான அந்தர்முகூர்த்தமாகும். ஷபகஸ்ரேணியில் மரணம் நிகழ்வதில்லையாகையால் இங்கு கால வேறுபாடுகள் எதுவும் இல்லை.

13.பதிமூன்றாவது சயோககேவலி குணஸ்தானத்தன் காலம்:- பதிமூன்றாம் குணஸ்தானத்தை அடைந்த பிறகு எவ்வளவு ஆயுட்கர்மம் மீதம் இருக்கிறதோ அந்த காலத்தில் பதினான்காம் குணஸ்தான காலத்தை கழித்தபிறகு எவ்வளவு மீதம் வருகிறதோ அதுவே பதிமூன்றாம் குணஸ்தானத்தின் காலமாகும். இந்த குணஸ்தானத்தின் குறைந்தபட்ச காலம் ஒரு அந்தர்முகூர்த்தமாகும். அதிகபட்ச காலம் யாருக்கு இருக்கிறது என்று பார்க்கலாம். கர்ம பூமி மனிதருக்ககே முனிபதவியும், ஸ்ரேணிகளின் குணஸ்தானமும், சித்த பதவியும் கிடைக்கிறது. இந்த பூமியில் மனிதரின் அதிகபட்ச ஆயுள் ஒரு கோடி பூர்வ வருடங்களாகும் (84 லட்சம் X 84 லட்சம் = ஒரு பூர்வம். ஒரு கோடி X ஒரு பூர்வம் = ஒரு பூர்வ கோடி அல்லது ஒரு கோடி பூர்வமாகும்.)

ஒரு கோடி பூர்வம் வருடங்களில் கர்பத்துடன் எட்டு வருடம் மட்டும் எட்டு அந்தர்முகூர்த்தங்கள் கழிக்க மீதம்வரும் காலமே 13-ஆம் குணஸ்தானத்தின் அதிகபட்ச காலமாகும். இதற்கு காரணம் என்னவென்றால் கர்மபூமியில் மனிதர் முனி தீட்ஷை ஏற்க குறைந்த பட்ச வயது கர்பகாலத்துடன் சேர்த்து எட்டு வருடங்கள் அவசியமாகும். முனி தீட்ஷை எடுத்த அடுத்த எட்டு அந்தர்முகூர்த்த காலத்தில் அந்த பாவலிங்கி முனிவர் மோக்ஷம் செல்லக்கூடிய உத்திருஷ்ட புருஷார்த்தத்தை செய்ய முடியும். [மீதமிருக்கும் ஆயுள் கர்மத்தின் அந்தர்முகூர்த்த ஸ்திதியைவிட மற்ற அகாதி கர்மங்களின் ஸ்திதி அதிகமாக இருந்தால் அவைகளை ஆயுள் கர்ம ஸ்திதியுடன் சமன்செய்ய இந்த குணஸ்தானத்தின் கடைசியில் சயோக கேவலி முனிவர் **கேவலி சமுத்காதம்** செய்கிறார். இதனால் நான்கு அகாதி கர்மங்களும் அந்தர்முகூர்த்த ஸ்திதி உள்ள நிலையில் 14-ஆம் குணஸ்தானத்தில் பிரவேசிக்கிறார்.]

14.பதிநான்காம் அயோககேவலி குணஸ்தானத்தின் காலம்:- ஐந்து குறில் எழுத்துக்களான அ, இ, உ, ரு, லு ஆகிக எழுத்துக்களை உச்சரிக்க எவ்வளவு காலம் ஆகிறதோ அந்த அந்தர்முகூர்த்த காலமே பதிநான்காம் அயோககேவலி குணஸ்தானத்தின் காலமாகும், இதற்குக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இந்த குணஸ்தான காலம் இல்லை.

[இப்போது குணஸ்தான நோக்கில் எந்தெந்த பிறவிகளை எடுக்க முடியும், எந்தெந்த பிறவிக்கான அடுத்த பிறவி ஆயுள்களை கட்டிக்கொள்ள முடியும், மற்றும் எந்தெந்த குணஸ்தானங்களில் மரணம் நிகழ முடியும் என்று இப்போது பார்க்கலாம்.

1.முதல் மித்யாத்துவ குணஸ்தானத்தில் நால்வகை உயிர்களும் வாழ்கின்றனர். நரக மித்யாதிருஷ்டி உயிர்கள் கர்பஜ பஞ்சேந்திரிய விலங்கு மற்றும் மனித பிறவிக்கான அடுத்த பிறவி ஆயுளையே கட்டிக் கொள்ள முடியும். ஏழாம் நரக உயிர்கள் மனமுடைய கர்பஜ விலங்கு பிறவிக்கான ஆயுளை மட்டுமே கட்டிக்கொள்ள முடியும், அவர்கள் மனித ஆயுளை கட்டிக்கொள்வதில்லை. நரகர்கள் மரணமடைய ஆறுமாத காலம் இருக்கும்போது தகுதியான எட்டு காலங்களில் அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டிக் கொள்கின்றனர். நரகர்கள் மரணமடைந்து மனமுடைய கர்பஜ விலங்கு அல்லது மனிதராகவே பிறப்பர். ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு மற்றும் மனமில்லாத ஐம்புல

விலங்கு பிறவிகளில் பிறப்பதில்லை. நரகர் இறந்து மீண்டும் அடுத்த பிறவியில் நரகராகவே பிறப்பதில்லை. நரகர் அகால மரணம் அடைவதில்லை.

விலங்கு மற்றும் மனித பிறவியில் உள்ள மித்யாதிருஷ்டி உயிர்கள் நான்கு பிறவிகளில் எந்த பிறவிக்கான ஆயுளையும் கட்டிக் கொள்ள முடியம். கர்ம பூமி மனிதர் மற்றும் விலங்குகள் தங்கள் வயதில் மூன்றில் இரண்டு பாகம் கழிந்த அடுத்த அந்தர்முகூர்த்த காலத்தில் முதல் முறையாக அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டமுடியும். இதுபோலமீதமுள்ள ஆயுளில் 1/3 பாகம் மீதம் இருக்கும் போது ஏழு முறை அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டிக்கொள்ளும் தகுதி பெற்றவர்களாக இருக்கின்றனர். இந்த எட்டு முறைகளில் ஆயுள் கட்டிக்கொள்ளத் தவறினால் மரணமடைய அந்தர்முகூர்த்தம் இருக்கும்போது அவசியம் அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டிக்கொள்கின்றனர். கர்ம பூமி மனிதர் மற்றும் விலங்குகள் அகால மரணம் அடையமுடியும். போகபூமி மனிதர், விலங்குகள் மரணமடைய ஆறுமாதம் இருக்கும்போது அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டிக் கொள்கின்றனர். சில ஆசார்யர்கள் ஒன்பது மாதம் பாக்கி இருக்கும்போது போகபூமி உயிர்களுக்கு அடுத்த பிறவி ஆயுள் கட்டுவதாக கூறியிருக்கின்றனர். இதை உறுதி செய்யும் அறிவு நம்மிடம் இல்லாததால் இரண்டையுமே சரி என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். போகபூமி உயிர்கள் மரணமடைந்து தேவ பிறவிக்கே செல்கின்றனர். போகபூமி உயிர்கள் கூட அகால மரணம் அடைவதில்லை.

தேவர்கள் மனித மற்றும் பஞ்சேந்திரிய விலங்கு அல்லது ஏகேந்திரிய பிறவிக்கான ஆயுளை மட்டுமே அவர்கள் மரணமடைய ஆறு மாத காலம் இருக்கும்போது கட்டிக்கொள்கின்றனர். தேவர்கள் இறந்து நரகம் செல்வதில்லை. தேவ பிறவி உயிர்கள் இறந்து அடுத்த பிறவியில் தேவராகவும் பிறப்பதில்லை. தேவர்களுக்கு அகாலமரணமும் இல்லை.

2.இரண்டாவது சாசாதன குணஸ்தானம் பிரதமோபசம சம்யக்த்துவ காலம் முடிவதற்குள் அனந்தானுபந்தி கஷாயம் உதயமானால், மனிதராக இருந்தால் 7-6, 5, 4-ல் இருந்தும், தேவராக, விலங்காக அல்லது நரகராக இருந்தால் 4-ல் இருந்தும் கீழே விழும் குணஸ்தானமாகும். இந்த குணஸ்தானத்தில் வந்தபிறகு ஆயுள் கட்ட தகுதியான காலமானால் மனித, விலங்கு உயிர்கள் தேவ ஆயுளையும், தேவ, நரக உயிர்கள் மனித ஆயுளையும் கட்ட முடியும். பிரதமோபசம காலத்திற்கு முன்னரே அடுத்த பிறவி ஆயுளை கட்டியிருக்கவும் முடியும். இந்த குணஸ்தானத்தில் வந்து ஒரு சமயத்திற்கு பிறகு மரணமடைந்து, அடுத்த சமயம் முதல் குணஸ்தானத்திற்கு சென்று பிறகு கட்டிக்கொண்ட ஆயுளுக்குத் தகுதியான பிறவியில் அந்த உயிர்கள் சென்று பிறவி எடுப்பர்.

3. மூன்றாம் சம்யக்மித்யாத்துவ-அதாவது மிஸ்ர குணஸ்தானத்தில் அடுத்த பிறவிக்கான ஆயுளை கட்டிக் கொள்வதில்லை. முன்னரே ஆயுள் கட்டியிருந்தாலும் இந்த குணஸ்தானத்தில் மரணம் நிகழ்வதில்லை.

4. நான்காம் அவிரதசம்யக்த்துவ குணஸ்தானத்தில் நரக, விலங்கு, தேவ கதி உயிர்கள் அடுத்த பிறவிக்கான மனித ஆயுளையும், மனித பிறவி உயிர் அடுத்த பிறவிக்கான தேவ ஆயுளையும் கட்டிக் கொள்ள முடியும். சம்யக்த்துவம் அடையும் முன்னர் ஆயுள் கட்டியிருந்தால் முதல் குணஸ்தானத்தில் கூறியபடி தகுதியான ஆயுளை கட்டிக் கொண்டிருப்பார்கள். பிரதமோபசம சம்யக்த்துவ காலத்தில் ஆயுளும் கட்டுவதில்லை, மரணமும் நிகழ்வதில்லை. நான்காம் குணஸ்தானத்தில் உயிர் மரணமடைந்தால் கட்டிக் கொண்ட ஆயுளுக்கு தகுதியான பிறவியில் சென்று பிறப்பர். நான்காம் குணஸ்தான உயிர்

ஷா யி க ச ம்ய க்தி ரு ஷ்டி யா க வு ம் ஆ க மு டி யு ம் , தீ ர்த்த ங்க ர நா ம க ர்ம த்தை யு ம் கட்டிக்கொள்ள முடியும்.

5. ஐந்தாம் தேசவிரத-விரதாவிரத குணஸ்தானம் கர்மபூமி மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கான குணஸ்தானமாகும். இவ்வுயிர்கள் முன்னரே தேவ பிறவி தவிர மற்ற பிறவிக்கான ஆயுளை கட்டியிருந்தால் ஐந்தாம் குணஸ்தானத்தை அடையவே முடியாது. இவ்வயிர்கள் முதன்முறையாக ஆயுள் கட்டிக்கொண்டால் வைமானிக தேவ பிறவிக்கான அடுத்த பிறவி ஆயுளையே கட்டிக் கொள்வர். இவ்வயிர்கள் சமாதி மரணமடைந்து வைமானிக தேவராகப் பிறப்பர்.

6,7 பிரமத்த, அப்பிரமத்த சய்யத குணஸ்தானங்கள் கர்மபூமி பாவலிங்கி திகம்ப முனிராஜரின் குணஸ்தானங்களாகும். முன்னரே தேவ பிறவி தவிர அடுத்த பிறவிக்கான மற்ற ஆயுளை கட்டிக் கொள்ளாதவரே இந்த குணஸ்தானங்களை அடைய முடியும். இந்த குணஸ்தானத்தில் வைமானிக தேவ பிறவி ஆயுளையே கட்டிக் கொள்வர். இவ்வயிர்கள் சமாதி மரணமடைந்து வைமானிக தேவராகப் பிறப்பர்.

8, 9, 10, 11 உபசம ஸ்ரேணியின் குணஸ்தாணங்களாகும். 8-வது அபூர்வகரண குணஸ்தானம் உபசம ஸ்ரேணியின் முதல் குணஸ்தானமாகும். உபசமஸ்ரேணியில் ஏறும் முனிவர் இந்த குணஸ்தானத்தின் முதல் பாகத்தில் ஏறும்போது மரணமடைவதில்லை. மற்ற உபசம ஸ்ரேணி காலத்தில் முனிவர் சமாதி மரணமடைந்து வைமானிக தேவராகவே பிறப்பார். எட்டாவது குணஸ்தானத்திலிருந்து அடுத்த பிறவிக்கான ஆயுள் கட்டுவதில்லை.

8, 9, 10, 12 குணஸ்தானங்களான ஷபகஸ்ரேணி குணஸ்தானங்களில் மரணமும் இல்லை, ஆயுள் கட்டுவதுமில்லை.

13, 14 கேவலிகளின் குணஸ்தனங்களாகும். இந்த குணஸ்தானங்களிலும் ஆயுள் கட்டு இல்லை. 13-ல் மரணம் இல்லை. பதிநான்காம் குணஸ்தான இறுதியில் அயோககேவலி உயிர் பரிநிர்வாணம் அடைந்து குணஸ்தானங்கள் அற்ற சித்தபரமேஷ்டி யாகிறார். இதை பண்டித பண்டித மரணம் என்றும் கூறுவர்.]

இதுவரை நாம் ஒரு உயிர் நோக்கில் குணஸ்தானத்தில் காலம் மற்றும் பிற வேறுபாடுகளையும் பற்றிப் பார்த்தோம். பல உயிர்களின் நோக்கில் இடைவிடாது அதாவது எப்போதும் எந்தெந்த குணஸ்தானங்களில் உயிர்கள் இருக்க முடியும் அல்லது குறிப்பிட்ட குணஸ்தானத்தில் எந்த உயிரும் இல்லை என்ற ஒரு சமயம்கூட இல்லாத நிலை எந்தெந்த குணஸ்தானங்களில் காணப்படுகின்றன என்று பார்க்கலாம்.

முதல், நாலாவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது மற்றும் பதிமூன்றாவது குணஸ்தனாங்களில் ஒரு சமயம் கூட உயிர்கள் இல்லை என்ற நிலை எப்போதும் வருவதில்லை. தர்மத்தை வெளிப்படுத்தும் உயிர்களே இல்லை என்ற காலம் எப்போதும் இல்லை. விதேக ஷேத்திரத்தில் தர்மத்தை ஆராதிப்பவர்கள் எப்போதும் இருக்கின்றனர். வேறு அதாவது பரத ஐராவத ஷேத்திரங்களில் எங்கெங்கு உத்சர்பிணி, அவசர்பிணி என்ற கால வேறுபாடுகள் இருக்கிறதோ அந்த ஷேத்திரங்களில் சில காலங்களில் (நன்நற்காலம், நற்காலம், நற்தீக்காலம் மற்றும் தீதீக்காலம் ஆகிய நான்கு காலங்களில்) தர்மத்தை ஆராதிப்பவர்கள் இருப்பதில்லை. இதனால் பீதி அடைய வேண்டியதில்லை. மித்யாத்துவத்திலிருந்து சம்யக்த்துவத்தை பெறுதல், அதற்குப்பிறகு மோக்ஷத்தை அடைதல் என்ற மோக்ஷமார்கத்தின் ஓட்டம் எப்போதும் நிலைத்திருக்கிறது. இது

ஒருவழிப்பாதையாக, **oneway trafic**-காக இருப்பதால் மோக்ஷமடைந்த பிறகு உயிர் மீண்டும் பிறவிச்சுழற்சியில் அதாவது மூவுலகத்திலும் நான்கு கதிகளிலும் பிறந்து, இறந்து சுற்றிவருதல், குணஸ்தானங்களில் ஏறி இறங்குதல் முதலான எந்த அவஸ்தையையும் பட வேண்டியதில்லை.

எல்லா உயிர்களும் மோக்ஷம் சென்றுவிட்டால் இந்த உலகத்தில் யார் வாழ்வார்கள்? இந்த உலகத்திற்கு எப்படிப்பட்ட அவல நிலை ஏற்படும்? என்று கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. சம்சாரத்தில் இருக்க விரும்புபவர்கள் அதாவது நான்கு கதிகளிலும் பிறந்து புலனின்பதுன்பங்களை அனுபவிப்பதில் ஆர்வம் உள்ள உயிர்கள் கூட எப்போதும் இருக்கிறார்கள். அனந்த காலத்திற்குப் பிறகு கூட மோக்ஷமடைந்த சித்த உயிர்களின் எண்ணிக்கையைவிட பிறவியில் சுற்றும் உயிர்களின் எண்ணிக்கை அனந்த மடங்கு அதிகமாவே இருக்கிறது.

ஆகையால் பிறவி சுழற்சி பற்றிய கவலையை விட்டுவிட்டு , ஸ்வயம் நம் ஸ்வரூபத்தை அறிந்து, அதில் ஆழ்வதின் மூலம் அதாவது நிஜ சுத்தாத்மாவில் ஒன்றி நாம் குணஸ்தாணங்களில் உயர்ந்து இன்னும் சில பிறவிகளிலேயே குணஸ்தானங்களற்ற சித்த நிலையை அடைவோமாக என்ற பாவனையுடன்,

- உங்கள் அம்மா.

ஜீவசமாசம் - உயிர் வகைகள்

கடிதம்-14 ஓம் நம: சித்தேப்ய: 9-09-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

நாம் எல்லா பிறவி உயிர்களையும் சுருக்கமாகவும், பொதுவாகவும் குணஸ்தான நோக்கில் பிரித்து அந்த குணஸ்தானங்களின் இயல்புகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம். பிறவி உயிர்களை குணஸ்தான நோக்கில் தெரிந்து கொள்வது ஒருவகை. ஆனால் பிறவி உயிர்கள் எந்தெந்த மாதிரியான நுட்பமான நிலைகளிலெல்லாம் காணப்படுகின்றன என்பதை சிறப்பாகவும், விரிவாகவும் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அந்த உயிர்களை வேவ்வேறு விதமாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு பிரித்து ஆய்வு செய்வதை **மார்கணை** என்று சொல்கின்றனர். மார்கணை என்றால் ஆய்தல், தேடுதல், குறித்து நோக்குதல் என்று பொருள். இதை **உயிர்களை பகுத்து ஆய்வு செய்யும் முறை** என்றும் சொல்லலாம்.

ஆசாரியர்கள் உயிரை பலவகைகளாகப் பிரிந்து ஆய்வு செய்துள்ளனர். இதை **பிரரூபணை** என்றும் சொல்கின்றனர். பிரரூபணை இருபது வகையாக இருக்கிறது. அவைகளைப் பொதுவாக குணஸ்தானம், மார்கணாஸ்தானம் என இரண்டாகப் பகுப்பர். உண்மையில் பார்க்கப்போனால் மார்கணை பதிநான்காகும் ஆனால் அதில் ஜீவசமாஸம், பர்யாப்த்தி, பிராணன், சஞ்ஞை, உபயோகம் ஆகிய ஐந்தையும் சேர்த்து எல்லாவற்றையும் மார்கணாஸ்தானம் என்று சொல்லும் முறையும் இருக்கிறது.

இப்போது இருபது பிரரூபணைகள் பற்றி நாம் பொதுவாக சர்ச்சை செய்யலாம். இது சம்பந்தமான அறிவு பெறுவதால் உயிர் பற்றிய அனேக குழப்பங்களும், கற்பனைகளும் நம்மை விட்டு விலகிவிடும். இதை மிக விரிவாகப் பார்க்காமல், பொதுவாக அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியவைகளைப் பற்றி மட்டுமே நாம் இப்போது பார்க்கலாம். இவைகளைச் சிறப்பாக தெரிந்து கொள்ள ருசியும், ஆர்வமும் இருந்தால் நல்லதுதான். இவைகளை படித்து தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் சாஸ்திரங்களின் கஜானா என்னவோ நமக்கு இருக்கவே இருக்கிறது.

நாங்கள் இப்போது காலையில் கோமடசாரம் கர்மகாண்டத்தின் ஸ்வாத்யாயத்தை துவங்கி இருக்கிறோம். புத்தகத்தின் ஆரம்பத்தில் முன்னுரை எழுதப்பட்டிருக்கிறது மற்றும் ஜீவகாண்டத்தின் விஷயம் பற்றிய தகவலும்கூட அதிலிருக்கிறது. இந்த முதல்தின ஸ்வாத்யாயத்தின் ஒலிப்பதிவை கேட்டு ரீனா, உனக்கு ஜீவகாண்டம் படிக்க வேண்டும் என்ற ருசி வந்து விட்டதாக நீ கூறினாய். ஜீவகாண்டத்தில் இந்த இருபது பிரரூபணைகள் பற்றிய விரிவான சர்ச்சை செய்யப்பட்டிருக்கிறது.

இருபது பிரரூபணைகளில் முதல் பிரரூபணை குணஸ்தானமாகும். அது சம்பந்தமான தகவலை நாம் முன் சில கடிதங்கள் வாயிலாகத் தெரிந்து கொண்டோம். இப்போது ஜீவசமாசம் பெயர்கொண்ட இரண்டாவது பிரரூபணை சம்பந்தமான சர்ச்சையை செய்யலாம். [உயிர்கள் பலவாகும். அவைகளை பலவகைகளாகப் பிரித்துப் பார்ப்பதின் நோக்கம் தான் என்ன? வெளித் தோற்றத்தில் உயிர்களில் அனேக வேறுபாடுகள் காணப்பட்டாலும், அக நிலையில்-அதாவது உயிர் நிலையில்-அவை தூய்மையாகவும்

ஒன்று போலும் இருக்கும் உயிர்களே என்பதை உறுதி செய்தலே இவ்வகைப் பாடுகளின் நோக்கமும், பயனுமாகும்.]

நம் ஒவ்வொருவருக்கும் இப்போது அஸ்தித்துவம் அதாவது அழியாமல் நிலைத்திருக்கும் தன்மை இருக்கிறது. ஒவ்வொரு உயிருக்கும் **நான் இருக்கிறேன்** என்ற தன் இருப்பு பற்றிய அறிவு மற்றும் நம்பிக்கை தானாகவே இருக்கிறது, இதை எந்த உயிரும் கற்றுக்கொள்ள வேண்டியதாக இல்லை. எதற்கு அஸ்தித்துவம் இருக்கிறதோ அந்த பதார்த்தம்-அந்த திரவியம் முக்காலத்திலும் அஸ்தித்துவமானதாகவே-நிலையானதாகவே இருக்கிறது. அதனுடைய நிலைப்புத்தன்மை எப்போதும் அழிவதில்லை. அஸ்தித்துவம் பற்றி **சமண தத்துவ அறிமுகம்** என்ற நூலில் விரிவாக சர்ச்சை செய்து நாம் தெரிந்து வைத்திருக்கிறோம்.

நான் இன்று இருக்கிறேன். நேற்று கூட இருந்தேன். நிகழ்காலத்தில் நான் மனித பர்யாயத்தில் இருக்கிறேன். அதற்கு முன் நான் வேறு பர்யாயத்தில் இருந்தேன். இவ்வாறு அனந்த காலமாக நம் ஒவ்வொருவருக்கும் நிலைப்புத்தன்மை எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. அனந்தானந்த பவங்களில்-பிறவிகளில் சுற்றிச்சுற்றி நாம் இப்போது இங்கு வந்திருக்கிறோம்.

ஹே உயிரே! என்ன? இவ்வாறு பல பிறவிகளில் இன்றுவரை சுற்றித் திரிந்ததின் மூலம் நீ மனஉளைச்சல் அடையவில்லையா? துயரத்திற்கு ஆளாகவில்லையா? அனாதி காலமாக நீ பிற பொருள்களின் மேல் மோஹம் கொண்டு ஆழ்ந்த மயக்கத்தில் கிடக்கிறாய், தூங்கிக் கொண்டிருக்கிறாய். விழித்துக்கொள்! இப்போது நீ விழுத்துக்கொள்ளும் நேரம் வந்து விட்டது! இன்றுவரை நீ எங்கெங்கெல்லாம் பிறந்து, இறந்து இப்போது இங்கு வந்திருக்கிறாய் என்று கொஞ்சம் உன்னையே நீ கேட்டுப்பார்.

ஹே உயிரே! எதுவரை நீ உனக்கு கிடைத்த உடலிலிருந்து உன்னை வேறு பொருளாக பிரித்தறிந்து, உன்மேல் நம்பிக்கை வைத்து, உன்னைப் பற்றிய அறிவு பெற்று , உன்னில் ஒன்றிப் போகவில்லையோ அதுவரை உனக்கு விதவிதமான உடல்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும். உன்னுடைய சுபாசுப உணர்வுகளின் பலனாக நீ நான்கு கதிகளிலும் அலைந்து திரிந்துகொண்டே இருப்பாய்!

உயிர்கள் அனந்தமாகும். அவைகளில் மிகக்குறைந்த பிறவி உயிர்களையே-உயிரின் பர்யாயங்களை மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். கேவலஞானியை தவிர வேறுயாரும் எல்லா பிறவி உயிர்களையும் அல்லது அவைகளின் எல்லா பர்யாயங்களையும் தெளிவாக அறிந்து கொள்ளமுடியாது. சர்வஞ்ஞபகவான் அவைகளைத் தன் கேவலஞானத்தில் பார்த்துத் தெரிந்துகொண்டு, உயிர்கள் பிறக்கும் எண்பத்திநான்கு லட்சம் யோனிகள் பற்றியும், அவைகளின் பிறவி நோக்கில் பல்வேறு குலங்கள் பற்றியும் வர்ணனை செய்திருக்கிறார். எல்லா பிறவி உயிர்களையும் ஒரு குறிப்பிட்ட பொதுவான தர்மத்தின் கீழ் வகைப்படுத்த முடியும், பிரிக்க முடியும், குழுவாகத் தொகுக்க முடியும்.

எப்படியென்றால், உபயோகம் அதாவது சேதன லட்சணத்தை வைத்துப் பார்க்கும்போது எல்லா உயிர்களும் அதில் உள்ளடங்கிப் போகின்றன ஏனென்றால் இந்த லட்சணம்-அடையாளம் ஒவ்வொரு உயிரிலும் காணப்படுகிறது. பிறவி உயிர்கள் எல்லாம் திரச மற்றும் ஸ்தாவர நோக்கில் அதாவது இடம் பெயர்வன, நிலையாக இருப்பன என இரண்டு நிலைகளில் அதாவது இரண்டு வகைகளாக இருக்க முடியும். இரண்டு பொறிகள் முதல் ஐந்து பொறிகள்வரை பெற்றுள்ள உயிர்கள் திரச உயிர்களாகும். மண்ணுடலி முதலான

ஐந்து விதமான ஒருபொறி மட்டுமே பெற்றுள்ள உயிர்கள் ஸ்தாவர உயிர்களாகும். உயிர்களை ஏகேந்திரியம், விகலேந்திரியம், சகலேந்திரியம் என பிரிக்கும்போது ஜீவசமாசம் மூன்று வகைகளாகின்றன-பிரிவுகளாகின்றன. விகலேந்திரியத்தில் இரண்டு பொறிகள், மூன்று பொறிகள் மற்றும் நான்கு பொறிகள் உடைய உயிர்கள் அடங்கும், அவைகளை விகலேந்திரிய ஜீவன்கள் என்றுகூட சொல்கின்றனர்.

இதுவரை நாம் பிறவி உயிர்களை மூன்று நிலைகளாகப் பார்த்தோம். சாஸ்திரங்களில் வெவ்வேறு நோக்குகளில் உயிர்களை வெவ்வேறு பிரிவுகளாகப் பிரித்து படிப்படியாக ஒவ்வொரு நிலையாக-ஸ்தானமாக பெரிதுபடுத்தி பத்தொன்பது ஸ்தானங்களாகவும் கூறியிருக்கிறார்கள். அவைகளில்கூட மேலும் பல உட்பிரிவுகள் செய்து பல பிரிவுகளாக்கி விளக்கியிருக்கிறார்கள்.

எவ்வாறு நிலைகளின் பிரிவு இருக்கிறதோ அதுபோல யோனி-பிறப்பிடங்களின் பிரிவு, உடல்களின் அளவில் பிரிவு, குலங்களின் பிரிவு என பல நோக்குகளில் ஜீவசமாசத்தைப் பற்றிய வர்ணனை ஆகமங்களில் செய்யப்பட்டிருக்கிறது. இந்த எல்லா விரிவான பிரிவுகளையும் பற்றி ஆராய்ச்சி செய்யாமல் பொதுவாக ஜீவசமாசம் பதிநான்காக சொல்லப்பட்டிருப்பதின் ஸ்வரூபத்தை பற்றி இன்று நாம் இங்கே பார்க்கலாம்.

உயிரோடு ஒன்று கலந்தது போல பிறந்ததிலிருந்து மரணமடையும்வரை உயிருடனிருக்கும் உடல் மற்றும் அந்தப் பிறவியில் அவ்வுயிரின் அறிவு வெளிப்பாடு (அறிவின் ஷாயோபசமம்) இவைகளின் நோக்கில் அதாவது பிறவி உயிர்கள் பெற்றிருக்கும் இந்திரியங்களின்-பொறிகளின் நோக்கில் உயிரினங்கள் பகுக்கப்பட்டிருக்கின்றன. இங்கு திரவ்யேந்திரியம் மற்றும் பாவேந்திரியம் (திறந்திருக்கும் அறிவு) இரண்டும் சேர்ந்த நோக்கிலேயே உயிர்கள் பிரித்துப் பேசப்படுகின்றன. ஒருபொறி முதல் ஐம்பொறிகள் வரை அதாவது ஏகேந்திரியம் முதல் பஞ்சேந்திரியம் வரை பிறவி உயிர்கள் காணப்படுகின்றன. அவைகளில் ஒருபொறி உயிரினத்தில் சூட்சமம் மற்றும் பாதரம் அதாவது நுண்ணுடலி மற்றும் பருவுடலி என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஐம்பொறி உயிரினத்தில் சஞ்சி, அசஞ்சி அதாவது மனமுடையன, மனமில்லாதன என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. இவ்வாறு பொறிகள்-இந்திரியங்கள் நோக்கில் உயிரனங்கள் ஏழு வகைகளாக இருக்கின்றன. இந்த எழு வகைகளையும் பர்யாப்தம், அபர்யாப்தம் அதாவது வளர்ச்சி அடைந்தவை அல்லது வளர்ச்சி அடையாதவை என இரண்டிரண்டாக பிரிக்க உயிரன வகைகளின் மொத்த எண்ணிக்கை பதிநான்காக ஆகிறது.



ஏகேந்திரிய-ஒருபொறி உயிர்களுக்கு ஸ்பர்சனேந்திரியம்-தொடுபுலன் மட்டுமே இருக்கிறது. இவை மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி, வனஸ்பதியுடலி என

ஐந்து விதமாக இருக்கின்றன. உடலை காயம் என்றும் சொல்கின்றனர். மண் எந்த உயிருக்கு உடலோ அதை பிருத்விகாயிக் அதாவது மண்ணுடலி உயிர் என்று சொல்கின்றனர். நீர் எந்த உயிருக்கு உடலோ அதை ஜலகாயிக் அதாவது நீருடலி உயிர் என்று சொல்கின்றனர். இதுபோலவே மற்ற மூன்றையும் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு பெரிய நீர்தேக்கம் ஒரு நீருடலி உயிராக இருக்குமோ, ஒரு பெரிய மலை மண்ணுடலி உயிராக இருக்குமோ, பயங்கரமான காட்டுத்தீ நெருப்புடலி உயிராக இருக்குமோ, தீவிரமான புயல் காற்றுடலி உயிராக இருக்குமோ மற்றும் விசாலமான ஆலமரம் வனஸ்பதியுடலி உயிராக இருக்குமோ என்றெல்லாம் நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவ்வுயிர்கள் அப்படியில்லை. இந்த எல்லா ஒரு பொறி உயிர்களின் அளவு-size மிகவும் சிறியதாக இருக்கிறது. அதாவது ஒரு அங்குலத்தை அசங்க்யாதத்தால் வகுத்தால் வரும் ஒரு பாக அளவு கொண்டாதாக அவைகளின் உடல் அளவு இருக்கிறது. ஆள்காட்டி விரலின் அகலத்தை ஒரு அங்குலம் என்று சொல்கின்றனர்.

ஒரு துளி நீரில் அசங்க்யாத நீருடலி-ஜலகாயிக் உயிர்கள் இருக்கின்றன. நீரில் வேறு மற்ற திரச உயிர்களும் இருக்கின்றன, அவைகளைப்பற்றி இங்கு பேசவில்லை. நாம் பார்க்கும் நெருப்பில் அசங்க்யாத நெருப்புடலி-அக்னிகாயிக் உயிர்கள் இருக்கின்றன. கொஞ்சஅளவு மண்ணில்கூட அசங்க்யாத மண்ணுடலி-பிருத்விகாயிக் உயிர்கள் இருக்கின்றன. மண்ணில் மட்டும் இல்லை, கல், மணல், இரத்தினம், மாணிக்கம், வைரம், சுரங்கத்தில் உள்ள தாது ஆகியவைகள் எல்லாம் மண்ணுடலி உயிர்களேயாகும்.

எந்த மாணிக்கம், வைரம், பொன் முதலியவைகளின்மேல் நமக்கு அதிகமான வசீகரம் இருக்கிறதோ, அவைகளின் ஸ்வரூபம் எப்படிப்பட்டது என்று எப்போதாவது நாம் சிந்தித்திருக்கிறோமா? சுரங்கத்தில் உள்ள நிலக்கரியோ, வைரமோ, மாணிக்கமோ எல்லாம் ஒருபொறி உயிர்கள் தான். சுரங்கத்திலிருந்து அவைகளை வெட்டி வெளியில் எடுத்த பிறகு அவைகளிலிருந்து உயிர்கள் வெளியேறிய பிறகு அங்கே இருப்பது அந்த உயிர்களின் உடல்கள் அதாவது அந்த உயிர்களின் சடலங்கள் தான். ஐந்தறிவுடைய நாம் நம்மை பெரிய புத்திசாலிகள் என்று நம்புகிறோம், ஆனால் நம்முடன் இருக்கும் உடலில்மேல்-இந்த புத்கல ஜடத்தின் மேல், ஒரு பொறி உயிரின் சடலங்களை அதாவது இறந்துபோன ஒரு பொறி உயிரின் பிரேதங்களை விதவிதமாகச் செய்து அணிந்து கொண்டு மிகுந்த கர்வத்துடன் அவைகளை பிறருக்கு காட்டி பெருமைபட்டுக் கொள்கிறோம். பிற அப்பாவி அஞ்ஞானி ஜனங்களும் அவைகளைப் பார்த்து நம்மீது பொறாமை கொள்கின்றனர். இதிலிருந்து நம் புத்தி திவாலாகி விட்டது என்பதையே நாம் வெளிப்படுத்துகிறோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை!

இந்த ஐந்து விதமான ஒரு பொறி உயிர்களையும் ஸ்தாவரகாயிக் அல்லது ஸ்தாவர உயிர்கள் என்று சொல்கின்றனர். இவைகளுக்கு ஸ்தாவர நாமகர்மத்தின் உதயம் இருக்கிறது. இவ்வுயிர்கள் எல்லாம் சூக்ஷமஜீவ் அதாவது நுண்ணுயிர், பாதரஜீவ் அதாவது பருவுயிர் என இரண்டு வகைகளாக இருக்கின்றன. முதலில் ஒருபொறி நுண்ணுயிர்களின் ஸ்வரூபம் எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம். [சூக்ஷம நாமகர்மம், பாதர நாமகர்மம் என இரண்டுவகையான பிரக்ருதிகள் நாமகர்மத்தில் இருக்கின்றன.] சூக்ஷம நாம கர்மத்தின் உதயத்தால் ஒரு பொறியுடன் பிறக்கும் உயிர்களை நுண்ணுயிர்கள் என்று சொல்கின்றனர். இந்த நுண்ணுயிர்கள் வஜ்ஜிரம், நெருப்பு, நீர், மண், மேருமலை முதலியவைகளால் தடைபடுவதில்லை, நெருப்பு முதலியவைகளால் அவ்வுயிர்களை எரிக்க முடியாது, அவைகள் கதலிகாத் மரணம் அதாவது அகால மரணம் அடைவதில்லை. அதன் முழு ஆயுளையும் கழித்த பிறகே அதன் ஆயுள் முழுவதும் வாழ்ந்து முடித்த பிறகே

மரணமடைகின்றன. அந்த உயிர்கள் மற்ற உயிர்களைக் கொல்லுவதில்லை, பிற உயிர்களும் அவைகளைக் கொல்ல முடியாது, அவைகளுக்கு துன்பம் தரவும் முடியாது. அவைகள் வாழ எந்த ஆதாரமும் தேவையில்லை, அவைகளும் எந்தபிற உயிர்களுக்கும் ஆதாரமாகவும் இருப்பதில்லை.

இதன் பொருள் நுண்ணுயிர்களை யாராலும் கொல்லவோ, துன்புறுத்தவோ முடியாது. அவைகள் வெட்டுபட்டு துண்டாவதில்லை, நெருப்பில் விழுந்து எறிந்து போவதில்லை, காற்றில் அடித்துக்கொண்டு போவதில்லை, இவ்வுயிர்களை மலைகளோ, கட்டிடங்களோ, பிற உடல்களோ தடை செய்வதில்லை, அதவாது எந்த கடினமான, உறுதியான பொருளும் இதன் செல்கையை தடைசெய்ய முடியாது. நுண்ணுயிர்கள் வாத வலையங்களையும் சேர்ந்த லோகாகாசத்தின் எல்லா இடங்களிலும் நிரம்பியிருக்கின்றன. லோகாகாசத்தில் சூட்சம நிகோத உயிர்கள், சூட்சம நெருப்புடலி உயிர்கள், சூட்சம மண்ணுடலி உயிர்கள், சூட்சம நீருடலி உயிர்கள், சூட்சம காற்றுடலி உயிர்கள் இல்லாத இடமே இல்லை.

இப்போது பருவுடலி உயிர்களின் சிறப்புகள் பற்றி பார்க்கலாம். பாதர நாமகர்ம உதயத்தால் உயிர்கள் பருஉடலிகளாக பிறவி எடுக்கின்றன. எதனுடைய உடல் பிற புத்கலங்களை தடைசெய்யக்கூடியதாக இருக்கிறதோ அவைகளை பருவுடலி உயிர்கள் என்று சொல்கின்றனர். எந்த உயிர்களின் உடல் புத்கலங்களால் தடைபடுவதில்லையோ அவைகளை நுண்ணுயிர்கள், சூட்சம உயிர்கள் என்று சொல்கின்றனர். நுண்ணுடலி உயிர்கள் போல பருவுடலி உயிர்கள் லோகாகாசத்தில் எல்லா இடங்களிலும் கணப்படுவதில்லை. எட்டு பூமிகள் (7 நரகங்களுக்கும் ஆதாரமாக இருக்கும் ஏழு பூமிகள் மற்றும் சித்தசிலா இருக்கும் எட்டாவது பூமி) மற்றும் மற்ற உயிர்களின் [ஔதாரிக உடல்களின்] ஆதாரத்தில் ஒருபொறி பருவுடலி உயிர்கள் வாழ்கின்றன. சூட்சமஜீவ்-நுண்ணுயிர் என்றால் அந்த உயிரினுடைய உடலின் அளவு (size) நுட்பமாக இருத்தல் என்பதில்லை. சூட்சம உயிர்களின் உடல் சூட்சம்மாக இருக்கிறது அதாவது அதன் உடல் பிற எதற்கும் தடை ஏற்படுத்துவதில்லை, பிற எதுவும் அதை தடைசெய்யவும் முடிவதில்லை என்பதாகும். கடினமான சுவர்களிலும், இரும்பு குண்டுகூட அவைகளை தடை செய்ய முடியாது. எப்படி கண்ணாடியில் ஒளி புகுந்து செல்கிறதோ அதுபோல என் அறிக. (கண்ணாடி மற்றும் ஒளி இரண்டுமே பருமை ஸ்கந்தங்களானாலும் இங்கு உதாரணத்திற்காக சொல்லப்பட்டுள்ளது.) நுண்ணுயிர்கள்-சூட்சமஜீவ் பருவுயிர்கள்-பாதரஜீவ் என்ற இரண்டு பிரிவுகள் ஒருபொறி உயிர்களில் மட்டுமே இருக்கிறது, இரண்டு பொறிமுதல் அனைத்து உயிர்களும் பறுவுடலி உயிர்களே யாகும்.

பரு மண்ணுடலி, பரு நீருடலி முதலிய உயிர்கள் நிலத்தின் ஆதாரத்தில் வாழ்கின்றன. ஆனால் ஐந்துவகை நுண்ணுயிர்களும் முழு உலகத்திலும் வாழ்கின்றன. நம் வீட்டில் 4-5 பேர் மட்டுமே வாழ்கிறோம் என்று நினைக்கிறோம் ஆனால் இங்குகூட ஐந்து விதமான சூட்சம ஒருபொறி உயிர்கள் நிரம்பியே இருக்கின்றன. இந்த காலத்தில் நீங்கள் இவைகளை தெரிந்து வைத்திருக்கிறீர்கள். உங்கள் குழந்தைகளுக்கு காய்சல் வந்தால் உடம்பில் சூடு குறையவில்லை என்றால் உடனே டாக்டரிடம் கூட்டிச் செல்கிறீர்கள். அவர் குழந்தையை சோதித்துப் பார்த்து இது வைரல் காய்சல் என்று சொல்கிறார். வைரஸ் பெயர் கொண்ட பாக்டீரியாவால் உண்டானது என்கிறார். நாம் அதை நம்புகிறோம், பாக்டீரியாகள் நம் வீடுகளில் உள்ளன என்று நம்பிக்கை வைக்கிறோம்.

இக்காலத்தில் சர்வஞ்ஞரை விட வைத்தியர்களின் (doctors) மேல்தான் நமக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது. வைத்தியர்களால் சொல்லப்படும் உணவு முறைகளையும், மருந்துகளையும் மிகுந்த எச்சரிக்கையுடன் எடுத்துக் கொள்கிறோம், இதற்குக் காரணம்

உடலும் நானும் வேறில்லை என்ற ஏகத்துவபுத்தியே யாகும். உடலையே **நான்** என நம்பிய பிறகு உடலுக்கு எவை எல்லாம் பாதகமானதோ அவைகளையெல்லாம் தவிர்க்கிறோம். ஆனால் நான் உயிர் என்று தெரிந்து கொண்ட பிறகு எனக்கு(ஸ்வயம் ஆத்மாவுக்கு) எவையெல்லாம் பாதகமானதோ அவைகளைப் பற்றி கொஞ்சமாவது சிந்திக்கிறோமா இல்லையா என்று உங்களை நீங்களே கேட்டுப் பாருங்களேன்.

கிழங்கு வகை தாவரங்களில் நிகோத உயிர்கள் வாழ்கின்றன என்று சர்வஞ்ஞ பகவான் நேரடியாக அறிந்து கூறியிருக்கிறார். உருளைகிழங்கு, வெங்காயம், பூண்டு முதலியவைகளில் அனந்த நிகோதியா உயிர்கள் வாழ்வதால் இவைகளாலான உணவு வகைகளைத் தயாரிக்கும்போது அனந்த நிகோத உயிர்களுக்கு வன்முறை-இம்சை நிகழ்கிறது. ஆனால் இவைகள **யார் பார்த்தார்கள்?** என்று பலர் கேட்கின்றனர். இதைபற்றி குதர்க்க விவாதமே நிகழ்வதால் **நிகோதம்** என்றால் என்ன? என்ற கேள்விக்கு பதில் என்னவென்று இப்போது பாரக்கலாம்.

வனஸ்பதி உடலை ஏற்றிருக்கும் ஏகேந்திரிய உயிர்களுக்கு பிரத்யோக உடல்-தனிஉடல், சாதாரண உடல்-பொதுஉடல் என வனஸ்பதி உடல்கள் என இரண்டு வகையாக இருக்கின்னறன. ஒரு உடலில் ஒரு உயிர் வாழ்ந்து கொண்டு அந்த உடலின் மூலம் சுக துக்கங்களை நுகர்ந்தால் அதை **பிரத்யேக சரீரி-தனிஉடலி** அல்லது **பிரத்யேக சரீரி ஜீவ்- தனிஉடலி உயிர்** என்று சொல்கின்றனர். எங்கு ஒரு உடலில் அனந்த உயிர்கள் வாழ்கின்றனவோ, அந்த உயிர்களை **சாதாரண சரீரி-பொதுஉடலி** அல்லது **சாதாரண சரீரி ஜீவ்-பொதுஉடலி உயிர்** என்று சொல்கின்றனர். ஒரே உடல் பல உயிர்களுக்கு சாதாரணமாக அதாவது சமானமாக அல்லது பொதுவாக (common-னாக) இருக்கிறது. இந்த பொதுவுடலையே **நிகோத** உடல் என்று சொல்கின்றனர், மற்றும் அந்த உடலில் வாழும் உயிர்களை **நிகோதம்** அல்லது **நிகோதியா உயிர்கள்** என்று சொல்கின்றனர்.

இந்த உயிர்களின் உடல் மட்டுமே பொதுவாக இருக்கிறது என்பதில்லை. அவ்வுயிர்கள் ஒரே சமயத்தில் பிறவி எடுக்கின்றன, ஒரே சமயத்தில் மரணமடைகின்றன, அவைகளின் ஆயுள் சமமாக இருக்கிறது, ஸ்வாசோச்வாசம் சமானமாக நிகழ்கிறது. இவைகளின் பர்யாப்தி சமானமாக இருக்கிறது. குறிப்பிட்ட ஒரே சமயத்தில் ஒன்றாக பிறக்கும் இந்த உயிர்கள் குறிப்பிட்ட ஒரு சமயத்தில் ஒன்றாகவே மரணமடைகின்றன. ஆனால் ஒவ்வொரு சமயமும் வெவ்வேறு குழுவாக உயிர்கள் இடைவிடாது பிறந்துகொண்டே இருக்கின்றன, குழுவாக மரணமும் அடைந்து கொண்டே இருக்கின்றன. இவ்வளவும் நிகழ்ந்து கொண்டிருந்தாலும் அந்த உயிர்களின் குழுக்கள் வாழும் நிகோத உடல் மட்டும் அப்படியே இருக்கிறது. அசங்க்யாத கடற்கால வருடங்கள் அப்படியே இருக்கும் நிகோதியா உடல்களும் கூட இருக்கின்றன.

ஒரு நிகோத உடலில் அனந்த நிகோதியா உயிர்கள் வசிப்பதால் இந்த உடல் பெரியதாக இருக்குமோ என்று நினைக்க வேண்டாம். இதன் உடலளவு(அவஹாகன்-உடல் எடுத்துக்கொள்ளும் இடம்) மிகவும் குறைவாகவே இருக்கிறது. இதைப்பற்றி மேலும் விரிவாகக் கேட்க நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? இந்த விஷயங்கள் எல்லாம் கேவலஞானத்தால் மட்டுமே பார்க்கக் கூடியதாக இருக்கின்றன. இது சாட்சாத் உண்மையாகும். இந்த விஷயங்களில் நம்பிக்கையின்மை சர்வஞ்ஞ பகவானின் மேல் நம்பிக்கையின்மைக்கு சமம். அரஹந்தரும், சித்தரும் சர்வஞ்ஞர்கள். யார் இவர்கள் கூறியதின்மேல் நம்பிக்கை வைக்காமல் அவர்களை வணங்குதல் மற்றும் நமோ அரஹந்தானம், நமோ ஸித்தானம் என்று ஜபம் செய்வதெல்லாம் ஒரு பாசாங்குதான்-வெளிவேஷம்தான்.

ஆம், கேளுங்கள்! ஒரு **ஊசி முனையில்** உருளைகிழங்கு அல்லது வேறு கிழங்கின் எவ்வளவு பாகம் இருக்கமுடியுமோ அதில் அசங்க்யாத கிழங்கின் **ஸ்கந்தங்கள்** இருக்கின்றன, ஒவ்வொரு ஸ்கதத்திலும் அசங்க்யாத நுண்ணிய **கிளைகள்**-minute branches இருக்கின்றன, ஒவ்வொரு கிளையிலும் அசங்க்யாத **ஆவாஸ்**-வாழிடங்கள் இருக்கின்றன, ஒவ்வொரு ஆவாஸிலும் அசங்க்யாத **புலவிகள்** இருக்கின்றன, ஒவ்வொரு புலவியிலும் அசங்க்யாத **நிகோத உடல்கள்** இருக்கின்றன. இதோடு நின்றுவிடவில்லை, **ஒவ்வொரு நிகோத உடலிலும் அனந்த நிகோதிய உயிர்கள் வசிக்கின்றன.** எத்தனை அனந்தங்கள், தெரியுமா?

ஒவ்வொரு ஆறு மாதம் எட்டு மற்றும் சமயத்தில் 608 உயிர்கள் மோக்ஷமடைகின்றன-சித்தர்களாகின்றனர். இந்த கணக்கின்படி அனாதி காலத்திலிருந்து அனந்த காலம்வரை அனந்த உயிர்கள் சித்தர்களாகி இருக்கின்றனர். இதை **சித்தராசி** என்று சொல்கின்றனர். சித்தராசியை போல அனந்தானந்த மடங்கு உயிர்கள் ஒரு நிகோத உடலில் வாழ்கின்றன. இதன்பொருள் என்னவென்றால் ஒரு நிகோத உடலில் எத்தனை உயிர்கள் வாழ்கின்றனவோ அதில் அனந்தத்தில் ஒரு பாக அளவு உயிர்கள்கூட முக்காலத்திலும் சித்தர்களாவதில்லை.

இவைகளில் சூட்சம நிகோதம் உலகம் முழுவதும் நிரம்பி இருக்கின்றன. பாதர நிகோத உடல் பிற தனிஉடலிகளின் ஆதாரத்தில் வாழ்கின்றன. அவைகள் எந்தெந்த உடல்களில் வாழ்கின்றன என்று பார்க்கலாம். பாதர நிகோத உயிர்கள் எந்த தனிஉடலியின் ஆதாரத்தில் வாழ்கின்றனவோ அந்த தனிஉடலியை **பிரதிஷ்டித் தனிஉடலி** என்று சொலகின்றனர். எந்த தனிஉடலியில் பாதர நிகோத உயிர்கள் இல்லையோ அந்த தனிஉடலியை **அபிரதிஷ்டித் தனிஉடலி** என்று சொல்கின்றனர்.

மேலே சொல்லப்பட்ட விஷயங்களை படித்தபிறகு நிகோத உயிருக்கு எத்தனை இந்திரியங்கள்? ஒரு இந்திரியம் தான் என்றால் அவை எல்லா ஏகேந்திரிய உயிர்களிலும் இருக்கின்றனவா? நம்முடைய உடலின் ஆதாரத்தில்கூட அவைகள் வாழ்கின்றனவா? ஆம் என்றால் எப்படிப்பட்ட தனிஉடலி உயிர்களின் உடலில் அவைகள் இருப்பதில்லை? என்ற பல கேள்விகள் உங்கள் மனதில் தோன்றியிருக்கும் என்று எண்ணுகிறேன். இந்த எல்லா கேள்விகளுக்கும் பதில் என்னவென்று பார்க்கலாம்.

நிகோதம் என்றால் பொது-சாதாரண வனஸ்பதி உடலி உயிர்களாகும். **தனி-பித்யேகம் மற்றும் பொது-சாதாரண என்ற பிரிவுகள் ஏகேந்திரிய வனஸ்பதியில் மட்டும்தான் இருக்கின்றன.** வனஸ்பதி உடலிகளைத்தவிர மற்ற ஏகேந்திரியங்கள் அதாவது மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, கற்றுடலி உயிர்கள் எல்லாம் தனிஉடலி உயிர்களேயாகும். அதேபோல இரண்டு புலன்கள் முதல் ஐம்புல உயுர்கள்வரை எல்லா உயிர்களும் தனி உடலி உயிர்களேயாகும்.

எல்லா தனி உடல்களின் ஆதாரத்திலும் பொதுஉடலி அதாவது நிகோதியா உயிர்கள் வாழ்வதில்லை. எதன் ஆதாரத்தில் நிகோத உயிர்கள் இல்லையோ அவைகளை **அப்பிரதிஷ்டித் தனிஉடலி** என்று சொல்கின்றனர். **மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி முதலிய நான்கு வகை ஒருபொறி உயிர்களின் உடல்கள், கேவலியின் உடல், முனிகளின் உடலிலிருந்து உற்பத்தியாகும் ஆஹாரக உடல், தேவர்களின் உடல், நரகர்களின் உடல் முதலான உடல்களில் நிகோதியா உயிர்கள் வாழ்வதில்லை. இவைகளைத் தவிர மற்ற எல்லா உயிர்களின் உடல்களில் பாதர நிகோதியா உயிர்கள்**

வாழ்கின்றன. நிகோதியா உயிர்கள் வாழும் உடல்களாவன:- சப்பிரதிஷ்டித் பிரத்யேக் வனஸ்பதி, இரண்டு பொறி, மூன்று பொறி, நான்கு பொறி, பஞ்சேந்திரிய விலங்கு, மற்றும் மேலேகூறிய உயிர்கள் தவிற மற்ற மனிதரின் உடல்களில் எல்லாம் பாதர நிகோதியா உயிர்கள் வாழ்கின்றன.

இரண்டு புலஉயிர்கள் முதலான திரச உயிர்களின் உடலை மாமிசம் என்கின்றனர், அவைகளில் இடைவிடாது அனந்த உயிர்கள் பிறந்து இறக்கின்றன. இதனால் மாமிச உணவில் அனந்த உயிர்களுக்கு கொலை நிகழ்கிறது. உயிர்களைக் கொல்லும் கொடிய உணர்வும், அதன் மாமிசத்தை புசிக்க தீவிர ஏக்கமும் இல்லாமல் யாரும் மாமிச உணவு உண்பதில்லை. தாவர உணவு உண்பதில் மாமிச உணவு உண்ணும் குற்ற உணர்ச்சி வருவதில்லை. ஆனாலும்கூட எதில் அனந்த உயிர்கள் இருக்கின்றனவோ அந்த தாவரங்களை அனந்தகாயங்கள் என்று சொல்கின்றனர், அவைகளை உண்பதால் அனந்த உயிர்களுக்கு வன்முறை நிகழ்கிறது.

மகள்களே! நாம் எல்லோரும் அனாதி காலமாக அதிக காலம் நிகோத பர்யாயத்திலேயே கழித்திருக்கிறோம். சூட்சம மற்றும் பாதர நிகோதங்களில் பிறந்து இறந்து அசங்க்யாத உத்சர்பிணி, அவசர்பிணி அதாவது அசங்க்யாத கல்பகாலம் நம் வாழ்க்கையை அங்கேயே கழித்திருக்கிறோம். நிகோதத்திலும் மற்றும் பிற ஒருபொறியிலும் பிறந்து இறந்து அசங்க்யாத புத்கல பராவர்த்தன காலம் சென்று விட்டது. இவைகளை எல்லாம் நாம் இப்போது மறந்து விட்டோம்.

ஹே உயிரே! நீ இப்போது கூட எச்சரிக்கை அடையவில்லை என்றால், நீ உன்னை யார் என்று அறியவில்லை என்றால், நீ இதுவரை அனந்த காலங்கள் எங்கு இருந்து விட்டு வந்தாயோ அந்த பர்யாயங்களுக்கே திரும்பச் செல்ல வேண்டியிருக்கும். அந்த நிகோத பர்யாயங்களில் படும் அவஸ்தைகளைப் பார்த்தால் அதில் உயிர் இருப்பதாகக்கூட யாரும் நம்பத் தயாராக இல்லை. ஒருபொறி பிறவியிலிருந்து வெளியேறி இரண்டு பொறி முதலான பிறவிகளில் பிறவி கிடைப்பது அரிதிலும் அரிதாக இருக்கிறது. அதிலும் மனிதப்பிறவி கிடைப்பது அதைவிட மஹாஅரிதாக இருக்கிறது. இங்கு வந்து பிறந்த பிறகு நீங்கள் திரும்பி மீண்டும் கீழ்பிறவிகளுக்குச் செல்லவேண்டாம். பௌதீக விஷயங்களின் கவர்ச்சியில் உங்கள் அறிவின் அறியும் அதிசய சக்தியின் பக்கம் உங்கள் பார்வையை செலுத்தாமல் இருந்து விடாதீர்கள். அதாவது நீங்கள் வெளியில் பார்க்கும் கவர்ச்சிகளில் மூழ்கிவிடாமல் உங்கள் அறிவின் அறியும் தன்மையின் அற்புதமான சாமர்த்தியத்தை பார்க்கத் தவறிவிடாதீர்கள்.

இரண்டு பொறியிலிருந்து ஐம்பொறிவரை பெற்றுள்ள உயிர்கள் திரசகாயிக் அல்லது திரச உயிர்கள் என்று சொல்கின்றனர். இரண்டு பொறி உயிர்களுக்கு தொடுபுலன் மற்றும் சுவைபுலன் ஆகிய இரண்டு பொறிகள் இருக்கின்றன. சங்கு, சோழி, புழு முதலியன இரண்டுபொறி உயிர்களாகும். மூன்றுபொறி உயிர்களுக்கு தொடுபுலன், சுவைபுலன், முகர்புலன் ஆகிய மூன்று பொறிகள் இருக்கின்றன. எறும்பு, அந்துப்பூச்சி முதலியன மூன்றுபொறி உயிர்களாகும். நான்குபொறி உயிர்களுக்கு தொடுபுலன், சுவைபுலன், முகர்புலன், பார்க்கும் புலனாகிய கண் ஆகிய நான்கு பொறிகள் இருக்கின்றன. விட்டில் பூச்சி, தேனீ முதலியன நான்கு பொறி உயிர்களாகும். தேவர், நரகர், மனிதர் மற்றும் ஐம்பொறி விலங்குகள் ஐம்பொறி உயிர்கள். இவைகளுக்கு தொடுபுலன், சுவைபுலன், முகர்புலன், பார்க்கும் புலன் மற்றும் கேட்கும் புலன் ஆகிய ஐந்து புலன்களும் இருக்கின்றன.

ஐம்பொறி உயிர்களில் மனமுடையன, மனமில்லாதன என இரண்டு பிரிவுகள் உள்ளன. [மனமில்லாத விலங்குகளுக்கு காது மனமுடைய விலங்குகளுக்கு தெரிவதுபோல் தெரிவதில்லை. காது இருக்கும் இடத்தில் ஒரு சிறிய துளை மட்டுமே காணப்படும் என்று ஒரு பழைய தமிழ் ஓலைச்சுடியில் பார்த்த்தாக ஒருவர் சொன்னதாக 105 உபசம்மதி மாதாஜி சில வருடங்களுக்கு முன் அவர்களை தரிசனம் செய்யச் சென்றபோது என்னிடம் தெரிவித்தார்கள். அந்த ஓலைச்சுவடி தமிழ்நாட்டில் இப்போதும் யாரிடமோ இருக்க வேண்டும் என்றும் அதைக் கண்டுபிடித்தால் மேலும் பல உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம், முயற்சி செய்யுங்கள் என்று என்னிடம் கூறினார்கள். இதை படிப்பவர்களும் என்னுடன் சேர்ந்து அந்த ஓலைச்சுவடியை கண்டுபிடிக்க முயலவேண்டும் என்ற நோக்கில் இதை இங்கு குறிப்பிடுகிறேன்.] இது போன்ற இரண்டு பிரிவுகள் விலங்குகதி உயிர்களில் மட்டுமே காணப்படுகின்றன. தேவர், நரகர், மனிதர் எல்லாம் மனமுடைய ஐம்பொறி உயிர்களே யாவர்.

மனமுடைய உயிர்கள் அவைகளின் பெயரைச் சொல்லி கூப்பிடும்போது தன்னைத்தான் கூப்பிடுகிறார்கள் என்று புரிந்து கொள்கின்றன. உபதேசங்களை ஏற்றுக்கொள்கின்றன, கேட்பவைகளை நினைவு வைத்துக்கொள்கின்றன, அவைகளை ஆலோசனை செய்யக் கூடியதாகக்கூட இருக்கின்றன. இந்த எல்லா செயல்களையும் மனதின் நிமித்தத்தால் செய்கின்றன. சர்க்கஸில் விலங்குகளுக்கு சில விஷயங்களை பழக்கப்படுத்தி பலரும் காணும்படி செய்யவைப்பதைப் பார்க்கிறோமல்லவா அவைகள் எல்லாம் மனமுடைய விலங்குகளே யாகும்.

இவ்வாறு ஒருபொறியில் நுண்மை பருமை, இரண்டுபொறி, மூன்றுபொறி, நான்குபொறி, ஐம்பொறியில் மனமுடையன, மனமில்லாதன என ஏழுவகை உயிர்களை பர்யாப்தி மற்றும் அப்பர்யாப்தி என பிரிப்பதால் ஜீவசமாசம் பதிநான்காக ஆகின்றன. பர்யாப்தி சம்பந்தமாக அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். சாஸ்திரப்பயிற்சி செய்வதை ஊக்குவிக்க பண்டிட் தோடர்மல்ஜீ சம்யக்ஞானசந்திரிகாவின் முன்னுரையில் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

ஒருபொறி உயிர்கள் முதல் மனமில்லாத ஐம்பொறிகள்வரை உள்ள எல்லா உயிர்களும் மனமில்லாத உயிர்களேயாகும். நரக பிறவி உயிர்கள் வேதனையால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். தேவர்கள் புலனின்ப விஷயவஞ்சையில் ஆழ்ந்து கிடப்பவர்கள், மனிதர்களில்கூட பலர் அனேக வசதிகளும் கிடைத்த பிறகே சாஸ்திரப்பயிற்சி செய்கின்றனர். மனிதப்பிறவி கிடைப்பதே திரவ்ய, ஷேத்ர, கால, பாவ நோக்கில் மாஹா துர்லபமாகும்-மிகவும் அரிதானதாகும்.

திரவ்ய நோக்கில் எல்லாவற்றையும் விட மிகக் குறைந்த எண்ணிக்கை உயிர்களுக்கே மனிதப்பிறவி கிடைக்கிறது. அதாவது மனிதப் பிறவியில் இருக்கும் உயிர்களின் எண்ணிக்கை சங்க்யாதமாகும், மற்ற பிறவி உயிர்களின் எண்ணிக்கை அசங்க்யாதமாகும், நிகோதம் முதலான ஏகேந்திரிய உயிர்களின் எண்ணிக்கை அனந்தமாகும்.

ஷேத்ர நோக்கில் மனிதர்கள் பிறக்குமிடம் சிறிய அளவாகும் அதாவது இரண்டரை தீப அளவாகும். ஏகேந்திரிய உயிர்கள் உலகம் முழுவதும் எல்லா இடங்களிலும் பிறக்க முடியும். தேவர்களும், நரகர்களும் சில ரஜ்ஜு அளவு இடங்களில் பிறக்கின்றனர்.

கால நோக்கில் மனித பர்யாயத்தில் இருக்கக்கூடிய காலம் (தொடர்ந்து மனித பர்யாயமே கிடைக்கக்கூடிய காலம்) குறைந்த காலமாகும். கர்மபூமி நோக்கில் சில

கோடி பூர்வ ஆண்டுகளாகும். ஏகேந்திரிய பர்யாயத்தில் அசங்க்யாத புத்கல பாராவர்த்தன காலமாகும். மற்ற பர்யாயங்களில் சில பல்யங்கள் கொண்ட ஆண்டுகளாகும்.

பாவ நோக்கில் எந்த பரிணாமத்தில் மனித பர்யாயம் கிடைக்கிறதோ அப்படிப்பட்ட அதி தீவிரமோ அல்லது அதி மந்தமோ இல்லாத பரிணாமம் அமைவது மிக அரிதாகும். சாஸ்திர பயிற்சி செய்யக் காரணமான கர்மபூமி பர்யாப்த மனித பர்யாயம் கிடைப்பது மிகமிக அரிதாகும். அதிலும் உத்தம வசதியுடன் வாழும் சூழ்நிலை, நல்ல குலம், பூரண ஆயுள், இந்திரியங்களின் சாமர்த்தியம், நோயற்ற உடல், சுசங்கதி எனப்படும் சாஸ்திர அறிவு பெற்ற அறிஞர்களின் தொடர்பும் சிநேகிதமும் கிடைப்பது, தர்மத்தைப்பற்றி நல்ல எண்ணம் கொண்டிருத்தில் மற்றும் புத்திக்கூர்மை ஆகியவைகளைப் பெருதல் மேலும் மேலும் அதி அபூர்வமாகும், கிடைப்பதற்கு மிகமிக அரிதிலும் அரிதாகும்.

மகள்களே! இந்த அரிதிலும் அரிதான மஹாதுர்லபமான அதாவது உயர்ந்தநிலை மனித பர்யாயம் நமக்கு இப்போது கிடைத்திருக்கின்றன. ஆகையால் நாம் இப்போது இவைகளைப்பெற எதுவும் செய்ய வேண்டியதாக இல்லை. கிடைத்திருக்கும் இந்த மனிதப் பிறவியின் மிக அரிய சந்தர்பத்தை கருத்தில் கொண்டு அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது நம் கையில்தான் இருக்கிறது. நாம் தகுதியான வழியில் தான் இப்போது இருக்கிறோம், அதில் மேலும் முன்னேற்றம் அடைய அதிக புருஷார்த்தம் அதாவது நல்முயற்சி செய்வோமாக!

- உங்கள் அம்மா.

பர்யாப்தி பிரரூபணை

கடிதம்-15 ஓம் நம: சித்தேப்ய: 11-09-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

ஜீவசமாசம் பற்றிய வர்ணனை மற்றும் அதன் பிரிவு உட்பிரிவுகளைப் பற்றியும், அதில் உயிர்களின் அனந்த அளவிலான எண்ணிக்கைகள் பற்றியும், அந்த நுட்பமான விஷயங்களை தெளிவாகத் தெரிந்து எடுத்துச் சொல்லக்கூடிய கேவலஞானத்தின் அனந்த சக்தி பற்றியும் தெரிந்து கொண்ட பிறகு அவைகளைப்பற்றி நீங்கள் கொஞ்சம் யூகித்திருப்பீர்கள். ஜீவசமாசத்தை தெரிந்து கொள்வதால் நமக்கு என்ன லாபம் என்று கேட்கிறீரகளா? அப்படியானால் கேளுங்கள்!

அனந்த உயிர்கள் எந்தெந்த பிறவிகளில் வாழ்கின்றன என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். நாமும் இன்றுவரை எங்கெங்கெல்லால் பிறவி எடுத்து, இறந்து இப்போது இந்த மனிதப்பிறவிக்கு வந்திருக்கிறோம் என்பதைப் பற்றிய அறிவு பெறுகிறோம். இடைவிடாது சுற்றிக்கொண்டிருக்கும் இந்த பிறவிச் சுழற்சியின் கவலையும், பயமும் நமக்கு உண்டாகிறது. அதனால் இந்த பயங்கரமான பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபடும் மார்க்கம் ஏதாவது உள்ளதா? யாராவது பிறவா நிலை அடைய வழிகாட்டி இருக்கிறார்களா? என்பதைப் பற்றிய சிந்தனையில் நாம் ஈடுபடுகிறோம். சம்சாரத்தின்-பிறவிச் சுழற்சியின் இந்த பயத்தையே **சம்வேகம்** என்று சொல்கிற்றனர். [சம்வேகம் என்பதை நற்காட்சி உடையவரின் நான்கு அடையாளங்களில் ஒரு ஆடையாளமாக ஆகமங்கள் கூறுகின்றன.]

நமக்கு கிடைத்திருக்கும் இந்த மிகமிக அரிதான மனிதப் பிறவியின் கவனம் வந்ததும், நாம் நம்முடைய வாழ்நாட்களை எந்தப் பயனுமின்றி கழிக்கும் உணர்வு நமக்கு வருகிறது. அதானல் அதி சீக்கிரமாக நம்மை நாமே [முக்காலத்திலும் தூய்மையாகவே இருந்தாலும் இதுவரை அந்த தூய்மையை பர்யாயத்தில் வெளிப்படுத்தாத நிலையில் உள்ள நம் உயிரை] தெரிந்து கொள்ளும் காரியத்தைத் துவக்கி விடுகிறோம் அதாவது நம் தூய உயிரை அடையாளம் காணும் நம் முயற்சி தொடங்கி விடுகிறது.

நமக்கு சமமான சைத்தன்ன குணத்தை உடைய பிற அனந்த உயிர்கள் எங்கெங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பற்றிய அறிவு வந்ததால் நம்மால் அந்த உயிர்களுக்கு தீங்கு நிகழாமல் செயல்பட வேண்டாமா? அதாவது அவைகளுக்கு வலி அல்லது துக்கம் கொடுக்கக்கூடாதல்லவா? அவைகள் நம்மால் மரணமடையக் கூடாதல்லவா? என்பதைப்பற்றி எல்லாம் நாம் கவனத்தில் கொண்டு சிந்தித்து செயல்பட முடியும். எளிதாகவே அப்படிப்பட்ட மிருதுவான உணர்வு நமக்கு வருவது இயற்கையே. நாம் எந்தெந்த பிறவிகளில் எல்லாம் சுற்றிவிட்டு இப்பொது இங்கே வந்திருக்கிறோம் என்றும், நாம் முன்னர் எடுத்த பல பிறவிகளின் தாய், தந்தை, பிள்ளைகள் மற்றும் குடும்பத்திலிருந்து யாராவது எங்கு வேண்டுமானாலும் இப்போது பிறந்திக்கக்கூடும் என்று தெரியவரும்போது நம் கவனக்குறைவால் அல்லது எச்சரிக்கை இன்மையால் அவர்களுக்கு நிகழும் வன்முறையை-இம்சையை நாம் தவிர்க்க முயலுகிறோம். அது சம்பந்தமாக நாம் ஜாக்கிரதையாக இருக்க முயற்சி செய்கிறோம்.

மித்யாதிருஷ்டி நிலையில் தான்தோன்றித்தனமாக எந்த வன்முறைகள் நிகழ்கின்றவோ அவைகளிலிருந்து அந்த மித்யதிருஷ்டி உயிர் விலகுவதில்லை. நான்காவது குணஸ்தானத்தில் இருப்பவர் அவிரதியாக இருந்தாலும்கூட அந்த உயிருக்கு அவரால் நிகழும் வன்முறை பற்றிய வருத்தம் இருக்கவே செய்கிறது. ஐந்தாம் குணஸ்தானத்தில் இருப்பவர் திரச உயிர்களுக்கு வன்முறை நிகழாமல் வாழும் கட்டுப்பாடு-அணுவிரதம் அவரிடம் இருந்தாலும் நிலை உயிர்களுக்கு வன்முறை நிகழ்வதிலிருந்து அவர் விலகி இருக்க முடிவதில்லை-ஸ்தாவர வன்முறை நிகழாமல் வாழும் கட்டுப்பாடு அவரிடம் இல்லை. முனிக்கு திரச மற்றும் நிலை உயிர்களுக்கும் அவரால் வன்முறை நிகழாமல் செயல்படும் கட்டுப்பாடு-மஹாவிரதம் அவரிடம் இருக்கிறது. மன, வசன, காயம் மற்றும் செய்தல், செய்வித்தல், உடன்படுதல் இவைகளிலிருந்தும் கூட வன்முறை நிகழ்வோ அல்லது வன்மம் செய்யும் எண்ணமோ அவருக்கு வருவதில்லை.

நமக்கு உயிர்கள் எங்கெங்கெல்லாம் எந்தெந்த பிறவிகளில் வாழ்கின்றன என்பதைப் பற்றிய தகவல் இல்லை யென்றால் நம்மால் அவைகளுக்கு நிகழும் இம்சைகளை-வன்முறைகளை எப்படித் தவிர்க்க முடியும்? மண், நெருப்பு, காற்று, தண்ணீர் மற்றும் வனஸ்பதி இவைகளை உடலாகக் கொண்ட உயிர்கள் இருக்கின்றன என்பதை மிகச்சிலரே அறிந்திருக்கின்றனர். அதைப்பற்றி எடுத்துச்சொன்ன பிறகும்கூட மிகச்சிலரே அவைகள் இருப்பதை நம்புகின்றனர். மரம், செடி, கொடிகள், புல் முதலியவை எல்லாம் நம்மைப்போன்ற உயிர்களே என்பதும் தெரிய வருகிறது. ஆனால் மரத்திலிருந்து உடைந்த கிளைகள், பறிக்கப்பட்ட இலைகள், பூக்கள் மற்றும் பழங்களில் கூட அனேக தாவர உடலி உயிர்கள் வாழ்கின்றன, ஆனால் அவைகள் எல்லாம் சச்சித்த-உயிருள்ள பொருள்கள் என்பது பற்றிய கவனம் நமக்கு இருப்பதில்லை. பிஞ்சான காய், பழம், பூ, துளிர்இலைகள் எல்லாம் சப்பிரதிஷ்டித் தாவர உயிரின வகைகளே என அறிய வேண்டும். ஒரு செடியின் இலையில் நரம்புகள் தெரிந்தால் அந்த இலை அப்ரதிஷ்டித் நிலையை அடைந்து விட்டது எனலாம். காய், பழம் அல்லது பூ இவைகளை உடைத்தால் சமபாகமாக உடையாமல், உடைந்த பகுதி நேர்கோடாக இல்லாமல் கோனல்மானலாக இருந்தால் மற்றும் பிரிந்த பகுதியில் நுண்ணிய நூல் இழைகள் போல் இருந்தால் அவை ஒவ்வொன்றும் ஒரு தாவர தனி உடலி உயிர்களாக அதாவது அப்பிரதிஷ்டித் தனி உடலியாகி விட்டன எனலாம், இதன் பொருள் இப்போது அதில் பாதர நிகோத உயிர்கள் இருப்பதில்லை. ஜீவசமாசம் பற்றிய பயிற்சி இருந்தால்தான் நம்மால் உண்ணத் தகுந்த உணவு வகைகள் பற்றிய விவேகமும், விழிப்புணர்வும் நமக்கு வருமல்லவா!.

சரணானுயோகத்தில் ஒழுக்கத்திற்கு, நடத்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து உபதேசம் கொடுக்கப்படுகிறது. அதில் உண்ணத் தகுந்தவை சம்பந்தமான விதிமுறைகள்-நியமங்கள் சொல்லப்படிருக்கின்றன. உண்ணும் பண்டங்களின் காலத் தகுதிகளும் சொல்லப் பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட காலம் வரையே பதார்த்தங்களும், உணவு வகைகளும் உண்ணத் தகுதி உடையனவாக இருக்கின்றன. அந்த கால எல்லைக்கு அப்பால் அந்த பண்டங்களிலும், பதார்த்தங்களிலும் பாதர சம்மூர்ச்சன உயிர்களின் உற்பத்தி தொடங்கி விடுகிறது. இந்த உற்பத்தி தனக்குத்தானோ அதாவது அவைகளாகவே உற்பத்தியாகின்றன. மருந்துகளில் கூட கால எல்லை (expiry date) கொடுக்கப் படுகின்றன. குறிப்பிட்ட அந்த தேதிக்கு பிறகு அந்த மருந்துகளில் நோயை குணப்படுத்தும் சக்தி குறைந்து போய்விடுகிறது, அதனால் அவைகளை நாம் உபயோகப் படுத்துவதில்லை. சமைத்த உணவு, பால் முதலிய உணவுப் பண்டங்கள் கூட உண்ணத் தகுதியான கால எல்லையைக் கடைபிடிக்க வேண்டியது அவசியமாகும். [மீறினால் அனந்த உயிர்களுக்கு வன்முறை நிகழ்வதையும், நம் ஆரோக்கியம் கெட்டுப் போவதையும் நம்மால் தடுக்க முடியாமல் போகும்.]

சுத்தப்படுத்தப்பட்ட பதார்த்தங்களை காற்றுப் புகாத டப்பாக்களில் அடைத்து வைத்திருந்தாலும் சில தினங்களில் அவைகளில் உயிர்களின் உற்பத்தி உண்டாகிறது ஏனென்றால் அவைகளில் சம்மூர்ச்சன உயிர்கள் உற்பத்தி தொடங்கி விடுகிறது. சம்மூர்ச்சன வகையில் பிறக்கும் உயிர்கள் **சம்** அதாவது சமம்தாத்-ஆசமத்தத்துடன் அதாவது அருகில் உள்ள புத்கலத்திலிருந்தே சில புத்கலங்களை கிரஹித்து தன் உடலை அவைகளே செய்து கொள்கின்றன. இத்தகைய உயிர்கள் பிறவி எடுக்க, அவைகளுக்கு பிறவி கொடுக்க அம்மா, அப்பா தேவையில்லை. ஒரு பொறி உடலி உயிர்களிலிருந்து நான்கு பொறி உடலி உயிர்கள் வரை எல்லா உயிர்களும் சம்மூர்ச்சனப் பிறவி எடுக்கும் உயிர்களேயாகும். ஐம்பொறி உடலி உயிர்களில் மனிதர் மற்றும் விலங்குப் பிறவிகளில் கர்பம் மற்றும் சம்மூர்சனம் ஆகிய இரண்டு விதமாகவும் உயிர்கள் பிறவி எடுக்கின்றன.

நம்மால் பார்க்கப்படும் மனிதர்கள் எல்லாம் கர்பத்தில் பிறந்த மனிதர்களேயாவர். சம்மூர்ச்சன மனிதர் கர்ம பூமி, ஆர்ய கண்டத்தில் உள்ள மகளிர்களின் அக்குள் முதலான இடுக்கான பாகங்களில் உற்பத்தியாகின்றனர். அவர்கள் லப்தி அபர்யாப்தர்கள் ஆனதால் மிகக்குறைந்த காலத்திலேயே மரணமடைகின்றனர். ஒரு சுவாசத்தின் பதினெட்டின் ஒரு பாகத்தின் (1/18) கால அளவில் அவர்களின் பிறப்பும், இறப்பும் நிகழ்ந்து முடிந்து விடுகிறது. ஒரு சுவாசம் என்பதன் பொருள் நோயற்ற ஆரோக்கியமான மனிதரின் இரண்டு நாடித்துடிப்புகளுக்கு (time between two immediate pulses) இடைப்பட்ட வியவகார கால அளவாகும். ஒரு நிமிடத்தில் 78 முறை ஆரோக்கிய மனிதரின் நாடி துடிக்கிறது. பொதுவாக முக்கால்(3/4) செகண்டின் 18-ன் ஒரு பாகத்தில் அதாவது (3/4)X(1/18)=1/24 செகண்டில் இந்த சம்மூர்ச்சன மனிதர்களின் ஒரு மனித பிறவியே முடிந்துவிடுகிறது. நீங்கள் சுலபமாக புரிந்தகொள்ள உலகவழக்கு செகண்டு கணக்கு இங்கு சொல்லப்பட்டது. **[**இந்த கால அளவு ஆகமகங்களில் தகுதியான அந்தர் முகூரத்தம் (யதா யோக்ய அர்தரமுகூர்த்தம்) என்றே சொல்லப்படுகிறது.**]**

எல்லா அபர்யாப்த உயிர்களின் ஆயுளும் இந்த அல்ப கால அளவேயாகும். இந்த பிறவியை-பவத்தை பொதுவாக **சூத்ரபவம்** என்றும் சொல்கின்றனர். ஒரு உயிர் தொடர்ந்து-இடைவிடாது சூத்ர பவத்திலேயே பிறந்து, இறந்து கொண்டிருந்தால் ஒரு பெரிய அந்தர் முகூர்தத காலத்தில் **[**ஒரு சமயம் குறைந்த 48 நிமிடம் ஒரு பெரிய அந்தர்முகூர்ததம். ஒரு சமயம் கூடிய ஒரு ஆவளி சிறிய அந்தர்முகூர்த்தமாகும்.**]** 66,336 பவங்கள்-லப்தி அபர்யாப்த பவங்கள்-எடுத்து விடும். இந்த பவங்களில் ஒரு பொறி பிறவி 66,132, இரண்டு பொறி பிறவி 80, மூன்று பொறி பிறவி 60, நான்கு பொறி 40, மற்றும் ஐம்பொறி பிறவி 24 எல்லாம் அடங்கும். ஐம்பொறி 24 பிறவிகளில் மனமில்லா விலங்கு பிறவி 8, மனமுடைய விலங்கு பிறவி 8 மற்றும் மனித பிறவி 8 அடங்கும். **[**ஒவ்வொரு அரஹந்தகேவலி உயிர் முக்தி அடையும்போது நித்ய நிகோதத்திலிருந்து ஒரு நிகோத உயிர் திரசநாளிக்கு வரும். ஒவ்வொரு 6 மாதம் 8 சமயங்களில் 608 உயிர்கள் முக்தி அடைய அதே அளவு உயிர்கள் நித்ய நிகோதத்திலிருந்து திரசநாளிக்கு வரும். எல்லா சூட்சம, பாதர ஒருபொறி பர்யாப்த்த உயிர்களின் குறைந்த பட்ச ஆயுள் யதா யோக்ய அந்தர் முகூர்த்மாகும். அதிக பட்ச ஆயுள் பாதர நெருப்புடலி உயிருக்கு மூன்று இரவு மூன்று பகல்கள், பாதர வாயுஉடலி உயிருக்கு 3,000 ஆண்டுகள், பாதர நீருடலி உயிருக்கு 7,000 ஆண்டுகள், பாதர வனஸ்பதி உடலி உயிருக்கு 10,000 ஆண்டுகள், பாதர மண்ணுடலி உயிருக்கு 22,000 ஆண்டுகள்.**]**

கரணானுயோகத்தின் இந்த விரிவான மற்றும் நுட்பமான வர்ணனைகளை அறிந்து நாம் வாயடைத்துப் போவோம் அதாவது எதுவும் சொல்ல முடியாதபடி ஆச்சர்யத்தில் ஆழ்ந்து

போவோம். இந்த எல்லா விஷயங்களும் கேவலஞானத்தால் மட்டுமே அறியக்கூடிய மிக நுட்பமான விஷயங்களாகும், கேவலி பகவானின் உபதேசம் மூலமே நாம் இவைகளைப் பற்றி அறிகிறோம். இப்போது பர்யாப்தி, அபர்யாப்தி உயிர்களின் ஸ்வரூபங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள அது சம்பந்தமான விஷயங்களை பார்க்கலாம்.

பர்யாப்தம் என்றால் **செயல் வடிவ சக்தி** என்று பொருள். எந்த உயிர் இந்த செயல் வடிவ சக்தியை முழுமையாக அடைகிறதோ அதை பர்யாப்த உயிர் என்று சொல்கின்றனர். எந்த உயிருக்கு இந்த செயல் வடிவ சக்தி முழுமை அடையாமல் இருக்கிறதோ அதாவது எந்த உயிர் ஒரு பர்யாப்த சக்திகூட முழுமை அடைவதற்குள் மரணமடைந்துவிடுமோ அவைகளை அபர்யாப்த உயிர்கள் என்று சொல்கின்றனர். இந்த நிகழ்வுகளுக்கு பர்யாப்த அல்லது அபர்யாப்த நாமகர்ம உதயம் நிமித்மாக இருக்கிறது. இந்த செயல் வடிவ சக்தி மொத்தம் ஆறாகும். அவைகளாவன:- **1.ஆஹார பர்யாப்தி, 2.சரீர பர்யாப்தி, 3.இந்திரிய பர்யாப்தி, 4.சுவாசோச்வாச பர்யாப்தி, 5.பாஷா பர்யாப்தி, 6.மன பர்யாப்தி.**

இந்த ஆறு பர்யாப்திகளில் ஒருபொறி உயிர்களுக்கு முதல் நான்கு பர்யாப்திகள் மட்டுமே நிகழ்கின்றன. அவைகளுக்கு பாஷாபர்யாப்தி மற்றும் மனபர்யாப்தி நிகழ்வதில்லை. இரண்டு பொறி, மூன்று பொறி, நான்கு பொறி மற்றும் மனமில்லா ஐம்பொறி உயிர்களுக்கு ஐந்து பர்யாப்திகள் நிகழ்கின்றன, இவைகளுக்கு மன பர்யாப்தி நிகழ்வதில்லை. சஞ்சி-மனமுடைய ஐம்பொறி உயிர்களில் ஆறு பர்யாப்திகளும் நிகழ்கின்றன. இந்த பர்யாப்திகளுக்கு ஆறு வெவ்வேறு பெயர்கள் இருப்பதால் அவைகளின் செயல்களும் வேவ்வேறாக இருக்கும் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. அவைகளின் ஸ்வரூபத்தை இப்போது ஒவ்வொன்றாக வரிசையாகப் பார்க்கலாம்.

உயிர் ஒரு இடத்தில் மரணமடைந்து வேறு இடத்திற்கு பிறவி எடுக்கச் செல்கிறது என்பது உங்களுக்கு தெரிந்த விஷயம் தான். அதாவது ஒரு உடலை விட்டுவிட்டு வேறு இடத்திற்கு சென்ற பிறகு, அங்கு புதிய புத்கல ஸ்கந்தங்களை அந்த உயிர் கிரஹித்துக் கொள்கிறது. அந்த வகை புத்கலங்களை நாம் முன்னர் நோகர்ம வர்கணைகள் என்று கூறினோம். உடல், மனம், பாஷை, சுவாசோச்வாசம் சம்பந்தமான புத்கல பரமாணுக்களை உயிர் கிரஹித்துக் கொள்கிறது. இந்த பரமாணுக்களை திட மற்றும் திரவ வடிவமாக மாற்றக்கூடிய சக்தியை உயிர் முதலில் பெறுகிறது, அந்த சக்தி முழுமையடைந்ததும் அந்த உயிர் **ஆஹார பர்யாப்தி** அடைந்து விட்டதாக சொல்கின்றனர்.

திட மற்றும் திரவ வடிவ மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்க, அந்த பொருள்களில் திடப்பொருளைக் கொண்டு எலும்பு, தோல் முதலியன நிலையான உடல் உறுப்புகளாகவும், திரவிய பொருளைக் கொண்டு இரத்தம், வீர்யம் முதலிய திரவிய வடிவ உடல் செயல்படத் தேவையான பொருள்களாகவும் மாற்றமடையச் செய்யும் இரண்டாவது சக்தி நிறைவு அடைதலை **சரீர பர்யாப்தி** என்று சொல்கின்றனர்.

உயிருக்கு அறிவின் வெளிப்பாடு எவ்வளவு திறக்கப்பட வேண்டுமோ, அத்தனை பொறிகள் உடைய உயிராக அந்த உயிர் ஆகவேண்டுமோ அத்தனை திரவிய இந்திரியங்கள் அதன் உடலில் அமைகின்றன. அந்த திரவிய இந்திரியங்கள் இருக்கும் இடத்தில் எவ்வளவு ஆன்மப்பிரதேசம் இருக்கிறதோ அதன்மூலம் அந்த இந்திரிய விஷயங்களை கிரஹிப்பது அதாவது அறியும் உபயோக சக்தி தோன்றுதலை **இந்திரிய பர்யாப்தி** என்று சொல்கின்றனர். உதாரணமாக மூக்கு இந்திரியம் இருக்குமிடத்தில் உள்ள ஆன்மப் பகுதி வாசனைகளை அறியும் உபயோகவடிவ ஞானசக்தி பெறுவதை

இந்திரிய பர்யாப்தி என்று சொல்கின்றனர். இதுபோலவே மற்ற இந்திரியங்களின் சக்தியும் பூர்ததியடைகிறது என்று தெரிந்து கொள்ளுங்கள். ஆஹாரவர்கணை வடிவ புத்கல ஸ்கந்தங்களை சுவாசோச்வாசம் நிகழும் வடிவல் செய்யும் சக்தி பூர்த்தியடைதலை **சுவாசோச்வாச பர்யாப்தி** என்று சொல்கின்றனர். பாஷா வர்க்கணை வடிவ ஸ்கதந்தங்களை சப்த வடிவமாக மாற்றக்கூடிய சக்தியைப் பெறுவதை **பாஷா பர்யாப்தி** என்று சொல்கின்றனர். மனோ வர்க்கணை வடிவ ஸ்கதந்தங்களை திரவிய மன வடிவமாக மாற்றக்கூடிய சக்தி மற்றும் நல்லது கெட்டதுகளை ஆய்வுசெய்தல், நினைவில் வைத்துக்கொள்ளல், உபதேசங்களை ஏற்றுக்கொள்ளல் முதலான பாவ மனத்தின்-அதாவது மனம் இருக்கும் இடத்திலுள்ள உயிர்பகுதி மேல்கூறிய சக்திகளைப் பெறுதல் **மன பர்யாப்தி** என்று சொல்கின்றனர்.

இந்த எல்லா பர்யாப்திகளின் துவக்கம் ஒரே சமயத்தில் ஆரம்பிக்கின்றன ஆனால் அவைகள் ஒவ்வொன்றும் முழுமையடைதல் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாகவே முடிவடைகின்றன. ஒவ்வொரு பர்யாப்தியும் முழுமையடைய அந்தர்முகூர்த்த காலமாகிறது, மற்றும் எல்லா பர்யாப்திகளும் முழுமையடைய யதாயோக்ய அந்தர்முகூர்த்த காலமேயாகிறது. இரண்டாவதான சரீர பர்யாப்தி முழுமைடையும் முன் அந்த உயிரை **நிர்விருத்தி அபர்யாப்தி** உயிர் என்று சொல்கின்றனர். நிர்விருத்தி என்றால் முடிவுக்கு வரக்கூடியது என்று பொருள். [நிர்விருத்தி அபர்யாப்தி உயிர்கள் கண்டிப்பாக பர்யாப்த நிலையை அடையும் என அறியவும்.] ஆகையால் நிர்விருத்தி அபர்யாப்தி காலம் முடிந்ததுமே அதாவது சரீர பரயாப்தி முடிந்ததுமே அந்த உயிரை பர்யாப்த உயிர் என்றே அழைக்கின்றனர்.

ஆனால் லப்தி அபர்யாப்தி உயிர்களுக்கு அபர்யாப்த நாமகர்மம் உதயத்திலிருக்கிறது. அபர்பாப்த உயிர்களில் பர்யாப்திகளின் எண்ணிக்கை பர்யாப்த உயிருக்கு இருப்பது போலவேதான் இருக்கிறது ஆனாலும் அவைகளில் ஒரு பரயாப்தி கூட பூர்த்தியடைவதில்லை. அபர்யாப்த ஏகேந்திரியம், விகலேந்திரியம், மற்றும் மனமுடைய பஞ்சேந்திரிய உயிர்களுக்கு முறையாக 4, 5, 6 பர்யாப்திகளின் ஆரம்பம் துவங்கி விடுகின்றன ஆனால் ஒரு பர்யாப்திகூட முழுமை அடைவதில்லை. உயிர் அதற்கு முன்னரே சுவாசத்தின் 1/18 காலத்தில் மரணத்தை அடைகிறது.

இதன்பொருள் என்னவென்றால் பர்யாப்தி மற்றும் அபர்யாப்தி உயிர்களில் பர்யாப்தியின் எண்ணிக்கை சமமாக இருந்தாலும் பர்யாப்த உயிர்களில் பர்யாப்தி முழுமை பெறுகிறது, ஆனால் அபர்யாப்த உயிர்களில் ஒரு பர்யாப்திகூட முழுமை பெறுவதில்லை. தேவர், நரகர், போகபூமி உயிர்கள் எல்லாம் பர்யாப்த உயிர்களேயாவர். எல்லா கர்பபிறவி உயிர்களும் அதாவது கர்பத்தில் பிறவி எடுக்கும் விலங்கானாலும், மனிதரானாலும் அவை எல்லால் பர்யாப்த உயிர்களேயாகும். நிர்விருத்தி அபர்யாப்த உயிர்கள் கூட நியமமாக, அதாவது நிச்சயமாக பர்யாப்த நிலையை அடைகின்றன. ஆனால் லப்தி அபர்யாப்த உயிர்கள் ஒன்று கூட ஒரு பர்யாப்தியைம் பூர்த்தி செய்யாமல் மரண மடைகின்றன.

எல்லா பர்யாப்திகளும் ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் முழுமை அடைந்து விடுகின்றன, ஆயுள் முடியும்வரை இந்த பர்யாப்திகள் அதாவது சக்திகள் எப்போதும் அந்த உயிர்களிடம் இருக்கின்றன. அவைகளின் புத்கல ஸ்கந்தங்கள் உடல், மனம், சப்தம், சுவாசோச்வாசம் முதலிய வடிவில் செயல்படும் காரியம் கூட வாழ்நாள் முழுவதும் அதாவது ஆயுள் முடியும்வரை-மரணமடையும்வரை நிகழ்ந்த வண்ணமே இருக்கிறது. மகள்களே, பர்யாப்தம் பற்றி படித்துவிட்டு **நான் பெரிய சக்தி வாய்ந்தவள், புத்கலங்களை செயல்பட வைக்கும் செயல் என்னுடைய வல்லமை யாகும்** என்ற கற்பனை அல்லது

மயக்கத்தில் இருக்கவேண்டாம். ஒவ்வொரு திரவியத்தின் செயலும் சுதந்திரமாக அந்தந்த திரவியத்தில் அதன் சுய தகுதியால் அந்த திரவியத்திலேயே நிகழ்கிறது. நிமித்த-நைமித்திக சம்பந்தங்களை தெரியப்படுத்தும் சாஸ்திரத்தில் வரும் விளக்கங்களைப் படித்து அந்த இரண்டு திரவியங்களில் கர்த்தா-கர்ம சம்பந்தம் இருக்கிறது என்ற தவறான எண்ணம் அல்லது மூடநம்பிக்கை அல்லது குழப்பம் நம்மிடம் இல்லை அல்லவா? என்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மோக்ஷமார்க பிரகாசம் என்ற நூலில் பண்டிட் தோடர்மல்ஜி கூறுகிறார், **அனாதி காலமாக வஸ்த்துக்கள் அதன் சுய தனித்தனி செயல்களை அதன் எல்லைக்குள் செய்த வண்ணம் இருக்கின்றன, ஒரு வஸ்த்து வேறு ஒரு வஸ்த்துவின் செயலை செய்வதில்லை. பிற பொருளின் செயலை நான் செய்கிறேன் என்ற எண்ணம் நம்மை நிகோத பிறவிக்கு கொண்டு சேர்க்கும். [**அதாவது உடலின் செயல்களை நான் செய்கிறேன் என்ற எண்ணம் அதாவது மேலும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் உடல் நிகழ்த்தும் பூஜை, விரதம், உபவாசம், தீர்த்தயாத்திரை, தானம் முதலியவைகளை சுயம் ஆத்மாவே அதாவது நானே செய்கிறேன் என்ற எண்ணம் நம் உயிரை நிகோதத்திற்கு கூட்டிச் செல்லும் என அறியவும். இதனால் பூஜை, விரதம், உபவாசம், தீர்த்தயாத்திரை, தானம் முதலான சுபச்செயல்களை செய்ய வேண்டாம் என்று இங்கு உபதேசம் கொடுக்கப்படவில்லை, உடல் செய்யும் கிரியைகளால் உயிருக்கு எந்த பலனும் நிகழப்போவதில்லை என்ற நம்பிக்கையை நமக்கு நாமே உறுதி செய்யவே-நிர்ணயம் செய்யவே இப்படி உபதேசம் செய்யப்படுகிறது. இதன் தாத்பர்யம் என்ன வென்றால் உடல் எந்தெந்த கிரியைகளை செய்கிறதோ அந்த ஒவ்வொரு சமயமும் உயிருடை அறிவின் உபயோகம் பிற பொருளின்மேல்தான் இருக்கிறது, இது சுப உணர்வானாலும் இது ஆஸ்ரவ, பந்த தத்துவமாகும், ஹேய தத்துவமாகும். விட வேண்டிய செயலாகும். நாம் விடவில்லை ஏற்றல்கூட விதிப்படி நம் அறிவின் உபயோகம் அந்தர் முகூர்த்த காலத்தில் சுப அசுபங்களில் மாற்றம் அடைதல் நம் ஆதிக்கத்தில் இல்லாமல் இயற்கையாகவே நிகழ்ந்து கொண்டிருக்கும். அதனால் நாமும் சுத்தோபயோகத்திற்கு செல்லவேண்டும் என்ற எண்ணமே வராமல் நாம் சுபாசுப செயலிலிலேயே ஆழ்ந்திருப்போம். இச்செயல் கடைசியில் (அதிக பட்சம் 2,000 கடற்காலத்தில் நம்மை கண்டிப்பாக நிகோதத்தில்தான் கொண்டு சேர்க்கும்.) இவை நம்மை பிறவியில்தான் வைத்துக் கொண்டிருக்கும், இவைகளை நான் விட்டுவிட்டு என் அறிவின் உபயோகத்தை என்மேல்-சுய ஆன்மாவின் மேல் செலுத்துவதே சம்வரை, நிர்ஜரைக்கான செயலாகும், இதுவே என்னை முக்திக்கு கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை கொள்ள வேண்டும் என்ற உபதேசமே இங்கு செய்யப்படுகிறது என அறியவும்.**]**

மேலே எத்த சக்திகள் அதாவது பர்யாப்த சம்பந்தமான சக்திகள் பற்றி சொல்லப்பட்டதோ அதன் அர்த்தம் பொருளின் ஸ்வபாவ வடிவ சக்திகள் அல்லது உயிரின் குணங்கள் அல்லது உயிரின் தூய இயல்புகள்-உயிரின் தர்மங்கள் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. உயிருக்கும் கர்மங்களுக்கும் இடையே உள்ள சம்பந்தம் அனாதிகாலமாகவே இருக்கிறது. கர்மத்தின் உதயத்தால் உயிர் எந்தெந்த அவஸ்தைகளைப் படுகிறது என்பதையே இங்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. நம்மையே உடலில் அடைக்கும் சக்தி எப்படி நிகழ்கிறது? என்று தெரிந்துகொள்ள ஆர்வம் வருகிறதல்லவா! இந்த பர்யாப்த சக்திகளைப் பெற்ற பிறகு உயிரில் எந்த செயல் துவங்குகிறதோ அதை **பிராணன்** என்று சொல்கின்றனர். அதைப்பற்றிய விளக்கத்தை அடுத்த கடிதத்தில் பாரக்கலாம்.

- உங்கள் அம்மா

பிராணன் பிரரூபணை

கடிதம்-16 ஓம் நம: சித்தேப்ய: 30-09-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

தசலட்சண பருவ சமயத்தில் நாங்கள் இருவரும் பிரவசனம் செய்ய ஷோலாப்பூர் சென்றிருந்ததை நீங்கள் அறிவீர்கள். அதனால் சில தினங்களாக கடிதம் எழுதுதல் நிகழவில்லை. நாங்கள் ஷோலாப்பூர் பிரவசனத்தில் கரணானுயோக விஷயங்களை மோக்ஷமார்க்க பிரகாசத்தின் ஆதாரத்தில் நிகழ்த்தினோம். கர்ம பந்தம், உதயம், சத்துவம், கர்மங்களின் பிரிவுகளும் அதன் செயல்களும், நிஷேக அமைப்பு, ஜீவசமாசம், பஞ்ச பரிவர்த்தனை, மார்க்கணை முதலான பல விஷயங்களைப் பற்றி சர்ச்சை செய்தோம். ஷோலாப்பூர் ஜெயின் சமூகம் ஸ்வாத்யாயத்தில் ஆர்வம் மிக்கவர்களாவர். அவர்கள் இந்த விஷயங்களை மிகவும் உற்சாகத்துடன் கேட்டதோடல்லாமல் அவர்களிடையே ஆகம ஸ்வாத்யாயத்திற்கு மிகுந்த வரவேற்பும் இருந்தது.

பர்யாப்தி பற்றிய சர்ச்சைக்குப் பிறகு **பிராணன்** பற்றி இன்று நாம் தெரிந்து கொள்ளலாம். பிராணன் என்ற சொல் நமக்கு பழக்கமான ஒன்றுதான். உயிரோடு இருப்பவைகளை பிராணி என்று சொல்கிறோம். பிராணன்களை உடையவை எல்லாம் பிராணிகளாகும். என் குழந்தைதான் என்உயிர், என்னுடைய பிராணன் என்று பலர் சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். உயிரையே பிராணன் என்று சொல்கின்றனர். ஒருவர் மரணம் அடைந்ததும் அவருடைய பிராணன் போய்விட்டது அதாவது உயிர் போய்விட்டது என்று நாம் சொல்லுகிறோம் அல்லவா.

சைதன்ய பாவப்பிராணனை வைத்திருப்பது உயிராகும். சேதனம் என்பது ஞானவடிவ, தர்சனவடிவ சக்தியாகும். இந்த சேதன சக்தியையே பிராணன் என்று சொல்கின்றனர். எங்கு சைதன்ய சம்பந்தமான அதாவது பார்த்தல் அறிதல் சம்பந்தமான செயல் நின்று விடுகிறதோ அங்கு உடல் மற்றும் புலன்கள் அங்கே இருந்தபோதும் சேதனம் அதாவது அறியும் செயல் நிகழாததால் பிராணன் போய்விட்டது என்ற முடிவுக்கு நாம் வருகிறோம்.

உயிர் எந்த நேரமும் பாவபிராணனுடன் இருப்பது, அது எப்போதும் பிராணன் இல்லாததாக ஆகமுடியாது. நமக்கு உயிர் அல்லது ஜீவன் என்ற பெயர் எப்படி வந்தது என்று எப்போதாவது நீங்கள் சிந்தித்திருக்கிறீரகளா? எது உயிர்வாழ்கிறதோ, முன்னர் வாழ்ந்திருந்ததோ மற்றும் எதிர்காலத்திலும் வாழுமோ அதுவே ஜீவன் அல்லது உயிராகும். எது தானே ஜீவனோ-அதுவாகவே வாழ்கிறதோ அது மரணத்தைப்பற்றி எப்படி கவலைப்பட முடியும்? ஆனால் உயிரின் துரதிர்ஷ்டத்தை பார்த்தீர்களா, இது மரண பயத்தாலேயே தினம்தினம் செத்துக்கொண்டிருக்கும் ஒரு முட்டாளாக இருக்கிறது. உடலில்லாமல் நான் எப்படி இருக்க முடியும்? நான் வாழ்வதற்கு காற்று, தண்ணீர், உணவு முதலியன அவசியமல்லவா, அதனால்தானே நான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறேன் என்று இந்த உயிர் இன்றுவரை நம்பிக்கொண்டு இருக்கிறது.

ஹே உயிரே! சித்த பகவான் உயிரா இல்லையா? அவர் என்னவோ சித்தராக ஆனதிலிருந்து முடிவில்லா காலம்வரை அசரீரீயாகவே அதாவது உடலில்லாமலேயே இருக்கிறார் ஆனாலும்கூட அனந்த சுகத்துடன் இருக்கிறார், அனந்த ஞானத்துடன்

இருக்கிறார் அல்லவா. ஹே உயிரே! நீ கூட அசரீரீயாகத்தான் இருக்கிறாய். உன் இருப்பு, உன்னுடைய நிலைத்த தன்மை உன்னிடமே இருக்கிறது, உன்னாலேயே நீ எப்போதும் இருக்கிறாய். சைதன்யமயமக இருக்கிறாய், உடலின் நிலைப்பு வேறாகும், அசேதனமாகும்-அறிவு இல்லாததாகும்.

நீ என்னவோ உயிர்பொருள், சேதனகுணத்தை வைத்திருப்பவன், அசரீரீ-உடலில்லாதவன், சுருங்கி விரியும் தன்மை உடைய அசங்க்யாத பிரதேசமுடையவன். ஆனால் உடல் என்னவோ அனந்தானந்த புத்கல பரமாணுக்களின் பிண்டமாகும். எது அசேதனமாகும், உருவமுடையதாகும், கூடுதலும் பிரிதலும் செயலை செய்வதாகும், அதில் இடைவிடாது அனந்த பரமாணுக்கள் வந்து சேர்வதும், விட்டு விலகுவதும் நிகழ்ந்து கொண்டிருக்கறது. அடேய்! இந்த அசேதன உடலுடன் கொஞ்சகாலம் இருப்பதையே நீ உன்னுடைய வாழ்க்கை என்று நம்பிக்கொண்டிருக்கிறாய். இந்த உடலுடன் தொடர்பு ஏற்பட்டதும் நீ பிறந்ததாகவும், உடலுடனான தொடர்பு அற்றுப்போனதும் நீ மரணமடைந்ததாகவும் நம்பிக்கொண்டு இருக்கிறாய். முழு உலகத்தையும் பற்றி முடிவு செய்யும் வளர்ச்சி பெற்ற நீ உன்னைப் பற்றி சிந்திக்கக்கூட ஒருபோதும் தயாராக இல்லை. உடலில் நீ இருக்கும்போது கூட அறியும் காரியத்தை என்னவோ உயிராகிய நீயே செய்கிறாய். பொறிகள் அறிவற்ற ஜடமாகும், புத்கலமாகும். ஆனால் அறியும் காலத்தில் அவைகள் நிமித்த வடிவில் முன்னிலை வகிக்கின்றன. பொறிகள், மனம், சொல், உடல், ஸ்வாசோச்வாசம் முதலியவைகளின் செயலையே **திரவ்வியப் பிராணன்** என்று சொல்கின்றனர்.

திரவ்வியப்பிராணன் மொத்தம் எத்தனை? எந்தெந்த உயிர்களுக்கு எத்தனை திரவ்வியப் பிராணன்கள் இருக்கின்றன என்பது பற்றி நாம் இப்போது பார்க்கலாம். மொத்தம் பத்து பிராணன்கள் இருக்கின்றன. அவை நான்கு வகையாக இருக்கின்றன. அவைகளாவன இந்திரியப் பிராணன், பலப்பிரணன், ஸ்வாசோச்வாசப் பிராணன் மற்றும் ஆயுள் பிராணன் ஆகும். இவைகளின் உட்பிரிவுகளுடன் மொத்தம் பத்து பிராணன்கள் ஆகும். இந்திரிய பிராணன்கள் ஐந்து, இந்திரியத்தை புலன் அல்லது பொறி என்று சொல்கிறோம். அவை 1.தொடு புலன்-உடம்பு, 2.சுவை புலன்-நாக்கு, 3.மணம்-வாசனை புலன்-மூக்கு, 4.பார்க்கும் புலன்-கண், 5.கேட்கும் புலன்-காது. மூன்று பல பிராணன்கள் அதாவது சக்திவடிவ பிராணன்கள் 1.காய பலம்-உடல் சக்தி, 2.வசன பலம்-பேசும் சக்தி, 3.மன பலம்-சிந்தனை சக்தி. ஒரு ஸ்வாசோச்வாச பிராணன்-இதய துடிப்பு மற்றும் ஒரு ஆயுள் பிராணன்-ஒரு பிறவியில் வாழும் தகுதிக்காலம். இவ்வாறு பத்துவகை செயல் அதாவது கருவி வடிவமே **திரவ்வியப் பிராணன்** களாகும். இவைகளை நிமித்தமாகக்கொண்டு இந்திரியாவரண ஷயோபசமத்தால் நிகழும் சைதன்ய உணர்வு **பாவப் பிராணன்** ஆகும்.

திரவ்வியப் பிராணன் தோன்றுவதைப் பிறவி என்றும் அவை அழிவதை மரணம் என்றும் நாம் சொல்கிறோம். மனமுடைய ஐம்பொறி உயிர்களுக்கு பத்து பிராணன்களும் இருக்கின்றன. அபர்யாப்த நிலையில் ஸ்வாசோச்வாச பிராணன், வசனபல பிராணன் மற்றும் மனபல பிராணன் இல்லை. ஆகையால் மனமுடைய ஐம்பொறிகளின் அபர்யாபத நிலையில் ஏழு பிராணன்களே இருக்கின்றன.

மனமில்லாத ஐம்பொறி பர்யாப்த்த நிலையில் மனபலப் பிராணனைத் தவிர மற்ற ஒன்பது பிராணன்களும் இருக்கின்றன. அபர்யாப்த்த நிலையில் வசனபலப் பிராணன் மற்றும் ஸ்வாச்வாசப் பிராணன் இல்லாமல் மற்ற ஏழு பிராணன்களும் இருக்கின்றன. நான்கு பொறி பர்யாப்த்த நிலையில் கேட்கும் பொறி-காது திரவ்வியப் பிராணன் மற்றும் மனபலப் பிராணன் தவிர மற்ற எட்டு பிராணன்களும் இருக்கும். அபர்யாப்த்த நிலையில் ஆறு

பிராணன்கள் இருக்கும். மூன்று பொறி பர்யாப்த்த நிலையில் மேலும் ஒரு பார்க்கும் பொறி திரவ்வியப் பிராணன் தவிர ஏழு பிராணன்கள் இருக்கும் மற்றும் அபர்யாப்த்த நிலையில் ஐந்து பிராணன்கள் இருக்கும். இரண்டு பொறி பர்யாப்த்த நிலையில் மேலும் ஒரு முகர்வு பொறி திரவ்வியப் பிராணன் தவிர ஆறு பிராணன்களும், அபர்யாப்த்த நிலையில் நான்கு பிராணன்களும் இருக்கும். ஒருபொறி பர்யாப்த்த நிலையில் தொடுபுலன் திரவ்விய பிராணன், உடல்பலப் பிராணன், ஸ்வாசோச்வாசப் பிராணன் மற்றும் ஆயுள் பிரணான் எல்லாம் சேர்ந்து நான்கே பிராணன்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வசனபலப் பிராணன் இல்லை. ஒருபொறி அபர்யாப்த்த நிலையில் ஸ்வாசோச்வாசப் பிராணன் தவிர மூன்றே பிராணன்கள் இருக்கின்றன.

பதிமூன்றாம் சயோககேவலி குணஸ்தானத்தில் ஞானம் ஷாயிக ஞானமாகி விடுகிறது ஆகையால் இங்கே ஷாயோபசமிக ஞான வடிவ திரவ்யேந்திரிய பிராணன்கள் மற்றும் மனபல பிராணன் இருப்தில்லை. இந்த உயிர்களுக்கு உடல்பல பிராணன், வசனபல பிராணன், ஸ்வாசோச்வாச பிராணன் மற்றும் ஆயுள் பிராணன் ஆகிய நான்கு பிராணன்களே இருக்கின்றன. பிறகு இந்த பதிமூன்றாம் குணஸ்தானத்தில் வசனபலம்கூட இல்லாமல் போனதும் மூன்று பிராணன்களும் கடைசியில் ஸ்வாசோச்வாசமும் இல்லாமல்போன பிறகு இரண்டு பிராணன்களே இருக்கிறது. பதினான்காம் அயோககேவலி குணஸ்தானத்தில் ஆயுள் பிராணன் ஒன்று மட்டுமே இருக்கிறது, அங்கு உடல்பல பிராணன்கூட இல்லை.

இவ்வாறு பிறவி உயிர்களுக்கு திரவ்விய பிராணன்கள் சாத்தியமாகும். சித்த பகவான் என்னவோ பாவ பிராணனுடன் அனந்தகாலம் வாழ்கிறார். நம்போன்ற எல்லா உயிர்களும்கூட பாவபிராணன் உடையவர்களாகவே இருக்கிறோம் ஆகையால் திரவ்விய பிராணனின் அழிவு நம்அழிவு என்ற நம்பிக்கையுடன் வீணான துக்கம் கொள்ளுதல் தகுதியான செயலல்ல.

திரவ்வியேந்திரியம் எதையும் தெரிந்து கொள்வதில்லை. பாவேந்திரியம் அதாவது ஷயோபசம ஞானத்தின் திறப்பு அதாவது அறிவின் வெளிப்பாடு உயிரினுடையது, அது உயிரில் சுயமாகவே இருக்கும்-ஸ்வயம்சித்த சக்தியாகும். கர்மம் ஞானத்தை உற்பத்தி செய்யவில்லை. உயிரின் சுய தகுதிக்கேற்ப ஞானம் ஏற்ற இறக்கத்துடன் வெளிப்படுகிறது. அந்த சமயத்தில் கர்மத்தின் ஞானாவரணம் மற்றும் வீர்யாந்தராய கர்மங்களின் ஷயோபசமம் காணப்படுகிறது. ஆனால் உயிர் தனக்கு அறிவு கர்மத்தின் ஷயோபசமத்தால்தான் வருகிறது என்று நம்பிக் கொண்டிருக்கிறது.

உயிருக்கு எத்தனை பாவேந்திரியம் இருக்கிறதோ அத்தனை இந்திரிய பிராணனே இருக்கிறது. ஐம்பொறி உயிர்களுக்கு ஐந்து இந்திரிய பிராணன்கள் இருக்கின்றன. ஆகையால் குருடர், காது கேளாத மனிதர்கள் கூட ஐம்பொறி உயிர்களே. பர்யாப்த, அபர்யாப்த்த நிலையில் உயிர்களின் இந்திரியப்பிராணன் சமமாகவே இருக்கிறது.

பலபிராணன்களில் காயபல பிராணன் ஏகேந்திரியம் முதல் பஞ்சேந்திரியம் வரை அதாவது ஒருபொறி முதல் ஐம்பொறிவரை எல்லா உயிர்களுக்கும் இருக்கிறது. வசனபல பிராணன் இரண்டு பொறியிலிருந்து ஐம்பொறிவரை எல்ல உயிர்களுக்கும் இருக்கிறது. ஆனால் மனபல பிராணன் மனமுடைய ஐம்பொறி உயிர்களுக்கு மட்டுமே இருக்கிறது. அபர்யாபத்த நிலையில் எல்லா உயிர்களுக்கும் காயபல பிராணன் மட்டுமே இருக்கிறது.

ஆயுள் பிராணன் எல்லா உயிர்களிலும் காணப்படுகிறது. இதற்கு ஆயுள் கர்மம் நிமித்தமாகும். ஸ்வாசோச்வாச பிராணன் எல்லா பர்யாப்த்த உயிர்களிடமும் இருக்கிறது, அபர்யாப்த்தர்களிடம் இல்லை. எல்லா பிராணிகளும் வாழ பிராணவாயு-oxygen அவசியம் என்பது நமக்கு தெரிந்த விஷயம்தான். மூடப்பட்ட காயத்தில் காற்றில்லாமல் வாழும் பேக்டீரியா (பிராணவாயு இல்லாமல் இருக்கக்கூடிய கிருமி) ஒருவேளை அபர்யாப்த்த உயிராக இருக்கலாம், அப்படித்தான் இருக்க வேண்டும் அல்லவா?

வேறு கருத்துடையவர்கள் அதாவது பிற தர்மங்களில் நம்பிக்கை கொண்டவர்கள், ஒரு பொறி உயிர்களை, உயிர் என்றே நம்புவதில்லை. தற்காலத்தில் விஞ்ஞானிகள் அதை உறுதி செய்த பிறகு வனஸ்பதிகளில்-தாவரங்களில் உயிர் இருக்கிறது என்று நம்ப தயாராக இருக்கின்றனர். நெருப்பு உயிரா, இல்லையா? அதில் பிராணன் இருக்கிறதா, இல்லையா? என்று நீங்கள் கேட்கக்கூடும். நெருப்பில் இந்திரிய பிராணன், காயபல பிராணன் மற்றும் ஆயுள் பிராணன் பற்றி நம்மால் கொஞ்சமும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் எரியும் மெழுகுவர்த்தியை கண்ணாடி பாத்திரத்தில் வைத்து மூடிய பிறகு மெழுகுவத்தி கொஞ்சநேரம் சென்றதும் அணைந்து விடுகிறது. பிராணவாயு இல்லாமல் நெருப்பு அணைவதால் அதில் ஸ்வாசோச்வாச பிராணன் இருப்பது உறுதியாகிறது. பிராணவாயு இல்லாமல் நீருடலி, காற்றுடலி, மண்ணுடலி உயிர்கள் கூட மரணமடைகின்றன. இதிலிருந்து ஒரு பொறி உடலிகள் எல்லாம் உயிர்களே என்பது உறுதியாகிறது.

பர்யாப்த்தி மற்றும் பிராணன் இரண்டிற்கும் வித்யாசம் என்ன? இரண்டிலும் இந்திரியம், பாஷா, மனம், ஸ்வாசோச்வாசம் என்ற சொற்கள் பொதுவாக இருக்கின்றனவே? என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். நல்ல கேள்விதான்! கேளுங்கள், உயிரில் சக்தி முழுமை அடைவதை பர்யாப்த்தி என்று சொல்கிறோம். அந்த சக்தி பூர்த்தியடைந்ததும் அந்த சக்தியைக்கொண்டு எந்த காரியம் நிகழ்கிறதோ அதை பிராணன் என்று சொல்கிறோம். பர்யாப்த்தி காரணமாகும், பிராணன் காரியமாகும்.

எப்படியென்றால், ஆத்மாவின் குறிப்பிட்ட பிரதேசத்தில் பதார்த்தங்களை (வர்ணம் முதலியவைகளை) அறியும் ஷயோபசம வடிவ சக்தி முழுமை அடைதல் இந்திரிய பர்யாப்த்தி யாகும். அந்த இந்திரியத்தை நிமித்தமாக்கொண்டு பதார்த்தங்களை அறியும் செயலை-காரியத்தை இந்திரிய பிராணன் என்று சொல்கிறோம். பாஷா பர்யாப்த்தி பாஷாவர்கணா புத்கலத்தை சப்த வடிவமாக மாற்றும் சக்தி முழுமை அடைதலை பாஷா பர்யாப்த்தி என்று சொல்கிறோம். உயிரின் மூலம் பாஷா வர்கணைகளை சொல் அல்லது சப்த வடிவமாக மாற்றும் செயல் நிகழ்தலை வசனபல பிராணன் என்கிறோம். இது போலவே மனம் மற்றும் ஸ்வாசோச்வாசம் சம்பந்தமான பர்யாப்த்தியும், பிராணனுமாகும் என்று தெரிந்து கொள்ளலாம்.

அறிதல் சம்பந்தமான செயல் உயிரின் நிஜ சக்தியால்தான் நிகழ்கிறது என்பதை இப்போது நீங்கள் உறுதி செயதிருப்பீர்கள். உயிரும் அறிவும் எப்போதும் தனித்தனியாக-வெவ்வேறாக இல்லை அதாவது உயிர் அறிவும் பிரிந்து வேறுவேறாக ஆக முடியாது. அறிவு உயிரின் லட்சணமாகும்-அடையாளமாகும். ஆனாலும் உயிருக்கு உடலுடன் தொடர்பு ஏற்படுவதையும், அந்த தொடர்பு துண்டித்துப்போவதையும் உபசாரமாக பிறப்பு-இறப்பு என்று சொல்லப்படுகிறது. உயிரின் அறிவு வெளிப்பாட்டுக்கு உகந்தார்போல் இந்த உயிர் இத்தனை இந்திரியங்களை உடையது என்று சொல்லப்படுகிறது. பெறப்பட்ட பிறவியில் எத்தனை பிராணன்கள் இருக்கின்றன என்ற நிமிந்தம் பற்றி தெரியப்படுத்தவே இவ்வாறு சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்லப்படும் உலக வழக்கத்தை கேட்ட பிறகு

உபாதானத்தின் மேல் உள்ள நம்பிக்கையை நாம் விட்டு விடக்கூடாது. நிமித்தம் பற்றிய அறிவு பெறாவிட்டால் அறிவு முழுமையற்றதாக-குறை அறிவாக ஆகிவிடும். நிமித்தமே இல்லை என்ற அறிவு தவறான அறிவாகும். நிமித்தமே காரியத்தை செய்கிறது என்று நம்புதல் தவறான நம்பிக்கை யாகும்.

ஆகம ஞானம் பிரமாணமாகும்-ஆதார அறிவாகும். அதில் உபாதானம், நிமித்தம் பற்றிய சர்ச்சையும், அவைகளின் ஸ்வரூபம் பற்றிய விளக்கமும் செய்யப்படுகின்றன. ஆகமம் மூலமே வஸ்த்துவின் ஒட்டுமொத்த ஸ்வருபம்-முழு வடிவம் நம் கவனத்திற்கு வருகிறது. திரவ்யானுயோகம் மூலம் உயிர் இவைகள் எல்லாவற்றிலுமிருந்து முற்றிலும் வேறானது, சுதந்திரமானது என்பது நமக்குத் தெரிய வருகிறது. இவைகளைப்பற்றிய யதார்த்த ஞானம் பெற்ற பிறகு முக்காலத்திலும் அபேதமான-ஒரே மாதிரியாகவே இருக்கும் நம் நிஜ காரண பரமாத்மாவின் மேல் நம் பார்வை செல்லாமல் இருக்காது. எது நம்முன் நேராக உட்கார்ந்து கொண்டு இருக்கிறதோ அதைப் பார்த்த பிறகு, அதுவே **நான்-ஸவயம் பகவான் ஆத்மா** என்று உறுதி செய்தல் நமக்கு சுலபமாகிறது. பிறகு நாம் அதில் ஒன்றிவிட்டால்-ஐய்க்கியமாகி விட்டால் நமக்கு எது கிடைக்க வேண்டுமோ அது கிடைத்து விடுகிறது, நம் திரிகால த்ருவ சுத்தாத்மா நமக்கு எப்படி கிடைக்காமல் போகும்? நம் நிகழ்கால அறிவின் பர்யாயம் நம் திரிகால த்ருவ சுதாத்மாவில் முழுவதும் ஐக்கியமாவதால் அவசியம் நம் இயல்பு குணம் நம் பர்யாயத்தில் [பகவான் வெளிப்படுத்திக்கொண்டு இருப்பதுபோல] அவசியம் வெளிப்படவே செய்யும். [அதாவது நாமும் பகவான் தன்மையை-சித்த நிலையை அடைவோம் என்பதாம்.]

- உங்கள் அம்மா.

சஞ்ஞா பிரரூபணை, கதி, இந்திரிய, காய மார்க்கணை

கடிதம்-17 ஓம் நம: சித்தேப்ய: 1-10-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

உயிரின் அறியும் செயல் அதன் பாவப் பிராணன் என்று நாம் முன் கடிதத்தில் பார்த்தோம். இந்த பிராணனை கொஞ்சமும் பொருட்படுத்தாமல் நாம் இரவும் பகலும் எதன்பின்னாலாவது ஓடிக்கொண்டிருக்கிறோம்? சுகத்தின் பக்கம் ஏக்கத்துடன் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்? தன்னைப் பற்றி சிந்திக்கக்கூட யாருக்கும் நேரமில்லை. ஒருவர் ஓடுகிறார் அதைப் பார்த்து இன்னொருவரும் ஓடுகிறானர் ஆகையால் மூன்றாம் நபரும் ஓடுகிறார். எதன் பின்னாலாவது ஓடும் இந்த நிலையே எல்லா இடங்களிலும் காணப்படுகிறது.

மகள்களே, உங்கள் தாத்தா எங்கள் எல்லோரையும் பணம் எப்படி செலவு செய்கிறோம் என்ற கணக்கை எழுதிவைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார். அந்த பழக்கம் இன்று கூட எங்களிடம் இருக்கிறது. உங்களுக்குக்கூட இளமையிலேயே இதைப்பற்றி பயிற்சி கொடுத்திருக்கிறோம். பணம் இல்லாமல் எந்த காரியமும் நடக்காது. இந்த விஷயத்தில் நாம் கவனமாக இருக்கிறோம். குழாயிலிருந்து எந்த காரணமுமின்றி தண்ணீர் போய்க்கொண்டிருந்தால், அதாவது தண்ணீர் வீணாகப் போனால், நாம் கவனமாக அந்த குழாயை மூடுகிறோம். பணச்செலவும், தண்ணீர் செலவும் நம் கவனத்திற்கு வருகின்றன ஆனால் நம்முடைய பாவபிராணன்-அறிவு எப்படி வீணாகிறது அதாவது நம் அறிவின்(சைதன்யத்தின்) மதிப்பு என்ன என்பதுபற்றி மட்டும் இன்றுவரை நம் கவனத்திற்கு வரவில்லை.

நம் அறிவின் உபயோகத்தை நாம் எங்கெங்கே செலுத்துகிறோம்? அது எந்த காரணமுமின்றி வீணாகப் போகாமலிருக்கிறதா என்பதில் நாம் கவனம் செலுத்துகிறோமா, இல்லையா என்பதை விட்டு விடுவோம், அது பற்றிய சிந்தனை கூட நம் மனதை எப்போதும் தொட்டதில்லை என்பதே உண்மை. சாஸ்திரத்தில் சேத்தனத்தை-அறிவை பற்றி மூன்று விதமாக சொல்லப் பட்டிருக்கிறது. அவை **1.கர்மபஃல சேத்தனா, 2.கர்ம சேத்தனா, 3.ஞான சேத்தனா.**

ஒருபொறியுடன் பிறந்த உயிர் துக்கத்தையே அனுபவம் செய்கிறது, அந்த துக்கத்தை விலக்க அதனால் எதுவும் செய்ய முடிவதில்லை. கர்ம உதயத்தின் பலனால் கிடைக்கும் சுகத்தையும், துக்கத்தையுமே அது உணர்கிறது-அனுபவம் செய்கிறது. அந்த உயிர்களின் அறிவு சுக துக்கங்களின் வலியை அறிவதில் மட்டுமே சிக்கிக்கிடப்பதால் அந்த அறிவை **கர்மபஃல சேத்தனா** என்று சொல்கின்றனர்.

சில உயிர்கள் கர்ம உதயத்தால் கிடைக்கும் துக்கங்களை தடுக்கவும் சுகத்தை அடையவும் அஞ்ஞான வசத்தால் விருப்பும் வெறுப்பும் கொண்டு, பிற திரவியங்களை தன் விருப்பத்திற்கு ஏற்றார்போல் மாற்றமுடியும் என்று நம்பி, அந்த பொருளை மாற்ற முயல்கிறது, ஆனால் பிற திரவியத்தின் செயல்பாட்டை மாற்றும் சாமர்த்தியம் இல்லாததால் விருப்பு வெறுப்பு உணர்வு கொள்கிறது. இது அதன் பாவ கர்மமாகும். மற்றும் அதன் அறிவு அதாவது அதன் சேத்தன உபயோகம் அந்த விருப்பு வெறுப்பு கொள்வதில்

சிக்கிக்கொண்டு இருப்பதாலும் மற்றும் விருப்பு வெறுப்பு கொள்ளுதல் தன் ஸ்வபாவம்தான்-இயல்புதான் என்று நம்புவதாலும் அந்த உயிரின் அறிவை **கர்ம சேத்தனா** என்று சொல்கின்றனர்.

இப்போது ஞான சேத்தனா என்னவென்று பார்க்கலாம். எந்த உயிர் கர்ம உதயத்தால் கிடைக்கும் சுகதுக்கத்தையும் மற்றும் அதனால் தன்னிடம் உற்பத்தியாகும் விருப்பு வெறுப்புகளையும் தன் அறிவில் வேறாக-அறியப்படும் விஷயமாக உணர்ந்து, முக்காலத்திலும் அறியும் தன்மை இயல்பில்-அறிபவனில் அதாவது தன் ஆத்ம தத்துவத்தில் அறிவை சேர்க்கிறது மற்றும் அந்த ஆத்மாவின்றும் வேறில்லாத தன்னை பார்ப்பவன் வடிவில் அதன் திரிபு உணர்வுகளை அனுபவம் செய்கிறது. [அதாவது பார்க்கும் அறிவை(தற்சமய பர்யாய அறிவை) தனியாகப் பிரித்து அதை திரிகால தன் சுத்தாத்மாவாகவும், கர்ம உதயத்தால் உண்டாகும் சுகதுக்கத்தையும் அதனால் உண்டாகும் விருப்பு வெறுப்பையும் ஒன்றாக சேர்த்து அந்த கசப்பு உணர்வை(பர்யாயத்தை) ஒன்றாக்கி அதை தன் அறிவால் வேறு ஒரு பொருளை பார்ப்பது போல தன் விபாவ அனுபவத்தை அது பார்க்கிறது. அதாவது விபாவமும் ஸ்வபாவமும் ஒரே வஸ்த்துவில் அதாவது தன் ஆத்மாவில் நிகழ்ந்தாலும் இரண்டையும் வெவ்வேறாக பிரித்து அறிவதால்-ஸ்வபாவத்தால்) சுகதுக்க விருப்பு வெறுப்பு உணர்வுகளை (விபாவத்தை) அறிகிறது.] அதாவது அறிவு தன் அறியும் செயலை மட்டும் செய்து வேறு எதிலும் சிக்கிக்கொள்ளாததால் அந்த உயிரின் அறிவை **ஞான சேத்தனா** என்று சொல்கின்றனர்.

நான்காம் குணஸ்தானத்திலிருத்து உயிர் ஞானசேத்தனா உடையதாகிறது. நான்கு, ஐந்து குணஸ்தானங்களில் கர்ம சேத்தனாவும், கர்மபஃல சேத்தனாவும் இருந்தாலும்கூட அது வலியின் அனுபவ நோக்கிலாகும். அந்த வலியை அந்த உயிர்கள் தன்னுடையதாக ஏற்பதில்லை அந்த வலியை பார்ப்பவர் வடிவில் ஏற்கின்றனர். முனிகளுக்கு ஞானானந்த உணர்வு இடைவிடாது இருப்பதால் ஞானசேத்தனா உடையவராகிறார். இது அத்யாதம நோக்கில் சொல்லப்பட்டதாகும். ஆனால் ஆகம நோக்கில் எதுவரை விருப்பு வெறுப்பு முதலான கஷாய உணர்வுகள் இருக்கின்றனவோ அந்த அளவு கர்மசேத்னாவும், அந்த கஷாயங்களுக்கு உகந்த அளவு சுகதுக்க அனுபவம் இருப்பதால் கர்மபஃல சேத்னாவும் கூட இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

ஹே உயிரே, அனாதி காலமாக நீ அனந்த பிறவிகளில் அலைந்து கொண்டிருக்கிறாய். இப்போது நிகழ்காலத்தில் நீ இருக்கும் இந்த பிறவியிலாவது இந்த காரியத்தை நீ செய்-உன்னை நீ தெரிந்து கொள். பிறகு பார், உன் எதிர்கால பிறவிகளில் சுற்றும் பயணம் அழிந்து போகும். இந்த பிறவி சுழற்சியில் காணப்படும் பல்வேறு நிலைகள், புண்ணிய பாபத்தின் விளையாட்டு, விருப்பு வெறுப்புகளின் தீவிரம், ஒருவருக்கொருவர்மேல் கொள்ளும் பொறாமை, வெறுப்பு, செல்வத்தின் பின்னால் பித்து பிடித்தவன்போல் ஓடும் ஓட்டம் முதலியவைகளையெல்லாம் பார்த்து உனக்கு பயம் வரவில்லையா? இவைகளை துக்கமாக நீ உணரவில்லையா?

ஐந்தாம் கால உயிரினங்களின் நிலைகளையும், அவைகள் படப்போகும் துயரங்களின் வர்ணனையையும் கேட்டு, நான்காம் காலத்து பல உயிர்கள் வைரக்யம் அடைந்து நற்காட்சியைப் பெற்றனர். ஆனால் தினமும் அந்த துக்கங்களை அனுபவிக்கும் நாம் ஒரு கவலையுமின்றி ஆனந்தமாக இருக்கிறோம், எதிர்காலத்தை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். நாம் பாக்யவான்கள் தான்!!!

ஹே உயிரே, அனந்த பிறவிகளாக நீ செய்து வந்த தலைகீழ் கலாச்சாரத்தை இந்த இந்த ஒரு பிறவியிலாவது நீ அகற்ற வேண்டும். உங்களுடைய அந்த சிறந்த முயற்சிக்கான ஒரு அரிய வாய்ப்பு இப்போது வந்து விட்டது, அந்த அருமையான சந்தர்ப்பம் உங்களுக்கு இப்போது வாய்த்திருக்கிறது. உங்களை நீங்கள் சைதன்ய வடிவமாக ஏற்று உள்முகம் கொண்டு உங்களையே நீங்கள் பார்த்து அதில் ஒன்றிவிட்டால் நீங்கள் அழியாத நிலையை அடைந்து விடுவீர்கள்.

மகள்களே, **அம்மா அவ்வப்போது ஏன் இப்படி செய்கிறார்கள்? தொடங்கிய விஷயத்தை விட்டுவிட்டு வண்டி வேறு எங்கோ ஓடிவிடுகிறதே!** என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள். ஹே உயிரே! செய்யத் தகுதியான ஒரே விஷயம் இதுதான். கரணானுயோகத்தை சரியாக புரியவைக்க இதெல்லாம் ஒரு யுக்திதான். உண்மையில் இதன்மூலம் வீதராக தன்மையை அடைய வழிகாட்டியாக இருப்பதே முக்கிய காரணமாகும்.

சரி, இப்போது நம் விஷயத்திற்கு வருவோம். குணஸ்தானம், ஜீவசமாசம், பர்யாப்தி, பிராணன் முதலிய பிரரூபணைகளை இதுவரை பார்த்தோம். இப்போது **சஞ்ஞா-** அல்லது **சஞ்ஞை** பிரரூபணா பற்றி தெரிந்து கொள்ளலாம் வாருங்கள். ஆஹாரம், பயம், மைத்துனம் மற்றும் பரிகிரஹம் முதலியவைகளின் நிமித்தத்தால் எத்தகைய விருப்பம் அல்லது ஆசை நம்மிடம் தோன்றுகிறதோ அதையே **சஞ்ஞை** என்று சொல்கின்றனர். சஞ்ஞையால் பாதிக்கப்பட்ட அல்லது ஈர்க்கப்பட்ட உயிர் அந்த விஷயங்களை தற்காலத்தில் நுகர்ந்த பிறகும்கூட-அனுபவித்த பிறகும்கூட; இந்த உலகத்திலும்- இந்த பிறவியிலும் மற்ற உலகத்திலும்-அடுத்து எடுக்கப்போகும் பிறவிகளிலும் இந்த விஷயங்களை அடையவேண்டும் என்ற விருப்பமும், அடையமுடியாவிடில் எப்படி சமாளிக்கப் போகிறோம் என்ற கவலை உணர்வுகளால் மஹாதுக்கமும் உண்டாகிறது. விருப்பமே-வாஞ்சையே இந்த எல்லா துக்கங்களுக்கும் காரணமாகும்.

உணவு முதலான சாப்பிடும் பதார்தங்களைப் பார்த்தல், அவைகள் நினைவுக்கு வருதல், அதைப்பற்றிய-சமையல் முதலான விவாதங்களை கேட்டல், வயிறு காலியாதல், பசி எடுத்தல் முதலியன **ஆஹார சஞ்ஞை** உணர்வு நம்மிடம் எழ வெளிக் காரணங்களாகும் அதாவது பாஹ்ய நிமித்தங்களாகும். அசாதா வேதனீய கர்மத்தின் தீவிர உதயம் அல்லது உதீரணை அந்தரங்க நிமித்தம் அல்லது உள் காரணமாகும். இந்த சஞ்ஞை ஆறாவது குணஸ்தானம் வரையே காணப்படுகிறது. ஏழாவது அபிரமத்த சய்யத குணஸ்தானத்திலிருந்து காணப்படுவதில்லை. [ஏழாம் குணஸ்தான ஸ்வஸ்தான, சாதிஷய அபிரமத்த திகம்பர முனிராஜர்களுக்கு பசியோ, உணவு உண்ண வேண்டும் என்ன எண்ணமோ வருவதில்லை.]

பயத்தை உண்டாக்கக்கூடிய கொடிய விலங்குகளையும், பூதம், பிரேதம்-உயிரில்லாத உடல்கள் முதலியவைகளைப் பார்த்தல், அவைகளைப் பற்றிய கதைகளைக் கேட்டல், பார்த்த, கேட்ட அவைகள் தற்காலத்தில் நினைவுக்கு வருதல், சுய பலவீனம் முதலியன **பய சஞ்ஞை** தோன்ற வெளிக்காரணங்கள் அல்லது பாஹ்ய நிமித்தங்களாகும். பய நோகர்மத்தின் தீவிர உதயம் அந்தரங்க காரணமாகும். பய உணர்வு வந்ததால் அங்கிருந்து ஓடி விடுதல், அல்லது மறைந்து கொள்ளுதல் முதலியவைகளில் விருப்பம் வருவதையே **பயசஞ்ஞை** என்கின்றனர்.

புணர்ச்சி செய்ய விருப்பம் வருதல் **மைத்துன சஞ்ஞை**யாகும். காமத்தை தூண்டும் உணவு வகைகளை உண்ணுதல், காமம்-உடலுறவு சம்பந்தமான விஷயங்களைக் கேட்டல்-பார்த்தல், கெட்ட நடத்தை உள்ளவர்களுடன் தொடர்பு வைத்திருத்தல்

முதலியன மைத்துன சஞ்ஞை தோன்ற வெளிக்காரணங்கள் அல்லது பாஹ்ய நிமித்தங்களாகும். வேதநோகஷாய நோகர்மத்தின் தீவிர உதயம் அல்லது உதீரணை அந்தரங்க காரணமாகும்.

தனதான்யம் முதலான பத்துவகை பரிகிரஹங்கள்-பலவகை செல்வம் முதலான நம்வசம் இருப்பவைகளை சேர்க்கும் மற்றும் பெரிதாக்கும் விருப்பத்தை **பரிகிரஹ சஞ்ஞை** என்று சொல்கின்றனர். மற்றவர்களின் வசமிருக்கும் செல்வத்தை பார்த்தல், செல்வம் சேர்த்தல் பற்றிய சர்ச்சைகளைக் கேட்டல், லோபிகளுடன்-மற்றவர்களுக்கு தன்னிடமிருக்கும் செல்வத்தை தானமாக கொடுக்க விரும்பாத செல்வந்தர்களுடனான தொடர்பு முதலியன இதற்கு வெளி நிமித்தங்களாகும். லோப கஷாயத்தின் தீவிர உதயம் மற்றும் உதீரணை அந்தரங்க நிமித்தமாகும்.

இந்த மூன்று சஞ்ஞைகளும்கூட ஏழாவது குணஸ்தானத்திலிருந்து உபசாரமாகவே இருப்பதாக சொல்லப்படுகிறது. அது தொடர்பான செயல்கள் காணப்படுவதில்லை, அது சம்பந்தமான கர்மங்களின் அல்ப உதயமே காணப்படுகிறது. ஒன்பதாம் குணஸ்தானத்தின் முதல் பாகத்திலிருந்து மேல் குணஸ்தானங்களில் பய சஞ்ஞை இருப்பதில்லை, இரண்டாம் பாகத்திலிருந்து மைத்துன சஞ்ஞை இருப்பதில்லை. சூக்ஷம லோபம் பத்தாவது குணஸ்தானம்வரை காணப்படுகிறது ஆகையால் அதுவரை பரிகிரஹ சஞ்ஞை இருக்கிறது, அதற்கு மேல் குணஸ்தானங்களில் எந்த சஞ்ஞையும் இருப்பதில்லை.

இவ்வாறு நாம் சஞ்ஞை பிரரூபணை பற்றி விபரமாக தெரிந்து கொண்டோம். இப்போது மார்கணை பற்றி தெரிந்து கொள்ளலாம். உயிர்பொருள் அரூபியாக அதாவது வெளிப்படையாக பார்க்க முடியாத ஒன்றாக இருப்பதால், நம்மால் மற்ற பொருள்களைப் பார்த்து அறிவது போல உயிரை அறிய முடிவதில்லை. சித்த உயிர்களுக்கு கர்மம் மற்றும் உடல் இல்லையாகையாலும், மற்றும் அவர்கள் உலக உச்சியில் இருப்பதாலும் அவர்களையும் நம்மால் காணமுடிவதில்லை. ஆகமங்களில் உயிர்கள் பற்றிய வர்ணனைகளே எல்லா இடங்களிலும் காணமுடிகிறது. ஒரு உயிர் தன்னை, தன் ஞானத்தின் வழியாக அறியமுடியும் ஆனால் ஒரு உயிர் பிற உயிர்களை அவ்வாறு அறிய முடியாது. இந்த நிலைமையில் உயிர்களை எப்படி தேடுவது? எங்கு தேடினால் உயிர்கள் நமக்கு கிடைக்கும் என்பது மார்கணையின் மூலம் பூர்த்தியாகிறது.

எதன் மூலம் உயிர்களைப் பற்றி நமக்கு தெரியவருகிறதோ அல்லது எதில் உயிர்கள் இருக்கின்றனவோ அதுவே மார்கணையாகும். மார்கணை என்றால் உயிர்களை ஆய்தல் அல்லது தேடுதல் எனலாம். மார்கணைகளில் நாம்மால் உயிர்களைத் தேட முடியும், உயிர்களைப் பற்றிய மதிப்பீடு-அனுமானம் செய்ய முடியும்.

சில குறிப்பிட்ட லட்சணங்களைக் கொண்டு, உடனிருப்பவைகளை வைத்து, உடல்களை வைத்து, பொறிகளை வைத்து அல்லது பிற வேறு நோக்குகளின் எல்லா பிறவி உயிர்களையும் சில பிரிவுகளாக பிரித்து ஆய்வு செய்யமுடியும். எப்படியென்றால் தேச நோக்கில் மனிதர்களை பிரித்தால் சிலர் இந்தியர்கள், சிலர் ஜப்பானியர்கள், சிலர் அமெரிக்கர்கள் போன்ற பிரிவுகள் அமையும். அவர்களையே தொழில்முறையில் பிரித்தால் சிலரை டாக்டராகவும், சிலரை இஞ்ஜினியராகவும், சிலரை வியாபாரியாகவும், சிலரை தொழில் அதிபர்களாகவும், பலரை தொழிலாளிகளாகவும், பலரை விவசாயிகளாகவும் பிரிக்கமுடியும். பிரிக்கும் நோக்கம் மாறினால் முன்னர் ஒரு பிரிவில் இருந்தவர்கள் அடுத்து வேறு வேறு பிரிவுகளில் இருக்க முடியும்.

லிங்க நோக்கில் பிரிக்கும்போது சிலரை புருஷர்களாகவும் சிலரை ஸ்திரிகாளாகவும் பிரிக்கிறோம். வயது நோக்கில் பிரித்தால் சிலரை குழந்தைகள், சிலரை இளம் வயதினர், சிலரை நடு வயதினர், சிலரை முதியவர்கள் என்று பிரிக்கமுடியும். புத்தி நோக்கில் பிரித்தால் சிலரை அதி புத்திசாலிகளாகவும், சிலரை மந்தபுத்தி உடையவர்களாகவும், பலரை சராசரி புத்திசாலிகளாகவும் பிரிக்கலாம். செல்வ நோக்கில் சிலரை செல்வந்தர்களாகவும், பலரை நடுத்தர வர்கமாகவும் மற்றும் பலரை கீழ்மட்ட வர்கமாகவும் பிரிக்க முடியும்.

இதுபோல் 14 மார்கணைகள் மூலம் வேறு வேறு நோக்கில் உயிர்களை வெவ்வேறு பிரிவுகளாக பிரிக்க முடியும். ஒரு மார்கணையில் ஒரு பிரிவில் உள்ள உயிர்கள் வேறு மார்கணையில் வேவ்வேறு பிரிவுகளில் இருக்கமுடியும். எப்படி தொழில் நோக்கில் பிரிக்கும்போது யார் டாக்டர்களோ அவர்களை தேச நோக்கில் பிரிக்கும்போது டாக்டர் பிரிவில் முன்னர் ஒன்றாக இருந்தவர்கள் இப்போது வேவ்வேறு தேசப்பிரிவுகளில் வருவதுபோல அல்லது ஸ்திரி புருஷ நோக்கில் சிலர் புருஷர் பிரிவிலும் சிலர் ஸ்திரி பிரிவிலும் இருப்பர், அவர்களை வயது நோக்கில் பிரிக்கும்போது அவர்கள் வெவ்வேறு பிரிவுகளில் அடங்குவது போல என அறியலாம். தொழில் பிரிவில் சிறுவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள் அதுபோல உயிர்களை குறிப்பிட்ட ஒரு வகையாகப் பிரிக்கும்போது ஏதாவது ஒரு பிரிவில் இருக்கலாம் வேறு குறிப்பிட்ட நோக்கில் எந்த பிரிவிலும் வராமலும் இருக்க முடியும்.

முதன்முதலில் நாம் 14 மார்க்கணையின் பெயரகளைத் தெரிந்து கொள்ளலாம். அவைகளாவன:- **1.கதி மர்கணை, 2.இந்திரிய மர்கணை, 3.காய மர்கணை, 4.யோக மர்கணை, 5.வேத மர்கணை, 6.கஷாய மர்கணை, 7.ஞான மர்கணை, 8.சம்யம மர்கணை, 9.தர்சன மர்கணை, 10.லேஷ்யா மர்கணை, 11.பவ்ய மர்கணை, 12.சம்யக்த்துவ மர்கணை, 13.சஞ்சி மர்கணை, 14.ஆஹார மர்கணை** என்பனவாகும்.

1. கதி மார்கணை:- கதி மார்கணையில் எல்லா சம்சாரி-பிறவி உயிர்களும் கதி நோக்கில் **1.நரக கதி, 2.விலங்கு கதி, 3.மனித கதி 4.தேவ கதி** என நான்கு கதிகளில் பிரிக்கப்படுகின்றன. கதி நாமகர்ம உதயத்தால் உயிர் அந்த குறிப்பிட்ட பிறவியில் சென்று பிறக்கிறது. இவைகளில் நரக, மனித, தேவ கதி உயிர்கள் மனமுடைய ஐம்பொறி உயிர்களாகும் ஆனால் விலங்கு கதியில் மட்டும் ஒரு பொறி முதல் ஐந்து பொறி வரை எல்லா வகை உயிர்களும் காணப்படுகின்றன. **பாலபோத பாடமாலா** என்ற புத்தகத்தில் கதி பெயர் கொண்ட பாடத்தில் நீங்கள் இதைப்பற்றி விரிவாகப் படித்திருக்கிறீர்கள்.

2. இந்திரிய மார்கணை:- இந்திரிய மார்கணை சம்பந்தமாக முதலில் இந்திரியம்-பொறி என்றால் என்ன? என்று பார்க்கலாம். இந்திரியம் பாவேந்திரியம், திரவ்யேந்திரியம் என இரண்டு விதமாக இருக்கின்றன. லப்தி மற்றும் உபயோகம் இரண்டும் சேர்ந்தது பாவேந்திரியமாகும்.

மதி ஞானாவரண ஷயோபசமத்தால் இந்திரியங்களின் விஷயங்களை அறியும் உயிரின் சக்தியை **லப்தி** என்கின்றனர். விஷயங்களை அறியும் அமலாக்கம் அதாவது அறியும் செயல் நிகழ்தலை **உபயோகம்** என்கின்றனர். எப்படியென்றால், ஒரு சிறுவனுக்கு கேட்கும் சக்தி இருக்கிறது, ஆனால் அவனுடைய உபயோகம் விளையாட்டில் அல்லது வேறு எதையாவது பார்ப்பதில் இருந்தால், அவனை பெயர் சொல்லி கூப்பிட்டாலும் அவனுக்கு கேட்பதில்லை. இதற்கு மாறாக ஒரு மனிதர் அறிய விரும்புகிறார் ஆனால் ஷயோபசமவடிவ சக்தி அவரிடம் இல்லாததால் அவரால் அறியும் செயலை செய்ய

முடியாமல் போகிறது. ஆகையால் லப்தி, உபயோகம் இரண்டும் சேர்ந்தே ஒரு விஷயத்தைப் பற்றிய அறிவு உண்டாகிறது. [உயிருக்கு அதிக பட்சம் ஐந்து பொறிகள் இருக்கமுடியும் ஆனால் ஒரே சமயத்தில் ஒரு பொறி சம்பந்தமான சக்தியையே எந்த உயிரும் உபயோகம் செய்ய முடியும்.]

திரவ்யேந்திரியம் உடலில் குறிப்பிட்ட இடத்தின் வடிவ அமைப்பாகும்-சின்னமாகும். திரவ்யேந்திரியங்களை நம்மால் பார்க்கமுடியும் என்பது நமக்கு தெரிந்ததுதான். **நிர்விருத்தி** மற்றும் **உபகரணம்** இரண்டும் சேர்ந்த்து திரவ்யேந்திரியமாகும். எந்த பிரதேசத்தின் மூலம் அறிதல் நிகழ்கிறதோ அதை நிர்விருத்தி என்று சொல்கின்றனர். அந்த பிரதேசத்திற்கு அருகிலுள்ளவை உபகரணம் ஆகும். முன்னர் நாம் ஜீவசமாசத்தில் உயிர்களை பொறி-இந்திரிய நோக்கில் ஐந்து பிரிவுகளாகப் பார்த்தோம். ஒருபொறியின, இரண்டு பொறியின, மூன்று பொறியின, நான்கு பொறியின மற்றும் ஐம்பொறியின என எல்லா பிறவி உயிர்களும் இந்த ஐந்து பொறி பிரிவுகளில் அடங்கி விடுகின்றன.

3. காய மார்கணை:- காய மார்கணையில் காயம் அதாவது உடல் நோக்கில் எல்லா பிறவி உயிர்களையும் பிரித்து வகைபடுத்தப்படுகிறது. **ஷட்காய உயிர்களின் மேல் வன்முறை நிகழாமல் நாம் தப்பிக்க வேண்டும்** என்று சாஸ்திரங்களில் நீங்கள் படித்திருப்பீர்கள். இந்த ஷட்காயங்கள் எவை? அவைகளை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? இல்லையென்றால் கேளுங்கள். அவைகளில் ஒன்று **திரசகாயிக்**-இடம் விட்டு இடம் பெயரும் உயிர்கள் மற்ற ஐந்தும் **ஸ்தாவர காயிக்**-நிலையாக இருக்கும் உயிர்கள்.

மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி, வனஸ்பதியுடலி(தாவர உடலி) ஐந்தும் நிலை உயிர்களாகும். அவைகளுக்கு ஸ்தாவர நாமகர்மமத்தின் உதயம் இருக்கிறது. இரண்டுபொறி முதல் மனமுடைய ஐம்பொறி உயிர்கள்வரை எல்லா உயிர்களையும் திரசகாயிக்-இடம் பெயரும் உயிர்கள் என்று சொல்கிறோம். அவைகளுக்கு திரச நாமகர்மத்தின் உதயம் இருக்கிறது. தேவர், நரகர், மனிதர் மற்றும் இரண்டு பொறிமுதல் ஐம்பொறிவரை உடைய விலங்கு உயிர்கள் திரச உயிர்களாகும்.

மண்ணுடலிகளில் பூமி, மண், மணல், கல், வைரம், மாணிக்கம், இரத்தினம் முதலியன அடங்கும். நீருடலியில் கிணறு, நீர்வீழ்ச்சி, நதி முதலியவற்றில் உள்ள நீர், மூடுபனி, பனித்துளி முதலிய நீர் எல்லாம் இதிலடங்கும். காற்றுடலியில் கனோததி வாதவலயம், கன வாதவலயம், தனுவாத வலயம் முதலான பிரிவுகள் இருக்கின்றன. நெருப்புடலியில் பல்வேறு வகை நெருப்பு-தீப்பொறி, நெருப்பு, எரியும் நிலக்கரி, ஜ்வாலாமுகி-எரிமலைப் பிழம்பு, மின்னல், எலக்ட்ரிக் ஸ்பார்க் முதலியன எல்லாம் அடங்கும்.

மேலே கூறிய எல்லாம் பாதர-பெரிய ஸ்தாவர உயிர்களாகும். அவைகளின் சமூகத்தை நம்மால் நம் கண்களின் மூலம் பார்க்கமுடியும். இந்த ஐந்து வகை ஸ்தாவரங்களிலும் சூட்சம-நுண்ணிய உயிர்கள்கூட இருக்கின்றன. அவைகள் லோகாகாசம் முழுவதும் நிரம்பியிருக்கின்றன. அவைகளை நம் கண்களால் பார்க்க முடிவதில்லை. பிறபொருள்கள் எதுவும் அவைகளை தடை செய்வதில்லை, அவைகளும் எதையும் தடுப்பதுமில்லை. அவைகள் எந்த ஆதாரமும் இன்றி தாமாகவே வாழ்பவைகளாகும் என முன்னரே நாம் இவைகளப் பற்றி சர்ச்சை செய்திருக்கிறோம், ஞாபகம் இருக்கிறதா?

ஒவ்வொரு ஸ்தாவரத்திலும் மூன்று பிரிவுகள் இருக்கின்றன. மண்ணை உதாரணமாகக் கொண்டு இந்த பிரிவுகளை தெரிந்து கொள்ளலாம். மூன்று பிரிவுகளாவன:- **மண்உயிர், மண்ணுடலி உயிர், மண்உடல்** என்பன.

ஒரு உயிர் முற்பிறவியில் மரணமடைந்து மண்ணுடலி உயிராக பிறவி எடுக்க விக்ரக்கதியில் செல்லும் காலம்வரை அதை மண்உயிர் என்று சொல்கின்றனர். அந்த உயிர் மண் உடலை ஏற்றிருக்கும்போது-மண்ணுடலி உயிராக வாழும்போது அதை மண்ணுடலி உயிர் என்று சொல்கின்றனர். மண்ணுடலி உயிர் மரணமடைந்து வேறு இடத்திற்கு செல்லும்போது இதுவரை அது வாழ்ந்த உடல் அங்கு இருக்கிறது, அந்த பிரேதத்தை-உயிரற்ற உடலை மண்உடல் என்று சொல்கின்றனர்.

மேலே கூறிய மூன்று பிரிவுகளும் ஒன்றாக எதில் குறிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட பொதுவடிவ மண் பெயர் கொண்ட நான்காவது பிரிவு கூட சாஸ்திரங்களில் சில இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு மூன்று அல்லது நான்கு பிரிவுகள் எல்லா ஸ்தாவர உயிர்களிலும் இருக்க முடியும்.

வனஸ்பதி உடலி உயிர்களைப் பற்றிய பிரிவு உட்பிரிவுகளை நாம் ஜீவசமாசத்திலேயே பார்த்திருக்கிறோம். இங்கு மீண்டும் ஒருமுறை அவைகளைப்பற்றி பார்க்கலாம். வனஸ்பதி-தாவரஉடலி உயிர்கள் முக்கியமாக இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன. **பிரத்யேக வனஸ்பதி, சாதாரண வனஸ்பதி** அதாவது **தனியுடலி, பொதுவுடலி** என்பதே அந்த இரண்டு முக்கிய பிரிவுகளாகும். தனியுடலி என்பதன் பொருள் ஒரு உடலில் ஒரு உயிர் வாழ்வது. பொதுவுடலி என்பதன் பொருள் ஒரு உடலில் அனந்த உயிர்கள் வழ்வது. **பொது உடலியையே நிகோதம்** என்று சொல்கின்றனர். அதற்கு உடல் ஒன்று, ஸ்வாசோச்வாசம் அவ்வுயிர்களுக்கு ஒன்றாக இருக்கும், ஒன்றாகவே பிறக்கும், ஒன்றாகவே மரணமடையும், அவைகளின் ஆயுளும் சமமாக இருக்கும், பர்யாப்தமும் சமமாக இருக்கும். இந்த சிறப்புகளையெல்லாம் நாம் முன்னரே பார்த்திருக்கிறோம்.

தனிஉடலி தாவரங்கள் பாதர ஏகேந்திரிய உயிர்களாகும். அவைகளில் **சபிரதிஷ்டித், அபிரதிஷ்டித்** என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. எந்த தனிஉடலி தாவரத்தின் ஆதாரத்தில் பொது தாவர உடலி உயிர்கள் வாழ்கின்றனவோ அதை சபிரதிஷ்டித் தனிஉடலி தாவரம் என்கின்றனர். மரத்தில் அனந்த துளிர்களையும், நரம்புகள் இருப்பது தெரியாத மிருதுவான சிறிய இலைகளையும், சிறிய பூ மொட்டுக்களையும், பிஞ்சி காய்களையும் காண முடியும். அந்த இலைகளை மடித்தால் சம பாகமாக உடைந்து விடும்அவைகள் இருக்கும் தாவரங்களை பிரதிஷ்டித் தனிஉடலி தாவரங்கள் என்று சொல்கின்றனர்.



அந்த துளிர் இலைகள் கொஞ்சம் முற்றியதும் அவைகளில் நரம்புகள் தெரிகின்றன. அவைகளை மடித்தால் சம துண்டாவதில்லை, அப்படி துண்டானாலும் நரம்புகளால் அந்த துண்டுகள் ஒட்டிக்கொண்டிருக்கும். அந்த நிலையில் அவைகளில் சாதாரண உயிர்கள்-நிகோதங்கள் அதிக அளவில் வாழ்வதில்லை. ஆகையால் அப்படிப்பட்ட இலைகளை, பூக்களை, காய்களை அபிரதிஷ்டித் தனிவனஸ்பதி என்று சொல்கின்றனர். சபிரதிஷ்டித், அபிரதிஷ்டித் இரண்டிலும் பர்யப்தம், அபர்யாபதம் என இரண்டு உட்பிரிவுகள் இருக்கின்றன.

இவ்வாறு தனிஉடலி தாவரத்தில் நான்கு பிரிவுகள் இருப்பதைப் பார்த்தோம். இப்போது பொதுஉடலி வனஸ்பதி அதாவது நிகோதத்தின் பிரிவுகளைப் பற்றி பார்க்கலாம். நிகோதம் என்ற வார்த்தையை நாம் பலமுறை சாஸ்திரங்களில் படித்திருக்கிறோம். ஆனால் இதன் அர்த்தத்தை பலர் சரியாகத் தெரிந்திருக்கவில்லை. பொதுஉடலி தாவரம் என்றால் நிகோத உயிர்கள், இதில் சூட்சமம், பாதரம் அதாவது நுண்ணியவை, பெரியவை என்று இரண்டு முக்கிய பிரிவுகள் இருக்கின்றன. இந்த இரண்டிலும் நித்யநிகோதம், இதரநிகோதம் என இரண்டு வகைகளாக நிகோத உயிர்கள் காணப்படுகின்றன.

நித்யநிகோதம் என்றால் அந்த உயிர்கள் அனாதி காலமாக இன்றுவரை இடைவிடாது நிகோத பிறவியிலேயே பிறந்து, இறந்து வருகின்றன, வேறு எந்த பிறவியிலும் அவை ஒருமுறைகூட பிறவி எடுக்கவில்லை என்று பொருள். இதரநிகோதம் என்றால் அந்த உயிர்கள் நிகோத பிறவியிலிருந்து வெளியேவந்து மற்ற ஏகேந்திரிய மற்றும் திரச பர்யாயங்களில் பிறவி எடுத்து சிலகாலம் அவைகளில் பிறந்து, இறந்து பிறகு மீண்டும் நிகோத பர்யாத்தை பெற்று நிகழ்காலத்தில் நிகோத பிறவியிலேயே பிறந்து, இறந்து கொண்டிருப்பவைகளாகும். [இப்படி நித்ய நிகோதத்திலிருந்து திரசநாளிக்கு வந்து பலவகையான பிறவிகளில் அதிக பட்சம் 2,000 கடற்காலம் சுற்றமுடியும். அதற்குள் முக்தி அடையவில்லை என்றால் அவசியம் அந்த உயிர்கள் இதர நிகோத பிறவிகளுக்கு மீண்டும் சென்று அங்கேயே சுற்ற வேண்டியதுதான். பிறகு மீண்டும் திரசநாளியில் திரச உயிர்களில் பிறக்க அதிகபட்சம் இரண்டரை புத்கல பராவர்த்தன காலம்கூட ஆகலாம்.]

இந்த நிகோத பிரிவுகளில்கூட பர்யாப்தம், அபர்யாப்தம் என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. நிகோதம் என்றதுமே ஒரு சுவாச காலத்தில் 18 முறை பிறந்து, இறக்கும் உயிர்கள் என்று பலர் நினைக்கின்றனர். அந்த நிலை அபர்யாப்த (லப்தி அபர்யாப்த) நிகோத பிறவி உயிர்களுக்கே பொருந்தும். அதோடு மட்டுமல்ல, ஒரு பொறி முதல் மனமுடைய ஐம்பொறிவரை எல்லா அபர்யாப்த உயிர்கள் எல்லாம் கூட அத்தகைய அல்ப ஆயுள் உடயவைகள்தான். அபர்யாப்த உயிர்கள் இடைவிடாது சூத்ரபவத்திலேயே பிறந்து இறந்து கொண்டிருந்தால் அந்தர்முகூர்த்த காலத்தில் ஒரு உயிர் 66,336 பவங்கள் எடுக்கின்றன என்று பர்யாப்தி பிரரூபணையில் நாம் பார்த்தோம். அவைகளில் ஒருபொறியில் மட்டும் சூத்ரபவம் 66,132 ஆகும்.

அவைகளில் மண், நீர், காற்று, நெருப்பு, சாதாரண தாவரம் ஒவ்வொன்றிலும் சூட்சமம் மற்றும் பாதரம் என்ற இரண்டு பிரிவுகள் சேர்ந்து 10 வகை மற்றும் தனிஉடலி தாவரம் ஒருவகை எல்லாம் சேர்ந்த 11 வகையிலும் தொடர்ச்சியாக ஒருபொறி சூத்ரபவங்கள் அமைய முடியும். ஆகையால் ஒரு அந்தர்முகூர்த்த காலத்தில் (66,132/11) 6,012 முறை ஒவ்வொரு ஒருபொறி வகையிலும் தொடர்ந்து சூத்ர பிறவி எடுக்க முடியும்.

பாதர பொது வனஸ்பதி அதாவது பாதர நிகோத உயிர்கள் தனிஉடலி தாவரங்களில் ஆதாரத்தில் மட்டுமே வாழும் என்பதில்லை. இரண்டு பொறி முதல் ஐம்பொறி வரை உள்ள

விலங்கு மற்றும் மனிதரின் உடல்களின் ஆதாரத்திலும் கூட அவைகள் வாழ்கின்றன. இதற்கு விதிவிலக்கு கேவலி பகவானின் உடல் மற்றும் முனியின் ஆஹாரக உடல் ஆகியவைகளாகும், அந்த உடல்களில் நிகோத உயிர் இருப்பதில்லை. பன்னிரண்டாவது குணஸ்தான உயிரின் ஔதாரிக உடலிலிருந்து நிகோத உயிர்கள் வெளியேறத் தொடங்கி விடுகின்றன மற்றும் பதிமூன்றம் குணஸ்தானத் தொடக்கத்திலேயே அரஹந்தரின் உடல் நிகோத உயிர்கள் அற்ற **பரம ஔதாரிக** உடலாக மாறி விடுகிறது.

மண்ணுடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி உயிர்களின் ஔதாரிக உடலில்கூட பாதர நிகோதியா உயிர்கள் வாழ்வதில்லை. தேவர், மற்றும் நரகர்களின் வைக்ரீயிக உடல்களிலும்கூட பாதர நிகோதியா உயிர்கள் வாழ்வதில்லை. பாதர நிகோத உயிர்களைப் பற்றி மட்டுமே சொல்வதின் காரணம் என்னவென்றால் அவைகள் வாழமட்டுமே வேறு ஔதாரிக உடலின் ஆதாரம் தேவைப்படுகிறது, சூட்சம நிகோதியா உயிர்கள் உலகில் எல்லா இடங்களிலும் வாழ்கின்றன, ஆனால் அவைகள் வாழ வேறு எந்த ஆதாரமும் தேவைப்படுவதில்லை. நிகோத உயிர்களின் பிரிவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.



இவ்வாறு தனிஉடலி தாவர உயிர்கள் நான்கு வகையாகவும் பொதுஉடலி தாவர உயிர்கள் எட்டு வகையாகவும் இருப்பதை நாம் தெரிந்து கொண்டோம்.

ஹே உயிரே! இந்த எல்லா பிறவிகளிலும் நீ அனாதி காலமாக அனந்த முறை பிறந்து, இறந்து காலத்தை கழித்திருக்கிறாய்! உனக்கு நினைவில்லை என்றால் அதனால் என்ன? இந்த பர்யாயங்களை எல்லாம் கடந்து மிகவும் கிடைப்பதற்கரிய மனிதப் பிறவி இப்போது உங்களுக்கு கிடைத்திருக்கிறது. ஆனால் நீங்கள் அதன் மதிப்பு தெரியாதவராக இருக்கிறீர்கள். நீங்கள் இப்போதுகூட உங்களுக்கு நலம் கொடுக்கக்கூடிய விஷயம் பற்றி பரிசீலனை செய்யவில்லை என்றால் அல்லது யாராவது இதைப்பற்றி எடுத்துச் சொன்னால் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், மீண்டும் இந்த பிறவிகளுக்கே திரும்பச் செல்ல வேண்டியது நிச்சயிக்கப் பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

சூத்ர பவத்தில் சம்மூர்ச்சன மனிதபிறவிகூட சேர்ந்திருக்கிறது. ஒரு அந்தர்முகூர்தத்தில் அப்பிறவியில் இடைவிடாது எட்டு பவங்கள் எடுக்கமுடியும்.

அப்படிப்பட்ட மனிதப்பிறவி கிடைத்து என்ன பிரயோஜனம்? அந்த பேச்சை எல்லாம் விட்டுவிடுவோம். மகள்களே! ஹே உயிரே!! இப்போது நீங்கள் என்னவோ பர்யாப்த மனிதப்பிறவி எடுத்திருக்கிறீர்கள். உண்மையான தேவ, சாஸ்திர, குரு மற்றும் யதார்த்த உபதேசம் உங்களுக்கு கிடைத்திருக்கிறது. இவ்வளவு கிடைத்திருந்தும் நீங்கள் உங்கள் ஆத்ம ஸ்வபாவத்தை மற்றும் ஆத்ம வைபவத்தை பார்க்கவில்லை என்றால், அறியவில்லை என்றால் உங்களுடைய இந்த மனித பிறவியால் என்ன பிரயோஜனம்?

ஒரு உயிர் தன் ஆத்ம ஸ்வபாவத்தில் உபயோகத்தை செலுத்தாமல், சுப உணர்வு கொண்டு பூஜை, விரதம், உபவாசம், தானம், தீர்த்தயாத்திரை முதலியவைகளில் மட்டுமே இந்த மனித பிறவியை கழித்தால், அவருக்கு ஒரு பவம் ஸ்வர்கத்தில் கிடைக்கக்கூடும். அங்கு சென்று பிறந்த பிறகு அங்கு கிடைக்கும் ஐஸ்வர்யங்களை அனுபவிப்பதில் இச்சை கொள்ளும் பாபச்செயலாலும், மேலும் மற்ற தேவர்களின் வைபவங்களைப் பார்த்து தீவிர பொறாமை கொள்வதாலும், பெரும்பாலான தேவ பிறவி உயிர்கள் மண்ணுடலி முதலான ஏகேந்திரியங்களில் பிறவி எடுக்கிறார்கள். அதற்குப்பிறகு மீண்டும் பல பவங்களில் பிறந்து அலைய வேண்டியதுதான்!

ஹே உயிரே! உலக விஷயங்களில் மட்டும் நீயாகவே எல்லாவற்றையும் நன்றாகப் புரிந்து கொண்டு அதிபுத்திசாலியாக நடந்து கொள்கிறாய். ஆனால் இந்த நேரான, எளிமையான, உனக்கு நிலையான ஆனந்தத்தை கொடுக்கும் விஷயத்தைப் பற்றி மட்டும் ஏன் உன்னால் புரிந்து கொள்ள முடியாது என்று நினைக்கிறாய்?

நீங்கள் இந்த விஷயத்தைப்பற்றி அவசியம் தீவிரமாக ஆலோசனை செய்வீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மற்றவைகளை அடுத்த கடிதத்தில் பார்க்கலாம்.

- உங்கள் அம்மா.

யோக, வேத, கஷாய, ஞான, சய்யம மார்க்கணை

கடிதம்-18 ஓம் நம: சித்தேப்ய: 2-10-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

முன் கடிதத்திலிருந்து நாம் மார்கணை பற்றிய விஷயங்களை தெரிந்து கொண்டு வருகிறோம். பதிநான்கு மார்கணைகளில் கதி மார்கணை, இந்திரிய மார்கணை, காய மார்கணை சம்பந்தமான சர்ச்சையை இதுவரை நாம் செய்தோம். இன்று மேலும் சில மார்கணைகளைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

4. யோக மார்கணை:- முதலில் **யோகம்** என்றால் என்ன பொருள் என்று பார்க்கலாம். பிறவி உயிர்கள் அனாதிகாலமாக கர்ம பந்தத்துடன் இருக்கின்றன, இடைவிடாது புதுப்பபுது கர்மங்களை கட்டிக்கொண்டே இருக்கின்றன. மற்றும் உடல் சம்பந்தமான நோகர்ம வர்கணைகளைக்கூட கிரஹிக்கின்றன. கர்ம நோகர்ம புத்கல வர்வணைகளை கர்ம-நோகர்ம வடிவமாக மாற்றக்கூடிய ஆத்மாவின் சக்தியை **பாவ யோகம்** என்று சொல்கின்றனர். அந்த சமயத்தில் ஆத்மப் பிரதேசத்தில் உண்டாகும் சலனத்தை-நடுக்கத்தை ஒரு விதமான உதரலை **திரவ்விய யோகம்** என்று சொல்கின்றனர்.

எவ்வாறு நெருப்புடன் தொடர்புடைய இரும்பில் அதுவே நெருப்புப் பிழம்புபோல பழுத்து ஜொலிக்கும் சக்தி உண்டாகிறதோ அதுபோல அங்க, உபஅங்க மற்றும் சரீர நமாகர்ம உதயத்தின் காரணத்தால் பாஷாவர்கணை, மனோவர்கணை, மற்றும் ஆஹாரவர்கணைகளின் ஸ்கந்தங்கள் உயிரிடம் வருகின்றன. அப்போது அவைகளின் தொடர்பால் உயிர் பிரதேசத்தில் கர்ம-நோகர்மங்களை தன்வசம் இழுத்துக்கொள்ளும் சக்தி-சாமர்தியம் தோன்றுவதை யோகம் என்று சொல்கின்றனர்.

இங்கே பாருங்கள், யாராவது ஒருவர் உடற்பயிற்சி செய்தால் அவருடைய உடல் வலுவுடையதாகிறது. எந்த அவயவத்திற்கு அவர் அதிகமாக பயிற்சி கொடுக்கிறாரோ அந்த அவயவம் அதிகசக்தி வாய்ந்ததாகிறது மற்றும் அளவில் பெரிதாகத் தெரிகிறது. இதன் பொருள் யோகத்தின் மூலம் குறிப்பிட்ட ஸ்கந்தங்கள் அங்கு அதிகமாக திரளகின்றன என அறியலாம். சிலகாலம் வரை அவர் குறிப்பிட்ட தசைகளுக்கு வேலை கொடுக்காவிட்டால்-அதை உபயோகிக்காவிட்டால் அதில் சக்தி குறைந்து மெலிந்து போய்விடுகிறது-சுருங்கி விடுகிறது. போலியோவால் பாதிக்கப்பட்டவர் நடக்க முடிவதில்லை, ஆகையால்தான் அவர் எந்த காலை உபயோகப்பதில்லையோ அந்த கால் மெலிந்தே காணப்படுகிறது. இவ்வாறு காரண-காரிய சம்பந்தம் பற்றி நாம் சிந்தித்தால் உலக சம்பந்தமான பல விஷயங்களின் இரகசியங்களை நம்மால் தெரிந்து கொள்ள முடியும்.

மன யோகம், வசன யோகம், மற்றும் **காய யோகம்** என மூன்று விதமான யோகம் நிகழ முடியும். யோகம் 13-ஆம் சயோககேவலி குணஸ்தானம்வரை இருக்கிறது. 14-வது அயோககேவலி குணஸ்தானத்தில் உயிர் பிரதேசத்தில் யோகத்தின் நடுக்கம்-சலனம் முழுவதுமாக நின்றுபோய் விடுகிறது, அங்கு யோகம் இருப்பதில்லை.

மனமுடைய ஐம்பொறி உயிர்களிடம் மூன்று யோகமும் இருக்கிறது. இரண்டு பொறி முதல் மனமில்லாத ஐம்பொறி உயிர்களிடம் மன யோகம் தவிர மற்ற வசன யோகம், காய

யோகம் இரண்டும் இருக்கிறது. ஒரு பொறி உயிர்களுக்கு மனம், வசனம் இரண்டும் இல்லாததால் காய யோகம் ஒன்று மட்டுமே இருக்கிறது. விக்ரக கதியில் எந்த யோகமாவது இருக்கிறதா இல்லையா? என்ற கேள்வி எழுவது இயற்கையே! அங்கு கார்மண காய யோகம் மட்டுமே இருக்கிறது.

இதன் பொருள் என்னவென்றால் அனாதி காலமாக பிறவி உயிர்களிடம் ஒருசமயம் கூட யோகம் இல்லாத நேரமே இல்லை. எந்த உயிர் அரஹந்த நிலை அடைந்து பிறகு அது 14-ஆம் குணஸ்தானம் அடையும் ஒரு சமயம் முன்வரை அந்த உயிரிடம் யோகம் இருக்கிறது, அதாவது அதுவரை எல்லா பிறவி உயிர்களும் கர்ம-நோகர்மங்களை கிரஹித்த வண்ணமே இருக்கின்றன என உறுதிப் படுத்துதல் வேண்டும்.

உயிரிடம் ஒரு சமயத்தில் ஒரு யோகமே நிகழ்கிறது. மன யோகம் நிகழும்போது மற்ற இரண்டு காய, வசன யோகங்களும் நிகழ்வதில்லை. வசன யோகமோ, காய யோகமோ இருக்குமானால் மற்ற இரண்டு யோகங்களும் நிகழ்வதில்லை. நாம் ஒரே சமயத்தில் மன, வசன, காயங்களின் செயல்கள் நிகழ்வதை பார்ப்பதால், இது எப்படி முடியும்? என்ற சந்தேகம் வரவே செய்யும். இதற்கு காரணம் ஒரு காரியம் நிகழும்போது வேறு காரியத்தின் சடங்குகள் உடனடியாக நிற்பதில்லை, தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன, ஆகையால் இரண்டு அல்லது மூன்று யோகமும் ஒன்றாக நிகழ்வது போல நமக்குத் தெரிகிறது.

உயிர் பேசும்செயலை செய்யும்போது வசன யோகம் மாறி மன யோகம் தொடங்குகிறது, ஆனால் முன் வசனயோகத்தின் சக்தியால் பேசும் செயலும்கூட உடன் நிகழ்ந்து கொண்டிருக்கிறது, சர்க்கஸில் ஒரு கலைஞர் இரண்டு கைகளாலும் 5-5, 6-6 பந்துகளை ஒரே சமயத்தில் தூக்கிப்போட்டு விளையாடும் கலையை பயிற்சி செய்து நாம் முன் விளையாடிக் காட்டுவதை பார்த்திருக்கிறோம் அல்லவா. அதுபோல யோக மாற்றத்தின் கலையை எல்லா உயிர்களும் இயற்கையாகவே பெற்றிருக்கின்றன அதனால் மூன்று யோகத்தின் காரியங்களும் ஒரே சமயத்தில் நிகழ்வது போலத் தெரிகிறது.

மன யோகமும், வசன யோகமும் நான்கு விதமாகவும், காய யோகம் ஏழு விதமாகவும் இருக்கின்றன. சத்ய, அசத்ய, உபய, அனுபய வடிவில் இருக்கும் பதார்தங்களை அறிய உயிர் முனையும்போது அப்போது அதன் உயிர் பிரதேசத்தில் நான்கு வித மன யோகம் நிகழ்கிறது. அந்த பதார்தங்களை எடுத்துச் சொல்ல உயிர் முனையும்போது நான்கு வித வசன யோகம் உயிர் பிரதேசத்தில் நிகழ்கிறது.

சத்தியம், அசத்தியம் முதலியன எப்படி பலவகையான பதார்த்தங்களில் பொருந்தும் என்பதை உதாரணங்கள் மூலம் பார்க்கலாம். நீரை தண்ணீர் என்று அறிதல் சத்தியம், ஏனேனில் அந்த நீரைக் குடித்து தாகத்தை போக்கிக் கொள்ளமுடியும். கானல்நீரை தண்ணீர் என்று அறிதல் அசத்தியம், ஏனேனில் கானல்நீரைக் கொண்டு குளிக்கவோ அல்லது பிற பொருளைக் கழுவவோ முடியாது. கமண்டலத்தை சொம்பு என்று அறிதல் உபயமாகும். கமண்டலத்தில் தண்ணிரை வைத்துக் கொள்வது போல, சொம்பிலும் தண்ணிரை வைத்துக் கொள்ள முடியும் அதனால் சத்தியம். ஆனால் கமண்டலத்தின் வடிவம் வேறு, சொம்பின் வடிவம் வேறு அதனால் அசத்தியம். சத்தியம் அசத்தியம் இரண்டும் இருப்பதை உபயம் என அறியவும். எந்த பதார்த்தத்தை சிறப்பாக உறுதி செய்ய முடியாதோ அதை அனுபயம் என்று சொல்கின்றனர். ஒரு பதார்த்தத்தை உண்மையாக பார்த்து அறிய முடிவதில்லை அதனால் அது சத்தியமில்லை. ஆனால் பொதுவாக அப்படி இல்லாத ஒன்றை சொல்வது வழக்கத்தில் காணப்படுகிறது எனவே அது

அசத்தியமுமில்லை. உதாரணம் ஆகாச தாமரை, குதிரைக் கொம்பு முதலியன. சத்தியம், அசத்தியம் இரண்டும் இல்லாத்தை அனுபயம் என அறியவும்.

இவ்வாறு நிகழும் மனத்தின் சத்தியம், அசத்தியம், உபயம், அனுபயம் ஆகிய நான்குவகையான செயல்களை மனோயோகம் என்று சொல்கின்றனர். இவ்வாறே வசனயோகம்கூட சத்தியம், அசத்தியம், உபயம், அனுபயம் என நான்கு விதமாக இருக்கிறது. கேவலி பகவானின் திவ்யத்தொனியை சத்திய மற்றும் அனுபய வசனயோகம் என்று சொல்லப்படுகிது. இதன் காரணம் திவ்யத்தொனி எழுத்து வடிவமில்லை அதனால் அனுபய வசனயோகம் மற்றும் கேட்பவர்களின் காதுகளில் விழுந்து எழுத்து வடிவமாகி அவருடைய சந்தேகங்களைப் போக்குவதால் அது சத்திய வசனயோக மாகிறது.

கேவலி பகவானுக்கு மனோயோகம் இருக்கிறது என்று சொல்லும்போது அங்கு அது உபசாரமாகச் சொல்லப்படுகிறது என எடுத்துக்கொள்ள வேண்டும். சதுமஸ்தர்களுக்கு (ஆவரணத்துடன் கூடிய அறிவு உள்ளவர்களுக்கு) மனயோகம் பூர்வமாக பேசுதல், அதாவது மனதில் சிந்தித்து பிறகு வாய்வழியாகப் பேசுதல் நிகழ்கிறது, ஆகையால் கேவலிக்குக்கூட மனோயோகம் இருப்பதாக உபசாரமாகச் சொல்லப்படுகிறது. **[**உண்மையில் அவருடைய அறிவு கேவல அறிவாகையால், ஆவரணமற்ற அறிவாகையால், அவர் நேரடியாக அறிவதே அப்படியே திவ்யத்தொனியில் வருகிறது.**]**

காய யோகத்தின் ஏழு வகைகளாவன:- **1.ஔதாரிக் காயயோகம், 2.ஔதாரிக மிஸ்ர காயயோகம், 3.வைக்ரீயிக காய யோகம், 4.வைக்ரீயிக மிஸ்ர காயயோகம், 5. ஆஹாரக காயயோகம், 6.ஆஹாரக மிஸ்ர காயயோகம், 7. கார்மண காயயோகம்.** இவைகளில் அந்தந்த உடலின் அபர்யாப்த நிலையில் அந்தந்த மிஸ்ர காயயோகம் நிகழ்கிறது. விக்ரஹ கதியில் கார்மண காயயோகம் மட்டுமே நிகழ்கிறது.

மனிதர் மற்றும் விலங்கு உயிர்களுக்கு ஔதாரிக காயயோகம், ஔதாரிக மிஸ்ர காயயோகம் நிகழ்கிறது. தேவர் மற்றும் நாரகி உயிர்களுக்கு வைக்ரீயிக காய யோகம், வைக்ரீயிக மிஸ்ர காயயோகம் நிகழ்கிறது. ஆஹாரக சரீரம் உடைய முனிவருக்கு ஆஹாரக காயயோகம், ஆஹாரக மிஸ்ர காயயோகம் நிகழ்கிறது.

இவ்வாறு மனதிற்கு நான்கு, வசனத்திற்கு நான்கு மற்றும் காயத்திற்கு-உடலுக்கு ஏழு யோகங்கள் என ஆகமொத்தம் 15 யோகங்கள் இருப்பதை நாம் பார்த்தோம். கர்ம, நோகர்ம பந்தம் எவ்வாறு நிகழ்கிறது எனபதைப்பற்றி முன்னரே நாம் யோகத்தால் பிரக்ருதி பந்தமும், பிரதேச பந்தமும் நிகழ்கிறது என்பதை விரிவாகவே பார்த்திருக்கிறோம். இப்போது வேத மார்கணை பற்றிப் பார்க்கலாம்.

5. வேத மார்கணை:- நாம கர்மத்தின் உதயத்தால் புருஷன், ஸ்திரி அல்லது நபும்சக லிங்கம் உடலில் அமைவதை **திரவ்விய வேதம்** என்று சொல்கின்றனர். ஒருவருக்கொருவர் உடலின்பம் நுகரும் ஆசை உண்டாவதை **பாவ வேதம்** என்று சொல்கின்றனர். அதிகமான உயிர்களுக்கு திரவ்விய வேதமும், பாவ வேதமும் ஒன்றாகவே இருப்பது காணப்படுகிறது. அதாவது ஒருவருக்கு உடலில் எந்த லிங்கம் இருக்கிறதோ அதே உணர்வே அவருக்கு எண்ணத்திலும் வருகிறது. தேவர்கள், நரகர்கள், போகபூமி மனிதர்கள் மற்றும் விலங்குகள் முதலான உயிர்களுக்கு திரவ்ய மற்றும் பாவ வேதம் இரண்டும் ஒரேமாதிரியாகவே இருக்கும். அதாவது திரவ்ய புருஷ லிங்கம் உடையவர் பாவத்திலும் புருஷ வேத உணர்வே உடையவராக இருப்பார் என அறியவும். கர்ம பூமி

மனிதர் மற்றும் விலங்குகளுக்கு திரவ்ய லிங்கமும், பாவவேதமும் ஒரே விதமாகவோ அல்லது வேவ்வேறாகவோ இருக்க முடியும்.

வேத மார்கணை நோக்கில் உயிர்களை பிரிக்கும்போது வேதமுடன் இருக்கும் உயிர்கள் மற்றம் வேதமில்லாதவர்-அபகத்வேதி-அவேதி உயிர்கள் என இரண்டு விதமாகப் பிரிக்கலாம். வேதமுடன் இருப்பவர்களில் புருஷவேதம், ஸ்திரி வேதம் மற்றும் நபும்சகவேதம் என மூன்று பிரிவுகள் இருக்கின்றன. ஒன்பதாவது குணஸ்தானத்தில் வேதம் இல்லாமல் போகிறது, அதுவரை உயிரை வேதமுடைய உயிர் என்று சொல்லப் படுகிறது, அதற்குப்பிறகு அபகத் வேதி என்று சொல்லப்படுகிறது. இது பாவ வேத நோக்கில் சொல்லப்பட்டதாகும். திரவ்ய புருஷ வேத உயிரே ஆறாவது அல்லது அதற்கு மேல் குணஸ்தானங்களுக்குச் செல்லமுடியும். திரவ்ய ஸ்திரி வேத உயிர் ஐந்தாவது குணஸ்தானம் வரையே செல்ல முடியும், அதற்கு மேல் போகமுடியாது.

ஏகேந்திரியத்திலிருந்து நான்கு இந்திரியம்வரை உள்ள எல்லா உயிர்கள் நபும்சக வேத உயிர்களே யாகும். எல்லா நரக உயிர்களும்கூட நபும்சக வேத உயிர்களேயாவர். தேவர்கள் மற்றும் போகபூமி மனிதர், விலங்குகளுக்கு ஸ்திரி அல்லது புருஷ வேதம் ஆகிய இரண்டு வேதங்களே இருக்கும், யாரும் நபும்சகர்களாக இருப்பதில்லை. கர்ம பூமி மனிதர் மற்றும் விலங்கு உயிர்களிடம் மூன்று வகையான வேதமும் காணப்படுகிறது. ஒன்பதாவது குணஸ்தானத்தின் ஐந்து பாகங்களில் சவேத பாகம்வரை வேதம் இருக்கிறது, ஒன்பதாவது குணஸ்தானத்தின் மேல் பாகங்களிலிலிருந்து, 10, 11, 12, 13, மற்றும் 14-ஆம் குணஸ்தாங்களில் இருக்கும் உயிர்கள் எல்லாம் அபகத்வேதி என்றே சொல்லப் படுகின்றனர்.

6. கஷாய மார்கணை:- கஷாய மார்கணையில் எல்லாப் பிறவி உயிர்களையும் முதலில் கஷாயத்துடன் இருப்பவை, மற்றும் கஷாயங்கள் இல்லாமல் இருப்பவை என இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். பத்தாவது குணஸ்தானம் வரை உள்ள எல்லா உயிர்களும் கஷாயங்களுடன் இருப்பவை. 11, 12, 13, 14 ஆகிய குணஸ்தான உயிர்கள் எல்லாம் கஷாயம் இல்லாமல் பூரண வீதராகி உயிர்களாக இருப்பவைகளாகும்.

கஷாயத்துடன் இருக்கும் உயிர்கள் கோப கஷாயி, மான கஷாயி, மாயா கஷாயி, லோப கஷாயி என நான்கு வகைகளாக இருக்கின்றன. ஒருபொறி உயிர்களிலிருந்து ஐம்பொறி உயிர்கள்வரை எல்லா கஷாயங்களையும் உடைய உயிர்களாக இருக்கின்றன. ஒன்பதாவது குணஸ்தானத்தில் முறையாக கோபம், மானம், மாயை ஆகியவை இல்லாமல்போக லோபகஷாயம் மட்டும் மிச்சமிருக்கிறது. பத்தாவது குணஸ்தானத்தில் சூட்சம லோபம் மட்டுமேயிருக்கிறது. அதுவும் பத்தாம் குணஸ்தானத்தின் இறுதியில் இல்லாமல் போகிறது.

பொதுவாக கஷாயம் என்ற சொல்லை உபயோகிக்கிறோம். சிறப்பு நோக்கில் பார்க்கும்போது அந்த கஷாயத்தையே நான்கு ஜாதிகளாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளாவன: 1.அனந்தானுபந்தி, 2.அப்ரத்யாக்யானம், 3.பிரத்யாக்யானம், 4.சஞ்சுவலனம் என்பன. ஒவ்வொன்றிலும் கோபம், மானம், மாயை, மற்றும் லோபம் என்ற நான்கு கஷாயங்களும் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் மந்தம் மற்றும் தீவிரம் என இரண்டு வேறுபாடுகளுடன் இருக்கின்றன. இப்போது அவைகளின் ஸ்வரூபங்களைப் பார்க்கலாம்.

அனந்தானுபந்தி ஜாதி கோபம், மானம், மாயை, லோபம் ஆகிய நான்கும் தத்துவார்த்த ஸ்ரத்தான வடிவ-தத்துவங்களில் நம்பிக்கை வடிவ சம்யக்தர்சனத்தை-நற்காட்சியைப் பெற விடாமல் தடுக்கின்றன; ஏனென்றால் அனந்த பிறவிகளுக்கு காரணமான மித்யாத்வத்துடன்-மூடநம்பிக்கையுடன் அனந்தானுபந்தி ஜாதி கஷாயங்கள் உறவு ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. அப்ரத்யாக்யான ஜாதி கஷாயங்கள் தேசசாரித்ரம் எனப்படும் இல்லற ஒழுக்கங்களை ஏற்கவிடாமல் தடுக்கின்றன. பிரத்யாக்யான ஜாதி கஷாயங்கள் சகலசாரித்ரம் எனப்படும் துறவற ஒழுக்கங்களை ஏற்கவிடாமல் தடுக்கின்றன, முனிவிரதத்தை ஏற்கும் உணர்வையே வரவிடுவதில்லை. சஞ்சுவலன ஜாதி கஷாயங்கள் யதாக்யாத சாரித்திரம் எனப்படும் பூரண வீதராகத்தன்மை வரவிடாமல் தடுக்கின்றன. இந்த எல்லா கஷாய்களின் மந்த மற்றும் தீவிர நோக்கில் அசங்யாத லோகப்பிரமாண பிரிவுகள் இருக்கின்றன.

7. ஞான மார்கணை:- இப்போது ஞான மார்கணையின் ஸ்வரூபம் பற்றி பார்க்கலாம். சில உயிர்கள் ஞானத்துடனும், சில உயிர்கள் ஞானமில்லாமலும் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா? கண்டிப்பாக இல்லை. எல்லா உயிர்களும் ஞானத்துடனேயே இருக்கின்றன. ஞானம் உயிரின் இயல்பாகும்-ஸ்வபாவமாகும். எந்த ஒரு பதார்த்தமும் எப்போதும் அதன் ஸ்வபாவத்தை விட்டுவிட்டு-இயல்பை விட்டுவிட்டு இருப்பதில்லை.

ஞானம் பர்யாயத்தில்-நிகழ்காலத்தில் எந்த அளவு வெளிப்பட்டிருக்கிறது என்ற நோக்கில் ஞான மார்க்கணையில் பிரிவுகள் அமைகின்றன. மதி, ஸ்ருதம், அவதி, மனபர்யயம் மற்றும் கேவலம் என ஐந்து நன்ஞானங்கள்-சம்யக்ஞானங்கள் இருக்கின்றன, குமதி, குஸ்ருதம், மற்றும் விபங்கம்-குஅவதி என மூன்று மித்யாஞானங்கள்-கெட்ட அறிவுகள் கூட இருக்கின்றன.

மதி, சுருத, அவதி, மனப்பர்யயம் நான்கும் ஷயோபசம ஞானங்களாகும். கேவலஞானம் மட்டும் ஷாயிக ஞானமாகும். முதல் மற்றும் இரண்டாம் குணஸ்தானத்தில் குமதி, குஸ்ருதம் ஆகிய இரண்டு மித்யாஞானங்கள் இருக்கின்றன. குஅவதி அதாவது விபங்க ஞானம்கூட இந்த உயிர்களுக்கு இருக்க முடியும். இந்த குணஸ்தான தேவர் மற்றும் நரக உயிர்கள் பவப்பிரத்யய அவதிஞானம் உடையவர்கள். மனிதர் மற்றும் விலங்குகளுக்கு குணப்பிரத்யய குஅவதி ஞானம் இருக்க முடியும். ஒருபொறி முதல் மனமுடைய ஐம்பொறிவரை விதிப்படி குமதி மற்றும் குசுருதம் ஆகிய இரண்டு கெட்ட ஞானங்களே இருக்கின்றன. மூன்றாம் குணஸ்தானத்தில் நல்லதும் கெட்டதும் கலந்த மிஸ்ரஞானம் இருக்கிறது.

நான்கிலிருந்து, பன்னிரண்டாம் குணஸ்தானம்வரை மதி மற்றும் சுருத ஞானங்களும் மற்றும் சில உயிர்களுக்கு அவதி ஞானமும்கூட இருக்கிறது. ஆறிலிருந்து பன்னிரண்டாம் குணஸ்தானம்வரை சில முனிவர்களுக்கு மனப்பர்யய ஞானம்கூட இருக்க முடியும். இவ்வாறு சில முனிவர்களுக்கு மேலே கூறிய நான்கு ஞானங்களும், சிலருக்கு மூன்று ஞானங்களும், சிலருக்கு இரண்டு ஞானங்களும் இருக்கின்றன.

பதிமூன்று, பதிநான்காம் குணஸ்தாணத்தில் கேவலஞானம் மட்டுமே இருக்கிறது. இது முழுமையாக வளர்ந்த ஷாயிக-மறைப்பு எதுவும் இல்லாத ஞானமாகும். இது ஒரே வகையாகும், இதில் வேறு பிரிவுகள் இல்லை. ஆனால் ஷாயோபசம ஞானத்தில் விஷயங்களை அறியும் நோக்கிலும் மற்றும் ஞானத்தின் ஷயோபசம நோக்கிலும் அனேக பிரிவுகளும், உட்பிரிவுகளும் இருக்கின்றன. அவைகளைப்பற்றி விரிவான வர்ணனை சாஸ்திரங்களில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

8. சய்யம மார்கணை:- இதில் உயிர்கள் ஏழு விதமாக இருக்கின்றன. அவைகளில் சய்யமம் இல்லாத அசய்யமி உயிர்கள், கொஞ்சம் சய்யமுமும் கொஞ்சம் அசய்யமுமும் உடைய சய்யாமாசய்யமி உயிர்கள் மற்றும் சய்யமி உயிர்கள் என மூன்று முக்கிய பிரிவுகள் இருக்கின்றன. சய்யமி உயிர்கள்கூட ஐந்து விதமான சய்யமி உயிர்கள் இருக்கின்றன.

1-4 குணஸ்தானங்களில் இருக்கும் உயிர்கள் அசய்யமி உயிர்களாவர். 5-வது குணஸ்தானத்தில் இருக்கும் உயிர்கள் தேசசய்யமி அதாவது சய்யமாசய்யமி உயிர்களாவர். 6-முதல்14-ஆம் குணஸ்தானங்களில் இருக்கும் உயிர்கள் சய்யமிகளாவர். நற்காட்சியுடன் கூடிய நியமம் அதாவது விரதம் சய்யமம் எனப்படுகிறது. 6-லிருந்து 9-ஆம் குணஸ்தானம்வரை சாமாயிக மற்றும் சேதோபஸ்தாபனா சய்யமம் இருக்கிறது. பரிஹாரவிசுத்தி சய்யமம் 6-7 குணஸ்தானங்களில் காணப்படுகிறது. 10-வது குணஸ்தானத்தில் சூக்ஷம சாம்பராய பெயர்கொண்ட சய்யமம் இருக்கிறது. பதினொன்றிலிருந்து பதிநான்காம் குணஸ்தானங்களில் யதாக்யாத சய்யமம் இருக்கிறது.

இவ்வாறு இன்று நாம் யோக மார்கணை, வேத மார்கணை, கஷாய மார்கணை, ஞான மார்கணை மற்றும் சய்யம மார்கணைகளின் ஸ்வரூபங்கள் பற்றித் தெரிந்து கொண்டோம். மற்ற மார்கணைகளைப் பற்றிய சர்ச்சையை அடுத்த கடிதத்தில் செய்யலாம்.

- உங்கள் அம்மா.

தர்சன, லேஷ்யா, பவ்விய, சம்யக்த்துவ, சஞ்சி, ஆஹார மார்க்கணை மற்றும் உபயோக பிரரூபணை

கடிதம்-19 ஓம் நம: சித்தேப்ய: 3-10-1999

அன்பு ரீனா, மோனா,
அனேக உத்தம சுபாசீர்வாதம்.

பதிநான்கு மார்கணைகளில் எட்டு மார்கணைகளின் ஸ்வரூபத்தை நாம் இதுவரை பார்த்திருக்கிறோம். ஒன்பதாவது மார்கணை தர்சன மார்கணையாகும்.

9. தர்சன மார்கணை:- உயிர்களின் சேத்தன குணம் என்பது தர்சனம் மற்றும் ஞானம் அதாவது பார்த்தல் மற்றும் அறிதல் என இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. அவைகளில் தர்சனம்-பார்த்தல் (knowing the existence of the item without going into it's details) நோக்கில் அதாவது தர்சன குணத்தின் பர்யாய நோக்கில் தர்சன மார்கணை அமைகிறது. தர்சனம் என்றால் பொதுவாகப் பார்த்தல், அதாவது சாமான்ய அவலோகன் என்று ஆகமங்கள் கூறுகின்றன. வெளிப் பொருள்களின் ஜாதி, செயல், குணம், விதம் முதலான சிறப்புகளை நோக்காமல், தன்னையும் மற்றும் பிற பொருள்களையும் போதுவான வடிவில் ஏற்றல் அதாவது வெறுமனே பொருள் இருக்கிறது (சாமன்ய சத்தா அவலோகன்) என்ற உணர்வை **தர்சனம்** என்று சொல்கின்றனர்.

சாஸ்திரங்களில் எங்கு சம்யக்தர்சனம் அல்லது மித்யாதர்சனம் என்ற சொல்லை நாம் படிக்கவோ அல்லது கேட்கவோ செய்கிறோமே, அங்கு வரும் தர்சனம் என்ற சொல்லின் பொருள் சிரத்தை அல்லது நம்பிக்கை ஆகும். அந்தப் பொருளை இங்கே எடுத்துக் கொள்ளக்கூடாது. இங்கு வரும் தர்சனம் என்று சொல்லுக்கு சக்ஷு தர்சனம், அசக்ஷு தர்சனம், அவதி தர்சனம், மற்றும் கேவல தர்சனம் என நான்கு பிரிவுகள் இருக்கின்றன. இந்த நோக்கில்தான் தர்சன மார்கணையில் பிரிவுகள் அமைகின்றன.

சக்ஷு என்றால் கண்மூலம் பொருள் பொதுவாக இருப்பதை ஏற்பது அதாவது கண்பொறியின் நிமித்தத்தால் ஒரு பொருள் இருப்பதை பார்த்தலை **சக்ஷு தர்சனம்** எனலாம். கண்பொறியை தவிர மற்ற நான்கு பொறிகள் மற்றும் மனத்தால் பொருளின் இருப்பை அறிதல் **அசக்ஷு தர்சனம்** ஆகும். பரமாணுவிலிருந்து மஹா ஸ்கந்தம் வரையிலான உருவப் பொருள்களைப் பார்த்தல்-இருப்பதை மட்டும் அறிதல் **அவதி தர்சனம்** என்பர். மற்றும் லோக அலோகத்தில் உள்ள எல்லா பொருள்களின் இருப்பைப் பார்த்தல் அதாவது தன் மற்றும் பிற எல்லா பொருள்களின் இருப்பை மட்டும் பார்த்தலை **கேவல தர்சனம்** என்பர்.

ஏகேந்திரியம் முதல் மூன்றுபொறி உயிர்கள்வரை உள்ள எல்லா உயிர்களுக்கும் அசக்ஷு தர்சனம் மட்டுமே இருக்கிறது, ஏனென்றால் அவ்வுயிர்களுக்கு கண்பொறி இல்லை. நான்கு பொறி மற்றும் ஐம்பொறி மனமில்லா மற்றும் மனமுடைய உயிர்களுக்கு சக்ஷு தர்சனம் மற்றும் அசக்ஷு தர்சனம் இரண்டும் இருக்கின்றன. மனமுடைய ஐம்பொறி உயிர்களுக்கு அவதி தர்சனம்கூட இருக்கிறது. 13, 14-ஆம் குணஸ்தானத்தில் உள்ள அரஹந்தர்களுக்கு கேவல தர்சனம் இருக்கிறது. நாம் இங்கு பிறவி உயிர்களின் பிரிவுகள் பற்றி பார்த்துக்கொண்டு இருப்பதால் இங்கு சித்த உயிர்களை விட்டு விட்டு மற்ற உயிர்கள் சம்பந்தமாக சர்ச்சை செய்து கொண்டு இருக்கிறோம்.

10. லேஷ்யா மர்கணை:- லேஷ்யா மர்கணை பற்றி பேசும்முன் லேஷ்யா என்றால் என்னவென்று பார்க்கலாம். லேஷ்யா திரவ்ய லேஷ்யா, பாவ லேஷ்யா என இரண்டு விதமாக இருக்கிறது. உடலின் வண்ணத்தை **திரவ்ய லேஷ்யா** என்று சொல்கின்றனர். கஷாயத்துடன் கூடிய வர்ணம் கொண்ட யோகத்தின் போக்கை **பாவ லேஷ்யா** என்று சொல்கின்றனர். மன,வசன, காய வடிவ யோகத்தின் கஷாயத்தை திருப்தி படுத்தும் போக்கே பாவ லேஷ்யாவாகும். கர்ம பந்தம் எப்படி உண்டாகிறது என்பதை பார்த்தபோது நாம் யோகத்தால் பிரக்ருதி பந்தமும், பிரதேச பந்தமும் நிகழ்கிறது மற்றும் கஷாயத்தால் ஸ்திதி மற்றும் அனுபாக பந்தமும் நிகழ்கிறது என்று படித்தோம்.

கஷாயங்கள் பத்தாம் குணஸ்தாணம் வரையே இருக்கிறது. பிறகு அதற்கு மேல் உள்ள குணஸ்தானங்களில் லேஷ்யா இருக்கிறதா இல்லையா? என்ற கேள்வி இயல்பாகவே எழுகிது. கஷாயம் இல்லாவிட்டாலும் கூட யோகம் 11, 12 மற்றும் 13-ஆம் குணஸ்தானங்களில் இருக்கிறது ஆகையால் அங்கு உபசாரமாக -பூதபூர்வ நியாயத்தால் லேஷ்யா இருப்பதாக சொல்லப்படுகிறது. 11, 12, மற்றும் 13-ஆம் குணஸ்தானத்தில் உபசாரமாக சுக்லலேஷ்யா இருப்பதாக சொல்லப்படுகிறது. பதிநான்காம் அயோக கேவலி குணஸ்தானத்தில் யோகம்கூட இல்லை ஆகையால் அந்த குணஸ்தானத்தில் லேஷ்யா கூட இல்லை.

சங்க்லேஷம் அதாவது தீவிர கஷாயம் அசுப பாவமாகும் மற்றும் விசுத்தி அதாவது மந்த கஷாயம் சுப பாவமாகும். சங்க்லேஷத்திலிருந்து விசுத்தி வரை கஷாயங்கள் அனேக விதமாக இருக்கின்றன. அவைகளுடன் கூடிய லேஷ்யாவை **1. கிருஷ்ண, 2. நீல, 3. கபோத, 4. பீத, 5. பத்ம, 6. சுக்ல** என்ற ஆறு விதமான பெயரால் குறிப்பிடுகின்றனர். இவைகள் எல்லாவற்றிலும் அசங்யாத லோகப்பிரமான பிரிவுகள் இருக்க முடியும். இவைகளில் கிருஷ்ண, நீல, கபோத மூன்றும் அசுப லேஷ்யாக்களாகும்; பீத, பத்ம, சுக்ல மூன்றும் சுபலேஷ்யாக்களாகும். முதல் நான்கு குணஸ்தானங்கள் வரை ஆறு லேஷ்யாக்களும் இருக்கும். ஐந்திலிருந்து ஏழாம் குணஸ்தானங்கள் வரை பீத, பத்ம, சுக்ல ஆகிய மூன்று சுபலேஷ்யாக்கள் இருக்கும். எட்டு முதல் 13-ஆம் குணஸ்தானம்வரை ஒரே சுக்லலேஷ்யா மட்டுமே இருக்கும். வேறு விதமாகச் சொல்ல வேண்டுமென்றால் மூன்று அசுப லேஷ்யாக்களும் முதல் நான்கு குஸ்தானங்களில் இருக்க முடியும். பீத மற்றும் பத்ம இரண்டு சுப லேஷ்யாக்கள் முதல் குணஸ்தானத்திலிருந்து ஏழாம் குணஸ்தானம்வரை இருக்க முடியும். முதல் குணஸ்தானத்திலிருந்து பதிமூன்றாம் குணஸ்தானம்வரை சுக்ல லேஷ்யா இருக்க முடியும். பதிநன்காம் குணஸ்தானத்தில் எந்த லேஷ்யாவும் இருப்பதில்லை.

ஒவ்வொரு லேஷ்யாவிலும் ஜகன்யம், மத்தியம், உத்கிருஷ்டம் என மூன்று பிரிவுகள் செய்ய லேஷ்யாக்கள் மொத்தம் 18 விதமாகின்றன. இதைத்தவிர ஆயுள் பந்தம் கட்ட தகுதியான எட்டு சிறப்பான மத்தியம பிரிவுகள் கூட சொல்லப்படுகிறது. இவ்வாறு லேஷ்யா மொத்தம் 26 விதமாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. கடைசியில் சொல்லப்பட்ட 8 மத்தியம பிரிவுகள் அபகர்ஷ காலத்தில் நிகழ்கிறது. அடுத்த பிறவிக்கான ஆயுள் பந்தம் அபகர்ஷ காலத்தில்தான் கட்டுகிறது. ஆயுள் பந்த தகுதியான யோக உணர்வு இந்த அபகர்ஷ காலத்தில்தான் நிகழ்கிறது என்பதே நியமமாகும். ஆயுள் கட்டுதல் இந்த எட்டு சிறப்பு காலங்களில் நிகழ்கிறது, ஆனால் மரண சமயத்தில் வேறு லேஷ்யாகூட இருக்க முடியும். எந்த லேஷ்யாவில் மரணமடைபவர் எங்கு சென்று பிறப்பார்கள் என்பது பற்றி குறிப்பிட்ட விதிமுறைகள்-நியமங்கள் இருக்கின்றன. ஆகமங்களில் கொஞ்சம் பயிற்சி இருந்தால் எப்படிப்பட்ட உயிர்களுக்கு எந்தெந்த லேஷ்யாக்களில் இருக்கும் மற்றும் உயிர் எந்த லேஷ்யாவில் இறந்து எங்கு சென்று

பிறக்கும் என்பது பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். ஆகமப்பயிற்சியும், ஆய்வும் இருந்தால் இவைகளை தெரிந்து கொள்வது சுலபமாகின்றன அல்லவா!

11. பவ்விய மார்கணை:- இதில் பிறவி உயிர்களில் பவ்வியர் மற்றும் அபவ்வியர் என இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. பவ்விய என்ற சொல்லின் பொருள் அடையும் தகுதி என்பதாகும். அனந்த சதுஷ்டய வடிவத்தை அடையும் சக்தி யாரிடம் இருக்கிறதோ அவர்கள் பவ்வியர்கள். பவ்விய உயிர்களே இரத்தினத்திரயத்தை-சம்யக் தர்சன, ஞான, சாரித்ரத்தை அதாவது நற்காட்சி, நன்ஞான, நல்லொழுக்கத்தை கைகொண்டு முக்தி அடைகின்றனர். முக்தி பெரும் தகுதி அந்த உயிர்களிடம் இருக்கிறது. அந்த சக்தி அல்லது தகுதி எந்த உயிர்களிடம் இல்லையோ அவ்வுயிர்களை அபவ்வியர் என்று சொல்கின்றனர்.

பவ்விய உயிர்கள் கூட இரண்டு விதமாக இருக்கின்றன. முக்தி அடையும் தகுதி இருந்தும் எப்போதும் மோக்ஷ மார்கத்தில் பிரவேசிக்காமல், அதனால் முக்தி அடையாமல் இருக்கும் பல பவ்விய உயிர்கள் இருக்கின்றன. அவை அனந்தானந்த காலம் பிறவிச் சுழற்சியிலேயே சிக்கிக் கிடக்கின்றன. மற்ற பவ்வியர்கள் காலப்போக்கில் முக்தி அடைகின்றனர்.

முக்தி அடைந்த பிறகு இந்த உயிர்களை பவ்வியர் என்று சொல்லுவதில்லை, அவர்கள் அபவ்வியரும் இல்லை. பவ்யக்துவ சக்தி வெளிப்பட்டு விட்ட காரணத்தால் பவ்விய-அபவ்வியர்களுக்கு மேலான முக்த உயிர்களாக இருக்கிறார்கள், அவர்களிடம் ஜீவத்துவம் எனப்படும் பாரிணாமிக சக்தி இருக்கிறது. பவ்வியர், அபவ்வியர் என்ற பிரிவில் அப்படி என்ன நல்லது இருக்கிறது? என்று நீங்கள் நினைக்கலாம். இந்த பிரிவை யாரும் செய்யவில்லை, இது உயிரில் இருக்கும் இயற்கையான தகுதியாகும். அதனால்தான் பவ்வியத்துவம் மற்றும் அபவ்வியத்துவம் இரண்டையும் பாரிணாமிக பாவம் என்று சொல்கின்றனர். இது எந்த கர்மத்தின் எந்த நிலையாலும் சரி செய்யப்படுவதில்லை.

நான் அபவ்வியன் இல்லை தானே? என்பது போன்ற சிந்தனை செய்து சங்கடப்பட வேண்டிய அவசியமில்லை. முயற்சி இல்லாதவரே இவ்வாறு விரக்தியுடன் சிந்தனை செய்கின்றனர்-negative thinking செய்கின்றனர். ஆத்மா பற்றிய சர்ச்சையை அதிக ஆர்வத்துடன் கேட்பவர் நிச்சயம் பவ்வியரே ஆவர், அவர் முக்திக்கு மிக அருகாமையில் இருக்கிறார் அதாவது இன்னும் சில பிறவியில் முக்தியடையும் நிகட பவ்வியராவார் என்று பத்மநந்தி ஆசாரியர் அவருடைய நூலில் இவ்வாறு எழுதியிருக்கிறார்.

தத்பிரதி ப்ரீதிசித்தேன யேன வார்தாபி ஹி ஸ்ருதா |
நிச்சிதம் ச பவேத் பவ்யோ பாவி நிர்வாணபாஜனம் ||

முதல் குணஸ்தானத்தில் பவ்வியர், அபவ்வியர் இரு பிரிவு உயிர்களும் இருக்கின்றன. இரண்டாம் குணஸ்தானத்திலிருந்து பதிநான்காம் குணஸ்தானம்வரை உள்ள எல்லா உயிர்களும் நியமமாக பவ்வியர்களேயாவர்.

12. சம்யக்துவ மார்கணை:- இங்கு சம்யக்த்துவம் பற்றிய சர்ச்சை மற்றுமில்லை, சம்யக்த்துவ மார்கணை பற்றிய சர்ச்சையாகும், இங்கு சம்யக்த்துவ நோக்கில் உயிர்களின் பிரிவுகள் அமைகின்றன. இங்கு உயிர்கள் சம்யக்த்துவம் உடையவை, சம்யக்த்துவம் இல்லாதவை என முக்கியமாக இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. சம்யக்த்துவம் இல்லாதவைகளில் மித்யாத்துவி, சாசாதனன் மற்றும் மிஸ்ரன்-

சம்யக்மித்தியாத்துவி என மூன்று பிரிவு உயிர்கள் இருக்கின்றன. சம்யக்த்துவம் உடையவைகளில் ஔபஷமிக சம்யக்த்துவன், ஷயோபசம சம்யக்த்துவன் மற்றும் ஷாயிக சம்யக்த்துவன் என மூன்று பிரிவு உயிர்கள் இருக்கின்றன.

இவைகளில் முதல் மூன்று பிரிவினர் முறையாக முதல் மூன்று குணஸ்தானங்களில் இருக்கின்றனர். பிரதமோபசம சம்யக்துவ உயிர்கள் நான்கு முதல் ஏழாவது குணஸ்தானம் வரை இருக்கின்றனர். ஷாயோபசமிக உயிர்களும் கூட நான்கு முதல் ஏழாவது குணஸ்தானம்வரையும் இருக்கின்றனர். ஷாயிக சம்யக்த்துவ உயிர்கள் நான்கு முதல் 14-ஆம் குணஸ்தானம்வரை இருக்கும் உயிர்களாவர். சித்த பகவானும் ஷாயிக சம்யக்திருஷ்டி யாவார். த்விதியோபசம சம்யக்த்வி உயிர்கள் நான்காம் குணஸ்தானம் முதல் பதினொன்றாம் குணஸ்தானம்வரை இருக்கின்றனர், ஏனென்றால் உபசம ஸ்ரேணி ஏறி பதினொன்றாம் குணஸ்தானத்திலிருந்து திரும்ப இறங்கி வரிசையாக ஆறிவது குணஸ்தானத்திற்கு வந்து அங்கிருந்து நான்காவது வரைஅவர்கள் வரமுடியம்.

13. சஞ்சி மார்கணை:- சஞ்சி மார்கணை பற்றி தெரிந்து கொள்ளும் முன்னர் சஞ்சி என்று எதைச் செல்கிறார்கள் என்று பார்க்கலாம். மனத்தின் மூலம் அறியும் சக்தி கொண்ட உயிர்களை அதாவது மனத்தின் மூலம் அறிவு பெரும் மனமுடைய ஐம்பொறி உயிர்களை சஞ்சி என்று சொல்கின்றனர். மனத்தின் மூலம் அறியும் சக்தி பெற்றிறாத உயிர்களை அதவாது மனம் என்ற உட்பொறி இல்லாத உயிர்களை அசஞ்சி என்று சொல்கின்றனர். ஒரு பொறி முதல் மனமில்லா ஐம்பொறி உயிர்கள் எல்லாம் அசஞ்சி உயிர்களாகும். இந்த மர்கணையின் மூன்றாவது பிரிவு உயிர்கள் சஞ்சி, அசஞ்சி இரண்டுமே இல்லாத, அதாவது மனம் என்ற உட்கருவியின் மூலம் அறிவு பெறாத 13, 14-ஆம் குணஸ்தான அரஹந்தர்கள் ஆவர். அரஹந்த பகவான்களுக்கு திரவிய மனம் இருக்கிறது ஆனால் ஷயோபசம வடிவ பாவமனம் இருப்பதில்லை, இதன் பொருள் அவர்களுடைய அறிதல் மனத்தின் மூலம் நிகழ்வதில்லை ஏனென்றால் அவர்களிக்கு ஷாயிக ஞானம் அதவது எந்த மறைப்பும் இல்லாத முழு ஞானமான கேவலஞானம் வெளிப்பட்டிருக்கிறது.

முன்னர் நாம் சஞ்சி பெயர்கொண்ட பிரரூபணையை பார்த்தோம். இப்போது நாம் பார்ப்பது சஞ்சி மார்கணையாகும். பெயர் ஒரே மாதிரியாக இருக்கும் காரணத்தால் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்பதால் உங்களுக்கு இதை ஞாபகப் படுத்துகிறேன். ஜீவசமாசத்தில் நாம் சஞ்சி, அசஞ்சி என்று சொன்னோம், அப்போது மனமுடையன மற்றும் மனமில்லாதன என்று நேரடியான பொருளில் கூறினோம். அங்கு அரஹந்த உயிர்களைக்கூட ஜீவசமாச நோக்கில் சஞ்சி என்ற பிரிவில் எடுத்துக் கொண்டோம்.

சஞ்சி அதாவது மனத்துடன் உள்ள அடையாளத்தை வைத்து உயிர்களை முன்னர் பார்த்தோம். மனத்தின் மூலம் நல்லது கெட்டதுகளை ஏற்றல், தியாகம் பற்றி தெரிந்து கொள்ளுதல், விருப்பப்படி கால் கைகளை உபயோகித்தல், உபதேசங்களை ஏற்றல், ஞாபகம் வைத்துக்கொள்ளல், நினைவு முதலியவைகளை செய்யும் உயிர் மனிதர், யானை, குதிரை, நாய், பல பறவைகளும், பிராணிகளும் மற்றும் தேவர், நாரகி எல்லாம் சஞ்சி உயிர்கள் ஆகும். மற்ற ஒரு பொறி முதல் மனமில்லா ஐம்பொறி வரையுள்ள எல்லா விலங்குகளும் அசஞ்சி உயிர்களாகும்.

14. ஆஹார மார்கணை:- இப்போது கடைசியாக ஆஹார மார்கணை பற்றிப் பார்க்கலாம். உயிர் உடல் வடிவமாகவும், சப்த வடிவமாகவும் திரவியமன வடிவமாகவும்

மாறத் தகுதியான நோகர்ம வர்க்கணைகளை கிரஹிப்பதை ஆஹாரம் என்று சொல்கின்றனர். முன்னர் நாம் ஆறு வகையான ஆஹாரம் பற்றி சர்ச்சை செய்திருக்கிறோம். ஆஹார சஞ்ஞா பற்றி பார்த்ததுகூட உங்களுக்கு ஞாபகமிருக்கும். ஆஹார வர்கணையைக் கொண்டு ஒளதாரிக உடல், வைக்ரீயிக உடல் மற்றும் ஆஹாரக உடல் என மூன்று உடல்கள் அமைகின்றன என்றுகூட நாம் படித்திருக்கிறோம். இங்கு ஆஹார மார்கணையில் ஆஹாரக-ஆஹாரத்தை ஏற்பவை, அனாஹாரக-ஆஹாரத்தை ஏற்காதவை என உயிர்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றனர். அவைகளில் நோகர்ம வர்கணைகளை ஏற்பவை ஆஹாரக உயிர்கள், நோகர்மங்களை ஏற்காதவை அனாஹாரக உயிர்களாகும். நாம் உபவாசம் என்று சொல்கிறோமே அதாவது உண்ணா நோன்பு இருக்கிறோமே அதை ஆகமங்களில் அனாஹாரகர்-அதாவது ஆஹாரம் ஏற்காதவர் என்று சொல்லுவதில்லை.

அப்படியென்றால் எந்தெந்த உயிர்கள் அனாஹாரக உயிர்கள் என்று பார்க்கலாம். முன்னர் நாம் மூன்றாவது கடிதத்தில் விக்கிரஹ கதி சம்பந்தமாக விரிவான சர்ச்சை செய்திருக்கிறோம். ருஜு கதியில்-ஒரே நேர் கோட்டில் சென்று அடுத்த பிறவி எடுக்கும் உயிர் அதே சமயத்தில் ஆஹாரத்தை கிரஹிக்கின்றன, ஒன்று, இரண்டு அல்லது மூன்று திருப்பங்களுடன் விக்கிரஹ கதியில் சென்று அடுத்த பிறவி எடுக்கும் உயிர்கள் முறையே ஒன்று, இரண்டு, மூன்று சமயங்கள்வரை அனாஹாரகர்களாக இருந்து அதற்கு அடுத்த சமயத்துலிருந்து ஆஹாரத்தை ஏற்கிறார்கள். கேவலி சமுத்காதம் செய்யும் உயிர்கள் பிரதர மற்றும் லோகபூரணம் செய்யும் அந்த சமயத்தில் அனாஹாரகர்களாக இருக்கிறார்கள். அதேபோல 14-ஆம் குணஸ்தான அயோக கேவலி உயிர்கள்கூட அனாஹாரகர்களாக இருக்கின்றனர். எல்லா சித்த பகவான்களும் அனாஹரகர்களாவர் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. மேலே கூறப்பட்ட அனாஹாரக உயிர்களைத்தவிர மற்ற எல்லா உயிர்களும் ஆஹாரக உயிர்களேயாவர்.

நாம் சமுத்காதம் என்ற சொல்லை மேலே படித்தோம் அல்லவா அதன் பொருள் என்னவென்று இப்போது பார்க்கலாம். ஆத்மப்பிரதேசம் மூலசரீரத்தை விடாமல், கார்மண மற்றும் தேஜச சரீரத்துடன் மூல சரீரத்திற்கு வெளியில் சென்று பிறகு மூல சரீரத்தில் முழுவதுமாக திரும்பி வருவதை சமுத்காதம் என்று சொல்கின்றனர். சமுத்காதம் ஏழு விதமாக இருக்கின்றன. அவைகளாவன- **1.வேதனா சமுத்காதம், 2.கஷாய சமுத்காதம், 3.வைக்ரீயிக சமுத்காதம், 4.மாரணந்திக சமுத்காதம், 5.தேஜஸ சமுத்காதம், 6.ஆஹாரக சமுத்காதம், 7.கேவலி சமுத்காதம்.**

இவ்வாறு பதிநான்கு மார்கணைகளின் ஸ்வரூபத்தை அறிந்து கொண்டோம். இப்போது இருபது பிரரூபணைகளில் உபயோக பிரரூபணை ஒன்று மட்டுமே மீதமிருக்கிறது. இதைத் தெரிந்து கொள்வது சுலபமான ஒன்றுதான். ஞான மார்கணையின்படி எத்தனை ஞானம் இருக்கிறதோ மற்றும் தர்சன மார்கணையின்படி எத்தனை தர்சனம் இருக்கிறதோ அவை இரண்டையும் சேர்த்து உயிருக்கு எத்தனை உபயோகம் இருக்கும் என்பதை நீங்களே சொல்ல முடியும்.

நாம் எல்லா பிறவி உயிர்களின் குணஸ்தானம், ஜீவசமாசம், பர்யாப்தி, பிராணன், சஞ்ஞா, கதி, இந்திரியம், காயம், யோகம், வேதம், கஷாயம், ஞானம், சய்யமம், தர்சனம், லேஷ்யை, பவ்வியம், சம்யக்துவம், சஞ்சி, ஆஹார், மற்றும் உபயோகம் முதலான இருபது பிரரூபணைகளின் வர்ணனைகளைப் பார்த்தோம். சித்த பகவான் குணஸ்தானங்கள் அற்றவர். அவரைத் தவிர மற்ற எல்லா உயிர்கள் பற்றிய வர்ணனைகளைப் பார்த்தோம்.

இப்போது சித்த உயிர்களிடம் இந்த பிரரூபணைகள் எவ்வாறு பொருந்தும் என்பதைப்பற்றி சர்ச்சை செய்யலாம்.

சித்தர்கள் குணஸ்தானங்களுக்கு அப்பாற்பட்டவர்கள், அவர்களுக்கு ஜீவசமாசம் இல்லை, பர்யாப்தி இல்லை, பிராணன் இல்லை, சஞ்ஞா இல்லை, அவர்கள் சித்தகதி உயிர்கள். அவர்களுக்கு இந்திரியங்கள் இல்லை, காயம் இல்லை, யோகம் இல்லை, வேதம் இல்லை, கஷாயம் இல்லை, அவர்களுக்கு கேவலஞானமும், கேவல தர்சனமும் இருக்கிறது. ஆனால் சய்யம மார்கணைக்கு சமமான சய்யம் இல்லை-அவர்கள் சய்யம் இல்லாமல் இருக்கின்றனர். சய்யம் இல்லை என்பதன் பொருள் சாரித்திரம்-ஒழுக்கம் இல்லை என்பதில்லை; சித்தர்களுக்கு ஷாயுக சாரித்திரம் இருக்கிறது.

சித்தர்களுக்கு லேஷ்யா இல்லை, அவர்கள் பவ்வியரோ, அபவ்வியரோ இல்லை, சம்யக்துவத்தில் ஷாயிக சம்யக்துவம் இருக்கிறது. அவர்கள் சஞ்சியோ, அசஞ்சியோ இல்லை. அவர்கள் அனாஹாரகர்கள் ஆவர். அவர்களுக்கு கேவலஞானம், கேவலதர்சனம் சேர்ந்த இரண்டு உபயோகங்கள் இருக்கின்றன.

மகள்களே, உயிர்கள் சம்பந்தமாக இந்த எல்லா விஷயங்களையும் இருபது பிரரூபணைகள் மூலம் நாம் தெளிவாகத் தெரிந்து கொண்டோம். இவைகளெல்லம், உயிருடன் இருப்பவைகளின், திரிபு உணர்வுகளின், பிற திரவியங்களின் நோக்கில் சொல்லப்பட்டவைகளாகும். உயிர் சம்பந்தமான எல்லா தகவல்களும் நமக்கு கேவலஞானியின் திவ்யத்தொனி மூலம் கிடைத்ததாகும்-பெறப்பட்ட அறிவாகும். ஜினவாணியின் இந்த முழு வரண்னைகளும் யதார்தமானதாகும்-உள்ளதை உள்ளபடியே சொல்லப்பட்டதாகும். ஆனாலும் நாம் உயிர்பொருளைப்பற்றி கருத்தில் கொள்ளும்போது உடனிருப்பவைகள் பற்றிய எல்லா வர்ணனையும் வியவஹார நயத்தால் சொல்லப் பட்டதாகும் என்பது நம் கவனத்திற்கு வருகிறது. இவைகளை எல்லாம் தெரிந்து கொள்வதால் நமக்கு உயிரின் இயல்பு-ஸ்வபாவம், விபாவம்-திரிபு, உடனிருப்பவைகள், மேகூ மார்க்கம், முனி, அரஹந்தர், சித்தர் முதலிய எல்லோருடைய ஸ்வருபமும் தெளிவாகத் தெரிய வருகிறது. இதனால் பேதஞானம்-தன்னை பிற பொருள்களிலிருந்து பிரித்தறியும் அறிவு உறுதி பெறுகிறது, நம்முடைய அறிவும் பயனுள்ளதாக ஆகிறது.

வியவஹார நயம் சம்யக்ஞானத்தின் அங்கமாகும். இது சம்பந்தமாக நமக்கு குழப்பமான கற்பனைகள் இருக்குமானால் அந்த விபரீத ஞானத்துடன் இருப்பவர் ஆத்மா பற்றிய அறிவு அதாவது ஆத்மானுபூதி அடைய முடியாது. ஜினவாணி ஆழங்காணவியலாததாகும். அமிர்தமய அத்யாத்ம ரசம் நிறைந்ததாகும். நாம் எவ்வளவு ஆழமாக ஆய்வு செய்கிறோமோ அவ்வளவு அதனுடைய சுவை மற்றும் ஆனந்தம் அதிகரித்துக்கொண்டே போகிறது. கரணானுயோக ஆய்வில் நான்கூட இப்போதுதான் நுழைந்திருக்கிறேன், ஆய்வு தொடங்கியிருக்கிறது. உங்கள் இருவராலும் மற்றும் இதைப் படிக்கும் அனேக பவ்வியர்களின் நிமித்தத்தாலும் கரணானுயோக அறிமுகத்தை உங்களுக்கு கொடுக்கும்போது என்னிடம்கூட தத்துவசிந்தனை நிகழ்ந்தவண்ணம் இருக்கிறது, ஆன்மாவை உள்நோக்கிப் பார்ப்பதின் மூலமும் என் நிஜசுத்தாத்மாவையும் பிற பொருள்களிலிருந்து பிரித்தறியும் பலமும் எனக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

பண்டிட். தோடர்மல்ஜி **சம்யக்ஞானசந்திரிகா**வின் முன்னுரையில் இவ்வாறு எழுதியிருக்கிறார்- **உச்ச குலம், பூரண ஆயுள், இந்திரியங்களின் சாமர்த்தியம், நோயற்ற வாழ்க்கை, நல்லவர்களின் தொடர்பு, தர்மத்தின்மேல் நல்ல அபிப்ராயம், புத்தி மேலோங்கியத் தன்மை முதலியன கிடைப்பது மேலும்மேலும் துர்லபமாகும்-**

கிடைப்பதற்கு அரியதாகும். அதை நாம் நேரடியாகவே பார்க்கிறோம். இவ்வளவும் கிடைக்காமல் கிரந்தங்களைப் படிப்பதும், அவைகளை நல்ல முறையில் ஆய்வு செய்வதும் நிகழ முடியாது. உங்களுடைய பாக்கியம் இந்த வாய்ப்புகள் எல்லாம் இப்போது உங்களுக்கு கிடைத்திருக்கின்றன. ஆகையால் நீங்கள் பிடிவாதமாக இருந்தாலும் உங்களுக்கு இதமளிக்கும் இந்த விஷயங்கள் உங்கள் ஆர்வத்தை தூண்டி ஊக்கமளிக்கின்றன. உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சாஸ்திரப்பயிற்சி செய்யுங்கள். மற்ற உயிர்களிக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் சாஸ்திரப்பயிற்சி கொடுங்கள். யாரெல்லாம் சாஸ்திரப்பயிற்சி செய்ய விரும்புகிறார்களோ அவர்களுக்கு ஒப்புதல் அளியுங்கள்-அனுமோதனா கொடுங்கள். புத்தகங்கள் எழுதுபவர்களுக்கும், படிப்பவர்களுக்கும், சொல்லித்தருபவர்களுக்கும் சாஸ்திரப்பயிற்சி தொடர்ந்து நிகழும் வண்ணம் இருக்க உறுதுணையாக உங்களால் முடிந்த எல்லா உதவிகளையும் செய்யுங்கள். ஏனென்றால் இவைகளால்கூட உங்களுக்கு பரம்பரையில் முக்தி அடையும் காரியம் சித்தியாகிறது, குறிப்பிடத்தக்க நன்மை உண்டாகிறது.

பண்டிட். தோடர்மல்ஜியின் இந்த ஆலோசனையில் முழு கவனம் வைத்து நீங்கள்கூட தினமும் சாஸ்த்திர ஸ்வாத்யாயம், தத்துவ சிந்தனை, தத்துவங்களை உங்கள் அறிவில் நினைவு கூர்தல் முதலியவைகளை செய்தவண்ணம் இருங்கள், உங்களை நீங்கள் உள்நோக்கிப் பார்ப்பதின் மூலம் ஆத்மானுபவம் செய்து உங்களுடைய திரிகால சுத்தாத்மாவை மற்ற எல்லாவற்றிலுமிருந்து பிரித்தறிவதை செய்துகொண்டே இருக்க வேண்டும் என்பதே என்றுடைய விருப்பமாகும், அப்படியே நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கல்யாணமஸ்து !!!

- உங்கள் அம்மா.

சாஸ்திரதானம் அளித்தவர்கள்:

1. திருமதி.ஜினதத்தை, வங்காரம் (திரு.அனந்தராஜ் நயினார் நினைவாக) ₹10,001
2. திருவறப்பொறியாளர்.சின்னதுரை, திருமதி.சரோஜா சின்னதுரை, சென்னை ₹5,001
3. திரு.பகவான்குமார், திருமதி.உமாராணி பகவான்குமார், மாம்பலம்-மேற்கு ₹5,001
4. திரு.ஜெயகுமார், திருமதி.வசந்தலட்சுமி ஜெயகுமார், காஞ்சிபுரம் ₹2.501
5. திரு.J. ஸ்ரீதர், திருமதி.ஆனந்தி ஸ்ரீதர்,சென்னை ₹2,501
6. திரு.தஞ்சை சுகுமாரன் (திருமதி.ஜோதி சுகுமாரன் நினைவாக) ₹2,501
7. திரு.T.ஸ்ரீதர், திருமதி.விமலா ஸ்ரீதர், விலாங்காடுபாக்கம் ₹2,501
8. கவிஞர்.இரா.தங்கராஜ், திருமதி.பானுமதி தங்கராஜ், சென்னை ₹1,501
9. திரு.அனந்தவிஜயன், திருமதி சாந்தி அனந்தவிஜயன், நங்கநல்லூர் ₹1,501
10. திரு.பிரபாகரன், திருமதி.மணிமேகலை பிரபாகரன், சென்னை ₹1,251
11. திரு.J.ரமேஷ், திருமதி.மலர்விழி ரமேஷ், சென்னை ₹1,251
12. திரு.தன்யகுமார், திருமதி.சந்திரா தன்யகுமார், பம்மல் ₹1,001
13. திரு.C.விருஷபதாஸ், திருமதி.நாகசுந்தரி விருஷபதாஸ். சென்னை ₹1,001
14. செல்வி.அனிகா ரிஷப்ஸாகர் , மான்செஸ்டர், U.K. ₹1,001
15. திரு.C.S.P.ஜெயின், திருமதி.காந்தா C.S.P.ஜெயின், பாண்டிச்சேரி ₹1,001
16. திரு.தரநேந்திரதாஸ், திருமதி.ஜான்சி தரநேந்திரதாஸ், வில்லிவாக்கம் ₹1,001
17. திரு.உதயகுமார், திருமதி.எஸ்ஸெஸ்வதி உதயகுமார், ஆயலவாடி ₹1,001
18. திரு.சந்திரமோஹன், திருமதி நீலகேசி சந்நிரமோஹன், சென்னை₹1,001
19. திரு.P.இராஜேந்திரன், காஞ்சிபுரம் (திரு.T.A.K.பத்மராஜ் நினைவாக) ₹1,000
20. குமாரி.S.ஹர்ஷதா, குமாரி.S.பிருத்திவிஸ்ரீ, சென்னை ₹1,000
21. திருமதி.சரஸ்வதி சக்கரவர்த்தி, கள்ளப்புளியூர் ₹1,000
22. புலவர்.ஜம்புகுமார், திருமதி.லீலா ஜம்புகுமார், புழல் ₹1,000
23. திரு.குமார், திருமதி.விஜயலட்சுமி குமார், செய்யாறு ₹1,000
24. திரு.பாபுலால், திருமதி.மாலா பாபுலால், சென்னை ₹1,000
25. திரு.பிரபு, திருமதி.சுபத்ரா பிரபு, திண்டிவனம் ₹1,000
26. திரு.சோமப்பிரபன், திருமதி.எஸ்ஸெஸ்வதி சோமப்பிரபன், வீடூர்(கடலூர்) ₹1,000
27. திரு.விஜயராஜ் பாவர்லால், திருமதி.சரோஜா விஜயராஜ், குரோம்பேட்டை ₹1,000
28. திரு.S.மேஹேஸ்வரன், திருமதி.நிர்மலா மேஹேஸ்வரன், திண்டிவனம் ₹1,000
29. திருமதி.சுகந்தி பத்ரபாஹு, திண்டிவனம் ₹1,000
30. திரு.N.R.ரவிசந்திரன், திருமதி.ஸ்வஸ்திகாதேவி ரவிசந்திரன், ஆதம்பாக்கம் ₹1,000
31. செல்வன்.வினிதன், செல்வி.அனுசுயா, துரைபாக்கம் ₹1,000
32. திரு.P.அப்பாண்டைராஜ், திருமதி கனகவல்லி அப்பாண்டைராஜ், சென்னை ₹1,000
33. திரு.கனக அஜிததாஸ், சென்னை ₹1,000
34. குமாரி. A.தீபிகா, குமாரி.A.பிரதிக்ஷா, திண்டிவனம் ₹1,000
35. திரு.ஜினதத்தன், திருமதி.பிரேமா ஜினதத்தன். திருநின்றவூர். ₹ 1000
36.திருமதி.சாந்தா வசுகுமார், விழுக்கம் ₹ 1000
37.திரு.K.A.சிம்மசந்திரன், திருமதி.சாந்தி சிம்மசந்திரன், ஆதம்பாக்கம் ₹ 1000
38.திரு.ஜீவகன், திருமதி வசந்தா ஜீவகன், பம்மல்₹ 1000
39. திரு.A.D.பூர்ணச்சந்திரன், திருமதி.கௌரி பூர்ணச்சந்திரன். சென்னை.₹500
40.திரு.G.அப்பாண்டராஜன், திருமதி.மல்லிகாஅப்பாண்டராஜன், சென்னை. ₹500
41.திரு.தனகுமார் சாஸ்திரி, திருமதி.பிரேமலதா தனகுமார், கோட்டா ₹500
42.திருமதி.கிரிஜா இராம்குமார், சென்னை ₹500
43.திரு.தனகீர்த்தி, திருமதி.சுனந்தா தனகீர்த்தி, ஆவடி ₹500
44.திரு.ஜெயராஜ் சாஸ்திரி, திருமதி.ஜெயந்தி ஜெயராஜ், பட்டாபிராம் ₹500

45.குமாரி.சுசேனா பிரபு, திண்டிவனம் ₹500
46.குமாரி.ஸ்நேஹா பிரபு, திண்டிவனம், ₹500
47.திரு.N.செல்வராஜ், திருமதி ராணி செல்வராஜ், புலிமாந்தாங்கல் ₹500
48.திரு.பாரதிதாசன், கொளத்தூர் ₹251
49.திரு.கு.செல்வராஜ், நல்லவன்பாளயம் ₹200
50.திரு.குணபத்திரன், திருமதி.சுகுணா குணபத்திரன், பெரியக்கொரக்கோட்டை ₹100
51.திரு.ஸ்ரீதரன், திருமதி.லலிதா ஸ்ரீதரன், திருமுல்லைவாயில் ₹100

முதல் பதிப்பு: மார்ச் 2020 - 500 பிரதிகள்

விலை : ₹125

அச்சிட்டோர்: ஸ்ரீ பாலாஜி ஆஃப்செட்,
சென்னை-600082
போன்: 25505566, 9444675566.

ॐ